

தொகுதி - 6
எண் - 8
இதழ்
49
வெளிநா
ஓகஸ்ட்
2026

எழுநா

ISSN 3093-5210

தொகுதி - 6
எண் - 8

இதழ் 49

அட்டைப்படம் :

'பொற்கால நினைவுகள் சங்கப்படலை'
(Golden Memories Sankapadalai) எனும்
ஓவியத்தொகுப்பில் உள்ள ஓவியம் ஒன்று.

ஆக்கம்: கத்தரினா டானியல் (Catharina Danial)

இயக்குநர் சபை

கணேசானந்தன் சசீவன்
நிர்வாக இயக்குநர்

தில்லைநாதன் கோபிநாத்
வெளியீடு

கனகலிங்கம் சுகுமார்
வளத்திரட்டல்

வெளியீட்டுக்குழு

கணேசானந்தன் சசீவன்
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் /
நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

தர்ஷனா பிறேம்குமார்
கற்கை வட்டம் / நிகழ்வுகள் / ஊடக ஒருங்கிணைப்பு

பியூலா பரமேஸ்வரன்
வலைத்தளம் / பரவலாக்கம்

தயாரிப்புக் குழு

தீவமணி பாலன்
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

ரவீந்திரன் கருப்பையா
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

வேணி ஆனந்தா
சஞ்சிகை வடிவமைப்பு

கலாமணி பரணீதரன்
அச்சு ஒருங்கிணைப்பு

கிறிஸ்ரியன் லக்ஷ்மன் சிசில்
மெய்ப்புப்பார்ப்பு

பானு சுதாஹரன்
மெய்ப்புப்பார்ப்பு

பாலசுப்ரமணியம் துவாரகன்
மெய்ப்புப்பார்ப்பு

நிரோஷா தியாகராசா
மெய்ப்புப்பார்ப்பு

வளவாளர்கள்

தில்லைநாதன் கோபிநாத்
நூல் தயாரிப்பு / நூல் அச்சாக்கம்

தங்கராஜா பிரபாகரன்
ஊடக வீச்சு / மனிதவளத் தொடர்பு

சிறிதரன் சோமிதரன்
ஆவணப்படம்

இ. பத்மநாப ஐயர்
உசாத்துணை சேவை

சுஜீவன் தர்மராட்னம்
நிகழ்வுகள் / கற்கை வட்டம்

ஜனனி பாலசுந்தரம்
வலைத்தளம் / பரவலாக்கம்

ஆதரவளிப்போர்

மானுடம் நிறுவனம்
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் /
உசாத்துணை சேவை

ஆதிரை வெளியீடு
ஆவணப்படம்

நிகரி
ஆவணப்படம்

நாளை வெளியீடு
ஆவணப்படம்

விநியோக ஒருங்கிணைப்பாளர்கள்

இ. பத்மநாப ஐயர்
ஐக்கிய இராச்சியம்

எஸ். கே. விக்னேஸ்வரன்
கனடா

சிவராஜா ரூபன்
நோர்வே

அசோக் யோகன் கண்ணமுத்து
பிரான்ஸ்

நந்தன் தர்மபாலன்
அவுஸ்திரெலியா

கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

கனகலிங்கம் சுகுமார் – ஐக்கிய இராச்சியம்

கணேசானந்தன் சசீவன் – ஐக்கிய இராச்சியம்

இ. பத்மநாப ஐயர் – ஐக்கிய இராச்சியம்

சதீசன் தனபாலசுந்தரம் –ஐக்கிய இராச்சியம்

மாதவி சிவலீலன் – ஐக்கிய இராச்சியம்

நாகலிங்கம் சிறீசபேசன் – ஐக்கிய இராச்சியம்

எஸ்.கே.விக்னேஸ்வரன் – கனடா

இளங்கோ – கனடா

ரமணன் சந்திரசேகரமூர்த்தி – கனடா

இலங்கதாஸ் பத்மநாதன் – கனடா

வாசீசன் செல்வராஜா – கனடா

சிவராஜா ரூபன் – நோர்வே

சஞ்சயன் செல்வமாணிக்கம் – நோர்வே

தில்லைநாதன் கோபிநாத் –அவுஸ்திரேலியா

அசோக் யோகன் கண்ணமுத்து – பிரான்ஸ்

சுபாஸ் கார்வண்ணா – பிரான்ஸ்

கந்தையா ரமணிதரன் –ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ராஜ்குமார் ரஜீவ்காந்த் – இலங்கை

சார்ல்ஸ் அன்ரனிதாஸ் – இலங்கை

கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

சிவராஜா ரூபன் – நோர்வே

எஸ். கே. விக்னேஸ்வரன் – கனடா

அசோக் யோகன் கண்ணமுத்து– பிரான்ஸ்

நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

சிறகுகள் அமையம் – யாழ்ப்பாணம்

சத்தியமனை நூலகம்
யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை
கிளிநொச்சி

கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் – வவுனியா

திரைப்படக் கழகம் – மட்டக்களப்பு

தளம் கட்டமைப்பு – திருகோணமலை

நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்
கண்டி

கலை இலக்கிய வட்டம் – பதுளை

தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்
நுவரெலியா

கொழும்புத் தமிழ்ச் சங்கம் – கொழும்பு

கல்வி மேம்பாட்டுக்கும் சீர்திருத்தத்துக்குமான புத்தளம் கல்வியியலாளர்களின் மன்றம் (PILLARS) –புத்தளம்

விநியோகப் பங்காளர்கள்

பனுவல் புத்தகசாலை – யாழ்ப்பாணம்

குயின்சி புத்தகசாலை – யாழ்ப்பாணம்

வெண்பா புத்தகசாலை – யாழ்ப்பாணம்

எங்கட புத்தகங்கள் – யாழ்ப்பாணம்

பாத்திமா புத்தக நிலையம் – மட்டக்களப்பு

மொழி புத்தகம் பதிப்பகம் – வெள்ளவத்தை

அச்சுப்பதித்து விநியோகிப்போர்

நாளை வெளியீடு – கனடா

கலை வட்டம்
துறைசார் மதியுரைஞர் குழு

நிலாந்தன் மகாதேவா
இலக்கியம் – கவிதை

பாக்கியநாதன் அகிலன்
காண்பியக்கலை – கட்டடக்கலை

ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார்
ஆற்றுகைக்கலை – அரங்கக்கலை

இலங்கரெட்ணம் சஜித்
ஆற்றுகைக்கலை – நடனம்

சபேஸ் சுகுணசபேசன்
காண்பியக்கலை – புகைப்படக்கலை

ஆய்வு நிறுவனம்
துறை சார் மதியுரைஞர் குழு

ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
மொழியும் இலக்கியமும்

கந்தையா ரமணிதரன்
நீரியலும் நீர்ப்பாசனமும்

குமாரவடிவேல் குருபரன்
சட்டமும் சட்ட முறைமையும்

நடராஜா சிறீஸ்கந்தராஜா
கூழலும் உயிர்ப் பல்வகைமையும்

சச்சிதானந்தன் சுகிர்தராஜா
சமயமும் இறையியலும்

பால சிவகடாட்சம்
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

நாகமுத்து பிரதீபராஜா
புவியியலும் திட்டமிடலும்

பரமு புஸ்பரட்ணம்
வரலாறும் தொல்லியலும்

சனாதனன் தமோதரம்பிள்ளை
கட்புல அரங்கேற்றக் கலைகள்

சேரன் உருத்திரமூர்த்தி
சமூகவியலும் மானிடவியலும்

முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்
பொருளியலும் நிதியியலும்

சபா ஜெயராசா
கல்வியியலும் கற்றலும்

மரியோ அருள்தாஸ்
அரசியலும் மெய்யியலும்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

கந்தையா பகீரதன்
விவசாயமும் மீன்பிடியும்

உள்ளே...

இலங்கையின் அரசியல் யாப்புத்திருத்தம் எனும் செயல்முறையில் ஒரு திருப்புமுனையாக அமைந்த 1931 இன் டொனமூர் அரசியல் யாப்பு — 03
ஆங்கில மூலம்: றொகான் எதிரிசிங்க, மரியோ கோமஸ், வி.ரி. தமிழ்மாறன், அசங்க வெலிக்கல
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

காலனித்துவ காலத்தின் கடைசிக்கட்டம் — 12
கார்த்திகேசு இந்திரபாலா

பிலிப்பு டி மெல்ஹோ: ஐரோப்பிய வேதாகம மொழிபெயர்ப்பு ஏகபோகத்தை முறியடித்த இலங்கைத் தமிழர் — 18
சச்சிதானந்தன் சுகிர்தராஜா

திராவிட மக்களின் மரபணு மூலங்களும் தமிழ்மொழியின் படிமுறைத் தோற்றமும் அறிமுகம் — 25
சிவ தியாகராஜா

தமிழர் தோற்றம் பற்றிய சில கோட்பாடுகளின் நம்பகத்தன்மையும் நிலவியல், சமுத்திரவியல் சான்றுகளும் – பகுதி 1, 2 — 35
சிவ தியாகராஜா

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் ஆடைப் பண்பாட்டசைவுகள்: சாறணும் புடவையும் — 50
எம். ஐ. எம். சாக்கீர்

மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் சடங்குகளும் — 60
மெய்யநாதன் கேதீஸ்வரன்

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் தென்மராட்சி – கச்சாய் — 65
இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் குறைவிருத்தி: சார்புக் கோட்பாடு நோக்கிலான சில குறிப்புகள் — 69
கந்தையா சண்முகலிங்கம்

பெருந்தோட்ட உற்பத்திமுறைமையின் உதயமும் புதிய கடவுளர் உருவாக்கமும்: தேயிலைத் தொழில்துறைசார் தெய்வங்களை முன்வைத்து — 76
எம். எம். ஜெயசீலன்

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம்: முன்னாள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கவின் பாராளுமன்ற உரை — 83
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம்: திரு. 'அண்டர்வூட்' மணிவாசகம் அவர்களின் கடிதம் — 88
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

இலங்கையில் பஷ்தூன்கள்: வரலாறு, சமூகப் பங்களிப்பு, பண்பாட்டு மரபு — 94
அப்துல் ரஹீம் ஜெஸ்மில்

தொல்லியலும் கடந்த காலத்தை ஆயுதமாக்குதலும் – பகுதி 1, 2 — 100
மீநிலங்கோ தெய்வேந்திரன்

மலையகக் கலைகளில் இராமநாடகம் — 139
சோதிமலர் ரவீந்திரன்

மன்னார்க் கூத்து மரபு: ஈழத்தமிழ்க் கூத்து மரபில் ஒரு புதிய கிளை – பகுதி 2 — 149
சின்னையா மௌனகுரு

கண்ணகி வழிபாட்டில் கொம்புமுறி விளையாட்டு — 157
கிருபாகரன் கவிதாஞ்சன்

1991 – 2009: ஈழப்போரின் சர்வதேசப் பரிமாணமும் ஆயுதப் போராட்டத்தின் முடிவும் – பகுதி 1 — 167
சி. அ. யோதிலிங்கம்

யாழ்ப்பாண நிலத்தடி நீர்: தாகத்தின் அரசியல் — 177
அஸாம் ஷா

இலங்கையில் பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சிக்கான பின்னணி — 183
பொன் பிரபாகரன்

ஆன்மிக நாத்திக வெளிப்பாட்டுத்தளம் — 188
நடேசன் இரவீந்திரன்

மலையக வாழ்வியலில் ஒப்பாரிப் பாடல்கள் — 193
வேலாயுதம் இராமர்

வடக்கு – கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் அடையாளமும் புவியியல் சுயவிவரமும் – பகுதி 3 — 198
சுப்ரமணியம் சிவகுமார்

இலங்கையின் சட்டத்துறை அறிஞர்களும், அரசியல் விஞ்ஞானிகளும் இலங்கையின் அரசியல் யாப்புகள் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகள் (Core Issues) பற்றிய உயராய்வுகள் பலவற்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளனர். 1947, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் நடைமுறைக்கு வந்த மூன்று அரசியல் யாப்புகள் பற்றியும், இம்மூன்று அரசியல் யாப்புகளுக்கும் கொண்டுவரப்பட்ட யாப்புத் திருத்தங்கள் பற்றியும், நீதிமன்றத் தீர்ப்புகள் பற்றியும் இவ் உயராய்வுகளில் விரிவாக அலசப்பட்டுள்ளன. இவ்வாய்வுகளில் உள்ளடங்கிய பெறுமதிமிக்க கருத்துகளைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதே 'அரசியல் யாப்புச் சிந்தனைகள்' என்னும் இத்தொடரின் நோக்கமாகும்.

ஆங்கில மூலம்: றொகான் எதிரிசிங்க, மரியோ கோமஸ், வி.ரி. தமிழ்மாறன், அசங்க வெலிக்கல

இலங்கையின் அரசியல் யாப்புத்திருத்தம் எனும் செயல்முறையில் ஒரு திருப்புமுனையாக அமைந்த 1931இன் டொனமூர் அரசியல் யாப்பு

கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. 'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.



Power Sharing in Sri Lanka Constitutional and Political Documents 1926 - 2008 எனும் தலைப்பில் ஒரு தொகுப்பு நூலை மேற்குறித்த சட்டத்துறை அறிஞர்களான றொகான் எதிரிசிங்க, மரியோ கோமஸ், வி.ரி. தமிழ்மாறன், அசங்க வெலிக்கல ஆகியோர் இணைந்து பதிப்பித்து வெளியிட்டனர். இந்நூலில் அதிகாரப் பகிர்வு (*Power Sharing*) தொடர்பாக *1926* தொடக்கம் *2008* வரையான *82* ஆண்டுகாலத்தில் வெளியிடப்பட்ட முக்கியமான அரசியல் யாப்பு ஆவணங்கள் ஒரு சேரத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவ்வாறான முக்கிய ஆவணங்களில் ஒன்றான டொனமூர் அரசியல் யாப்பின் முக்கிய கூறுகளை எடுத்துக்காட்டும் வகையில் அந்த அரசியல் யாப்பின் தெரிந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளதோடு (*Chapter 2*), டொனமூர் அரசியல் யாப்பைப் பற்றிய ஒரு சிறந்த ஆய்வுரையை *'Introduction'* (அறிமுகம்) என்ற தலைப்பில் பதிப்பாசிரியர்கள் எழுதிச் சேர்த்துள்ளனர். இத்தமிழ்க் கட்டுரை மேற்படி அறிமுகத்தில் கூறப்பட்ட கருத்துகளை தமிழில் தொகுத்தும் சுருக்கியும் கூறும் முறையில் எழுதப்பட்டுள்ளது.

அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பாக இலங்கையில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு *1927* ஆம் ஆண்டு வருகை தந்தது. விசாரணையின் முடிவில் ஆணையாளர்கள் தமது அறிக்கையைப் பிரித்தானிய அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தனர். ஆணைக்குழு சமர்ப்பித்த அரசியல் யாப்பு வரைவு பின்னர் சட்டமாக்கப்பட்டது. *1931* ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. இந்த யாப்பு இலங்கையில் இன்றுவரை பேசுபொருளாக இருந்து வரும் அரசியல் யாப்பு ஆகும். இதன் முக்கியத்துவத்திற்குப் பல காரணங்கள் உள்ளன எனப் பதிப்பாசிரியர்கள் கூறுகின்றனர். அக்காரணங்களில் நான்கு முக்கியமானவை:

1. சுதந்திரத்தை நோக்கிய நகர்வு

இந்த அரசியல் யாப்பின் அடுத்தக்கட்ட நகர்வாக இலங்கை சுதந்திரத்தை நோக்கிப் பயணிக்கவிருந்தது. அப்பயணத்தை நோக்கி இலங்கையை நகர்த்துவதற்கான தயாரிப்பு (*Preparation*) முயற்சியாக இந்த அரசியல் யாப்பு அமைந்தது.

2. புரட்சிகரமான சீர்திருத்தங்கள்

இந்த அரசியல் யாப்பு புரட்சிகரமான சீர்திருத்தங்களை (*Radical Reforms*) இலங்கைக்கு அறிமுகம் செய்தது.

3. நிர்வாகக் குழுமுறை

நிர்வாகக் குழுமுறை (*Executive Committee System*) போன்ற புதுமையான அரசியல் நிறுவன ஒழுங்குமுறைகளை (*Political Institutional Arrangements*) இந்த அரசியல் யாப்பு அறிமுகம் செய்தது.

4. சமஷ்டி முறையைப் பரிசீலனை செய்தமை

புதிய அரசியல் யாப்பை வரைந்த டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு சமஷ்டி முறை வேண்டும் என்று கண்டியர் அசெம்பிளி (*Kandyan Assembly*) என்னும் அமைப்பினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைப் பரிசீலனை செய்தது. அவ்விடயம் பற்றி அறிக்கையில் ஆணைக்குழுவின் கருத்துகள் எடுத்துக்கூறப்பட்டன.

டொனமூர் அரசியல் யாப்பு உருவாக்கத்தின் பின்புலம்

இலங்கையின் அரசியல் தலைவர்கள் *20*ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகள் முதலாக அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (*Constitutional Reform*) அவசியம் எனக்கூறி அமைதி வழியில் பிரசாரம் செய்து வந்தனர். அத்தலைவர்கள் இலங்கையர்களுக்கு அரசியல் அதிகாரத்தைக் கூடிய அளவில் கொடுக்கும் வகையில் சீர்திருத்தம் வேண்டும் எனத் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டனர். இதன் பயனாக *1900 - 1925* காலத்தில் அடுத்தடுத்துப் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இச்சீர்திருத்தங்கள் காலனிய அரசாங்கம் *19* ஆம் நூற்றாண்டில் பின்பற்றிய ஆட்சி முறைப் பாணியைப் பின்பற்றிய சீர்திருத்தங்களாகவும், இலங்கை அரசியல் தலைவர்களின் கோரிக்கைகளின் எதிர்வினையாகவும் அமைந்தன.

பிரித்தானிய அரசாங்கம் *1927*இல் இலங்கையின் நிலைமையைப் பற்றியும், இலங்கையின் அரசியல் யாப்பைத் திருத்தும் வகையிலும் புதியதொரு அரசியல் யாப்பை அறிமுகம் செய்வதைப் பரிசீலிக்கும் நோக்குடன் விசாரணை நடத்துவதற்காக ஆணைக்குழு ஒன்றை நியமித்தது. அந்த ஆணைக்குழுவிற்கு பின்வருவோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

பிரபுக்கள் சபையின் மூத்த உறுப்பினராக இருந்த டொனமூர் பிரபு இதன் தவிசாளராக நியமிக்கப்பட்டார். டொனமூர் பிரபு அரசியலில் மிகுந்த அனுபவம் பெற்ற ஒருவராவார்.

சேர் மத்தியுநாதன் - இவர் பிரித்தானியக் காலனிகளின் கவர்னராக முன்பு பணியாற்றிய அனுபவசாலி. அத்தோடு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற கல்வியாளர். *League of Nations* என்ற அமைப்பின் நடைமுறைகள் பற்றி நன்கு

கற்றறிந்திருந்த நிபுணராகவும் விளங்கினார்.

சேர் ஜியோவ்ரி பட்லர் - இவர் உள்ளூராட்சி நிர்வாகம் (Local Government) என்னும் விடயம் குறித்த நிபுணத்துவம் மிக்கவர்.

கலாநிதி ட்றமன்ட் சீல்ஸ் (Dr. Drummond Shiels) - இவர் தொழிற்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

டொனமூர் ஆணைக்குழு உறுப்பினர்கள் யாவரும் பல்துறை அறிவு மிக்கவர்களாயும் பல துறைகளில் அனுபவம் பெற்றவர்களாயும் இருந்தனர் என்பதைக் காணலாம். இத்தகையவர்களை உள்ளடக்கிய குழு அக்காலத்தின் பின்புலத்தில் வைத்து நோக்கும் போது புரட்சிகரமான அரசியல் சீர்திருத்தச் சிபார்சுகளை முன்மொழிந்தது என்பதில் ஆச்சரியம் இல்லை. ஆணைக்குழு 1927 நவம்பர் முதல் 1928 பெப்ரவரி வரை இலங்கையில் தங்கியிருந்து விசாரணை நடத்தித் தமது அறிக்கையை 1928 யூலை மாதம் காலனிகளுக்குப் பொறுப்பான பிரித்தானிய அமைச்சரிடம் (Secretary of State for the Colonies) சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் அமைச்சர் சில திருத்தங்களைச் செய்த பின்னர் சட்டவரைவாக வரைந்து டொனமூர் அரசியல் யாப்பு என்ற பெயரில் அறியப்படும் சட்டத்தை இயற்றினார். இந்த அரசியல் யாப்பு 1931 இல் நடைமுறைக்கு வந்தது.

டொனமூர் ஆணைக்குழுவின் இலங்கை வருகையும், இலங்கையின் அரசியல் தலைவர்கள் அக்குழுவிற்குச் சமர்ப்பித்த கோரிக்கைகளும், வேண்டுதல்களும் இலங்கையில் மிக முக்கியமான விவாதப் பொருளாக இருந்தன. சட்டசபையில் விவாதங்கள் நடைபெற்றன. பொதுமக்கள் மத்தியிலும் இதுபற்றி விவாதிக்கப்பட்டது. 1927 - 1931 காலத்தில் அரசியல் தலைவர்களிடையே காணப்பட்ட பல்வேறு கருத்து வேறுபாடுகள் பொதுவெளியில் விவாதிக்கப்படவும், அலசப்படவும் ஆணைக்குழு விசாரணைகள் ஒரு சிறந்த வாய்ப்பை உருவாக்கின. அக்காலத்தின் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளாக பின்வரும் இரண்டு முக்கிய விடயங்கள் விளங்கின.

அ. சிங்கள அரசியல் தலைவர்களுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள்

ஆ. அரசியல் அமைப்பு மாற்றம் படிப்படியாக ஏற்பட வேண்டும் என்று கருதிய அரசியல் தலைவர்களுக்கும் புரட்சிகர மாற்றத்தைக் (Radical Change) கோரிய அரசியல் தலைவர்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள்.

முதலாவது விடயம் குறித்து சிங்களத் தலைவர்களின் கருத்து தமிழ்த் தலைவர்களின் கருத்திலிருந்து வேறுபட்டதாக இருந்தது. சிங்களத் தலைவர்கள் அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களில் சிங்களவர், தமிழர் என்ற பிரிவு தேவையில்லை என்றனர். அரசியல் யாப்பு இனங்களுக்குப் பொதுவான (Eth nicNeutral) ஒன்றாக இருக்க வேண்டும்; சிங்களவர் - தமிழர் என்ற பிரச்சினைக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று கருதினர். ஆனால், தமிழ்த் தலைவர்கள் அரசியல் அமைப்பு மாற்றங்கள் தமது சமூகத்தின் அதிகாரங்களையும், நலன்களையும் (Powers and Interest) எவ்விதம் பாதிக்கப் போகின்றன என்பது பற்றிக் கவலையும் அக்கறையும் கொண்டவர்களாக இருந்தனர். இவ்விரு முரண்பாடுகளும் அன்றைய அரசியலின் சர்ச்சைக்குரிய விடயங்களாய் அமைந்தன.

டொனமூர் அரசியல் யாப்பின் முக்கிய கூறுகள்

அரசு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் அல்லது சமஷ்டி என்ற விடயத்துடன் டொனமூர் அரசியல் யாப்பு நேரடியாகத் தொடர்புடையது அல்ல. ஆகையால் டொனமூர் யாப்பினை வரைந்தோர் அந்த விடயங்கள் தொடர்பான கூறுகளை டொனமூர் அரசியல் யாப்பில் சேர்த்திருப்பார்கள் என்று கூறமுடியாது. ஆயினும், நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் யாதெனில் இலங்கையின் இரண்டு பெரும் தேசிய இனங்களான சிங்களதமிழ் இனங்களுக்கிடையிலான உறவுகளைத் தீர்மானிக்கும் கூறுகள் பல டொனமூர் அரசியல் யாப்பில் இருந்தன. இவை பின்னர் சிங்கள - தமிழ் இனத்துவ உறவுகளில் விரிசல் ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்தன. அத்தகைய கூறுகள் பற்றி அடுத்து நோக்குவோம்.

1. இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழித்தல் (The Abolition of Communal Representation)

சட்டசபைக்கு (Legislative Council) இனவாரியாகப் பிரதிநிதிகளை நியமிக்கும் முறை பிரித்தானிய காலனிய ஆட்சிக் காலத்தின் தொடக்கம் முதல் இருந்து வந்தது. இதனை இனவாரிப் பிரதிநிதித்துவ முறை (Communal Representation System) என அழைப்பர். டொனமூர் ஆணைக்குழு சட்டசபைக்கு ஆட்களை இனவாரி முறையில் நியமிக்கும் முறையை ஒழித்தது. அதற்குப் பதிலாக டொனமூர் அரசியல் யாப்பின்படி பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையை (Territorial Representation) நடைமுறைக்குக் கொண்டுவந்தது. முன்னைய முறை நீக்கப்பட்டு புதிய முறையை நடைமுறைப்படுத்திய போது அம்முறை தமது நலன்களுக்குப் பாதிப்பாக அமைந்ததையும், தமிழர் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டதால் தமிழர் சமூகம் அரசியல் அதிகாரப் பலத்தை இழந்ததையும் தமிழ்த்

தலைவர்கள் உணர்ந்தனர். 1931க்கு முற்பட்ட காலத்தில் இனவாரிப் பிரதிநிதித்துவ முறை எவ்வாறு செயற்படுத்தப்பட்டது என்பது பற்றி முக்கிய தகவல்களை இவ்விடத்தில் தெரிந்து கொள்வது பயனுடையது. சட்டசபைக்கு கரைநாட்டுச் சிங்களவர் பிரதிநிதிகள், கண்டிச் சிங்களவர் பிரதிநிதிகள், தமிழர் பிரதிநிதிகள், முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் என்றவாறு சட்டசபை ஆசனங்களைத் தீர்மானிப்பதே இனவாரிப் பிரதிநிதித்துவ முறையாகும். 1911க்கும் 1931க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரதேசத்தின் அடிப்படையிலான அமைப்புகளும், வர்த்தகர்களின் அமைப்புகளும் பிரதிநிதித்துவம் பெற்றன. உதாரணமாக கரைநாட்டுப் பகுதிகளின் தென்னை, றப்பர் தோட்டங்களின் உடமையாளர்களின் அமைப்பான 'Low Country Products Association' என்ற அமைப்பும், 'சேம்பர் ஒவ் கொமர்ஸ்' (Chamber of Commerce) என்ற அமைப்பும் சட்டசபையில் பிரதிநிதித்துவத்தைப் பெற்றன. இவ்வாறான சில விதிவிலக்குகள் தவிர 1931க்கு முந்திய சட்டசபைகளில் பிரதிநிதிகளின் நியமனம் அல்லது தெரிவு (Nomination or Election) பிரதானமான முறையாக இருந்து வந்தது. இம்முறை இனவாரிப் பிரதிநிதித்துவம் (Communal Representation) என அழைக்கப்பட்டது.

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையின் அரசியல் தலைவர்கள் இலங்கையில் ஜனநாயக முறையிலான அரசியல் சீர்திருத்தம் வேண்டும் எனக் கோரலாயினர். ஜனநாயக முறையின்படி இனவாரிப் பிரதிநிதித்துவ முறையில் இருந்து பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறைக்கு மாறுவது அவசியம் என்பதைச் சிங்கள அரசியல் தலைவர்கள் உணர்ந்தனர். ஜனநாயக நாடுகளில் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமே ஏற்புடைய பிரதிநிதித்துவ முறையாக இருப்பதையும் அவர்கள் கண்டனர்.

ஆனால், அக்காலத் தமிழ் அரசியல் தலைவர்கள் வேறுவகையில் சிந்தித்தனர். பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் தமிழர்களின் அரசியல் பலத்தைக் (Political Influence) குறைக்கும் என்பதையும், சட்டசபையில் பெரும்பான்மையினரான சிங்களவரின் பலத்தை அதிகரித்து, பெரும்பான்மை ஜனநாயகம் (Majoritarian Democracy) நோக்கி இலங்கையின் அரசியல் முறையை மாற்றிவிடும் என்பதையும் உணர்ந்தனர். ஆதலால், தமிழ்த் தலைவர்கள் அத்தகைய மாற்றத்தை எதிர்த்தனர். அக்காலத்தில் இலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த பிரித்தானிய அதிகாரிகள் கூட அம்மாற்றத்தை விரும்பவில்லை. ஆயினும் டொனமூர் ஆணைக்குழுவினர் இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை கடுமையான வார்த்தைகளில் கண்டித்து விமர்சனம் செய்தனர்.

இனவாரிப் பிரதிநிதித்துவ முறை 'A Canker on the Body Politic' எனவும் அது நாட்டில் அரசியல் உணர்வு வளர்ச்சியைக் கெடுத்து நஞ்சாக்கிவிடுவதோடு, தேசிய உணர்வும் ஐக்கியமும் வளர்வதைத் தடை செய்யும் என்றும் கடும் வார்த்தைகளால் டொனமூர் அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2. சர்வசன வாக்குரிமையை அறிமுகம் செய்தல்

இலங்கையின் சிங்கள அரசியல் தலைவர்களும் தமிழ் அரசியல் தலைவர்களும் சர்வசன வாக்குரிமை நடைமுறைப்படுத்தப்படுவதை எதிர்த்தனர். 1920இல் இலங்கையில் மட்டுப்படுத்த வாக்குரிமையே வழங்கப்பட்டிருந்தது. சொத்துடைமை, கல்வித்தகைமைகள் என்பனவற்றின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை நடைமுறையில் இருந்ததால் நாட்டின் சனத்தொகையில் 4 %த்தினர் மட்டுமே வாக்குரிமை பெற்றிருந்தனர். இலங்கைத் தேசிய காங்கிரசின் பிரதிநிதிகள் குழுவொன்று 1927இல் டொனமூர் ஆணைக்குழுவுக்குச் சாட்சியம் வழங்கிய போது சர்வசன வாக்குரிமை வேண்டாம் எனக் குறிப்பிட்டது. இப்பிரதிநிதிகள் குழுவில் E.W. பெரேரா, R.S.S. குணவர்த்தன, S.W.R.D. பண்டாரநாயக்க ஆகிய மூவர் உள்ளடங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆணைக்குழுவினர், அப்போது சர்வசன வாக்குரிமையை எதிர்ப்பதற்கான காரணங்கள் யாவை என அப்பிரதிநிதிகளைக் கேட்டனர். எல்லோருக்கும் வாக்குரிமையைக் கொடுத்தால் வாக்கின் பெறுமதி தெரியாது; அதனை யார் அதிக விலை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு மக்கள் விற்பனை செய்து விடுவார்கள்; பொறுப்புணர்வு இல்லாதவர்களுக்கு வாக்குரிமையைக் கொடுப்பது ஆபத்தானது என அத்தலைவர்கள் கூறினர்.

அக்காலத்தின் பெரும்பாலான சிங்கள, தமிழ்த் தலைவர்கள் யாவரும் சர்வசன வாக்குரிமையை எதிர்த்தனர். ஆனால், A.E. குணசிங்க என்ற தொழிலாளர் தலைவர் மட்டும் சர்வசன வாக்குரிமைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார். அதன் விளைவு விரைவிலேயே அனைவருக்கும் தெரியவந்தது. 1924 ஆம் ஆண்டில் 205,000 ஆகவிருந்த வாக்காளர் எண்ணிக்கை 1931 இல் 1,500,000 ஆக உயர்ந்தது. தமிழ்த் தலைவர்கள் அஞ்சியது போல் பெரும்பான்மைச் சமூகமான சிங்களச் சமூகத்தின் அரசியல் அதிகாரம் அதிகரித்தது. சிறுபான்மை இனங்களின் அரசியல் அதிகாரம் குறைந்தது. இவ்விடத்தில் நாம் இன்னொரு விடயத்தைக் குறிப்பிடுதல் அவசியம். இலங்கையில் 5

ஆண்டுகள் வதிவிடத்தகுதி (Residential Qualification) உள்ளவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படும் என்பதை உறுதி செய்திருந்த காரணத்தால் இந்தியத் தமிழர் சமூகத்தினர் வாக்களார்களாக அதிக அளவில் பதிவு செய்து கொள்ளப்படுவர் என டொனமூர் ஆணைக்குழு நம்பிக்கை கொண்டிருந்தது. அதன் பயனாக இந்தியத் தமிழர் சமூகம் சமூக, பொருளாதார, அரசியல் தளத்தில் முன்னேற்றம் அடைதல் சாத்தியமாகும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

3. நிர்வாகக் குழு முறை

இலங்கையின் அரசியல் தலைவர்கள் பலர் பிரித்தானியாவின் பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழகக் கல்வியைக் கற்றவர்களாக இருந்தனர். ஆங்கிலமயப்பட்ட உயர்குழுவான (Anglicised Elites) இந்தத் தலைவர்கள் இலங்கை அரசின் நிர்வாகத்துறை பிரித்தானியாவின் மந்திரிசபை அரசாங்க (Cabinet Government) மாதிரியில் அமைய வேண்டுமென சிபார்சு செய்தனர். ஆனால் டொனமூர் ஆணைக்குழு இலங்கையின் அரசியல் தலைமையை நாட்டின் பிராந்திய மட்டங்களில் இருந்து வரும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டதாக விரிவாக்கம் செய்ய விரும்பினர். சகல மட்டத்தினருக்கும் நிர்வாகத்துறை அனுபவத்தைக் கொடுக்கக்கூடியதாக சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட அனைவரையும் நிர்வாகத்தில் பங்கு கொள்ளவைக்கக் கூடிய நிர்வாகக் குழு முறையைச் (Executive Committee System) சிபார்சு செய்தனர்.

சட்டசபை உறுப்பினர்கள் அனைவரையும் உட்படுத்திய குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்கள் ஒவ்வொன்றினதும் உறுப்பினர்கள் ஒன்றுகூடித் தத்தம் குழுக்களுக்கு ஒரு தலைவரைத் தெரிவு செய்வர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட குழுத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து அமைச்சர் அவை (Board of Ministers) ஆகச் செயற்படுவர். உதாரணமாக சுகாதாரம் அல்லது போக்குவரத்து என்ற ஒரு துறையின் நிர்வாகக் குழுவில் ஏழு அல்லது எட்டு உறுப்பினர்கள் இடம்பெறுவர். அவர்கள் ஒரு குழுவாகக் கூடித் தம்முள் ஒருவரைத் தலைவராகத் தெரிவு செய்வர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் குறித்த துறையின் அமைச்சராகவும், 'Board of Ministers' என்ற அமைச்சர் அவையின் உறுப்பினராகவும் பணியாற்றுவார்.

இந்த நிர்வாகக் குழு முறை ஒவ்வொரு அரசுச்சபை (State Council) உறுப்பினருக்கும் இரண்டு வகையான வகிபாகத்தை வழங்கியது.

அ. சட்டசபை உறுப்பினர் சட்டவாக்க அலுவல்களில் (Legislator என்ற முறையில்) பங்கேற்றார்.

ஆ. அவர் நிர்வாகக் குழு ஒன்றின் உறுப்பினர் என்ற முறையில் ஒரு துறையின் நிர்வாகத்திலும் பங்கேற்றார்.

டொனமூர் ஆணைக்குழுவினால் கருத்தில் கொள்ளப்பட்ட ஏனைய சில விடயங்கள்

டொனமூர் ஆணைக்குழு பெரும்பான்மைச் சிங்கள இனத்திற்கும், சிறுபான்மை இனங்களுக்கும் பொதுவான வேறு 6 முக்கிய விடயங்களிலும் கவனம் செலுத்தியது. அவை பற்றி அடுத்து நோக்குவோம்.

1. சமஷ்டி முறை

இளைஞரான எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க 1929ஆம் ஆண்டில் இலங்கைக்கு சமஷ்டி முறை (Federalism) அரசியல் அமைப்பு வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். டொனமூர் ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்த கண்டிச் சிங்கள சமூகத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்குச் சமஷ்டி முறைமை வேண்டும், கண்டிய மாகாணங்கள் தனித்த சமஷ்டி அரசாக இருத்தல் வேண்டும், இலங்கையில் எல்லாமாக மூன்று சமஷ்டி அலகுகள் இருக்க வேண்டும், வடக்கு கிழக்கு இரண்டும் (North East) ஒரு மாகாண அரசாக இருக்க வேண்டும் என்று கோரினர். ஆகையால் இலங்கையில் சமஷ்டி முறை வேண்டும் என முதன்முதலில் கோரிக்கை வைத்தவர்கள் கண்டிச் சிங்களவர்களே அல்லாது இலங்கைத் தமிழர்கள் அல்லர் என்பதை நாம் கவனித்தல் வேண்டும். அத்தோடு வடக்குக் கிழக்கை ஒன்றிணைத்தல் (Merger of North East) என்ற கோரிக்கையை முன்வைத்தவர்களும் தமிழர்கள் அல்லர்; கண்டியச் சிங்களவரே இதனை முன்வைத்தனர். கண்டியச் சிங்களவர் தனித்துவமுடைய தேசிய இனம் (A Nation) என்றும் தம்மை அடையாளப்படுத்தினர். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கைகளையும் ஆவணங்களையும் (Documents) பரிசீலனை செய்யும்போது அவர்கள் கையாண்ட மொழியும், சொற்றொடர்களும் இன்று தமிழ்த் தேசியவாதிகளின் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படும் மொழியையும், சொற்றொடர்களையும் ஒத்தனவாய் இருப்பதைக் காண்கிறோம். கண்டிய அரசியல் தலைவர்கள் சிலர் அக்காலத்தில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் (Ceylon National Congress) என்ற அமைப்பில் இருந்து வெளியேறி கண்டியர் தேசிய அசெம்பிளி (Kandyan National Assembly) என்ற அமைப்பினை உருவாக்கியிருந்தனர்.

கண்டிய தேசிய அசெம்பிளியின் பிரதிநிதிகள் டொனமூர் ஆணைக்குழுவில் சாட்சியமளித்த போது தெரிவித்த கருத்து வருமாறு:

"எமது கோரிக்கை இனவாதக் கோரிக்கை அன்று, அல்லது இதனை ஒருசில தனிநபர்களின் ஆதிக்க

மனப்பாங்கை வெளிப்படுத்தும் கோரிக்கையாகவும் கருத முடியாது. இக்கோரிக்கை ஒரு தேசிய இனத்தின் கோரிக்கை (*A Claim of a Nation*). அத்தேசிய இனம் தனது வாழ்வைத் தானே அமைத்துக்கொள்ள விரும்புகிறது; தன் தலைவிதியைத் தானே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறது. ஐக்கிய அமெரிக்காவில் உள்ளது போன்ற சமஷ்டி அரசை (*Federal State*) இலங்கையில் நிறுவ வேண்டும் என நாம் விரும்புகிறோம். நாம் ஒரு சமஷ்டி முறை இலங்கைக்குத் தேவை என்று கேட்கிறோம். அமெரிக்காவில் உள்ளது போன்ற சமஷ்டி முறையை இங்கு உருவாக்க வேண்டும் எனக் கோருகிறோம். அந்த சமஷ்டி முறையில் சேர்ந்து கொள்ளும் ஒவ்வொரு மாநில அரசும் தனது புவியியல் பரப்புக்குள் வெளியில் இருந்து வரும் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்தி, தமது தேசிய இனத்தை (*Nationality*) வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் செல்ல முடியும்."

கண்டியர்களின் கோரிக்கைகளை டொனமூர் ஆணைக்குழுவினர் செவிமடுத்தனர் என்பதை, அவர்கள் '*Kandyan Claim*' (கண்டியர் கோரிக்கை) என்ற தலைப்பில் தனியான ஓர் அத்தியாயத்தை தமது அறிக்கையில் ஒதுக்கியிருந்தமை மூலம் நாம் புரிந்து கொள்ளலாம். ஆயினும் டொனமூர் ஆணைக்குழு கண்டியர் கோரிக்கையை (*Federalism*) நிராகரித்தது. டொனமூர் ஆணைக்குழு கண்டியர் கோரிக்கையை நிராகரித்ததன் காரணம் என்ன? இது பற்றிக் கட்டுரையாசிரியர்கள் கூறியிருப்பது வருமாறு:

"*The Donoughmore Commissioners responded to what they described as the 'Kandyan Claim' in a separate chapter. They expressed some sympathy for the concerns expressed by the Kandyan Sinhalese but rejected the claim for a federal Ceylon mainly on the basis that the country needed to be united, ethnic and regional identity needed to be transcended, and that what was paramount at this stage leading to independence, in what could be described as the Commission's overriding philosophy, was the development of a corporate unity.*"

டொனமூர் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் சிந்தனையை நெறிப்படுத்திய முதன்மையான தத்துவம் (*Overriding Philosophy*) ஒன்று இருந்தது. அவர்கள் இலங்கையர் சமூகத்தில் ஒற்றுமையின் அடிப்படையிலான கூட்டுணர்வும் ஐக்கியமும் ஏற்பட வேண்டும், இனத்துவ அடையாள உணர்வு (*Ethnic Identity*), பிராந்திய அடையாள உணர்வு (*Regional Identity*) என்பனவற்றைக் கடந்த ஒற்றுமைப்பட்ட தேசம் என்ற இலக்கில் இலங்கை பயணிக்க வேண்டும் என விரும்பினர். சுதந்திரத்தினைப் பெறுவதற்குத் தகுதியுடைய இலங்கையர்களைத் தயாரிப்பதற்கு ஐக்கியமே பிரதானமானது என ஆணைக்குழுவினர் கருதினர்.

டொனமூர் ஆணைக்குழுவினர், இலங்கையின் அரசுச்சபைக்கான பிரதிநிதிகள் தேர்வில் அக்காலத்தில் ஜேர்மனியில் பின்பற்றப்பட்ட விகிதாசார (Proportional Representation) முறையை சில திருத்தங்களுடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தலாம் எனத் தீவிர கவனம் செலுத்தி ஆலோசித்தனர். ஆனால் பின்னர் அவர்கள் அந்த யோசனையை கைவிட்டனர். அந்த முறை பற்றி அண்மைக்காலத்தில் எத்தகைய விமர்சனங்கள் செய்யப்படுகிறதோ அத்தகைய வகையிலான விமர்சனங்களை எடுத்துக்காட்டி அந்த யோசனையை அவர்கள் கைவிட்டனர்.

2. விகிதாசாரப் பிரதிநித்துவ முறை

டொனமூர் ஆணைக்குழுவினர், இலங்கையின் அரசுச்சபைக்கான பிரதிநிதிகள் தேர்வில் அக்காலத்தில் ஜேர்மனியில் பின்பற்றப்பட்ட விகிதாசார (*Proportional Representation*) முறையை சில திருத்தங்களுடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தலாம் எனத் தீவிர கவனம் செலுத்தி ஆலோசித்தனர். ஆனால் பின்னர் அவர்கள் அந்த யோசனையை கைவிட்டனர். அந்த முறை பற்றி அண்மைக்காலத்தில் எத்தகைய விமர்சனங்கள் செய்யப்படுகிறதோ அத்தகைய வகையிலான விமர்சனங்களை எடுத்துக்காட்டி அந்த யோசனையை அவர்கள் கைவிட்டனர். குறிப்பாக விகிதாசார முறை சிக்கலானது (*Complicate*). அந்த முறையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேர்தல் தொகுதிகளைப் பெரியதாக அமைக்க வேண்டும். அந்த முறையினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தம்மைத் தெரிவு செய்தவர்களிடமிருந்து அந்நியப்பட்டவர்களாகிவிடுவர் என்ற காரணங்களை அவர்கள் சுட்டிக்காட்டினர். இதனை விடச் சிறுபான்மை இனத்தவர்கள் இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை (*Communal Representation*) நீக்கக் கூடாது

என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். அதனை நீக்குவதால் தமது அரசியல் அதிகாரம் (Political Power) பறிபோய்விடும்; தாம் பலம் குன்றியவர்களாகிவிடுவோம் என்று குறை கூறுகின்றனர். இப்பின்னணியில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை தமக்குப் பாதகமாக அமையப் போவதைக் கண்டு அதனை எதிர்ப்பார்கள். இறுதியில் அரசியல் யாப்புத் திருத்தத் திட்டம் (Constitutional Reform Project) தடைப்பட்டுவிடும் என்பன அவர்களது கருத்தாக இருந்தது.

3. உள்ளூராட்சி

ட்றமன்ட் சீல்ஸ் (Drummond Shiels) அவர்கள் உள்ளூராட்சி நிர்வாகம் குறித்த நிபுணத்துவம் உடையவர் என்பதை மேலே குறிப்பிட்டோம். அவர் ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டதன் பயனாக டொனமூர் அறிக்கையில் இலங்கையின் உள்ளூராட்சி முறையின் அன்றைய நிலை பற்றிய முழுமையான ஆய்வு சேர்க்கப்பட்டிருந்தது. இலங்கையில் உள்ளூராட்சி முறை வேர் கொண்டிருந்தது என்பதும், அது சிறப்பாக இயங்கி வந்தது என்பதும் அறிக்கையில் எடுத்துக் காட்டப்பட்டது. அம்முறைமைக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டும், உள்ளூராட்சி நிறுவனங்களில் வினைத்திறன் மிக்க ஆளணியை உருவாக்க வேண்டும், மக்களுக்குத் தேவையான சேவைகளை அந்நிறுவனங்களூடாக வழங்க வேண்டும் எனவும், உள்ளூராட்சி நிறுவனங்கள் மக்களின் வலுவாக்கத்திற்கு (Empowerment) உதவ முடியும் எனவும் ஆணைக்குழு கருத்துத் தெரிவித்தது. உள்ளூராட்சிக்குப் புத்துயிர் அளிப்பதற்கு மத்திய அரசாங்கத்தில் இருந்து உந்துதல் கிடைக்க வேண்டும் எனவும், மாகாணம், மாவட்டம், ஊர் என்ற சுற்றுவட்டத்தில் இருந்து தேவைகள், கோரிக்கைகள் மத்தியை நோக்கி வர வேண்டும் எனவும், அப்போதுதான் உள்ளூராட்சி (Local Government) மூலமான கூடிய வளர்ச்சி சாத்தியமாகும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

4. மாகாண சபைகள்

இலங்கையின் ஒன்பது மாகாணங்கள் ஒவ்வொன்றிலும், மாகாண சபைகள் (Provincial Councils) அமைக்கப்பட வேண்டும் என்பதற்குச் சாதகமான கருத்துடையவர்களாக டொனமூர் ஆணைக்குழுவினர் இருந்துள்ளனர். மாகாண சபைகள் அரசாங்கத்தை மக்களுக்குக் கிட்டியதாகக் கொண்டு செல்லக் கூடியவை. அவை பிராந்திய நிலையில் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யும்; பொறுப்புணர்ச்சியை வளர்க்கும் என ஆணைக்குழு கருதியது. குறிப்பாக நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வாழும் இனத்துவக் குழுக்கள் (Ethnic Groups) தத்தம் பகுதிகளின் அபிவிருத்தி, நிர்வாக நடவடிக்கைகளில் தலைமைப் பாகத்தை ஏற்க முடியும் எனவும் ஆணைக்குழு கருதியது. ஆயினும், மாகாண சபைகளை அமைப்பதா இல்லையா என்பதை புதிதாக உருவாக்கப்படவுள்ள உள்ளூராட்சி திணைக்களம் (New Department of Local Government) முடிவு செய்யும் என ஆணைக்குழு முடிவு செய்தது. இப்புதிய திணைக்களம் அரசுச் சபையின் நிர்வாகக் குழுவின் கீழ் இயங்கும் திணைக்களமாக இருக்கும். உள்ளூர் நிர்வாகத்திற்கு (Local Administration) பொறுப்பான அத்திணைக்களமே மாகாண சபைகள் பற்றிய முடிவை எடுத்தல் பொருத்தமானது எனவும் ஆணைக்குழு கருதியது.

புதிய உள்ளூராட்சி திணைக்களம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் எவையெவை என்பதை ஆணைக்குழு தனது அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருந்தது. அவ்விடயங்கள் இன்றுவரை விவாதத்திற்குரியனவாய் இருந்து வருவதைக் காணலாம். ஆணைக்குழு சுட்டிக் காட்டியனவும், இன்றும் விவாதிக்கப்படுபவையுமான இரண்டு விடயங்களைக் குறிப்பிடலாம்.

அ. தேசிய சட்டசபையில் (மத்திய பாராளுமன்றத்தில்) உறுப்பினர்களாக உள்ளவர்கள் மாகாண சபைகளில் உறுப்பினர்களாக இருக்க வேண்டுமா? என்பது அவ்வாறான விடயங்களில் ஒன்று. 1980களில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் (District Development Councils) அமைக்கப்பட்ட போது இந்தப் பிரச்சினை எழுந்ததை இங்கு ஞாபகப்படுத்தலாம்.

ஆ. இரண்டாவதாக, உள்ளூராட்சி அரசாங்கத்திற்கும் (Local Government) மாகாண நிறுவனங்களுக்கும் (Provincial Institutions) இடையிலான பிணைப்புகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற விடயம் 1995 முதலாக அரசியல் யாப்புத் திருத்தங்கள் பற்றிய விவாதங்களில் பேசுபொருளாக இருந்ததைக் குறிப்பிடலாம்.

5. பொதுச்சேவை, மொழி, உயர்குழுக்களின் வகிபாகம் ஆகியன

ஆணைக்குழுவின் அறிக்கையில் குடியியல் சேவையும், பொதுச் சேவைகளும் (Civil and Public Services) என்னும் விடயத்திற்கு தனியான அத்தியாயம் ஒதுக்கப்பட்டது. அவ்வத்தியாயத்தில் இவ்விடயம் விரிவாக ஆராயப்பட்டிருந்தது. 1910 முதல் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலம், சட்டசபையின் உறுப்பினர்களுக்கு நிர்வாக விடயங்கள் தொடர்பான அதிகாரங்கள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டன. இதனால், சட்டசபை

டொனமூர் ஆணைக்குழு அக்காலத்தின் தமிழ் அரசியல் தலைவர்களால் எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்சினைகள் பலவற்றைப் பற்றிப் பெரிதாக அக்கறை கொள்ளவில்லை. மேற்கு மாகாணத்தில் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவம், இலங்கைத் தேசிய காங்கிரசில் சிங்களத் தலைவர்களுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள், சர்வசன வாக்குரிமையையும், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தையும் நடைமுறைப்படுத்துவதால் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் செல்வாக்குக் குறைவடையும் என்பன அக்காலத்தின் முக்கியமான தமிழர் பிரச்சினைகளாகக் கருதப்பட்டன.

உறுப்பினர்கள் பொதுச்சேவை உத்தியோகத்தர்களின் நிர்வாக அலுவல்களில் தலையிடும் நிலை தோன்றியது. இது பொறுப்பு இல்லாத அதிகாரமாகவும் (*Power without Responsibility*), விரும்பத்தகாத தலையீடாகவும் கருதப்பட்டது. டொனமூர் ஆணைக்குழு இந்தக் குறைபாடு பற்றிக் கவனம் செலுத்தியது. அப்போது ஆணைக்குழு நாட்டின் உயர்தரத்து உத்தியோகத்தர்களைக் கொண்ட சிவில் சேவை (*Civil Service*), அதன் கீழ் அமைந்த எழுதுவினைஞர் சேவை (*Clerical Service*) என்ற இரண்டினைப் பற்றியும் ஆராய்ந்து, இவ்விரு சேவைகளின் செயலூக்கத்தை உயர்த்துதல், வேலைப் பாதுகாப்பு, வேலைச் சூழல், சம்பளம் (*Morale, Job Security, Work Conditions, and Salaries*) என்பன பற்றிப் பல சிபார்சுகளைச் செய்தது. அத்தோடு இவ்விரு சேவைகளுக்குமுரிய ஆளணியின் நியமனம், ஆட்சேர்ப்புக் கொள்கை, பதவி உயர்வு, உதவிச் சேவைகள், ஒழுக்கக் கட்டுப்பாடு (*Appointment, Recruit ment Policy, Promotions, Support Services and Disciplinary Control*) ஆகிய விடயங்களில் ஆளுநருக்கு ஆலோசனை கூறக் கூடிய பொதுச்சேவை ஆணைக்குழு (*Public Service Commission*) ஒன்று நியமிக்கப்பட வேண்டும் எனவும் ஆணைக்குழு சிபார்சு செய்திருந்தது.

டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கையில் கிராமத் தலைமைக்காரர் (*Headman*) பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தமை கவனிப்புக்குரியது (இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் மாவட்ட மட்டத்தில் நிர்வாக அதிகாரம் உடையவர்களாகச் செயற்பட்ட ரட்டே மஹாத்தயா, முதலியார், மணியகாரன், முகாந்திரம் ஆகிய பதவி நிலையினரையே கிராமத் தலைமைக்காரர் என்ற சொல் குறித்து நிற்கிறது). இப்பதவி நிலையினரின் செயலாற்றலையும் (*Capacity*), வினைத்திறனையும் உயர்த்துவதன் மூலம் கிராமத் தலைமைக்காரர் சேவையில் 'Professionalism' என்னும் தொழில்வாண்மைத் தகைமையை மேம்படுத்த வேண்டும் என ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது. இச்சேவைக்கு சிவில் சேவை உத்தியோகத்தர்களை நியமிக்கலாம் அல்லது உயர்தரமான பாடசாலைகளில் கற்றவர்களை நியமிக்கலாம் என ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது.

ஆங்கில மொழி மூலக் கல்வியை வழங்கும் பாடசாலைகளின் கல்வித்தரம் பாராட்டுதலுக்கு உரியதாக இருந்ததை ஆணைக்குழு குறிப்பிட்டது.

அக்காலத்தின் உயர்தரமான பாடசாலைகளில் (*Elite Schools*) படித்தவர்கள் மாவட்டங்களின் அரச அலுவலகங்களில் பணியாற்றினார். இவ்வுத்தியோகத்தர்களின் ஆங்கில மொழி அறிவு உயர்தரமானதாக இருந்ததைக் கண்டு ஆணைக்குழுவினர் திருப்தி வெளியிட்டனர். ஆனால், மாவட்டங்களில் வேலைசெய்யும் உத்தியோகத்தர்களில் பெரும் தொகையினர் தமது தாய்மொழியான சிங்களத்திலும், தமிழிலும் பேசவும், எழுதவும் முடியாதவர்களாக இருப்பதை அவதானித்த ஆணைக்குழுவினர் தமது ஆச்சரியத்தை வெளிப்படுத்தினர். இது பெரும் குறைபாடு. உத்தியோகத்தர்கள் மக்களோடு அவர்களின் மொழிகளான சிங்களத்திலும், தமிழிலும் தொடர்பாடல் செய்யக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும் என்பதை ஆணைக்குழுவினர் தமது அறிக்கையில் பல இடங்களில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

6. அரசியல் கட்சிகள்

இலங்கையில் அரசியல் கட்சி முறை வளர்ச்சியடைந்திருக்கவில்லை என்ற குறைபாட்டை ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருந்தது. விருத்தியடைந்த அரசியல் கட்சிமுறைக்கும் (*Developed Political Party System*), பிரதிநிதித்துவ ஜனநாயக முறைக்கும் (*Representa tive Democracy*) இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டிய ஆணைக்குழு, பலகட்சி அரசியல் முறைமையின் (*MultiParty Political System*) அவசியத்தை

வலியுறுத்திக் கூறியது. இலங்கையில் (சிங்களவர், தமிழர் முதலிய) இனத்துவ அடையாள (Ethnic Identity) உணர்வு மிகையாக மேலோங்கி இருப்பதை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இப்பின்னணியில் அரசியல் கட்சிமுறை இலங்கையில் வளர்ச்சியடைந்தால், அக்கட்சிகளால் குறுகிய இனத்துவ அடையாளங்களைக் கடந்து தேசிய நோக்கில் செயற்பட முடியுமா என்ற ஐயத்தையும், வருத்தத்தையும் ஆணைக்குழு வெளியிட்டது.

"It (Donoughmore report) stated we can detect few signs to make us confident that parties, if and when formed, would owe their origin to economic or political differences in national policy rather than to racial or caste divisions."

டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கையில் காணப்படும் மேற்படி கூற்று, ஆணைக்குழு இலங்கையின் அரசியல் யதார்த்த நிலையை (Political Reality) நன்கு புரிந்து கொண்டது என்பதை எடுத்துக் காட்டுகிறது. ஆணைக்குழு வடிவமைத்த அரசியல் யாப்பு நிறுவனங்கள் மேற்படி புரிதலின்படி அமைந்தனவே எனலாம்.

முடிவுரை

மார்டின் வைற் (Martin Wight) எனும் அரசியல் ஆய்வாளர் எழுதிய 'The Development of the Legislative Council **1906-1945**' (London) என்னும் நூலில் (பக். **94**) டொனமூர் அறிக்கையை "The most remarkable state paper on colonial affairs of the twentieth century" எனக் குறிப்பிட்டிருந்தார். பிரித்தானிய அரசாங்கமும் டொனமூர் அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்ட பெரும்பாலான விடயங்களை ஏற்றுக்கொண்டது. ஆணைக்குழுவின் அறிக்கையிலும், அக்குழு வரைந்தளித்த அரசியல் யாப்பிலும் ஊடுருவிப் பரவியிருந்த மெய்யியல் பார்வை (Overall Philosophy) நவீன அரசியல் சிந்தனைகள் பலவற்றின் சிறப்பான கலவையாக இருந்தது. அந்த மெய்யியல் பார்வைக்கு முற்போக்கு - லிபரல் - புரட்சிகரச் சீர்திருத்தம் (Progressive - Liberal Radical Reform) என்ற இலக்கு மூலமாக இருந்தது. டொனமூர் ஆணைக்குழு முற்போக்கான லிபரல் ஜனநாயக அரசியல் நிறுவனங்களையும் நடைமுறைகளையும் இலங்கை அரசியலமைப்பில் புகுத்தியது. இலங்கை மக்களை ஆணைக்குழு அரசியல் அதிகாரம் மிக்கவர்களாக்குவதை (Empowering the People) நோக்கமாகக் கொண்டிருந்தது. இலங்கை அரசியலில் வேரோடியிருந்த பழமைவாதத்திற்குச் (Orthodoxy) சவால்விடுவதாக டொனமூர் அரசியல் யாப்பு அமைந்தது. ஆயினும் டொனமூர் ஆணைக்குழுவினர் இலங்கையின் பொதுச்சேவை (Public Service) போன்ற சில விடயங்களில் மேட்டிமைப் போக்கினை (Elitism) வெளிப்படுத்தினர்.

"In terms of the overall philosophy, which pervaded both the report and the constitution, it seemed to be influenced by a mix of progressive - liberal radical reform aimed at empowering the people and challenging the existing orthodoxy, but at the same time elitist with respect to institutions like the public service."

டொனமூர் ஆணைக்குழு அக்காலத்தின் தமிழ் அரசியல் தலைவர்களால் எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்சினைகள் பலவற்றைப் பற்றிப் பெரிதாக அக்கறை கொள்ளவில்லை. மேற்கு மாகாணத்தில் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவம், இலங்கைத் தேசிய காங்கிரசில் சிங்களத் தலைவர்களுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள், சர்வசன வாக்குரிமையையும், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தையும் நடைமுறைப்படுத்துவதால் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் செல்வாக்குக் குறைவடையும் என்பன அக்காலத்தின் முக்கியமான தமிழர் பிரச்சினைகளாகக் கருதப்பட்டன. டொனமூர் ஆணைக்குழு 'சிலோன் தமிழ் லீக்' (Ceylon Tamil League), அகில இலங்கைத் தமிழ் கொன்பெரன்ஸ் (All Ceylon Tamil Conference), யாழ்ப்பாணச் சங்கம் (Jaffna Association) ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து மேற்குறித்த விடயங்கள் பற்றிக் கருத்துகளைக் கேட்டறிந்தது. சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களைப் பல தடவைகள் சந்தித்து உரையாடியது. அதேபோல் K. பாலசிங்கம் அவர்களையும் சந்தித்து உரையாடியது. ஆணைக்குழுவினர் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் பல நாட்கள் தங்கியிருந்து மக்களுடன் சந்திப்புகளை நடத்தினர். அப்பகுதிகளின் அமைப்புகளுடனும் சந்திப்புகளை நடத்தினர்.

டொனமூர் ஆணைக்குழு தமிழர்களைச் சலுகைகள் பெற்ற சிறுபான்மை (Privileged Minority) என்று கருதியது என்று கூறுவோர் உள்ளனர். ஆணைக்குழு இலங்கையில் இனவாதம் என்ற புற்றுநோயினை (Cancer of Communalism) ஒழிப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்ததால் அடையாள அரசியல் (Identity Based Politics) பற்றி சாதகமான அல்லது அனுதாபம் உடைய முறையில் நோக்கவில்லை எனலாம். ஆயினும் இலங்கைத் தமிழர்களை பல சிறுபான்மை இனக்குழுக்களில் ஒன்றாக (One of Many Minority Groups) அடையாளம் காண ஆணைக்குழு தவறவில்லை.


இக்கட்டுரை 'Power Sharing in Sri Lanka Constitutional and Political Documents **1926-2008**' என்னும் தொகுப்பு நூலில் டொனமூர் அரசியல் யாப்புக் குறித்து எழுதப்பட்ட முன்னுரையை (Introduction, Chapter **2**) ஆதாரமாகக் கொண்டு தமிழில் எழுதப்பட்டுள்ளது.

‘வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்‘ எனும் இத்தொடர் ‘ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்‘ பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

காலனித்துவ காலத்தின் கடைசிக்கட்டம்

கார்த்திகேசு இந்திரபாலா

பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.



உலக வரலாற்றில் ஒரு முக்கிய தசாப்தமாக 1940கள் இடம்பெறுவதை மறுக்க முடியாது. இத்தசாப்தம் விடிந்தபோது வரலாறு காணாத மிகப் பெரிய பேரரசாக எழுச்சி பெற்றிருந்த பிரித்தானியப் பேரரசு தன் ஆதிக்கத்தின் உச்சகட்டத்தில் நின்றது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் ஆறாம் ஜோர்ஜ் மன்னன் இந்தியாவின் பேரரசனாக (Emperor of India) முடிசூட்டப்பட்டிருந்தான். பிரித்தானியப் பேரரசின் வலுவுக்குச் சவால் கொடுக்கும் வகையில் 1940இல் ஜெர்மன் தலைவர் அடொல்வ் ஹிட்லர் போர் நடத்திக்கொண்டிருந்தான். இரண்டாவது உலகப் போர் தீவிரமாக மூண்டது.

அந்தத் தசாப்தம் முடிந்தபோது உலகமே மாறிவிட்டது. பிரித்தானியப் பேரரசு மறைய, ஒரு புதிய வல்லரசாக அமெரிக்கா எழுச்சி பெற்றிருந்தது. தென் ஆசியாவில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகியவை புதிய சுதந்திர நாடுகளாகத் தோன்றியிருந்தன. ஜெர்மனியும் ஜப்பானும் போரில் படுதோல்வியுற்றுப் புதிய நாடுகளாக மாறத் தொடங்கியிருந்தன. அணு ஆயுதம் வல்லரசுகளின் உறவைப் பாதிக்கும் சக்தியாகக் காணப்பட்டது.

சுதந்திரத்துக்குத் தயாரான இலங்கை

இலங்கைக்குத் தன்னாட்சி (Selfrule) விரைவில் கிடைக்கும் என்ற உணர்வு 1940கள் தொடங்கியபோது அரசியல் தலைவர்களுக்குத் தெளிவாக ஏற்பட்டது என்றே தோன்றுகிறது. இந்த உணர்வு சிறப்பாகக் கொழும்பில் இருந்து அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்ட மத்திய வகுப்புத் தலைவர்களிடத்தில் காணப்பட்டது எனலாம். யாழ்ப்பாணத் தலைவர்கள் அத்தகைய உணர்வுடன் செயல்பட்டதாகக் கூறுவதற்கில்லை. ஆங்கிலேயர் ஆட்சி நீண்ட காலம் நிலைக்கும் என்றே நாட்டில் பொதுவாக நம்பப்பட்டது.

இப்பின்புலத்தில் பார்க்கும்போது, யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரஸ் நடத்திய இயக்கம் ஒரு விதிவிலக்காக அமைகின்றது. இவர்கள் 1930களில் கடும் இலட்சியவாதிகளாக இனவாதத்தை முற்றாக எதிர்த்தனர்; நாட்டுக்குச் சுயாட்சி கோரிப் பிரித்தானிய ஏகாதிபத்தியப் பிடியில் இருந்து விடுதலை பெற ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு முழு ஆதரவைக் கொடுத்தனர்.

இந்த இளைஞர்களுடைய செல்வாக்குப் பரவியிருந்த 1930களில் யாழ்ப்பாணத்தில் இன ஒற்றுமை மற்றும் இலங்கையர் தேசியவாதம் ஆகியவற்றுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகி இருந்ததைக் காணலாம். செல்வாக்குப் பெற்ற செய்தித்தாள்களாகிய இந்து சாதனம், 'Hindu Organ' ஆகியவை இனவாதத்தையும் இனவாதிகளையும் தாக்கி ஆசிரியர் தலையங்கம் வெளியிட்டன.

இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தைக் கோரிநின்ற சில யாழ்ப்பாணத் தலைவர்களை இந்து சாதன ஆசிரியர் ஒரு முறை இவ்வாறு விமர்சித்திருந்தார்: "எவராலும் ஒதுக்கப்பட்டுள்ள வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தை ஆக்கி, சிங்களருக்கும் தமிழர்களுக்குமிடையே பெரும் வேற்றுமையை உண்டாக்கி விடுதற்கு இவர்கள் நினைக்கின்றார்கள்." (இந்து சாதனம் 9/10/1933).

இந்து சாதனத்தில் வெளிவந்த ஒரு கட்டுரையில் அரசியல் ஒற்றுமையின் அவசியம் பற்றி இவ்வாறு வற்புறுத்தப்பட்டது: "... எல்லாவற்றிற்கும் மேலாக ஒற்றுமை வேண்டும். சிங்களர், தமிழர், முஸ்லீம்கள் என்ற பேதத்தை ஒழித்து எல்லாரும் ஓர் குலம்; எல்லாரும் ஓர் அன்னையின் புதல்வர்கள் என்று எண்ணித் தொண்டாற்றுவோமாக. எமக்குள்ளேயுள்ள வேற்றுமைகளை நாம் அறவே களைந்து அகிம்சையைக் கொண்டு 'லங்காதேவிக்கு ஜே' என்று வீரமுழக்கம் செய்து சுதந்திரப் போரில் ஈடுபடுவோமாக". (இந்து சாதனம் 2/10/1933).

பண்டைய யாழ்ப்பாணம் பற்றி ஆய்வு செய்து ஒரு நூல் எழுதியும் தமிழர் நாகரிகத்தின் தொன்மை பற்றிக் கட்டுரைகள் எழுதியும் சிறப்புப் பெற்றிருந்த முதலியார் சி. இராசநாயகம் அரசியலைப் பொறுத்தமட்டில் சிறுபான்மையினர் பெரும்பான்மையினருடன் ஒத்துப்போக வேண்டிய தேவையை வற்புறுத்தினார்:

"In the interests of Jaffna and for the maintenance of its good name, I would desire that the minority community should stand by the majority in the decision of all political questions, and display their readiness to unite and cooperate in every situation of emergency. I consider all those who attempt to bring about disunion and disruption as enemies to the national cause." (Hindu Organ, 28/03/1932).

இப்படியான ஒரு சூழ்நிலை 1930களில் யாழ்ப்பாணத்தில் உருவாகுவதற்கு இளைஞர் காங்கிரஸ் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்திருந்தது என்றே கூறவேண்டும். கல்விகற்ற யாழ்ப்பாணத்தவர் பலர் வெளிப்படுத்திய சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் அவதானிக்கும்போது மிகுந்த கவனத்தை ஈர்ப்பது ஒற்றுமைப்பட்ட இலங்கைக்காக இருந்த ஆதரவும் எழுப்பப்பட்ட குரலும் ஆகும். இன்று நினைத்தும் பார்க்கமுடியாத வகையில் யாழ்ப்பாணத்தவர் பலர் நாட்டின் ஒற்றுமைக்காகவும்

மேம்பாட்டுக்காகவும் ஆணித்தரமாகக் குரல் எழுப்பி மக்களை அழைத்தனர்.

இப்படியானோருள் இளைஞர்களுக்கு ஆதரவு அளித்த இரு தலைவர்கள் முக்கியமானவர்கள். ஒருவர் வைத்திலிங்கம் துரைசுவாமி. மற்றவர் கதிரவேற்பிள்ளை பாலசிங்கம். இவர் பழைய சட்டவாக்க சபையில் உறுப்பினராக இருந்தவர்; நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பல வகையாலும் பங்களித்தவர். யாழ்ப்பாணத்தின் மேம்பாட்டுக்குத் தேவைப்பட்ட நீர்வளத்தைப் பெறுவதற்கு மாவலி ஆற்றை வடக்குக்குத் திசைதிருப்ப வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தவர். வெளிநாடுகள் சிலவற்றில் இடம்பெற்ற எழுச்சியை அவதானித்து, இளைஞர்களை இவ்வாறு ஊக்குவித்தவர்: *"It is in the enthusiasm of the youth that the salvation of the country lies. A band of no more than 30 young men made Japan what it is today. Turkey is what it is owing to the work of the Young Turk Party." (Hindu Organ, 01/05/1933).*



வைத்திலிங்கம் துரைசுவாமி
Image Source - ta.wikipedia.org



கதிரவேற்பிள்ளை பாலசிங்கம்
Image Source - ta.wikipedia.org

இளைஞர் இயக்கத்தின் வீழ்ச்சி

தேசிய ஒற்றுமைக்கும் நாட்டின் சுதந்திரத்துக்கும் யாழ்ப்பாணத்து இளைஞர்கள் ஆர்வமுடன் நடத்திய இயக்கம் 1935இன் பின் வலு இழந்து, 1940களின் தொடக்கத்தில் வீழ்ச்சியுற்றது. யாழ்ப்பாண அரசியலில் ஜி.ஜி. பொன்னம்பலமும் அவரது ஆதரவாளர்களும் படிப்படியாக மேலோங்கிய செல்வாக்கைப் பெறத் தொடங்கினர்.

முன்னர் கூறியதுபோல், இளைஞர்களுடைய இயக்கத்தின் வரலாறு பற்றிச் சில முக்கியமான ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன (சீலன் கதிர்காமர், ஜேன் ரஸெல்). இந்த இயக்கம் இறுதியில் சித்தியடையத் தவறியமைக்கான காரணங்களை ஆராய்வது எனது நோக்கம் அல்ல. எனினும் இது பற்றிய என் கருத்துகள் சிலவற்றைக் கூறுவது எதிர்கால ஆய்வாளர்களுக்கு உதவலாம்.

மெய்நிலை உணர்வும் (Sense of Reality), வரலாற்று உணர்வும் (Sense of History) முன்நின்று வழிநடத்திச் செல்லும் தலைமைத்துவத்துக்கு (Leadership) இருக்கும் முக்கிய பண்புகளுள் இரண்டு என அறிஞர்கள் கூறியுள்ளதை முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன். இவற்றை 'Henry Kissinger' தனது 'Leadership' என்ற நூலில் வலியுறுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்து இளைஞர் தலைவர்கள் நடத்திய இயக்கத்தில் இப்பண்புகள் தொடர்பாகக் குறைபாடுகள் இருந்தன.

இந்த இயக்கத்தைத் தொடக்கியவர்கள் மாணவர்களாக இருந்த காலத்திலேயே இந்தியத் தேசிய போராட்டத்தின், குறிப்பாக மகாத்மா காந்தியின், செல்வாக்குக்கு ஆளாகி ஆர்வம் மிகுந்த தேசியவாதிகள் ஆனவர்கள். இந்தியாவிற்போல் இலங்கையிலும் பிரித்தானியருக்கு எதிராக இயக்கம் நடத்தித் தன்னாட்சி பெறும் நோக்கைக் கொண்டிருந்தாலும், இவர்கள் இறுகப் பற்றிக்கொண்டது இந்தியத் தேசியவாதத்தையே. இந்தியத் தலைவர்களை வரவழைத்துப் பெருந்திரள் மக்கள் கூட்டங்களை நடத்தினர்; கமலாதேவி சட்டோபாத்யாய அம்மையாரைத் தங்கள் காங்கிரஸின் தலைவராக்கினர்; ஊர்வலங்களில் 'வந்தே மாதரம்' பாடினர்; 'பாரதமாதாவுக்கு ஜே' என முழக்கம் செய்தனர்; காந்தியின் கதர் இயக்கத்துக்கு நிதி திரட்டினர்; கதர் ஆடையை உடுத்தினர். இவை அனைத்தும் இந்திய மண்ணில் முழுக்க முழுக்கப் பொருத்தமானவை. உண்மையில் இத்தகைய உணர்வுடன் இவர்கள் இந்தியாவைத் தங்கள் 'தாய்நாடு' (Mother Country) என அழைத்து, அந்த நாட்டுடன் இலங்கை இணையவேண்டும் (Federation) என்றுகூடக் குரல் எழுப்பினர்.

இந்த இளைஞர்களுக்கு ஒரு 'தர்மசங்கட' நிலை காணப்பட்டது. ஒருபுறம் இலங்கையைப் பிரித்தானியர் பிடியில் இருந்து விடுவிக்கவேண்டும் என்ற அவா, மறுபுறம் தங்கள் பழைய பண்பாட்டை மீட்கவேண்டும் என்ற வேட்கை. ஆனால் இவர்களுடைய பண்பாட்டின் ஊற்றுகள் இந்தியாவில் இருந்தன. இதனால் இவர்கள் இந்தியாவை அன்புடன் தழுவினர்.

இலங்கையின் தென்பாகத்தில் இருந்த நிலை வேறு. அங்கு, முன்னர் கூறியதுபோல், தேசியவாதம் பௌத்தத்தை மையமாகக்கொண்டு எழுச்சிபெற்றிருந்தது. முன்பு இருந்த தூய பௌத்த

சமூகத்தை மீளமைக்க வேண்டும் என்றும் இந்தியாவில் இருந்த பௌத்த புண்ணியத் தலங்களை இந்துக்களிடமிருந்து திரும்பப் பெறவேண்டும் என்றும் அநகாரிக தர்மபால பல செயல்பாடுகளில் ஈடுபட்டுப் பௌத்த இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றிருந்தார்.

பின்னர், மதத்துடன் மொழியும் இனமும் சேர்க்கப்பட, பண்டைய தென் இந்தியப் படையெடுப்புகள் நினைவுகூரப்பட்டுத் தமிழருக்கு எதிரான வரலாற்றுணர்வும் வளர்க்கப்பட்டது. இதன் பின், 1930களில் இந்தியத் தோட்டத் தொழிலாளருக்கு எதிரான மனப்பான்மை தோன்றியது. பின்பு, கொழும்பில் இருந்த இந்திய நகரத் தொழிலாளருக்கு எதிராகவும் தீவிரச் செயல்கள் நடைபெற்றன.

இந்த மெய்நிலையை யாழ்ப்பாணத்து இளைஞர்கள் அறிந்திருந்தார்களோ தெரியவில்லை. எப்படியும், இவர்களுடைய இயக்கம் வெற்றிபெறுவதற்குத் தெற்கில் வாழ்ந்த மக்களுடைய ஆதரவு, குறிப்பாக இளைஞர் துணை, தேவைப்பட்டது. இவர்கள் ஒரு சில சிங்களத் தலைவர்களுடன் தொடர்பு வைத்திருந்தபோதிலும், தெற்கில் தங்கள் இயக்கத்தை நடத்துவதற்கான ஆற்றலோ, அமைப்போ, பணவசதியோ பெற்றிருக்கவில்லை.

ஜப்பான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் இளைஞர்கள் சாதித்ததை உதாரணம் காட்டி யாழ்ப்பாண இளைஞர்களுக்கு க. பாலசிங்கம் ஊக்கம் கொடுத்தார். ஜப்பானிலும் துருக்கியிலும் இளைஞர்கள் ஈடுபட்ட செயல்பாடுகளுடன் யாழ்ப்பாண இளைஞர்களுடைய இயக்கத்தை ஒப்பிடுவது பொருத்தமற்றது. மத்தியகாலப் பண்பாட்டில் மூழ்கிக் கிடந்த ஜப்பானியரும் துருக்கியரும் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் சவாலை எதிர்நோக்கியபோது பழைய பண்பாடு எனும் ஆமை ஓட்டுக்குள் பின்வாங்கி ஆபத்து நீங்கும் வரை தலையைப் பாதுகாக்கச் செயல்படவில்லை.

ஜப்பானிலும் துருக்கியிலும் நடந்தவற்றை முன்னர் கூறியுள்ளேன். இங்கு அதைச் சுருக்கமாகக் கூறினால், ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் தாக்கத்தில் இருந்து வெற்றிபெற அந்த ஐரோப்பியர்களுடைய ஆயுதங்களையே பயன்படுத்த வேண்டும் என்பதை ஜப்பானியர் உணர்ந்தனர். அகத்தில் பாரம்பரிய பண்பாட்டைப் பேணியபோதிலும் புறத்தில் ஜப்பானை ஓர் ஐரோப்பிய நாடாக மாற்றினர். ஜப்பானியப் பேரரசன் குடும்பம் தொட்டுப் பொதுமக்கள் வரை மேலைத்தேச உடை அன்றாட உடையாகியது. ஜப்பானிய நிறுவனங்கள் மேலைத்தேச நிறுவனங்களைப் பின்பற்றி அமைக்கப்பட்டன. இளம் துருக்கியர் (Young Turks), ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் சவாலை எதிர்நோக்குவதற்கு, மத்தியகால இஸ்லாமியப் பண்பாட்டில் தோய்ந்திருந்த தங்கள் துருக்கி நாட்டையும் சமூகத்தையும் ஐரோப்பியமயமாக்கினர். ஆண் துருக்கியரின் அடையாளச் சின்னமாக உலகெங்கும் அறியப்பட்ட துருக்கித் தொப்பியை அணிவது சட்டவிரோதமான செயலாகியது. தலையை மூடி நீண்ட உடையணிந்த பெண்கள் ஐரோப்பியர் போல் உடையுடுத்துத் தலையலங்காரம் செய்தனர்.

இலங்கையிலும் இளைஞர்கள் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதற்குத் துடித்தனர். இளைஞர் குழுக்களை (Youth Leagues) பல இடங்களில் அமைத்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிர்ப்புக் காட்டும் முகமாக வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி, சிகரெட்டு, துணி ஆகியவற்றை வாங்காது, பனங்கட்டி, சுருட்டு, கைநெசவு செய்யப்பட்ட கதர் ஆகிய பொருட்களைப் பயன்படுத்துமாறு தீவிர பிரசாரத்தை நடத்தினர்.

பனங்கட்டிச் செய்கையிலிருந்து நவீன தொழில்நுட்ப முறைப்படி சீனியைப் பெருமளவில் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் இந்தியாவிலேயே அமைக்கப்பட்டிருந்த காலம் அது. தமிழ்நாட்டில் தென் ஆற்காடு மாநிலத்தில் கரும்புச் செய்கையும் நவீன சீனித் தொழிற்சாலைகளும் 1930களில் காணப்பட்டன. இப்பின்புலத்தில், "நம் நாட்டில் கரும்புச் செய்கையைப் பெருக்குவோம், நவீன சீனித் தொழிற்சாலைகளை அமைப்போம்" என்று முழக்கம் செய்வதற்குப் பதிலாக, பின் நோக்கிச் சென்று பனங்கட்டியைப் பயன்படுத்துவோம் எனப் பிரசாரம் செய்தமை நாட்டை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் செல்ல வகுத்த சிறந்த பொருளியல் திட்டமாக இருக்கவில்லை. இளைஞர்கள் நடத்திய இந்த இயக்கம் பயனளிக்கவில்லை.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் நடத்திய இயக்கம் சித்தியடையத் தவறினாலும், இதை மிகுந்த ஆர்வத்துடன் வழிநடத்திச் சென்ற இளைஞர்கள் தன்னலமற்ற இலட்சியவாதிகளாய், ஒற்றுமைப்பட்ட இலங்கையில் அசையாத நம்பிக்கையுடையவர்களாய், பிரித்தானியர் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற திடமான குறிக்கோளை முன்வைத்தவர்களாய்ச் செயல்பட்டனர் என்பதை மறுப்பதற்கில்லை. வேறொரு சூழ்நிலையில் இவர்கள் நாட்டின் பெருந்தலைவர்களாக உயர்வு பெற்றிருப்பர். இவர்களுள் சிலரை நன்கு அறிந்துகொள்ளும் வாய்ப்பு

இலங்கையில் 1920களில் மேலைத்தேசத் தாராண்மை வாதக் கருத்துகளும் தொழிலாளர் உரிமைகளைப் பேணும் தொழிற்சங்கங்கள் தொடர்பான கருத்துகளும் மத்திய வகுப்பு இளைஞரிடையே பரவத் தொடங்கின. இப்பின்புலத்தில், யாழ்ப்பாணத்தவர் குடும்பங்களைச் சேர்ந்த மத்திய வகுப்பு இளைஞர்கள் கொழும்பில் இடதுசாரிப் பண்புகளைக் கொண்ட அரசியல் செயல் பாடுகளில் ஈடுபட்டனர்.

எனக்குக் கிட்டியது. நான் 1947இல் யாழ்ப்பாணக் கல்லூரியில் படிக்கத் தொடங்கியபோது ஹண்டி பேரின்பநாயகம் அங்கு வகித்த ஆசிரியர் பதவியை விட்டுச் சென்றிருந்தார். இதனால் அவரை அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பிற்காலத்தில் அவரைச் சந்திக்க முயலவில்லையே என்பது என்னுடைய கவலைகளுள் ஒன்று. எனினும் அவருடைய மக்கள் மூவருடனும் நன்கு பழகி நட்பு வைத்திருக்க வாய்ப்புக் கிடைத்தது.

மாணவர் காங்கிரஸின் தொடக்ககால உறுப்பினர்களுள் சிலர் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர். அவர்களுள் இருவரிடம் கல்வி கற்கவும் நெருங்கிப் பழகவும் எனக்கு முடிந்தமை என்னுடைய பெருவாய்ப்பு என்று கருதுகிறேன். ஒருவர், ஆங்கில இலக்கியம் (சிறப்பாக ஷேக்ஸ்பியருடைய நாடகத்தை) கற்பித்த லைமன் எஸ். குலத்துங்கம். மற்றவர் தமிழ் இலக்கணமும் இலக்கியமும் கற்பித்த கே.ஈ. மதியாபரணம்.

இவர்களை விட வேறும் சில மாணவர் தலைவர்களுடன் நட்புறவு கொள்ள எனக்குச் சந்தர்ப்பம் கிட்டியது. அவர்களுள் மூவரை மறக்கமுடியாது. கே. நேசையா அவர்கள் பல்கலைக்கழகக் கல்வித்துறையில் (பேராதனையில்) விரிவுரையாற்றிய காலத்தில் அவரை முதலில் சந்தித்தேன். அவர் ஓய்வுபெற்றபின் யாழ்ப்பாணத்தில் அவருடைய இல்லத்துக்கும் சென்றிருக்கிறேன். தேசிய உடை (கதர் என்று நினைக்கின்றேன்) அணிந்து அடக்கமான பண்புடன் காணப்பட்ட இவர் ஒரு சிறந்த கல்விமானாகவும் சிந்தனையாளராகவும் கருதப்பட்டார்.

சுதந்திர இலங்கையின் முதலாவது செனற் சபையில் (மேல் அவையில்) உறுப்பினராகப் பணியாற்றிய எஸ். ஆர். கனகநாயகம் அவர்களைப் பற்றி நான் சிறுவனாக இருந்த காலத்தில் செய்தித்தாள்கள் வாயிலாக அறிந்திருந்தேன். பின்னர் அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில் பலமுறை அவருடன் பழகி அவர் நட்பைப் பெறும் வாய்ப்பும் கிடைத்தது. மிகுந்த நகைச்சுவையுடன் தன் அனுபவங்களைக் கூறி எம்மைச் சிரிப்பில் ஆழ்த்திவிடுவார். இவர் பட்டதாரியாகியபோது பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியர் பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்துக் கல்லூரிக்கு நேர்முகப் பரீட்சைக்குச் சென்றபோது பொன்னம்பலம் இராமநாதன் தனித்தமிழில் கேட்ட கேள்விகளையும் இவர் அளித்த விடைகளையும் நகைச்சுவை ததும்ப இவர் எடுத்துக்கூறியதை என்னால் மறக்கமுடியாது. பின்னர் அவர் தன் மகளுடன் வாழ்வதற்கு அவுஸ்திரேலியாவுக்கு வந்திருந்தபோதும் எங்கள் நட்புத் தொடர்ந்தது. இறுதியில் அவருடைய மரணத்தின் போது மரியாதை செலுத்தவும் வாய்ப்புக் கிடைத்தது.

எஸ். துரைராஜசிங்கம் அவர்கள் மலேசியாவில் கோலாலம்பூரை வதிவிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணக் கல்லூரியில் லண்டன் பல்கலைக்கழகத்தின் பட்டத்துக்காகப் படித்துக்கொண்டிருந்த காலத்தில் மாணவர் இயக்கத்திலும் மகாத்மா காந்தியை யாழ்ப்பாணத்துக்கு வரவழைப்பதற்குமான முயற்சிகளில் இவர் ஈடுபட்டு, மாணவர் காங்கிரஸின் செயலாளராகவும் பணியாற்றியவர். இரண்டாம் உலகப் போரின் பின் இவர் ஆனந்த குமாரசுவாமியின் வாழ்க்கை வரலாற்றிலும் எழுத்துகளிலும் மிகுந்த ஆர்வம் கொண்டு அக்கலை விமர்சகரைப் பற்றி நூல்கள் வெளியிட்டார். இத்துறையில் எனக்கும் இருந்த ஈடுபாட்டினால், நான் இவருடன் தொடர்பு கொண்டு, 1977இல் கோலாலம்பூருக்குச் சென்று அவருடைய இல்லத்தில் அவரைச் சந்திக்கவும் முடிந்தது.

இவர்களைத் தவிர வேறும் சில மாணவர் இயக்கத்தினரை ஒரு முறையாவது சந்திக்க முடிந்தது. அவர்களுள் இருவர் சபாபதி குலேந்திரனும் எஸ்.யு. சோமசேகரமும் ஆவர். குலேந்திரன் பின்னர் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணப் பிரிவுக்கு ஆயராகப் பணிபுரிந்தவர். சோமசேகரம் கல்வித் துறையில் முன்னேறி, யாழ்ப்பாணத்தில் கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்தவர்.

இவர்களை நேர்முகமாகக் கண்டு இவர்கள் வாழ்க்கையையும் கருத்துகளையும் பார்த்தபோது, இளைஞர் இயக்கத்தில் இருந்தோர் எவ்வளவு தூரம் இலட்சியவாதிகளாய்த் தன்னலமற்ற சேவையைச் சமூகத்துக்குக் கொடுக்க முன்வந்தனர் என்பதை உணரமுடிந்தது. இலங்கையில் 1930களில் இருந்து தீவிரமாக எழுந்த அரசியல் சூழ்நிலையில் இந்த இலட்சியவாதிகளுக்கு இடமில்லாதுபோனமை ஆச்சரியத்துக்கு உரியதன்று.

இடதுசாரி இளைஞர்கள்

யாழ்ப்பாணத்தவர் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இடதுசாரி இயக்கங்களிலும் தீவிரமாகப் பங்குகொண்டமையை அவதானிப்பதும் முக்கியமாகும். இலங்கையில் 1920களில் மேலைத்தேசத் தாராண்மைவாதக் கருத்துகளும் தொழிலாளர் உரிமைகளைப் பேணும் தொழிற்சங்கங்கள் தொடர்பான கருத்துகளும் மத்திய வகுப்பு இளைஞரிடையே பரவத் தொடங்கின.

இப்பின்புலத்தில், யாழ்ப்பாணத்தவர் குடும்பங்களைச் சேர்ந்த மத்திய வகுப்பு இளைஞர்கள் கொழும்பில் இடதுசாரிப் பண்புகளைக் கொண்ட அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டனர். இவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் ஜேம்ஸ் தேவதாசன் ரத்னம் (*James T. Rutnam, 1905-1988*).

மானிப்பாய்க் குடும்பம் ஒன்றில் பிறந்த ஜேம்ஸ் ரத்னம் சிறு வயதிலிருந்து கொழும்பில் வாழ்ந்தவர். இளம் பராயத்தில் ஏ.ஈ. குணஸிங்க, விக்டர் கொறயா போன்றோருடன் கூடி '*Young Lanka League*' என்ற கழகத்தின் செயல்பாடுகளில் ஈடுபட்டார். முதலாம் உலகப் போரில் உயிரிழந்த போராளிகளை நினைவுகூர்ந்து, அப்போரில் சண்டையிட்டு வீடு திரும்பிய போராளிகளுக்கு உதவும் வகையில் செயற்கைச் செம்மலர்களை (பொப்பி / *Poppy*) விற்று நிதி திரட்டப்பட்டது. அந்நாட்களில் இலங்கையில் '*Poppy Day*' (நவம்பர் 11) நாளில் திரட்டப்பட்ட பணம் இலங்கையில் வாழ்ந்த உலகப் போர் போராளிகளுக்குக் கொடுக்கப்படாது இங்கிலாந்துக்கு அனுப்பப்படுகின்றது என எடுத்துக்காட்டி, அதனை எதிர்த்து ஜேம்ஸ் ரத்னம் செய்தித்தாள்களுக்கு எழுதினார். இவர் தொடக்கிவைத்த எதிர்ப்பின் விளைவாக, இலங்கைப் போராளிகளுக்கு உதவ 'சூரிய மலர்' ( ) இயக்கம் உருவாகியது. இந்த இயக்கம் இலங்கையில் இடதுசாரி இயக்கம் தொடங்குவதற்கு வழிவகுத்தது என நம்பப்படுகின்றது.

S.W.R.D. பண்டாரநாயக்க இங்கிலாந்தில் தன் படிப்பை 1924இல் முடித்து இலங்கைக்குத் திரும்பியபோது அரசியல் மாற்றங்களை நாட்டில் உண்டுபண்ண ஆவலுடையவராய் தீவிர எண்ணங்களுடன் (*Radical*) காணப்பட்டார். இதனால், அதே எண்ணங்களைக் கொண்டிருந்த ஜேம்ஸ் ரத்னம் அவருடன் இணைந்து செயல்பட முன்வந்தார். பண்டாரநாயக்கவின் முதலாவது பொதுக்கூட்டப் பேச்சு கொழும்பில் நிகழ்ந்தபோது, ஜேம்ஸ் ரத்னம் நன்றியுரையை வழங்கி, பண்டாரநாயக்க 'இளைஞர் லங்கா'வுக்கு நல்ல எதிர்காலத்தைக் கொடுப்பவராக வந்திருக்கிறார் (*Hope of Young Lanka*) என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார்.

இதன் பின், பண்டாரநாயக்க இலங்கைத் தேசிய காங்கிரஸின் போக்கை விரும்பாதவராய் '*Progressive Nationalist Party*' என்ற ஒரு கட்சியைத் தொடங்கியபோது ஜேம்ஸ் ரத்னம் அவருடன் இணைந்து செயல்பட்டார். ஆனால் இந்த உறவு நீண்ட காலம் நிலைக்கவில்லை. இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சிறந்த வழி சமஷ்டி முறை என பண்டாரநாயக்க வாதிட்டபோது அதனை ஜேம்ஸ் ரத்னம் எதிர்த்தார். இதன் பின் பண்டாரநாயக்கவுடன் இணைவதைக் கைவிட்டு, ஜேம்ஸ் ரத்னம் தோட்டத் தொழிலாளர்களுடைய உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கினார்.

ஜேம்ஸ் ரத்னத்தைப் போன்று கொழும்பு இடதுசாரி ஆர்வலர்களுடன் இணைந்து செயலாற்றிய இன்னொரு யாழ்ப்பாணத்து இளைஞர் சி. பொன்னம்பலம் என்பவர் ஆவார். இவர் யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரஸில் உறுப்பினராக இருந்தவர் என அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தின் முதலாவது பெண் வைத்தியராக (மேலைத்தேச மருத்துவம்) தகைமை பெற்றவர் எனக் கருதப்படும் நல்லம்மா (முருகேசு) சத்தியவாகீஸ்வரர் 1928இல் ஏ.ஈ. குணஸிங்க '*Ceylon Labour Party*' என்ற தொழிலாளர் கட்சியை நிறுவியபோது அதில் ஓர் அங்கத்தவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய கணவர் சத்தியவாகீஸ்வர ஐயர் (நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி அதிபர்) இக்கட்சியின் செயற்குழு உறுப்பினராக நியமனம் பெற்றிருந்தார்.

இவர்களுக்குப் பின் மார்க்சீயச் சிந்தனைகளால் (*Marxism*) கவரப்பட்ட இளைஞர் சிலர் தீவிரமான செயல்பாடுகளில் ஈடுபடத் தொடங்கினர். இதனைப் பின்னர் பார்க்கலாம்.

‘யாழ்ப்பாணக் கிறிஸ்தவத் திருமறைகள்’ எனும் இத்தொடர் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு கிறிஸ்தவ வேதங்கள் பற்றியது. கிறிஸ்தவ தமிழ் வேதாகமங்கள் தென்இந்தியாவில் மொழிபெயர்க்கப்பட்டவை என்பதே பொதுவான கருத்து. ஆனால் யாழ்ப்பாணத்திலும் இதற்கான பிரயத்தனங்கள் நடந்திருக்கின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை டச்சு மற்றும் பிரிட்டிஷ் காலனிய ஆதிக்கத்தின் உச்சத்தில் வெளிவந்தவை. இத்தொடரில் இந்த வேதாகமங்களுக்குப் பின்னால் இருந்த ஆளுமைகள், அவர்களின் இறையியல் கோட்பாடுகள், மொழிநயம், மொழிபெயர்ப்பு நடைமுறைகள், உபயோகித்த யாழ்ப்பாணச் சொற்கள் போன்றனவற்றோடு இவை உருவாகிய அரசியல், சமூக, சமய காலகட்டங்கள் போன்றன பற்றியும் ஆய்வு செய்யப்படும். அத்துடன் இவை எவ்வாறு அதிகாரபூர்வமான வேதாகம சங்கத்தின் பிரதான பதிப்புகளிலிருந்து வேறுபட்டன என்பதும் விவரிக்கப்படும். குறிப்பாக, வேதாகம உருவாக்கத்தில் தமிழர்களின் கவிதை மரபின் பங்களிப்புப் பற்றியும் அவர்களை ஈர்க்கவும், திருப்தியளிக்கவும் இந்தியப் புராண வடிவங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பிலும் இத்தொடர் ஆராயும்.

பிலிப்பு டி மெல்ஹோ: ஐரோப்பிய வேதாகம மொழிபெயர்ப்பு ஏகபோகத்தை முறியடித்த இலங்கைத் தமிழர்

சச்சிதானந்தன் சுகிர்தராஜா

ஈழத்தின் மட்டக்களப்பில் பிறந்த சச்சிதானந்தன் சுகிர்தராஜா அவர்கள், தற்போது ஐக்கிய இராச்சியத்தின் பெர்மிங்ஹம்மில் வாழ்ந்து வருகிறார். பெர்மிங்ஹம் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். இச்சர்வகலாசாலையிலேயே இவருக்குத் தனியார் இருக்கை வழங்கப்பட்டு விளக்கவியல் பேராசிரியாகப் பணிபுரிந்தார். இவருடைய பின்காலனித்துவ எழுத்துகள் இவரைக் கல்வி உலகில் பிரபலமாக்கிற்று. இவருடைய படைப்புகள் பிரபல பல்கலைக்கழகப் பிரசுரங்களான ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ், ஹார்வார்ட் ஆகியவற்றில் வெளியாகியுள்ளன. இவை ஜேர்மன், ஸ்பானிஷ், கொரியன், மலேசியன், சீன மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.



எழுத்தாளர் அசோகமித்திரன் கணையாழியில் ஆசிரியராக இருந்தபோது, இவருடைய தமிழ் எழுத்துகள் வெளிவரத்தொடங்கின. காலச்சுவடு பதிப்பகத்தால் இவரின் ‘அசாதாரண மனிதன்’ எனும் ஒரு கதைத்தொகுப்பும், ‘பண்பாட்டுப் பொற்கனிகள், கலாசார அவதானிப்புகள், நூல்கள் நூலகங்கள் நூலகர்கள்’ ஆகிய மூன்று கட்டுரைத்தொகுப்புகளும் வெளியிடப்பட்டன. ‘யூதர்கள் சைவர்களான கதை, ஆசியாவை அசத்த முயன்ற பொதுவுடமைவாதிகள், நான் தடுப்பூசி குத்தப்போனேன்’ ஆகிய நூல்கள் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தால் வெளியிடப்பட்டன.

தமிழ் வேதாகம மொழிபெயர்ப்புகள் பெரும்பாலும் இந்தியாவில் பணியாற்றிய ஐரோப்பிய மதபரப்பாளர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன; அவை பொதுவாக மொழிபெயர்ப்பாளர்களின் பெயர்களாலேயே அறியப்படுகின்றன — சீகன்பால்க் (Ziegenbalg), ஃபேப்ரிசியஸ் (Fabricius), ரேனியஸ் (Rhenius) ஆகியோரின் திருப்புதல்கள் அதற்கு எடுத்துக்காட்டுகள். இந்த ஐரோப்பியமயமான வரிசையைக் குழப்பியவர் பிலிப்பு டி மெல்ஹோ (1723-1790) என்ற இலங்கைத் தமிழர். அவரது பெயர் டச்சுக்காரருடையது போலத் தோன்றினாலும், அவர் ஒரு பச்சைத் தமிழர்; தனது மொழிபெயர்ப்புப் பணியை இலங்கையிலேயே மேற்கொண்டார். இதுவரை தமிழ் அவர்களுக்கு அயல்மொழியாக இருந்த வெளிநாட்டவர்களே வேதாகமத்தை மொழிபெயர்த்திருந்த நிலையில், ஒரு தாய்மொழிப் பேச்சாளர் தனது சொந்த மொழியிலேயே வேதாகமத்தை மொழிபெயர்க்க முயன்ற இச்செயல் முதல் முயற்சியாகும்.

மெல்ஹோவின் வாழ்க்கையும் பணியையும் பற்றிய தகவல்களில் பெரும்பகுதி, அவரைப் பெரிதும் பாராட்டும் வர்ணனைகளிலிருந்தே வருகிறது. அவற்றில் ஒன்று சைமன் காசி செட்டி (1807-1860) என்பவரின் நினைவுக் குறிப்புகள். இந்தக் காசி செட்டி இலங்கையின் டச்சு நிர்வாகி, நீதிபதி, மேலும் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர். அவரது எழுத்துகளில், மெல்ஹோவின் மேன்மையைப் பற்றிய பக்தி உணர்வு, அவருடைய சமூகப் பின்னணியால் வடிவமைக்கப்பட்ட ஒரு சமூகப் பெருமை உணர்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இருவரும் ஒரே தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாகக் கொழும்புச் செட்டியார் வணிகச் சமூகத்துடன் இணைந்தவர்கள் என்பதால் காசி செட்டியின் மெல்ஹோ பற்றிய பார்வை ஒருவிதத்தில் பலவீனமானதாகவும் படுகிறது.

மற்றொரு மெல்ஹோ பற்றிய விவரம், முந்தைய அத்தியாயத்தில் சொல்லப்பட்ட கவிஞரான கூழங்கையார் எழுதியவற்றிலிருந்து வருகிறது. பிலிப்பு டி மெல்ஹோவுடன் அவர் கொண்டிருந்த நெருங்கிய மற்றும் நீண்டகாலத் தொடர்பின் மூலம், கூழங்கையார் வேதாகமத்தில் உறுதியான புலமை பெற்றார்; அதே நேரத்தில், மெல்ஹோவின் மொழிபெயர்ப்புப் பணிகளில் அவர் உதவியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. மெல்ஹோவுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் அவரது எழுத்துகளில் காணப்படும் உருவக விளக்கங்களுக்குப் பின்னால் பெரும்பாலும் கூழங்கையாரின் தாக்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. யோசேப்பின் வரலாறு எனும் அவரது படைப்பிலிருந்த 1,023 செய்யுள்களில் நான்கு செய்யுள்கள் மட்டுமே இன்று எஞ்சியுள்ளன. இவற்றில் — கூழங்கையார் கவித்துவமான மரியாதையுடன் மெல்ஹோவின் அபார ஞானம், அவரின் பிறரைப் பேணும் பண்பை இயற்கை உவமானங்களான மழை, இடி, மின்னல்களுடன் ஒப்பிட்டு அளவுக்கு மீறி வர்ணிக்கிறார். அவரது அறிவுக்கும் நற்குணத்திற்கும் கூழங்கையார் காட்டும் கண்ணியமும், கரிசனையும் முழுச் செய்யுள்களிலும் தெளிவாகத் தெரிகிறது.

இந்த காசிச் செட்டி, கூழங்கையார் ஆகியோர் மெல்ஹோ பற்றி உருவாக்கிய பிம்பங்கள், மெல்ஹோவை ஒரு பாண்டித்தியம் மிக்க ஆசானாக மட்டுமல்ல, மனிதகுல நலனில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட ஒருவராகவும் சித்தரிக்கின்றன. இவற்றைப் படிக்கிறவர்கள் இவை பக்தி கலந்த மரியாதையுடன் எழுதப்பட்டவை என்பதை நினைவில் வைத்துக்கொள்வது நல்லது.

பிலிப்பு டி மெல்ஹோ (Philip de Melho): ஒரு சுருக்கமான வாழ்க்கை வரலாறு

பிலிப்பு டி மெல்ஹோ 1723 ஏப்ரல் 23 அன்று கொழும்பில் செட்டியார் சமூகத்தில் பிறந்தார். 'செட்டி' என்ற பெயர் செல்வந்த வணிகர் அல்லது வர்த்தகர் என்பதைக் குறிக்கும் சொற்களிலிருந்து வந்தது. இலங்கையிலுள்ள செட்டிச் சமூகத்தின் துல்லியமான தோற்றம் உறுதியாக நிறுவப்படவில்லை. அண்மையில் வெளியான ஒரு நூலின்படி, இன்றைய செட்டியார்களின் மூதாதையர்கள் வடமேற்கு இந்தியாவில் உள்ள மத்தியப் பிரதேசத்திலிருந்து வந்து, மலபார் மற்றும் சோழ மண்டலக் கடற்கரைகளில் குடியேறியிருக்கலாம்; பின்னர் இளவரசர் விஜயனின் வேண்டுகோளின் பேரில் மதுரை மன்னரால் 'இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்' எனக் கூறப்படுகிறது. மேலும், புனித மரத்தைப் பாதுகாப்பதற்காக வந்த இளவரசர் சுமித்தனும் அவரது ஏழு சகோதரர்களும் ஒரு செட்டியாரின் மகன்கள் என்றும் அந்நூல் வலியுறுத்துகிறது. தென்னிந்தியப் பகுதிகளில் வாணிபத்தில் ஈடுபட்டிருந்த செட்டியார்கள், பின்னர் அரசியல் அமைதியின்மையும் பஞ்சமும் காரணமாக தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குக் குடிபெயர்ந்தனர் என்றும் அந்நூல் பதிவு செய்கிறது (Reggie Candappa (ed.), History of the Colombo Chetties (கொழும்பு: Foremost Productions Ltd, 2000), 15.) மெல்ஹோவின் குடும்பம் டச்சுக் கிழக்கிந்திய நிறுவனம் மற்றும் டச்சு சீர்திருத்தச் சபைக்கு நீண்டகாலம் சேவை செய்தது. அவரது

தந்தை சைமன் டி மெல்ஹோ டச்சு ஆட்சியின் முக்கிய தமிழ்ப் பெயர்ப்பாளர் மற்றும் ஆளுநர் வாசலின் தலைமைத் தமிழ் முதலியார் (Chief Tamil Mudaliyar of the Gate) என்ற உயர்ந்த பதவியை வகித்தார். ஆனால் அடிமை வம்சப் பின்னணியால் இக்குடும்பம் இகழ்ச்சியையும் சந்தித்தது. பிலிப்பு டி மெல்ஹோ விரைவில் டச்சு சீர்திருத்தச் சபையின் முக்கிய தமிழர் தலைவராக உயர்ந்தார். அவர் மற்றொரு செல்வாக்கு மிக்க செட்டியார் குடும்பத்தைச் சேர்ந்த மக்தலேனா ஒண்டாட்சியைத் திருமணம் செய்தார். ஆனால் அவரது இரண்டு மகன்களும் இளமையிலேயே, கல்விப் பராயத்தில், இறந்துபோயினர். தெய்வவியல் மற்றும் தமிழ் இலக்கிய உலகில் அவர் பெற்றிருந்த உயர்ந்த நிலை, ஐரோப்பியரும் இலங்கையரும் சேர்ந்த அறிஞர்களிடையே அவரை 18ஆம் நூற்றாண்டின் சிறப்பு ஆளுமையாகத் திகழச் செய்தது.

டச்சு சீர்திருத்தச் சபையின் முதல் குருவான இலங்கைத் தமிழர் என்ற சிறப்பும் பிலிப்பு டி மெல்ஹோக்கு உண்டு. கொழும்பில் 1705இல் நிறுவப்பட்ட கல்வி நிறுவனத்தில் அவர் கல்வி கற்றார்; இது இலங்கைத் தமிழ் இளைஞர்களை மதப்பணி மற்றும் குடியியல் சேவைகளில் ஈடுபடப் பயிற்றுவிப்பதற்காக உருவாக்கப்பட்டது. அங்கு அவர் எபிரேயம், கிரேக்கம் போன்ற வேதாகம மொழிகளையும் இலத்தீன், டச்சு, போர்த்துகீசியம் போன்ற மேற்கத்தேய மொழிகளையும், மேலும் தமிழையும் ஆழமாகக் கற்றார். முக்கியமாக, கிறிஸ்தவ தெய்வவியலில் உறுதியான பாண்டித்தியம் பெற்றார்.

மெல்ஹோ சிறந்த கல்விச் சாதனையுடன் பதினேழு வயதுக்குள் மூத்த மாணவர் நிலைக்கு உயர்ந்தார்; இருபது வயதில் முழுப் பாடத்திட்டத்தையும் முடித்து லெய்டன் பல்கலைக்கழகத்திற்குப் பரிந்துரைக்கப்பட்ட மிகத் தகுதியுடையவராகத் திகழ்ந்தார். டச்சுத் திருச்சபைப் போதகர்கள் பல்கலைக்கழகத் தெய்வவியல் பட்டம் பெறுவது வழக்கம் என்றாலும், ஐரோப்பா செல்ல வேண்டிய வாய்ப்பை அவர் காரணமறியாமல் நிராகரித்தார். ஆனாலும் பல்கலைக்கழகப் பட்டமின்றி, பிரசங்ககர் (Predikant) எனும் மூத்த போதகர் தகுதியைப் பெற்றவரானார். 1746இல் தமிழ் புதிய ஏற்பாட்டைத் திருப்பும் குழுவிலும், தமிழர்களுக்கான அனைத்து மதநூல்களின் மொழிபெயர்ப்புகளைச் சீராய்வு செய்யும் பொறுப்பிலும் இணைக்கப்பட்டார். 1753இல் வடக்கு மாகாண ஆசாரியராக நியமிக்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் உள்ள தேவாலயங்களுக்கும் பள்ளிகளுக்கும் மேற்பார்வையாளராகவும் இருந்தார்.

விவிலிய, மற்றும் ஐரோப்பிய மொழிகளில் மட்டுமல்ல தமிழிலும் மெல்ஹோ ஒரு நிபுணராகவும் உயர்ந்த மதிப்பைப் பெற்ற அறிஞராகவும் திகழ்ந்தார். அக்காலத்தில் தமிழ்மொழி உலகின் மையமாக இருந்த யாழ்ப்பாணத்தில் வசித்தபோது, அங்கிருந்த முக்கியமான புலவர்கள், கவிஞர்கள், தத்துவ ஞானிகளுடன் தொடர்பு கொண்டு தனது இலக்கண மொழியியல் அறிவை விரிவுபடுத்தினார்; கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்காக விவாதங்களிலும் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார். மதம் சார்ந்த விஷயங்களில் கூழங்கையார் நடத்திய விவாதம் குறிப்பிடத்தக்கது.

தமிழின் நிலையான நிகண்டுவாக இருந்த 'சிந்தாமணி நிகண்டு'வை அவர் விரிவுபடுத்தி, பல புதிய செய்யுட்களைச் சேர்த்தார்; அவை அவரது இலக்கணத் திறமையையும் கவிதைத் திறனையும் வெளிப்படுத்தின. இச்சேர்த்தல்கள் பின்னர் 1856ஆம் ஆண்டில் மணிப்பயிற்சி அச்சக வெளியீட்டில் இணைக்கப்பட்டன. அவை அக்காலத் தமிழறிஞர்களால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அவரின் உயர்ந்த இலக்கணகவிதை நயத்துக்குச் சாட்சியமாகுகின்றது.

யாழ்ப்பாணத்தில் சபைக்குருவாக இருந்தபோது, டச்சு சீர்திருத்த மதத்தை விளக்கியும் பாதுகாத்தும் பல தமிழ் நூல்களை எழுதியும் மொழிபெயர்த்தும் வந்தார். அதேபோல், ஆளுநர் ஸ்க்ரூடரின் ஆட்சிக்காலத்தில் பிரபலமாக இருந்த மருதப்ப பிள்ளையைப் போற்றும் மருதப்ப குறவஞ்சி என்ற செழுமையான குறவஞ்சி நாடகத்தையும் இயற்றினார். அவரது பிற படைப்புகள் பல, போர்த்துகீசியம், தமிழ் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட பிரசங்கங்கள் உட்பட, இப்போது கிடைப்பதில்லை. வேதாகம மொழிபெயர்ப்புக்கான அவரது கடிதங்கள் மற்றும் அவரின் விவிலியத் திருப்புதல்கள் மட்டும் இன்று எஞ்சியுள்ளன.

1750ஆம் ஆண்டு, டி மெல்ஹோ திருச்சபைக் குருவாக அர்ப்பணிக்கப்பட்ட போது, அவர் புதிய ஏற்பாட்டின் முதல் பத்து நூல்களைத் தமிழில் திருப்பும் பணியை (மத்தேயு சுவிசேஷத்திலிருந்து எபேசியருக்கு எழுதிய எழுத்து வரை) முடித்திருந்தார். அவரது சக ஊழியர்களின் ஆர்வமும் ஒத்துழைப்பும் இல்லாததால், இந்தப் பொறுப்பு முழுவதும் அவர் மீதே விழுந்தது.

அவரது விரிவான கல்வியும், இறையில் பக்குவமும் மற்றும் டச்சுத் திருச்சபை வளர்ச்சிக்காக அவர் மேற்கொண்ட இடைவிடாத உழைப்பும் காரணமாக, டச்சு ஆளுநர் ஃபால்க் அவருக்கு 'ராபாய் டி மெல்ஹோ' (Rabbi de Melho) என்ற பட்டத்தை

வழங்கிப் பாராட்டினார். பழைய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டிருந்த போது, 67ஆவது வயதில் டி மெல்ஹோ மரணமடைந்தார்.

சத்தியத்தின் ஜெயமும் சங்கீதப் பண்பாட்டும்: டிமெல்ஹோவின் தெய்வவியல் சிந்தனையை வெளிப்படுத்தும் இரண்டு வாதபூர்வ நூல்கள்

வேதாகம மொழிபெயர்ப்பை மேற்கொள்வதற்கு முன், டி மெல்ஹோ இரண்டு முக்கிய விளக்கவியல் நூல்களை எழுதினார். முதலில், அவர் டச்சு மறுமலர்ச்சித் திருச்சபை சார்பாக கத்தோலிக்கப் போதனைகளுக்கு எதிரான ஒரு தர்க்கவாத எழுத்தை எழுதினார். இது 1753ஆம் ஆண்டு, 'சத்தியத்தின் ஜெயம்' அல்லது 'ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் முக்கிய கோட்பாடுகளுக்கான மறுப்பு' என்ற தலைப்பில் டச்சு மொழியில் பிரசுரமானது; கோவா கத்தோலிக்கக் குருமாரின் தீவிர செயல்பாட்டால் இலங்கையில் கத்தோலிக்கம் மறைவாக முன்னேறுவதைத் தடுக்கவே இந்த விளக்கப் பிரசுரத்தை உருவாக்கினார். "கத்தோலிக்கர்கள் பெரியதும் சிறியதுமான புத்தகங்களை எழுதி ஊரிலே தங்கள் தவறான மதத்தைப் பரப்புகிறார்கள். இவர்கள் பொய்யான தீர்க்கதரிசிகள்" என்று எச்சரித்தார் (சத்தியத்தின் ஜெயம், 67). "இவர்கள் சுத்தமான ஆகமத்தின் திருவசனமாகிய சர்வ வல்லபனுடைய (இறைவனுடைய) ஆயுதங்களைச் சர்வ வல்லபனுக்கே விரோதமாகப் பாவிக்கவும் செய்து, நிலையற்ற மனுஷராக தங்கள் சொந்தக் கெடுதிக்குக் கீழ்ப்படுகிறார்கள்" என்றும் சாடினார் (சத்தியத்தின் ஜெயம், 63).

பின்னர், இதனை அவர் தமிழில் 'சத்தியத்தின் ஜெயம்' என மொழிபெயர்த்தார். சத்தியத்தின் ஜெயம் நூலை எழுதுவதற்கான நோக்கத்தைத் தீவிரமான தெளிவுடன் வெளிப்படுத்தினார். அவர் கூறுகையில்: "ரோம சபையின் தடுமாற்றங்களைச் சுருக்கமாகவும் கெட்டியாகவும் அடக்கப்படுத்தி அதற்குமாறாக ஸ்தாபிக்கப்பட்ட சாதாரண சத்தியத்தைத் திருத்தப்பட்ட சபை படிப்பிக்கிறபடி சர்வேஸ்வருடைய சுத்தமான திருவசனத்தின்படி பரிபாலனம் பண்ணினோம்" (சத்தியத்தின் ஜெயம், 64, 65). ஜோன் ஃப்ரெய்ரா டி அல்மேடாவின் 'Differença d'a Christandade' என்ற கத்தோலிக்க எதிர்ப்பு நூலை, ரோமன் சபையின் மறுத்தலுக்கான முதன்மையான பிரதியாக மெல்ஹோ எடுத்துக்கொண்டார். அத்துடன் கத்தோலிக்க அதிகாரப் பிரதிநிதிகளாகக் கருதப்படும் ரோபர்ட் பெல்லார்மின் (Robert Bellarmine), நான்காம் பயஸ் பாப்பாண்டவர் (Pius IV), ட்ரெண்ட் பேராயக்குழு (Council of Trent)



Image Source - scroll.in

ஆகியோரின் எழுத்துகள் பெரிதாக்கப்பட்ட எழுத்தில் காட்டப்பட்டு, ஒவ்வொன்றும் தனித்தனியாக எதிர்க்கப்பட்டும் இவரால் விளக்கப்பட்டன.

இவர் கத்தோலிக்கர்களின் வழிபாட்டு முறைகளை இகழ்ந்தார். ரோமன் திருச்சபை ஊக்குவித்த பரிந்துரை ஜெபங்களை இகழ்ந்தார். "சுத்தமான மரியாயீ, தேவமாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். பேதுரு சாமீ, பவுல் சாமீ எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்ற பிரார்த்தனையைப் பகடி செய்தார் (சத்தியத்தின் ஜெயம்,101). கத்தோலிக்கக் குருமாரை — 'இதயத் திருடர்கள்', 'சத்தியத்திற்கு எதிரானவர்கள்', 'புத்தியிலே பாழாய்ப்போனவர்கள்' என அவமதித்தார் (சத்தியத்தின் ஜெயம், 79). "அவர்கள் 1 தீமோத்தேயு நூலில் விவரிக்கப்பட்டுள்ள கடைசிக்கால பொய்யான ஆசாரியர்கள்" என்று விமர்சித்தார். கத்தோலிக்கக் குருமாரின் நடத்தையிலும் பிழை கண்டுபிடித்தார். "இவர்கள் பெண்களைத் தங்களின் வஞ்சக வலையில் வீழ்த்தி அடிமையாக்குபவர்கள்" என்றார் (சத்தியத்தின் ஜெயம், 67). இவர் இலங்கைத் தமிழர்களுக்குக் கொடுத்த அறிவுரை: "ரோமன் சபை பசாசுகளின் படிப்பினையைப் படிப்பிக்கிற சபை, அதனால் அதனிடம் பரிசினை கொண்டிருக்கலாகாது." (சத்தியத்தின் ஜெயம், 219). இவருடைய எண்ணப்படி கத்தோலிக்கத் திருச்சபை என்பது ஓர் எதிர் - கிறிஸ்து மார்க்கம் ஆகும் (சத்தியத்தின் ஜெயம், 64).

'சத்தியத்தின் ஜெயம்' இந்தக் கட்டுரையில் விவாதிக்கப்படும் வேத திருப்புதல் தொடர்பாக, குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகிறது. இந்த நூலின் முன்னுரையில், எழுத்துக்குறிகளை அறிமுகப்படுத்தி அவற்றைப் பயன்படுத்தியதற்கான தனது காரணத்தை மெல்ஹோ விளக்கியுள்ளார். அவருடைய வரிகளில்: "இந்தச் சிறு நூலை முறையாகவும் புரிதலுடன் வாசிப்பதற்காக—எந்த

இடத்தில் வாசிப்பை நிறுத்த வேண்டும், எங்கு சிறிது ஓய்ந்து சுவாசம் எடுக்க வேண்டும், அதன் மூலம் கருத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக ஐரோப்பிய மொழிகளின் சிறந்த நடைமுறையைப் பின்பற்றி, அவற்றின் செயல்பாடுகளை இங்கே பயன்படுத்தி விளக்கியுள்ளோம். ஐரோப்பிய மொழிகளின் தனித்துவமான ஓட்டத்துக்கு ஏற்ப, தரிப்புக்குறிகளை எச்சரிக்கையுடன் அமைத்துள்ளோம்."

19ஆம் நூற்றாண்டுக்கு முன்பதாக தமிழில் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டதாக மேலே வாசித்த மெல்ஹோவின் வரிகள் தெரியப்படுத்துகின்றன. ஒற்றை மேற்கோள் (' ') தவிர்த்து மற்ற தரிப்புகள் 1759ஆம் ஆண்டிலிருந்து தொடங்கியதாகத் தெரிகிறது (ஞானம் பாலச்சந்திரன், மெல்ஹோ பாதிரியார் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு - கி.பி. 1759, ஞானம் பதிப்பகம், கொழும்பு, 2016, 111)

இவரது நூலான சத்தியத்தின் ஜெயம் வெளிவந்து இரண்டு ஆண்டுகள் கழித்து, 1775 ஆம் ஆண்டில், தாவீதினுடைய சில சங்கீதங்களையும் வேறு சில வேதாகமப் பாடல்களையும் தொகுத்து 'Some Psalms of the Royal Prophet David and other Songs of Praise' என்ற தலைப்பில் வெளியிட்டார். இந்தப் புத்தகத்தில் விவிலிய சங்கீதங்களை மேற்கத்தேய இசை வடிவங்களுக்கு ஏற்ப அமைத்து, ஐரோப்பிய இசை மரபுகளை தனது தமிழ்ச் சமூகத்துக்குள் அறிமுகப்படுத்தினார்.

இதில் 1, 22, 23, 24, 47, 51, 68, 69, 90, 100, 103, 110, 117, 118, 121, 122 ஆகிய சங்கீதங்கள் இடம்பெற்றிருந்தன. சங்கீதங்களைத் தவிர இதில் சீமோனின் பாடல், சாக்கரியாவின் பாடல், சிமியோனின் நன்றிப் பாடல், மரியாவின் பாடல் போன்ற வேதாகமத் துதிப்பாடல்கள், பத்துக் கட்டளைகள் மற்றும் அவர் கிறிஸ்துவின் வணக்கம் (Kiisttuvin Vaakkam) என அழைத்த கர்த்தரின் ஜெபமும் இடம்பெற்றிருந்தன — இவை அனைத்தும் எளிமையான, உரையாடல் நயமுடைய பாணியில் வடிவமைக்கப்பட்டவை. இந்த சங்கீதங்கள் அனைத்தும் ஐரோப்பிய சுரவரிசைகளில் அமைக்கப்பட்டிருந்தன. மக்களிடம் கருத்துகளை எளிமையாகவும் எளிதில் அணுகக்கூடிய வகையிலும் எடுத்துச் செல்ல இசைக்கு உள்ள சக்தியை மெல்ஹோ உணர்ந்ததால், பக்தி உணர்வைத் தூண்டும் இசை வடிவத்தை அவர் பயன்படுத்தினார்.

இந்தச் சங்கீதங்களைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் எங்கும் விளக்கப்படவில்லை. ஆனால் இந்தத் தேர்வில் இடம்பெற்றுள்ள பதினாறு சங்கீதங்களையும் ஒன்றுசேர்த்து வாசிக்கும் போது வெளிப்படும் செய்தி இதுதான்: மனித இயல்பின் உச்சம், கடவுளின் கருணை, மேலும் அதைவிட முக்கியமாக, வேதத்தில் வெளிப்படும் கடவுள் அந்நிய ஜாதியரையும் அரவணைக்கிறார் என்ற உண்மை. இந்த மத்தியதரைக் கடவுள் இப்போது தமிழர்களுடைய கடவுளுமாகிறார், தேவனும் ஆகிறார் என்பதே இதன் மூலம் சுற்றி வளைத்துச் சொல்லப்பட்ட செய்தி.

இவை வேதாகம மூல மொழியிலிருந்து கவிதை வடிவமாக மொழிபெயர்க்கப்பட்டவை. இந்தத் தொகுப்பு, ஐரோப்பிய இசை முறைகளில் பாடப்படுவதற்காக வடிவமைக்கப்பட்டது; இதன் மூலம் ஐரோப்பியக் கலாசார வடிவங்களைப் பின்பற்றும் அவரது விருப்பமும் ஒத்திசைவும் வெளிப்படுகின்றன. சங்கீதங்கள் முதலில் செய்யுள் வடிவில் எழுதப்பட்டிருந்ததால், அவரும் தனது மொழிபெயர்ப்பை செய்யுள் வடிவிலேயே வழங்கினார். சமூகப் பரப்பில் தாம் வெளிப்படுத்திய இறையியல் கருத்துகளை விளக்கமாகப் பரிமாறுவதில் இசை பயனுள்ள ஊடகமாக இயங்க முடியும் என்பதை மெல்ஹோ உணர்ந்திருந்தார். அந்த மேற்கத்தேய இசை முறையை பக்தி அனுபவத்தை வெளிக்கொண்டுவரப் பயன்படுத்தியுள்ளார்.

ஐரோப்பிய இசைப் பாணிகளில் இந்தச் சங்கீதங்களைப் பாடுவதற்கான காரணங்களை மெல்ஹோ நியாயப்படுத்தினார். நடப்புமுறையில் உள்ள தமிழ் மெட்டுகள் சிதைந்தவை மற்றும் குறைபாடுள்ளவை என்றும், மேற்கத்தேய மரபுகளில் இருந்து, குறிப்பாக யாப்பிலக்கணப் பாடல்களுக்காக (Metrical Psalms) அறியப்பட்ட டச்சு சீர்திருத்த இறையியலாளரான பெட்ரஸ் டாதேனஸ் (Petrus Dathenus, 1531/321588) என்பவரின் மெட்டுகளில், அவரின் தாள அமைப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் அவை திருத்தப்பட வேண்டும் என்றும் அவர் வாதிட்டார்.

தமிழ் சபையினருக்கு தான் எடுத்துரைக்க விரும்பிய கல்வினியக் கருத்துகளைத் தெளிவாகப் பரப்புவதற்கான பயனுள்ள ஊடகமாக இசை அமையக்கூடும் என்பதை மெல்ஹோ உணர்ந்திருந்தார். எனினும், சிவதேவாரங்களைப் பாடி வளர்ந்த மக்களிடம் பக்தி அனுபவத்தை வெளிப்படுத்துவதற்காக, ஏற்கனவே இருந்த தமிழ் இசைமுறைகளை அவர் வருந்தத்தக்க வகையில் ஒதுக்கிவிட்டு, மேற்கத்தேய இசை முறைகளையே பயன்படுத்தினார்.

இது ஐரோப்பியப் பண்பாட்டு வடிவங்களுக்கான மெல்ஹோவின் ஆர்வத்தையும், அவற்றை பல

சமயங்களில் அவர் விமர்சனமின்றி ஏற்றுக்கொண்ட அணுகுமுறையையும் பிரதிபலிக்கிறது. இது, தமிழ் மக்களுக்கும் அவர்களது சொந்தப் பண்பாட்டு வேர்களுக்கும் இடையில் இருந்த உறவில் இடைவெளி ஏற்படக் காரணமாக இருந்தது.

முன்னுரை: வேதாகம வரலாறு, தெய்வீக ஏற்பாடு, திருப்புதல் நோக்கம்

மெல்ஹோவின் மொழிபெயர்ப்பை ஆராய்வதற்கு முன், இன்னுமொரு வேலையிருக்கிறது. மெல்ஹோவின் புதிய ஏற்பாட்டுக்கு எழுதப்பட்ட நீண்ட பாராட்டுத் தொடக்க உரையைக் கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கிறது. இந்த முன்னுரை கொழும்பில் வசித்திருந்த டச்சுத் திருச்சபைப் போதகர்கள் சிகிஸ்பெர்டஸ் பிரான்ஸ்வெல்ட் (*Sigisbertus Bronsveld*) மற்றும் ஜோன் ஜோஆகிம் ஃபைப்ராண்ட்ஸ் (*Joan Joachim Fybrands*) ஆகியவர்களால் 1759 டிசம்பர் 24ஆம் தேதி எழுதப்பட்டது. அந்த அறிமுகக் குறிப்பில், இவ்விரு மறுசீரமைப்பு மதகுருக்கள் முன்பு செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளின் வரலாற்றை ஆவணப்படுத்தி, இம்முயற்சிக்கான இறையியல் சட்டகத்தையும் இப்பணியில் டச்சு அரசின் பங்கு இறைவனால் அங்கீகரிக்கப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்தினர்.

முன்னுரைக்கு முன் ஒரு குறுங்குறிப்பு உண்டு. அது 'வெளிப்படுத்தல்' நூலில் உள்ள வசனம்: "இந்தத் தீர்க்கதரிசனத்தின் வார்த்தைகளை வாசிக்கும் ஒருவனும், கேட்பவர்களும், அதில் எழுதப்பட்டவற்றைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்; ஏனெனில் காலம் நெருங்கியுள்ளது" (வெளி. 1:2). புதிய ஏற்பாட்டின் கடைசி நூலில் வரும் இந்த வரிகள், மெல்ஹோவின் திருப்புதலுக்கு ஒரு சுருக்கமான தெய்வீக அங்கீகாரத்தை வழங்குகின்றன. இதனை வாசிப்பவர்கள், கேட்பவர்கள், கடைப்பிடிப்பவர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதத்தை அறிவிப்பதுடன், தேவவார்த்தை புதிய வாசகர்களைச் சென்றடைய மொழிபெயர்ப்பு அவசியமானதும் நியாயமானதும் என்பதையும் மறைமுகமாக இந்த ஆரம்பக் குறிப்பு உறுதிப்படுத்துகிறது. அதேவேளை, "காலம் நெருங்கியுள்ளது" என்ற சொல்லாக்கம், இந்தப் பணியை வெறும் அறிஞர் முயற்சியாக அல்லாமல், தெய்வீகத் தருணத்தின் ஒரு பகுதியாகச் சித்தரிக்கிறது. இதனால், மெல்ஹோவின் முயற்சி புனித வரலாற்றின் இறுதியின் நெருக்கத்தையும் அண்மைத்தன்மையையும் அறிவிக்கும் அருட்கூற்றாகப் பார்க்கப்படுகிறது.

இந்த நூன்முகம் தமிழிலும் டச்சிலும் எழுதப்பட்ட 22 பக்கங்களைக் கொண்ட விரிவான உரை. இதில் மெல்ஹோவின் திருப்புதலில் பயன்படுத்தப்பட்ட முறைகள் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. எழுத்துக்கு எழுத்தாகப் பதிப்பதற்குப் பதிலாக, வாக்கியங்களின் உள்ளடக்கத்தின் சாரத்தைத் தெளிவாக அறிந்து, தமிழ் இலக்கணத்தையும் வாக்கிய அமைப்பையும் முறையாகப் பின்பற்றுவதே மெல்ஹோவின் நோக்கமாக இருந்தது என்கிறார்கள் இந்த முன்னுரையாளர்கள். "தமிழ் மொழியின் தன்மைக்கும் வலிமைக்கும் ஏற்ற வகையில், தமிழ் இலக்கணச் சட்டங்களைப் பின்பற்றி, தெளிவான நடையில் எழுதப்பட்ட ஒரு பதிப்பை உருவாக்குவதே குறிக்கோள்" (முன்னுரை, ப.17).

இந்தத் தொடக்க உரையிலிருந்து சீகன்பால்க்கிற்கு முன்பே இருந்த பல்டேயஸ் மற்றும் அட்ரியன் டி மேய் ஆகியோரின் தமிழ் மொழிபெயர்ப்புகள் பற்றிய தகவலையும் அறிகிறோம்; குறிப்பாக "ஐரோப்பியர்களுக்கு கடினமான இந்த மொழியைத் தன் உழைப்பாலும் கருணையாலும் கற்றுத் தேர்ந்தெடுத்த மிகப் புனிதரும் மிகப் பாண்டித்தியமும் கொண்ட பிலிப் பல்டேயஸ்" செய்த மத்தேயு சுவிசேஷ மொழிபெயர்ப்புப் பற்றியும் முன்னுரை குறிப்பிடுகிறது. இவற்றை இம்முன்னுரை விமர்சிக்கவும் தவறவில்லை. இவற்றின் குறைகள், இம்மொழிபெயர்ப்புகள் தமிழைத் தாய்மொழியாகப் பேசாதவர்களின் பணியாக இருந்ததிலிருந்தே தோன்றியவை எனவும் கூறுகிறது.

இந்த முன்னறிமுகம் ரோமன் சபைப் பிரசாரகர்களைப் பற்றி எச்சரிக்கிறது. மேலும், போர்த்துகீசியக் குருக்கள் பரப்பியவை புராணக் கதைகளும், ரோமன் திருச்சபையின் கோட்பாடுகளும், கற்பனைகளும் வாதங்களுமாகவே கருதப்பட வேண்டும்; அவை உண்மையான கிறிஸ்தவப் போதனைகள் அல்ல என்று வாசகர்களை அறிவுறுத்தி எதிரியக்கக் கிறிஸ்தவர்களை (*Protestant Christians*) ரோமன் கத்தோலிக்கச் செல்வாக்கிலிருந்து பாதுகாக்க முயல்கிறது (முன்னுரை, ப.16).

இது, இலங்கையில் ஒல்லாந்து ஆட்சியை தெய்வீக ஏற்பாடு என்று விளக்கம் தருகிறது. எல்லா ஐரோப்பியப் பேரரசு அமைப்பாளர்களைப் போலவே, ஒல்லாந்தும் தன்னைத் கடவுளின் கருவியாகக் கற்பனை செய்தது. இலங்கைத் தீவும் அதன் மக்களும் 'பாக்கியவான் ஹாலந்தரின்' ஆட்சிக்குள் வந்தது தெய்வீகச் சித்தத்தினாலேயே எனத் தெளிவாக அறிவிக்கிறது (முன்னுரை, ப.13). டச்சு ஆளுநர் குஸ்டாவ் வில்லம் வான் இம்ஹொஃப்பை "மிகப் பெருமைமிக்க, உயர்ந்த வம்சத்தில் பிறந்த சிறந்த நபர்" என மிகைப்படுத்திப் புகழப்படுகிறார்.

முன்னுரை, புதிய ஏற்பாட்டுப் புத்தகமான 1 கொரிந்தியர் 3:6ஐ மேற்கோள் காட்டுகிறது; ஆனால் பவுல் எழுதிய "நான் நட்டேன்" என்பதை மாற்றி, "பவுல் நட்டான், அப்பொல்லோ நீரூட்டினான்; ஆனால் வளர்ச்சியைத் தந்தது தேவன்" என்று மறுவடிவமைக்கிறது. அதேசமயம், டி மேய் மற்றும் டி மெல்ஹோ ஆகியோரின் முன்னோடிப் பணியைப் பாராட்டி, "இருவரும் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக, தேவனின் கிருபையால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஆசீர்வாதத்தின்படி உழைத்தனர்" எனக் குறிப்பிடுகிறது. இந்தக் கூற்று, எல்லாவற்றையும் நிகழ்த்துவது இறுதியில் தேவனே என்பதையும், மனிதர்கள் தெய்வத்தின் கருவிகள் மட்டுமே என்பதையும் வலியுறுத்துவதோடு, அட்ரியன் டி மேய் மற்றும் பிலிப்பு டி மெல்ஹோ ஆகியோர் வேதாகம இலக்கியத்தின் முக்கிய வடிவமைப்பாளர்களின் தொடரில் நிற்கிறார்கள் என்பதையும் மறைமுகமாகத் தெரிவிக்கிறது (முன்னுரை, ப.21). முன்னுரையை எழுதிய பிரான்ஸ்வெல்ட் மற்றும் ஃபைப்ராண்ட்ஸ், இவர்களின் மொழிபெயர்ப்புகளை "அவர்களின் உழைப்பின் ஒளிரும் கனிகள்" என மேலும் பாராட்டுகின்றனர்.

இந்தத் தொடக்கக் குறிப்புகள் தமிழ் உரை வரலாற்றில் புதிதாகத் தோன்றிய ஓர் எழுத்து முறையையும் அறிமுகப்படுத்துகின்றன. கருத்துகள் தனித்தனிப் பத்திகளாக ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒவ்வொரு பத்தியின் தொடக்கத்திலும் "ஆனால்", "எனவே", "இதனால்", "ஆகிலும்", "இவ்வாறு", "இதற்கு அப்பால்", "மேலும்", "அதிகமாக", "இறுதியாக" போன்ற இணைப்புச் சொற்களின் தமிழ் இணைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு முன் தமிழ் உரைநடையில் இத்தகைய பத்தி அமைப்பு அல்லது தொடர்ச்சிச் சொற்கள் முறையாகப் பயன்படுத்தப்பட்டதற்கான தெளிவான ஆதாரம் இல்லை.

முன்னுரையின் மொழி சில நேரங்களில் எளிமையாகவும், சீர்மையற்றதாகவும் தோன்றலாம்; காரணம் அது அன்றாடப் பேச்சு நடையில் எழுதப்பட்டதுதான். இருந்தாலும், வாசகருக்கு அளிக்கும் மரியாதை தெளிவாகத் தெரிகிறது. தொடக்கப் பக்கமே "சுகிர்தத்தை நேசித்து வாசிப்பவனே" என்று வாசகரை மதிப்புடன் அழைக்கிறது.

இந்தப் பகுதியை முடிப்பதற்காக, முன்னுரையின் முடிவில் வரும் ஒரு வசனத்தைத் தருகிறேன். இது முன்னுரை எழுதியவர்களுக்குக் கடவுளால் வழங்கப்பட்ட தேவ கட்டளை போல் அமைகின்றது: "தேவனைப் பயந்து, ஆண்டவரை மதித்து நட; நியாயத்தீர்ப்பு நாள் நெருங்குகிறது; வானம், பூமி, சமுத்திரங்களை உண்டாக்கிய ஒருவனை வணங்கு." இவை கடுமையான தெய்வீக உத்தரவுகள். இறுதிக்காலத்தின் பயத்தையும், அனைத்து இந்து தெய்வங்களையும் மீறிய ஒரே தேவனுக்கான முழுமையான பக்தியையும் வலியுறுத்துகின்றன. இதன் செய்தி: விவிலியக் கடவுளுக்குத் திரும்புங்கள்.

மெல்ஹோவின் வேதத்திருப்புதலின் குணாதிசயங்கள், அவர் அறிமுகப்படுத்திய நூதன முறைகள், அவரின் உறுதியான மரபுசார் இறையியல் நிலைப்பாடு எவ்வாறு டச்சுக் கல்வினியக் கிறிஸ்தவத்தின் சார்பாகப் பேசும் முக்கியமான குரலானது என்பது பற்றி மேலும் பேசலாம்.

உதவிய நூல்கள்

1. புதிய ஏற்பாடு அல்லது எங்கள் நாயனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய புதிய உடன்படிக்கையின் சகலமான பொஸ்தகங்கள். இதனை இந்த இலங்கைத் தீவுக்கு அதிபதிகளுமாகிய மேன்மையானவர்களின் கட்டளையினால் கிரேக்க பாஷையினின்று தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளது. டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் அச்சுக்கூடம், கொழும்பு, 1759.

2. இராச தீர்க்கதரிசியான தாவீதின் சில சங்கீதங்களும் புகழ்ச்சிப் பாடல்களும் யாழ்ப்பாணத்திலே திருச்சபையின் சுத்தமான சுவிஷேசதாசனாகிய பிலிப் டி. மெல்லோ குருவனவராலே உலகத்தார் பாவத்தில் இராதபடிக்கு திருச்சபையினுடைய நியமமான கட்டளையின்படி இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்படி பதிப்பிக்கப்பட்டது. கொழும்பு, 1755.

3. பிலிப்பு டி. மெல்லோ, சத்தியத்தின் ஜெயம், கொம்பனியின் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம், 1753. மீள் பதிப்பு: நவரட்ணம் குகபரன், புலரி வெளியீடு, யாழ்ப்பாணம், 2023.

4. Reggie Candappa (ed.), History of the Colombo Chetties (கொழும்பு: Foremost Productions Ltd., 2000).

5. ஞானம் பாலச்சந்திரன், மெல்ஹோ பாதிரியார் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு - கி.பி. 1759, ஞானம் பதிப்பகம், கொழும்பு, 2016.

6. Simon Casie Chitty, ' Ceylon Celebrities: Philip de Melho 1723-1790, Ceylon Literary Register Vol. II no. 2 February. Third Series 1932, pp.49-56 .

தென் ஆசியாவில் திராவிட மொழிகளைப் பேசும் மக்களின் மூதாதையர்கள் இற்றைக்கு 68,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த மண்ணில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் ஆபிரிக்காவிலிருந்து கொண்டுவந்த ஆரம்பகாலப் பேச்சுவழக்குகள் தமிழ் மொழியினதும், மற்றைய திராவிட மொழிகளினதும் உருவாக்கத்திற்கு முக்கிய பங்கினை அளித்திருக்கின்றன. இப்பின்னணியில், தமிழ்மொழி பேசும் மக்களின் மரபணு மூலங்கள், தமிழர் வரலாறு, மொழி, பண்பாடு ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் ஒருங்கிணைத்து மீள்பார்வை செய்யும் ஆழமான ஆய்வாக இது அமைகின்றது. தொல்திராவிட மொழி தோற்றம் பெற்ற இடம் சிந்துவெளிதான். அதன் தென் ஆசியப் பரவலுக்கும் பிராந்தியத் திராவிட மொழிகளின் உருவாக்கத்திற்கும் உந்துதலாக இருந்தது வேளாண்மை விவசாயத்தின் பரவலாகும். இந்தக் கோட்பாட்டை நிலவியல், மானிடவியல், மரபணுவியல், தொல்லியல், மொழியியல் ஆகிய கற்கைநெறிகளின் துணைகொண்டு 'திராவிட மக்களின் மரபணு மூலங்களும் தமிழ் மொழியின் படிமுறைத் தோற்றமும்' எனும் இந்தத் தொடர் நிறுவவுள்ளது. தமிழ் மக்களினதும் தமிழ் மொழியினதும் உருவாக்கம் பற்றிய முக்கியமான அறிவியல் ஆய்வாக இது அமையும்.

திராவிட மக்களின் மரபணு மூலங்களும் தமிழ்மொழியின் படிமுறைத் தோற்றமும் – அறிமுகம்

சிவ தியாகராஜா

கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து B. Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph. D. பட்டத்தையும் பெற்றவராவார். இது தவிர கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் புகழ் பெற்ற பேராசிரியர் கொலின் ரென்புரூ (Prof. Colin Renfrew) நடத்திய தொல்லியல் பயிற்சிப்பட்டறைகளிலும் பங்கு பெற்றுள்ளார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். இவரது சில ஆய்வு நூல்கள் இலங்கைப் பல்கலைக் கழகங்களிலும், தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களிலும் உசாத்துணை நூல்களாகப் (reference books) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவர் எழுதிய ஆய்வு நூல்களில் Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Genetic Origins of the Sinhalese People, Kantarodai Civilization of Ancient Jaffna, Archaeological Excavations at the Jaffna Fort, Early Siva Temples of Ancient Lanka, The Tamils of Lanka A Timeless Heritage ஆகிய ஆங்கில நூல்களும், மருத்துவக் களஞ்சியம், ஈழத் தமிழரின் ஆதிச் சுவடுகள், உலகில் பெரிய இந்துக் கோயில் அங்கோர் வாட், கில்கமேஷ் காவியம், தமிழ் மக்களும் தழுவிய மதங்களும், பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகிய தமிழ் நூல்களும் பிரபலமானவை.



தமிழ்மொழி பேசும் மக்களின் வரலாற்றிற்கு அறிவியல் அடிப்படையில், தொல்லியல் அடிப்படையில், மரபியல் அடிப்படையில், மொழியியல் அடிப்படையில் நிரூபிக்கக்கூடிய ஆதாரங்களைக் கொண்ட அறிவியல் பாரம்பரியம் உண்டு. இன்றைய உலக மொழிகளைப் பேசும் மக்களுள் இந்தப் பெருமை அனைத்தும் கொண்ட மக்கள், தமிழ்க்குடும்ப மொழிகளைப் பேசும் மக்களைத் தவிர வேறு பலர் இல்லை என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.

அறிவியல்பூர்வமான ஆதார அணுகுமுறை இல்லாத காலகட்டத்தில் நமது வரலாறு மட்டுமல்ல, உலகின் பல்வேறு மக்களின் வரலாறுகளும் புராணங்களாகவும், புனைகதைகளாகவுமே அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், நவீன மானிடவியல், மரபணுவியல், தொல்லியல், மொழியியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம் ஆகிய ஆய்வுக் கருவிகள் காட்டும் சான்றுகளைக் கொண்டு இந்த வரலாறுகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு, ஆதாரபூர்வமான வரலாறுகள் இன்று எழுதப்பட்டு வருகின்றன.

ஆனால், இன்றைய தமிழகத்திலோ உயர்கல்வி கற்ற சில கல்விமான்களையும், பேராசிரியர்களையும் தவிர, தம்மை அறிஞர்கள் எனக் கூறிக்கொள்ளும் பலர் புராதன காலத்தில் நமது புலவர்கள் மிகைப்பட எழுதி வைத்த புனைகதைகளையே (Fictional Poetic Exaggerations) நமது பண்டைய வரலாறாக இன்னமும் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். உண்மையான வரலாற்றை அறிந்த பல பேராசிரியர்களோ 'நீண்ட காலமாக - தலைமுறை தலைமுறைகளாக - அறிவியலுக்கொவ்வாத கற்பனைக் கதைகளைப் பிடிவாதமாகப் பேசிக்கொண்டிருக்கும் இவர்களிடம் பேசிப் பிரயோசனமில்லை' என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதற்காக விஞ்ஞான யுகமான இந்த இருபத்தொராம் நூற்றாண்டில், உலக அறிவியல் அரங்கில் என்றோ நிராகரிக்கப்பட்டுவிட்ட கருத்துகளை அடித்தளமாகக் கொண்டு எழுப்பப்பட்டிருக்கும் புனைகதைகளை நமது புராதன வரலாறாகக் கொள்வது நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்வதாகும்.

'தமிழர்' என்ற சொற்பதம் மொழியை அடிப்படையாகக் கொண்ட ஒரு பதமே தவிர, அவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்த மக்கள் எனப் பொருள் கொள்வது தவறு. இற்றைக்கு 70,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காவிலிருந்து வெளியேறி வெவ்வேறு காலகட்டங்களில் தென் ஆசியாவை வந்தடைந்து - பின்னர் தமிழகத்தை வந்தடைந்த ஹோமோ சேப்பியன்ஸ் (Homo Sapiens) எனப்படும் நவீன மனிதர்களின் வம்சாவளியினரின் ஒரு பகுதியினர் பின்னர் ஒரு காலகட்டத்தில் தமிழ் மொழி பேசும் தமிழர்களானார்கள். இவர்களின் தமிழக வருகை இந்நூலில் மரபணுவியல் ஆதாரங்களுடன் விரிவாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது.

ஆபிரிக்காவிலிருந்து வெளிவந்து உலகம் முழுவதும் பரவிய ஹோமோ சேப்பியன்ஸ் மக்கள் பேசிய 'ஆதி ஆபிரிக்க பேச்சு வழக்குகளிலிருந்தே' இன்று உலகில் பேசப்படும் அனைத்து மொழிகளும் உருவாகின என்பது இன்றைய மொழியியல் ஆய்வுகள் காட்டும் முடிபு. இன்று உலகில் பேசப்படும் மொழிகளும், பேச்சு வழக்குகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்பது மொழியியல் வல்லுநர்களால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பின்னணியில் தமிழ் மொழியின் தோற்றம் பற்றிய ஆய்வுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட தமிழர்களைப் பற்றிய ஆரம்பகால வரலாறுகள் பெரும்பாலும் சங்ககால இலக்கியங்களை மட்டுமே முதன்மைச் சான்றாகக் கொண்டு எழுதப்பட்டு வந்திருக்கின்றன. சங்ககால இலக்கியங்கள் சமகாலத்தைய தமிழர் சமுதாயத்தைப் பற்றிய பல தரவுகளைத் தந்துள்ள போதிலும், அவை அக்காலத்தைய சமூக வாழ்க்கையின் பலதரப்பட்ட முகங்களையும் காட்டவில்லை என்பதே உண்மை.

உதாரணமாக - அன்றைய தமிழகத்தில் சமண மதம் பெற்றிருந்த செல்வாக்கினை கிறிஸ்துவுக்கு முற்பட்ட கல்வெட்டு ஆதாரங்கள் எடுத்தியம்புகின்றன. தமிழகத்தில் பௌத்த மதம் பரவியிருந்ததை காலத்திற்குக் காலம் நாடெங்கும் கண்டெடுக்கப்பட்டு வரும் புத்தர் சிலைகளும், தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் காணப்படும் பௌத்த மதப் புதைப்படிவங்களும் எடுத்துரைக்கின்றன. ஆனால், இச்செய்திகள் சங்ககால இலக்கியங்களில் முக்கியப்படுத்திக் கூறப்படவில்லை.

அன்றைய தமிழக வணிகர்கள் கடல் கடந்து மேலை நாடுகளுக்கும், தூர கிழக்கு நாடுகளுக்கும் வர்த்தக முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றதை அந்நாடுகளில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு ஆதாரங்களும், தமிழ்ப் பிராமி எழுத்துகள் பதித்த கல் ஓடுகளும், அந்நாடுகளின் வர்த்தகர்களோடு செய்து கொண்ட வணிக ஒப்பந்தங்களும் இன்று நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இந்த நடவடிக்கைகள் சங்க இலக்கியங்களில் பெரிதாக இடம்பெறவில்லை.

கடந்த இரு தசாப்தங்களாக தமிழகத்திலும், இலங்கையிலும் நடைபெற்றுவரும் அகழாய்வுகளில்

கி.மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்து தமிழ் மக்கள் பயன்படுத்திய எழுத்து வடிவங்கள் முத்திரைகளிலும், மோதிரங்களிலும், நாணயங்களிலும், பானை ஓடுகளிலும், கல்வெட்டுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் சங்ககால அரசர்கள் வெளியிட்ட நாணயங்களையும் இன்று நாம் காண முடிகிறது. இவை பற்றிய தரவுகள் ஏதும் சங்க இலக்கியங்களில் இல்லை.

மேலும், காலத்திற்குக் காலம் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றங்கள், பொருளாதார மாற்றங்கள், பிற நாடுகளுடனான தொடர்புகள், அறிவியல் முன்னேற்றங்கள் ஆகியவற்றின் தாக்கங்களினால் சமுதாய மாற்றங்கள் கட்டாயமாக இடம்பெற்ற வண்ணம் இருந்திருக்கும். ஆனால், சங்க இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்படும் வரலாற்று நூல்களில், பல நூற்றாண்டுகளாக (பொ.யு.மு 500 - பொ.யு. 300) தமிழர் சமூகம் ஒரே வகையான வாழ்க்கை நிலைகளில் இயங்கி வந்திருப்பதாகத் தரப்படும் செய்திகளை ஏற்றுக்கொள்வது கடினமாக உள்ளது.

பாண்டிச்சேரிப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் கா. ராஜன் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போல "ஒரு குறிப்பிட்ட முதன்மைச் சான்றினை மட்டும் முன்னிறுத்தி ஆய்வு மேற்கொள்ளும் போது அவ்வாய்வு ஒரு சமூகத்தின் பன்முகத் தன்மையினை வெளிப்படுத்தாது, முழுமை பெறாமல் போகிறது. இலக்கியம், கல்வெட்டு, நாணயம், அயல் நாட்டவர் குறிப்புகள், அகழாய்வுச் சான்றுகள் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி ஆய்வு செய்வதன் மூலமே ஓரளவு அன்றைய தமிழர் சமூகத்தை நாம் மீள் உருவாக்கம் செய்ய முடியும்". பேராசிரியர் கூறும் இந்த முறையியல் கருத்தே (Methodology Concept) இந்நூல் உருவாக்கத்தில் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. இவற்றோடு நிலவியல், மானிடவியல், மரபணுவியல், மொழியியல் ஆதாரங்களையும் மேற்கொண்டே இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

தொல்பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் மானிடப் படைப்பாற்றலின் முன்னோடிகள் ஆவர். அவர்கள் வாழ்ந்த காலத்தைய வசதிகளைக் கொண்டு, அவர்கள் உருவாக்கிய செய்பொருட்கள், உபயோகித்த கருவிகள், வரைந்த ஓவியங்கள் என்பவற்றின் வழியாக அவர்கள் மிக்க அறிவார்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை நம்மால் இன்று அறிய முடிகிறது.

மனித வரலாற்றைப் பூமியின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது. பூமியின் மேலடுக்குகளில் வரலாற்றுக் காலகட்டங்கள் குறித்த நிலவியல், தொல்லியல், உயிரியல் பதிவுகள் பொதிந்து கிடக்கின்றன.

இவ்வடுக்குகளில் மனித முன்னோடிகளின் - மூதாதையர்களின் - எலும்புகளின் புதைப்படிவங்கள் (Fossil Bones) மண்ணில் புதைந்து கிடக்கின்றன.

மனித இனங்களின் படிநிலை வளர்ச்சியின் பல்வேறு காலகட்டங்களை அறிவதற்கு புதைப்படிவங்களினதும், அவை காணப்படும் மண்ணடுக்குகளினதும் காலக் கணிப்புகளை அறிவியல்பூர்வமாகக் கண்டறியக்கூடிய அறிவு நமக்கு வேண்டியிருக்கிறது. இந்தக் கணிப்புகளைக் கொண்டே மனித வரலாற்றின் பரிணாம வளர்ச்சி நிலைகளையும், வெவ்வேறு வளர்ச்சி நிலைகளின் காலகட்டங்களையும் அறிந்துகொள்ள முடிகிறது.

மனித இனங்களின் உடலமைப்பு பற்றிய ஆய்வுகள் மனித உடலின் பரிணாம வளர்ச்சியின் போது உடலமைப்பில் எவ்வகையான மாற்றங்கள் இடம்பெறுகின்றன என்பதைக் கண்டறியும் ஆய்வுகளாகும்; முக்கியமாக அவர்களின் மூளை வளர்ச்சி பற்றிய அறிவும், மூளை வளர்ச்சிக்கேற்ப எவ்வாறு அவர்களின் கபால ஓடுகளின் உருவங்கள் மாற்றமடைகின்றன என்பதன் கற்றலுமாகும். இது தொல்மானிடவியல் (Palaeoanthropology) எனப்படும் கற்கை நெறியாகும்.

அகழ்வுகளில் கண்டுபிடிக்கப்படும் தொல்பொருட்களை ஆராய்ந்து, அவற்றின் காலம், அவற்றை உருவாக்கிய மனிதர்கள், அவர்கள் வாழ்ந்த சூழ்நிலைக்கேற்ப உருவாக்கப்பட்ட கருவிகளா அவை? என்ற கணிப்பீடு ஆகியவற்றில் ஆய்வுகளைச் செய்தல் தொல்லியல் கற்கையின் (Archaeology) முக்கிய பகுதிகள் ஆகும்.

தொல்லியல் நமது முன்னோர்கள் வாழ்ந்த காலத்தைப் பற்றியும், அவர்களது வாழ்க்கை முறைகளையும், அவர்கள் வாழ்ந்த சூழலைப் பற்றியும் ஆராய்வதற்குப் பயன்படும் தலைசிறந்த நவீன கருவிகளில் ஒன்றாகும். ஆரம்ப நாட்களில் தொல்லியல் கண்டுபிடிப்புகள், இந்தியாவின் புராதன இலக்கியங்களோடு ஒப்பீடு செய்யப்பட்டு இலக்கியங்களின் நம்பகத்தன்மையை நிரூபிக்க உபயோகப்படுத்தப்பட்டன. ஆனால், தொல்லியல் கண்டுபிடிப்புகள் எல்லாச் சமயங்களிலும் இலக்கியங்கள் கூறும் சம்பவங்களோடு ஒத்துப்போவதில்லை. சில பண்டைய இலக்கியங்களின் மேதாவித்தனமான, அதிகாரத் தோரணையில் எழுதப்பட்டிருக்கும் (Tyranny of the Text) கூற்றுகளை ஏற்க மறுக்கும் பல தொல்லியலாளர்கள் இக்காலத்தில் பண்டைய இலக்கியங்களை பெரிதாகக் கவனத்தில் எடுப்பதில்லை. நமது முன்னோர்கள் விட்டுச்சென்ற தொல்பொருட்களில் - அவர்கள் உபயோகித்த அன்றாடப் பாவனைப் பொருட்கள், கல்லாயுதங்கள், மட்பாண்டங்கள், குடியிருப்பு அடுக்குகள்,

கட்டடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், எழுத்து வடிவங்கள் என்பன உள்ளடங்கும். இவற்றின் மூலம் பெறப்படும் அவர்களின் வாழ்வியல், பண்பாடு, நாகரிகம் பற்றிய தகவல்கள், அறிவியல் ரீதியான தொல்லியல் ஆய்வின் அடிப்படைத் தரவுகளாகும்.

ஆரம்ப நாட்களைப் போலல்லாது இன்றைய காலத் தொல்லியல் ஆதாரபூர்வமான அறிவியல் கற்கைநெறியாகும். செம்மையாக்கப்பட்ட நுட்பங்களுடன் மேற்கொள்ளப்படும் அகழ்வு முறைகள் (*Sophisticated Methods of Excavation*), அகழ்வில் கண்டெடுத்த கருவூலங்களின் ஆதாரக் கூறுகளை உய்த்துணரும் பொருட்டு உபயோகப்படுத்தப்படும் அறிவியல் தொழில்நுட்பங்கள் (*Scientific Techniques*) என்பன பலதரப்பட்ட தகவல்களைத் தருகின்றன: காலக்கணிப்பு, அன்றைய வெப்பதட்ப நிலை, சூழல் (*Ecology*), குடியேற்ற அமைப்புகள் (*Settlement Patterns*), மிருகங்கள், புராதன தாவரவியல் (*Palaeobotany*), அகழ்வில் கண்ட தாவர, பயிர் விதைகளின் பகுப்பாய்வு என்பன. இத்தகவல்கள் அன்றைய மனிதர்களின் குடியேற்ற அமைப்புகளின் முழுமையான பரிமாணத்தைத் தருகின்றன. இத்துடன் மரபணுவியல், உயிரியல்சார்மானிடவியல், சமூக மானிடவியல், கல்வெட்டியல், தொல்லெழுத்தியல், நாணயவியல் ஆகிய சாதனங்களை இணைத்து - வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து நவீன காலம் வரையிலான உண்மையான, நம்பகத்தன்மையான ஆதாரபூர்வமான வரலாற்றை இன்று நம்மால் எழுத முடிகிறது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எழுத்துக் கலையை மனிதன் கண்டுபிடிப்பதற்கு முற்பட்ட காலமாகும். எழுத்துக்கலை கண்டுபிடிக்கப்பட்டு களிமண் வில்லைகளிலும், கல்லிலும், மட்பாண்டங்களிலும், ஏடுகளிலும், உலோகத் தகடுகளிலும், இன்னோரன்ன பொருட்களிலும் மனிதன் தனது எண்ணங்களை எழுத்து வடிவில் பதிவு செய்த காலத்திலிருந்து வரலாற்றுக் காலம் ஆரம்பமாகிறது. மெசப்பொத்தேமியா (இன்றைய தென்மத்திய ஈராக்), எகிப்து, இலம் ஆகிய நாடுகளில் இற்றைக்கு 5,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எழுத்துக் கலை உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே, அந்தக் காலகட்டத்திலிருந்து அந்த நாடுகளின் வரலாறு ஆரம்பமாகிறது. தென் ஆசியாவில் சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் அதே காலகட்டத்தில் - 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் - சிறிய வில்லைகளில் பதிவு செய்த எழுத்து வடிவங்கள் இன்றுவரை வாசிக்கப்படவில்லை. இன்று இந்தியாவில் கல்வெட்டியலாளர்களால் வாசிக்க முடிந்த பிராமி எழுத்து வடிவங்கள் பொ.யு.மு 700-600ஆம் ஆண்டிற்குரிய தென்னிந்திய மட்பாண்டங்களில் காணப்படும் பிராமி எழுத்துகளாகும். ஆதலால், தென்னிந்திய வரலாற்றுக் காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டு எனக் கொள்ள வேண்டும். வாசிக்கப்படாத சிந்து வெளி எழுத்துகளுக்கும், வாசிக்க முடிந்த பிராமி எழுத்துகளுக்கும் இடைப்பட்ட காலம் வரலாற்று உதயகாலம் என அழைக்கப்படுகிறது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் கற்காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலம் என மூன்று காலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கற்காலம் மேலும் மூன்று பிரிவுகளாக பழைய கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம் எனப் பிரிவாகியிருக்கிறது. இக்காலப் பகுதி கல்லாயுதங்கள் ஆரம்பத்திலிருந்து சிறிது சிறிதாகத் தொழில்நுட்ப வளர்ச்சியடைந்த காலங்களாகும். பொருளாதார ரீதியாக பழைய கற்காலம், இடைக்கற்காலம் இரண்டும் மக்கள் நாடோடிகளாகக் காடுகளில் அலைந்து உணவை வேட்டையாடியும், சேகரித்தும் (*HunterGatherer Way of Life*) நாடோடி வாழ்க்கை நடத்திய காலங்களாகும். புதிய கற்காலம் மக்கள் ஓரிடத்தில் குடியேறி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு உணவை உற்பத்தி செய்த காலப்பகுதியாகும். தமிழகத்தில் இக்காலத்துடன் இணைந்தும், தொடர்ந்தும் வருவது இரும்புக்காலம். தமிழகத்தில் வெண்கலம் அறிமுகமாக முன்னரே இரும்புக்காலம் ஆரம்பமாகியிருக்கிறது.

இடைக்கற்காலம், புதிய கற்காலம், இரும்புக்காலம் ஆகிய மூன்று பண்பாட்டுக் காலங்கள் தமிழகத்தின் முந்தைய வரலாற்றை முழுமையாகப் புரிந்து கொள்ளுவதற்கு உறுதுணையாக இருக்கின்றன. இடைக்கற்காலத்திலும், சில சமயங்களில் அதற்கு முன்னரும் ஆரம்பமாகி, இடைக்கற்காலத்தில் பரவலாகப் பேணப்பட்டு, சில இடங்களில் புதிய கற்காலத்திலும் இரும்புக்காலத்திலும் உபயோகத்திலிருந்த நுண்கற்கருவிகள் மிக அதிகமாகத் தமிழகத்தில் காணப்படுகின்றன. இந்த நுண்கற்கருவிகளை உபயோகித்த மக்களே முதன்முதலாக தமிழகத்தில் மிகப் பரவலாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆனால், இதுவரை இச்சான்றுகள் முறையாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு தமிழக மக்களின் முற்கால வரலாறு கூறப்படவில்லை.


இற்றைக்கு 12,000-10,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மெசப்பொத்தேமிய நாடுகளில் ஆரம்பமான நீர்ப்பாசன விவசாய நடவடிக்கைகளும் - அங்கிருந்து சிறிது சிறிதாக இந்திய உபகண்டத்துக்கும், இலங்கைக்குமான அதன் பரவலும் - மக்கள் சமுதாயத்தில் பொருளாதாரம், தொழில்நுட்பம், பரவலான குடியேற்றம் ஆகிய துறைகளில் சடுதியான மாற்றங்கள் ஏற்படக் காரணமாயின. வேட்டையாடிஉணவு

சேகரித்த காலங்களில் மிருகங்களும், தன்னிச்சையான தாவரங்களும் அடர்த்தியாகவிருந்த காட்டுப் பகுதிகளிலும், மலைச்சாரல்களிலும் வாழ்ந்திருந்த மக்கள் விவசாயம் அறிமுகமானதும் நீர்வளமும், செழிப்பான நிலவளமும் கொண்ட நிலப்பகுதிகளில் குடியேற ஆரம்பித்தார்கள். கதிரவனின் வெப்பத்தையும், மழையையும், காற்றையும், புயலையும் எதிர்கொள்ளக்கூடிய வதிவிடங்கள் தோற்றம் பெறலாயின. ஒரு காலத்தில் மக்களைக் கவர்ந்த வாழ்விடங்களான மலைகளும், குகைகளும், வனங்களும், காடுகளும் கவனிப்பாரற்ற தனிமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடங்களாயின. விவசாயத்தின் வருகையைத் தொடர்ந்து சிற்றூர்களும், கிராமங்களும், நகரங்களும், தலைநகரங்களும் தோற்றம் பெற்றன. அதன் தொடர்ச்சியாக சமுதாயத்தில் தொழில் ரீதியான சமூகப் பிரிவுகள் உருவாயின.

தென்னாசியாவின் முதலாவது நகரமயமாக்கம் - முதலாவது நாகரிகம் - வெண்கலக் காலத்தில் (Bronze Age) வறண்ட நிலமான வடமேற்கு இந்தியாவின் (இன்றைய பாகிஸ்தான்) சிந்துவெளிப் பள்ளத்தாக்கில், சிந்து நதிக்கரை ஓரமாக நடைபெற்றது. ஆனால் சமகாலத்தில் இந்த நாகரிகம் இந்தியாவின் மற்றைய பகுதிகளுக்குப் பரவியதற்கான ஆதாரங்கள் அருகியே காணப்படுகின்றன. ஆனாலும், அங்கே பரவியிருந்த அறிவியல் விவசாயம் இந்தியப் பெருநிலப்பரப்பில் இரு பாதைகளூடாக: 1. சிந்து வெளியிலிருந்து கிழக்கு நோக்கி சிந்துகங்கை இடைவழியாக கங்கை நதிப் பிரதேசங்களுக்கும் - 2. தெற்கு நோக்கி குஜராத்மகாராஷ்டிரப் பகுதிகளினூடாக முதிர்ந்த விவசாய அறிவுடன் தமிழகம் வரை குடிபெயர்ந்த மக்கள் வழியாகவும், தென்மேற்கு மலைச்சாரல் நிலங்கள் வழியாகவும், துங்கபத்ராகிருஷ்ணாகோதாவரிகாவேரி வடிநிலங்களுக்கும், அங்கிருந்து வைகைதண்பொருநை (தாமிரபரணி) ஆற்றுப்படுகை நிலங்களுக்கும், கடல் கடந்து இலங்கையின் நதிப்படுகை, ஏரிக்கரை நிலங்களுக்கும் பரவியது.

பொ.யு.மு. நான்காம் ஆயிரத்தாண்டின் பிற்பகுதியில் அறிமுகமான இரும்பின் தொழில்நுட்ப வருகையானது நீர்ப்பாசன விவசாயத்தின் மிகைப்பெருக்க வளர்ச்சிக்கு அடிகோலி, தென்னாசியாவின் இரண்டாவது நகரமயமாக்கத்திற்கு வழிவகுத்தது. தொடர்ந்து மக்கள் குழுக்கள், இனப்பிரிவுகள், மதங்கள், கிராமங்கள், நகரங்கள், பட்டினங்கள், அரசுகள், பேரரசுகள், எழுத்துகள், இலக்கியங்கள், நாணயங்கள், வர்த்தகங்கள் என்பன உருவாகி வரலாற்றுக்காலம் ஆரம்பமானது.

சிந்துவெளி அல்லது ஹரப்பா நாகரிகம் பண்டைய உலகில் மிக விரிந்த பரப்பளவில் அமைந்திருந்தது. தெற்கு ஆசியாவின் வடமேற்குப் பகுதியில் பத்து லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியிருந்தது. இந்த நாகரிகம் அதன் சொந்த மண்ணின் பண்பாடுகளிலிருந்து பொ.யு.மு. எட்டாயிரம் ஆண்டின் முற்பகுதியிலிருந்து உருவாகி வந்திருக்கிறது. பொ.யு.மு. 2600 இலிருந்து 1900 ஆண்டுவரை முதிர்ந்த நகர நாகரிகக் கட்டம் என்ற உயர் நிலையையும், பொ.யு. 1900 இலிருந்து 1400 வரையுமான காலத்தில் சரிவையும், இறுதியில் மறைவையும் சந்தித்தது. இந்த நாகரிகம் அதன் இறுதிக் கட்டத்தில் தெற்கே தைமபாத் வரை - அதாவது வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் திராவிட மொழி பேசும் பகுதியை ஒட்டிய, மேற்குக் கோதாவரிப் பள்ளத்தாக்கு வரை பரவியிருந்தது. வடமொழியில் மரபாகக் கூறப்படும் பஞ்ச திராவிட நாடுகளில் ஆந்திரம், கர்நாடகம், தமிழகம் ஆகியவற்றோடு குஜராத்தும் மகாராஷ்டிரமும் அடங்கியிருந்தன.



சிந்துவெளி நாகரிகத்தின் பரவல்

Image Source - wikipedia.org

சிந்துவெளி நாகரிகம் திராவிடத் தகைமைக்கு உரியது என்பதை எடுத்துக்காட்ட தொல்லியல், மரபணுவியல் சான்றுகளைத் தவிர கணிசமான அளவு மொழியியல் சான்றுகளும் உள்ளன. அவற்றில் முக்கியமானவை:

1. சிந்துப் பகுதியில் இன்றுவரை பேசப்படும் திராவிட மொழியான பிராகுயி.

2. ரிக் வேதத்தில் இடம்பெறும் திராவிட மொழிச் சொற்கள்.

3. இந்திய ஆரிய மொழிகளில் திராவிட மொழித் தாக்கம் அடிநிலையில் இருப்பதைக் காட்டுவதாக ரிக் வேதத்தில் இருக்கும் (ட, ண போன்ற) வளைநா ஒலிகள்.

4.பிராகிருத மொழிகளில் இடம்பெற்ற பெரிய மாறுதல்கள் அம்மொழிகளை இந்தியஐரோப்பிய குடும்ப மொழிகளிலிருந்து வேறுபடுத்தி, திராவிட மொழிகளுக்கு நெருக்கமாகக் கொண்டு சென்றமை.

ஆரிய மொழி பேசும் மக்கள் தென்னாசியாவிற்கு ஏறத்தாழ பொ.யு.மு. 1800க்குப் பின்னரே - அதாவது சிந்துவெளி நாகரிகம் முதிர்ச்சி அடைந்த கட்டம் சரிந்து குலைந்த பின்னரே அங்கே குடிபெயர்ந்து வந்திருக்கிறார்கள். சிந்துவெளி நாகரிகத்தின் ஆதிக்குடிகளின் பெருந்தொகையான மக்களோடு ஒப்பிடும்போது அங்கே குடியேறிய ஆரியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்திருக்கும். ஆனால் ஆரியர்கள் உயர்ந்த மேலாதிக்கம் பெறுவதற்கு அவர்களுடைய மேலான படைக் கருவிகளும், குதிரை வண்டிகள் மூலம் எளிதாக இடம்பெயர்தலும் காரணிகளாக அமைந்தன. அச்சமயம் சிந்துவெளி நாகரிக அரசமைப்பு மைய அதிகாரமோ தலைமையோ இல்லாமல் சிறுசிறு சமூகங்களாகச் சிதறிப்போய் இருந்தது. காலகதியில் ஆரியம் பயன்பாட்டு மொழியாக நிலைகொண்டதற்கான காரணம் பெருவாரியான உள்நாட்டு மக்கள் மேலாதிக்கம் பெற்ற அந்த மொழிக்குத் தாவியதாகும். அது ரிக் வேத காலத்திற்கு முன்னரே (ஏறக்குறைய பொ.யு.மு 1500-1300) ஒரு கலப்புச் சமூகமும் பண்பாடும் உருவாகும் நிலைக்குக் கொண்டு சென்றது.

பெரும்பாலான சிந்துவெளி மக்கள் தங்கள் வாழ்விடங்களிலேயே தங்கிவிட்டனர். ஆயினும் பழந்தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்திருப்பது போல - இன்றைய மரபணுவியல் சான்றுகள் எடுத்துக்காட்டுவது போல - திராவிட மொழிகளைப் பேசிய முன்னோடி மக்களில் பலர் கங்கையமுனை ஆற்றிடை நிலப் பகுதிகளிலிருந்தும், குஜராத்மகாராஷ்டிரப் பகுதிகளிலிருந்தும் முதிர்ந்த விவசாய அறிவுடன் தெற்கு நோக்கிக் குடிபெயர்ந்தார்கள். அவர்கள் தென்னிந்தியாவிலிருந்த புதிய கற்காலத்தின் இறுதிக்கட்டத்து உள்நாட்டு மக்களைவிட மேலாதிக்கம் பெற்று, காலப்போக்கில் பெருங்கற்கால, இரும்புக்கால நாகரிகங்கள் ஏற்படவும், ஆந்திரத்திலும் தக்காணத்திலும் அடுத்தடுத்து அரசுகள் அமையவும், தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய மூவேந்தர் அரசுகள் அமைவதற்கான கருச் சமூகமாகவும் அமைந்தனர்.

இந்த நூற்றாண்டில், 2004-2005இல் ஆதிச்சநல்லூரில் தியாக சத்தியமூர்த்தி அவர்களின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளிலும், கொடுமணல், பொருந்தல் பகுதிகளில் கா. ராஜன் மேற்கொண்ட அகழாய்வுகளிலும், கீழடியில் 2015இல் இருந்து முதலில் அமர்நாத் ராமகிருஷ்ணன் தலைமையிலும், தொடர்ந்து தமிழ்நாடு தொல்லியல் துறையினர் மேற்கொண்ட அகழாய்வுகளிலும் பெறப்பட்ட பொருட்களும், பெறுமதி மிக்க கருவூலப் பொருட்களும் கதிரியக்ககரிம ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டன. இத்தொல்பொருட்களின் ஆரம்பகாலம் பொ.யு.மு. 700-600ஆம் ஆண்டுக் காலம் எனக் கணிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த அகழ்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களின் அடிப்படையில், மேற்கூறப்பட்ட ஒவ்வொரு தொல்லியல் தலமும் அவற்றின் பெயரால் - 'ஆதிச்சநல்லூரின் மண்மூடிய மகத்தான நாகரிகம்' என்றும், 'கொடுமணலின் தொன்மையான தமிழர் நாகரிகம்' எனவும், 'வைகை நதிக்கரையின் சங்ககால நகர நாகரிகம்' என்றும் பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் பாராட்டப்பெற்று வருகின்றன.

பல சமயங்களில் 'நகரமயமாக்கம்', 'நாகரிகம்' என்ற சொற்பதங்கள் நம்மவர்களால் மிகத் தளர்வாக (Loosely) உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதையும் காண்கிறோம். ஒரு தொல்லியல் தலத்தை, அங்கே கண்டுபிடிக்கப்படும் பொருட்களின் அடிப்படையில் பெறப்படும் தகவல்களைக் கொண்டு, இது ஒரு 'மக்கள் குடியேற்றம்' மட்டும்தானா, அல்லது இது ஒரு 'நகரமா?', அல்லது இதை ஒரு 'நாகரிகம்' என அழைக்கலாமா? என்றெல்லாம் கணிப்பிடுவதற்கு தொல்லியலாளர்கள் சில விதிமுறைகளை வகுத்திருக்கிறார்கள்.

1950ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழக தொல்லியல்துறைத் தலைவரான பேராசிரியர் கோர்டன் சைல்ட் (Gordon Childe) ஒரு தொல்லியல் மையத்தை 'நகரமயமாக்கம்' என அழைப்பதற்கு சில விதிமுறைகளை முன்வைத்திருந்தார் (Childe 1950: 3-17).

1.நிரந்தரமான மக்கள் குடியேற்றங்கள்

2.பொருளாதாரத் தக்கவைப்பு - விவசாயத்தின் வருட வட்டத்தை ஒழுங்கமைத்தல்

3.மேலதிக உணவை மையப்படுத்தல்

4.நாட்டை ஆட்சி செய்யக்கூடிய ஒரு அதிகார வர்க்கத்தின் இருப்பு

5.நாடெங்கும் ஒரு தொடர்பு வலைப்பின்னல் அமைத்தல்

6.தொலைதூர வர்த்தகம்

7.நிரந்தரக் குடியிருப்புகளுக்கேற்ற சமூக அமைப்பு

பெரும்பாலான தொல்லியலாளர்களால் நீண்டகாலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த இவ்விதிமுறைகளை 1990இல் பிரித்தானிய தொல்லியலாளர் ரேமண்ட் ஆல்சின் மறுபரிசீலனை செய்திருந்தார். மேற்கூறியவற்றுடன், நகரமயமாக்கலுக்கான மற்றைய முக்கிய அம்சங்களாக அவர் கணிப்பிட்டவை (Allchin 1995: 57):

1. பெரிய அளவிலான மக்கள் குடியிருப்பு

2. உள் திட்டமிடல் - திட்டமிட்ட நகர அமைப்பு

3. பொதுமக்களுக்கான கட்டட அமைப்பு (கட்டடக் கலை)

4. படிநிலையான சமூக அமைப்பு

5. நகரைச் சூழ்ந்த அரண்

6. மக்கள் வாசிக்கத் தெரிந்த எழுத்துப் பதிவு

7. துறை பிரித்த கைத்தொழில் வளர்ச்சி

8. தொலைதூர வர்த்தகம்

9. பெருகி வரும் சனத்தொகையை நிர்வகிக்கக்கூடிய நடவடிக்கைகள்

கடந்த ஒரு நூற்றாண்டாக இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் சிந்துச் சமவெளி அகழ்வுகளின் போது மொகஞ்சதாரோ, ஹரப்பா உள்ளிட்ட 96 முதிர்ச்சியடைந்த நகரமயமாக்கப்பட்ட தலங்களும், அதைத் தவிர 200க்கும் மேற்பட்ட மக்கள் குடியேற்றங்களும் இனம் காணப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தையும் இணைத்து 'சிந்துவெளி நாகரிகம்' (Indus Civilization) என்ற ஒரு பெயரினாலேயே இந்த நாகரிகம் உலகெங்கிலும் அறியப்படுகிறது. நாமும் எமது தொல்லியல் தலங்களை 'பொருநை நதிக்கரை நாகரிகம்', 'தாமிரபரணி நாகரிகம்', 'கீழடி நாகரிகம்' என தனித்தனிக் கூறுகளாக அழைக்காமல், 'தொல்தமிழர் நாகரிகம்' என்றோ, அல்லது 'பண்டைத் தமிழர் நாகரிகம்' என்றோ அழைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

சிந்துவெளி நாகரிகம் சுமார் பொ.யு.மு 1400ஆம் ஆண்டளவில் முடிவிற்கு வந்திருக்கிறது. இன்று கிடைக்கும் அகழ்வு ஆதாரங்களின்படி கீழடிப் பண்பாடு ஆரம்பமாகின்ற காலம் பொ.யு.மு 600. 'இந்த எண்ணூறு ஆண்டுக்கால இடைவெளியில் சிந்து நாகரிகத்தின் பண்பாட்டுக் கூறுகள் இந்தியாவின் தென்னகத்தை வந்தடையவில்லை' என்ற சில ஆய்வாளர்களின் கருத்துகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. கீழடியில் காணப்பட்ட சுட்ட



அகழ்வாய்வு செய்யப்பட்ட சிதிலங்கள் - மொகஞ்சதாரோ

Image Source - wikipedia.org

செங்கற்களும், கழிவுநீர்க் கால்வாய்களும், அறைகளின் அமைப்பும், சிந்து மொழிக் குறிகள் பதித்த செம்பியன் கண்டியூர்க் கற்கோடரியும் சிந்துவெளி நாகரிகத்தின் எச்சங்களாகக் காணப்படுகின்றன. இனிவருங்காலங்களில் மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வுகளில் கண்டுபிடிக்கப்படும் தொல்பொருட்களும், அவற்றின் காலக்கணிப்புகளும் இந்த இடைவெளியை கட்டாயமாக நிறைவு செய்யும் என நம்புகிறேன்.

இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாக இருப்பது தென்னிந்திய திராவிட மக்களிடையே பரவியிருந்த பெருங்கற்கால புதையல் பண்பாட்டுடன் தொடர்புடைய அம்சங்கள்தாம். கர்நாடகத்தில் இப்பெருங்கற்காலப் பண்பாட்டின் ஆரம்ப காலம் பொ.யு.மு 1500ஆம் ஆண்டு என சமீபகாலங்களில் கதிரியக்கக் கரிம ஆய்வுகளால் கணிக்கப்பட்டிருக்கிறது - அதாவது, சிந்து சமவெளி நாகரிகம் முற்றாக மறைந்து போவதற்கு சற்று முற்பட்ட காலம். கர்நாடகத்திலிருந்து இப்பண்பாடு ஆந்திரம், தமிழ்நாடு, கேரளம், இலங்கை ஆகிய நாடுகளுக்குப் பரவியிருக்கிறது.

இப்பண்பாட்டின் முக்கியமான அம்சங்கள்: குடியிருப்புகள், வேளாண்மை விவசாயம், நெற்பயிரீடு, மட்பாண்டம் வனையும் சில்லு, கறுப்பு சிவப்பு மட்பாண்டம், மட்பாண்ட கீறல் எழுத்துகள் என்பன. இந்த அம்சங்கள் பெருங்கற் புதையல்களோடும், தாழிப் புதையல்களோடும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் காணப்படுகின்றன. இந்தப் பெருங்கற் பண்பாட்டு அம்சங்கள் சிந்துவெளிப் பண்பாட்டு அம்சங்களுடன் இணைந்து தென்னகத்திற்குப் பரவிவந்த பண்பாட்டுக் கூறுகள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

உதாரணத்திற்கு தமிழ் மக்களின் புராதன வாழ்வியல் பண்பாட்டின் சின்னமான கறுப்புசிவப்பு

மட்பாண்டத்தை எடுத்துக் கொள்வோம். 1944ஆம் ஆண்டில் ஹரப்பா அகழ்வுகளை மேற்பார்வையிட்ட பிரித்தானிய தொல்லியல் மேதை சேர் மோட்டிமர் வீலரின் கூற்று இது:

"The pottery is distinctive in shape and fabric and is characteris tically Black inside and Black or more often Black and Red outside, with the Black confined to the upper part of the vessel, resulting from inverted firing" (Wheeler, 1947)

"தனித்துவமான உருவத்தையும் இழைமானத்தையும் கொண்ட இந்த மட்பாண்டம் தனித்தன்மையாக உட்பக்கம் கறுப்பாகவும், வெளிப்புறம் கறுப்பாகவோ அல்லது அதிகபட்சம் கறுப்பும் சிவப்பும் கலந்தோ உள்ளதோடு, மட்பாண்டத்தின் கழுத்துப் பக்கத்தில் கறுப்பு நிறமாகவும் காணப்படும். இது சூளையில் பாத்திரத்தை தலைகீழாகப் புரட்டிச் சுடவைப்பதால் ஏற்படும் நிற மாற்றங்களாகும்."

இவ்வகையான மட்பாண்டம் சிந்து நதிக்கரை நகரங்களிலிருந்து பொ.யு.மு 4400 ஆண்டுக் காலத்தில், இந்தோஆரியர்களின் வருகைக்கு முற்பட்ட வடஇந்திய மக்களிடையே பரவி, தொடர்ந்து மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம் வழியாக தமிழகமெங்கும் பரவி, பின்னர் இலங்கை முழுவதிலும் பரந்து, அன்றைய பெருங்கற் புதையல்களோடும், தாழிப்புதையல்களோடும், இறந்தோருடன் புதைக்கப்படும் பொருட்களைக் கொண்ட துணைப்புதையல்களாகக் காணப்படுகின்றன. பொ.யு இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இந்த வகையான மட்பாண்டத்தை வனைந்து சூளையிடும் தொழில்நுட்பம் மறைந்து போயிற்று.

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இந்திய நாகரிகத்தின் கர்த்தாக்கள் இந்தோ ஆரியர்களே என்றொரு கருத்தை பிரித்தானிய வரலாற்றாசிரியர்களும், வட இந்திய வரலாற்றாசிரியர்களும் கூறிவந்தார்கள். அது மட்டுமல்ல, தென்னிந்திய மொழிகளான தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்பன சமஸ்கிருத மொழியிலிருந்தே பிறந்தன என்பதை தென்னிந்தியப் பிராமண சமஸ்கிருதப் பண்டிதர்கள் வலியுறுத்தி வந்தார்கள்.

'இந்திய நாகரிகத்தின் கர்த்தாக்கள் இந்தோ ஆரியர்கள்தான்' என்ற அன்றைய பிரித்தானிய வரலாற்றாசிரியர்களின் முடிவு காலாவதியாகிவிட்ட ஒரு கருத்து. இந்திய நிலம் மூன்று முக்கியமான புவியியற் கூறுகளை உள்ளடக்கிய ஓர் உபகண்டம். மேற்கே சிந்துவெளி, வடகிழக்கே கங்கைச் சமவெளி, தெற்கே தீபகற்ப இந்தியா. இந்த மூன்று பிராந்தியங்களும் பண்பாடு, அரசியல், தொல்லியல் ஆகிய துறைகளில் தனித்துவமான பண்புகளை உள்ளடக்கியிருக்கின்றன. இந்த உபகண்டத்தில் அமைந்துள்ள விந்திய மலைதான் பண்பாட்டு ரீதியில் இந்தியாவை மூன்று பிராந்தியங்களாக ஆக்கியிருக்கிறது.

வட இந்திய இலக்கியங்கள் இப் பிராந்தியங்களை 'ஆரியவர்த்த', 'தக்ஷிணபாத', 'திராவிட தேச' எனக் குறிப்பிடுகின்றன. திராவிடர்களது சிந்துவெளி நாகரிகத்தை சுவீகரித்துக் கொண்ட ஆரியர் அதன் பண்பாட்டு அம்சங்களை அபகரித்து, தமது கலாசார அம்சங்களுடன் இணைத்து, கங்கைச் சமவெளியில் நாகரிகம் படைத்தவர்களாக எழுச்சி பெற்று, இதை 'தூய ஆரியர்களது நாகரிகம்' என வட இந்தியா முழுவதும் பரப்புவதற்கு வழியமைத்தது இப்பகுதியின் புவியியற் கூறுதான். வட இந்தியா முழுவதும் ஆரியமயமாக்கும் திட்டம் வெற்றி பெற்றிருந்த போதிலும், தென்னிந்தியாவில் அதன் பரவலை ஓரளவு தடுத்தது விந்திய மலைதான். பிற்காலத்தில் கர்நாடகம், ஆந்திர தேசம் என்பன வட இந்திய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தாலும், தமிழகம் இதனால் பெரிதாகப் பாதிக்கப்படவில்லை.

உலக வரலாற்றில் ஒரு நாட்டின் அல்லது பிராந்தியத்தின் நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது விவசாயத்தின் வருகைதான். தமிழகத்தில் அதன் நாகரிக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவை: விவசாயத்தின் வருகை, இரும்புக்காலம், பெருங்கற் பண்பாடு, பெருங்கடல் வர்த்தகம் என்ற நான்கு பெரும் காரணிகள் தாம்.

பெருங்கற்காலப் பண்பாடு தமிழகத்தை நாகரிக வளர்ச்சி கொண்ட பிரதேசமாக ஆக்குவதில் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. மிகக் குறுகிய காலத்தில் - ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகளில் - தமிழகத்தின் பல பகுதிகளிலும் நாகரிக முதிர்ச்சிக்கு வழிவகுத்தது பெருங்கற்காலத்தில் காணப்பட்ட பண்பாட்டு வளர்ச்சியே எனலாம். தமிழகத்தில் இந்த விவசாயப் புரட்சியை முன்னெடுத்துச் சென்றவர்கள் இப்பெருங்கற்கால மக்களாகிய திராவிடரே ஆவர். இக்காலத்தில் பிரதான உலோகப் பொருளாக இரும்பு பயன்படுத்தப்பட்டதனால் இது 'இரும்புக் காலம்' எனவும் அழைக்கப்படுகிறது. இதன் பண்பாட்டு வளர்ச்சியை இக்காலத்திற்குரிய பலவகையான இரும்பாயுதங்கள், மட்பாண்டங்கள், மட்பாண்டங்களில் காணப்படும் குறியீட்டு எழுத்துகள், பலவகையான மணிவகைகள், அலங்காரப் பொருட்கள், ஓவியங்கள் ஆகியன எடுத்துக் காட்டுகின்றன.

உணவு உற்பத்தி மட்டுமன்றி, தமிழகத் துறைமுகங்களினூடே நடைபெற்ற வெளிநாட்டு வணிகமும் தமிழகத்தை நாகரிக முதிர்ச்சிக்கு இட்டுச் சென்றது. கிறிஸ்துவுக்கு முன்னர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே - பொ.யு.மு 1000ஆம் ஆண்டளவில் - தமிழகத் துறைமுகங்கள் பீனீசியர்களுடனும், மத்திய கிழக்கு நாடுகளுடனும் வணிக நடவடிக்கைகளில் இணைந்திருந்தன. இன்னும் பலஸ்தீனம், மத்தியதரைப் பிரதேசம், ஆபிரிக்கா, தென்கிழக்காசிய நாடுகள் ஆகியவற்றினிடையே நடைபெற்ற வர்த்தகத்தின் மையப் பிரதேசமாக தமிழகம் விளங்கியது. வணிக நடவடிக்கைகளைத் தொடர்ந்து இந்நாடுகளுக்கிடையே பண்பாட்டுப் பரிமாறல்கள் நிகழ்ந்தன. இதன் காரணமாக விவசாயச் சமூகமாக இருந்த ஆரம்பகாலத் தமிழகச் சமூகம், வணிகச் சிறப்பால் பிற நாடுகளின் பண்பாட்டுப் பரிமாறல்களுக்கு உள்ளாகி உன்னதமானதொரு நாகரிக நிலையை அடைந்தது. மானிடவியல் பேராசிரியர் கிளாரன்ஸ் மலோனி போன்ற ஆய்வாளர்கள் "தமிழகத்தின் நாகரிக வளர்ச்சி தெற்கே பாண்டிய நாட்டில் ஆரம்பமாகி, வடக்கு நோக்கிப் பரவியது" எனக் கூறுகிறார்கள். இவ்வாறு ஏற்பட்ட வளர்ச்சியில் தென்பாண்டி நாட்டின் இரும்புத் தொழிலும், தமிழகத்தின் கடல்வழித் தொடர்புகளும் காத்திரமான பங்கை அளித்தன.

தமிழகம் நாகரிகமடைந்து சங்கம் அமைத்து இலக்கிய இலக்கணங்களை உருவாக்கிய காலப்பகுதியில் தமிழகத்திற்கு வடக்கில் அமைந்திருந்த ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம் ஆகியவற்றில் சமகாலத்தில் இத்தகைய நாகரிக வளர்ச்சி நடைபெற்றதா என்ற கேள்வி எழுகிறது. பிற்காலத்தில் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிச் சொற்களில் சமஸ்கிருதப் பதங்கள் புகுந்து கொண்ட போதிலும், சமகாலத்தில் இப்பிராந்தியங்களில் நாகரிக வளர்ச்சிக்கான தடயங்கள் ஏதும் காணப்படாதமை இப்பிராந்தியங்களினூடாக வடஇந்தியாவிலிருந்து தென்னகத்திற்கு நாகரிகம் வரவில்லை என்பதைத் தெளிவாக்கி, பேராசிரியர் மலோனியின் கருத்திற்கு வலுச் சேர்க்கிறது.

சமீபகாலங்களில், "நாங்கள் திராவிடர்கள் எனக் கூறுவது தவறு, நாங்கள் தமிழர்கள். பண்டைய தமிழ் இலக்கியங்கள் எதுவும் எங்களைத் திராவிடர் எனக் குறிப்பிடவில்லை, தமிழர்கள் என்றே குறிப்பிட்டு வந்திருக்கின்றன. எனவே, 'திராவிடர்' என எங்களை அழைக்க வேண்டிய அவசியமில்லை" என ஒரு சாரார் கூறிவருகிறார்கள்.

இதற்கு, சரியான விளக்கம் தரவேண்டியது நமது கடமை. பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளின் ஆரம்பத்திலும் சமஸ்கிருதம்தான் இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி என்ற கருதுகோள் ஐரோப்பிய, தெற்காசிய அறிஞர்களிடையே பரப்பப்பட்டிருந்தது. 1820களில் 'தெலுங்கு மொழியின் இலக்கணம்' (*Grammar of the Teloogu Language*) என்ற நூலை எழுதிய அலெக்ஸாந்தர் காம்பெல் என்ற ஆங்கிலேயர், தெலுங்கு மொழியின் இலக்கணம் தமிழ் மொழி இலக்கணத்துடன் ஒத்திருப்பதை எடுத்துக் காட்டியிருந்தார்.

1850களில் ரிக் வேத நூலைப் பதிப்பித்த மாக்ஸ் முல்லர் தென்னிந்திய மொழிகள் வட இந்திய இந்தோ ஐரோப்பிய மொழிகளிலிருந்து வேறானவை என்ற கருத்தை வெளியிட்டிருந்தார். ஆனாலும், 1856ஆம் ஆண்டில் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (*Comparative Grammar of the Dravidian or SouthIndian Family of Languages*) என்ற நூலை வெளியிட்ட ரொபேர்ட் கால்டுவெல் பாதிரியார் (*Robert Caldwell*) தென்னிந்திய மொழிகளின் இலக்கண அமைப்பை தனித்தனியாக ஆராய்ந்து, அவற்றின் ஒற்றுமையை எடுத்துக்காட்டி, அவை எவ்வாறு வடஇந்திய இந்தோஐரோப்பிய மொழிகளின் இலக்கண அமைப்பிலிருந்து வேறுபடுகின்றன என்பதை விளக்கி - ஒரு மொழியின் உயிர் அதன் இலக்கணமே தவிர வெளியில் தோற்றம் தரும் சொற்களல்ல (சொற் பதங்களை ஒரு மொழி இன்னொரு மொழியிலிருந்து கடன் வாங்கலாம்) என்பதை எடுத்துக்கூறி - இத்தென்னிந்திய மொழிகளுக்கு 'திராவிட மொழிகள்' என்ற பெயரை வழங்கினார். பின் நாட்களில் வட இந்தியாவிலும் கோலாமி, நய்க்கி, கட்பா, பார்ஜி, பெங்கோ, மண்டா ஆகிய 'திராவிட மொழிகள்' கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

அவரது வரலாற்றுப் புகழ்மிக்க இந்த ஆய்வு 'திராவிட மொழிக் குடும்பம் உலகின் தொன்மையானதொரு மொழிக் குடும்பம்' என்பதை உலக அரங்கில் பேரிகையிட்டு முழங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் அறிஞர் உலகம் அவரது முடிவுகளை ஏற்றது. உலகின் முக்கியமான மொழிக் குடும்பங்களில் திராவிட மொழிக் குடும்பமும் ஒன்று என்பது நிறுவப்பட்டது. கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக உலக அரங்கில் நிறுவப்பட்டு ஆயிரக்கணக்கான கற்கை நூல்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் பதம் இது.

"இந்த மொழிக் குடும்பத்திற்கு 'திராவிட' மொழிக்குடும்பம் என்ற பெயரை ஏன் தெரிவு செய்தேன்?" என்பதற்கு கால்டுவெல் பாதிரியார் தனது நூலின் முன்னுரையிலேயே விளக்கமளிக்கிறார். "'திராவிட' என்பது ஒரு சமஸ்கிருத மொழிப் பதம். மனுஸ்மிருதி, நாட்டியசாஸ்திரம், மகாபாரதம் ஆகிய சமஸ்கிருத நூல்களில் 'திராவிட' என்ற பதம் தமிழ்மொழி பேசும் மக்களையும்; குமாரிலபட்டரின் தந்திரவார்த்திகா என்னும் நூலில் 'திராவிட' என்பது

தமிழ் மொழியையும் குறிப்பிட உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த தென்னிந்திய மொழிக் குடும்பத்திற்கு ஆங்கிலத்தில் 'Dravidian' என்ற பெயரைக் கொடுப்பதனால், தமிழ் மொழியை 'Tamilian' என அழைக்கலாம்" எனப் பதிவு செய்திருக்கிறார் கால்டுவெல் (Caldwell, R. 1956 ed.: 6).

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளையும், அவைகளின் குடும்ப மொழிகளையும் மொத்தமாக 'திராவிட மொழிகள்' என அழைப்பதில் தவறேதும் இல்லை. அவ்வாறே இம்மக்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் நாட்டை 'திராவிட நாடு' எனவும் அழைக்கலாம். ஆனால், 'திராவிட இனம்' என ஓர் இனம் கிடையாது. இது ஒரு மொழிக்குடும்பத்தைக் குறிக்கும் பெயரே தவிர ஓர் இனத்தைக் (Ethnicity/ Race) குறிக்கும் பெயரல்ல.

இந்தியாவில் இந்தோஆரிய மொழிகள் பேசப்படுவதற்கு முன்னரே திராவிட மொழிகள் பேச்சு வழக்கில் இருந்து வந்தன என்ற கருத்தை எவ்வாறு மொழியியல் ஆதாரங்களோடு கால்டுவெல் பாதிரியார் முன்வைத்திருந்தாரோ - அதே போன்று உலக அரங்கில் பரந்த அளவில் திராவிட மக்களின் தொன்மையையும் நாகரிகத்தையும் பறைசாற்றியவர்களில் பிரித்தானிய தொல்லியலாளர்களான சேர் ஜோன் மார்ஷல் (Sir John Marshall), சேர் மோட்டிமர் வீலர் (Sir Mortimer Wheeler) ஆகிய இருவரும் முக்கியமானவர்களாவர்.

இக்காலத்தில் நமது முன்னோர்கள் விட்டுச் சென்ற பாவனைப் பொருட்களினதும், பெறுமதியான கருவூலப் பொருட்களினதும், அவர்களின் எலும்புகளினதும், மண்ணில் புதைந்த புதைப்படிவங்களின் வயதையும் கதிரியக்கத் திகதிகள் மூலம் கண்டறிய முடிகிறது.

இவற்றில் மிகச் சரியான, திடமான திகதியைத் தருவது கதிரியக்கக் கரிமப் பகுப்பாய்வுத் திகதி (C14 Radiocar bon Dating). இது இற்றைக்கு முன் 40,000 ஆண்டுக் காலம் வரையில்தான் சரியான திகதியைத் தரும். இதற்கு அடுத்தபடியாக வெப்பஒளிக்கதிர் திகதிக் கணிப்பு (Thermoluminescence Dating) அமைகிறது. 40,000 ஆண்டுகளுக்கு மேலே 60,000 ஆண்டுகள் வரை இவை தரும் காலக் கணிப்புகள் சுமாராக 5,000 முதல் 10,000 ஆண்டுகள் வரை வேறுபடும். அதற்கு மேலே போய்விட்டால் இக்கணிப்புகள் பயனற்றவை. இற்றைக்கு 40,000 ஆண்டுகளுக்கு மேலே போய்விட்டால் பொட்டாசியம்40 (K40) அல்லது யூரேனியம்238 (U238) காலக் கணிப்பு மேற்கொள்ளப்படும். இக்கணிப்புகள் மூலம் முறையே இற்றைக்கு முன் 1250 மில்லியன், 4000 மில்லியன் ஆண்டுகள் வரை கணிப்பிடலாம். முந்தைய வரலாற்றாசிரியர்கள் காலக்கணிப்பு செய்யும்போது கிறிஸ்தாப்த காலத்தை ஒரு மையமாகக் கொண்டு கிறிஸ்துவுக்கு முன் (கி.மு.), கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி.) எனக் காலக் கணிப்பு செய்தார்கள்.

கி.மு. முதலாம் ஆண்டைத் தொடர்வது கி.பி. முதலாம் ஆண்டு. இக்காலத்தில் யேசு கிறிஸ்து பிறந்தது கி.மு. 6க்கும் கி.மு. 4க்கும் இடையே எனக் கணிக்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் அல்லாத பல வரலாற்றாசிரியர்களுக்கு உலக வரலாற்றை யேசுக் கிறிஸ்துவுடன் சம்பந்தப்படுத்தி, அதற்கு ஒரு சமய முலாம் பூசிக் கூறுவது உடன்பாடாக இல்லை. இதன் காரணமாக உலகில் பல நாடுகளில் பலர் தங்களது சொந்த ஆண்டுக்கணக்குகளை வைத்திருக்கிறார்கள். உதாரணமாக: தமிழர்கள் 'திருவள்ளுவர் ஆண்டுக்' கணக்கு வைத்திருக்கிறார்கள். தமிழர்களின் புத்தாண்டு தைப்பொங்கலுடன் ஆரம்பமாகிறது. சீன மக்கள் தனியான ஆண்டுக் கணக்கு வைத்திருக்கிறார்கள். சீன மக்களின் புத்தாண்டு மாசி மாதம் (பெப்ரவரி) 4ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இன்று நாம் உபயோகிக்கும் நாட்காட்டி (Calendar) உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான நாட்காட்டி ஆகும். இது ஆரம்பித்த நாளிலிருந்து இன்று வரையும் தொடரும் காலப் பகுதிகளையும், இனிமேல் தொடரப்போகும் காலங்களையும் இக்காலத் தொல்லியல் ஆய்வாளர்கள் ஆங்கிலத்தில் 'Common Era' (பொது யுகம்) என அழைக்க ஆரம்பித்தார்கள்.

காலண்டர் ஆரம்பிப்பதற்கு முற்பட்ட காலத்தை 'Before Common Era' (BCE) என்றும், காலண்டர் ஆரம்பித்து இன்றுவரை தொடரும் காலத்தை 'Common Era' (CE) என்றும் ஆங்கிலத்தில் அழைக்க ஆரம்பித்தார்கள். தமிழில் 'Common Era' என்பதை 'பொது யுகம்' என அழைக்கலாம். இன்றுவரை தொடரும் 'பொது யுகம்' ஆரம்பிக்கும் முன் உள்ள காலத்தை - பொது யுகத்திற்கு முன் (பொ.யு.மு.) என்றும் - பொது யுக ஆண்டுகளை 'பொ.யு.' என்றும் குறிப்பிடலாம். இந்த முறையே இந்நூலில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

முடிந்த அளவில் அறிவியல் அடிப்படையில், தொல்லியல் அடிப்படையில், மரபணுவியல் அடிப்படையில், மொழியியல் அடிப்படையில் நிரூபிக்கக்கூடிய சான்றுகளைக் கொண்டே இது எழுதப்பட்டிருக்கிறது. அறிவியல் பூர்வமாக வளர்ந்து வரும் இன்றைய தலைமுறைத் தமிழ் உலகம் இதை வரவேற்கும் என நம்புகிறேன்.

தென் ஆசியாவில் திராவிட மொழிகளைப் பேசும் மக்களின் மூதாதையர்கள் இற்றைக்கு 68,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த மண்ணில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் ஆபிரிக்காவிலிருந்து கொண்டுவந்த ஆரம்பகாலப் பேச்சுவழக்குகள் தமிழ் மொழியினதும், மற்றைய திராவிட மொழிகளினதும் உருவாக்கத்திற்கு முக்கிய பங்கினை அளித்திருக்கின்றன. இப்பின்னணியில், தமிழ்மொழி பேசும் மக்களின் மரபணு மூலங்கள், தமிழர் வரலாறு, மொழி, பண்பாடு ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் ஒருங்கிணைத்து மீள்பார்வை செய்யும் ஆழமான ஆய்வாக இது அமைகின்றது. தொல்திராவிட மொழி தோற்றம் பெற்ற இடம் சிந்துவெளிதான். அதன் தென் ஆசியப் பரவலுக்கும் பிராந்தியத் திராவிட மொழிகளின் உருவாக்கத்திற்கும் உந்துதலாக இருந்தது வேளாண்மை விவசாயத்தின் பரவலாகும். இந்தக் கோட்பாட்டை நிலவியல், மானிடவியல், மரபணுவியல், தொல்லியல், மொழியியல் ஆகிய கற்கைநெறிகளின் துணைகொண்டு 'திராவிட மக்களின் மரபணு மூலங்களும் தமிழ் மொழியின் படிமுறைத் தோற்றமும்' எனும் இந்தத் தொடர் நிறுவவுள்ளது. தமிழ் மக்களினதும் தமிழ் மொழியினதும் உருவாக்கம் பற்றிய முக்கியமான அறிவியல் ஆய்வாக இது அமையும்.

தமிழர் தோற்றம் பற்றிய சில கோட்பாடுகளின் நம்பகத்தன்மையும் நிலவியல், சமுத்திரவியல் சான்றுகளும்

சிவ தியாகராஜா

பகுதி 1

கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து B. Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph. D. பட்டத்தையும் பெற்றவராவார். இது தவிர கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் புகழ் பெற்ற பேராசிரியர் கொலின் ரென்புரூ (Prof. Colin Renfrew) நடத்திய தொல்லியல் பயிற்சிப்பட்டறைகளிலும் பங்கு பெற்றுள்ளார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். இவரது சில ஆய்வு நூல்கள் இலங்கைப் பல்கலைக் கழகங்களிலும், தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களிலும் உசாத்துணை நூல்களாகப் (reference books) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவர் எழுதிய ஆய்வு நூல்களில் Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Genetic Origins of the Sinhalese People, Kantarodai Civilization of Ancient Jaffna, Archaeological Excavations at the Jaffna Fort, Early Siva Temples of Ancient Lanka, The Tamils of Lanka A Timeless Heritage ஆகிய ஆங்கில நூல்களும், மருத்துவக் களஞ்சியம், ஈழத் தமிழரின் ஆதிச் சுவடுகள், உலகில் பெரிய இந்துக் கோயில் அங்கோர் வாட், கில்கமேஷ் காவியம், தமிழ் மக்களும் தழுவிய மதங்களும், பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகிய தமிழ் நூல்களும் பிரபலமானவை.





புராதன தமிழகத்தின் ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் சேர்ந்து நடனமாடும் காட்சி பாறை ஓவியமாக ஆண்டிப்பட்டி மலைக்குன்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களோடு பழக்கப்பட்ட (Domesticated) ஆடும் காணப்படுகிறது. இந்த ஓவியத்தின் காலம் இற்றைக்கு 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கணிக்கப்படுகிறது. நன்றி - Indian Express, March 4, 2013.

தமிழர் தோற்றம் பற்றிய சில கோட்பாடுகள்

தமிழ் மொழியைப் பாரம்பரியமாகப் பேசும் மக்கள் 'தமிழர்கள்' என அழைக்கப்படுகிறார்கள். இந்தத் தமிழ் மொழி பேசப்பட்ட - பேசப்படுகிற - நிலம் 'தமிழகம்' (Home of the Tamils) என அழைக்கப்படுகிறது. இங்கே நாங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை:

1.தமிழகம் என நாங்கள் அழைக்கும் தென்னாசிய மண்ணில் வாழும் மக்களின் முன்னோர்கள் இந்த நிலத்திற்கு வருகை தந்த காலம் வேறு.

2.தமிழ் என்றொரு மொழி உருவாகி அம்மொழியை இம்மக்கள் கடைப்பிடித்த காலம் வேறு.

இத்தென்னாசிய மக்கள் தமிழ் மொழியைப் பேச ஆரம்பித்த பின்னரே இவர்களை நாம் தமிழர்கள் என அழைக்க முடியும். ஆனால், இவர்களில் பெரும்பாலானோர் தமிழ் என்றொரு மொழி வழக்கத்திற்கு வருவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த மண்ணில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்களது ஆரம்பகாலப் பேச்சுவழக்குகள் பிற்காலத் திராவிட மொழிகளின் தோற்றத்திற்கு முக்கிய பங்களித்தமையால் (இது பற்றி பின்னர் விரிவாகப் பேசப்படும்) இவர்களை இன்று நாம் திராவிட முன்னோடிகள் என்ற பெயரால் அழைக்கலாம். தமிழர்களின் தோற்றம் பற்றி பல வகையான கோட்பாடுகள் தமிழக வரலாற்றாசிரியர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமான சில:

1.தமிழர் தோன்றியது 'குமரிக்கண்டம்' என்று அழைக்கப்பட்ட ஒரு பெரும் நிலப்பரப்பில். அதற்கு 'லெமூரியா' என்ற மாற்றுப் பெயர் உண்டு. ஒரு காலத்தில் கன்னியாகுமரிக்குத் தெற்கே ஆபிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலிருந்த கண்டம் இது. இக்கண்டம் கடல்கோள்களினால் அழிந்துவிட்டது. இந்த லெமூரியா எனப்படும் குமரிக்கண்டத்திலிருந்தே தமிழர்கள் இன்றைய தமிழகத்தை வந்தடைந்தார்கள். இங்கிருந்து அவர்கள் மேற்கு நாடுகளுக்கு இடம்பெயர்ந்தார்கள்.

2.தமிழர் ஓர் இன மக்கள். அவர்கள் தமிழ்நாட்டின் தொல்குடிகள். அவர்கள் தோன்றியது இந்த மண்ணில்தான்.

3.தமிழர்கள் மொசப்பத்தேமியாவிலுள்ள சுமேரியாவிலிருந்து சிந்து சமவெளி (மொகஞ்சதாரோ, ஹரப்பா) வழியாக தமிழகத்திற்கு வந்தவர்கள்.

இக்கோட்பாடுகளின் உண்மைத்தனத்தை முடிவு செய்வதற்கு கீழ்க்காணும் கற்கைத்துறைகள் துணை நிற்கின்றன. அவை: 1. குடிசன மரபணுவியல் (Population Genetics), 2. மானிடவியல் (Anthropology), 3. தொல்லியல் (Archaeology), 4. மொழியியல் (Linguistics), 5. நிலவியல் (Geology) என்பன.

குமரிக்கண்டம் என்ற பெயரில் ஒரு கண்டம் இருந்ததா? லெமூரியா என்பது குமரிக்கண்டமா?

குமரிக்கண்டமாக்கப்பட்ட குமரி நாடு

சங்ககால இலக்கியங்களில் உள்ள சில நூல்களிலும், பின்னர் சங்கம் மருவிய காலத்தில் வெளிவந்த சிலப்பதிகாரத்திலும் கடல் கொண்ட குமரி நாடு பற்றிக் கூறப்படுகிறது.

புறநானூறு 9ஆம் செய்யுள் 911ஆம் வரிகளில்:

"செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த,

முந்நீர் விழவின், நெடியோன்

நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே!"

"கடல் தெய்வத்திற்கு முந்நீர் விழா எடுத்து, அதனுள் கூத்தர்க்குப் பசும் பொன் வழங்கிய நெடியோனால் ஆக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளி ஆற்று மணலிலும் பல ஆண்டுகள் நீ புகழுடன்

வாழ்வாயாக!"

கலித்தொகை 104ஆம் செய்யுள் 14ஆம் வரிகளில்:

"மலித்திரை ஒருங்க தன்மண் கடல் வவ்வின்

மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடு இடம்பட

புலியொடு வில்நீக்கி புகழ் பொரித்த கிளர் கெண்டை

வலியினால் வனக்கிய வாடாசீர்த் தென்னவன்"

"தனது நிலத்தைக் கடல் கொண்டதனால் பாண்டிய மன்னன், சேர - சோழர்களை வென்று அவர்களது நிலங்களைத் தனதாக்கிக் கொண்டான்."

சிலப்பதிகாரம் 11ஆம் செய்யுள் 1820ஆம் வரிகளில்:

"வடிவேலெறிந்த வன்பகை பொறாது

பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்

குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"

"(பாண்டிய மன்னன்) தனது கூர்மையான வேலெறிந்த பெரும் பகையைப் பொறுக்க மாட்டாது பொங்கி எழுந்த சமுத்திரம், பஃறுளி ஆற்றுடன் கூடிய மலைகளையும், குமரிக் கோட்டையையும் விழுங்கிக் கொண்டது."

இதில் எந்தப் பாடலிலும் குமரிக்கண்டம் என்றொரு கண்டம் கூறப்படவில்லை. பாண்டிய நாட்டின் நிலங்களைக் கடல் கொண்டதாகவும், அந்த நிலத்தில் பஃறுளி என்றொரு ஆறும், மலைகளும், குமரி மலையும் இருந்ததையும் மட்டுமே இப்பாடல்கள் கூறுகின்றன. இவற்றிலிருந்து பஃறுளி ஆற்றையும், குமரிக்கோட்டையையும் கொண்ட ஒரு குமரி நாடு இருந்ததை மட்டுமே நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

மேலும், 'கண்டம்' என்ற சொற்பதம் 'நாடு' என்பதைக் குறிக்கும் மாற்றுச் சொற்களில் ஒன்றென பிங்கல நிகண்டின் 457ஆவது செய்யுள் குறிப்பிடுகிறது:

"பைதிர மண்டிலம் பாடி தேயந்

தண்ணடை நீவரங் கோட்டாஞ் சனபதஞ்

சும்மை யகலுள் கண்டமேணி யென்றின்ன

விராச்சிய முலகு நாடென்ப"

இதன்படி 'கண்டம்' என்ற சொற்பதம் ஒரு நாட்டைக் குறிப்பிடப் பாவிக்கப்பட்டிருக்கலாம். இப்பதம் ஒரு பெரும் நிலப்பரப்பைக் குறிப்பிடுகிறது என நிச்சயமாகக் கொள்ள முடியாது.

சங்ககாலத்தின் பின் ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகள் கழித்து, பொ.யு எட்டாம் நூற்றாண்டுக் காலத்தில் இறையனார் அகப்பொருளுரை என்றொரு நூல் வெளிவந்தது. இதற்கு இறையனார் களவியல் உரை என்ற மாற்றுப் பெயரும் உண்டு. இந்நூலின் செய்யுட்பகுதியை இறையனாரே - அதாவது கடவுளே - எழுதியதாகக் கூறப்பட்டது. இந்நூலின் செய்யுட்பகுதி 60 சூத்திரங்களைக் கொண்ட பொருளிலக்கணப் பாடல்களைக் கொண்டது (இறையனார் அகப்பொருள் நக்கீரர் உரை, 2006 பதிப்பு).

இதற்கு நக்கீரர் உரை கூறியதாகக் கூறப்படுகிறது. இன்றிருக்கும் உரை நக்கீரர் உரை என வழங்கப்பட்டாலும், நக்கீரர் உரை வாய்மொழியாகப் பல தலைமுறைகளுக்கு வழங்கப்பட்டு வந்து பின்னர் ஒன்பதாம் தலைமுறையைச் சேர்ந்த முசிறி ஆசிரியர் நீலகண்டனார் என்பவரால் கேட்கப்பட்டது என்ற குறிப்பும் இந்த நூலின் முன்னுரையில் காணப்படுகிறது. நீலகண்டனாரின் காலத்தில் இது ஏட்டில் எழுதி வைக்கப்பட்டிருக்கலாம்.

இந்நூலின் முக்கியத்துவம் என்னவெனில், இப்பாடல்களின் உரைக்குத் தொடர்பேதும் இல்லாத இதன் நீண்ட முன்னுரையில் பண்டைய தமிழகத்தின் பாண்டிய நாட்டில் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்ததாகவும், இவை முறையே 4440, 3700, 1850 ஆண்டுகள் செயற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

"இந்த முதற்சங்கம் குமரிக்கண்டத்தில் அங்கே ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களின் முதல் தலைநகரமான தென் மதுரையில் நடைபெற்றது. தென் மதுரை தலைநகராக இருந்த குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியை 'கடற்கோள்' கொண்டபின், மிகுதியிருந்த குமரிக்கண்டத்தின் கபாடபுரத்தில் தலைநகர் அமைக்கப்பட்டு, அங்கே இடைச்சங்கம் நடைபெற்றது. இந்தப் பகுதியும் மீண்டும் கடற்கோளினால் அழிந்துபோக, பாண்டியர்கள் வடக்கே வந்து இன்றைய மதுரையைத் தலைநகராக்கி அங்கே மூன்றாம் தமிழ்ச் சங்கத்தை ஆரம்பித்தார்கள்" என இந்நூலில் கூறப்படுகிறது (இறையனார் அகப்பொருள் நக்கீரர் உரை).

இறையனார் அகப்பொருள் உரை நூலைத் தொடர்ந்து வெளிவந்த தொல்காப்பியப் பொருளதிகார உரையில் நச்சினார்க்கினியரும், தொல்காப்பிய உரை நூலில் பேராசிரியரும், சிலப்பதிகார உரை நூலில் அடியார்க்கு நல்லாரும், இறையனார் அகப்பொருள் கூறிய தமிழ்ச் சங்கம் பற்றிய விவரங்களையும், குமரிநாட்டின் அழிவைப் பற்றியும், அத்தோடு பல புதிய

தகவல்களையும் சேர்த்து திரும்பவும் உரைத்தார்கள். இந்த வரலாற்றில் பின்வரும் அம்சங்கள் சர்ச்சைக்கு உரியவை:

1. சங்ககால இலக்கியங்கள் 'குமரி நாடு' என்ற பெயரால் ஒரு நாடு இருந்ததைப் பற்றிக் குறிப்பிடுகின்றனவே ஒழிய, குமரிக்கண்டம் பற்றியோ, கபாடபுரம் குமரிக்கண்டத்தில் இருந்தது பற்றியோ, அங்கிருந்த தமிழ்ச் சங்கங்கள் பற்றியோ எதுவுமே குறிப்பிடவில்லை. மேலும், சங்கம் மருவிய காலத்திற்கும் இறையனார் அகப்பொருளுரை நூல் வெளிவந்த எட்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட 500 ஆண்டுக் காலத்தில் வெளிவந்த எந்தத் தமிழ் நூலிலும் இம்மூன்று சங்கங்கள் பற்றிக் கூறப்படவே இல்லை.

2. முதற் கடற்கோளில் குமரிக்கண்டத்தின் ஒரு பகுதி அழிந்துபோக, எஞ்சிய குமரிக்கண்டத்தின் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்ட இடைச்சங்க காலத்தில் எழுதப்பட்டதாகக் கூறப்படும் தொல்காப்பியம், இச்சங்கங்கள் பற்றியோ, குமரிக்கண்டம் பற்றியோ, கபாடபுரம் பற்றியோ எதுவுமே கூறவில்லை. தமிழ் நாட்டின் எல்லைகளை, "வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து" என்ற வரிகளுடன் ஆரம்பிக்கும் தொல்காப்பியம், இன்று இருப்பதைப்போல தமிழகத்தின் தென் எல்லையாகக் குமரிமுனையையே குறிப்பிடுகிறது.

3. 'சங்கம்' என்பது ஒரு பிராகிருதசமஸ்கிருத மொழிப்பதம். அது இன்றுவரை நிலைபெற்று நின்றுவிட்டது. தமிழ்மொழி வளர்க்கப் புறப்பட்ட பாண்டிய மன்னனும், தமிழ் அறிஞர்புலவர்களும் தங்கள் அவைக்கு ஏன் ஒரு சமஸ்கிருத மொழிப்பதத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்? அழகிய தமிழில் 'கூடல்' என்றல்லவா அழைத்திருப்பார்கள்? மதுரையை 'கூடல்', 'நான்மாடக் கூடல்' என்ற பெயர்களாலும் சங்ககால இலக்கியங்கள் அறியத் தருகின்றன.

இறையனார் அகப்பொருள் உரை எழுதப்பட்ட மத்திய காலத்தில் சமஸ்கிருதம் தமிழகத்தின் சில அறிஞர்கள் மத்தியில் பிரபலமாக இருந்தது. சமஸ்கிருதப் பதங்களை அவர்கள் எழுதும் தமிழ் நூல்களில் தாராளமாக உபயோகிப்பது கௌரவமாகக் கருதப்பட்டது. எனவே, அக்காலகட்டத்தில் எழுதப்பட்ட நூலில் நக்கீரனார் 'சங்கம்' என்ற பதத்தை உபயோகித்திருப்பதைப் பெரும் தவறாகக் கொள்ள முடியாது. ஆனால், குமரிக்கண்டத்தில் முதற்சங்கம் இருந்ததாகக் கூறப்படும் காலகட்டத்தில் ஆரியர்கள் இந்திய உபகண்டத்திற்குள் நுழையவே இல்லை. சமஸ்கிருத மொழி அன்று வழக்கில் இல்லை. வழக்கில் இல்லாத ஒரு மொழிப்பதத்தைப் புலவர்களாலோ, பாண்டிய மன்னனாலோ, மற்றெவராலுமோ அக்காலத்தில் உபயோகித்திருக்க முடியாது.

4. தமிழகத்தில் பாண்டிய மன்னர்கள் மதுரையைக் கைப்பற்றி அங்கே தலைநகரை அமைக்க முன்னர், கொற்கையில் தமது தலைநகரை அமைத்திருந்தார்கள். இந்தக் கொற்கை நகரின் கடற்கரைத் துறையை சில சமஸ்கிருத இலக்கியங்கள் 'பாண்டிய கபாடக' எனக் குறிப்பிடுகின்றன. சமஸ்கிருதத்தில் 'பாண்டிய கபாடக' என்றால் பாண்டியநாட்டின் நுழைவாயில் என்றும் பொருள்படும் (தமிழிலும் இப்பதம் 'வாயில்' என்பதைக் குறிக்க உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணம்: 'இதயக் கபாடம் திறமினோ?').

வால்மீகி இராமாயணத்தில் (கி.மு. 300-200), கிஷ்கிந்தா காண்டத்தில் தாமிரபரணி நதி பாண்டியர்களின் தலைநகரான கபாடபுரத்தினூடாகச் சென்று கடலை அடைகிறது என்ற செய்யுள்வரி காணப்படுகிறது (*Valmiki Ramayana: Kishkinta Khanda: 41:17-19*).

அர்த்தசாஸ்திரத்தை எழுதிய கௌடில்யர் (சாணக்கியர், கி.மு. 350-270) கொற்கைப் பாண்டிய முத்துகளை 'பாண்டிய கபாடக' எனக் குறிப்பிடுகிறார் (*Arthashastra, Chapter 2:32*). இங்கே 'கபாடக' என்ற பதம் முத்துகளைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டிருக்கிறது. 'கபாடபுரம்' என்ற பதத்தை முத்துகள் பெறப்படும் நகரம் என்றும் பொருள் கொள்ளலாம்.

வடமொழி இலக்கியங்கள் குறிப்பிடும் 'கபாடபுரம்' கொற்கை நகரமே. இந்த உண்மையை உணராமல் கபாடபுரம் குமரிக்கண்டத்தில் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

5. இறையனார் அகப்பொருள் உரை, முதற்சங்கம் 4440 ஆண்டுகளும், இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும், கடைச்சங்கம் 1850 ஆண்டுகளும் நடைபெற்றதாகக் குறிப்பிடுகிறது. இதில் குறிப்பிடப்படும் ஆண்டுக் கணக்குகள் இயற்கையாக இல்லை. ஏனெனில், இவை யாவும் 37 இன் 120ஆம், 100ஆம், 50ஆம் இலக்கப் பெருக்கங்கள்:

120 x 37 = 4440

100 x 37 = 3700

50 x 37 = 1850

இவையெல்லாம் இக்கணக்கை வகுத்தவரின்

கற்பனையில் உதித்த காலங்களோ என நம்மை ஐயுறவைக்கின்றன.

இறையனார் அகப்பொருளுரை குறிப்பிடும் மொத்த தமிழ்ச்சங்கங்களின் காலம் 9990 ஆண்டுகள். பேச்சு வன்மை வந்த இன்றைய மனித இனம் (Homo Sapiens Sapiens) தோற்றம் பெற்று 300,000 ஆண்டுகள் ஆகின்றன. இதில் மிக நீண்ட காலம் இவர்கள் காடுகளிலும், கடற்கரைகளிலும் சிறு சிறு குழுக்களாக வேட்டையாடியும், உணவு சேகரித்தும் (HunterGatherers) நாடோடிகளாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வாழ்ந்த நிலப்பரப்பிற்கு விவசாயம் அறிமுகமான பின்னரே அவர்கள் காடுகளை விட்டு வெளியே வந்து, ஆற்றங்கரைகளிலும், ஏரிக்கரைகளிலும் வேளாண்மையை (Agriculture) மேற்கொண்டார்கள். அதன் பின்னரே ஊர்களும், சமூகங்களும், நகரங்களும், நாடுகளும் உருவாயின. அவர்கள் வெவ்வேறு குழுக்களாக, காடுகளில் வேட்டையாடி வந்த காலங்களில் பேசிய பேச்சுவழக்குகள் (Dialects) ஒன்றோடொன்று கலந்து ஒரு பொதுவான மொழி (Common Unified Language) உருவாக பல நூற்றாண்டுகள் பிடித்தது.

இன்றைய அறிவியல் ரீதியான காலக்கணிப்புகளின்படி (Radiometric Dating) வேளாண்மை தமிழகத்திற்கு இற்றைக்கு 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே (இ.மு. 5,000) அறிமுகமாயிற்று. அதன் பின்னரே ஊர்கள் தோன்றின. அங்கே வாழ்ந்த மக்கள் பேசிய பேச்சு வழக்குகள் இணைந்து, பின்னர் தமிழ் 'மொழிவடிவம்' பெற்றது. அதற்குரிய எழுத்து வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே தமிழ்மொழி தரப்படுத்தப்பட்டு (Standardization) பலராலும் எழுதி, வாசிக்கக்கூடிய மொழியாயிற்று.

இன்றுவரை இ.மு. 2,700 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மொழி எழுத்து வடிவங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, 9990 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தின் காடுகளில், வெவ்வேறு குழுக்களாக, வெவ்வேறு பேச்சு வழக்குகளுடன், வேட்டையாடி, உணவு சேகரித்து வாழ்ந்த மக்கள் மத்தியில் தமிழ் ஒரு பொது மொழியாக உருவாகியிருக்க முடியாது. ஆனால், அக்காலகட்டத்தில் திராவிட முன்னோடிப் பேச்சு வழக்குகள் (Archaic ProtoDravidian Dialects) வழக்கில் இருந்தன என்பது உண்மை. இவற்றை இனிவரும் பகுதிகளில் பார்ப்போம்.

லெமூரியாக் கண்டம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய அறிவியல் கண்டுபிடிப்பு சார்ள்ஸ் டார்வினின் படிநிலை வளர்ச்சிக் கொள்கை (Theory of Evolution). இந்தக் கோட்பாடு வெளியானதும் விலங்கியல் துறை புத்துணர்ச்சி பெற்றது. பல ஆய்வாளர்கள் இத்துறையில் ஆர்வம் காட்டினார்கள். பிரித்தானிய விலங்கியல் ஆய்வாளரான பிலிப் ஸ்கிளேட்டர் (Philip Sclater) ஒரு விநோதமான உறவைக் கண்டுபிடித்தார். தொல்காலத்தில் ஆபிரிக்காவிற்கு அருகாமையிலுள்ள மடகஸ்கார் தீவில் வாழ்ந்து அழிந்துபோன லெமூர் (Lemur) வகையைச் சேர்ந்த ஒருவகை ஆதி விலங்கின் படிமங்கள் (Fossils) மடகஸ்கார் தீவிலும், தமிழ்நாட்டின் உதகை மலைச்சாரலிலும் கண்டுபிடிக்கப்பட்டன. அச்சமயம் இவை ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்படவில்லை (பின்னாட்களில் இவை ஆபிரிக்காவிலும் கண்டுபிடிக்கப்பட்டன).

இதைப்பற்றி 1864ஆம் ஆண்டில் 'மடகஸ்காரின் பாலூட்டிகள்' (The Mammals of Madagascar) என்ற தலைப்பில் 'The Quarterly Journal of Science' என்ற அறிவியல் இதழில் ஆய்வுக்கட்டுரை எழுதிய ஸ்கிளேட்டர், மடகஸ்கார் தீவுக்கு 100 மைல் தொலைவில் உள்ள ஆபிரிக்காவில் காணப்படாத இந்த லெமூர்களின் எச்சங்கள் தென்னிந்திய மலைகளில் காணப்படுவதற்கான காரணம், முன்னொரு காலத்தில் மடகஸ்காரும் இந்தியாவும் இணைக்கப்பட்டிருந்தமையே ஆகும் எனக் கருதினார். இந்த இரு நாடுகளையும் இணைத்திருந்ததாக அவர் கற்பனை செய்த நிலத்திற்கு அந்த லெமூர் விலங்கின் பெயரால் 'லெமூரியா' என்ற பெயரையும் கொடுத்தார் (Sclater, Philip, 1864: pp. 215-219).

(ஸ்கிளேட்டர் 1864இல் இந்தக் கருத்தியலை முன்வைத்த காலத்தில், இந்தியாவும் மடகஸ்காரும் ஒரு காலப்பகுதியில் ஒன்றாக இணைந்திருந்ததை அறிந்திருக்கவில்லை. அந்தப் புவியியல் கண்டுபிடிப்பும், கோட்பாடும் 1915ஆம் ஆண்டில்தான் முன்வைக்கப்பட்டது.)

இதைத் தொடர்ந்து 1896ஆம், 1904ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயரான வில்லியம் ஸ்காட் எலியட் (William ScottElliot) எழுதிய இரு நூல்களை இணைத்து 1925ஆம் ஆண்டில் 'அட்லாண்டிஸினதும் இழந்த லெமூரியாவினதும் கதை' (The Story of Atlantis and the Lost Lemuria) என்ற நூல் வெளியிடப்பட்டது. ஸ்காட் எலியட் ஒரு விஞ்ஞானியோ, புவியியல் ஆய்வாளரோ, தொல்லியல் ஆய்வாளரோ அல்ல. அவர் ஒரு பிரம்மஞானி (Theosophist). அவரது நூல் இலண்டனிலும், அடையாறு தியோசொபிக்கல் சொசைட்டியால் சென்னையிலும் வெளியிடப்பட்டது. தமிழகத்தில் ஆங்கிலம் தெரிந்தவர்களிடையே இந்நூல் பிரபலமடைந்தது.

இந்த நூலில் அவர் மனித இனத்தின் ஐந்து மில்லியன் ஆண்டுக் கால வரலாற்றைப் பதிவு செய்திருந்தார். அவர் இந்த வரலாற்றை ஆய்வுகள் மூலம் பெறவில்லை; தனது உள்ளுணர்வுகள் மூலமாகப் பெற்றதாகக் கூறியிருந்தார். அவர், மனித இனம் தோற்றம் பெற்றது இந்த லெமூரியாவில்தான் என்ற கருத்தை முன்வைத்தார். இந்த மனிதர்கள் 4-5 மீட்டர் உயரமானவர்கள். இவர்களுக்கு மூன்றாவதாக ஒரு கண் தலையின் பின்பக்கத்தில் இருந்தது என்றும், இவர்களால் ஒரே சமயத்தில் முன்னாலும் பின்னாலும் பார்க்க முடியும் என்றும், அவர்களது கால்களின் அமைப்பினால் முன்னால் எவ்வளவு சுலபமாக நடக்க முடியுமோ, அவ்வளவு சுலபமாகப் பின்பக்கமாகவும் நடக்க முடியும் என்றும், விலங்கியல் பரிணாமத்திற்கு ஒவ்வாத அபத்தமான கருத்துகளைக் கூறியிருந்தார்.

"A curious fact to note is that when the race first attained the power of standing and moving in an upright position, they could walk backwards with almost as great ease as forwards. This may be accounted for not only by the capacity for vision possessed by the third eye, but doubtless also by the curious projection at the heels which will presently be referred to."

— ScottElliot, W. (1925), The Story of Atlantis and the Lost Lemuria, "The Lost Lemuria" section, p. 23.



'லெமூரியா' என்ற கற்பனைக் கண்டத்தின் பெயருக்குக் காரணமான லெமூர் விலங்கு. இந்தச் சிறு விலங்கு தமிழர்களின் வரலாற்றை எத்தனை பெரும்பாடு படுத்தியிருக்கிறது!

லெமூரியா ஆதரவாளர்கள் இந்த அபத்தங்கள் எதையும் குறிப்பிடாது, 'ஸ்காட் எலியட்' என்ற ஆங்கில ஆய்வாளரது கருத்துப்படி, இந்தியாவுக்குத் தெற்கில் ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்ததாக எழுதினார்கள். இந்த எழுத்துகள் அறிவியல் பதங்களைப் பயன்படுத்திய ஆய்வுக் கட்டுரைகள் போன்று தோற்றமளிக்கும். ஆனால், அறிவியல் ஆதாரமற்ற கருதுகோள்களை உருவாக்கும் மரபு இவ்வாறுதான் தோன்றியது எனலாம் (ஜெயகரன், சு.கி. 2002: 45-46).

1880களில் லெமூரியா பற்றி ஐரோப்பாவில் உருவான மரபு, பிரிட்டிஷ் காலனி ஆதிக்கக் காலத்தில் இந்தியாவிற்குள் நுழைந்தது. அவ்வாறு புகுந்தபோது அப்போதிருந்த சிலர் இக்கருதுகோளை திராவிடர்களின் தாயகம் பற்றி விளக்கப் பயன்படுத்தினர். ஆரியர்கள் வடக்கிலிருந்து வந்தவர்கள்.

ஆனால், அதற்கு முன்னரே திராவிடர்கள் தெற்கிலிருந்த லெமூரியாக் கண்டத்திலிருந்து புலம்பெயர்ந்து வடக்கே வந்து குடியேறினர் என விளக்கம் தரப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழகத்திலிருந்த சில வரலாற்றாசிரியர்களும், இலக்கியவாதிகளும், கட்டுரையாளர்களும் இந்த மரபையே அறிவியல் ஆதாரம் கொண்ட கொள்கைபோலப் பாவித்தனர். லெமூரியாதான் ஆதிமனித இனத்தின் தாயகம், நாகரிகத்தின் தொட்டில் எனவும், ஆதி மனித இனம் பேசிய முதல் மொழி தமிழே எனவும் கூற முற்பட்டனர். அன்று தழைத்திருந்த அவர்களது நாகரிகம் பின்னர் ஏற்பட்ட பிரளயங்களால் அழிந்துபட்டது என்றனர்.

இந்த மரபுக்கு ஓர் அறிவியல் படிநிலை (Academic Status) கொடுக்கவும் முயன்றனர். ஆதி மனித இனம் தோன்றிய பகுதிகளைப் பிரளயம் அழித்துவிட, தமிழ் மொழி பேசிய இந்த இனம் வடக்கில் குடியேறி சிந்து-கங்கைச் சமவெளி நாகரிகம் மட்டுமின்றி, மொசப்பத்தேமியா, எகிப்து, சீனா, தென் அமெரிக்கா ஆகியவற்றிலும் நாகரிகத்தை உருவாக்கியது, பரப்பியது என்ற கருத்துகளும் இந்த மரபின் வளர்ச்சியில் உருவாக்கப்பட்டன (ஜெயகரன், சு.கி. 2002: 46).

1920களில் தமிழகத்தில் தமிழ் உணர்வு தலைதூக்க ஆரம்பித்தது. தமிழ் ஆர்வலர்களும், இலக்கியக் கல்விமான்களும், வரலாற்று அறிஞர்களும் லெமூரியாதான் கடல்கொண்ட குமரிக்கண்டம் என்ற கருத்தை ஆர்வமுடன் ஏற்றுக்கொண்டார்கள். தேவநேயப் பாவாணர் இக்கருத்தை ஏற்று, இந்தக் குமரிக்கண்டத்தில்தான் தமிழ் மொழி தோன்றியது என தனது தமிழர் வரலாறு என்ற நூலில் கூறினார். பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு என்ற நூலை எழுதினார். வடக்கே இந்தியாவையும், மேற்கே

1981ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் ஆய்வியல் மாநாட்டில் ‘இழந்துவிட்ட குமரிக் கண்டம்’ (Kumari Kandam – The Lost Continent) என்ற தலைப்பிட்ட கட்டுரையை வாசித்த டாக்டர் மு. மகாலிங்கம், கி.மு. 16000, 14058, 9565 ஆகிய ஆண்டுகளில் இக்கடற்பெருக்குகள் (சுனாமி) ஏற்பட்டதாகக் குறிப்பிடுகிறார். ஒரு கடற்பெருக்கு எப்படி ஒரு பிரம்மாண்டமான கண்டத்தை மூழ்கடிக்கும் என்பதற்கான அறிவியல் பூர்வமான விளக்கத்தை அவர் தரவில்லை.


மடகஸ்காரையும், கிழக்கே ஆஸ்திரேலியாவையும் இணைக்கும் முக்கோண வடிவிலான லெமூரியா அல்லது குமரிக்கண்ட நிலப்படங்கள் வெளியிடப்பட்டன.

சிறுவர்களுக்காக எழுதப்பட்டு வெளிவந்த ‘நமது நாடு’ என்ற வரலாற்று நூலில் லெமூரியா பற்றிய இந்தக் குறிப்பு காணப்படுகிறது:

“இந்தியாவின் வரைபடத்தைப் பார்க்கவும். இந்நாட்டின் தென்முனைக்குப் பெயர் கன்யாகுமரி. இதற்குத் தெற்கே பரந்த கடல் உள்ளது. இக்கடலின் பெயர் இந்துமகாக் கடல். நமது பூமி எண்ணற்ற ஆண்டுகளுக்கு முன் உருவாகியது. கடந்த பல்லாயிரம் ஆண்டுகளில் அது பல மாற்றங்களை அடைந்துள்ளது. இப்போது இந்துமகாக் கடல் இருந்த பகுதியில் ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்தது. இதற்கு நாவலந்தீவு என்று பெயர். இந்நிலப்பரப்பை ஐரோப்பியர்கள் லெமூரியா என்றனர். கொண்டவானா என்பது அதற்குக் கொடுக்கப்பட்ட மற்றொரு பெயர். அதன் நடுவில் இருந்த மேரு மலையின் சிகரமே இலங்கைத் தீவு. இன்று எப்படி ஆசியக் கண்டம் உள்ளதோ, அதுபோலவே நாவலந்தீவு அல்லது லெமூரியா வடக்கில் (தெற்கில்?) வியாபித்திருந்தது. நாவலந்தீவில் பல எரிமலைகள் இருந்தன.

இந்த எரிமலைகளின் வெடிப்பால் பல பகுதிகள் அழிந்துபட்டன. அப்போது கன்யாகுமரியை அடுத்து ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்தது. இங்கு வாழ்ந்தவர்கள் கன்னி அல்லது குமரித் தெய்வத்தை வழிபட்டதால் இப்பகுதி குமரிநாடு என அழைக்கப்பட்டது” (கந்தையா பிள்ளை, ந.சி. 1945: பக். 2-3).

1981ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் ஆய்வியல் மாநாட்டில் ‘இழந்துவிட்ட குமரிக் கண்டம்’ (Kumari Kandam – The Lost Continent) என்ற தலைப்பிட்ட கட்டுரையை வாசித்த டாக்டர் மு. மகாலிங்கம், கி.மு. 16000, 14058, 9565 ஆகிய ஆண்டுகளில் இக்கடற்பெருக்குகள் (சுனாமி) ஏற்பட்டதாகக் குறிப்பிடுகிறார். ஒரு கடற்பெருக்கு எப்படி ஒரு பிரம்மாண்டமான கண்டத்தை மூழ்கடிக்கும் என்பதற்கான அறிவியல் பூர்வமான விளக்கத்தை அவர் தரவில்லை. எந்த விஞ்ஞானி இந்த ஆய்வைச் செய்தார் என்பதையோ, எவ்வாறு இந்த ஆண்டுக் கணக்குகளைப் பெற்றுக்கொண்டார் என்பதையோ அவர் குறிப்பிடவில்லை.



வடக்கே இந்தியாவையும், மேற்கே மடகஸ்காரையும், கிழக்கே அவுஸ்திரேலியாவையும் இணைக்கும் முக்கோண வடிவிலான, தமிழறிஞர்கள் கற்பனையில் உருவான, லெமூரிய - தமிழக நிலப்பரப்பு.

நிலஅமைப்பியல் ஆய்வுகள் (Geological Surveys)

பகுதி 2


இந்து சமுத்திரத்தில், இந்தியாவிற்குத் தெற்கே, சமுத்திரத்தின் பெரும் பகுதியை நிறைத்துக்கொண்டு லெமூரியா என்றொரு நிலப்பரப்பு இருந்திருப்பது சாத்தியமா?

சில தீவுகள் கடலினுள் அமிழ்ந்து போவது பற்றி பத்திரிகைகளில் படிக்கிறோம். அதுபோன்று ஒரு பெரிய கண்டம் கடலினுள் மூழ்கிப் போகுமா? இதற்குரிய விடைகளை அறிந்து கொள்வதற்கு நில அமைப்பியல் பற்றிய ஓர் அடிப்படை அறிவு அவசியமாகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரை நமது பூமியைச் சூழ்ந்திருக்கும் நிலக் கண்டங்களும் சமுத்திரங்களும் பூமி உருவான காலத்திலிருந்து அப்படியே இருந்து வந்திருக்கின்றன என்ற கோட்பாடே நிலவியல் ஆய்வாளர்கள் மத்தியில் நிலவி வந்தது.

1915ஆம் ஆண்டில் அல்ஃப்ரெட் வெஜினர் (*Alfred Wegener*) என்ற ஜேர்மனிய நில அமைப்பியல் அறிவியலாளர் 'கண்டங்களினதும் சமுத்திரங்களினதும் தோற்றம்' (*The Origin of Continents and Oceans*) என்ற பூகோளவியல் பற்றிய ஆழமான ஆய்வுநூலை எழுதி வெளியிட்டார். அடுத்து இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளிவந்தது. இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கொண்டிருந்த இந்த நூல் அன்றைய அறிவியலாளர்கள் மத்தியிலும், அறிஞர்கள் மத்தியிலும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.


இப்பூமியானது ஒரு தனியான திடப்பொருள் அல்ல. அதன் மத்தியில் உள்ள எரிகுழம்பின் (*Magma*) மேல் 2900 கிலோமீட்டர் கனதியான 'மான்ரில்' (*Mantle*) எனப்படும் 'நிலஉறை' காணப்படுகிறது. இதன் மேல் 60 முதல் 140 கி.மீ. கனதியான பாறைப் பொருளினால் ஆன 16 பெரிய 'கண்டத்தகடுகள்' (*Tectonic Plates*) பூமிப்பந்தைச் சுற்றி அமைந்திருக்கின்றன.

உலகம் முழுவதிலுமுள்ள கண்டங்களும், சமுத்திரங்களும் இந்த கண்டத்தகடுகளின் மேலே அமைந்திருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டினார் வெஜினர் (*Alfred Wegener, 1966*). இதைத் தொடர்ந்து மேலும் பல பூகோளவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தற்கால ஆய்வுகள், மேலும் நூற்றுக்கணக்கான சிறிய மற்றும் நடுத்தரமான கண்டத்தகடுகள் 16 பெரும் தகடுகளோடு இணைந்திருப்பதை எடுத்துக் காட்டுகின்றன.




பூமியின் நடுப்பகுதியிலிருக்கும் எரிகுழம்பிலிருந்து வெளிவரும் வெப்பச் சலனம் மேலிருக்கும் நிலஉறையான 'மான்ரிலையும்' அதன்மேலுள்ள கண்டத்தகடுகளையும் அசைய வைக்கிறது. இக்கண்டத்தகடுகள் ஒன்றைவிட்டொன்று விலகும்போது அவற்றினூடே பீறிட்டு வெளிவரும் எரிகுழம்பே எரிமலையாக வெடித்து வெளிவருகிறது. இக் கண்டத்தகடுகள் ஒன்றோடொன்று உராயும்போது நிலநடுக்கம் ஏற்படுகிறது.

இற்றைக்கு 300 மில்லியன் (3000 கோடி) ஆண்டுகளுக்கு முன்னர், இப்பூமியின் நிலப்பரப்பு அனைத்தும் ஒன்றாக இணைக்கப்பட்டு இருந்தன. இதற்குப் பஞ்ஜியா என்ற பெயர் கொடுக்கப்பட்டது. பூமியின் வடகோளம் முதல் தென்கோளம் வரை பஞ்ஜியா பரந்திருந்தது. பஞ்ஜியாவின் வடகோளத்திலிருந்த பெருங் கண்டம் 'லொறேசியா' (*Laurasia*) என்றும், தென்கோளத்திலிருந்த மிகப் பெருங் கண்டம் 'கொண்ட்வானா'நிலம் (*Gondwana land*) என்றும் அழைக்கப்பட்டது. பஞ்ஜியாவுக்குக் கிழக்கே இருந்த நெடுங்கடலுக்கு ரெதிஸ் மாகடல் எனப் பெயரிடப்பட்டது.



லொறேசியா என்ற பெருங்கண்டத்திலிருந்து பின்னர் வட அமெரிக்கா பிரிந்துபோக, மிகுதிப் பகுதியிலிருந்து ஐரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்கள் உருவாகின (Dietz, 1970). தென்பெருங் கண்டமான 'கொண்ட்வானா'விலிருந்து இந்தியாஇலங்கை, அவுஸ்திரேலியா, அந்தாட்டிக்கா, ஆபிரிக்கா ஆகிய தேசங்கள் உருவாகின (Trompette, R. 1994).

இற்றைக்கு 200 மில்லியன் (2000 கோடி) ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் நடுவிலிருக்கும் எரிகுழம்பிலிருந்து வெளிக்கிளம்பிய வெப்பம் ஏற்படுத்திய சலனத்தினால் கொண்ட்வானா பெருங்கண்டம் கொஞ்சம் கொஞ்சமாகப் பிளவுபட ஆரம்பித்தது. கொண்ட்வானா பல கண்டத்தகடுகள் ஒன்றோடொன்று இணைந்ததனால் ஏற்பட்ட பெருங்கண்டமாதலால், இத்தகடுகள் பிரிந்து போக ஆரம்பித்தன. இந்தியா ஆபிரிக்காவை விட்டுப் பிரிந்தபோது அதனோடு ஒட்டிக்கொண்டு மடகஸ்கார் தீவும் பிரிந்தது. இலங்கை, இந்தியக் கண்டத்தகட்டிலே இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. மடகஸ்கார் தனியான ஒரு கண்டத்தகட்டிலே இந்தியத் தகட்டோடு ஒட்டிக்கொண்டிருந்தது. பின்னர் மடகஸ்கார் தீவு இந்தியாவிலிருந்து பிரிந்துபோக, இந்தியத் தகடு வடக்கு நோக்கி ஆண்டுக்கு 20 செ.மீ. (ஒரு மில்லியன் ஆண்டுகளில் 200 கிலோமீட்டர்) வீதம் ரெதிஸ் மாகடலில் நகர்ந்தது.




1. தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, மடகஸ்கார், இந்தியா, அந்தாட்டிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களும் நாடுகளும் இணைந்த பெருங்கண்டம் கொண்ட்வானா. இந்நிலப்பகுதிகளின் இன்றைய கரைகள் கூட ஒன்றோடொன்று சரியாக இணைகின்றதும் -

2. முற்காலத்தில் வாழ்ந்த சில உயிரினங்களின் பாறைப் படிவங்கள் இணைந்திருந்த இந்நாடுகளில் காணப்படுவதும் (படம் பார்க்க) - வெஜினரின் 'கொண்ட்வானா' கோட்பாட்டுக்கு வலுச் சேர்க்கிறது.

இந்திய நிலம் மேலே (வடக்கே) நகர்ந்து செல்ல, அதன் பின்னால் மிகுதியிருந்த கண்டத்தகட்டில் கடல் புகுந்து இந்து மாகடல் உருவாயிற்று. இப்படி உலகின் ஒவ்வொரு கண்டமும் சமுத்திரமும் உருவானதை வெஜினர் விஞ்ஞான ரீதியாகவும், பூகோளவியல் ரீதியாகவும், அற்புதமான அறிவியல் (Scientific) வாதங்களோடும் எடுத்துரைத்தார்.

வடக்கு நோக்கி ரெதிஸ் சமுத்திரத்தில் நகர்ந்துகொண்டிருந்த இந்தியக் கண்டத்தகடு 50 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஆசிய (லொறேசிய) கண்டத்தகட்டுடன் பயங்கரமாக மோதியது. ஆசியக் கண்டத்தகட்டின் கீழே புகுந்த இந்தியத்தகடு ஆசியக் கண்டத்தகட்டை மேலே மேலே உயர்த்தித்தள்ள, அதன் மேலிருந்த பாறை மேலே எழுந்து இமயமலை உருவாயிற்று (Van Andel, 1985). இதனால்தான் இன்றும் இமயமலையில் கடற்பிராணிகளின் படிவ எச்சங்கள் காணப்படுகின்றன.




பூமியின் ஆரம்பகாலத்தில் இருந்த முக்கியமான நிலப்பகுதிகளே இன்றுவரை நிலைத்து நிற்கின்றன. இதில் லெமூரியா என்றொரு கண்டத்திற்கான நிலப்பகுதி இருந்ததே இல்லை.

இந்தியக் கண்டத்தகடு இன்றும் ஆசியக் கண்டத்தகட்டினுள் ஆண்டுக்கு 5 செ.மீ. வீதம் செருகிக்கொண்டுதான் இருக்கிறது. இதன் காரணமாகத்தான் இமயத்தின் அடிவார நாடுகளில் நிலநடுக்கம் ஏற்படுகிறது. அடிக்கடி நேபாளத்தில் இடம்பெறும் நிலநடுக்கங்களுக்கும் இக்கண்டத்தகடுகள் ஒன்றின் கீழ் ஒன்று செருகித் தள்ளுவதே காரணமாகும்.

250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பரந்திருந்த பஞ்ஜியா என்ற பெருநிலத்திலிருந்தே இன்றிருக்கும் கண்டங்களும் நிலங்களும் உருவாகியுள்ளன. பஞ்ஜியாவில் லெமூரியாவுக்கு என்றோ, குமரிக் கண்டத்திற்கு என்றோ, ஒரு கண்டத்திற்குரிய நிலம் இருக்கவே இல்லை. ஆனால், பஞ்ஜியாவிலிருந்து

பிரிந்து போன இந்தியாவின் கரையோர நிலங்கள் - சில சமயம் 200 கிலோமீட்டர் அகலம் வரையான நிலங்கள் - பனியுக இறுதியில் கடலினுள் அமிழ்ந்து போயின. அவற்றில் ஒன்று குமரிநாடாக இருந்திருக்க வேண்டும். பலப்பல தலைமுறைகளுக்கு முன்னர் இடம்பெற்று, மக்களின் மரபு ஞாபகங்களிலிருந்த (Race Memories) இச்சம்பவத்தை சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டிருக்கலாம்.



கடந்த 250 மில்லியன் ஆண்டுகளாக பூமியில் ஏற்பட்ட புவி அமைப்பியல் மாற்றங்கள்

ஒரு காலத்தில் இந்தியா மடகஸ்கார் தீவோடு ஒட்டிக்கொண்டிருந்து பின்னர் பிரிந்து போனதை வெஜினர் வெகு தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார். எனவே மடகஸ்காரிலும் இந்தியாவிலும் ஒரே வகையைச் சேர்ந்த புராதன விலங்குகளும், தாவரங்களும் இருப்பது சாத்தியமாகிறது. வெஜினரைத் தொடர்ந்து வந்த பல பூகோள ஆய்வாளர்கள் அவரது கோட்பாடுகள் அசைக்கமுடியாத உறுதியான ஆதாரங்களின் மேல் அமைக்கப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

வெஜினர் முன்வைத்த ஆதாரங்களையும், கோட்பாடுகளையும் ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய அறிஞர்களும், விஞ்ஞானிகளும் லெமூரியா என்றொரு கண்டம் இருந்திருக்கச் சாத்தியமில்லை என்பதை உணர்ந்து ஸ்கிளேட்டரின் கருத்தை நிராகரித்தார்கள். இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் மேல்நாடுகளில் லெமூரியா கருத்து வலுவிழந்து போய் மக்கள் நினைவினின்றும் மறைந்து போயிற்று. ஆனால் தமிழகத்தில் பல அறிஞர்கள் இவ்விஞ்ஞான முடிவுகளைப் பற்றி அறிந்திருந்தும் அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருந்தார்கள்.

இவர்களில் அரசியல் சார்புடையோர் செய்த தவறான பிரசாரங்களாலும், எழுதிய தவறான நூல்களாலும், தவறான பாடப்புத்தகங்களாலும் மாணவர்களுக்குத் தவறான தமிழர் வரலாறு போதிக்கப்பட்டது. நாவலர் நெடுஞ்செழியன் எழுதிய நூலில் "லெமூரியா அல்லது குமரிக்கண்டத்தில் ஆரம்பமான திராவிட நாகரிகமே தென்னிந்திய நாகரிகம். அது இங்கிருந்து மொகஞ்சதாரோவுக்கும் ஹரப்பாவுக்கும் பரவி அங்கிருந்து சென்று சுமேரிய நாகரிகமானது. அங்கிருந்தே அரேபியா, எகிப்து, கிரேக்கம், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு நாகரிகம் பரவியது. ஒவ்வொரு திராவிடனும் இதை நினைக்கும்போது பெருமையால் பூரிப்படையாமல் இருக்க முடியாது." எனக் குறிப்பிடுகிறார்.

தேவநேயப் பாவாணரின் சீடரான மதிவாணன் 1970-80களிலும் லெமூரியா பற்றியே பேசிக்கொண்டிருந்தார். அவர் 1981இல் தமிழக அரசு வெளியிட்ட தமிழரின் தோற்றம் பற்றிய மெய்விளக்கப் படத்திற்கு (Documentary Film) வசனம் எழுதியிருந்தார். இன்றைய ஆய்வுகள் காட்டும் பூகோள, நிலவியல், அறிவியல் ஆதாரங்களை விடுத்து பாவாணர், அப்பாத்துரை போன்றோரின் அதீத மொழிப்பற்றினால் உணர்ச்சிபூர்வமாக எழுதப்பட்ட நூல்கள் சான்றுகளாக முன்வைக்கப்பட்டன. இவை தமிழர் வரலாறாக பாடநூல்களில் இடம்பெற்றன. இம்மாதிரியான எழுத்துகளால் உண்மையான தமிழர் வரலாறு திரிபடைந்து புராண, இதிகாச, கற்பனைக் கதைகளாக இன்று கூறப்படுகிறது.

அறிவியல் வளர்ச்சியடையாத ஒரு காலத்தில் பூமி தட்டையானது என்றும், அதற்கு மேலும் கீழும் விண்ணுலகும், பாதாள உலகும் இருப்பதாகவும் அக்கால அறிஞர்கள் எழுதிவைத்தார்கள். அறிவியல் வளர்ச்சியடைந்த போது எவ்வாறு பூமி உருண்டையானது என்பதை அறிந்து புராதன கருத்துகள் நிராகரிக்கப்பட்டனவோ, அதுபோன்று நவீன விஞ்ஞான ஆய்வுகள் காட்டும் ஆதாரபூர்வமான உண்மைகளை ஏற்றுக்கொள்வதே அறிவுடமை ஆகும்.

இந்து சமுத்திர அடிநில ஆய்வுகள் (Survey of the Indian Ocean Floor)

அகில உலக நிறுவனமான சர்வதேச விஞ்ஞான ஆலோசனைச் சபையின் (International Council for Science) ஓர் அங்கமான சர்வதேச சமுத்திர ஆய்வு நிர்வாகக்


குழு (Scientific Committee on Oceanic Research: SCOR) அமெரிக்க தேசிய விஞ்ஞான நிறுவனத்தின் (National Science Foundation) பொருளுதவியோடு 1960ஆம் ஆண்டிலிருந்து உலகம் முழுவதிலுமுள்ள முக்கியமான பெருங்கடல்களை ஆய்வு (Survey) செய்து வந்திருக்கிறது. இக்குழு 1962ஆம் ஆண்டிலிருந்து இந்து சமுத்திர கடலடி ஆய்வை மேற்கொண்டது. இவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் பெறுபேறுகள் 'International Indian Ocean Expedition: SCOR Report 1964' என்ற அவர்களது அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதன் பின்னர் அமெரிக்க செய்மதி ஆய்வுகள் (Satellite Surveys) 1990களில் இந்து சமுத்திரத்தின் பல பகுதிகளை விண்வெளியிலிருந்து படம்பிடித்து வெளியிட்டிருக்கின்றன. சமீப காலங்களில் 'இந்து சமுத்திர ஆய்வுக் குழு' (Indian Ocean Research Group: IORG) மற்றும் 'Catlin Seaview Survey' ஆகிய நிறுவனங்களும் இந்து மாகடல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்திருக்கின்றன. இவர்களில் எந்த நிறுவனத்தினரும் இந்து மாகடலின் அடியில் இந்தியாவுக்குத் தெற்கே ஒரு நிலப்பரப்பு அமிழ்ந்திருப்பதைக் காணவில்லை. அதே சமயம் தென்கிழக்கு ஆசியாவில் - இந்து மாகடலின் அடியில் - அமிழ்ந்துபோன தென்கிழக்கு ஆசியாவின் சுண்டா பெருநிலப்பரப்பு இனங்காணப்பட்டிருக்கிறது.

இந்து சமுத்திர ஆய்வுகளில், நிலக் கண்டங்களில் மலைத்தொடர்கள் இருப்பது போல சமுத்திரத்தினுள்ளும் மலைத்தொடர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1. மாலைதீவு-லட்சத்தீவு-சாகோஸ் மலைமுகடு 2. குமரிக்கடல் மலை 3. தொண்ணூறுபாகைகிழக்கு கடல் மலைமேட்டுத் தொடர் (1. The ChagosLaccadive Ridge 2. Comorin Seamounts and 3. The NinetyEast Ridge) என்பன இந்தியாவிற்குச் சமீபமாக இந்து சமுத்திரத்திலுள்ள கடல் மலைகளும், கடல் மேடுகளுமாகும். இந்தியாவுக்குத் தொலைவிலிருக்கும் முக்கியமான இந்து சமுத்திர கடலடி பூகோள அமைப்புகள்: மத்திய மேடு (Central Ridge), தென்கிழக்கு இந்து சமுத்திர மேடு (Southeast Indian Ridge), கேர்குலன் மலைப்பீடம் (Kerguelen Plateau) என்பன. இந்து சமுத்திரத்தின் தென் துருவப் பகுதியில் அவுஸ்திரேலியாவிலிருந்து தென்மேற்காக 3,000 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு கடலடி எரிமலையின் உச்சியே இந்த கேர்குலன் மலைப்பீடம் (SCOR Report, 1964; James R. Heirtzler, 1977; Verzbitsky, E.V. 2003).

கடைசியாக நடைபெற்ற பனியுகத்தின் முடிவில் சமுத்திர மட்டம் மேலெழுந்தபோது தென்கிழக்கு ஆசியாவில் இந்து சமுத்திரம் மூடிக்கொண்ட 'சுண்டா பெருநிலம்' (படம்). மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், ஜாவா, சுமாத்ரா, போர்ணியோ ஆகிய தீவுகள் இப்பெருநிலத்தின் மூழ்கிப் போகாது விட்ட, நீரின் மேலே தெரியும் நிலப்பகுதிகள். இவை அமிழ்ந்த காலத்தில் இந்தியக் கரையோர நிலங்களும் நீரில் மூழ்கி, இலங்கை இந்தியாவிலிருந்து தனிநாடாகப் பிரிந்தது.

இந்தியாவுக்குத் தெற்கே இந்து சமுத்திரத்தின் அடியிலுள்ள கடல் மேடுகள் (Ocean Floor Ridges of the Indian Ocean near Peninsular India)



இந்தியாவுக்குத் தெற்கே இந்து சமுத்திரத்தின் அடியிலுள்ள கடல் மேடுகள். அமெரிக்க நாஸா நிறுவனம் வெளியிட்ட செய்மதி ஆய்வுகள் காட்டும் இந்து சமுத்திர அடிநிலப்படம். OCEAN FLOOR RIDGES OF THE INDIAN OCEAN NEAR PENINSULAR INDIA - NASA

1. மாலைதீவுலட்சதீவுசாகோஸ் மலைமுகடு 2. குமரிக்கடல் மலை 3. தொண்ணூறு பாகைகிழக்கு கடல்மலைத் தொடர் 4. வலது பக்கம்: சுண்டா தீவுகளைக் கொண்ட கடலடிமேடை.


1. The ChagosLaccadive Ridge 2. Comorin Seamounts 3. The NinetyEast Ridge, the longest underwater ocean floor ridge 4. Sunda Archipelago shelf on the upper right. Picture Courtesy: National Aeronautics and Space Administration (NASA).

லட்சத்தீவுமாலைதீவுசாகோஸ் மலைமுகடு (The ChagosLaccadive Ridge): இந்திய மேற்குக் கடலில் கேரள நாட்டுக்கரையில் ஆரம்பித்து தெற்கு நோக்கி இந்து சமுத்திரத்தில் படரும் பாறைத் தொடர். இது படிப்படியாக வளர்ந்த பவளப்பாறைத் திட்டுகள் (Coral Atolls) ஆகும். இவையே இன்று கடலுக்கு மேல் வரிசையாகத் துருத்திக்கொண்டிருக்கும் தீவுக் கூட்டங்களான லட்சத்தீவுமாலைதீவுக் கூட்டங்கள். சாகோஸ் மலைமுகடானது இந்தியக் கண்டத்தகடு வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சமயம், ஆபிரிக்க கண்டத்தகட்டுடன் இணைந்த போது

ஏற்பட்ட பிளவில், பூமியின் அடியிலிருந்து கிளம்பி வந்த எரிகுழம்பு, அக்கண்டத்தகடுகளினூடே பெருகி வந்து நீரின் குளிர்மையால் பாறையாகி உண்டான மலைத்தொடர் ஆகும். இதை 'றியூனியன் வெப்பக் குறியிடம்' (*Réunion Hotspot*) என்று அழைப்பர் (*Avraham, Z.B. et al. 1977; Verzbitsky, E.V. 2003; Stow, D.A.V. 2006; McClanahan et al. 2000; Kuiter, R.H. 2014*).

குமரிக்கடல் மலைமேடு (*Comorin Seamounts*): குமரிமுனைக்குச் சமீபமாக இந்து சமுத்திரத்தினடியில் 400 கிலோமீட்டர் வரை நீளமான மலைமேடு காணப்படுகிறது. பனியுகக் காலத்தில் கடல் மட்டம் கீழே சென்ற பொழுதில், இம்மலைமுகட்டின் ஒரு பகுதி குமரிமுனையின் நிலத்தொடராக வெளியே தெரிந்திருக்கும் (*SCOR Report, 1964*).

தொண்ணூறுபாகைகிழக்கு கடல் மலைமேட்டுத் தொடர் (*Ninety East Ridge*): இந்து சமுத்திரத்தினடியிலுள்ள மிக முக்கியமான தொடர் மலைமேடு இது. தீர்க்க ரேகை (*Meridian*) 90 பாகைக்கு சமாந்தரமாக வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவினருகிலிருந்து தெற்கு நோக்கி - தென்கிழக்கிலுள்ள இந்து சமுத்திர மேட்டை நோக்கி (*Southeast Indian Ridge - SEIR*) - நேர்கோட்டில் சுமார் 5,000 கிலோமீட்டர் (3,100 மைல்) தூரத்திற்கு நீண்டு கிடக்கும் உலகின் மிக நீளமான இந்தக் கடல் மலை, 1962ஆம் ஆண்டு சமுத்திர ஆய்வின் போது முதன்முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டது (*SCOR Report, 1964*).




சர்வதேச சமுத்திர ஆய்வு நிர்வாகக் குழு (Scientific Committee on Oceanic Research: SCOR) வெளியிட்ட இந்து சமுத்திர அடிநிலப்படம். இதில் குமரிக்கண்டம் என்றொரு கண்டம் இருந்ததற்கான கடல்மேடு காணப்படவில்லை. அதே சமயம் சுண்டாமாநில கடல் மேடு காணப்படுகிறது. Picture Courtesy: American Association for the Advancement of Science (AAAS).

இந்தியக் கண்டத்தகடும், அவுஸ்திரேலிய கண்டத்தகடும் ஒன்றோடு ஒன்று பொருந்தும் நேர்கோட்டில் இந்த தொண்ணூறுபாகைகிழக்கு கடல் மலைமேட்டுத் தொடர் அமைந்திருக்கிறது. இக் கண்டத்தகடுகள் இணைந்த காலத்தில், இந்தியத் தகடு வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தமையால், பூமியின் அடியிலிருந்து கிளம்பி வந்த எரிகுழம்பு அக்கண்டத்தகடுகளினூடே பெருகி வந்து நீரின் குளிர்மையால் பாறையாகி மலைத் தொடராகியிருக்கிறது என்பதே பூகோளவியலாளர்கள் தரும் விளக்கம் (*Weiss, D. et al. 1993: 57-89*).

இருபதாம் நூற்றாண்டின் பூகோளவியல் ஆய்வுகளிலும் சரி - கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக மேற்கொள்ளப்பட்ட இந்து சமுத்திர ஆய்வுகளிலும் சரி - அமெரிக்கச் செய்மதி ஆய்வுகளிலும் சரி - லெமூரியா என்றோ, குமரிக் கண்டம் என்றோ இந்து சமுத்திரத்தில் ஒரு கண்டம் இருந்திருப்பதற்கான சாத்தியம் எதுவுமே இல்லை என்பது அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. இத்தனை ஆய்வுகளின் பின்பும் - ஆதாரங்களின் பின்பும் - நம்மவரில் ஒருசாரார் 'லெமூரியா' பற்றியும், குமரிக் கண்டம் பற்றியும் பேசுவதையும் எழுதுவதையும் போன்ற தவறான செயல் எதுவுமே இருக்க முடியாது.


பனிப்படிவு யுகங்கள் (Ice Ages)

நமது பூமியில் ஏற்படும் தட்பவெப்ப மாற்றங்களால் பூமி உருவான காலத்திலிருந்து இதுவரை நான்கு பனிக்கல்ப காலங்கள் (*Ice Epochs*) நடைபெற்றிருக்கின்றன. இறுதியான பிளிஸ்டோசீன் (*Pleistocene Ice Epoch*) கல்பத்தில் மட்டும் 17 பனிப்படிவு யுகங்களும் (பனியுகங்களும்) 17 பனியிடைக் காலங்களும் இடம்பெற்றன. கடந்த 12,000 ஆண்டுகளாக நாம் 17ஆவது பனியிடைக் காலத்தில் (*Interglacial Period*) வாழ்ந்துகொண்டிருக்கிறோம் (*Interglacial Period*).



பனிப்படிவு யுகக் காலத்தில் காணப்பட்ட உலகம்: பனிப்படிவு யுகத்தின்போது பூமியின் மத்திய பகுதியிலிருந்த நிலங்களில் மட்டுமே மனிதர்கள் வசிக்கக்கூடியதாக இருந்தது. வடக்குப் பகுதியிலிருந்த நிலங்களும், தென் பகுதியிலிருந்த அந்தாட்டிக்கா கண்டமும், கடல்களும் பனிப்பாளங்களால் மூடப்பட்டிருந்தன. பனிப்பாளங்கள் 2 கிலோமீட்டர் உயரத்திற்குப் படிந்திருந்தன. பிரித்தானியா முழுவதும் பனிப்பாளங்களின் கீழே அமிழ்ந்திருந்தது. கடல் மட்டம் 135 மீட்டருக்குக் கீழே இருந்தமையால் கண்டங்களின் கரைகள் இன்றிருப்பதைவிட 200-300 கி.மீட்டர் வரை பரந்திருந்தன. இலங்கை தென்னிந்தியாவின் நிலப்பகுதியாக இருந்தது. கிழக்காசிய நாடுகள் நிலத்தொடர்பால் ஒன்றாகிவிட்டிருந்தன. பனிப்படிவு யுகங்களில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பூமியின் மேற்பாகம் குளிர்ந்துபோய் வட, தென் பூகோளப் பகுதிகளில் பல மைல் உயரத்திற்குப் பனி உறைந்து பனிமலைகளாக இருந்தன. பூமியின் மத்திய பகுதியை அண்டிய நாடுகளைத் தவிர மற்றைய கண்டங்களில் ஆறுகள் உறைந்து நிலங்களில் பனிக்கட்டி பாளம் பாளமாகப் படர்ந்திருந்தது. கடல் நீர் ஆவியாக மேலே போய் பின்னர் மழையாக வந்தபோது பெரும்பாலான நிலங்களில் இந்த மழை பனிக்கட்டிகளாக உறைந்து போயிருந்ததனால், கடல் மட்டம் இன்றிருப்பதைவிட 120 மீட்டர் முதல் 135 மீட்டர் வரை தாழ்வாக இருந்தது.

இற்றைக்கு முன் (இ.மு.) 115,000 ஆண்டு முதல் இ.மு. 12,000 ஆண்டு வரை நீடித்த கடைசிப் பனியுக காலத்தில் - கடல் மட்டம் இன்றிருப்பதைவிட 120 முதல் 135 மீட்டர் வரை குறைவாக இருந்த காலப்பகுதியில் - இலங்கை இந்தியாவோடு இணைக்கப்பட்ட நிலப்பகுதியாக இருந்தது. இந்நிலத்தின் நீளஅகலப் பரிமாணங்களும் இன்றிருப்பதைவிடப் பெரியதாகவே இருந்தன. இந்நிலம் 'இந்தியஇலங்கை' என்ற ஒரே நிலமாகும் (Peter Clark 2002; Rohling 1998).



இற்றைக்கு 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்னிந்திய நிலப்பகுதி. இன்றையகால நிலவரை அதனுள் காட்டப்பட்டிருக்கின்றது. குமரிமுனையின் கீழ் நீண்டுகொண்டிருப்பது அன்றைய குமரிநாடு. நன்றி: டர்ஹாம் பல்கலைக்கழக புவியியல் துறை.

இற்றைக்கு 19,000 ஆண்டுகளுக்கு முன்னர் கடைசிப் பனியுகம் உச்ச நிலையை அடைந்திருந்த சமயம் - கடல் மட்டம் இன்றிருப்பதை விட 135 மீட்டர் தாழ்வாக இருந்த காலப் பகுதியில் - உலகம் முழுதிலும் நாடுகளெல்லாம் இன்றிருப்பதைக் காட்டிலும் மிகவும் பெரியனவாக இருந்தன. இந்தியக் கடலோரம் இந்தியத் தீபகற்பத்தைச் சுற்றிவர பல கி.மீ. தொலைவிற்கு அகன்றிருந்தது. குமரிமுனைக்குத் தெற்கே குமரிநாடு 200 கிலோமீட்டர் வரை பரந்திருந்ததாகக் கணிப்பிட முடிகிறது.

இ.மு. 12,000 ஆண்டு முதலாக - கடைசிப் பனியுகம் முடிவிற்கு வந்த காலத்திலிருந்து உலகைச் சூழ்ந்திருந்த பனிப்படலங்கள் உருகி, கடல் மட்டம் சிறிது சிறிதாக மேலெழுந்த போது - இந்தியஇலங்கையின் கரையோர நிலப்பகுதிகள் சிறிது சிறிதாக கடலினுள் அமிழ்ந்து போயின. குமரிநாடு சிறிது சிறிதாகக் கடலினுள் அமிழ ஆரம்பித்தது. குமரிநாட்டை முற்றாகக் கடல் கொள்ள இ.மு. 12,000 முதல் இ.மு. 7,000 வரை ஐயாயிரம் ஆண்டுகள் எடுத்திருக்கும். அமிழ்ந்த நிலம் அழிந்தோ, கரைந்தோ போய்விடவில்லை. அந்த நிலம் இன்னும் குமரிமுனையை அண்டி இந்து சமுத்திரத்தினடியில் இன்றும் கடல் மேடாகக் (Sea Mount) கிடக்கிறது.

இ.மு. 7,000 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த இலங்கை, இந்தியாவிலிருந்து தனித் தீவாகப் பிரிந்து போயிற்று. அடுத்த ஆயிரம் ஆண்டுக்காலப் பகுதியில் - பனிப்படலங்கள் உருகி ஆறுகள் வழியாகப் பெருகி வரும் நீரினாலும், மழையினாலும் ஏற்படும் கடல் பெருக்கமும், கடல் நீர் ஆவியாகப் போவதால் ஏற்படும் கடல் மட்டக் குறுக்கமும் சமநிலை அடைந்த நேரத்தில் - கடல் மட்டம் சீர்நிலை அடைந்தது.

தமிழகத்தில் விவசாயம் அறிமுகமாகி, பெருங்கற் பண்பாடு உருவாகி, சங்ககாலம் தோன்றுவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் பனியுக இறுதியில் நிகழ்ந்தது 'குமரிநாடு' கடலில் அமிழ்ந்த நிகழ்வு. மக்களின் மரபு ஞாபகங்களிலிருந்த (Race Memories) இச்சம்பவம் பாரம்பரியமாகப் பரிமாறப்பட்டு சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதே அறிவியல் ரீதியான எனது விளக்கம்.

'தமிழர்கள் ஓர் இன மக்கள்; அவர்கள் தமிழ்நாட்டின்

தொல்குடிகள்; அவர்கள் தோன்றியது இந்த மண்ணில்தான்' என்ற கோட்பாடும் - 'தமிழர்கள் மொசப்பத்தேமியாவிலுள்ள சுமேரியாவிலிருந்து மொகஞ்சதாரோ, ஹரப்பா வழியாகத் தமிழகத்திற்கு வந்தவர்கள்' என்ற கோட்பாடும் - தொடரும் இயல்களில் ஆய்வு செய்யப்படும்.

உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்

ALLCHIN, BRIDGET & RAYMOND (1996): The Rise of Civilization in India and Pakistan, Cambridge University Press, Cambridge.

ANDEL, VAN T.H. (1985): New Views on an Old Planet: Continental Drift and the History of the Earth, Cambridge University Press, Cambridge.

ARAVAMUTHAN, T.G. (1930): The Oldest Account of the Tamil Academies, Journal of Oriental Research, 4: 183-201, 283-317.

AVRAHAM, Z.B., Zvi Ben, Bunce, E.T. (1977): Geophysical Study of the ChagosLaccadive Ridge, Journal of Geophysical Research, Vol. 82, Issue B8, pp 1295 -1305.

BILLINGS, MARLAND (1990): Structural Geology, Prentice Hall of India Ltd., New Delhi.

CHILDE, V. GORDON (1950): 'The Urban Revolution' in Town Planning Review, Vol 21(1).

CLARK, PETER U. & MIX, ALAN C. (2002): Ice Sheets and Sea Levels of The Last Glacial Maximum; Quaternary Science Reviews 21 (13): 17.

DIETZ, R.S. and HOLDEN (1970): Reconstruction of Pangaea: Breakup and Dispersion of Continents; Journal of Geophysical Research 75(26).

DOUG MACDOUGALL (2004): Frozen Earth: The Once and Future Story of the Ice Ages; California: University of California Press.

ELHERS, JURGEN (2022): The Ice Age - 2nd Ed., Springer, Germany.

ELLIOT, SCOTT W (1925): The Story of Atlantis and the Lost Lemuria, The Theosophical Publishing House Ltd., London.

EMMILIANI, CESERE (1995): Planet Earth, Cambridge University Press, Cambridge.

HEIRTZLER, JAMES R. (1977): Indian Ocean Geology and Biostratigraphy, American Geophysical Union., USA.

IMBRIE, J., IMBRIE, K.P. (1979): Ice Age: Solving the Mystery, Enslow Publishers, NJ.

KAUTILYA: ARTHASHASTRA (Transl. R. SHAMA SASTRY) (1924): University of Mysore., Mysore.

KERR, R.A. (1994): Ancient Tropical Climates: Science 263.

KRÜGER, TOBIAS. (2013): Discovering the Ice Ages: International Reception and Consequences for a Historical Understanding of Climate, (Transl. from the German by Anne M. Hentschel), Brill, Leiden.

KUITER, RUDIE H., GODFREY, TIMOTHY (2014): Fishes of the Maldives, Atoll Editions.

McCLANAHAN, T.R., SHEPPARD, C.R.C., OBURA, D.O. (2000) Coral Reefs of the Indian Ocean, Oxford University Press, UK.

MAHALINGAM, N. (1981): Kumari Kandam The Lost Continent, In Proceedings of the Fifth International Confer enceSeminar of Tamil Studies, Madurai., Edited by M. Arunachalam, International Association of Tamil research, Madras.

RAMASWAMY, SUMATHI (1999): Catastrophic Cartogra phies: Mapping the Lost Continent of Lemuria, University of California Press, California, USA.

RAMASWAMY, SUMATHI (2004): The Lost Land of Lemuria, University of California Press Ltd., London.

ROHLING, E.J. et al. (1998): "Magnitudes of Sealevel lowstands of the past 500,000 years"; Nature 394, pp 162-165.

ROHLING, E.J.et al. (2003): "Sealevel fluctuations during the last Glacial Cycle"; Nature 423, pp 853-858.

SCOR REPORT (1964): International Indian Ocean Expedition Report, by Scientific Committee on Oceanic Research, International Council for Research and National

Science Foundation, USA.

STANLEY, STEVEN M. (1999): Earth System History, Freeman and Company, New York.

STOW, D.A.V. (2006): Oceans: An Illustrated Reference, University of Chicago Press, Chicago.

THIAGARAJAH, SIVA (2011): Peoples and Cultures of Early Sri Lanka, Tamil Information Centre, Kingston, UK.

TORSVIK, TROND H., COCKS, L., ROBIN, M. (2017): Earth History and Palaeogeography, Cambridge University Press, Cambridge.

TROMPETTE, R.: Transl. CARROZI, A.V.: (1994) Geology of Western Gondwana (2000500 Ma)

VERZBITSKY, E.V. (2003): Geothermal Regime and Genesis of the NinetyEast and ChagosLaccadive ridges, Journal of Geody namics, Vol. 35 (3).

WEGENER, ALFRED (1924): Transl. by J.G.A. SKERL: The Origin of Continents and Oceans, 3rd Ed., E.P. Dutton, New York.

WEGENER, ALFRED: Transl. JOHN BIRAM (1966): The Origin of Continents and Oceans: 4th Revised Ed., Courier Dover Publ., New York.

WEISS, D. et al. (1993): The Influence of Mantle Plumes in the Generation of Indian Oceanic Crust, Geophysical Mono graph 70: 57-89.

அப்பாத்துரை, கா. (1941): குமரிக்கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

அறவாணன், க.ப. (1984): தமிழரின் தாயகம், Interna tional Institute of Tamil Studies, Madras.

அன்பழகன் (1975): தமிழ்க் கடல் அலைஓசை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

இறையனார் அகப்பொருள் நக்கீரர் உரை (2006): பவானந்தம் பிள்ளை பதிப்பு. பாரி நிலையம், சென்னை.

கந்தையா பிள்ளை, ந.சி. (1945): நமது நாடு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

கந்தையா பிள்ளை, ந.சி. (1946): தமிழர் யார், முத்தமிழ் நிலையம், சென்னை.

கணபதி (1984): தமிழக வரலாறு, மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை.

கனகசபை, வி. (1973): ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

சாமிநாதையர், உ.வே. (1980): சிலப்பதிகார மூலமும் ஆடியார்க்கு நல்லார் உரையும், ஜுபிலி வெளியீடு, சென்னை.

சிதம்பரனார், அ. (1948): தமிழ்ச் சங்கங்களின் வரலாறு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

சிலப்பதிகாரம் (1997): புலியூர்க்கேசிகன் பதிப்பு, பாரி நிலையம், சென்னை.

சுப்பிரமணியன், கா. (1982): சங்ககாலச் சமுதாயம், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

செல்லம், வே.தி. (1955): தமிழக வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

புறநானூறு (1996): புலியூர்க்கேசிகன் பதிப்பு, பாரி நிலையம், சென்னை.

மதிவாணன் (1977): இலெமுரியா முதல் அரப்பா வரை, சேகர் பதிப்பகம், சென்னை.

தேவநேயன், ஞா. (1944): திராவிடத் தாய், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

தேவநேயன், ஞா. (1981): தமிழனின் பிறந்தகம், ஐந்தாம் உலகத்தமிழ் விழா மலர், மதுரை.

நெடுஞ்செழியன், இரா (1953): மறைந்த திராவிடம், மன்றம் பதிப்பகம், சென்னை.

நெடுஞ்செழியன், க. (1989): இந்தியப் பாண்பாட்டில் தமிழும் தமிழகமும், மனிதன் பதிப்பகம், திருச்சி.

ஜெயகரன், சு.கி. (2001): குமரிக் கண்டம் - லெமூரியா குழப்பம், காலச்சுவடு - 33: 52-57.

ஜெயகரன், சு.கி. (2002): குமரி நிலநீட்சி, காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில்.

கிழக்கிலங்கை இலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசமாகும். இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் பண்பாட்டுக்கூறுகள் மட்டக்களப்புத் தமிழர்களின் பண்பாட்டுக்கூறுகளோடு பல விடயங்களில் ஒத்ததாகவும் வேறுப்பட்டும் காணப்படுவதோடு பிற முஸ்லிம் பிராந்திய கலாசார கூறுகளிலிருந்தும் தனித்துவமாகக் காணப்படுகின்றன. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் கிழக்கின் பூர்வ பண்பாட்டுக்கூறுகளினை தமது மத நம்பிக்கைக்கு ஏற்ப மதத்தின் அடிப்படைக்கூறுகளில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பண்பாட்டுக்கட்டமைப்பை தகவமைத்துக் கொண்டனர். இப்பண்பாட்டுப் மறுமலர்ச்சியின் கூறுகளினை கலந்துரையாடுவதாக 'கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டசைவுகள்' என்ற இக்கட்டுரைத்தொடர் அமையும். இதன்படி, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தாய்வழி குடிமரபு முறை, முஸ்லிம் குடிவழிமரபில் உள்ள மாற்றங்கள், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள் அவற்றில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், பாரம்பரிய பரிகார முறைகள், உறவுமுறைகள் மற்றும் குடும்ப அமைப்புகள், உணவுமுறைகள், ஆடை அணிகலன்களும் மரபுகள், வீடுகள் மற்றும் கட்டடக்கலை மரபுகள், பாரம்பரிய அனுஷ்டானங்கள், கலைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தத் தொடர் பேசவுள்ளது.

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் ஆடைப் பண்பாட்டசைவுகள்: சாறணும் புடவையும்

எம். ஐ. எம். சாக்கீர்

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையைச் சேர்ந்த முஹம்மட் சாக்கீர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் பெற்றவர் தற்போது மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக பணிபுரிகிறார்.

வரலாறு, பண்பாட்டு ஆய்வு, நாட்டாரியல், ஆவணப்படுத்தல் போன்ற துறைகளில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 21வது வயதில் 'சம்மாந்துறை பெயர் வரலாறு' என்ற ஆய்வு நூலை வெளியிட்டார், சம்மாந்துறை பெரியபள்ளிவாசல் வரலாற்று ஆவணப்படம் போன்றவற்றிற்கு வசனம் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் இன்கிலாப் சஞ்சிகை மீளுருவாக்க குழுவின் முன்னோடியான செயற்பாட்டாளரான இவர் 2019 இல் வெளியான சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும் எனும் நூலின் பதிப்பாசிரியர்களிலொருவரும் கட்டுரையாசிரியருமாவார். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, கலை, பண்பாடு, முதலான கருபொருள்களில் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.



அறிமுகம்



இலங்கைச் சோனகர் ஆடை அணிகலன் - 20ஆம் நூற்றாண்டு. மூலம்: en.wikipedia.org/wiki

ஆடை அணிகலன்கள் எப்போதும் பண்பாட்டு அடையாளாகவும் சமூக வேறுபாடு, மதப்பின்னணி ஆகியவற்றினை பிரதிபலிக்கும் குறியீடுகளாகவும் காணப்படுகின்றன. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டசைவுகளில் அவர்களது ஆடைப்பண்பாடும் தனித்துவமானதொன்றாகும். இது இஸ்லாமிய நெறிகள், அரேபியபாரசீக முஸ்லிம் உலக வழக்குகள், தமிழர் பண்பாடு, தென்னிந்திய, மற்றும் ஐரோப்பியக் குடியேற்றத் தொடர்புகள் ஆகியவற்றின் தாக்கத்தையும் கொண்டுள்ளது. இக்கட்டுரை இந்த மரபை அதன் ஆரம்பகால வடிவங்கள் முதல் சமகாலம் வரை ஆய்வு செய்கிறது. ஆடைகளுடன் பிற அணிகள், ஆபரணங்கள், மருதாணி (மெஹந்தி) அலங்காரம், சிகை அலங்காரம் மற்றும் ஆடை நடைமுறைகள் ஆகியவை தொடர்பாக ஆராயப்படுகின்றன. கிழக்கு முஸ்லிம்களின் ஆடைப்பண்பாடு பக்தி, பாலினம், வர்க்கம் மற்றும் பிராந்திய அடையாளம் ஆகியவை தொடர்ந்தும் தன்னுள் பரிணமித்துக் கொண்டிருக்கின்ற ஒரு மாறும் குறியீட்டுப் புலம் (Semiotic Field) என்று குறிப்பிடலாம்.



சாறண் வகைகள்

'குறியீட்டுப் புலம்' என்பது அர்த்தம் செறிந்த குறியீடுகளின் வலையமைப்பாகும். ஆடையைப் பொறுத்தவரை, சாரம் அல்லது சல்வார் கமீஸ், புடவை அல்லது அபாயா, தங்கம் அல்லது வெள்ளி, தலை மூடப்பட்டிருப்பது அல்லது மூடப்படாமல் இருப்பது போன்ற ஒவ்வொரு தேர்வும், அதை அணிபவரைப் பற்றிய தகவலொன்றைக் கூறும் ஒரு குறியீடாகச் செயல்படுகிறது. கிழக்கு முஸ்லிம்களின் ஆடை என்பது உடலை மறைப்பது என்பதைத் தாண்டிய சமூக மற்றும் தார்மீகச் (Moral) செய்திகளால் குறியிடப்பட்டுள்ளது. உதாரணமாக, அலங்காரமற்ற ஒரு வெள்ளைச் சாரம் என்பது வெறும் மனிதன் எளிமையைப் பின்பற்றும் நோக்கத்தைக் குறிக்கிறது. ஒரு கருப்பு அபாயா, இஸ்லாமிய தூய்மைவாதக் கருத்தியலின் தாக்கத்தினையும், தொடர்பையும் குறிக்கிறது.

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் ஆடை அணிகலன் பண்பாடு இஸ்லாமிய மார்க்கத்தின் செல்வாக்குடன் அராபிய, பாரசீக, வடஇந்திய வர்த்தகர்கள், சுதேச தமிழர்கள் மற்றும் பிற்காலத்தில் செல்வாக்குச் செலுத்திய காலனித்துவச் சக்திகளுக்கிடையிலான பல நூற்றாண்டுகாலத் தொடர்புகளைப் பிரதிபலிக்கும் ஒரு தனித்துவமான கலாசாரத் தொகுப்பாகக் காணப்படுகின்றது. ஆடைப்பண்பாடும் நிலையற்றதாகவும் காலாகாலம் பரிணாமமடைவதுமாகக் காணப்படுகின்றது. ஆடைகளோடு ஒப்பிடுகையில் ஆபரணங்களின் பரிணாமம் குறைந்தளவே நிகழ்ந்துள்ளது. குறிப்பாக தங்க நகைகள் செல்வம், அந்தஸ்து மற்றும் தாயாதிச் சொத்துகளின் நீடித்த அசையும் அடையாளங்களாகச் செயல்படுகின்றன. பொதுவாக இவையிரண்டும் வெளிப்படையாக அவதானிக்கக்கூடிய பண்பாட்டுக் கூறுகள் என்ற சிறப்புடன் தலைமுறை தலைமுறையாக சமூகத்தின் அடையாளங்களைச் சுமந்து வருகின்றன.

இலங்கை முஸ்லிம்கள், வரலாற்றுரீதியாக தீவின் கரையோரங்களிலும் நாட்டின் மத்திய பகுதியிலும் குடியேறிய இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றிய மற்றும் தழுவிக் கொண்ட சுதேச தமிழ், சிங்கள, அராபிய, பாரசீக, இந்திய, தூரகிழக்காசிய பூர்வீகங்களின் கலவையாக உள்ளனர். இந்தப் பண்பாட்டுத் திரட்சி தமிழ் மொழியைப் புழங்கு மொழியாகவும், அரபு மொழியை சமய மொழியாகவும் கொண்ட தனித்துவமானதொரு வாழ்வொழுங்கைப் படிப்படியாக உருவாக்கியது. அதேவேளை கிழக்கிலங்கை முஸ்லிம்கள் தங்களது இஸ்லாமியப் பாரம்பரியத்தையும் அவர்களின் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலையும் பிரதிபலிக்கும் புதியதொரு தனித்துவமான கலாசார அடையாளத்தை உருவாக்கினர். அவர்களின் ஆடை அணிகலன்

மரபுகள் பல்வேறு அடுக்குகளைக் கொண்ட பண்பாட்டு நினைவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன: அராபியத் தாக்கங்கள் அடையாளத்தை வலியுறுத்துவதோடு, தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் அழகியல், ஆடை வடிவமைப்பு மற்றும் அலங்காரங்களைக் கட்டமைக்கின்றது. அதேவேளை காலனித்துவ சக்திகளின் தாக்கங்கள் புதிய மூலப்பொருட்கள் மற்றும் வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளன.


கிழக்கிலங்கைச் சோனகர்களின் ஆடைப்பண்பாட்டை வடிவமைப்பதில் முதலாவது அம்சமாக அமைவது இஸ்லாமியப் போதனைகளாகும். இஸ்லாமிய வரையறைகளின்படி மறைக்கப்பட வேண்டிய உடலின் பாகங்கள் 'அவ்ரத்' என்றழைக்கப்படுகின்றன. இது ஆண்கள் தொப்புள் முதல் முழங்கால்கள் வரை மறைப்பதையும், பெண்கள் முகம், கைகளைத் தவிர முழு உடலையும் மறைப்பதையும் கட்டாயமாக வலியுறுத்துகின்றது. சில சிந்தனைப் பிரிவினர் முகம் மற்றும் கைகளையும் மறைத்துக் கொள்கின்றனர். வரலாற்று ரீதியாக இவ்வரையறைகளைப் பேணிய ஆடைகள் சேலை முதல் அபாயா வரை பல்வேறு பரிணாமங்களை அடைந்துள்ளன. எனவே கிழக்கிலங்கை முஸ்லிம்களின் உடை என்பது கலாசார மரபுரிமையின் அம்சமாக மட்டுமன்றி மார்க்கப் பக்தியின் உணர்வுபூர்வமான உருவகமாகவும் உள்ளது. இது அன்றாடம் பயன்படுத்துகின்ற உடையை அறம், நவீனம், சமூகச்சார்பான பரந்த இஸ்லாமிய இலட்சியங்களுடன் இணைக்கிறது.

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் ஆடை அணிகலன் பண்பாடு வெறும் அலங்காரச் செயல்பாடாக அமையாமல் பண்பாட்டுப் பிரதிகளின் வெளிப்பாடாகவும் செயல்படுகின்றது. செல்வாக்கு, செல்வம், பரம்பரை, மார்க்கப்பற்று, பக்தி ஆகியவற்றின் மதிப்புகளைப் பிரதிபலிக்கின்றது. அதே நேரத்தில் உலகமயமாக்கல், புலப்பெயர்வுகள் மற்றும் சீர்திருத்தவாத இஸ்லாமிய இயக்கங்கள் மூலம் புதிய மாற்றங்களைப் பரிசோதனை செய்து வருகின்றது. இக்கட்டுரை ஆடை வடிவ மாற்றங்கள், அவற்றின் சௌகர்யம், பிற சமூகத்தவர்களின் கண்ணோட்டம், அரசியல் குறித்த விவாதங்களையும் தீர்ப்புகளையும் அதிகம் கலந்துரையாடாமல், அவர்களின் ஆடைப்பண்பாட்டு நினைவுகளின் தொகுப்பாகவே அமையும். ஏனெனில் வரலாறு நெடுகிலும் சமூகத்தின் உள்வீட்டுக் கலந்துரையாடல்களுடாகவே இவ்வாடை வடிவ மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இக்கட்டுரை வாய்மொழி வரலாறுகள், பிராந்திய உள்ளூர் வரலாறுகள், நிழற்படச் சேகரிப்புகள் மற்றும் இலங்கை முஸ்லிம்கள் மற்றும் தெற்காசிய முஸ்லிம் ஆடை மரபுகள் பற்றிய இரண்டாம் நிலைத் தரவுகளினூடாக அணுகப்படுகின்றது.

கிழக்கிலங்கை வட்டார வழக்கில் ஆடை என்பது: 'உடுப்பு', 'உடுதுணி', 'பொடவை' (புடைவை), 'சீல' (சீலை), 'உடுமானம்', 'உடுபொடவ', 'உடுமணி' எனச் சந்தர்ப்பத்திற்கு ஒப்ப பலவாறாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆடையற்ற நிலையான நிர்வாணம் என்பது: 'உரியாணம்', 'வறகான்', 'வறான்', 'வெறும்மேல்' என்றும் வட்டார வழக்கில் வழங்கப்படுகின்றது.


நெசவு மற்றும் தையல் பண்பாடு



சோனக வியாபாரி - 18ஆம் நூற்றாண்டின் பிற்கூறு. மூலம்: ImagesofCeylon

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் ஆடைப்பண்பாட்டில் நெசவு பிரதானமான விடயமாகும். ஆரம்பகாலம் தொட்டே முஸ்லிம்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். வரலாற்றுக் காலம் தொட்டே இது நிகழ்ந்து வருகின்றது.

அதேவேளை, பேருவளையைச் சேர்ந்த பெரிய முதலி மரைக்காயர் குடும்பம் அறுநூறு ஆண்டுகளுக்கு மேலாக கண்டிய அரசவைக்கு ஜரிகைகளை இறக்குமதி செய்து கொடுத்து வந்தமை பற்றிய அலக்ஸான்டர் ஜோன்ஸ்டனின் குறிப்புகளைப் பற்றி றவூப் ஸெயின் குறிப்பிட்டுள்ளார் (2012). மேலும், முஸ்லிம் வர்த்தகர்கள் மூலமாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நெசவுத் தொழிலாளர்களைக் கொண்டு வந்தமை பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் உள்ளன. அதேபோல், கிழக்கிலங்கையின் மருதமுனை, காத்தான்குடிப் பிரதேசங்களிலும் இந்நெசவுப் பாரம்பரியம் நீடித்து வருகின்றது.



மாட்டு வண்டிலில் வியாபாரம் செய்யும் சோனகர் - 19ஆம் நூற்றாண்டின் முற்கூறு.
மூலம்: *Vintge Postcards of Ceylon.*

கிழக்கில் தையல் தொழில் பல முஸ்லிம் பெண்களின் குடிசைத் தொழிலாக உள்ள அதேவேளை தொழில்முறைத் தையல் கலைஞர்களாக பல முஸ்லிம் ஆண்களும் தொழில் செய்து வருகின்றனர். அதேபோன்று துணி, தைத்த ஆடை வர்த்தகத்திலும் முஸ்லிம் வர்த்தகர்கள் ஆரம்பகாலம் முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆண்கள் உடை

கிழக்கிலங்கை முஸ்லிம் ஆண்களின் ஆடையைப் பொறுத்தவரை, ஆரம்பகாலத்தில் இருந்தே கீழாடையாக கைத்தறியால் நெசவு செய்யப்பட்ட சாரத்தையும், மேலாடையாக கைகளற்ற சட்டையையும் பயன்படுத்தியுள்ளனர். தலையில் தொப்பி அணிவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். வெளியில் செல்லும் போது வயதானவர்கள் சால்வை அணிவதும், வேலைகள் செய்யும் போது தலைப்பா கட்டுவதும் வழக்கமாக இருந்துள்ளது.



இலங்கைச் சோனகர் ஒருவரின் ஆடை அமைப்பு. மூலம்: *colombotelegraph*

அதேவேளை, மேலைத்தேயக் கல்வி நிலையங்களில் படித்தவர்கள் சாரத்துடன் சட்டை, கோட் அணிந்தனர். 1960களுக்குப் பின்னர் முஸ்லிம் ஆண்கள் அலுவலகப் பணிகளுக்குச் செல்வது அதிகரிக்கத் தொடங்கியதும், நீளக்காற்சட்டை அணிவதும், நீளக்கைச் சட்டையின் பயன்பாடும் அதிகரிக்கத் தொடங்கியது. இது பின்னர் கௌரவமான ஆடையாகக் கருதப்பட்டதால், மணமகனின் கூறை ஆடையாகக் கோட் அணிவது பிரபல்யமடையத் தொடங்கிற்று.

இதுதான் ஆடை என்ற கட்டாயம் முஸ்லிம்களிடத்தில் இருந்ததில்லை. எனினும், அவர்கள் இஸ்லாமிய வரையறைகளுக்குள் அவற்றைப் பேணிக்கொண்டனர். மார்க்கக்கல்வி கற்றவர்களும் உபன்யாசகர்களும் மத்தியகிழக்குப் பாணியிலான தோப்பா, குப்பா, தலைப்பாகை, தொப்பி, சால்வை என்பவற்றையும் வடஇந்தியப் பாணியிலான ஜுப்பாக்களையும் அணிந்து வந்துள்ளனர்.

சாரம், சாறண், சாரங், சரம்

சாறண் என்பது ஆண்கள் இடுப்பைச் சுற்றி அணியும் ஆடையாகும். இது பக்கவாட்டில் மூட்டப்பட்ட (சேர்த்துத் தைக்கப்பட்ட) குழாய் வடிவுடைய ஆடையாகும். கடந்த தசாப்தம் வரை இலங்கை முஸ்லிம்களின் பிரதான ஆடைகளிலொன்றாகச் சாரம் காணப்பட்டு வந்துள்ளது. தற்காலத்திலும் இது பயன்பாட்டில் இருந்தாலும், இளைய தலைமுறையிடையே பொது நிகழ்வுகளில் சாரம் உடுப்பது குறைவடைந்து வருகின்றது.

இது கிழக்கிலங்கை வழக்கில் 'சாறண்', 'சாறம்' என்று அழைக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் 'கைலி', 'லுங்கி' என்றும் அழைக்கப்படுகின்றது. லுங்கி என்பது 'Lungye' என்ற வங்காள மொழியூடாக அறிமுகமான பர்மிய மொழிச்சொல்லாகும். கைலி என்ற சொல் 'கில்லாத்' என்ற உருது மொழிச் சொல்லில் இருந்து வந்துள்ளது. இச்சொல்லின் மூலம் மலாய் மொழியாகும். தூரகிழக்காசிய பண்டைய வர்த்தகப்பாதையூடாக இச்சொல் இங்கு புழக்கத்திற்கு வந்துள்ளது. கடல் மார்க்க வர்த்தகத்தினூடாக மலாய் மொழிச் சொல்லும், தரைமார்க்கமாக சாரம், லுங்கி ஆகிய சொற்களும் புழங்கு தமிழில் கலந்துள்ளன.



தெருவில் ஒரு சோனகச் சிறுவன் - 1913.
மூலம்: *Postcardman*

ஆரம்பகாலத்தில் இலங்கையில் ஆண்கள் அணிந்த தைக்கப்படாத வேட்டியைப் போன்றல்லாது இது மூட்டப்பட்டிருப்பதோடு, பல்வேறு வண்ணங்களிலும் அலங்காரங்கள் செய்யப்பட்டிருப்பதானது, தைத்துப் பயன்படுத்த மிக எளியதாகவும், அன்றாடப் பயன்பாட்டிற்குச் சௌகர்யமாகவும் காணப்படுகின்றது. சகல தொழில் செய்வோரிடையேயும் இவ்வாடை பெரிதும் வரவேற்பைப் பெற்றுள்ளதோடு தொன்றுதொட்டுப் புழங்கியும் வருகின்றது. இலங்கையின் தமிழ், சிங்கள மற்றும் ஏனைய சமூகங்களிலும் சாறண் பயன்படுத்தப்படுகின்றது. எனினும், இலங்கைத் தமிழர்கள் பட்டு வேட்டியைப் பிரதான நிகழ்வுகளிலும், பண்டிகைகளின் போதும் அணிவர். முஸ்லிம் ஆண்கள் பட்டு அணிவதைத் தவிர்த்து வந்துள்ளனர்.



தமிழரின் வேட்டி

அன்றாடம் அணியும் சாரங்களில் கட்டங்கள் அல்லது கோடுகள் காணப்படும். விசேட தினங்கள், திருமணம், வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகை போன்றவற்றிற்கு வெள்ளைச் சாரங்களை அணிவார்கள். பள்ளிவாசல் தொழுகையில் அலங்காரங்கள் கவனத்தைத் திருப்பும் என்பதாலும், எளிமையான ஆடை என்பதாலும், தூய்மையைக் குறிப்பதாலும் வெள்ளை ஆடைகள் அதிகம் விரும்பப்படுகின்றன. அதேவேளை இது கௌரவத்தினதும், அந்தஸ்தினதும் அடையாளமாகவும் கருதப்பட்டு வந்துள்ளது. முதலாளிமார், உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அணியும் ஆடையாகவும் வெள்ளைச் சாரம் காணப்பட்டுள்ளது.

பிற்காலத்தில் பல்வேறு வகையான சாறண்கள் புழக்கத்திற்கு வந்துள்ளன. முஸ்லிம் ஆண்கள் பட்டு ஆடைகள் அணிவதை ஹராமாகக் கருதுவதால், பட்டுத் தவிர்ந்த பருத்திச் சாறண்களையே பயன்படுத்தி வந்துள்ளனர்.

அக்காலத்தில் புழக்கத்திலிருந்த சாறண் வகைகள்

1. சந்திரப்பாடி - தென்னிந்தியாவின் சந்திரபாடிப் பகுதியில் நெசவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டவை.

2. மருதமுனைச் சாறண் - கிழக்கிலங்கையின் மருதமுனைப் பகுதியில் உற்பத்தி செய்யப்படுபவை. இவை வெள்ளை தவிர்ந்த ஏனைய அடர்நிறங்களைக் கொண்டமைவதோடு, கைத்தறி நெசவிலேயே அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றின் அலங்காரங்கள் பெரும்பாலும் நிறநூல்களின் சேர்க்கைகளால் ஆன நீளவாட்டில் அமைந்த கோடுகளாகக் காணப்படுகின்றன.

3. அருமண மூட்டுச் சாறண் - அருமணம்[1] என்பது பர்மாப் பகுதிக்கான பழைய தமிழ்ப் பெயர். 'லுங்கி' என்ற வார்த்தையும் பர்மிய மொழியில் சாறணைக் குறிக்கப் பயன்படுகின்றது. அருமண மூட்டுச் சாறண் பர்மியச் சாறணாக இருக்கக்கூடும். கிழக்கிலங்கை-பர்மா இடையேயான தொடர்புகளுக்கு எடுத்துக்காட்டாக 'விறுமாண்டவர்' என்ற ஆன்மீக ஞானியின் அடக்கஸ்தலம் நிந்தவூரில் காணப்படுகின்றமையைக் குறிப்பிடலாம்.

4. பழையகாட் சாரம் - இது பழகாட் என்று டச்சுக்காரர் காலத்தில் அழைக்கப்பட்ட பழவேற்காடு பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டு, ஒல்லாந்தர் காலத்திலிருந்து அறிமுகமான சாறணாகும்.

5. பனாரஸ் பட்டு - இது இந்திய வாரணாசியில் உற்பத்தி செய்யப்படும் தங்கநிற இழை வேலைப்பாடுகள் கொண்ட கரைகளையுடைய சாறணாகும்.

இவை தவிர அசில்பட்டுச் சாறண், மோகினிப்பட்டு, பூவரசம்பட்டு, குட்டாப்பட்டுச் சாறண் (மாப்பிள்ளைமார் அணியும் சாறண்), வெண்பட்டுச்சாரம், பட்டறை அடுக்குச்சாரம், போனகரிச்சாறண் என்று பலவகைச் சாறண்கள் புழக்கத்தில் இருந்துள்ளன.



சாறண் வகைகள்

பிற்காலத்தில் இந்தோனேசிய சாறண், வங்காளச் சாறண், தாய்லாந்துச் சாறண் என்பனவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. தற்காலத்தில் பெற்றிக் சாறண்கள், மருதமுனைக் கைத்தறி நெசவுச் சாறண்கள், இயந்திர நெசவுச் சாறண்கள் என்பவை

பெரிதும் புழக்கத்தில் காணப்படுகின்றன. கிழக்கிலங்கை ஆடைப்பண்பாட்டில் மருதமுனைச் சாறண்களுக்கு தனியிடமுண்டு. நெசவோடு தொடர்புடைய பல்வேறு கர்ணபரம்பரைக் கதைகளும் இங்கு நிலவுகின்றன. மருதமுனைச் சாறண்களுக்கு கிழக்கிற்கு வெளியேயும், வெளிநாடுகளிலும், உல்லாசப் பயணிகளிடமும் கேள்விகள் காணப்படுகின்றன. தற்காலத்தில் எம்பிராய்டரி செய்யப்பட்ட மருதமுனைச் சாறண்களும் இளைஞர்கள் மத்தியில் விரும்பி அணியப்படுகின்றன.

சாறண்களை உடுப்பதில் பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. வயல் வேலை, மீன்பிடிப் பணிகளில் ஈடுபடுவோர் சாறணை மடித்துக் கட்டுவர். இதனை 'சாரப்பத்தை' என்று அழைப்பர். மரமேறும் போதும், நீச்சலின் போதும் சாறணைக் கோவணம் போல் கட்டிக் கொள்வார்கள்.

ஆண்களின் பிற ஆடைகளான ஜுப்பா, தோப்பா, தலைப்பாகை, சால்வைகள் போன்றவை தொடர்பில் பின்னர் பார்க்கலாம்.

சாறண் தொடர்பான நாட்டுக்கவி ஒன்று:

"சாறணைக்கட்டிச்

சண்டித்தனம் காட்டுறாயோ

பயப்புட மாட்டன் - ஒண்ட

பல்லொடப்பன் வந்தாயெண்டால்"

பெண்கள் உடை



சம்மாந்துறையில் கிணற்றில் நீரள்ளும் முஸ்லிம் பெண்கள் (நிறமூட்டப்பட்டது) - 1957.
மூலம்: The Times of Ceylon Press

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை, புடவையே பெண்களின் முதன்மையான ஆடையாக இருந்தது. கிழக்கு முஸ்லிம் பெண்கள் அதைச் சோனகர்களின் தனித்துவமான பாணியில் அணிகின்றனர்: புடவை இடுப்பில் செருகப்பட்டு, முன்புறம் பல நேர்த்தியான மடிப்புகள் உருவாக்கப்பட்டு, முந்தானை மார்பின் குறுக்காகவும், பொது இடங்களில் தலைக்கு மேலாக இழுத்துத் தலையையும் முகத்தையும் மறைக்கும் வகையிலும் அணியப்படும். முழு முழங்கையையும் மறைக்கும் நீளமான மேற்சட்டையை அணிவதோடு, இடை வெளிப்படாமல் இருப்பதற்காக முந்தானையைச் சுற்றியும் கட்டுவார்கள். மத்தியகிழக்குப் பாணியிலான அபாயா தோன்றுவதற்கு வெகுமுன்பே இஸ்லாமிய ஹிஜாப் கடமைகளைப் புடவை பூர்த்தி செய்தது.

இலங்கையின் கடந்த தசாப்தங்களின் உள்நாட்டுப் போர் முஸ்லிம்களின் ஆடைப்பண்பாட்டில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.


பாரம்பரியமாக விவசாயம், வர்த்தகம் போன்றவற்றில் அதிக நாட்டம் கொண்டிருந்த முஸ்லிம் சமூகத்தினர் வடக்குக் கிழக்கு யுத்த நிலப்பரப்புகளில் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை உண்டான போது மத்தியகிழக்கிற்குப் பணியாளர்களாக புலம்பெயரத் தொடங்கினர்.

பின்னர் வீட்டுப்பணிப்பெண்களாகப் பணியாற்ற பெண்கள் புலம்பெயர்ந்தனர். இவர்கள் அந்தந்த நாடுகளின் கலாசார ஆடைகளை இசைவாக்கிக் கொண்டதோடு அவற்றையே இலங்கையிலும் பயன்படுத்தத் தொடங்கினர். இது பாரம்பரியமான புடவை, தாவணியை விட சௌகர்யமாகவும், ஒரு தனித்துவ அடையாளத்தைப் பிரதிபலிப்பதுமாகக் காணப்பட்டது.

1980களில் இருந்து, வளைகுடாதிரும்பிய புலம்பெயர்ந்தோர் தளர்வான, முழு நீளக் கருப்பு அபாயாவையும் சதுர ஹிஜாப் தலையாடையையும் அறிமுகப்படுத்தினர்; இவை நகர்ப்புற இளம் பெண்கள் மத்தியில் புடவைக்கு மாற்றீடாக அமைந்தன. ஆயினும், திருமணங்கள் மற்றும் முக்கிய கொண்டாட்டங்களுக்கு, பொன் ஜரிகை விளிம்புகளுடன் கூடிய பட்டுப் புடவை - பெரும்பாலும் அடர் சிவப்பு, பச்சை அல்லது மெஜந்தா வண்ணங்களில் - மணமகளின் கூறையாகக் காணப்பட்டு வந்துள்ளது. இதுவும் பிற்காலத்தில் வடஇந்திய, பாகிஸ்தானிய பாணியிலான காக்ரா சோழி, லெஹெங்கா போன்ற வகையறாக்களாகப் பரிணமித்துவிட்டது.

புடவை, கம்பாயம், சோமன்

புடவை என்பது 6-8 யார் அளவுள்ள நீளமான, உடலைச் சுற்றி மறைக்கும் படி அணியப்படும் ஓர் ஆடையாகும். இது தைக்கப்படாத முழு நீளச் செவ்வக வடிவானது. இதன் அகலம் 1 யார் அல்லது 1.25 யார் அளவாகக் காணப்படும். புடவை என்பது துணியைக் குறிக்கப் பயன்படும் தமிழ்ச் சொல்லாகும். கிழக்கிலங்கை வழக்கில் 'பொடவ' என்று அழைப்பர். வடக்கில் முஸ்லிம் பெண்கள் சேலையை 'சீல' என்றும் அழைப்பதுண்டு.



An illustration depicting a view of Cambay. Credit: Forbes, James; Hooker, William Jackson, Public domain, via Wikimedia Commons.

புடவைகள் புழக்கத்திற்கு வருவதற்கு முன்னர் கம்பாயங்களே ஆடைகளாகப் பயன்பட்டுள்ளன. கம்பாயங்கள் புடவையைப் போன்றவை ஆயினும் தடிப்பமான துணியாலானவை. Cambay அல்லது Khambhat என்று அழைக்கப்படும் இந்தியாவின் குஜராத்தின் புகழ்பெற்ற வணிகத் துறைமுக நகரிலிருந்து பெறப்பட்டதால் இத்துணி வகை கம்பாயம் என்றே அழைக்கப்பட்டுள்ளது.

இவை தடிப்பமான கைத்தறி நெசவு செய்யப்பட்ட பருத்தித் துணிகளாகும். இவற்றின் அச்சு வண்ண அலங்காரங்களும், கட்டங்கள் கொண்ட அலங்காரங்களும் பிரபல்யமானவை. இத்தோடு இவை மலிவானவையாகவும் காணப்பட்டுள்ளன.

அதேபோன்று சோமன்களும் கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்களால் அணியப்பட்டுள்ளன. இவை விலை அதிகமானவை. இவையும் பருத்தியால் ஆனவையாயினும் கரைகளில் பட்டு அலங்காரங்கள் சேர்க்கப்பட்டிருக்கும். இவற்றில் கொசுவம் வைப்பதற்காக இடுப்பில் தளர்வான ஒரு துணிப்பகுதி காணப்படும். சோமன்கள் 9-12 யார் நீளமான ஆடைகள் என்பதால் ஆரம்பகாலப் பெண்கள் இவற்றை அணியும்போது உள்சட்டை அணியாமலேயே அணிந்துள்ளனர்.



பாரம்பரியப் புடவையுடன் கிழக்கிலங்கைப் பெண்கள். மூலம்: தேசிய சுவடிக்கூடம்

ஆரம்பகாலத்தில் கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்கள் ஐந்து வயதிலிருந்தே சேலை உடுத்தத் தொடங்குவார்கள். இது தாவணி எனப்படும். பாவாடை, சட்டை உடுத்தி அதன்மீது சேலை போன்ற சிறிய துணியினால் ஒரு சுற்றுச் சுற்றி உடுப்பது. இவ்வாடை வீட்டு ஆடையாகவும் பேணப்பட்டு வந்துள்ளது.

நான்கு வயதிற்கு முன் ஒரு வகையான சட்டை போடுவார்கள். 19ஆம் நூற்றாண்டின் கடைசிவரை பெண்கள் மேற்சட்டை அணியும் வழக்கம் இருக்கவில்லை. தடித்த சோமன்களை உடுத்து உடல் முழுவதையும் மூடக்கூடிய ஆடைகளை அணிவர்; தலையை மறைத்து முக்காடு போடுவார்கள். அது ஒரு பூரண உடையாகவே இருக்கும். பாவாடை அணியும் வழக்கமும் ஆரம்பத்தில் காணப்படவில்லை. பெண்கள் பாதணி அணியும் வழக்கமும் இருக்கவில்லை. பெண்கள் கைத்தறியில் நெசவு செய்யப்பட்ட சேலைகள், சோமன்கள் ஆகியவற்றை அணிந்தார்கள். வெள்ளைச் சேலை, பச்சை வடச்சீலை (இது சிவப்பு நிறமானது) போன்றவை பிரபல்யமானவை.

இளம்பெண்கள் கம்பாயம், றவிக்கை போன்ற ஆடைகளை விரும்பி அணிந்தனர். இவற்றில் பழவேற்காடு (பழகாட்) துணிகள், கம்பாயம் என்பவை அதிகமாகப் புழக்கத்தில் இருந்தன. இவர்கள் உடலைக் காட்டும் மெல்லிய ஆடைகளை அணிவதில் தயக்கம் காட்டினர். இரு மேற்சட்டைகளுக்கு இரு துண்டுச்

சீலைகளைச் சேர்த்துத் தைத்து அணிபவர்களும் இருந்தனர். அதனை 'போறம் போட்ட சட்டை' என்று அழைக்கின்றனர் என ஏ.ஆர்.எம். சலீம் குறிப்பிடுகின்றார். அதேபோன்று பாவாடை, உள்ளாடை, பிரா (மார்புக் கச்சை), கிமோனா, சல்வார், சட்டை, அபாயா, ஜீன்ஸ், கட்டைப் பாவாடை, மெக்ஸி, நைற்றி (இரவு ஆடை), ரைட்ஸ் (இறுக்க உடை) முதலியவற்றை அக்கால மக்கள் அறிந்திருக்கவில்லை. பிற்காலத்தில் சட்டை, பாவாடை, உள்பாவாடை உள்ளிட்ட பல ஆடைகள் புழக்கத்திற்கு வந்துள்ளன. ஆயினும் மார்க்கட்டு, மார்க்கச்சை எனப்படும் சீலையை மார்பில் கட்டி அணிந்துள்ளதாக முதியவர்களின் செய்திகளில் இருந்து அறிய முடிகின்றது.

ஆரம்பகாலத்தில் அணியப்பட்ட புடவை வகைகள் சிலவற்றைக் கீழுள்ள பட்டியலில் காணலாம்.

விலையுயர்ந்தவையாக இருப்பதோடு மிகவும் மென்மையானவையாகக் காணப்படும். இதனை வசதியானவர்கள் மட்டுமே பாவிப்பர்.

காஞ்சிபுரம் பட்டுச் சேலையானது நான்கு இழைகள் கொண்டு நெய்யப்படுவதால் வலிமையானதாகக் காணப்படுகின்றது. இதில் முழுக்கமுழுக்க மல்பெரி பட்டினால் தயாரிக்கப்படுவதாலும், இதன் வெள்ளிச் சரிகையில் தங்க முலாம் போடப்படுவதாலும், காஞ்சிப்பட்டு மற்ற பட்டுப் புடவைகளைவிட விலை உயர்ந்ததாக இருக்கிறது.

முறிப் புடைவைகள் என்றால் வெள்ளை நிறத்தைக் குறிக்கும் தடித்த தன்மையுடையவை. கோவில் மார்க் குறி, அப்புள் மார்க் குறி, லாடமார்க் குறி போன்ற சிவப்பு நிறமுடைய கனமான புடைவைகளையும் பெண்கள் பாவிப்பர். சிவப்பு நிறப் புடவைகளை

1. ஏழடுக்குச் சோமன்	2. பட்டறை அடுக்குச் சோமன்	3. அரையடுக்குச் சோமன்
4. முக்கடுக்குச் சோமன் (முக்காலடுக்குச் சோமன்)	5. எள்ளு வண்ணச் சோமன்	6. மாட வண்ணச் சோமன்
7. கடுகு வண்ணச் சோமன்	8. பால் வண்ணச்சோமன் (பால் சோமன்)	9. வெண் பட்டுச் சோமன் (பட்டுச்சோமன்)
10. மருத மூட்டுச் சோமன் (மருதமுனைச் சோமன்)	11. அருமணமூட்டுச் சோமன்	12. மஞ்சள் பட்டுச் சோமன்
13. மகிழம்பூப்பட்டு	14. நார்ப்பட்டுச் சோமன்	15. அத்திராசிச் சேலை
16. சுத்த வெள்ளைப் புடவை	17. சந்திரபடிச் சோமன்	18. காரைக்கால் சோமன்
19. தோம்புச் சேலை	20. கருக்குப்புணி	21. மூங்கில் பட்டு
22. மோகினிப் பட்டு – மங்கிலிப்பட்டு	23. கல்கத்தாப் பட்டு	24. பஞ்ச வர்ணப் பட்டு
25. வெள்ளைச்சேலை	26. பச்சவடச்சேலை	27. தோம்புப்புடவை
28. தறுப்பால்புடவை	29. டிங்கிரிப்புடவை	30. வெள்ளமுறிச் சேலை
31. காரிக்கன் சேலை (கைம்பெண்கள், வயதானவர்கள் உடுத்துவது)	32. கோப்பிக்கொட்டைச் சீத்தை	33. வாப்புண்ணாச்சீத்தை
34. சட்டின்சீத்தை	35. சல்லாச்சீலை	36. பட்டயசாரி
37. காஞ்சிபுரம்பட்டு	38. காசுமீரப்பட்டு	39. ஒயில்

இவற்றில் மருதமுனைச் சோமன் என்பது பெரும்பாலும் கைத்தறி நெசவு செய்யப்பட்ட சிவப்பு நிறமுடைய தடித்த சேலையாகும். பால்முட்டுச் சோமன் என்பது வெள்ளை, சிவப்பு நிறமுடையது. அருமணமூட்டுச் சோமன் சிவப்பு உட்பட பல வண்ணங்களிலும் காணப்பட்டது. காரக்கால் சோமன் சிவப்பு நிறமானது. இந்நிறத்தைப் பச்சவடம் என்றும் அழைப்பர். எள்ளுவண்ணச் சோமன் சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களில் காணப்படும். மோகினிப்பட்டு என்பதை மங்கிலிப்பட்டு என்றும் சொல்வார்கள். இவை

பச்சை வெட்டு, பச்சவடம் என்றும் அழைப்பர். பச்சை நிறத்தை வெல்லக்கூடிய கரும் சிவப்பு நிறமுடையதாக இருப்பதால் பச்சவெட்டு, பச்சவடம் எனப் பெயர் பெற்றிருக்கலாம். எள்ளு வண்ணம், மாட வண்ணம் என்ற பெயர்களிலும் அக்காலத்தில் சேலைகள் பாவனையில் இருந்துள்ளன. இந்த வண்ணங்களில் சாரங்களும் மாப்பிள்ளைமார்களால் பாவிக்கப்பட்டு வந்துள்ளன. குடாப்பட்டு, நார்ப்பட்டு, சேலம் பட்டு என்பனவற்றில் சாரங்களும் சால்வைகளும் மாப்பிள்ளைமார்களால் பாவிக்கப்பட்டன.

சேலைகளின் பாவனை பற்றிப் பல நாட்டார் கவிகளும் கிழக்கிலங்கையில் புழக்கத்தில் உள்ளன.

கொச்சிப் பழத்தை
குறுக்கால அறுத்தது போல்
பச்சவட சோமனுக்கு
பழுதுவந்த மாயமென்ன?
கொச்சிப் பழத்தை
குறுக்கால வெட்டினது போல்
பச்சவட சீலை உன்
பால்முலைக்கு ஏற்றதுகா.
நானுடுத்துப் போட்ட
நங்குசிங்குப் பட்ட
நாயுடுத்துப் போகுதிண்டு
நான் திரும்பிப் பாத்தேனா
மச்சி மனது மெத்த
மதிப்பான பால்சோமன்
அச்சிக்கி வாங்கிவாறன் - இனிக்
கவலையென்ன வேறுனக்கு
கடலழகி மடலழகி
காசுமீரப் பட்டழகி
வாழை மடலழகி - புள்ள
வாழாம ஏனிரிக்காய்
அச்சிப் பெருநாளைக்கி
அத்திராசிச் சேலைக்கி
சாயமூட்டி பாய்வித்து - நான்
சட்டியில சேத்தகாசி கொஞ்சம்
படுவாங்கரையில
பத்தேக்கர் செஞ்சிரிக்கி
சோமன் பட்டு சேலை வாங்க - எண்ட
சொந்தமகள் செய்னம்புக்கு
பட்டுப் பொடவையில
பொட்டுப் பொற குத்தினாப் போல்
சித்தரிசிப் பல்லழகி - இப்ப நீ
சிரிச்சதொண்டும் போதுமகா
மாமிட பொட்டகத்தில்
மகிழம்பூப்பட்டெடுத்து
கொலைச்சி மடிச்சுடுக்க - நான்
கொழந்த முதல் காத்திருந்தேன்



பாரம்பரியப் புடவையுடன் கிழக்கிலங்கைப் பெண்கள். மூலம்: தேசிய சுவடிக்கூடம்

முஸ்லிம் பெண்கள் புடவை உடுத்தும் போது இரண்டு முறைகளில் உடுத்துவார்கள்.

1.முன் முந்தானை - முன்முந்தாணி. இடுப்பைச் சுற்றிக் கட்டப்பட்ட புடவையின் முந்தானைப்பகுதி முன்பக்கமாக மார்புப்பகுதியை மறைத்து, பின்னர் முதுகையும் தலையையும் மறைத்து, முந்தானை நுனி மீண்டும் முன்பக்கம் வரும்படி உடுத்துவது.

2.பின்முந்தானை - இதை 'தடுக்கு மடித்து உடுத்தல்' என்றும் வழங்குவர். இவ்வாறு புடவை உடுத்துபவர்கள் புடவையின் இரு பக்கமும் ஒரே மாதிரியான அலங்காரங்கள் காணப்படும் புடவைகளையே தேர்ந்தெடுப்பார்கள். ஏனெனில் புடவை உடுத்துவதற்காக சேலை இடுப்பில் சுற்றப்பட்டு வலது பக்கம் சொருகப்பட்டு, பின்னர் எதிர்த்திசையில் புடவை திருப்பப்பட்டு முந்தானை

புடவையின் தலையை மூடும் பகுதி முகதலை அல்லது மோதலை எனப்படும். இதில் அலங்காரங்கள் செறிவாகக் காணப்படும். இதனை தலையை மூடப் பயன்படுத்தும்போது அது முக்காடு என்று அழைக்கப்படுகின்றது. இந்த முந்தானை நுனியில் காசு, நாணயங்களை முடிந்து முடிச்சுப் போடும் வழக்கமும் கிழக்கிலங்கைப் பெண்களிடம் காணப்பட்டுள்ளது.

மார்பை மறைத்து தலையை மூடக் கொண்டு செல்லப்படும்.

3.மடிப்புகளுடன் புடவை உடுத்தும் எதிர் உடுத்து முறையும் இளம்பெண்களால் உடுத்தப்பட்டு வந்துள்ளது.

புடவை உடுத்தும் முறைகள் கிழக்கிந்தியப் பெங்காலிப் பாணியிலான முறை என்று ஆய்வாளர் ஆஸிப் ஹுஸைன் (2011) குறிப்பிடுகின்றார். இந்தியச் சேலை உடுத்தும் முறைகளில் விகச்சா, சகச்சா என்ற இரு முறைகள் காணப்படுவதாகவும், இவற்றில் இரண்டு கால்களுக்கும் நடுவாக சேலையைக் கொண்டு செல்லாது இடுப்பைச் சுற்றி மட்டுமே கட்டப்படும் விகச்சா முறையிலான பாணியினையே இலங்கைப் பெண்களும் கடைப்பிடிப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

புடவையின் தலையை மூடும் பகுதி முகதலை அல்லது மோதலை எனப்படும். இதில் அலங்காரங்கள் செறிவாகக் காணப்படும். இதனை தலையை மூடப் பயன்படுத்தும்போது அது முக்காடு என்று அழைக்கப்படுகின்றது. இந்த முந்தானை நுனியில் காசு, நாணயங்களை முடிந்து முடிச்சுப் போடும் வழக்கமும் கிழக்கிலங்கைப் பெண்களிடம் காணப்பட்டுள்ளது. அதேபோல சேலையின் இடுப்பு மடிப்பை பைபோன்று அமைத்துக் கொள்வதை பறி என்றும் அழைப்பர். இதற்குள்ளும் பணத்தைப் பாதுகாப்பாக வைத்திருப்பர்.

புடவைகள் தனி நிறப் புடவைகளாகவும், அலங்காரங்களுடைய புடவைகளாகவும் காணப்பட்டுள்ளன. அலங்காரங்களில் விலங்குகள் இடம்பெறுவது பொதுவாகத் தவிர்க்கப்பட்டிருக்கும். புள்ளிகள், கோடுகள், பூக்கள், மாங்காய், வழுதிலங்காய், பிறை, கிளிச்சொண்டு, மயிலிறகு, இலை, ஓரிதழ், ஈரிதழ், மூவிதழ், நாலிதழ், ஐவிதழ் பூக்கள், கொடியலங்காரம், அச்சுப்பூக்கள், வட்டங்கள் போன்றவை பெரும்பாலும் காணப்படும். இவை தனிநபர் விருப்பங்களுக்கேற்ப தேர்வு செய்யப்படுவதுண்டு. எள்ளுவண்ணச் சோமனில் எள்ளு நிறத்தில் சிறிய புள்ளிகள் அலங்காரங்களாகக் காணப்படும். கடுகு வண்ணச் சோமனில் எள்ளு வண்ணச் சோமனை விட மிகச்சிறிய புள்ளிகள் கொண்ட அலங்காரங்கள் பரவலாகக் காணப்படும். சந்திரப்பாடிச் சோமனில் பிறை அலங்காரங்கள் காணப்படும். மஞ்சள்பட்டுச் சோமன், வெண்பட்டுச் சோமன் என்பவை தனிநீளங்களில் காணப்படும் நீளமான புடவைகளாகும். முக்கடுக்குச் சோமன் என்பது மூன்று அடுக்கு அலங்காரங்களைக் கொண்டது. இது பொதுவாக மணப்பெண்களுக்குக் கூறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மூங்கில்பட்டுப் புடவையில் மூங்கில் அலங்காரங்கள் காணப்படுவதோடு, பஞ்ச வர்ணப்பட்டுப் புடவையில் மூன்று வெவ்வேறு வர்ண அலங்காரங்கள் காணப்படும்.

தற்காலத்தில் தொண்ணூறுகளுக்குப் பிறகு பிறந்தவர்களில் பெருமளவானோர் சல்வார் கமீஸ், அபாயா போன்ற தைத்த ஆடைகளையே பிரதானமாக வெளியரங்க ஆடையாகப் பயன்படுத்தி வருகின்றனர். இவை தொடர்பாகப் பின்னர் பார்க்கலாம்.

அடிக்குறிப்பு

1. இராகவையங்கார், ரா., தமிழர் வரலாறு 1, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை (1941).

உசாத்துணை மூலங்கள்

1. காதிர், எம்.எச்.ஏ., கல்முனை வரலாறு (2000)
2. சலீம், ஏ.ஆர்.எம்., அக்கரைப்பற்று வரலாறு (1990)
3. சலீம், ஏ.ஆர்.எம்., அக்கரைப்பற்று வரலாறு (1997)
4. றவூப் ஸெயின்., இலங்கை முஸ்லிம்களின் வரலாறு (2012)
5. அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள்
6. ஏறாவூர் வரலாறு (2005), ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்
7. சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும் (2019), சம்மாந்துறை வெளியீட்டுப் பணியகம்
8. https://www.postcardman.net/asia/69-391srilankaastreetarabyoungboypublplateco.html
9. 9. Asif Hussain, Sarandip - An ethnological study of the muslims of Sri Lanka (2011), Neptune Publication

கோப்பி, தேயிலைத் தோட்ட உழைப்பிற்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இலங்கை மலையகத் தமிழர்கள், 200 ஆண்டுகள் கழித்தும் தங்கள் வழிபாட்டு மரபுகளையும், சடங்கு முறைகளையும் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். அவர்களின் சமூக வாழ்வியலில் வழிபாடு அல்லது சடங்கு என்பது வெறும் மத நிகழ்வன்று; அது சமூகத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்தும் உயிர்த்துடிப்புள்ள பண்பாட்டுச் செயல்முறையாகவும் உள்ளது. எனினும், சமகால மாற்றங்களால் இச்சடங்குகள் அருகி வருவதால், அவற்றை ஆவணப்படுத்தும் தேவை உண்டாகின்றது. சடங்குகளை வெறும் வாய்மொழித் தகவல்களாக அல்லாமல், நேரடிச் செயல், இசை, உணர்வியல் ஆகியவற்றின் நிகழ்த்துகை (Performance) வடிவமாகப் புரிந்துகொள்ள, நிகழ்த்துகை ஆய்வு அணுகுமுறை அவசியமாகின்றது. அந்தவகையில் இத்தொடர் 'நிகழ்த்துகை நோக்கில் மலையகத்தின் வழிபாடுகளும், சடங்குகளும்' எனும் தலைப்பில் எழுதப்படுகின்றது. இது வாழ்க்கைச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், கலைகளோடு இணைந்த சடங்குகள் எனப் பல அடுக்குகளில் ஆராயப்படும். நிகழ்த்துகை முறைமைகளை ஆவணப்படுத்துவதன் மூலம், மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளம், வரலாறு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சியாகவும் இது அமையும்.

மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் சடங்குகளும்

மெய்யநாதன் கேதீஸ்வரன்

மெய்யநாதன் கேதீஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளராக பணியாற்றுகின்றார். இவர் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகம் மற்றும் அரங்கியல் துறையில் இளங்கலைமாணிப் பட்டமும், பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் அரங்கக் கலைகள் துறையில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளதோடு, தனது கலாநிதிப்பட்ட ஆய்வை 'பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில்' மேற்கொண்டுவருகிறார். நாடக எழுத்தாக்கம், நடிப்பு, நெறியாள்கை என்ற அடிப்படையில் நாடகச் செயற்பாட்டாளராக பல்வேறு அரச விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் நவீன நாடகம், கூத்து மற்றும் தமிழ் பண்பாட்டு மரபுகள் குறிப்பாக மலையக பாரம்பரிய வாழ்வியல், கலை மற்றும் பண்பாடுகள் பற்றி பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்துள்ளார். சகதிப்புமுக்கள் இவரது நாடகப்பனுவல்களின் தொகுப்பு ஆகும்.



அறிமுகம்

சக்தி வழிபாடு மனித நாகரிகத்தின் ஆதிகாலம் தொட்டே நிலவி வரும் ஒரு தொன்மையான வழிபாட்டு முறையாகும். பெண்வழிச் சமுதாய அமைப்பின் தொடர்ச்சியாகத் தோன்றிய இத்தாய் தெய்வ வழிபாட்டின் முதன்மையான வடிவமாக மாரியம்மன் வழிபாடு திகழ்கிறது. பிராமணீய சம்பிரதாயங்களோ, வேத மந்திரங்களோ இன்றி எளிய மக்களின் தாயாக, இயற்கையின் பிரதிபிம்பமாக விளங்குவதால் மாரியம்மனை 'திராவிட தெய்வம்' என்றும் அழைப்பர். பிரித்தானியப் பேரரசுக் காலத்தில் தமிழக மக்கள் உலகின் பல நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த போது, தங்களின் இதய தெய்வமான மாரியம்மனையும் உடன் அழைத்துச் சென்றனர். அந்த வகையில், இலங்கையின் மத்திய மலைநாட்டிற்குத் தேயிலை, கோப்பித் தோட்டத் தொழிலாளர்களாக வந்த தமிழக மக்களின் வாழ்வோடும் வரலாற்றோடும் மாரியம்மன் வழிபாடு இரண்டறக் கலந்துள்ளது.

கங்காணிகளின் ஆசை வார்த்தைகளை நம்பி, கொடிய கடல் பிரயாணத்தைக் கடந்து, மன்னார் மற்றும் அரிப்புத் துறைகள் வழியாகப் புகுந்து, அடர்ந்த வனப்பகுதிகளின் வழியே அவர்கள் மலையகத்தை நோக்கி நடந்தனர். இப்பயணத்தின் போது கொடிய காட்டுச்சுரம், வெப்புநோய் மற்றும் அம்மை நோய்களினால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வழியிலேயே மடிந்து போயினர். திக்கற்ற நிலையில் தவித்த அந்த மக்களுக்குத் தெய்வ நம்பிக்கையே பேராதரவாக விளங்கியது. உயிர் பிழைத்துத் தோட்டம் போய்ச் சேர்ந்தால் தங்களின் தெய்வமான அம்மனுக்குக் கோயில் கட்டுவதாக நேர்த்திக்கடன் வைத்து வேண்டிக் கொண்டனர். அவ்வாறு தொழிலாளர்கள், தங்களின் லயக் குடியிருப்புகளுக்கு அருகிலும், ஆபத்தான மலைச் சரிவுகளிலும் மாரியம்மனை நிலைநிறுத்தி வழிபடத் தொடங்கினர். மலையகத்தின் தலைவாயிலாகக் கருதப்படும் மாத்தளை மண்ணில் அமைந்துள்ள மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயமே, திக்கற்று வந்த தொழிலாளர்கள் நன்றி கூறி அமைத்த முதல் ஆலயமாகக் கருதப்படுகின்றது.

தென்னிந்திய நாட்டுப்புற ஆன்மிக மரபில், குறிப்பாகத் தமிழ் மண்ணில், மாரியம்மன் வழிபாடு என்பது வெறும் சமயச் சடங்காக மட்டுமன்றி, சமூக - மானிடவியல் மற்றும் வரலாற்றுப் பரிணாமத்தின் முக்கிய அங்கமாகவும் விளங்குகிறது. நிலவியல் சார்ந்த திணைக் கோட்பாடுகளிலிருந்து உருவான பழந்தமிழரின் தாய் தெய்வ வழிபாட்டு மரபு, காலப்போக்கில் பல்வேறு வரலாற்று, இலக்கிய மற்றும் சமூக மாற்றங்களுக்கு உட்பட்டு இன்றைய மாரியம்மன் வழிபாடாக நிலைபெற்றுள்ளது. பண்டையத் தமிழர்களின் திணைசார் வாழ்க்கையில் பெண் தெய்வ வழிபாடே முதன்மை பெற்றுத் திகழ்ந்தது. தொல்காப்பியம் பாலை நிலத்திற்குரிய தெய்வமாகக் கொற்றவையை நேரடியாகக் குறிப்பிடாத போதிலும், புறத்திணையில் மறவர்கள் தங்களின் வெற்றிக்குத் துணை நின்ற பெண் தெய்வத்தை வழிபட்ட 'கொற்றவை நிலை' குறித்துப் பேசுகிறது.

"மறம் கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த கொற்றவை நிலையின் அகத்தினைப் புறனே"

இவ்வரி, தொன்மைக்காலம் தொட்டே கொற்றவை போர்த்தெய்வமாக வழிபடப்பட்டதை உறுதிப்படுத்துகிறது. கொற்றம் (வெற்றி), அவ்வை (தாய் மூத்தவள்) என்ற சொல்லாக்கமே 'கொற்றவை' என்றாயிற்று. திருமுருகாற்றுப்படையில் முருகன் 'வெல்போர்க் கொற்றவை சிறுவ' எனப்படுகின்றார். சங்க இலக்கியமான அகநானூற்றில் 'கடல்கெழு செல்வி' மற்றும் 'கானமர் செல்வி' போன்ற பெயர்களில் தாய்த் தெய்வங்கள் சுட்டப்படுகின்றன. தொல்காப்பியம் குறிப்பிடும் 'கந்தழி' எனப்படும் மரங்களை வழிபடும் மரபும், 'நடுகல்' வழிபாடும் பிற்கால நாட்டார் வழிபாட்டின் கூறுகளாக மாறின.

சிலப்பதிகாரம் தமிழ் நாட்டார் வழிபாட்டு வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். கணவன் இழந்த சோகத்தில் மதுரையை எரித்த கண்ணகியின் சீற்றத்தால் பாண்டிய நாடு மழையின்றி வறட்சியும் பஞ்சமும் அடைந்தது. பின்னர் சேர நாட்டில் அவளுக்குக் கோயில் எழுப்பிக் குளிர்விக்கப்பட்டதும், வான்மழை பொழிந்தது. இதனால், வறட்சியைப் போக்கி மாரியை (மழையை) ஈட்டித் தந்த கண்ணகியே பிற்காலத்தில் மாரியம்மனாக வழிபடப்பட்டாள் என்ற வலுவான மானிடவியல் கோட்பாடும் உள்ளது.

சிலப்பதிகாரத்தின் வேட்டுவவரி பகுதியில் எயினர்கள் கொற்றவையை வழிபடும் முறை மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளது. கொற்றவையின் கோலமாக இளங்கோவடிகள் வர்ணிப்பவை பிற்கால மாரியம்மன் கரக வழிபாட்டுடன் ஒப்பிடத்தக்கவை. மாமல்லபுரத்துக் கொற்றவைக்கு உவமையாக விளங்கும் கண்ணகியை நோக்கி வாயிற்காவலர்கள் காளி, துர்க்கை என வியந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

இலங்கையில் கஜபாகு மன்னன் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பத்தினி வழிபாடு (பத்தினி தெய்யோ) பஞ்சம், வறட்சி மற்றும் தொற்றுநோய்களிலிருந்து காக்கும் தெய்வமாக இன்றும் சிங்கள மக்களால் கண்டி 'எசல பெரஹர' (ஆடித் திருவிழா) ஊர்வலத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

மேலும் மாரியம்மனது தோற்றம் குறித்து நாட்டார் வழக்காறுகளில் பல்வேறு கதைகள் நிலவுகின்றன. இவை இத்தெய்வத்தின் தோற்றத்தையும் அதன் உக்கிரத் தன்மையையும் விளக்குகின்றன. அந்த வகையில் ரைவத ராஜனின் மகளான இரேணுகா தேவி, ஜமதக்கினி முனிவரை மணந்து பரசுராமனைப் பெற்றெடுத்தாள். அவளது கற்பின் ஆற்றலால் 'பத்ம சரஸ்' என்ற சுனையில், வெறுங்கையால் மணலைக் குடமாகச் செய்து, நீர் சுமந்து வந்தாள். ஒருநாள் நீரில் கந்தர்வனின் நிழலைக் கண்டு அவள் உள்ளம் சலனமுற்றதால் மணல் குடமாக மாறவில்லை. இதனால் சினமுற்ற முனிவர், பரசுராமனை நோக்கித் தாயின் தலையைத் துண்டிக்குமாறு கட்டளையிட்டார். தந்தையின் சொல்லை நிறைவேற்றிய பரசுராமன், பின்னர் அவரிடம் தாயை உயிர்ப்பிக்குமாறு வரம் கேட்டான். ஜமதக்கினி கொடுத்த அற்புதத் தீர்த்தத்தைக் கொண்டு அவசரக் கோலத்தில் உயிர்ப்பிக்கும்போது, தவறுதலாக அங்கிருந்த ஒரு பெண்ணின் உடலோடு இரேணுகா தேவியின் தலை ஒட்டவைக்கப்பட்டு உயிர் பெற்றாள். தலை 'மாறி' வந்த அம்மனே மருவி 'மாரி' அம்மன் என்று அழைக்கப்பட்டாள். இதன் அடையாளமாகவே ஈரோடு பெரிய மாரியம்மன் கோயிலின் உட்சந்நிதியில் பரசுராமருக்குத் தனிச்சிலை அமைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படுகிறது.

மேலும் வில்லுப்பாட்டு இலக்கியங்களில் மாரியம்மன் பாதாள உலக நாகராசனுக்கும் நாககன்னிக்கும் பிறந்த ஏழு பெண் குழந்தைகளில் மூத்தவளாகச் சித்திரிக்கப்படுகிறாள். இவள் 'மயிடன்' மகிசாசூரன் என்ற அரக்கனை அழித்து, சிவபெருமானிடம் அம்மை முத்துகளை வரமாகப் பெற்று பூலோகத்திற்கு வந்ததாகக் கூறப்படுகிறது. இவள் தன் கையில் இருந்த முத்துகளைச் சிவன் மீது தூவ, சிவனின் உடலில் அம்மைத் தழும்புகள் உண்டாயின என்ற தொன்மக் கதையும் உண்டு. மேலும் முனிவரின் மனைவியான நாகாவலி சாபத்தால் அழகு சிதைக்கப்பட்டு ஆசிரமத்திலிருந்து துரத்தப்பட்டாள். அவளது அழகு மாறியதால் அவள் மாரியம்மனாக வணங்கப்பட்டாள் என்ற கதையும் உண்டு.

தமிழகத்தின் தஞ்சாவூர் மற்றும் பிற மாவட்டங்களில் மாரியம்மன் பல குடும்பங்களின் குலதெய்வமாக ஆராதிக்கப்படுகிறாள். திருமணங்கள் போன்ற சுபகாரியங்களின் போது முதலில் குலதெய்வத்தை வணங்குவது குடும்பத்தின் பூர்வீகத்தையும் தலைமுறைகளையும் கண்டறிய உதவுகிறது. மக்கள் தங்களின் குறைகள் தீர பொங்கலிடுதல், அலகு குத்துதல், அக்னிச்சட்டி எடுத்தல், மண் உருவம் அல்லது கண்மலர் சாத்துதல், மற்றும் உப்பு, மிளகு இடுதல் போன்ற நேர்த்திக்கடன்களைச் செலுத்துகின்றனர். 19ஆம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் பதிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள 'குகட்டுவால்' (Kukattual) எனப்படும் கொக்கி ஊஞ்சல் (Hook Swinging) சடங்கு போன்ற தீவிரமான வழிபாட்டு முறைகளும் இவ்வழிபாட்டில் ஆதிநாளில் இருந்துள்ளன.

தோட்டப்புறங்களில் வழிபாட்டு முறைகளும் சடங்குகளும்

தோட்டப்புறங்களில் நிலவும் மாரியம்மன் வழிபாடு தூய கிராமிய நெறிமுறைகளையும் ஆழமான நம்பிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டது. மாரியம்மன் வழிபாட்டில் 'அம்மை நோய்' முக்கிய இடத்தைப் பெறுகிறது. அம்மைக் கொப்புளங்களை மக்கள் 'முத்துகள்' என்றே அழைப்பதால் அன்னைக்கு 'முத்துமாரி' என்ற திருநாமம் நிலைபெற்றது. அம்மை கண்டவர்களை வேப்பிலைப் படுக்கையில் அமரச் செய்தல், இளநீர் புகட்டுதல், மாவிளக்கு ஏற்றுதல் மற்றும் அன்னை குளிர வேண்டி 'மாரியம்மன் தாலாட்டுப் பாடல்களை' பாடுதல் போன்ற சடங்குகளை பக்திச் சிரத்தையுடன் மக்கள் மேற்கொள்கின்றனர்.

"ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது" என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்ட மலையக மக்கள், தங்களின் நேர்த்திக்கடன்களைத் தவறாது நிறைவேற்றுகின்றனர். உடலில் அலகு குத்துதல், தீச்சட்டி ஏந்துதல், வேப்பிலைத் தேர் இழுத்தல், பாற்குடம் எடுத்தல் மற்றும் வெந்தணலைப் பூக்குழியாக மாற்றும் 'தீமிதித்தல்' போன்ற கடுமையான சடங்குகள் இன்றும் தோட்டப்புறங்களில் பக்திப் பரவசத்துடன் நடத்தப்படுகின்றன. வறட்சி காலங்களில் மழை வேண்டிப் பெண்கள் ஏழு அல்லது ஒன்பது நிறைகுடங்களை ஏந்தி வந்து கோயிலைச் சுற்றி ஊற்றும் 'பூக்குடம்' சடங்கும் இங்கு சிறப்பானது.

மலையக மாரியம்மன் திருவிழாக்கள் என்பவை வெறும் சமய வழிபாட்டு நிகழ்வுகள் மட்டுமல்ல, அவை தமிழர்களின் பாரம்பரிய நாட்டார் கலைகளைப் பேணிப் பாதுகாக்கும் கலை அரங்குகளாகவும் திகழ்கின்றன. திருவிழாக் காலங்களில் ஆண்கள் சிலம்பாட்டம், ஒயிலாட்டம் மற்றும் பதினாறு வகையான அடிகளைக் கொண்ட கோலாட்டங்களை ஆடி மகிழ்வர். பெண்கள் குரவையிட்டு, கரகப் பாடல்களைப் பாடி வட்டமாகக் கும்மியடிப்பர். அதோடு, அருச்சுனன் தபசு, காமன் கூத்து, பொன்னர் சங்கர் கூத்து போன்ற புராணக் கூத்துகளும், நல்லதங்காள் கதை போன்ற நாடக வழிபாடுகளும் சடங்கு முறைகள் பிசகாமல் விடிய விடிய நடத்தப்பட்டு, உழைக்கும் மக்களின் கலைத் தாகத்தைத் தணிக்கின்றன. மலையகத்தின் சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப, தோட்டப்

புறங்களில் மரத்தடிகளிலும் கற்பாறைகளிலும் வழிபடப்பட்ட இடங்கள் படிப்படியாகப் பெரிய ஆலயங்களாகப் பரிணமித்தன. மலையகக் கலாசாரத்தை 'மாரியம்மன் கலாசாரம்' என்று கூறும் அளவிற்குத் தோட்டங்கள் தோறும் மாரியம்மன் ஆலயங்களே மிகுந்து காணப்படுகின்றன. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சில குறிப்பிட்ட ஆலயங்களின் புள்ளிவிவரப் பட்டியல் பின்வருமாறு:

நுவரெலியா: 300 ஆலயங்களில் 225 அம்மன் ஆலயங்கள்.

பதுளை: 103 ஆலயங்களில் 36 அம்மன் ஆலயங்கள்.

கண்டி: 92 ஆலயங்களில் 57 அம்மன் ஆலயங்கள்.

கொழும்பு: 60 ஆலயங்களில் 41 அம்மன் ஆலயங்கள்.

கேகாலை: 55 ஆலயங்களில் 46 அம்மன் ஆலயங்கள்.

களுத்துறை: 48 ஆலயங்களில் 45 அம்மன் ஆலயங்கள்.

இரத்தினபுரி: 37 ஆலயங்களில் 30 அம்மன் ஆலயங்கள்.

மாத்தளை: 35 ஆலயங்களில் 27 அம்மன் ஆலயங்கள்.

மொனராகலை: 13 ஆலயங்களில் 07 அம்மன் ஆலயங்கள்.

குருநாகல்: 11 ஆலயங்களில் 08 அம்மன் ஆலயங்கள்.

இதன் அடிப்படையில் தோட்டப்புறங்களைத் தாண்டி, மலையகத்தின் சிறிய நகரங்களிலும், பிரதான நகரங்களிலும் உள்ள மாரியம்மன் ஆலயங்கள் இன்று ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட பெரும் தேவஸ்தானங்களாக உயர்ந்துள்ளன. இவை முழுக்க முழுக்க சமஸ்கிருத வழிபாடுகளையே பின்பற்றுகின்றன. நாவலப்பிட்டி, கம்பளை, கொட்டாஞ்சேனை, டிக்கோயா மற்றும் நீர்கொழும்பு போன்ற இடங்களில் உள்ள ஆலயங்கள் இதற்குச் சிறந்த சான்றுகளாகும்.

மலையகத் தோட்டப்புறங்களில் மாரியம்மன் திருவிழாக்கள் நடத்தப்பட்ட முறைமைக்கும், அங்கு நிலவிய சமூகபொருளாதார அதிகாரக் கட்டமைப்பிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. காலனித்துவக் காலத்தில் ஒவ்வொரு தோட்டத்துக் கங்காணிக்கும் (Foreman) ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது 'பெரட்டுக்களம்' (அவர்களின் ஆளுமைக்கு உட்பட்ட எல்லை) வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கங்காணிமார்களுக்குத் தங்கள் எல்லைக்கு உட்பட்ட பெரட்டில் கோயில்களை அமைத்துக் கொள்ள இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

திருவிழாக் காலங்களில், ஒரு கங்காணியின் பெரட்டியில் உள்ள கோயிலில் திருவிழா முடிந்த பின்னரே அடுத்த கங்காணியின் பெரட்டியில் உள்ள கோயிலில் விழா நடத்தப்படும் வகையில் சடங்கு முறைகள் வரிசைப்படுத்தப்பட்டிருந்தன. இது கங்காணிகளுக்கு இடையிலான அதிகாரச் சமநிலையைப் பேணவும், அதேவேளையில் பெரிய கங்காணியின் செல்வாக்கையும் பொருளாதார வலிமையையும் வெளிப்படுத்தும் வகையில் ஊர்வலங்களை நடத்தவும் பயன்படுத்தப்பட்டது. அனைத்துச் சிறு பெரட்டி விழாக்களும் நிறைவடைந்த பின்னர், ஒட்டுமொத்தத் தோட்ட மக்களும் இணைந்து 'பெரும் திருவிழாவினை' எடுப்பது வழக்கமாக இருந்தது. இந்தத் திருவிழா முறைமையானது, லயத்து வாழ்க்கையால் பிளவுபட்டுக் கிடந்த தொழிலாளர்களை ஒரு பொதுவான சமூகக் கூட்டுணர்வில் பிணைக்கும் இன்றியமையாத ஊடகமாகச் செயற்பட்டது.

மேலும், அம்மை நோயாளியின் அருகே அமர்ந்து உடல் மற்றும் மனத்தூய்மையுடன் 5, 7 அல்லது 9 நாட்களுக்கு மாரியம்மன் தாலாட்டுப் பாடல்கள் பாடப்படும். நோயாளியின் மனோதிடத்தை அதிகரித்தல் மற்றும் பாடலின் மூலம் அம்மனைச் சாந்தப்படுத்துதல் என்பன இதன் நோக்கமாகும். நோயாளி முற்றிலும் குணமடைந்த பின், ஆலயத்திற்குத் தண்ணீர்க் குடம் எடுத்துச் சென்று அபிஷேகம் செய்து நேர்த்திக்கடன் கழிப்பர். நோயிலிருந்து முழுமையாக விடுபட்டமைக்காக அன்னைக்கு நன்றி செலுத்துதல் இதற்கான காரணமாகும். நகர்ப்புறங்களிலும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலும் கொடியேற்றத்துடன் தொடங்கும் வைதீகப் பூசைகளுக்கு மாறாக, மலையகத் தோட்டப்புறங்களில் மாரியம்மன் திருவிழாவானது குறிபெடுத்தல் மற்றும் கரகம் பாலித்தல் போன்ற நாட்டார் சடங்குகளுடனே தொடங்குகிறது.

உடுக்கை அடித்தல், மண்டு மற்றும் குறி சொல்லுதல் என்பனவும் இவ்வழிபாட்டில் முக்கியம் பெறுகின்றன. திருவிழாக்களில் சாமிக்கு மந்திரம் சொல்வதற்குப் பிராமண அர்ச்சகர்கள் இருப்பதில்லை; மாறாக, தோட்டத் தொழிலாளர்களிலேயே ஒருவர் பூசாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பூசாரி உடுக்கை அடித்து, "உடுக்கடிக்கும் என் கையாலே உன்னை உருகி அழைக்கின்றேன்" என்று உருகிப் பாடி அம்மனைத் தன்வசப்படுத்துவார். பின்னர், 'மண்டு' எனப்படும் தற்காலிக வழிபாட்டு மேடை அமைக்கப்பட்டு, பூசாரிக்கு அம்மனின் அருள் வந்து ஆவேசமாக ஆடும் 'சாமியாட்டம்' நிகழும். இந்த ஆவேச நிலையில் பூசாரி கூறும் 'குறி' (எதிர்காலப் பலன்கள் மற்றும் தீர்வுகள்) மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையை அளிக்கிறது.

மேலும் மலையக மக்களின் வாழ்வில் மிக முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு 'பூக்கட்டிப் போடுதல்' என்ற சடங்கு பயன்படுத்தப்படுகிறது. தொழில் வளர்ச்சி, குடும்பப் பொருளாதார முன்னேற்றம், குழந்தைகளின் கல்வி மற்றும் திருமணம் போன்ற முக்கிய விடயங்களில் தீர்க்கமான முடிவெடுக்க முடியாதபோது, அம்மனின் சிலையின் முன்னால் அல்லது ஆலய வளாகத்தில் சிவப்பு மற்றும் வெள்ளை நிறப் பூக்களைக் கட்டிப் போட்டு,

அதில் குறிப்பிட்ட ஒரு நிறப் பூவை எடுப்பதன் மூலம் அம்மனின் உத்தரவைக் கண்டறியும் வழக்கம் இன்றளவும் வலுவாகக் காணப்படுகிறது. கரகம் பாலித்தலுக்கும், இப்பூக்கட்டி போட்டு கரகம் தூக்கும் மரபு காணப்படுகின்றது.

இச்சடங்கின் முதல் கட்டம், தோட்டப் பகுதியிலுள்ள ஏதேனும் ஒரு புனிதமான நீர்நிலையில் (ஆறு, ஓடை அல்லது கிணறு) தொடங்கும். கரகத்தைச் சுமக்கும் பூசாரி அல்லது பக்தர் பல நாட்கள் கடுமையான விரதமிருந்து, காப்புக்கட்டி இந்நாளில் நீராடுவார். பின்னர், பித்தளை அல்லது செம்புக் குடத்தில் புனித நீர், நவதானியங்கள், நாணயங்கள் மற்றும் மஞ்சள் போன்ற மங்கலப் பொருட்களை இட்டு, அதன் வாய்ப் பகுதியில் மாவிலைகள் மற்றும் தேங்காயை வைப்பர். அம்மன் கரகமாக இருந்தால் வண்ணமயமான பூக்களாலும், காளி கரகமாக இருந்தால் வேப்பிலை மற்றும் எலுமிச்சம்பழங்களாலும் குடம் அழகாக அலங்கரிக்கப்பட்டு, பூசைகள் மூலம் தெய்வத்தின் சக்தி அதில் ஆவாகனம் செய்யப்படும்.

தெய்வ சக்தி நிறைந்த அக்கரகத்தை பூசாரி தனது தலையில் ஏந்தியவுடன் சடங்கின் இரண்டாம் கட்டம் தொடங்குகிறது. பம்பை, உடுக்கை, தம்பட்டம் போன்ற பாரம்பரிய இசைக்கருவிகள் அதிர்ந்து முழங்க, கரகத்தைச் சுமப்பவருக்குத் தெய்வீக அருள் வந்து (சாமி ஆடுதல்) ஆக்ரோஷமாகவோ அல்லது அமைதியாகவோ நடனமாடியபடி கோயிலை நோக்கி நடப்பார். அவர் வரும் வழியெங்கும் லயன் குடியிருப்புகளில் வாழும் மலையக மக்கள் தங்கள் வீட்டு வாசல்களில் நிறைகுடம் வைத்து, தீபாராதனை காட்டி, கரகக்காரரின் பாதங்களில் மஞ்சள் நீர் ஊற்றி வழிபடுவர். இந்நிகழ்வு ஒட்டுமொத்த தோட்ட மக்களையும் ஆன்மிக உணர்வால் ஒன்றிணைக்கும் முக்கிய பகுதியாக அமைகிறது.

இறுதிக்கட்டமாக, கரகம் வீதி உலாவை நிறைவு செய்து ஆலயத்தின் கருவறையை அல்லது திருவிழா நடக்கும் இடத்தை வந்தடையும். அங்கு கரகத்திற்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டு, பலி கொடுக்கும்சடங்குகளோ அல்லது நேர்த்திக்கடன்களோ நிறைவேற்றப்படும். அதன் பின்னர், அருள் வந்து ஆடிய பூசாரி சாந்தமடைந்து, பக்தர்களுக்குத் திருநீறு மற்றும் மஞ்சள் நீர் வழங்கி அருள்வாக்குக் கூறுவார். திருவிழா முடியும் வரை இக்கரகம் கோயிலில் வழிபாட்டிற்காக வைக்கப்படும். இறுதி நாளில் மீண்டும் முறைப்படி கொண்டு செல்லப்பட்டு நீர்நிலையில் கரைக்கப்படுவதோடு அல்லது பூசை கலைக்கப்படுவதோடு இச்சடங்கு நிறைவு பெறுகிறது.

மாரியம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய 'கரகம் பாலித்தல்' என்னும் சடங்கானது, வறண்ட பகுதிகளிலிருந்து நீர் சுமந்து வந்ததன் குறியீடாகவும், உடலை வருத்திச் செய்யும் நேர்த்திக்கடன்கள் மற்றும் சடங்கு விளையாட்டுகளின் வடிவமாகவும் விளங்குகிறது. மக்கள் தங்களின் பாவங்களுக்குப் பிராயச்சித்தமாகவும், மழையின்மையைத் தீர்க்கவும் கரகம் எடுத்தல், காவடி எடுத்தல், அலகு குத்துதல் மற்றும் தீமிதித்தல் போன்ற சடங்குகளை மேற்கொள்கின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, மஞ்சள் பூசப்பட்ட 'பாலமரக்' கம்பத்தை நட்டு அதன் கிளைகளில் தீச்சட்டி ஏந்தும் 'கம்பம் நடும் விழா' நடைபெறும். பக்தர்கள் தங்களின் கால்களில் 'சலங்கை' கட்டிக்கொண்டு, 'மண் மேளம்' மற்றும் 'கொம்பு' போன்ற பாரம்பரிய இசைக்கருவிகளின் முழக்கத்திற்கு ஏற்பக் கம்பத்தைச் சுற்றி ஆவேசமாக நடனமாடுவர். விழா நாட்களில் 'மாவிளக்கு' ஊர்வலமும், ஒன்பது தானியங்களை முளைக்க வைத்து எடுத்து வரும் 'முளைப்பாரி' சடங்கும் பெண்களால் பக்திப் பரவசத்துடன் நிகழ்த்தப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள்

இன்பமோகன், வ., 2012. கிழக்கிலங்கைச் சடங்குகள். குமரன் புத்தக இல்லம், சென்னை–கொழும்பு.

சிவத்தம்பி, க., 1993. இலங்கை மலையகத் தமிழர் பண்பாடும் கருத்து நிலையும். உதயம் நிறுவனம்.

சிவரத்தினம், சு., 2008. சடங்குகளினூடாக மட்டக்களப்பு. விபுலம் பதிப்பகம்.

சோமசுந்தரம், அ., (ஆண்டு குறிப்பிடப்படவில்லை). இந்து வாழ்வியல் சடங்குகள்.

தருமராஜன், டி., 2006. சனங்களின் சாமிகள். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தமிழ்நாடு, இந்தியா.

பக்தவத்சல பாரதி, 2012. மானிடவியல் கோட்பாடுகள். அடையாளம் வெளியீடு, சென்னை.

மௌனகுரு, சி., 1988. சடங்கிலிருந்து நாடகம் வரை. நாகலிங்கம் நூலாலயம்.

வேல்முருகு, ந., 1993. மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும். வாசகர் பதிப்பகம்.

சஞ்சிகைகள்

குன்றின் குரல், ஆண்டு 12, இதழ் 03, ஜூலை–செப்டம்பர் 1993, பக். 19–20.

குன்றின் குரல், ஆண்டு 13, இதழ் 01, ஜனவரி–மார்ச் 1994, பக். 19–20.

நட்புறவு பாலம், இதழ் 12, செப்டம்பர் 1987, பக். 14–16.

நாவலப்பிட்டி பிரதேச சாகித்திய விழா மலர், ஆகஸ்ட் 1993, பக். 25–27.

பண்பாடு, இதழ் 02, செப்டம்பர் 1992, பக். 30–56.

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் தென்மராட்சி – கச்சாய்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.



லெயுசிக்காமின் தென்மராட்சிப் பிரிவைக் காட்டும் நிலப்படத்தில் உள்ள வரணிக் கோவிற்பற்றுத் தொடர்பாகக் காணப்படும் தகவல்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளையும் சென்ற கட்டுரையில் பார்த்தோம். இந்தக் கட்டுரையில் அதே பிரிவில் உள்ள கச்சாய்க் கோவிற்பற்றுத் தொடர்பாகக் குறித்த நிலப்படத்திலுள்ள தகவல்களைப் பார்க்கலாம்.

நிலப்படத்தின்படி கச்சாய்க் கோவிற்பற்றில் கச்சாய், பாலாவி, கெற்பெலி, உசன், சாண்டான்போக்கட்டி, கொடிகாமம், வெள்ளாம்போக்கட்டி, அல்லாரை ஆகிய எட்டுத் துணைப் பிரிவுகள் உள்ளன (படம்1).




படம் 1: லெயுசிக்காமின் தென்மராட்சியைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கச்சாய்க் கோவிற்பற்றுப் பகுதி.

எல்லைகள்

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி கச்சாய்க் கோவிற்பற்றின் வடக்கில் வரணிக் கோவிற்பற்றும்; மேற்கில் வரணி, சாவகச்சேரி ஆகிய கோவிற்பற்றுகளும்; கிழக்கில் எழுதுமட்டுவாழும்; தெற்கில் கடல்நீரேரியும் எல்லைகளாக உள்ளன (படம்2). கோவிற்பற்றின் வடக்கு எல்லையை அண்டிக் கொடிகாமம் துணைப் பிரிவு உள்ளது. அதற்கு நேர்தெற்கில் சாண்டான்போக்கட்டி துணைப்பிரிவு அமைந்துள்ளது. சாண்டான்போக்கட்டிக்குக் கிழக்கே வரணிக் கோவிற்பற்றின் கிழக்கு எல்லையோரமாக உசன் துணைப்பிரிவு காணப்படுகிறது. கடல்நீரேரியுடனான எல்லையை அண்டி மேற்கிலிருந்து கிழக்காக அல்லாரை, கச்சாய், பாலாவி, கெற்பெலி ஆகிய நான்கு துணைப் பிரிவுகள் வரிசையாக அமைந்துள்ளன. வெள்ளாம்போக்கட்டித் துணைப்பிரிவு அல்லாரைக்கும் கச்சாய்க்கும் இடையே நாற்புறமும் அவற்றால் சூழப்பட்டபடி இருக்கின்றது.

நிலப்படத்திலுள்ள அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி, கச்சாய், பாலாவி ஆகிய துணைப் பிரிவுகளின் எல்லைகளும் அமைவிடங்களும் அதே பெயர்களைக் கொண்ட இன்றைய கிராம அலுவலர் பிரிவுகளுடன் பெருமளவுக்குப் பொருந்துகின்றன. கெற்பெலித் துணைப் பிரிவுக்குள் இன்று கெற்பெலி, விடத்தற்பழை ஆகிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளின் பகுதிகள் உள்ளன. நிலப்படத்தில் கெற்பெலித் துணைப் பிரிவின் கிழக்கு எல்லைக்கும் தென்மராட்சியின் கிழக்கிற்கும் இடையில் எழுதுமட்டுவாழ் கோவிற்பற்றின் ஒரு பகுதி உள்ளது. ஆனால், இன்றைய கெற்பெலி, விடத்தற்பழை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் கிழக்கே தென்மராட்சிப் பிரிவின் எல்லைவரை செல்கின்றன. உசன் துணைப் பிரிவினதும் இன்றைய உசன் கிராம அலுவலர் பிரிவினதும் அமைவிடங்கள் பொருந்தினாலும் அவற்றின் வடிவங்களில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. நிலப்படத்திலுள்ள துணைப் பிரிவொன்றுக்கு வழங்கும் சாண்டான்போக்கட்டி என்ற பெயரில் இன்று நிர்வாகப் பிரிவு எதுவும் இல்லை. இன்றைய கொடிகாமம் தெற்குக் கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள பகுதிகள் முன்னர் சாண்டான்போக்கட்டித் துணைப் பிரிவுக்குள் அடங்கி இருந்திருக்கக்கூடும். முன்னைய கொடிகாமம் துணைப் பிரிவுக்குள்ளேயே இன்றைய கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் அடங்குகின்றன எனலாம்.

படம் 2: லெயுசிக்காமின் தென்மராட்சியைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட கச்சாய்க் கோவிற்பற்றின் படம்.



ஒல்லாந்தர்காலக் கச்சாய்க் கோவிற்பற்றுக்குள் அடங்கிய பகுதிகள் இன்றைய சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குள் அடங்குகின்றன. அதேவேளை, உள்ளூராட்சி நிர்வாக அமைப்பில் இப்பகுதிகள் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ளன.

வீதிகள்

சாவகச்சேரியிலிருந்து வரும் வீதி, சாவகச்சேரி, கச்சாய் ஆகிய கோவிற்பற்றுகளுக்கு இடையிலான எல்லையூடாகக் கச்சாய்க் கோவிற்பற்றுத் தேவாலயத்தை அடைகிறது. இது ஏறத்தாழ இன்றைய சாவகச்சேரி - கச்சாய் வீதித் தடத்தில் அமைந்துள்ளது. இங்கிருந்து மூன்று வீதிகள் செல்வதை நிலப்படத்தில் காண முடிகிறது. ஒரு வீதி தெற்கு நோக்கி கெற்பெலிக் கரையோரத்திலுள்ள அயில் துறை என்னும் இடம்வரை சென்று முடிகிறது. இது இன்றைய புலோலி - கொடிகாமம் - கச்சாய் வீதியின் தெற்கு முனையை

அண்டிய பகுதியோடு பொருந்துகிறது. இன்னொரு வீதி நீரேரிக் கரைக்குச் சமாந்தரமாகச் சென்று எழுதுமட்டுவாழ் கோவிற்பற்றுக்குள் நுழைகிறது. இது தற்காலத்து கச்சாய் - பச்சிலைப்பள்ளி வீதியின் ஒரு பகுதியோடு பொருந்துகிறது. தேவாலயத்திலிருந்து மேற்குத் திசை நோக்கிச் செல்லும் இன்னொரு வீதி எழுதுமட்டுவாழ் கோவிற்பற்றுக்குள் நுழைகிறது. தற்காலத்து வீதி எதுவும் மேற்படி வீதியுடன் பொருந்துவதாகத் தெரியவில்லை. சாவகச்சேரியிலிருந்து வரணிக் கோவிற்பற்றினூடாக வரும் ஒரு வீதி கொடிகாமம் துணைப்பிரிவை மேற்கு - கிழக்காக ஊடறுத்து எழுதுமட்டுவாழ் கோவிற்பற்றுக்குள் செல்கிறது. இதை, கொடிகாமத்தை அண்டிய பகுதியில் இன்றைய கண்டி வீதியுடன் பொருத்திப் பார்க்க முடிகிறது.

கட்டடங்கள்

வழமை போல, கச்சாய்க் கோவிற்பற்றிலும் கிறித்தவ தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் நிலப்படத்தில் முக்கியத்துவம் கொடுத்துக் குறித்துள்ளனர். இவற்றைத் தவிர யானைப்பந்தி ஒன்றையும் மூன்று கரையோர மடங்களையும் நிலப்படம் குறித்துக் காட்டுகிறது.

தேவாலயமும் தேவாலய இல்லமும்

கச்சாய்த் தேவாலயமும் அதோடிணைந்த இல்லமும் மண்ணாலான சுவர்களையும் ஓலையால் வேயப்பட்ட கூரைகளையும் கொண்டவை என போல்டேயஸ் பாதிரியார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1] இதைத் தவிர, மேற்படி கட்டடங்கள் தொடர்பாக வேறு விவரங்கள் எதையும் அவர் தரவில்லை. அவரது நூலிலுள்ள படமும் இவ்விரு கட்டடங்களையும் நூலில் விவரித்தவாறே ஓலைக் கூரையுடன் கூடிய மண் கட்டடங்களாகவே காட்டுகிறது[2] (படம்3). ஏற்கெனவே இக்கட்டுரைத் தொடரின் வேறிடங்களில் குறிப்பிட்டது போல் மேலுள்ள தகவல்கள் 1665 ஆம் ஆண்டுக்கு முற்பட்டவை. இதற்குப் பின்னும் 130 ஆண்டுகள் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆண்டுள்ளனர். அந்தக் காலப் பகுதியில் இத்தேவாலயத்தையும் இல்லத்தையும் நிரந்தரக் கட்டடங்களாக மேம்படுத்தினரா என்பது தெரியவில்லை.

லெயுசிக்காமின் நிலப்படம் தேவாலயத்தையும் இல்லத்தையும் கச்சாய்க் கோவிற்பற்றின் பாலாவித் துணைப்பிரிவுக்குள் காட்டுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும்பாலான கோவிற்பற்றுத் தேவாலயங்கள் அக்கோவிற்பற்றின் பெயர் கொண்ட துணைப்பிரிவுகளிலேயே அமைந்துள்ளன. ஆனால், இங்கே அது வேறு துணைப்பிரிவில் அமைந்துள்ளது. நிலப்படம், தேவாலயத்தையும் அதோடிணைந்த இல்லத்தையும் நான்கு வீதிகள் சந்திக்கும் இடத்தில் குறித்துக் காட்டுகிறது. நிலப்படத்தின்படி இக்கட்டடங்களின் அமைவிடம் இன்றைய சாவகச்சேரி - கச்சாய் வீதியை அண்டியே அமைந்திருந்தது என்பது தெளிவாகவே உள்ளது.



படம் 3: போல்டேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ள கச்சாய்த் தேவாலயத்தினதும் தேவாலய இல்லத்தினதும் படம்.

யானைப்பந்தி

கச்சாய்க் கோவிற்பற்றுக்குள்ளும் நிலப்படம் ஒரு யானைப் பந்தியைக் குறித்துக் காட்டுகிறது. இது உசன் துணைப்பிரிவுக்குள் அமைந்துள்ளது. நிலப்படத்தில் கச்சாய்த் தேவாலயச் சந்தியிலிருந்து எழுதுமட்டுவாழுக்குச் செல்லும் வீதிக்கு அருகே இதைக் குறித்துள்ளனர். இந்த வீதியைத் தற்கால வீதி எதனுடனும் பொருத்திப் பார்க்க முடியவில்லை என ஏற்கெனவே குறிப்பிட்டோம். அதனால், இந்தத் தகவலை வைத்து யானைப் பந்தியின் அமைவிடத்தைக் கண்டறிவது கடினம்.

யானைப்பந்திக்குத் தெற்கே அதற்குச் சற்றுத் தொலைவில் கெற்பெலித் துணைப்பிரிவுக்குள் குஞ்சிப் பணிக்கன் துரவு, புதுப் பணிக்கன் துரவு என்னும் இரண்டு துரவுகளை நிலப்படத்தில் காணமுடிகிறது. பணிக்கன் என்பதற்கு யானைப்பாகன் என்ற பொருளும் உண்டு. "குஞ்சிப் பணிக்கன்" என்பது "கும்கிப் பணிக்கன்" என்பதன் திரிபாக இருக்கலாம். "கும்கி" என்பது காட்டு யானைகளைப் பிடிப்பதற்குப் பழக்கப்படுத்திய யானைகளைக் குறிக்கும். இவ்வாறான யானைகளைப் பழக்குபவர்களைக் கும்கிப் பணிக்கன் என அழைத்திருக்கலாம். எனவே, இந்தத் துரவுப் பெயர்கள் மேற்படி யானைப் பந்தியில் பணியாற்றும் பாகர்களுடன் தொடர்புடையவையாக இருக்கக்கூடும்.

துறைகளும் மடங்களும்

கச்சாய்க் கோவிற்பற்றின் தெற்குக் கரையோரமாக நான்கு துறைகளை நிலப்படம் குறித்துக் காட்டுகிறது. "பழைய கச்சாய்த் துறை" என்னும் துறை பாலாவித் துணைப் பிரிவில் கச்சாயுடனான எல்லைக்கு அருகில் காணப்படுகின்றது. ஏனைய மூன்று துறைகளும் கெற்பெலித் துணைப்பிரிவுக்குள் உள்ளன. இவை அயில் துறை, குருனடித் துறை, வெயிலடித் துறை என்பன. இவை அனைத்துக்கும் அருகே வழக்கம் போலவே மடம் போன்ற குறியீடுகள் உள்ளன. பல இடங்களில்

துறைகளுக்கு அருகே இவ்வாறான மடங்கள் இருப்பது குறித்தும் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் ஏற்கெனவே விளக்கினோம்.

கச்சாயில் மிகவும் பழமை வாய்ந்த துறைமுகம் இருந்ததாகக் கருதப்படுகிறது. கிறித்துவுக்குப் பிற்பட்ட தொடக்க நூற்றாண்டுகளிலேயே கச்சாய்த் துறைமுகத்திற்கு இலங்கையில் வன்னிப் பகுதியுடனும் இந்தியாவின் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா முதலிய பகுதிகளுடனும் அவற்றுக்கும் அப்பால் யாவா, உரோம் முதலிய நாடுகளுடனும் கடல்வழிப் போக்குவரத்துத் தொடர்புகளும் வணிக நடவடிக்கைகளும் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இவற்றுக்குச் சான்றாக இப்பகுதியில் உரோம நாணயங்கள் உள்ளிட்ட பல நாணயங்களும் மட்பாண்ட ஓடுகள் முதலிய தொல்பொருட்களும் கிடைத்துள்ளன.[3] யாழ்ப்பாண இராச்சியக் காலத்தில் வன்னியிலிருந்து யானைகளைக் கச்சாய்த் துறைமுகத்தினூடாகவே யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கொண்டுவந்ததாகச் சொல்லப்படுகின்றது. அவசர காலத்தில் யாழ்ப்பாண அரசுக்கு உதவியாகத் தென்னிந்தியாவில் இருந்துவந்த படைகள் இத்துறைமுகத்தைப் பயன்படுத்தியதாகவும் கருத்து உண்டு.[4] லெயுசிக்காமின் நிலப்படத்தில் பழைய கச்சாய்த்துறை என்று குறிப்பிட்டிருப்பது இந்தத் துறையாக இருக்க வாய்ப்புண்டு. இவ்விடம் இப்போது ஒரு மீன்பிடித் துறையாக உள்ளது. இத்துறையை அண்டிய பகுதியில் சதுரவடிவான பழைய கிணறு ஒன்று காணப்படுவதாகவும் கலங்கரைவிளக்கம், வாடிவீடு, பிற கட்டடங்கள் முன்பு இருந்து பின்னர் அழிந்துவிட்டதாகவும் தெரிகிறது.[5] இவை குடியேற்றவாதக் காலத்துக்கு உரியவையாக இருக்கலாம்.

குளங்கள்

கச்சாய்க் கோவிற்பற்றுக்குள் 48 குளங்களை நிலப்படம் குறித்துக் காட்டுகிறது. அல்லாரைத் துணைப் பிரிவுக்குள் அடம்பன், பாண்டியன் குளம், அடம்பன், வேலன் துரவு, சோனன் துரவு ஆகிய ஐந்து நீர்நிலைகள் உள்ளன. வெள்ளான்போக்கட்டித் துணைப் பிரிவுக்குள் இரண்டு குளங்களை மட்டுமே நிலப்படம் காட்டுகிறது. இவையும் குளம், துரவு ஆகிய பொதுப் பெயர்களாலேயே குறிக்கப்பட்டுள்ளன. கச்சாய்த் துணைப் பிரிவுக்குள் ஏழு குளங்களை நிலப்படம் காட்டுகின்றபோதும் தவசிக் குளம் என்ற ஒரு குளம் மட்டுமே சிறப்புப் பெயரால் குறிக்கப்பட்டுள்ளது. ஏனைய ஆறையும் பொதுப் பெயர்களாலேயே குறித்துள்ளனர். கொடிகாமம் துணைப் பிரிவில் நிலப்படம் காட்டும் எட்டு நீர்நிலைகளுள் முதலியா குளம், வேவில் குளம், வேவில் குளம், வேவில் குளம், தவசிக் குளம், தவசியா துரவு ஆகியவற்றுடன் குளம் என்னும் பொதுப் பெயரால் குறிக்கப்பட்ட இரண்டு நீர்நிலைகளும் உள்ளன. இங்கே மூன்று முறை வேவில் குளம் என்ற பெயர் உள்ளது. இது தவறாகக் குறிக்கப்பட்டதா அல்லது மூன்று குளங்களுக்கு ஒரே பெயர் புழங்கியதா என்பது தெரியவில்லை.

சாண்டான்போக்கட்டி என்னும் துணைப்பிரிவில் வெட்டுக் குளம் என்னும் குளமும் நான்கு துரவுகள், ஒரு கேணி, ஒரு குளம் என்பனவுமாக மொத்தம் ஏழு நீர்நிலைகளைக் காண முடிகிறது. உசன் துணைப் பிரிவுக்குள் ஐந்து குளங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று வெட்டுக் குளம். இன்னொரு பெயரை வாசிக்க முடியவில்லை. ஏனைய மூன்றில் இரண்டு குளங்களும் ஒரு கேணியும் உள்ளன. பாலாவித் துணைப் பிரிவில் அடங்கும் ஐந்து நீர்நிலைகளுமே பொதுப் பெயராலேயே குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நான்கு குளங்கள்; ஒன்று கேணி. கெற்பெலியில் பாடுக் கேணி, மடக்கல் துரவு, குஞ்சுப் பணிக்கன் துரவு, தச்சன் துரவு, புதுப் பணிக்கன் துரவு, வெட்டுத் துரவு, வெட்டுத் துரவு ஆகிய ஏழு நீர்நிலைகளுடன் குளம் என்ற பொதுப் பெயருடன் கூடிய ஒரு குளமும் பெயர் குறிக்காத ஒரு குளமும் காணப்படுகின்றன. இங்கும் வெட்டுத்துரவு என்ற பெயரில் இரண்டு குளங்கள் அருகருகே உள்ளன.

தற்காலப் பதிவுகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது கச்சாய்க் கோவிற்பற்றுக்குள் லெயுசிக்காமின் நிலப்படம் காட்டும் குளங்களின் பெயர்களுள் மிகக் குறைவான பெயர்களே இன்றும் புழக்கத்தில் உள்ளதைக் காணமுடிகிறது.[6] கொடிகாமம் துணைப்பிரிவில் உள்ள வேவில் குளம், தவசிக்குளம் ஆகிய இரு குளங்கள் தமது பெயர்களை இன்றுவரை தக்கவைத்துள்ளன. நிலப்படத்தில் அடம்பன் என்ற பெயருடன் இரண்டு குளங்களைக் குறித்துள்ளனர். தற்காலப் பதிவுகளில் காணப்படும் அடம்பிக் குளம் என்ற பெயர் மேற்படி இரண்டு குளங்களில் ஒன்றைக் குறிப்பதாக இருக்கக்கூடும். இதேபோல, கெற்பெலித் துணைப்பிரிவில் இருப்பதாக நிலப்படம் காட்டும் தச்சன் துரவு என்னும் நீர்நிலையும் தற்காலத்து தச்சன் தாழ் குளமும் ஒன்றா என்பதும் ஆய்வுக்குரியது.

அடிக்குறிப்புகள்

1. *Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959), 330.*

2. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 336.*

3. வன்னியசிங்கம் கபிலன், "கச்சாய் வரலாறும் பண்பாடும்" (கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 2018), 26.

4. கபிலன், "கச்சாய் வரலாறும் பண்பாடும்," 27.

5. கபிலன், "கச்சாய் வரலாறும் பண்பாடும்," 26.

6. தகவல்: விவசாய அபிவிருத்தித் திணைக்களம்.

1920களில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் கொழும்பு நகரில் ஓர் உயர்கல்வி நிறுவனம் தாபிக்கப்பட்டது. இக்கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலை/ விஞ்ஞானப் பட்டப்படிப்புக்கு வெளிவாரி பரீட்சார்த்திகளான இலங்கை மாணவர்களைத் தயார்ப்படுத்தும் கல்வி நிறுவனமாகச் செயற்பட்டது. 1942 இல் இக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு தனித்து இயங்க ஆரம்பித்தது. காலப்போக்கில் நாட்டின் பிறபகுதிகளிலும் பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டன. இலங்கையில் பல்கலைக்கழக முறை (University System) ஒன்று உருவாகியது. இம்மாற்றங்கள் மேற்குறித்த மூன்று கற்கைத்துறைகளிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. 'இலங்கையின் வரலாறும், பொருளியலும், சமூகவியலும்' என்ற இத்தொடரில் இக்கற்கைத்துறைகளின் வளர்ச்சி பற்றிய மதிப்பீடுகள், முக்கிய ஆய்வாளர்களின் நூல்களினதும், ஆய்வுக் கட்டுரைகளினதும் அறிமுகமும் விமர்சனமும், ஆய்வாளர்களின் கோட்பாட்டுப் பங்களிப்புகள் (Theoretical Contributions), அவர்களின் புலமைத்துறை வாழ்க்கை வரலாறு, மாணவர் பரம்பரைகளின் உருவாக்கம், அரசியல் – சமூக – பண்பாட்டு உயர்குழுக்களின் (Elites) உருவாக்கம் என்பன குறித்த பகுப்பாய்வுகளாக அமையும் கட்டுரைகள் பதிவிடப்படும்

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் குறைவிருத்தி: சார்புக் கோட்பாடு நோக்கிலான சில குறிப்புகள்

கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.



அறிமுகம்

சார்புக் கோட்பாடு (Dependency Theory) என்னும் பொருளியல் கோட்பாட்டின் நோக்கில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரப் பின்னடைவையும் குறைவிருத்தியையும் (Underdevelopment) விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சார்புக் கோட்பாட்டின் பிரதானமான எண்ணக்கரு 'சார்பு நிலை' (Dependency) என்பதாகும். சார்பு நிலை என்பதை தங்கியிருத்தல் எனவும் தமிழில் கூறலாம்.

உலக முதலாளித்துவப் பொருளாதார முறைமையில் மையம் (Centre), சார்பு மண்டலம் (Periphery) என இருவகை நாடுகள் உள்ளன. இவ்விருவகை நாடுகளுக்குமிடையில் சமத்துவமற்ற பொருளாதார உறவுகள் உள்ளன எனச் சார்புக் கோட்பாட்டாளர்கள் விளக்குவர். சார்பு நாடுகளின் சார்பு நிலை (Dependency) அல்லது தங்கியிருத்தல் பலமற்ற அந்நாடுகளில் விருத்திக் குறைவையும், பலமுள்ள மைய நாடுகளில் விருத்தியையும் (Development) ஏற்படுத்துகிறது. மைய நாடுகள், சார்பு நாடுகளைச் சுரண்டுகின்றன. இவ்விரு வகை நாடுகளுக்குமிடையே மேலாதிக்கம் (Dominance), சார்பு நிலை (Dependence) என்னும் உறவுகள் நீடிக்கின்றன.

விருத்தியும் (Development) குறைவிருத்தியும் (Underdevelopment) ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை. விருத்தியுற்ற மைய நாடுகளுக்கும் குறைவிருத்தியுடைய குறைவளர்ச்சி நாடுகளுக்கும் (Less Developed Countries - LDC) இடையே சமத்துவமற்ற உறவுகள் நீடிக்கின்றன.

சார்பு நிலை இருவகையானது என்றும் சார்புக் கோட்பாட்டாளர்கள் விளக்குவர். மேலே குறிப்பிட்டதுபோல் சார்பு நாடுகளுக்கும், மைய நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வெளியகச் சார்பு நிலை (External Dependency) என்பர். சார்பு நாடு ஒன்றுக்குள்ளேயும், மையம் - சார்புப் பகுதி என்ற வகையிலான உள்ளகச் சார்புநிலை (Internal Dependency) செயற்பாட்டில் உள்ளது எனவும் இக்கோட்பாடு விளக்குகிறது.

அடுத்து சார்புக் கோட்பாட்டை இலங்கைக்கும், இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கும் பிரயோகித்து, எவ்வாறு தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்த இம்மாகாணங்கள் தமது சுயத்துவத்தை இழந்து கொழும்பு என்ற மையத்தின் சார்புப் பகுதிகளாக மாறின என்பதை நோக்குவோம். இதனை விளக்குவதற்கு வி. நித்தியானந்தம், குமாரி ஜயவர்த்தன ஆகிய இருவரது நூல்களையும் ஆதாரமாகக் கொண்டுள்ளோம்.

யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் ஆட்சியின் கீழ் வருவதற்கு முன்னர் சுயத்துவம் உடைய பொருளாதாரத்தைக் கொண்டிருந்தது. போர்த்துக்கேயருடன் ஆரம்பித்த காலனித்துவ ஆட்சி ஒல்லாந்தர், பிரித்தானியர் வரை தொடர்ந்தது. காலனித்துவத்தின் கீழ் யாழ்ப்பாணத்தினதும் வடக்குக் கிழக்கினதும் சுயத்துவம் இழக்கப்பட்டது. அவை படிப்படியாக குறைவிருத்திப் பகுதிகளாயின. பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையின் மத்திய மலைநாட்டில் கோப்பித் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கோப்பிச் செய்கையுடன் பெருந்தோட்டப் பொருளாதாரம் ஒன்று உருவாகியது. அது தேயிலை, றப்பர், தெங்கு உற்பத்தியை பிரதானப்படுத்தியதாக வளர்ச்சிபெற்றது.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளின் பொருளாதாரம் தன் சுயத்துவத்தை இழந்தது மட்டுமன்றி, இலங்கையின் மையப்பகுதியாக (Centre) மாற்றம் பெற்ற கொழும்பு நகரின் சார்பு மண்டலமாகவும் (Periphery) அப்பகுதிகள் மாறின. இலங்கை முழுமையாக உலக முதலாளித்துவப் பொருளாதார முறைமையில் பிணைக்கப்பட்டு எப்படி ஒரு சார்பு மண்டலமாக மாறியதோ, அதேபோன்று உள்நாட்டிலும் கொழும்பு மையமாகவும் வடக்கு, கிழக்கு கொழும்பின் சார்பு மண்டலமாகவும் மாற்றம் பெற்றது. உலக முதலாளித்துவ வளர்ச்சியின் சமனற்ற விருத்தி (Underdevelopment) உள்நாட்டுக்குள்ளும் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியது.

இந்தச் சமனற்ற வளர்ச்சியை விளக்கும் இரு நூல்கள் இக்கட்டுரைக்கு ஆதாரமாக அமைகின்றன. அவற்றில் ஒன்று பேராசிரியர் வி. நித்தியானந்தம் எழுதிய 'இலங்கையின் பொருளாதார வரலாறு - வடக்குக் கிழக்குப் பரிமாணம்' என்பது ஆகும். இன்னொரு நூல் குமாரி ஜெயவர்த்தன எழுதிய 'அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை: இலங்கையில் காலனித்துவ முதலாளித்துவத்தின் தோற்றம்' (Nobodies to Somebodies: The Rise of the Colonial Bourgeoisie in Sri Lanka) எனும் நூலாகும். இவ்விரு நூல்களோடு சார்புக் கோட்பாட்டாளர்கள் எடுத்துக்கூறிய எண்ணக்கருக்களான,

•சமனற்ற விருத்தி

•குறைவிருத்தியின் விருத்தி (Development of Underdevelopment)

•மையத்தில் தங்கியிருக்கும் சார்பு மண்டலம்

ஆகியவற்றின் துணையுடன் வடக்குக் கிழக்கின் குறைவிருத்தி விளக்கப்படும்.

பொருளாதார சுயத்துவத்தை இழத்தல்

1619ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரின் ஆட்சி அதிகாரத்தின் பிடியில் வீழ்ச்சியுற்ற காலத்தில் இருந்து படிப்படியாக வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமது பொருளாதார சுயத்துவத்தை இழக்கலாயின. 'இலங்கையின் பொருளாதார வரலாறு - வடக்குக் கிழக்குப் பரிமாணம்' என்னும் நூலில் கலாநிதி நித்தியானந்தம் இவ்வாறு எழுதுகிறார்.

"சமூகப் பொருளாதார அளவுகோல்களைக் கொண்டு பார்க்குமிடத்து, யாழ்ப்பாண இராச்சியம் ஒரு தன்னிறைவு சமுதாயமாக விளங்கியிருந்தது. உணவு, சமூக சேவைகள் என்ற யாவும் தனித்தனியே யாழ்ப்பாண இராச்சியத்துக்குள்ளான உற்பத்தி அலுவல்களில் மாத்திரமன்றி அதன் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளினதும் பங்களிப்புடனேயே பூர்த்தியாக்கப்பட்டது. 1344ஆம் ஆண்டு இபின் பதூதா (Ibn Battuta) இலங்கைத் தீவுக்கு விஜயம் மேற்கொண்ட போது, யாழ்ப்பாண இராச்சியம் பெருமளவு வர்த்தக அலுவல்களிலீடுபடுவதொன்றாகவும், பரந்தளவு கடல் கடந்த தொடர்புகளைக் கொண்டதொன்றாகவும் விளங்கியிருந்ததென்று குறித்துச் சென்றமை ஈண்டு குறிப்பிடத்தக்கது." (பக். 17, மே.கு.நூல்)

1619ஆம் ஆண்டிற்கு முன்னர் யாழ்ப்பாண இராச்சியம் சுயத்துவமான பொருளாதாரத்தைக் கொண்டிருந்தது. காலனித்துவத்தின் கீழ் அது தன் சுயத்துவத்தை இழந்தது. நித்தியானந்தம் அவர்களின் நூலின் 2ஆம், 3ஆம் அத்தியாயங்களை சார்புக் கோட்பாட்டு எண்ணக்கருக்களின் பின்னணியில் வாசிக்கும் பொழுது இவ்வுண்மை தெளிவாகும். வடக்குக் கிழக்கு மாகாணங்களின் குறைவிருத்தி காலனித்துவத்தின் ஆட்சியுடன் ஆரம்பித்துவிட்டது எனலாம். போர்த்துக்கேய காலனித்துவத்திற்கு அடுத்து டச்சுக்காரர்களிடமும் பின்னர் பிரித்தானியரிடமும் யாழ்ப்பாணம் கைமாறியது. வடக்குக் கிழக்கின் ஏனைய பகுதிகளும் கைமாறின. பிரிட்டிஷ் காலனித்துவத்தின் கீழ் மிகக் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மாற்றங்கள் சமனற்ற வளர்ச்சியைத் தீவிரப்படுத்தி வடக்குக் கிழக்கு மாகாணங்களை கொழும்பின் சார்பு மண்டலம் (Periphery) என்ற நிலைக்கு மாற்றின. இந்த மாற்றங்களை அடுத்து நோக்குவோம்.

சார்பு மண்டலம் ஆதல்

1619ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சி ஒரு முக்கிய நிகழ்வு என்று கொள்வோமாயின், 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார மாற்றம் வடக்குக் கிழக்கை ஒரு சார்பு மண்டலமாக ஆக்கும் திருப்புமுனையாக அமைந்தது. இலங்கையின் மத்திய மலைநாட்டில் கோப்பிச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. கோப்பிச் செய்கையில் ஆரம்பித்த வணிக முதலாளித்துவம் (Merchant Capital ism) தேயிலை, றப்பர், தெங்கு என்னும் ஏற்றுமதிப் பயிர்களை உற்பத்தி செய்யும் பெருந்தோட்ட உற்பத்தி முறையை ஏற்படுத்தியது. ஏற்றுமதி, இறக்குமதி, போக்குவரத்து, வர்த்தகம், கைத்தொழில் ஆகியவற்றையும் ஒன்றிணைத்து பெருந்தோட்ட உற்பத்திமுறை துரித வளர்ச்சி பெற்றது. இக்கட்டத்தில் வடக்குக் கிழக்கின் பொருளாதாரம் அந்தரே குந்தர் பிராங், சமிர் அமின் ஆகியோர் விவரித்திருக்கும் சார்புப் பகுதி (அதாவது சார்பு நாடு ஒன்றிற்குள் அமையும் சார்பு மண்டலம் - Periphery Within Periphery) என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்தச் செயல்முறையை குமாரி ஜயவர்த்தனவின் நூலை ஆதாரமாகக் கொண்டு விளக்குவோம்.

குமாரி ஜயவர்த்தன 'இலங்கையில் தொழிலாளர் இயக்கத்தின் எழுச்சி' (The Rise of Labor Movement in Ceylon) (1972) என்ற நூலின் ஆசிரியர். இவர் இலங்கையின் முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சியைப் பற்றி முன்பு குறிப்பிட்ட நூலில் (Nobodies to Somebodies) ஆராய்ந்துள்ளார். 19ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற முதலாளித்துவத்தின் தமிழ்ப் பங்காளிகள் தமது வாழ்விடத்தை கொழும்புக்கு இடமாற்றிக் கொண்டனர். இந்த இடப்பெயர்ச்சி தவிர்க்க முடியாததும் மிகவும் அவசியமானதும் ஆயிற்று. வடக்குக் கிழக்கு இலங்கையின் சார்பு மண்டலமாகவும், கொழும்பு அதன் மையமாகவும் மாறிய கட்டத்தில் இலங்கையின் தமிழ் முதலாளித்துவம் 'கொழும்புத் தமிழ்' ஆகியதில் வியப்பெதுவும் இல்லை. குமாரி ஜயவர்த்தன அவர்கள் 'தமிழ் முதலாளித்துவம்' என இந்த மாற்றத்தைச் சரியாக அடையாளப்படுத்துகிறார். எமது கட்டுரையின் எஞ்சிய பகுதியில் பின்வரும் தலைப்புகளில் இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பில் வடக்குக் கிழக்கு எவ்விதம் சார்பு மண்டலமாக மாறியது என்பதை மேலும் விரிவாக ஆராய்வோம்.

1. கொழும்பு மையமாதலின் முக்கியத்துவம்

2. ஆரம்பநிலை மூலதனத் திரட்சியும் வடக்குக் கிழக்கும்

3. கொழும்புத் தமிழ் முதலாளித்துவத்தின் எழுச்சி

கொழும்பு மையமாதலின் முக்கியத்துவம்

பிரித்தானிய ஆட்சியின்போது இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் யாவற்றின் மையமாக கொழும்பு மாற்றம் பெற்றது. மத்திய மலைநாடும், இலங்கையின் தென்மேற்கு மாகாணமும் (குறிப்பாக கொழும்பு, பாணந்துறை, மொறட்டுவ, களுத்துறை ஆகிய நகரங்களும் அவற்றைச் சார்ந்த பகுதிகளும்), கொழும்பு நகரமும் இலங்கைப் பொருளாதாரத்தின் மையம் ஆகின. பொருளாதார நடவடிக்கைகளின் மையமாக மட்டுமன்றி, அரசியல், சமூக நடவடிக்கைகளின் மையமாகவும், காலனித்துவ ஆட்சியின் நிர்வாக இயந்திரத்தின் செயற்பாட்டுத் தளமாகவும் கொழும்பு மாற்றம் பெற்றது.

இலங்கையின் தமிழ் முதலாளித்துவம் தேசிய நிலைப்பட்ட உயர்குழாம் (National Elite) ஆகும். அது தன் பொருளாதாரப் பரிமாணம் வழியிலான உயர்குழாம் தகுதியை பிரதேச மட்டத்தில் கால் கொண்டபடி நின்றவாறே பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் யாழ்ப்பாணமும், மட்டக்களப்பும் இலங்கைப் பொருளாதாரத்தின் விளிம்புநிலைப் பகுதியாக, சார்புப் பகுதியாக மாறிவிட்டிருந்தன. அவை தம் சுயத்துவத்தை இழந்து கொழும்பு என்ற மையத்தின் சுரண்டலுக்கும், சமூக, அரசியல், கலாசார அடிமைத்தனத்திற்கும் உரிய பிராந்தியங்களாக மாறத் தொடங்கின. ஆக, 19ஆம், 20ஆம் நூற்றாண்டின் தமிழ் முதலாளித்துவம் 'கொழும்பு முதலாளித்துவம்' ஆகவும் இருந்தது.

19ஆம் நூற்றாண்டில் உயர்நிலை பெற்ற தமிழ்க் குடும்பங்களில் ஒன்று பொன்னம்பலம் குமாரசுவாமி குடும்பம். இக்குடும்பத்தில் இருந்து சேர். முத்துக்குமாரசுவாமி, அவரின் மகன் ஆனந்தகுமாரசாமி, சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் ஆகியோர் தோன்றினர். இவர்கள் 19ஆம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியல், சமூக, பண்பாட்டு வாழ்க்கையில் முதன்மை பெற்றிருந்த தலைவர்களாவர். இக்குடும்பத்தின் எழுச்சிக்கு ஏதுவாக இருந்த காரணிகள் இரண்டினை குமாரி ஜயவர்த்தன குறிப்பிடுகிறார்.

"குமாரசுவாமி குடும்பத்தின் நிலை இரண்டு பிரதான தீர்மானங்கள் மூலம் உறுதியாயிற்று. அவற்றுள் முதலாவது யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு இடம்மாறியது தொடர்பான தீர்மானம். கொழும்பு அன்று வர்த்தகத்தினதும் அரசாங்க நிர்வாகத்தினதும் மையமாக இருந்தது. இரண்டாவது அக்குடும்பத்தினர் ஆங்கிலக் கல்வியை நாடியது. ஆங்கிலக் கல்வி மேல் நோக்கிய சமூக உயர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகுத்தது. அரசியல் ஆதாயத்தையும் வழங்கியது." (பக். 209)

பொன்னம்பலம் குமாரசுவாமி குடும்பத்தின் எழுச்சிக்கு ஏதுவாக இருந்த இரு காரணிகளும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எல்லோருக்கும் பொதுவான விடயங்களாகவே இருந்தன. அவற்றுள் முதலாவது, கொழும்பு நோக்கிய இடப்பெயர்வு இல்லாமல் தேசிய உயர்குழாத்தின் உறுப்பினர் என்ற வகையில் தேசிய மட்டத்தில் உயர்நிலை பெறுதல் சாத்தியமற்றதாகவே இருந்தது. மைக்கல் றொபர்ட்ஸ் தமது கட்டுரை ஒன்றில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் உயர்நிலை பெற்றிருந்த இலங்கையின் உயர்குடும்பங்கள் 21ஐ பட்டியலிட்டுகிறார். இப்பட்டியலில் இடம்பெறும் ஏழு குடும்பங்கள் விவரம் வருமாறு.

பிரான்சிஸ்கோ - மொறட்டுவ

ஹர்மானிஸ் டயஸ் - பாணந்துறை

பொன்னம்பல முதலியார் - கொழும்பு

அட்ரியன் ஜயவர்த்தன - கிராண்ட்பாஸ்

பானபொக்கே - உடபலாத்த, கண்டி

குறுவில - கண்டி

ரம்புக்பொத்த - ஊவா

இங்கே கவனிக்கக்கூடிய முக்கிய விடயம் இதுதான். மொறட்டுவ, பாணந்துறை, உடபலாத்த, கண்டி, ஊவா என்ற பிரதேச அடையாளங்களைக் கொண்டவர்கள் தமது சொந்த இடத்தில் கால் கொண்டு நின்றவாறே வர்த்தகம், உயர்தொழில் என்பவற்றில் உயர முடிந்தது. ஆனால், இலங்கைத் தமிழர்கள் கொழும்புக்கு இடம்பெயருதல் உயர்ச்சிக்கான முதல் நிபந்தனை ஆயிற்று.

ஆரம்பநிலை மூலதனத் திரட்சியும் வடக்குக் கிழக்கும்

ஒரு நாட்டின் முதலாளித்துவ வளர்ச்சியில் ஆரம்ப மூலதனத் திரட்சிக் (Primitive Accumulation) கட்டம் மிக முக்கியமானதாகும். 1796ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பின்னர் இந்நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் உள்ளூர் முதலாளித்துவ வர்க்கம் ஒன்று படிப்படியாக வளர வழிவகுத்தது. இந்த முதலாளித்துவ வர்க்கம் கொழும்பு நகரையும் கரையோரச் சிங்கள மாகாணங்களான மேற்கு மாகாணம், தென் மாகாணம் என்பவற்றையும் மையமாகக் கொண்டு வளர்ச்சிபெற்றது. உள்ளூர் முதலாளி வர்க்கம் தமக்கு வேண்டிய ஆரம்ப மூலதனத்தை சாராய உற்பத்தி, சாராயக் குத்தகை என்பன மூலம் பெற்றது. சாராய வர்த்தகம் மூலம் ஆரம்ப மூலதனத் திரட்சி ஏற்பட்டதையும், அதன் பயனாக முதலாளித்துவம் எழுச்சி பெறுவதையும் குமாரி ஜயவர்த்தன தமது நூலின் மூன்றாம்

அத்தியாயத்தில் விவரிக்கிறார். இந்த அத்தியாயத்துக்கு 'சாராய வர்த்தகம் மூலம் மேற்கிளம்பல்' (Takingoff through the arrack trade) எனத் தலைப்பிட்டுள்ளார்.

சாராய வர்த்தகத்தின் வளர்ச்சிப் போக்கினை ஆராயும் போது வடக்குக் கிழக்கு மாகாணம் ஏன் முதலாளித்துவ வளர்ச்சியின் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பது தெரியவரும். சமனற்ற வளர்ச்சியின் பின்னணியை இது எடுத்துக்காட்டுவதாக உள்ளது. சாராய வர்த்தகத்தின் சமனற்ற வளர்ச்சி 19ஆம் நூற்றாண்டின் பிரதான இயல்பாக இருந்தது.

1837ஆம் ஆண்டு முதல் 1863 வரையான 25 வருட காலத்தில் சாராயக் குத்தகை வருமானமாக அரசுக்குக் கிடைத்த தொகை மூன்று மடங்கு அதிகரித்தது. 1837இல் இது 40,000 ஸ்டெர்லிங் பவுண்களாக இருந்து 1861-62இல் 120,000 ஸ்டெர்லிங் பவுண்களாக உயர்ந்தது. வெவ்வேறு மாகாணங்களில் கிடைத்த குத்தகை வருமானத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை பின்வரும் புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

மாகாணம்	186 - 161 காலத்தில் குத்தகை வருமானம் (ஸ்டெர்லிங் பவுண்களில்)
மேற்கு மாகாணம்	57,000
மத்திய மாகாணம்	38,000
வடமேற்கு மாகாணம்	11,000
தென் மாகாணம்	8,000
வடக்கு மாகாணம்	4,000
கிழக்கு மாகாணம்	3,000

(குமாரி ஜயவர்த்தன, மே.கு.நூல், பக். 83)

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் குத்தகைக்காரர்களும் குத்தகைத் தொகையும் 1870ஆம் ஆண்டு

இடம்	குத்தகைக்காரர்	தொகை (ஸ்டெர்லிங் பவுண்)
யாழ்ப்பாணம்	T. ராமலிங்கம்	3,315
மன்னார்	A. கதிரவேலுப்பிள்ளை	907
வன்னி	M. வெற்றிவேலு (1855ஆம் ஆண்டு)	240
திருகோணமலை	அ. சின்னக்குட்டிப்பிள்ளை	2,450
மட்டக்களப்பு	பஸ்டியன் டி சில்வாவும் A. பெர்ணாண்டோவும் (நீர்கொழும்பைச் சேர்ந்தவர்)	525

(குமாரி ஜயவர்த்தன, மே.கு.நூல், பக்.82)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சாராய உற்பத்தியும் வியாபாரமும் இலாபகரமாக இருக்கவில்லை என்பதற்கான காரணங்களை அறிந்து கொள்வதற்கு, சாராயம் என்ற பண்டத்தின் உற்பத்தி - நுகர்வு இயல்புகள் சிலவற்றையும் அந்த வியாபாரம் ஏன் மேற்கு மாகாணத்திலும், மத்திய மாகாணத்திலும் இலாபகரமாக இருந்தது என்பதையும் நோக்குதல் வேண்டும்.

1.சாராயம் குடிப்பதற்கான கலாசாரம் ஒன்று தொழிலாளர் வர்க்கக் குடியிருப்புகளையும் நகரங்களையும் சார்ந்துமே வளர்ச்சியடைந்தது.

2.கோப்பித் தோட்டங்களுக்கு கூலித் தொழிலாளர்களாக அழைத்துவரப்பட்டவர்கள் மத்திய மலைநாட்டில் சாராயத் தவறணைகளின் விற்பனையை பல மடங்கு உயர்த்தினர். கொழும்பிலும் மேற்கு மாகாண நகரங்களிலும் பெருந்தோட்டத்தோடு இணைந்த பல தொழில்கள் சார்ந்து உழைப்பாளர் வகுப்பு ஒன்று உருவானது. சாராயத்தின் நுகர்வு இதனால் அதிகரித்தது.

3.கட்டாய ஊழியமான ராஜகாரியம் ஒழிக்கப்பட்ட பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் பெருந்தெருக்கள், ரெயில்வே முதலிய பொதுத்துறை வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டவர்களுக்குக் கொடுப்பனவு பணமாக வழங்கப்பட்டது. இப்பணத்தின் ஒரு பகுதியை தவறணைகளுக்கு இத்தொழிலாளர்கள் கொடுத்தனர். மாலை வேளைகளில் தவறணைகளில் கூடிக் குடிக்கும் பழக்கத்திற்கு தொழிலாளர் அடிமைகளாயினர்.

4.கொழும்பு - கண்டி வீதியில் கோப்பித் தோட்டங்கள் ஏற்பட்ட பின்னர் வீதிப் போக்குவரத்துக்கும் பொருள் ஏற்றியிறக்கலுக்கும் மாட்டு வண்டிகள் பெருந்தொகையில் உபயோகிக்கப்பட்டன. 1847ஆம் ஆண்டில் கொழும்பு, கண்டிக்கு இடையில் ஒரு ஆண்டுக் காலத்தில் 79,000 தடவைகள் மாட்டு வண்டிப் பயணம் நிகழ்ந்ததாக மதிப்பிடப்பட்டது. ரெயில்வே ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் மாட்டு வண்டிக்காரர் கொழும்பு-கண்டிப் பாதையில் சேவை செய்தனர். மாட்டு வண்டிக்காரர்கள் தவறணைகளின் வாடிக்கையாளர்களாய் இருந்தனர்.

5.கொழும்பு நகரில் இராணுவத்தினருக்குரிய கன்ரீன்களிலும் (Military Canteens) சாராயம் விற்பனை ஆகியது. இந்த கன்ரீன்களிற்கு வழங்கல் செய்யும்

ஒப்பந்தம் மிகுந்த இலாபம் தருவதாக இருந்தது.

வட மாகாணத்தில் இருந்து அரசுக்கு கிடைத்த வருமானம் ஒப்பிட்டளவில் மிகக் குறைவாக இருந்தது. அங்கு கூலி உழைப்பாளர் வகுப்பு ஒன்றின் தோற்றத்திற்கான பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. அந்தப் பகுதிகளின் உழுகுடிச் சமூகத்தின் கலாசாரத்தில் குடிப்பழக்கம் வேரூன்றவில்லை. குடிகாரருக்குத் தேவையான பனங்கள்ளு கொல்லைப்புறத்தில் உள்ள பனையில் இருந்து கிடைத்தது. உள்ளூர் சாராயமும் குடிசைத் தொழில் முறையில் உற்பத்தியாகி களவாக விற்கப்பட்டது. கிழக்கு மாகாணத்திலும் இந்த நிலைமையே இருந்தது.

ஆரம்பநிலை மூலதனத் திரட்சியில் முக்கிய பங்கு வகித்த சாராயக் குத்தகை பற்றி இதுவரை குறிப்பிட்டோம். சாராயக் குத்தகை தவிர்ந்த பிற வியாபாரத் துறைகள் பலவற்றின் மூலமும் முதலாளித்துவ வளர்ச்சிக்கான மூலதனத் திரட்சி நிகழ்ந்தது. அத்துறைகளாவன:

- ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம்
- கரையோர நகரங்களிற்கும் இந்தியா (தூத்துக்குடி), பர்மா போன்ற இடங்களிற்கும் இடையிலான கப்பற் போக்குவரத்தும் வர்த்தகமும், படகுகள், தோணிகள் உற்பத்தி செய்தல் தொழிலும் (Coastal Trade and Shipbuilding)
- உள்ளூர் வர்த்தகமும், போக்குவரத்தும்
- அரசாங்கத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பொருட்கள், சேவைகள் வழங்கல்
- நிலங்களை கொள்வனவு செய்தல்; குறிப்பாக நகரத்தின் நிலம், வீடு, கட்டடம் ஆகியவற்றின் முதலீடு
- கறுவா வர்த்தகமும், கறுவாத் தோட்டங்களும்
- நெல், மீன் பொருட்களின் வரிக்குத்தகை, ஆயக்குத்தகை, பலவகையான வரிகளை அறவிடுதல்

இவ்விதமான வியாபாரங்களிற்கான வாய்ப்புகளும் மேற்கு மாகாணத்தில், குறிப்பாக கொழும்பு நகரத்தில் அதிக அளவில் இருந்தன. கொழும்பு மையமாகவும், ஏனைய பகுதிகள் சார்பு மண்டலங்களாகவும் மாற்றமடைய சமனற்ற வாய்ப்புகள் காரணமாக இருந்தன. இவ்வாய்ப்புகளில்,

- ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம்
- •கொழும்பு நகரில் (கறுவாக் காட்டுப் பகுதியில்)

அசையாச் சொத்துகளில் முதலீடு செய்தல்

ஆகிய இரு வழிகளும் மிக முக்கியமான முதலீடுகளாக இருந்தன. இவ்விரு துறைகளிலும் முதலீடு செய்வதற்கு வடக்குக் கிழக்கின் முயற்சியாளர்கள் கொழும்புக்கு இடம்பெயர்தல் முதல் நிபந்தனையாக இருந்தது. இந்த இடப்பெயர்வை மேற்கொள்ளாதவர்கள் உள்ளூர் மட்டத்தில் பெரிய மனிதர்களாக அல்லது உள்ளூர் உயர்குழாமாக இருந்தார்களே அன்றி தேசிய நிலைப்பட்ட முதலாளி வர்க்கத்தின் உறுப்பினர்கள் ஆக முடியவில்லை.

கொழும்புத் தமிழ் முதலாளித்துவத்தின் தோற்றம்: 1830 - 1930

1830 முதல் 1930 வரையான ஒரு நூற்றாண்டு வரலாற்றை ஆராய்ந்து பார்க்குமிடத்து, கொழும்பு நகரம் என்ற மையம் சார்ந்து எழுச்சி பெற்ற வர்த்தக முதலாளித்துவத்தில் சமனற்ற வளர்ச்சி தெளிவாக வெளிப்பட்டது. இதற்கான காரணங்களை குமாரி ஜெயவர்த்தனவின் கீழ்கண்ட மேற்கோள் விளக்குகிறது.

"வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் சேர்ந்த இலங்கைத் தமிழர்களுக்கு முதலீட்டுத் திரட்சிக்கான பிரதான வழிகள் 19ஆம் நூற்றாண்டில் முடக்கப்பட்டே இருந்தன. சாராய உற்பத்தி வழிகளும் 19ஆம் நூற்றாண்டில் மூடப்பட்டே இருந்தன. சாராய உற்பத்தி, பெருந்தோட்டங்கள், காரீய அகழ்வுத் தொழில் (Graphite Industry), வர்த்தகம், ஏற்றுமதியும் இறக்குமதியும் ஆகியனவே அக்காலத்தில் மூலதனத் திரட்சிக்கான பிரதான வழிகளாக இருந்தன. வடக்குக் கிழக்கில் சனத்தொகை அடர்த்தி குறைவாக இருந்ததால் வர்த்தகம், சாராய வியாபாரம் என்பன மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

கனிம வளம் அப்பகுதிகளின் இயற்கை வளமாக இருக்கவில்லை. கோப்பி, தேயிலைப் பெருந்தோட்டங்கள் மத்திய மலைப் பிரதேசங்களில் தொடங்கப்பட்டன. வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சாராயக் குத்தகை ஏலத்தின் மூலம் கிடைத்த வருவாய் பற்றிய தரவுகளை ஆராய்ந்தால் மூலதனத் திரட்சிக்கு இருந்த தடைகள் தெளிவாகும்." (குமாரி ஜெயவர்த்தன, மே.கு.நூல், பக். 201)

இங்கே மேற்கோள் காட்டிய பகுதியில் இரு விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

•ஆரம்ப மூலதனத் திரட்சி வடக்குக் கிழக்கில் குறைவாக இருந்தது.

•வர்த்தகம், சாராய உற்பத்தி, காரீய அகழ்வுத் தொழில், கோப்பி, தேயிலை, பெருந்தோட்டங்கள் ஆகிய

வர்த்தக உற்பத்தித் துறைகள் வடக்குக் கிழக்குக்கு வெளியேதான் மையம் கொண்டிருந்தன.

இவ்விரு காரணங்களினாலும் வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்கள் முதலாளித்துவப் பாதையில் முன்னேறுவதற்கான தடைகள் பிரித்தானிய காலனித்துவத்தின் ஆரம்ப கட்டத்திலேயே உருவாகிவிட்டன. இந்தத் தடைகள் திட்டமிட்டுச் செய்யப்பட்டன என்றோ, ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் சூழ்ச்சி என்றோ கூறுவதற்கு இல்லை. பொருளாதார மாற்றத்தின் புறநிலையான கட்டமைப்பு இயல்புகளில் (Structural Features) இதற்கான விளக்கத்தைக் கண்டுகொள்ள முடியும். குமாரி ஜெயவர்த்தன தொடர்ந்து எழுதும்போது புள்ளிவிவரங்களுடன் கூடிய விளக்கம் ஒன்றைத் தந்து நிலைமையைத் தெளிவாக்குகிறார்.

"தமிழர்களிடம் செல்வம் (மூலதனம்) பெரும் அளவில் சேரவில்லை. இதனால் பெருந்தோட்டங்களிலும், காரீயச் சுரங்கங்களிலும் தமிழர்களின் முதலீடுகள் மிகக் குறைவாக இருந்தன. 1870ஆம் ஆண்டில் ஐரோப்பியர் அல்லாதவர்களின் (சுதேசிகளின்) பெருந்தோட்ட முதலீடுகள் பற்றிய தரவுகளைப் பார்த்தால் இரண்டு தமிழர்களின் பெயர்கள் மட்டுமே இருப்பது தெரியவரும். ஒருவர் ஈ. நன்னித்தம்பி. இவர் தும்பறவில் 419 ஏக்கர் தோட்டத்தை வைத்திருந்தார். மற்றவர் எம். முத்துசாமி. இவர் றங்கலவில் 350 ஏக்கர் தோட்டத்தை வைத்திருந்தார். பெருந்தோட்டத் துறையில் தமிழர் முதலீட்டின் பலவீனம் (இலங்கைப்) பொருளாதாரத்தின் ஓர் இயல்பாக நிலைபெற்றது." (பக். 202, மே.கு. நூல்)

இலங்கையின் முதலாளித்துவம் கோப்பி, தேயிலை, றப்பர், தெங்குப் பயிர்ச் செய்கையை முதன்மையான உற்பத்தியாகக் கொண்டு அதனைச் சார்ந்து பிற துறைகளிலும் வளர்ச்சி பெற்றது. இம்முதலாளித்துவ முறைமையில் தமிழ் முதலாளித்துவத்தின் இடம் என்ன என்பதை, 1979இல் மைக்கேல் றொபர்ட்ஸ் எழுதிய கட்டுரையில் எடுத்துக்காட்டிய புள்ளிவிவரங்களை மேற்கோள்காட்டி பின்வருமாறு குமாரி ஜெயவர்த்தன குறிப்பிடுகின்றார்.

"றொபர்ட்ஸ் தரும் தகவல்களின்படி (1979ஆம் ஆண்டுக் கட்டுரை) 224 பெருந்தோட்டங்கள் ஐரோப்பியர் அல்லாதவர்களுடையதாய் (இலங்கையர்) இருந்தன. இந்தப் பெருந்தோட்ட உடமையாளர்களில் 25 பேர் தமிழர்களாய் இருந்தனர். இந்த 25 பேர்களிலும் 1000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட தோட்டங்களை உடமையாக வைத்திருந்தவர்கள் சிலரே. சி.எம். பிரிட்டோ, எஸ். டபிள்யூ. சேனாதிராஜா (பங்குடமை), எம். கதிரவேலுப்பிள்ளை, டாக்டர் எஸ்.சி. போல், என். ரத்தினசபாபதி, டாக்டர் யோன் றொக்வூட் ஆகியோரே இவ்விதம் 1000 ஏக்கருக்கு மேற்பட்ட தோட்டங்களை வைத்திருந்தோர். தமிழர்களின் தேயிலைத் தோட்டங்கள் 146 ஏக்கரும், றப்பர் 288 ஏக்கரும் மட்டும் இருந்தன."

தொகுப்புரை

இக்கட்டுரையில் எடுத்துக்கூறப்பட்ட பிரதான கருத்துகளை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. சார்புக் கோட்பாட்டின் பிரதான கருத்துகளில் சமனற்ற வளர்ச்சி என்பது ஒன்று. உலகளாவிய சமனற்ற வளர்ச்சி மட்டுமல்ல, நாடுகளுக்கு உள்ளேயும் மையம், சார்பு மண்டலம் என்ற பிரதேச ரீதியான சமனற்ற வளர்ச்சி நிகழ்கிறது.

2. இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் சார்பு மண்டலங்களாக, விளிம்பு நிலைப் பிரதேசங்களாகத் தாழ்ந்தன. அங்கு மூலதனத் திரட்சிக்கான வாய்ப்புகள் இருக்கவில்லை. இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தி மையங்கள் வடக்குக் கிழக்குக்கு வெளியே தான் இருந்தன.

3. தமிழர்களிடையே தோன்றிய முதலாளித்துவ உயர்குழாம் கொழும்புக்கு இடம்பெயர்ந்தது. இந்த உயர்குழாம் 'கொழும்புத் தமிழர்' ஆகத் தம்மை மாற்றிக்கொள்ளும் தேவையிருந்தது.

4. கொழும்புக்கு இடம்பெயருதல் என்பதோடு கல்வியால் உயர்ச்சி பெறுதல் என்பதையும் தமிழர்கள் உயர்ச்சிக்கான வழியாகக் கொண்டனர். இதனால் வர்த்தகம், சாராய உற்பத்தியும் குத்தகை வர்த்தகமும், காரீயச் சுரங்க முதலீடு போன்ற வழிகளில் அல்லாமல் உயர்குழாம் தகுதியை ஆங்கிலக் கல்வியின் வழி பெற முயன்றனர்.

சுருங்கக்கூறின் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் கொழும்பு என்ற மையத்தின் சார்பு மண்டலமாக மாறின. இப்பகுதிகளில் கால்கொண்டு நின்றவாறே முதலாளித்துவம் ஒன்று வடக்குக் கிழக்கில் தோன்ற முடியவில்லை. கொழும்பை மையமாகக் கொண்டு தமிழ் உயர்குழாம் ஒன்று உருவானது. இந்த உயர்குழாம் தனது உயர்ச்சிக்கு ஆங்கிலக் கல்வியை ஒரு கருவியாகக் கொண்டது. ஆரம்பம் முதலே பலவீனமுடைய முதலாளித்துவமாகவே கொழும்புத் தமிழ் முதலாளித்துவம் இருந்து வந்தது.

பெருந்தோட்ட உற்பத்திமுறைமையின் உதயமும் புதிய கடவுளர் உருவாக்கமும்: தேயிலைத் தொழில்துறைசார் தெய்வங்களை முன்வைத்து

எம். எம். ஜெயசீலன்

எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.



அறிமுகம்

ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுமத்தின் கடவுளர்களினதும் வழிபாட்டு முறைகளினதும் மேற்கிளம்புகையில் அக்குழுமத்தின் பௌதீகச் சூழல், உற்பத்தி முறை, உற்பத்தி உறவு ஆகியனவும் அவற்றினால் கட்டியெழுப்பப்படும் வாழ்க்கை முறையும் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளன. அவ்வாறு உருவாக்கம்பெறும் வழிபாட்டு மரபானது அக - புறக் காரணிகளால் அச்சமூகத்துள் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தகவமைப்பு அடைகிறது. அதேவேளை, அச்சமூகம் அக்குறிப்பிட்ட பௌதீகச் சூழலைவிட்டு வெளியேறிய பின்பும் அவ்வழிபாட்டு மரபு அவர்களிடத்துத் தொடர்வதுடன் புதிதாக முகங்கொள்ளும் சமூக, பண்பாட்டு வாழ்முறையோடு பூர்வீகப் பண்பாட்டை இணைவுபடுத்தி, புதிய வழிபாட்டம்சங்களைத் தோற்றுவித்துக் கொள்வதும் நிகழ்கிறது. தமிழ்ச் சமூகக் குழுக்களுக்குள் பிராந்திய மற்றும் உற்பத்திசார் குழுமங்களின் வேறுபாடுகளுக்கு ஏற்பவும் காலத்துக்குக் காலம் ஏற்பட்டுவந்துள்ள வாழ்வியல் மாற்றங்களுக்கு ஏற்பவும் கடவுளர் உருவாக்கத்திலும் அக்கடவுளர்களின் வழிபாட்டு முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. குறிப்பாக, ஒரு காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த கடவுளர்கள் இன்னொரு காலத்தில் செல்வாக்கு இழக்க, வேறு கடவுளர்கள் முதன்மை பெறுதல், சில கடவுளர்கள் முற்றிலும் கைவிடப்படுதல், வெவ்வேறு கடவுளர்கள் ஒன்றாக இணைதல், புதிய கடவுளர்கள் உருவாக்கம் பெறுதல், ஒரு குறிப்பிட்ட குழுமத்துக்குரிய கடவுளை வேறொரு குழுமம் தமக்குரிய கடவுளாகக் கொள்ளல் அல்லது ஒரு குறிப்பிட்ட குழுமத்துக்குரிய கடவுள் பொதுநிலைக் கடவுளராக மாறுதல், பூர்வீக வழிபாட்டு முறைகள் சிலவற்றைக் கைவிடுதல், கிராமிய வழிபாடுகள் சமஸ்கிருதமயமாதலுக்கு உள்ளாதல், சமஸ்கிருதமயமான வழிபாட்டு முறைகளைத் தமிழ்மயப்படுத்தல் போன்ற பல மாற்றங்கள் நிகழ்ந்தேறியுள்ளன.

காலனியக் காலத்தில் அறிமுகமான கோப்பி, தேயிலை முதலான பெருந்தோட்ட உற்பத்திமுறையும் அவ்வுற்பத்திமுறையை அடிப்படையாகக் கொண்ட சமூக உருவாக்கமும் தமிழரின் சமய வழிபாட்டு மரபில் புதிய கூறுகளைத் தோற்றுவித்தன. பெருந்தோட்டத் தொழிலை நாடி, சொந்தக் கிராமங்களையும் தொழில்களையும் விட்டு வெவ்வேறு நாடுகளுக்குச் சென்ற மக்கள், தம் பூர்வீக வழிபாட்டு மரபுகளை வெவ்வேறு அளவுகளில் பின்பற்றியதுடன் அப்பூர்வீக மரபுகளைப் புதிதாகக் குடியேறிய நாட்டினது வாழ்முறையுடன் இணைத்தும் பின்பற்றலாயினர். அதனால் அவர்களின் சமய வழிபாட்டு மரபில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டதோடு முற்றிலும் புதிய அம்சங்களும் இணைந்துகொண்டன.

தென்னிந்தியாவின் திருச்சி, சேலம், மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், வேலூர் போன்ற பகுதிகளின் கிராமப்புறங்களிலிருந்து இலங்கையின் மத்திய பகுதிகளில் குடியேற்றப்பட்ட மலையகத் தமிழர்கள், தமிழ்நாட்டில் தாம் பின்பற்றிய பூர்வீகப் பண்பாட்டுப் பாரம்பரியங்களையே இங்கு தொடர்ந்தும் பின்பற்றலாயினர். அப்பண்பாட்டுப் பாரம்பரியங்களைத் தொடர்ந்தும் பேணுவதற்குரிய சாதகமான சூழ்நிலை இலங்கையில் நிலவியுள்ளது. "பெருந்தோட்ட முறையில் தொழிலாளர்கள் வெளி உலகின் தொடர்பு இல்லாமல் பிரித்து தனிமைப்படுத்தப்பட்டார்கள். மொழியால், மதத்தால் வேறுபட்ட சமூகம் ஒன்று அயலில் சூழ இருக்க, அதன் மத்தியில் அந்நியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டார்கள்" (குமாரி ஜெயவர்தன, 2009: 74). அதனால் பண்பாட்டுக் கலப்புக்கான இடைவெளி அற்றிருந்துள்ளது. அத்துடன், தமிழ் நாட்டிலிருந்து கூலி உழைப்பிற்காக அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட முறை, குடியிருப்புகளின் அமைவு, பூர்வீக சாதித் தொடர்ச்சி, இறுக்கமான கட்டுப்பாடுகள் கூடிய பெருந்தோட்ட நிர்வாக அமைப்பு, தொழில், தொழிற்சங்கம் தொடர்பான தொழில் ஒழுங்கமைப்பு, அரசியல் தனிமைப்பாடு, மக்களின் சமூக - பொருளாதார நிலைப்பாடு, அடிக்கடி இந்தியாவுக்குச் சென்றுவருவதற்குச் சாதகமாக அமைந்த புவியமைவு போன்றன மலையகத் தமிழரின் பூர்வீகப் பண்பாட்டின் தொடர்ச்சியான நிலைப்புக்குக் காரணங்களாக அமைந்தன (சிவத்தம்பி: 1985).

பெருந்தோட்டத் தொழிலாளர்களாகக் குடியேறியவர்கள் பெரிதும் இந்துக்களாகவே இருந்த காரணத்தால் இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியங்களே இங்கு பின்பற்றப்பட்டன. தென்னிந்தியப் பூர்வீகத் தொடர்ச்சியும் இலங்கையில் நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்க்கை நிலையும் - வாழ்க்கைச் சூழலும் அம்மக்களிடையே மதநம்பிக்கைகளை வலுவாக நிலைபெறச் செய்துள்ளன. பாதுகாப்பற்ற கடல் பயணம், நீண்ட தூர நடைபயணம், வறட்சி, வெப்பம், குளிர் மற்றும் கொலரா, அம்மை முதலான நோய்கள், பெருந்தோட்டங்கள் அமைத்த போது ஏற்பட்ட அனர்த்தங்கள், பெருந்தோட்டங்களுக்குள்ளேயே முடக்கப்பட்ட வாழ்க்கைமுறை போன்ற காரணங்களால் பூர்வீக மதநம்பிக்கைகள் அம்மக்களிடையே அதிக அழுத்தம் பெற்றன. அதனால் "அவர்கள் வந்திறங்கிய துறைமுகங்களிலும், பிரயாணம் செய்யும்போது ஓய்வெடுத்த இடங்களிலும்,

நிரந்தரமாகத் தங்கிக் குடியிருப்புகள் ஏற்படுத்திய இடங்களிலும் இந்து வழிபாட்டிடங்கள் நிறுவப்பட்டதுடன் பல்வேறு சமூக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மலையகத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட சமூக வசதிகளில் மத நடவடிக்கைகளுக்கான வசதிகள் முதன்மையான இடத்தை வகித்தன. இதனால் மலையகம் எங்கும் வழிபாட்டிடங்கள் தோன்றலாயின. அத்தோடு மக்கள் தங்கள் நம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், விரத நாட்கள், பண்டிகைகள், கூத்துகள், கலைகள், இலக்கியம், பொழுதுபோக்கு நடவடிக்கைகள், விளையாட்டுகள், கிரியைகள் போன்றவற்றைத் தொடர்ந்தும் பேணுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டன" (சிவத்தம்பி, 1993 : 08).

மலையகத் தமிழரின் சமய வழிபாட்டு மரபுகளும் சமூக நடைமுறைகளும் பிரதானமாக இந்துமுறைகளாக அமைந்த பொழுதிலும் அவை இலங்கையின் ஏனைய பிராந்தியங்களில் வாழ்கின்ற சக இந்துக்களுடையதை விட வேறுபாடு கொண்டவையாகவே விளங்குகின்றன. அவர்களது சமய வழிபாட்டு மரபுகளும் சமூக நடைமுறைகளும் தென்னிந்தியாவின் எந்தக் கிராமத்திலிருந்து வந்தார்களோ எந்தச் சாதியைச் சேர்ந்திருந்தார்களோ அதற்கேற்ற முறையிலேயே வேறுபட்டுக் காணப்பட்டன (Velupillai: 1970). அவை கால வேறுபாடுகளுக்கு ஏற்ப வெவ்வேறு மட்டங்களில் இன்றும் எஞ்சியுள்ளன.

பெருந்தோட்ட உற்பத்திமுறை சார்ந்த தொழில் முறைகள், அத்தொழில்முறை உருவாக்கிய வாழ்க்கை நிலையையும் தொழில்துறைசார்ந்த புதிய கடவுளர்களையும் உருவாக்கியதுடன் அக்கடவுளர்களுக்கான பிரத்தியேக வழிபாட்டு முறைகளையும் கட்டியெழுப்பின. அவை மலையகத் தமிழரின் தனித்துவமான பண்பாட்டு அடையாளமாக விளங்குகின்றன.

இலங்கையில் தேயிலைத் தோட்டங்களின் பரம்பலானது பரந்து விரிந்துள்ளது. மத்திய மாகாணம், ஊவா மாகாணம் ஆகியவற்றில் செறிவாகவும் சப்பிரகமுவ மாகாணம், தென்மாகாணம் முதலானவற்றில் குறைவாகவும் தேயிலைத் தோட்டங்கள் காணப்படுகின்றன. இப்பிராந்திய வேறுபாடுகள் அவர்களின் பண்பாட்டு நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அதனால் பெருந்தோட்டத் தொழில்துறைசார் தெய்வங்கள் எனப் பொதுவாக அடையாளப்படுத்தப்பட்டாலும் அவ்வழிபாட்டை நிகழ்த்துவதில் - நிகழ்த்தும் நடைமுறைகளில் தோட்டங்களுக்குத் தோட்டம் சிற்சில வேறுபாடுகள் நிலவுகின்றன. இக்கட்டுரைக்கான மூலத்தரவுகள், கண்டி மாவட்டத்தின் ரங்கலை பிராந்தியத்தில் உள்ள தோட்டங்களில் திரட்டப்பட்டவையாகும்.

தேயிலை உற்பத்தியுடன் தொடர்புடைய தெய்வங்கள்

தேயிலைச் செய்கையில் நாற்று நடுதல், கொழுந்து பறித்தல், கவ்வாத்து வெட்டுதல், மட்டம் வெட்டுதல், கொழுந்தினைத் தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லுதல், தொழிற்சாலையில் கொழுந்தினைத் தேயிலைத் தூளாக்குதல் எனும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வொவ்வொரு செயற்பாட்டுக்கும் ஒவ்வொரு கடவுளர் என முறையே தவறணைமுனி, கொழுந்துசாமி, கவ்வாத்துசாமி, மட்டத்துசாமி, கம்பிமுனி, றோதைமுனி ஆகிய தெய்வங்களை வணங்கி வருகின்றனர். இவ்வழிபாடுகள் யாவும் தொழிலின் போது நிகழும் அபாயங்கள், அனர்த்தங்களில் இருந்து தம்மைப் பாதுகாத்தல், வளத்தினைப் பெருக்குதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. தவறணைமுனி

தவறணைமுனி வழிபாடானது, தேயிலைக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படும் இடத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. தேயிலைக் கன்றுகள் நாற்றுமேடையிட்டு வளர்க்கப்படும் இடம் 'தவறணை' எனப்படுகின்றது. அத்தவறணையில் பணியாற்றும் ஆண் தொழிலாளர்களின் தலைமையில் இவ்வழிபாடு முன்னெடுக்கப்படுகிறது. ஆண்டுக்கு ஒருமுறை நிகழ்த்தப்படும் இவ்வழிபாட்டை, இக்காலத்தில்தான் மேற்கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகள் எவையும் இல்லை. தவறணையின் தலைமைப் பணியாளர் அல்லது அவர் தலைமையில் ஏனைய தவறணைத் தொழிலாளர்கள் தீர்மானிக்கும் காலத்தில் அப்பூசை வைக்கப்படுகின்றது.

மாலை வேளையில் இப்பூசையை நிகழ்த்துதல் வழமை. சில தோட்டங்களில் காலையில் நிகழ்த்துதலும் உண்டு. பீடங்கள் ஏதுமின்றி நிலத்தில் சிறிய முக்கோண வடிவக் கல்லை நட்டு வழிபடுகின்றனர். மாலை வேளையில் நிகழ்த்தப்படும் வழிபாட்டில் உயிர்ப்பலி (சேவல்) இட்டு, சாராயம், சுருட்டு, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேசிக்காய் (எலுமிச்சம் பழம்) என்பன படையலிடப்படுகின்றன. பூசாரி அல்லது தவறணையின் தலைமைப் பணியாளர் பூசையை நிகழ்த்துவார். விளக்கேற்றி, தீப தூபம் காட்டியதும் படையலில் உள்ள தேசிக்காயை நான்காக வெட்டி நாற்திசைக்கும் வீசுவார். பின்னர் மஞ்சள் நீரைச்

சேவலின் தலைக்குத் தெளித்து கடவுள்முன் தூக்கிப்பிடித்து, மூன்றுமுறை சாமிக்கு மேலாகச் சுற்றுவார். அதன்பின் சேவலை வெட்டி, அதன் ஈரலைத் தீயில் சுட்டுக் கடவுளுக்குப் படைப்பார். பூசைமுடிய பிரசாதமாக அந்த ஈரல் துண்டு பங்கிட்டு வழங்கப்படும். வெட்டப்பட்ட சேவலை அவ்விடத்திலேயே சமைத்து உண்பர். மிகுதி உணவை வீடுகளுக்கு எடுத்துச்செல்வது இல்லை. ஆண் தொழிலாளர்களும் சிறுவர்களுமே பூசையில் கலந்துகொள்வர். காலை வேளையில் பூசைசெய்யும் போது பலியிடல் இடம்பெறுவதில்லை. சாராயம், சுருட்டு என்பன வைக்கப்படுவதில்லை. சர்க்கரைப் பொங்கல் படையலாக வைக்கப்படுகிறது. அதனுடன் வெற்றிலை, பாக்கு, பழம், பால் என்பன படைக்கப்படுகின்றன. காலையில் இடம்பெறும் பூசையின் போது பெண் தொழிலாளர்கள் கலந்துகொள்ளும் வழமை அரிதாக நிலவுகிறது.

2. கொழுந்துசாமி

தேயிலைக் கொழுந்து செழித்து வளர வேண்டும் என்ற நோக்கில் வளம் வேண்டி, வருட ஆரம்பத்தில் அல்லது வறட்சிக் காலங்களில் கொழுந்துசாமி வழிபடப்படுகின்றது. பெண்களின் தலைமையில் இவ்வழிபாடு இடம்பெறுகிறது. தேயிலைச் செடி ஒன்றுக்கு மாலையிட்டு அதனைக் கடவுளாக உருவகித்து வழிபடுகின்றனர். இவ்வழிபாட்டில் பலி இடல் வழக்கில் இல்லை. பொங்கல், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பால், பச்சை அரிசி அல்லது துள்ளுமா ஆகியன படைக்கப்படுகின்றன. நீரில் ஊற வைத்த சிவப்புப் பச்சை அரிசியில் சீனி, தேங்காய் ஆகியவற்றைக் கலந்து தருவது பச்சை அரிசியாகும். நீரில் ஊற வைத்த சிவப்புப் பச்சை அரிசியை உரலில் இட்டு இரண்டொன்றாகக் குற்றி, சீனி, தேங்காய் ஆகியவற்றைக் கலந்து தருவது துள்ளுமாவாகும். சிலவேளைகளில் அவித்த கடலையும் படையலிடப்படுகிறது.

3. கவ்வாத்துசாமி

கவ்வாத்துசாமி அல்லது கவ்வாத்துமுனி வழிபாடானது ஆண்டுதோறுமின்றிக் காலத் தேவைக்கேற்ப ஆண்களால் மேற்கொள்ளப்படுகின்றது. கவ்வாத்து வெட்டும் காலப்பகுதியில் மட்டுமே அவ்வழிபாடு மேற்கொள்ளப்படும். ஆனால், ஆண்டுக்கு ஒரு தடவைக்கு மேல் வழிபாட்டினை நிகழ்த்துதல் வழக்கில் இல்லை. கவ்வாத்து வெட்டுதல் என்பது ஒரு தொழில் நிகழ்வாகும். தேயிலையின் விளைச்சலைப் பெருக்கவும் தேயிலைச் செடிகள் பரந்து வளரவும் கொழுந்து பறித்தலை இலகுபடுத்தவும் தேயிலைச் செடிகளின் நுனி, ஆண்களைக் கொண்டு வெட்டுவிக்கப்படும். இந்நிகழ்வு தொடங்கும் காலங்களிலேயே இவ்வழிபாட்டுக்கான ஆரம்ப நிகழ்வு இடம்பெறுகின்றது. கவ்வாத்து வெட்டும்போது தொழிலாளர்களுக்கு எவ்வித அனர்த்தங்களும் ஏற்படக்கூடாது எனக் கவ்வாத்துசாமிக்கு நேர்த்தி வைத்து, கவ்வாத்து வெட்டி முடிந்ததும் அத்தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆடு (சிலவேளைகளில் ஆட்டுடன் சேவல்) பலியிட்டு, சாராயம், சுருட்டு, வெற்றிலை, பாக்கு, பழம், தேசிக்காய் ஆகியவற்றைப் படைத்து, நேர்த்திக்கடனைக் கழிக்கின்றனர். பூசை ஆரம்பித்ததும் தேசிக்காயை வெட்டி நாற்புறமும் வீசுவர். அதன்பின் பலியிடல் இடம்பெறும். பலியிடப்பட்டவை யாவும் அவ்விடத்திலேயே சமைத்து உண்ணப்படும். அவற்றை வீடுகளுக்கு எடுத்துச் செல்வதோ பெண்களுக்கு வழங்குவதோ இல்லை. கவ்வாத்து சாமிக்கெனத் தனித்த வழிபாட்டுத் தலங்கள் இல்லை. தேயிலைச் செடிகளுக்கு இடையிலோ மலையடிவாரங்களிலோ நீரூற்று இருக்கும் இடத்திற்கு அருகில் உள்ள ஆல், அரசு, சவுக்கு போன்ற மரங்களுக்கடியிலோ முக்கோண வடிவிலான கல்லினை வைத்து வழிபடுவதே மரபாக உள்ளது.

4. மட்டத்துசாமி

கவ்வாத்து வெட்டுதல் என்பது போலவே 'மட்டம் வெட்டுதல்' என்பதும் ஒரு தொழில் நிகழ்வாகும். தேயிலைச் செடிகளைக் கவ்வாத்து வெட்டியபின் புதிதாகத் துளிர்விடும் தளிர்கள் ஒரே சீராக வளர்வதற்காகப் பெண்களைக் கொண்டு வெட்டுவிக்கப்படும். இதனைத் தொழிலாளர்களின் வழக்கில் 'மட்டம் வெட்டுதல்' என்பர். அதற்குப் பயன்படுத்தப்படும் கத்தி, 'மட்டக்கத்தி' எனப்படுகிறது. அத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் ஆயுதங்களால் தமக்கு எவ்வித ஆபத்தும் நேரிடாதவாறு பாதுகாப்பு வேண்டி இவ்வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். இவ்வழிபாடானது ஆண்டுதோறுமன்றி காலத்தேவையின் பொருட்டே இடம்பெறுகின்றது. கவ்வாத்துமுனியைப் போல இவ்வழிபாட்டையும் வருடத்திற்கு ஒருதடவைக்கு மேல் நிகழ்த்துதல் வழக்கில் இல்லை. இவ்வழிபாட்டில் தேயிலைச் செடியொன்றுக்கு மாலையிட்டு அதனைத் தெய்வமாக உருவகித்துக்கொள்வதோடு பலியிடல் ஏதும் இன்றி பொங்கல், வெற்றிலை, பாக்கு, பால், பழம், பச்சை அரிசி அல்லது துள்ளுமா போன்றன படைக்கப்படுகின்றன. சிலவேளைகளில் அவித்த கடலையும் படைக்கப்படுகிறது.

5. கம்பிமுனி

கம்பிமுனி எனும் வழிபாடு, மலையகப் பெருந்தோட்டங்களில் முற்காலத்தில் நிலவியுள்ளது. போக்குவரத்து வசதிகள் விருத்தியடையாத

காலங்களில், பறிக்கப்பட்ட கொழுந்தினை மூட்டைகளில் கட்டி, மலையுச்சிகளில் இருந்து பாதை இருக்கின்ற இடத்துக்குக் கம்பிகள் மூலம் அனுப்புவர். மலையுச்சியில் இருந்து கொழுந்து சென்றடைய வேண்டிய இடத்துக்குத் தொடுக்கப்பட்ட கம்பிகள் அதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பயன்படுத்தப்பட்ட கம்பிகள் பயன்பாடற்ற நிலையில் இன்றும் பல தோட்டங்களில் காணப்படுகின்றன. இந்தக் கொழுந்து மூட்டைகளை அனுப்பும் தொழிலில் ஈடுபட்ட ஆண்களால் அக்கம்பி, தெய்வமாகக் கருதப்பட்டு வழிபடப்பட்டுள்ளது. அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆண்கள் தாம் தெரிவு செய்யும் காலத்தில் சேவல் பலியிட்டு, சாராயம், சுருட்டு, வெற்றிலை, பாக்கு, பழம், தேசிக்காய் முதலானவற்றைப் படைத்து வழிபட்டுள்ளனர். இங்கு படையலிடப்படுபவற்றையும் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதோ பெண்களுக்கு வழங்குவதோ இல்லை. இன்று இக்கம்பிகளின் தேவை அற்றுப்போனதால் இவ்வழிபாடு வழக்கொழிந்து போய்விட்டது.

6. றோதைமுனி

பெருந்தோட்டத் தொழிற்துறைக்கே உரிய வழிபாடுகளில் றோதைமுனி வழிபாடு மிகவும் பிரசித்தமானதாகும். தேயிலைத் தொழிற்சாலையுடன் இணைந்ததாக விளங்குகின்ற இவ்வழிபாடானது, தொழிற்சாலைகளில் இயந்திரங்களுடன் தொழில்புரியும் போது எவ்வித அனர்த்தங்களும் ஏற்படாதிருப்பதற்காக வருடத்திற்கு ஒருமுறை நிகழ்த்தப்படுகின்றது. இவ்வழிபாட்டினை முறையாக நிகழ்த்தாவிடின் றோதைமுனி இரத்தப்பலி - உயிர்ப்பலி எடுத்துவிடுவான் என்ற நம்பிக்கை அத்தொழிலாளர்களிடையே வழக்கில் உண்டு.

ஒவ்வொரு தேயிலைத் தொழிற்சாலைக்கு அருகிலும் றோதைமுனிக்கென வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தலங்கள் பெரியளவிலான கட்டடங்கள் ஏதுமின்றி சிறிய பீடமொன்றுடன் காணப்படுகின்றன. பீடத்தில் சூலம் அல்லது வேல் நடப்பட்டிருக்கும். சில இடங்களிலேயே பீடத்திற்கு மேலே கூரை அமைக்கப்பட்டுள்ளன.
தொழிற்சாலையில் தொழில்புரியும் அனைத்து ஆண்கள் (சாதாரண தொழிலாளி முதல் தோட்டத்தின் பெரிய துரை வரை) உட்பட அத்தொழிற்சாலையுடன் இணைந்த தோட்டங்களில் தொழில்புரியும் ஆண்களும் வழிபாட்டில் கலந்துகொள்வர். பெரும்பாலும் ஆடு (சில இடங்களில் ஆட்டுடன் சேவலும்) பலியிடப்படுகின்றது. சாராயம், சுருட்டு, வெற்றிலை, பாக்கு, பழம், தேசிக்காய் என்பன பிராதான படையல் பொருட்களாக விளங்குகின்றன.
படையலிடப்பட்டவை யாவும் அவ்விடத்திலேயே சமைத்து உண்ணப்படும். அவ்வுணவைப் பெண்களுக்கு வழங்குவதோ வீடுகளுக்கு எடுத்துச் செல்வதோ இல்லை.

றோதைமுனி வழிபாட்டின் தோற்றம் பற்றி மலையகத் தமிழரிடையே வாய்மொழி வழக்காக ஒரு கதை கூறப்படுவதுண்டு. தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்ட பொழுது, கொழுந்தினை (தேயிலையை) அரைப்பதற்காகச் சில்லுடன் கூடிய இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. சில்லினையே மலையகத் தமிழ் வழக்கில் றோதை என்கின்றனர். அதனை ஒரு பிசாசு அல்லது ஒரு பெரும் சக்தி இயக்குவதாக நம்பினர். அதனால் றோதையை இயக்குகின்ற சக்தியை றோதைமுனி என வழிபடத் தொடங்கினர் என்ற வாய்மொழி வழக்கு பெரும்பாலான தோட்டங்களில் வழக்கில் உண்டு. றோதைமுனி என்ற பெயருக்கான காரணத்தை அடியொட்டியதாக அமைந்துள்ள இவ்வழக்கானது, இயந்திரத்தின் அமைப்பையும் அதன் இயக்கத்தினையும் அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ளதைக் காணலாம். இவ்வாறு இயந்திரத்திலிருந்து பாதுகாப்பு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தோற்றம் பெற்ற இவ்வழிபாடானது பின்னர் அந்நிலையிலிருந்து மேலும் விரிவடைந்து முழுத் தேயிலைத் தொழிற்சாலையின் காவல் தெய்வ வழிபாடாக நிலைபெற்றுவிட்டது. சில தோட்டங்களில் முழுத் தோட்டத்துக்குமான காவல் தெய்வமாக றோதைமுனி வழிபடப்படுகின்றது.

பெருந்தோட்டத் தொழில்முறையோடு இணைந்த வகையில் வழிபடப்படுகின்ற தெய்வங்கள் பெரும்பாலும் 'முனி' என்ற பின் ஒட்டைப் பெற்ற தெய்வங்களாக விளங்குவதைக் காணலாம். இத்தொழிற்துறைசார் வழிபாடுகள் தவிர காவல் தெய்வங்களாகவும் 'முனி' என்ற ஒட்டினைப் பெற்ற தெய்வங்கள் மலையகத் தமிழர்களால் வழிபடப்படுவதோடு தென்னிந்தியாவிலும் 'முனி' என்ற ஒட்டினைப் பெற்ற தெய்வ வழிபாடுகள் நிலவுகின்றன. "முனிவு என்றால் சினம், அச்சுறுத்துவது என்று பொருள். நாம் அஞ்சிய வரலாறுதான் இந்த முனிகளின் வரலாறு என்பர்" (சண்முகசுந்தரம், 2009: 611). இதற்கிணங்க, றோதைமுனி வழிபாடு தொழிலாளர் மத்தியில் எழுந்த அச்சத்தினால் தோன்றிய வழிபாடெனலாம். சில்லுடன் கூடிய இயந்திரத்தின் இயக்கம் அச்சமூகத்தவர்களுக்குத் தொடக்க காலத்தே புதிராக விளங்கியுள்ளது. தொழில்நுட்ப தேர்ச்சியற்ற பலர் இயந்திரச் செயற்பாடுகளின் போது காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். எனவேதான் தமது பூர்வீகப் பண்பாட்டின் இணைப்பினால் அச்சில்லினைத் தெய்வமாக்கியுள்ளனர். அதன் அறுபடாத் தொடர்ச்சியாக அவ்வழிபாடு நிலைபெற்று

இற்றைவரை நிகழ்த்தப்பட்டு வருகின்றது. தேயிலை உற்பத்தியோடு இணைந்த ஏனைய தொழில்துறை வழிபாடுகளில் 'முனி' என்ற ஒட்டினைப் பெற்றவையும் அச்சத்தினடிப்படையில் தோன்றிய கடவுளர்களாகவே விளங்குகின்றன.

மேற்கூறிய வழிபாடுகள் தவிர மோட்டுமுனி (மேட்டுமுனி) என்ற வழிபாடும் தொழில்துறையோடு இணைந்த வகையில் முற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. செங்குத்தாக அமைந்துள்ள மலையுச்சிகளில் ஏறி தொழில்புரியும் போது சரிந்துவிழல், காற்றினால் வீசி எறியப்படல் போன்ற அனர்த்தங்கள் இடம்பெறுவதுண்டு. அத்தகைய அனர்த்தங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே தேயிலைமலை உச்சியில் மோட்டுமுனி வழிபாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருந்தோட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற தொழில்துறைசார் தெய்வ வழிபாடுகள் தொழில் பகுப்பு, ஆண் - பெண் இயல்புகள், அவர்களின் வாழ்வியல் முறை ஆகியவற்றுக்கு ஏற்ப வேறுபட்டு அமைந்துள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது. உதாரணமாக, தேயிலை உற்பத்தியில் கொழுந்து பறித்தல், மட்டம் வெட்டுதல் ஆகியன அதிகமாகப் பெண்களால் மேற்கொள்ளப்படும் தொழில்களாகும். அதேபோல் தவறணைத் தொழில், கவ்வாத்து வெட்டுதல், கொழுந்தினைத் தொழிற்சாலைக்கு கொண்டு செல்லுதல், கொழுந்தினைத் தூளாக்குதல் ஆகியன பரவலாக ஆண்களாலே செய்யப்படுகின்றன. அதனால் பெண்கள் செய்யும் தொழிலோடு தொடர்புபட்ட கொழுந்துசாமி, மட்டத்துசாமி ஆகிய வழிபாடுகள் பெண்களின் தலைமையிலும் ஏனைய வழிபாடுகள் ஆண்களின் தலைமையிலும் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன், பெண்களால் முன்னெடுக்கப்படும் வழிபாடுகள் ஆண்கள் தமது தொழிலின் நிமித்தம் நிகழ்த்தும் வழிபாடுகளிலிருந்து பல்வேறு வகைகளில் வேறுபட்டுள்ளன. கொழுந்துசாமி, மட்டத்துசாமி வழிபாடுகளில் பலியிடலோ மது, சுருட்டு முதலியன படைக்கப்படுவதோ இல்லை. பொங்கல், கடலை, பச்சரிசி அல்லது துள்ளுமா, பால், பழங்கள், வெற்றிலை, பாக்கு முதலியனவே படைக்கப்படுகின்றன. அத்தோடு அவற்றினை ஆண், பெண் இருபாலாரும் உண்பதோடு வீடுகளுக்கும் எடுத்துச் செல்வர். ஆண்களின் வழிபாட்டில் பலியிடல், மது, சுருட்டு போன்றன படைக்கப்படுகின்றன. அங்கு படைக்கப்படும் உணவை வீடுகளுக்கு எடுத்துச் செல்வதோ பெண்களுக்கு வழங்குவதோ இல்லை. பலியிடல் இடம்பெறுவதால், அவ்வழமை பின்பற்றப்பட்டு வருகிறது எனலாம். மலையகத் தமிழரின் சமூக, பண்பாட்டு வாழ்வில் 'முனி' என்ற தெய்வம் பல்வேறு வகைகளிலும் சமய, சமூக முக்கியத்துவம் பெற்ற தெய்வமாக விளங்கியுள்ளது. குலதெய்வம், காவல் தெய்வம், தொழில்துறைசார் தெய்வம் எனத் தனித்தும் குழுவாகவும் வழிபடப்படும் கடவுளாக இந்த முனி என்ற ஒட்டினைப் பெற்ற கடவுளர்கள் விளங்கியுள்ளனர். அதனால் சமூகத்தின் எல்லாத் தளத்திலும் செல்வாக்குப்பெற்ற கடவுளாக, 'முனி' என்ற ஒட்டினைப் பெற்ற கடவுளர்கள் விளங்கியுள்ளனர். இந்நிலையாலேயே பெருந்தோட்டத் தமிழரிடையே கிறிஸ்தவ சமயப் பிரசாரத்தை மேற்கொண்டபோது முனியாண்டி வழிபாடு குறித்த எதிர்மாறான விம்பத்தைக் கட்டியெழுப்பி, மக்களிடமிருந்து அவ்வழிபாட்டை அந்நியப்படுத்த முயற்சித்துள்ளனர். உதாரணமாக, 1869ஆம் ஆண்டு, கோப்பித்தோட்டத்தில் கண்டக்டராக இருந்த ஆ. ஜோசப், காலனிய நலனையும் கிறிஸ்தவ மதப்பிரசாரத்தையும் இலக்காகக்கொண்டு எழுதிய கோப்பிக்கிருஷிக் கும்மியில் 'முணியாண்டி வணக்கம்' என்ற தலைப்பில் தோட்டங்களில் நிலவிய இந்துசமய வழிபாட்டு மரபுகளைக் கண்டனம் செய்துள்ளார். அதில் அடங்கியுள்ள பாடல்களில் முனியாண்டியை ஏழைக்கூலியாகவும், எவ்வித சக்தியற்றவனுமாகக் கட்டமைத்து, முனியாண்டியைத் தேவனாகக் காண்பது பைத்தியக்காரத்தனம் என்கிறார். எடுத்துக்காட்டாக:

முனியாண்டி தேவனென்றீரி து
முற்றும் பயித்தியந் தானவீ ர்
முனியாண்டியுச்சி மலைதனி ல்
மூடத்தனமாய்ச் செத்தானறிவீ ர்
ஏழைக் கூலிக் காறனவன்பிளை க்
கேகினான் உன் னாஸ்கிரியினுக் கு
ஏழைக்குமரங்கள் மேலே விழுந்தி ட
ஏங்கியலறிச் செத்தானறிவீ ர்
ஏழைக்கூலி முனியாண்டிறந்த து
எத்தனை பரிதாபம து
தாழ்சுர முதல்யாவுமனுப்பிட ச்
சக்தியுண்டோ சொல்லும்மானிட ரே

(சரவணன், பிரமிளா: 2024)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சமய வழிபாட்டுச் சுதந்திரத்தை வழங்கிய காலனிய அரசு, அம்மக்களிடம் காணப்பட்ட முனியாண்டி வழிபாட்டை கைவிடச்செய்ய, தோட்டக்கூலிகளைப் போலவே அவர்களின் கடவுளான முனியாண்டியையும் ஏழைக்கூலியாகக் கட்டமைத்து, பிழைப்புக்காக

மலையுச்சியில் வேலை செய்தபோது மரம் விழுந்து பரிதாபமாக இறந்தவன் என அக்காலத்தில் இடம்பெற்ற சாதாரண மரணங்களுக்கு இணையாகக் காட்டி, முனியாண்டி சக்தியற்றவன் என்ற கருத்தியலை உருவாக்க முனைந்துள்ளது எனலாம். இருப்பினும், இக்கருத்தியல் தோட்ட மக்களிடையே செல்வாக்குப் பெற்றதாகத் தெரியவில்லை. இன்றுவரை எல்லாத் தோட்டங்களிலும் எஞ்சியுள்ள முனியாண்டிகளே இதற்குச் சிறந்த சான்றாகும். இந்தப் பின்னணியில் நோக்கும்போது மலையகத் தமிழரின் ஆவேசத்தினதும் ஆதிக்க எதிர்ப்பினதும் குறிகாட்டியாகவும் முனியாண்டியைக் கொள்ளலாம்.

முடிவுரை

தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வந்த தமிழர்கள், தம் பூர்வீக வழிபாட்டு மரபுகளைப் புதிதாகத் தோன்றிய பெருந்தோட்டத் தொழில்முறைகளோடு இணைவுபடுத்தியதால் தேயிலை உற்பத்தியோடு இணைந்த வகையில் புதிய கடவுளர்களும் அவர்களுக்கான வழிபாட்டு முறைகளும் தோற்றம்பெற்றுள்ளன. தேயிலைச் செய்கையில் நாற்று நடுதல், கொழுந்து பறித்தல், கவ்வாத்து வெட்டுதல், மட்டம் வெட்டுதல், கொழுந்தினைத் தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லுதல், கொழுந்தினைத் தேயிலைத் தூளாக்குதல் எனும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வொவ்வொரு செயற்பாட்டுக்கும் ஒவ்வொரு கடவுளரை வணங்கி வருவதோடு அக்கடவுளர்களுக்கான பிரத்தியேக வழிபாட்டு முறைகளையும் பின்பற்றி வருகின்றனர்.

கள ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட தோட்டங்களில் தொழில்துறைசார் வழிபாடுகள் பல கைவிடப்பட்டு வருவதைக் காண முடிந்தது. பெருந்தோட்டங்களில் தொழில்செய்வோரின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருதல், தேயிலைக் கன்றுகளை நாற்றுமேடை செய்யும் தவறணைத் தொழில்கள் கைவிடப்பட்டு வருதல், தேயிலை மலைகள் பராமரிப்பற்று காடாதல், தோட்டங்களில் ஆகமவிதிகளுக்கு உட்பட்ட கோவில்களை அமைத்து அந்தணர்களைக் கொணர்ந்து பூசை வழிபாடுகளை மேற்கொள்ளல், தோட்டங்களைவிட்டு நகரங்களையும் கிராமங்களையும் நோக்கிக் குடியேறுகின்றமை அதிகரித்தல் போன்ற பல காரணங்களால் தொழில்துறைசார் வழிபாடுகள் மெல்ல மெல்ல வழக்கிழந்து வருகின்றன. உதாரணமாக, ரங்கலை நிவ்டிவிசன் தோட்டத்தில் முன்னர் இருந்த தவறணை தற்காலத்தில் கைவிடப்பட்டுள்ளது. அதனால் தவறணை முனி வழிபாடு இடம்பெறுவதில்லை. அதனைப் போலவே ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளதால் கவ்வாத்து வெட்டுதல் பரவலாக இடம்பெறாததோடு அவ்வழிபாட்டை இணைந்து மேற்கொள்வதற்கான பெரிய குழுவொன்றும் அற்றுப்போய் உள்ளது. அதனால் கவ்வாத்துசாமி வழிபாடு கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்படவில்லை. அத்தோடு அந்தத் தோட்டத்தில் முத்துமாரி அம்மன் கோவில் ஆகமவிதிக்குட்பட்ட கட்டுமானம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளதோடு அந்தணரைக் கொண்டுவந்து பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தோட்டத்தில் பலியிடல் முதலியன மேற்கொள்ளக் கூடாது என்ற கருத்து அந்தணரால் அறிவுறுத்தப்பட்டு வருவதால் பலரும் பலியிடல்களைக் கைவிட்டுள்ளனர். தேயிலைத் தொழில்துறையோடு இணைந்த சில வழிபாடுகள் மேற்கூறியவாறு கைவிடப்படும் நிலை தொடர்ந்தாலும் றோதைமுனி வழிபாடு மாத்திரம் தவறாது இடம்பெற்று வருகிறது. தொழிற்சாலைகள் தொடர்ந்தும் இயங்குவதாலும் பல தோட்டங்களுக்கு ஒரு தேயிலைத் தொழிற்சாலையே காணப்படுவதால் தொழிலாளர் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும் அவ்வழிபாடு நடைமுறையிலுள்ளது எனலாம்.

பெருந்தோட்ட உற்பத்தி முறையின் உருவாக்கத்துடன் மேற்கிளம்பிய மேற்படி தொழில்துறைசார் கடவுளர்கள் பெருந்தோட்டத்துறையின் வீழ்ச்சி, தொழிலாளர் படையின் சரிவு, மலையகச் சமூக அசைவின் போக்கு முதலான காரணிகளால் தம் இறுதிக் காலத்தினை எட்டி வருகிறார்கள். இன்னும் சில தசாப்தங்களில் அக்கடவுளர்களை வழிபடுவதற்கான தேவை முற்றிலும் அகலக்கூடும். அது தொழில்துறைசார் வழிபாடுகளின் பொது இயல்பாகும்.

உசாத்துணை நூற்பட்டியல்

குமாரி ஜயவர்தன, (2009) இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்

சரவணன், என். மற்றும் பிரதீபன், பிரமிளா (ப.ஆ.) (2024) கோப்பிக் கிருஷிக் கும்மி, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

சிவத்தம்பி, கா., (ப.ஆ) (1993) இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும், ஹற்றன்: உதயம் நிறுவன வெளியீடு.

சிவத்தம்பி, கா., (க.ஆ) (1985) "இலங்கைத் தமிழரது சமூகக் கட்டமைவின் சில அம்சங்கள், இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும், கொழும்பு: சமூக விஞ்ஞானிகள் சங்கம்.

Velupillai, C.V, (1970) Born to Labour, Colombo: M.D. Gunasena

1978 ஆம் ஆண்டு அன்றைய ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஆட்சியாளர்களால் இயற்றப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு கடந்த நாலு தசாப்தங்களுக்கு மேலாக இருந்துவரும் 'பயங்கரவாதத் தடைச்சட்டம்: இல – 48/1979' தமிழ் வாசகர்களுக்கு ஒன்றும் புதுமையான ஒரு சட்டம் அல்ல. அது முதலில் ஒரு தற்காலிக தேவைக்கான சட்டமாகக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் நிரந்தரமான ஒரு சட்டமாக (1982) மாற்றப்பட்டது. பல்வேறு உலக நாடுகள் உட்பட உள்நாட்டு மக்களாலும் எதிர்க்கப்பட்டு வந்ததன் காரணமாக அவ்வப்போது சில திருத்தங்களுக்கான முயற்சிகள் நடந்தபோதும், அதற்குப் பதிலாக ஒரு திருத்தமாக 2022 இல் தயாரிக்கப்பட்ட 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற ஒரு 'சட்டவரைபு – 2023' வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டமே அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்காகக் கைகளில் எடுக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் கூழல் உருவாகிறது. இப்போது அத்தகைய ஒரு நிலை நிலவவில்லை என்றாலும் கூட, இந்தச் சட்டம் பற்றிய, மக்களது ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அது வழங்குகின்ற அதிகாரங்கள் பற்றிய உரையாடல் அவசியமானது. அந்த அடிப்படையில், இந்த 'இலங்கை: பயங்கரவாதத் தடைச்சட்டம் – ஒரு விமர்சனரீதியான மதிப்பீடு' என்றநூலிலுள்ள கட்டுரைகளை நமது 'எழுநா' வாசகர்களுக்காக அதே பெயரில் தொடராக இங்கு தமிழில் தருகிறோம். இந்த நூல், 'மனித உரிமைகளுக்கும் அதன் வளர்ச்சிக்குமான மையத்'தைச் (Centre for Human Rights and Development – CHRD) சேர்ந்த, பேராசிரியர் பேற்றன் பஸ்தியாம்பிள்ளை, றோகண எதிரிசிங்க, என். கந்தசாமி ஆகிய அதன் அமைப்பாளர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட, நாட்டின் முக்கிய ஆளுமைகளால் எழுதப்பட்ட சட்டம் பற்றிய விமர்சனபூர்வமான பத்து ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். எழுநா வாசகர்களுக்கு, நமது ஏனைய நூல்கள் போலவே இதுவும் இன்னொரு முக்கிய நூலாக அமையும் என்று நம்புகிறோம்.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம்: முன்னாள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கவின் பாராளுமன்ற உரை

எஸ்.கே. விக்னேஸ்வரன்

எஸ்.கே. விக்னேஸ்வரன், எழுபதுகளின் பிற்கூறுகளில் சிறுகதை எழுத்தாளராக ஈழத்தின் எழுத்துத்துறைக்குள் அறிமுகமானவர். வடமராட்சியிலுள்ள அம்பன் கிராமத்தைச் சேர்ந்த இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதுடன் மட்டுமன்றி, இலக்கியம், அரசியல் சார்ந்த கட்டுரைகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் வரும் முக்கியமான எழுத்துகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். தொண்ணூறுகளில் கொழும்பிலிருந்து வெளியான 'சரிநிகர்' வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் கனடாவில் வெளியான 'தீபம்' வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்தவர். சரிநிகரில் தொடராக வெளிவந்த அவரது மொழிபெயர்ப்பு நூலான 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்ற பெற்றோருக்கான வழிகாட்டிநூல் இன்றுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இப்போது தாய்வீடு இதழில் அவரது 'பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே' என்ற இன்னொரு மொழிபெயர்ப்பு நூல் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே சரிநிகரில் வெளிவந்து பாதியில் நின்றுபோன மொழிபெயர்ப்பு நூலான, 'தலைமறைவு வாழ்க்கை' என்ற, மறைந்த மதிப்புக்குரிய றெஜி சிறிவர்த்தன அவர்களது நூல், அண்மையில் வெளியாகியுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (MBA) பட்டம்பெற்ற இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்



(1979 ஜூலை 19 அன்று நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், "பயங்கரவாதத் தடைச் சட்டமூலம் (தற்காலிக ஏற்பாடுகள்)" மீதான விவாதத்தின்போது, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் [SLFP] அப்போதைய எதிர்க்கட்சி உறுப்பினரான முன்னாள் அமைச்சரான மைத்திரிபால சேனநாயக்க ஆற்றிய உரை இது.)



மைத்திரிபால சேனநாயக்க
Image Source - jamhoor.org

இடையூறு ஏதுமின்றி இருந்தால், நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள மாட்டேன்.

'பயங்கரவாதத் தடைச் சட்ட (தற்காலிக ஏற்பாடுகள்) மசோதா'வின் நகல் ஒன்று இன்று காலைதான் எங்களுக்குக் கிடைத்தது. இம்மசோதாவை இன்று இரவே நாடாளுமன்றத்தில் அவசரமாக நிறைவேற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம், யாருடைய பெயரிலும் யாருடைய அதிகாரத்தின் கீழும் இந்நாடாளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்படுகின்றனவோ, அந்த மக்களே இம்மசோதாவை முழுமையாகப் படித்துப் பார்ப்பதற்கோ, அதன் உள்ளடக்கங்களை விரிவாக ஆராய்வதற்கோ கூட வாய்ப்பில்லாத சூழல் உருவாக்கப்படுகிறது. இது ஆச்சரியத்திற்குரிய ஒன்றல்ல; ஏனெனில், கடந்த இரண்டு ஆண்டுகளில் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்க முற்பட்ட ஒவ்வொரு மசோதாவும் 'தேசிய நலன் கருதி அவசரமானது' என்று முத்திரை குத்தப்பட்டு, அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற உதவிய மக்களுக்கே தெரியாமலே, அவர்களது முதுகுக்குப் பின்னாலேயே இச்செயல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்மசோதாவைப் பொறுத்தவரை, இதில் எந்தவித அவசரமும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. வடக்குப் பகுதியில் நடைபெறும் பயங்கரவாதச் செயல்களைக் கையாள்வதற்கு இது தேவைப்பட்டால், அதற்கான சட்ட ஏற்பாடுகள் ஏற்கனவே இருக்கின்றன. 'விடுதலைப் புலிகள்', அல்லது அது போன்ற பிற அமைப்புகளைத் தடை செய்வதற்கான சட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருக்கவே செய்கிறது; அத்துடன், 'பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்' (Public Security Ordinance) கீழ் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டு, எந்தவொரு சூழ்நிலையையும் கையாள்வதற்கான முழு அதிகாரமும் அரசாங்கத்திடம் உள்ளது.

இவ்விஷயம் தொடர்பாக, மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் 1972ஆம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் தேதி ஆற்றிய உரையிலிருந்து சில வரிகளை மேற்கோள் காட்டுவதே சிறந்தது என்று கருதுகிறேன். கிளர்ச்சியாளர்களை விசாரித்துத் தண்டிக்க வகை செய்த 'குற்றவியல் நீதி ஆணையங்கள் மசோதாவை' (Criminal Justice Commissions Bill) அவர் அப்போது எதிர்த்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் கூறியது இதுதான்:

"சட்டம் ஒழுங்கு பெருமளவில் சீர்குலைவது மற்றும் பரவலான நாசவேலைகள் அல்லது சேதங்களை ஏற்படுத்தும் குற்றங்கள் ஆகியவற்றை எதிர்கொள்ளக்கூடிய 'பொதுப் பாதுகாப்பு அவசரச் சட்டம்' (Public Security Ordinance) என்ற சட்ட ஏற்பாடு நம்மிடம் உள்ளது. எந்தவொரு அவசர நிலையையும் கையாள்வதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் அரசு இயந்திரத்தின் வாயிலாகப் பிரதமருக்கும் அரசாங்கத்திற்கும் வழங்கும் இந்தச் சட்டத்தின் கீழ், ஒரு கிளர்ச்சியைக் கூட எதிர்கொள்ள முடியும். அரசாங்கம் இதைத் தாண்டிச் சென்று இராணுவ ஆட்சியைக் (Martial Law) கூட அறிவிக்க முடியும். 1952இல் நடைபெற்ற 'ஹர்த்தால்' போராட்டத்தை நாம் கையாண்டோம்; 1971இல் ஏற்பட்ட கிளர்ச்சியை இந்த அரசாங்கம் திறம்பட எதிர்கொண்டது. 'பொதுப் பாதுகாப்பு அவசரச் சட்டம்' அல்லது இராணுவ ஆட்சி அறிவிப்பு ஆகியவற்றின் மூலம் திறம்படவும் விரைவாகவும் கையாள முடியாத, ஆனால் 'குற்றவியல் நீதி ஆணையங்கள் மசோதா'வின் (Criminal Justice Commissions Bill) விதிகள் தேவைப்படும் வகையிலான எந்த வகையான அசம்பாவிதங்கள் இந்நாட்டில்

ஏற்படக்கூடும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.”

சிறி லங்கா சுதந்திரக்கட்சி (SLFP) எப்போதும் அசைக்க முடியாத வகையில் ஒற்றையாட்சி முறையையே ஆதரித்து வந்துள்ளது. 1972ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பில் நாங்கள் உறுதிப்படுத்தியவாறு, இலங்கையின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைக் காப்பதில் நாங்கள் கொண்டுள்ள உறுதிப்பாடு எக்காலத்திலும் கேள்விக்குள்ளானதில்லை. எனவே, நாட்டின் எந்தவொரு பிரிவினைக்கும் நாங்கள் எதிரானவர்கள் என்பதையும், வடக்கில் முன்னெடுக்கப்படும் ‘ஈழம்’ இயக்கத்தை முழுமையாக எதிர்க்கிறோம் என்பதையும் மீண்டும் வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. இலங்கை சுதந்திரக் கட்சி தனது ஆரம்பத்திலிருந்தே ஜனநாயக நாடாளுமன்ற ஆட்சி முறையிலேயே நம்பிக்கை கொண்டுள்ளது. அரசியல் நோக்கங்களை அடைவதற்கான வழிமுறைகளாக வன்முறை மற்றும் பயங்கரவாதம் கையாளப்படுவதை நாங்கள் எதிர்ப்பது இதில் அடங்கியுள்ளது. எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும் வன்முறை மற்றும் பயங்கரவாதத்தை நாங்கள் முழு ஆற்றலுடனும் எதிர்த்துள்ளோம்; அந்த உண்மையை மீண்டும் கூற வேண்டிய அவசியமும் இல்லை.

துரதிர்ஷ்டவசமான உண்மை என்னவென்றால், கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த அரசாங்கத்தின் கீழ் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் மிக வேகமாகச் சீர்குலைந்துள்ளன.

மனித கண்ணியம் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில், வடக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காண்பதில் சிறி லங்கா சுதந்திரக்கட்சி ஒருபோதும் தயங்கியதில்லை என்பதை இந்த அவையின் உறுப்பினர்கள் அறிவார்கள். அதேவேளையில், உறுதியான நடவடிக்கை தேவைப்பட்ட போதெல்லாம் - உதாரணமாக, 1961இல் ‘ஆனையிறவுப்’ (Elephant Pass) பகுதிக்கு அப்பால் தனியான அஞ்சல் முறை மற்றும் அஞ்சல் தலைகளுடன் கூடிய ஒரு சுயாதீனமான இணையான நிர்வாகத்தை நிறுவ முயன்றபோது, அல்லது 1974-75 காலகட்டத்தில் காவல்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கொல்லப்பட்டபோதும், யாழ்ப்பாண மேயர் திரு. ஆல்பிரட் துரையப்பா படுகொலை

சிறி லங்கா சுதந்திரக்கட்சி (SLFP) எப்போதும் அசைக்க முடியாத வகையில் ஒற்றையாட்சி முறையையே ஆதரித்து வந்துள்ளது. 1972ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பில் நாங்கள் உறுதிப்படுத்தியவாறு, இலங்கையின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைக் காப்பதில் நாங்கள் கொண்டுள்ள உறுதிப்பாடு எக்காலத்திலும் கேள்விக்குள்ளானதில்லை. எனவே, நாட்டின் எந்தவொரு பிரிவினைக்கும் நாங்கள் எதிரானவர்கள் என்பதையும், வடக்கில் முன்னெடுக்கப்படும் ‘ஈழம்’ இயக்கத்தை முழுமையாக எதிர்க்கிறோம் என்பதையும் மீண்டும் வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை.

செய்யப்பட்டபோதும், நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு. அருளம்பலம் மற்றும் திரு. தியாகராஜா ஆகியோர் மீது கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் - நாங்கள் பயங்கரவாதத்திற்கு அடிபணியவோ அல்லது பதற்றமடையவோ இல்லை; மாறாக, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட ‘பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்’ (Public Security Ordinance) கீழ் உறுதியான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டோம். நிலைமையைக் கட்டுப்படுத்தியது மட்டுமல்லாமல், இரு முக்கிய சமூகங்களின் தலைவர்களும் நேரில் சந்தித்து பரஸ்பர பிரச்சினைகள் குறித்து விவாதிக்க ஏதுவான சூழலை நாட்டில் உருவாக்குவதிலும் நாங்கள் வெற்றி பெற்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். எனவே, மனிதப் பிரச்சினைகளை இராணுவ நடவடிக்கையின் மூலம் தீர்க்கலாம் அல்லது தீர்க்க வேண்டும் என்ற கருத்தை நாங்கள் ஏற்கவில்லை. இருந்தபோதும், இலங்கையின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க அரசாங்கம் மேற்கொள்ளும் அவசியமான ஒவ்வொரு நடவடிக்கையையும் நாங்கள் ஆதரிப்போம்.

ஆயினும், இன்று நம் முன் உள்ள பிரச்சினையோ வேறுபட்ட ஒன்றாகும். யாழ்ப்பாண

மாவட்டத்தில் சட்டம்ஒழுங்கு சீர்குலைவு ஏற்பட்டால், அந்தச் சூழலைக் கையாள்வதற்கு 'பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்' போதுமானதை விடவும் அதிக ஆற்றல் வாய்ந்ததாக உள்ளது என்ற கருத்தை நாங்கள் ஏற்கிறோம்; இச்சட்டத்தின் கீழ், நடைமுறையிலுள்ள சட்டத்தைத் திருத்துவதோடு மட்டுமல்லாமல் புதிய சட்டங்களை இயற்றும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உள்ளது. அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரான திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் 1972இல் இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தற்போதைய அரசாங்கமே பிப்ரவரி 1979இல் கொண்டு வந்த சட்டத் திருத்தத்தின்படி, 'பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்' கீழ் அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் நாடாளுமன்றத்தின் பயனுள்ள கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகவே இருக்கும். அப்படியிருக்கையில், தற்போது எதிர்கொள்ளும் சிக்கலைக் கையாள்வதற்கு அத்தகைய சிறப்புச் சட்டம் ஏதும் தேவைப்படாத நிலையில், அரசாங்கம் ஏன் ஒரு சிறப்புச் சட்டத்தை இயற்ற முற்படுகிறது? இப்போது நம் முன் உள்ள மசோதாவின் விதிகளை ஆராய்ந்து பார்த்தால் அதற்கான விடை தெளிவாகும்.

'பயங்கரவாதத் தடைச் சட்ட (தற்காலிக ஏற்பாடுகள்) மசோதா' என்பது குற்றங்கள், குற்றங்கள் குறித்த விசாரணை, தடுப்புக்காவல், கட்டுப்பாட்டு உத்தரவுகள், வெளியீடுகளுக்குத் தடை, வழக்கு விசாரணை, அவற்றுக்கான தண்டனை ஆகியவை தொடர்பான 31 பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இதிலுள்ள ஏறக்குறைய ஒவ்வொரு பிரிவும், 1971-77 காலகட்டத்தில் அமலில் இருந்த அவசரகால விதிமுறைகளின் அல்லது 'குற்றவியல் நீதி ஆணைக்குழுக்கள் சட்டம்' (Criminal Justice Commissions Act) அல்லது 1972இன் 'அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம்' ஆகியவற்றின் விதிகளின் இன்னொரு மறுவடிவமாகவே உள்ளன. இச்சட்டங்கள் எல்லாவற்றையும் மனிதாபிமானமற்றவை, காட்டுமிராண்டித்தனமானவை என்று, இதே அரசாங்கம் முன்பு கண்டித்திருந்ததுடன், ஆட்சிக்கு வந்த உடனேயே அவற்றை ரத்துச் செய்தது. சொல்லப்போனால், இப்போதைய இந்த மசோதாவில் சில பிரிவுகள் கடந்த காலங்களில் இருந்த சட்டங்களை விடக் கடுமையானவையாகவும், வேறு சில பிரிவுகள் முன்னெப்போதும் இல்லாத புதிய வகையிலும் அமைந்துள்ளன. இந்த மசோதாவைக் கொண்டுவரும் நோக்கம் வடக்கில் நிலவும் வன்முறை, பயங்கரவாதம் என்பவற்றைக் கையாள்வதை மட்டுமே கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இது மிகவும் பரந்த அளவிலான பயன்பாட்டைக் கொண்டிருப்பதோடு, நாடாளுமன்றக் கட்டுப்பாடற்ற ஒரு நிரந்தர அவசரநிலையை நாடு முழுவதும் உருவாக்க முற்படும் ஒரு முயற்சியாகவும் தெரிகிறது.

'பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்' (Public Security Ordinance) மூலமே, அரசாங்கத்தால் திறம்படக் கையாளக்கூடிய யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற பாதுகாப்புப் பிரச்சினையை ஒரு சாக்காக வைத்து, சாதாரண சட்டத்தின் கீழ் தனக்குக் கூடுதல் அதிகாரங்களை உருவாக்கிக்கொள்ள அரசாங்கம் முயல்கிறது. இந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளின் தோல்வியால் எப்போது வேண்டுமானாலும் ஏற்படக்கூடிய அரசியல் போராட்டங்களை, நாட்டின் எந்தப் பகுதியிலும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் ஒடுக்குவதற்கு இந்த அதிகாரங்கள் அதனால் பயன்படுத்தப்படலாம். ஒரு சிலருக்கு மட்டும் 'திறந்த சந்தைப் பொருளாதாரத்தின்' (Free Economy) பலன்கள் கிடைப்பதற்காக, விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வேலையில்லா நெருக்கடி போன்ற பொருளாதாரச் சுமைகளை, ஏற்கனவே இந்நாட்டு மக்கள் சுமக்கத் தொடங்கியுள்ளனர். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடக வெளியீடுகள் மீதான தணிக்கை, செய்தி நிறுவனங்களை மூட உத்தரவிடும் அதிகாரம், பிடிவிராந்து (Warrant) இல்லாமலே கைது செய்தல், சோதனை செய்தல், தனியாருக்குச் சொந்தமான இடங்களுக்குள் நுழைதல், தனிப்பட்ட ஆவணங்களைப் பறிமுதல் செய்தல், சுதந்திரமான குடிமக்களில் ஒருவரை (சந்தேகத்தின் பேரில்) பொலிஸ் காவலில் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ள உலகளாவிய கால வரையறையான 24 மணிநேரத்தை 72 மணிநேரமாக நீட்டித்தல், ஜூரி (Jury) முறையிலான விசாரணை முறையை ஒழித்தல், ஒப்புதல் வாக்குமூலத்தை அளித்ததாகக் கூறப்படும் நபருக்கு எதிராக மட்டுமல்லாமல் - அவர் குறிப்பிட்ட வேறு எந்த நபர் மீதும் (நடவடிக்கை எடுப்பதற்கு) - பொலிஸ் அதிகாரியிடம் வாய்மொழியாக அளிக்கப்பட்ட

ஒப்புதல் வாக்குமூலத்தைக் கூட ஆதாரமாக ஏற்றுக்கொள்ளும் நிலை... என்று இவை அனைத்துமே ஒரு 'பொலிஸ் அரசு' (Police State) அமைவதற்கான உறுதியான அடித்தளத்தை உருவாக்குகின்றன. சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகச் சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபரையுமே 18 மாதங்கள் வரை தடுத்து வைக்கவோ, அல்லது அவரது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவோ, கடவுச்சீட்டை (Passport) முடக்கவோ, பொதுக் கூட்டங்களில் பேசுவதை அல்லது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்கவோ நீதி அமைச்சருக்கு இந்த மசோதா அதிகாரம் அளிக்கிறது; அத்துடன், இத்தகைய உத்தரவுகளின் நியாயத்தன்மையை நீதிமன்றங்கள் ஆய்வு செய்வதற்கான அதிகாரத்தையும் இது நீக்குகிறது. இவையனைத்தும் இந்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் போராட்டங்களையும் ஒடுக்குவது மட்டுமல்லாமல், அவற்றை முற்றிலுமாக நசுக்குவதற்காகவே திட்டமிடப்பட்டுள்ளன.

இந்த மசோதாவில் உள்ள கடுமையான மற்றும் அடக்குமுறைத் தன்மையை ஓர் உதாரணம் மூலம் அறியலாம்: நாட்டின் தெற்குப் பகுதியிலோ அல்லது ஊவா (Uva) மாகாணத்திலோ உள்ள ஒரு கிராம சபையின் (V.C.) உறுப்பினர் ஒருவர், சக உறுப்பினர் மீது 'குற்றவியல் ரீதியாக மிரட்டியதாக' (Criminal Intimidation) ஓர் அற்பமான புகாரை அளித்தால் கூட, அதுவே இந்த மசோதாவின் கடுமையான விதிகளைச் செயல்படுத்துவதற்குப் போதுமானதாக அமைகிறது.

1979 டிசம்பர் 31க்குள் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையை முடிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்ட காலக்கெடுவானது, யூதர்களின் பிரச்சினைக்கு 'இறுதித் தீர்வு' (Final Solution) காண்பதற்காக 'அடோல்ஃப் ஹிட்லர்' பிறப்பித்த உத்தரவையே நினைவூட்டுகிறது.

வடக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை இராணுவ நடவடிக்கையின் மூலம் தீர்க்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் அறிக்கையில், இந்நாட்டிலுள்ள தமிழ் சிறுபான்மையினரின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றைக் கூட்டுவதாக உறுதியளித்திருந்தது. இவ்வாக்குறுதியால் ஈர்க்கப்பட்ட பெருமளவிலான தமிழ் பேசும் மக்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவர வாக்களித்தனர். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசாங்கம் இந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டது; மாறாக, நிலைமை மேலும் மோசமடைவதற்கும் வன்முறையும் பயங்கரவாதமும் பரவுவதற்கும் அது இடமளித்துள்ளது.

அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக, இந்தக் கட்டத்திலாவது அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ள இலங்கை சுதந்திரக் கட்சி எப்போதும் தயாராகவே இருந்து வருகிறது; இப்போதும் தயாராகவே உள்ளது.

ஏற்கனவே அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் இந்த மசோதாவைச் செயல்படுத்தவும், அதன் கால அளவை அவசரநிலை அமலில் இருக்கும் காலத்திற்குள் மட்டும் மட்டுப்படுத்தவும் இலங்கை சுதந்திரக் கட்சி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

தற்போதைய வடிவில், இந்த மசோதா அரசாங்கத்தை 'பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்' (Public Security Ordinance) விதிகளிலிருந்து விலகிச் செயல்படவும், நடைமுறையில் இலங்கை முழுவதும் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய ஓர் அவசரநிலையை உருவாக்கவும் அனுமதிக்கிறது. இத்தகைய நடவடிக்கையை இலங்கை சுதந்திரக் கட்சி முழுமையாக எதிர்க்கிறது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் முதல் பிரிவின் மீது குழு நிலையில் நாங்கள் ஒரு திருத்தத்தை முன்மொழியவுள்ளோம் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் திருத்தம் பின்வருமாறு அமையும்:

"பக்கம் 1, வரி 25இல், வரி 25, 26 மற்றும் 27இல் உள்ள அனைத்து வார்த்தைகளையும் நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் வார்த்தைகளைச் சேர்க்க வேண்டும்: யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமே நடைமுறைக்கு வர வேண்டும்; மேலும் அம்மாவட்டத்தில் அவசரநிலை அமலில் இருக்கும் காலத்திற்கு மட்டுமே அது நடைமுறையில் இருக்க வேண்டும்."

அரசாங்கம் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால், நாங்கள் இந்த மசோதாவை ஆதரிப்போம்.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம்: திரு. 'அண்டர்வூட்' மணிவாசகம் அவர்களின் கடிதம்



எஸ்.கே. விக்னேஸ்வரன்

(1982இல் காலஞ்சென்ற திரு. அண்டர்வூட் மணிவாசகம் அவர்கள், காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு எழுதிய திறந்த மடல் - செப்டம்பர் 01. 1982)

மாண்புமிகு ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள்,

ஜனாதிபதி, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு,

கொழும்பு.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே,

1979ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்)

1. இலங்கை தேசிய தமிழர் விவகாரங்களுக்கான நிறுவனம் (Ceylon Institute of National and Tamil Affairs - CINTA) என்ற அமைப்பின் நிர்வாகச் சபை, 1982 ஒகஸ்ட் 15 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற தனது கூட்ட அமர்வில், ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர முடிவு செய்தது: இலங்கையின் வடக்கிலும் பிற பகுதிகளிலும் உள்ள ஒரு சில தீவிரவாதக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் வன்முறை மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளை, (இந்த அமைப்பின்) நிர்வாகச் சபை வன்மையாகக் கண்டிக்கிறது; அதேவேளையில், ஆயுதப் படைகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அமுலாக்கம் ஆகியவற்றின் மூலம் வடக்கு மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பயங்கரவாத ஆட்சியை (அச்சச் சூழலை) அதே தீவிரத்துடன் கண்டிக்கவும் செய்கிறது. மேலும், அச்சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்யும்படியும், அச்சட்டத்தின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும், நடைமுறைகளையும் இரத்துச் செய்யும்படியும், அதிகாரிகளை வலியுறுத்துகிறது.

2. ஜூலை 1977இல் நீங்கள் பிரதமராகப் பதவியேற்றபோது, சில ஆண்டுகளிலேயே உங்களுக்கு இத்தகைய தீர்மானத்தை முன்வைக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்று நாங்கள் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை. உங்கள் தலைமையின் கீழ் ஜூலை 1977இல் ஐக்கிய தேசியக் கட்சி (UNP) பெற்ற அமோக வெற்றியின் மூலம், நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை நோக்கிய பாதையில் பயணிக்கும் என்றும், அதற்கு இன நல்லிணக்கமும் மக்களின் அனைத்துப் பிரிவினரின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் மிக அவசியமான காரணிகளாக அமையும் என்றும் நாங்கள் நம்பியிருந்தோம். 1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் நீங்கள் மிகத் துணிச்சலாகக் குறிப்பிட்டிருந்த 'தமிழ் பேசும் மக்களுக்கு உரிய முக்கியத்துவம்' அளிக்கும் அணுகுமுறையானது, உங்கள் தலைமையினதும் அதன் வழிகாட்டுதலின் கீழும் நல்ல பலன்களைத் தர முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்பினோம்.

3. துரதிர்ஷ்டவசமாக, ஏறக்குறைய முதல் மாதத்திலிருந்தே, கடந்த சில ஆண்டுகளாகத் திரண்டுவந்து கொண்டிருந்த சக்திகளின் செயல்கள், செப்டம்பர் 1977இல் வன்முறை எனும் துயர நிகழ்வாக வெடித்தன. இனங்களுக்கிடையிலான உறவுகள் தொடர்ச்சியாகச் சீர்குலைந்து வந்துள்ளதுடன், அவை இன மோதல்களாகத் தீவிரமடைந்து, அவசரகால நிலையை அறிவிக்கவும், ஊரடங்குச் சட்ட உத்தரவுகளைப் பிறப்பிக்கவும், மேன்மைதங்கிய தங்கள் அரசின் நிர்வாகத்தை நிர்பந்திக்கும் நிலையை உருவாக்கிவிட்டுள்ளன.

4. நாட்டின் சட்டம்ஒழுங்கைப் பேணிக்காப்பது எந்தவொரு அரசாங்கத்தினதும் முதன்மைக் கடமை என்பதையும், குறிப்பாகச் சட்டத்தைப் பாதுகாப்பவர்கள் மற்றும் அரசின் ஆயுதப் படைகளுக்கு எதிரான தொடர்ச்சியான வன்முறைச் செயல்களின்போது இக்கடமையை நிறைவேற்றுவது அவசியம் என்பதையும், நமது நிர்வாகக் குழு முழுமையாக உணர்ந்திருந்தது. இருப்பினும், பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கான முதன்மை வழியாக வடக்கு மாகாணத்தை ஒடுக்கும் வகையிலான கடுமையான சட்ட நடவடிக்கைகளைத் தங்கள் மேன்மைதங்கிய அரசு மேற்கொண்டிருப்பதையும், இதன் மூலம் அரசியல் ரீதியான தீர்வுக்கான வாய்ப்புகள் அதனால் கைவிடப்பட்டிருப்பதையும் இந்தக் குழு மிகுந்த கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றது.

5. 1979இல் வடக்கு மாகாணத்தில் ஆறு மாத காலத்திற்கு அவசரநிலையை அமுல்படுத்தி, பயங்கரவாதத்தை வேரறுக்குமாறு ஆயுதப் படைகளுக்குத் தங்கள் மேன்மைதங்கிய அரசு உத்தரவிட்டபோது, பயங்கரவாதத்தின் வேர்களை அகற்றுவதற்கும் மக்களின் குறைகளுக்குத் தீர்வு

காண்பதற்கும் ஏற்ற அரசியல் செயல்முறை ஒன்றையும் அதே நேரத்தில் தொடங்குவீர்கள் என்று வடக்கு மக்கள் பலரும் நம்பினர்.

6. ஆனால், பயங்கரவாதத்திற்கு எதிராக எதிர் பயங்கரவாத நடவடிக்கைகளின் மூலம் அந்தப் பயங்கரவாதத்தை ஒழிக்க அரசு முயற்சிப்பது மக்களை ஏமாற்றமடையச் செய்துள்ளது. 1977 முதல் வடக்கு மாகாணத்தில் ஆயுதப் படைகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு பயங்கரச் சூழல் நிலவுகிறது. இது, வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, வன்முறைச் சம்பவங்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது; ஆயுதப் படை வீரர்களால் கொல்லப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதிலிருந்து இதை அறியலாம். ஆயுதப் படையினரின் இத்தகைய பயங்கரவாதப் போக்கு எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. பயங்கரவாதத்தை எதிர்பயங்கரவாதம் அல்லது அரசுப் பயங்கரவாதம் மூலமாக அல்லாமல், அரசியல் தீர்வு மூலமாக மட்டுமே எதிர்கொள்ள முடியும் என்பது மிகத் தெளிவான முடிவாகும். ஏனெனில், மக்களின் குறைகள் மிகவும் ஆழமானவை; அவற்றை 'லத்தி'களாலோ அல்லது துப்பாக்கிக் குண்டுகள் மூலமாகவோ அடக்கிவிட முடியாது.

7. இலங்கையில் மிகவும் அமைதியான, கடின உழைப்பாளிகளாகவும், குற்றச் செயல்களில் மிகக் குறைவாக ஈடுபடும் இனக்குழுவாகவும் தமிழர்கள் திகழ்கின்றனர் என்பது ஒரு வரலாற்று ரீதியான உண்மை. ஆனால், குறிப்பாக 1956 முதல் பாகுபாடான சட்டமியற்றும் கொள்கைகள், நிர்வாக நடவடிக்கைகள் போன்றவற்றால் எழுந்த கசப்பான ஒரு சூழல் நிலவிய போதிலும், ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால்: பிரதமரைப் படுகொலை செய்வதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற சட்டவிரோத முயற்சிகள் அல்லது வெளிப்படையான கிளர்ச்சி மற்றும் சதிப்புரட்சிகள் (*Coups d'état*) மூலம் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்ற முயற்சிகளை எதிர்கொண்டபோது, அரசாங்கம் சந்தித்த இக்கட்டான சூழலில், தமிழ் பேசும் மக்கள் அதில் பங்கேற்கவோ அல்லது அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவோ இல்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில், தமிழ் பேசும் மக்கள் சட்டத்தை மதித்து நடப்பவர்களாக இருந்திருக்கின்றனர்; வடக்குக் கிழக்குத் தமிழ்ப் பகுதிகள் மிகவும் அமைதியானதும் எவ்வித பிரச்சினைகளும் இல்லாத பகுதிகளாகவுமே இருந்திருக்கின்றன.

8. உண்மையில், 1970ஆம் ஆண்டின் தேர்தல் அறிக்கையில், தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவத்தை அப்போது ஏற்றிருந்த 'தமிழரசுக் கட்சி' (*Federal Party*) மிகத் தெளிவாகக் குறிப்பிட்டதாவது:

"நாட்டை எந்த வகையிலும் பிரிப்பது நாட்டிற்கோ அல்லது தமிழ் பேசும் மக்களுக்கோ பயனளிக்காது என்பது எங்கள் உறுதியான நம்பிக்கை. எனவே, நம் நாட்டை இரண்டாகப் பிரிப்பதை ஆதரிக்கும் எந்தவொரு அரசியல் இயக்கத்திற்கும் ஆதரவளிக்க வேண்டாம் என்று தமிழ் பேசும் மக்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்."

9. ஆயினும், இந்த அறிவிப்பு வெளியான சில ஆண்டுகளிலேயே, புதிதாக உருவாக்கப்பட்ட TULFஇன் ஓர் அங்கமாக மாறியிருந்த தமிழரசுக் கட்சி, சரியாக அதையே செய்தது. இதற்கான காரணங்கள் UNPஇன் 1977ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

10. தாங்கள் இழந்த உரிமைகள், குறைந்து வரும் வாய்ப்புகள் என்பவற்றுக்காகக் கால் நூற்றாண்டு காலம் பொறுமையாகவும் அமைதியாகவும் போராடிய பிறகுதான், தமிழ் மக்கள் தனி அரசியல் இருப்பைத் தேர்ந்தெடுத்தனர்; அதேவேளையில், விரக்தி, அரசின் காவல்துறை, ஆயுதப் படைகள் என்பவற்றின் அவமானகரமான ஒடுக்குமுறை ஆகியவற்றால் அதிக எண்ணிக்கையிலான தமிழ் இளைஞர்கள் வன்முறையை நோக்கித் தள்ளப்படுகின்ற நிலை ஏற்படுகிறது.

11. 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அமைப்பையும் அது போன்ற பிற அமைப்புகளையும் தடை செய்யும் '1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தை' இச்சட்டம் இரத்துச் செய்துள்ளதே, இது உண்மையில் யாருக்காக உருவாக்கப்பட்டது என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இச்சட்டத்தின் விதிகள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விவாதிக்கப்பட்டுள்ளன; அவற்றில் பல விதிகள் குறித்துப் பல எதிர்மறையான கருத்துகள் எழுப்பப்பட்டுள்ளன.

12. வடக்குத் தமிழ்ப் பகுதிகளில் அதிகரித்து வந்த அரசியல் வன்முறைக்கு விடையளிக்கும் வகையிலேயே இச்சட்டம் (இது மாற்றீடு செய்த முந்தைய சட்டத்தைப் போலவே) கொண்டுவரப்பட்டிருந்தாலும், இதில் 'சட்டத்தின் ஆட்சி' (Rule of Law) குறித்த ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு முரணான, பல கவலைக்குரிய விதிகள் உள்ளன; அத்துடன், இதில் உள்ள கணிசமான விதிகள், 'குற்றவியல் நடைமுறைக்கான சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்தபட்சத் தரநிலைகளுக்கு'க்கூட ஏற்ற வகையில் அமைந்திருக்கவில்லை என்பதும் தெளிவாகிறது.

13. இந்தச் சட்டம், கடந்த காலங்களில் நடந்த நிகழ்வுகளுக்கும் கூடப் பொருந்தக்கூடிய - அவற்றுக்கான எத்தகைய முன்னேற்பாடுகளும் அற்ற விதத்தில் அமைந்த - தன்மையைக் கொண்டதாக அமைந்துள்ளது. அத்துடன், இது தான் தடுக்க முற்படும் 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கான தெளிவான வரையறை எதையும் கொண்டிருக்கவும் இல்லை. சந்தேகத்தின் பேரில் கைது செய்தல், வெளி உலகத் தொடர்பின்றி தடுத்து வைத்தல், தடுப்புக் காவல் அதிகாரியால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு இடத்திலும், 18 மாதங்கள் வரை விசாரணையின்றி தனிமைப்படுத்தப்பட்ட சிறையில் தடுத்து வைத்தல் போன்ற ஆட்சேபனைக்குரிய விதிகளையும் இது கொண்டுள்ளது. தடுப்புக் காவலில் இருக்கும்போது சித்திரவதை அல்லது மரணம் நேரிட்டால், அதற்கெதிராக முறையிடவோ அல்லது தீர்வு காணவோ, சந்தேக நபர்களுக்கு இந்த விதிகளில் எந்த வழியும் இல்லை. அத்துடன், தடுப்புக் காவலில் இருக்கும்போது சந்தேக நபர்களிடமிருந்தோ, அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களிடம் இருந்தோ கட்டாயப்படுத்திப் பெறப்பட்ட வாக்குமூலங்கள், நீதிமன்றத்தில் சாட்சியங்களாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பவை போன்ற சிறப்பு விதிகளையும் இது கொண்டுள்ளது.

14. இச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல நபர்கள் தொடர்பாக கொண்டுவரப்படுகின்ற 'ஆட்கொணர்வு மனுக்கள்' (Habeas Corpus) மீதான விசாரணைகளின்போது, சித்திரவதைகள் குறித்த கடுமையான குற்றச்சாட்டுகள் ஏற்கனவே நமது நீதிமன்றங்களில் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய நடைமுறை ஆச்சரியமளிக்கிறது. சர்வதேச சட்ட வல்லுநர்கள் (அல்லது யூரிகள்) கமிஷன் (International Commission of Jurists) கூறியது போன்ற, பின்வரும் சூழல்களுக்கு இத்தகைய நடவடிக்கைகள் வழிவகுக்கின்றன: அதாவது, "வாக்குமூலங்களைப் பெறுவதற்காக, தடுத்து வைக்கப்பட்டவர்களை உடல் ரீதியான தாக்குதல்களுக்கு உள்ளாக்குவது ஒரு பொதுவான நடைமுறையாக நடந்து வருகிறது; நிர்வாக உத்தரவுகளின் கீழ், அவர்கள் நீண்ட காலத்திற்கு தடுத்து வைக்கப்படும்போது, நிலவும் பல கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தான் இத்தகைய சம்பவங்கள் நிகழ்கின்றன."

15. பல்கலைக்கழக மாணவர் விமலராஜன் தொடர்பான சமீபத்தில் நடந்த சம்பவங்கள், நடப்பிலுள்ள 'பயங்கரவாதத் தடைச் சட்டம்' எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துகிறது என்பதையும், தமிழர்களிடையே இச்சட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதையும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. இலங்கையில் உள்ள வேறு எந்த இனக் குழுவினர்களைச் சேர்ந்தவர்களுக்குமே, இது பயன்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. மாணவர் விமலராஜன் கைது செய்யப்பட்டு, ஒரு வருடத்திற்கும் மேலாக எந்தவித விசாரணையோ அல்லது அவர் மீதான எவ்வித குற்றச்சாட்டும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இறுதியில், வடக்குப் பிரதேசப் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியான போராட்டக் கூட்டங்களை நடத்தும் நடவடிக்கையில் இறங்கினர். இதன் காரணமாக, விமலராஜனையும் அவரைப் போன்று தடுத்து வைக்கப்பட்டிருந்த வேறு பலரையும் அரசாங்கம் விடுதலை செய்தது. இதுமாதிரியான ஒடுக்குமுறைச் சட்டங்களை நாடாமலே, சாதாரண மனித உரிமைகள், அவை தொடர்பான சட்டத்தின் ஆட்சித் தரநிலைகள் என்பவை கடைப்பிடிக்கப்பட்டிருந்தால், இத்தகைய எதிர்ப்பலைகள் அனைத்தையும், அவற்றால் ஏற்பட்ட கசப்பான உணர்வுகளையும் தவிர்த்திருக்கக் கூடியதாக இருந்திருக்கும். உண்மையில், பல்கலைக்கழக மாணவர்

விமலராஜனின் தொடர்ச்சியான தடுப்புக் காவல் குறித்த போராட்டங்களின் போது பேசியவர்கள், அரசாங்கத்திற்கும் TULFக்கும் இடையே தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து நடைபெற்று வரும் 'பேச்சுவார்த்தை' அர்த்தமற்றது என்று வெளிப்படையாகவே விமர்சித்தனர்; ஏனென்றால், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ், அரசினால் தமிழர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கப்படாமல் தான் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தனர்.

16. இலங்கையின் இந்தச் சட்டத்தின் ஆட்சேபனைக்குரிய பல அம்சங்கள், தென்னாபிரிக்காவில் இருந்ததும், பரவலாக விமர்சிக்கப்பட்டதுமான 1967ஆம் ஆண்டின் பயங்கரவாதச் சட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன. வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட இனவெறி (Apartheid) முறையைக் கொண்டிருந்த தென்னாபிரிக்கா போன்ற ஓர் இனவெறி அரசுக்கு, இது அதிர்ச்சியளிப்பதாக இருந்திருக்காது தான்; ஆனால், 'அனைவருக்கும் வாக்குரிமை' (Universal Adult Franchise) கிடைத்து 50 ஆண்டுகளைக் கொண்டாடும் ஒரு நாட்டின் மக்களுக்கும், ஜனநாயக, 'தர்மிஷ்ட' (அறநெறி சார்ந்த) கொள்கைகளைப் பின்பற்றுவதாகப் பெருமை பேசுகின்ற இந்த அரசாங்கத்தின் கீழ் வாழும் மக்களுக்கும் கூட, இது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றாக இருக்க முடியாது.

17. ஆனால், இந்தச் சட்டம் ஏற்படுத்தும் உண்மையான பாதிப்பு என்னவென்றால், இதன் செயல்பாடுகள், கைது செய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட நபர்களுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை என்பதுதான். இச்சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதும் செயல்படுவதும் ஒட்டுமொத்தச் சமூகத்தையே - குறிப்பாக வடக்குப் பகுதியைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களை - பெரும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. இது அவர்களை ஆழ்ந்த அச்சத்திற்கும், பெருகிவரும் பாதுகாப்பற்ற உணர்வுக்கும் உள்ளாக்குகிறது; இந்த உணர்வு சுதந்திரத்திற்குப் பிந்தைய 1958ஆம் ஆண்டுக் கலவரங்களின் போதே தொடங்கி, 1977ஆம் ஆண்டு நிகழ்ந்த துயரச் சம்பவத்திற்குப் பிறகு, சிறுபான்மையினர் மீது நடத்தப்பட்ட தொடர்ச்சியான இனவெறித் தாக்குதல்களால் மேலும் தீவிரமடைந்துள்ளது.

18. வடக்குப் பகுதியின் ஒட்டுமொத்த 'சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட சூழலில்' நிலவும் கவலைக்குரிய ஒரு அம்சம் என்னவென்றால், அங்கு ஆயுதப் படைகள் செயல்படும் விதமாகும். இப்போது (1982ஆம் ஆண்டின் மத்தியில்) ஏறக்குறைய தினமும், வீதிகளில் உள்ள சந்திகள் அல்லது பிற பொது இடங்களில், பொதுமக்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் நடக்கின்றன. சோதனையின் போதும், அவை முடிந்த பின்பும் அவர்கள் முரட்டுத்தனமாக நடத்தப்பட்ட பின்னரும் கூட, சோதனைக்குள்ளானவர்களில் சிலர் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்ட பின்னரே விடுவிக்கப்படுகிறார்கள். இத்தகைய அனுபவங்கள், இலங்கையின் 'தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில்' தமிழர்களால் ஒருபோதும் பங்களிக்க முடியாது என்ற நிலைமையையே உருவாக்குகின்றன.

19. மேன்மைதங்கிய தங்களது 'தர்மிஷ்ட அரசாங்கம்', வரம்பற்ற அதிகாரங்களைக் கொண்டதும், எளிதில் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடியதும், அதேவேளையில் பாரம்பரியமாக அமைதியை விரும்பும் ஒரு சமூகத்திற்குப் பெரும் துயரத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சூழலை ஏற்படுத்தக் கூடியதுமான இந்தச் சட்டத்தை நீட்டிக்க விரும்பாது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

20. உண்மையில், உண்மைகள் சுட்டிக்காட்டுவது போல, இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம், குற்றங்களைத் தடுப்பதில் தோல்வியடைந்துள்ள ஒரு சட்டமேயாகும். இச்சட்டம் நடைமுறைக்கு வந்த ஓராண்டு காலத்துக்குப் பிறகு, ஆனைகோட்டையில் உள்ள காவல் நிலையத்தின் மீது பயங்கரவாதக் குழு ஒன்று தாக்குதல் நடத்தியது; இதில் துப்பாக்கிகளுடன் தப்பிச் சென்றபோது இரண்டு காவலர்கள் கொல்லப்பட்டனர். 1971இல் நடந்த சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சிக்குப் பிறகு, இலங்கையின் வடக்குப் பகுதியிலோ அல்லது வேறு எங்குமோ இத்தகைய சம்பவம் இதற்கு முன் நிகழ்ந்ததில்லை.

21. இலங்கையில் இன மோதல் வன்முறை என்பவை குறித்த 1981ஆம் ஆண்டின் 'சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணைக்குழு' (International Commission of Jurists) வெளியிட்ட அறிக்கையில், 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் செயற்திறன்' என்ற தலைப்பின்

கீழ், இச்சட்டம் எந்தளவுக்குச் செயலற்றதாக இருந்தது என்ற விடயம் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது:

"இலங்கை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகள், மனித உரிமைகள் சார்ந்த கண்ணோட்டத்தில் வெறுமனே ஆட்சேபனைக்குரியவை மட்டுமல்லாமல், பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதில் இச்சட்டம் பயனுள்ளதாக இருக்குமா என்பதும் சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது. எனவே, பொதுப் பாதுகாப்பைப் பேணுவதற்கான அவசியமான ஒரு வழியாக, மனித உரிமைகள் மீதான கட்டுப்பாடுகளை மேற்கொள்வது ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றாகத் தோன்றவில்லை.

இச்சட்டம் இயற்றப்பட்ட 1979ஆம் ஆண்டிலிருந்து, வடக்குப் பகுதியில் உள்ள தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில், பயங்கரவாதம் குறையவில்லை; மாறாக அதிகரித்துள்ளது. மக்கள் மீதான, காவல்துறை, இராணுவம் ஆகியவற்றின் கண்காணிப்பு அதிகரிப்பும் கூட, வன்முறையைக் கட்டுப்படுத்தவில்லை; மாறாக அதை, அவை மேலும் வளர்த்து வருவதாகவே தெரிகிறது. வன்முறைக்கு இட்டுச் செல்லும் அடிப்படைக் காரணங்களைக் கையாள்வதற்குப் பதிலாக, ஆயுத வலிமையைக் கொண்டு பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முயன்ற சில நாடுகளின் அனுபவத்தைப் போன்றதே இதுவும் ஆகும்."

22. 1977இல் 'குற்றவியல் நீதிக் கமிசன் சட்டம்' (Criminal Justice Commission Act) இரத்துச் செய்யப்பட்டபோது, அது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதால் மேன்மைதங்கிய தங்களால் அது விமர்சிக்கப்பட்டது. அத்துடன் இத்தகைய ஒரு சூழல் மீண்டும் இந்நாட்டில் ஏற்படுவதை அனுமதிக்கமாட்டேன் என்றும் அப்போது கூறினீர்கள் (21.10.77 தேதியிட்ட ஹன்சார்ட் அறிக்கை, பத்தி 1866). ஆனால், 1979ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச் சட்டம் அடிப்படை மனித உரிமைகளை இன்னமும் மோசமாக மீறுகின்ற ஒன்றாகும்; இது நிச்சயமாக மேன்மைதங்கிய தங்களது மனசாட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்கும் என்பதில் ஐயமில்லை.

23. 'வரலாறும் தமிழ் ஈழமும்' என்ற தனது கட்டுரையில் பேராசிரியர் சி.ஆர். டி சில்வா குறிப்பிட்டுள்ளவாறு, இலங்கையின் வரலாறு முழுவதும் 'ஒற்றுமை' எனும் கோட்பாடு வலுவாக இருந்து வந்துள்ளது தான். ஆயினும், "நீதியின் அடிப்படையிலேயே இக்கோட்பாட்டைத் தக்கவைக்க முடியும்" என்பதும், நீதியும் நியாயமான அணுகுமுறையும் உறுதிப்படுத்தப்படாவிட்டால், நடைமுறையில் இந்த ஒற்றுமைக்கான சிந்தனை விரைவில் இல்லாமலே போகக்கூடும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

24. 'பயங்கரவாதத் தடைச் சட்டம்' போன்ற வெறும் அடக்குமுறைச் சட்டங்கள் மூலம் ஒருபோதும் ஒற்றுமையை 'மேலிருந்து திணிக்கவோ' அல்லது பிளவுகளைத் தவிர்க்கவோ முடியாது. அத்துடன், இத்தகைய சட்டங்கள் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒருபோதும் உறுதியான அடிப்படையாக அமையவும் முடியாது.

25. மேன்மை தங்கிய தங்களது கவனத்துக்கு நாங்கள் முன்வைக்கின்ற பணிவான வேண்டுகோள் என்னவென்றால்:

26. இச்சட்டத்தை இயன்றவரை விரைவாக இரத்துச் செய்து, கைது, சித்திரவதை, திடீர் மரணம் என்பவை குறித்த எத்தகைய அச்சமுமின்றி, ஜனநாயகமும் 'தர்மிஷ்ட' நெறி சார்ந்த ஆட்சியும் நிலவும் ஒரு நாட்டில் தமிழ் மக்கள் வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்பதுடன்,

27. அனைத்துச் சமூகங்களையும் ஒன்றிணைத்து, ஒரு தேசமாக வலுவாகக் கட்டியெழுப்புவதற்கான ஆக்கபூர்வமானதும் அர்த்தமுள்ளதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வி. மாணிக்கவாசகர்,
தலைவர், CINTA,
78/1, வார்ட் பிளேஸ், கொழும்பு - 7.
ஜே.கே. ரத்னானந்தன்,
கௌரவ செயலாளர், CINTA,
தெஹிவளை.

பிரதிகள்:
(1) கௌரவ பாதுகாப்புத் துறை பிரதி அமைச்சர்.
(2) கௌரவ நீதி அமைச்சர்.
(3) கௌரவ எதிர்க்கட்சித் தலைவர்.

இலங்கையில் பஷ்தூன்கள்: வரலாறு, சமூகப் பங்களிப்பு, பண்பாட்டு மரபு

அப்துல் ரஹீம் ஜெஸ்மில்

அப்துல் ரஹீம் ஜெஸ்மில் தனது தொல்லியல் கலாநிதிப் பட்டத்தினை பாகிஸ்தானில் உள்ள ஹசாரா பல்கலைக்கழகத்திலும், வரலாற்றில் முதுகலைமானிப் பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலைமானிப் பட்டத்தினைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றிருக்கின்றார். தற்போது தொல்லியல் திணைக்களத்தில் பணிபுரிந்து வருகின்றார். ஜெஸ்மில் அவர்கள் முஸ்லிம் வரலாறு, பண்பாடு குறித்துப் பேசி வருவதுடன் தொல்பொருள் ஆராய்ச்சியாளராகவும், கலாசாரத்திற்கும் பாரம்பரியத்துக்கும் இடையிலான பின்னடைவுகள் குறித்து ஆராய்வதிலும் ஈடுபாடு காண்பித்து வருகின்றார். இவர் 'காத்தான்குடியின் வரலாறும் பண்பாடும் : மத தூய்மைவாதத்தின் பின்புலம்' என்ற நூலினுடைய ஆசிரியராவார்.



அறிமுகம்



1880களில் இலங்கையில் எடுக்கப்பட்ட படம். "ஆகப்கன் மான்" எனத் தலைப்பிடப்பட்டது.
Image Source - youtube.com/Tarikh-i-Pakhtunkhwa

இலங்கை பல இனங்கள், மொழிகள், மதங்கள் மற்றும் பண்பாடுகள் ஒன்றிணைந்து விளங்கும் ஒரு பன்முகத் தீவாகும். அதன் வரலாறு சிங்களர், தமிழர், இலங்கை முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர், செட்டியார், இந்திய வம்சாவளித் தமிழர் போன்ற சமூகங்களுடன் மட்டுமல்லாமல், எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தாலும் குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சுவடுகளை விட்டுச் சென்ற பிற குடியேற்றக் குழுக்களுடனும் இணைந்துள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒரு சமூகமாக பஷ்தூன்கள் அல்லது ஆப்கானியர்கள் காணப்படுகின்றனர்.

இலங்கையில் வாழ்ந்த பஷ்தூன்களின் வரலாறு இதுவரை விரிவாக ஆராயப்படாத ஒரு துறையாகும். இருப்பினும், காலனித்துவ ஆவணங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள், பயணக் குறிப்புகள் மற்றும் வாய்மொழி மரபுகள் ஆகியவற்றின் அடிப்படையில், 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை அவர்கள் இலங்கையின் சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க இடத்தை வகித்தனர் என்பதை அறிய முடிகிறது.

ஆப்கானிஸ்தான், இன்றைய பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மற்றும் பலுசிஸ்தான் போன்ற பகுதிகளிலிருந்து வந்த இப்பஷ்தூன்கள் ஆரம்பத்தில் குதிரைப் பராமரிப்பாளர்கள், காவலர்கள் மற்றும் தொழிலாளர்களாகப் பணியாற்றினர். பின்னர் வணிகம் மற்றும் கடன் வழங்கும் தொழில்களில் ஈடுபட்டு நகர்ப்புறப் பொருளாதாரத்தில் தனித்துவமான இடத்தைப் பெற்றனர். காலப்போக்கில் உள்ளூர் சமூகங்களுடன் கலந்திருந்தாலும், தமது மொழி, உடை, சமூக அமைப்பு மற்றும் மரபுகளை ஓரளவு பாதுகாத்தனர்.

இலங்கையின் கிழக்குக் கரையில், குறிப்பாக மட்டக்களப்பைச் சார்ந்த சில உள்ளூர் மரபுக் கதைகளிலும் பஷ்தூன்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இக்கட்டுரை இலங்கையில் பஷ்தூன்களின் வரலாற்றுப் பின்னணி, சமூக மற்றும் பொருளாதாரப் பங்கு, பண்பாட்டு அடையாளம் மற்றும் அவர்கள் விட்டுச் சென்ற வரலாற்றுச் சுவடுகளை ஆராய்கிறது.

இலங்கைக்கான பஷ்தூன் குடியேற்றத்தின் வரலாற்றுப் பின்னணி

இலங்கையில் பஷ்தூன்களின் வருகை, பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியின் நிர்வாக மற்றும் பொருளாதாரக் கொள்கைகளுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். 1796ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானிய ஆட்சிக்குள் வந்ததைத் தொடர்ந்து, நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும், தோட்டப் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கும், பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களை பிரித்தானியர் இலங்கைக்கு அழைத்து வந்தனர். தென்னிந்தியத் தொழிலாளர்கள், மலாய்ப் படையினர், ஐரோப்பிய வணிகர்கள் ஆகியோருடன் இணைந்து, வடமேற்கு இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பஷ்தூன்களும் இலங்கையில் குடியேறினர்.

பஷ்தூன்கள் முதற்கட்டமாக குதிரைப் பராமரிப்பாளர்கள், வண்டி ஓட்டுநர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் இராணுவத்துடன் தொடர்புடைய உதவிப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டனர். குதிரைப் படைகள் மற்றும் போக்குவரத்து அமைப்புகள் காலனித்துவ நிர்வாகத்தில் முக்கிய இடம் வகித்த காலத்தில், இப்பணிகளில் அவர்களின் திறமைகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. பின்னர் நகர்ப்புறங்களிலும் வணிக மையங்களிலும் குடியேறிய அவர்கள், சிறிய அளவிலான வணிகம், சந்தைச் செயற்பாடுகள் மற்றும் நிதி தொடர்பான தொழில்களில் ஈடுபட்டனர்.

1881ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஆயிரத்திற்கும் அதிகமான ஆப்கானியர்கள் இலங்கையில் வாழ்ந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அவர்களின் எண்ணிக்கை ஏற்றத் தாழ்வுகளுக்கு உள்ளானாலும், 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை அவர்கள் தனித்துவமான சமூகமாகக் காணப்பட்டனர். இருப்பினும், குடியுரிமை, பதிவு மற்றும் கடன் வழங்கல் தொடர்பான புதிய சட்டங்கள் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து, அவர்களின் தனித்துவமான சமூக அடையாளம் படிப்படியாக மறையத் தொடங்கியது. இதன் விளைவாக, பின்னைய மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளில் அவர்கள் தனி

இனக்குழுவாகப் பதிவு செய்யப்படவில்லை. இலங்கையில் வாழ்ந்த பஷ்தூன்கள் பொதுவாக 'பாய்' (Bhai/ Baay) என்ற பட்டத்தால் அழைக்கப்பட்டனர். இது சமூக அடையாளமாக மட்டுமல்லாமல், அதிகாரபூர்வ ஆவணங்களிலும் இடம்பெற்றிருந்தது. மேலும் 'Afghan, Kabul Man, Pattani' போன்ற பெயர்களாலும் அவர்கள் குறிப்பிடப்பட்டனர். பலரது பெயர்களில் 'கான்' என்ற மரியாதைப் பட்டமும் காணப்பட்டது. அஃப்ரீதி, யூசுப்சாய், கில்ஜி, காக்கர், அகமத்சாய் போன்ற பஷ்தூன் பழங்குடியினரே இவர்களில் பெரும்பான்மையாக இருந்தனர். காலப்போக்கில் இவர்கள் இலங்கை முஸ்லிம், மலாய் மற்றும் பிற உள்ளூர் சமூகங்களுடன் திருமண



1920களில் பர்மாவில் ஒரு பஷ்தூன் நடைபாதை வியாபாரி

Image Source - youtube.com/Tarikh-i-Pakhtunkhwa

உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். இதன் காரணமாக அவர்களது மொழி, வாழ்க்கை முறை மற்றும் சமூகப் பழக்கவழக்கங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. இருப்பினும், பஷ்தோ மொழி, பாரம்பரிய உடை, குல மரபு மற்றும் ஜிர்கா (மூத்தோர் பேரவை) போன்ற சமூக அமைப்புகளை நீண்ட காலம் பாதுகாத்தனர். இவ்வாறாக, இலங்கையில் பஷ்தூன்களின் வரலாறு காலனித்துவக் குடியேற்ற வரலாற்றின் ஒரு சிறிய அத்தியாயமாக மட்டுமல்லாமல், நாட்டின் பல்வகை இன மரபை வெளிப்படுத்தும் முக்கிய கூறாகவும் கருதப்படுகிறது.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பஷ்தூன்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் குடியேறிய பஷ்தூன்களில் பெரும்பாலோர் கல்வியறிவு குறைந்தவர்களாக இருந்தபோதிலும், உழைப்பு, ஒழுக்கம் மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றின் மூலம் தங்களுக்கென ஒரு பொருளாதார அடித்தளத்தை உருவாக்கினர். இவ்வாறான சமூக முன்னேற்றம், காலனித்துவ இலங்கையின் நகர்ப்புறப் பொருளாதார வளர்ச்சியுடனும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது.

பிரித்தானியர் நிர்வாகத்தின் ஆரம்பகட்டங்களில் குதிரைகள் நிர்வாகப் போக்குவரத்து, இராணுவ நடவடிக்கைகள் மற்றும் அரசாங்க சேவைகளில் முக்கிய பங்கு வகித்தன. இதனால் குதிரைப் பராமரிப்பில் அனுபவமிக்க பஷ்தூன்கள் அரசாங்கத் துறைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் பணியமர்த்தப்பட்டனர். அதேவேளை, சிலர் விவசாயப் பண்ணைகள், கிடங்குகள், துறைமுகங்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் காவலர்களாகவும் சேவை புரிந்தனர். மேலும் சிலர் தபால்துறை, சரக்குப் போக்குவரத்து மற்றும் நகர்ப்புறச் சேவைத் துறைகளிலும் பணியாற்றியதாக காலனித்துவ ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

காலப்போக்கில் பஷ்தூன்கள் சிறு வணிகத்தில் ஈடுபடத் தொடங்கினர். குறிப்பாக கொழும்பு, கோட்டை, ஸ்லேவ் ஐலன்ட் (Slave Island), கண்டி மற்றும் பிற நகர மையங்களில் சிறிய கடைகள், காய்கறி விற்பனை, துணி வணிகம் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை போன்ற துறைகளில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர். இவ்வணிக அனுபவம் பின்னர் அவர்களை நிதிச் சேவைகள், குறிப்பாக கடன் வழங்கும் தொழிலுக்குத் திருப்பியது.

1930களில் இலங்கையில் வாழ்ந்த பஷ்தூன்களின் பெரும்பாலோர் கடன் வழங்கும் தொழிலில் ஈடுபட்டிருந்ததாக பல வரலாற்று ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் வங்கிச் சேவைகள் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்காத சூழலில், சிறு வணிகர்கள், தொழிலாளர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்கள் பஷ்தூன்களிடமிருந்து கடன் பெற்றனர். இதனால் அவர்கள் நகர்ப்புற அன்றாடப் பொருளாதாரத்தில் தவிர்க்க முடியாத ஒரு சமூகமாக உருவெடுத்தனர்.

எனினும், கடன் திருப்பிச் செலுத்தாதவர்களிடம் கடுமையான முறையில் வசூல் செய்தல் போன்ற காரணங்களால் பஷ்தூன் கடன் வழங்குநர்கள் குறித்து சமூகத்தில் கலவையான கருத்துகள் நிலவின. சில காலனித்துவ எழுத்தாளர்கள் அவர்கள் கடன் வசூலில் மிகவும் கடுமையானவர்களாக இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இருப்பினும், இவ்வாறான

பதிவுகள் பெரும்பாலும் காலனித்துவ அதிகாரிகளின் அல்லது வெளிநாட்டு எழுத்தாளர்களின் பார்வையைப் பிரதிபலிப்பவை என்பதால், அவற்றை விமர்சன அணுகுமுறையுடன் மதிப்பீடு செய்ய வேண்டியது அவசியமாகும்.

பொருளாதார முன்னேற்றத்துடன் இணைந்து பஷ்தூன்கள் உள்ளூர் சமூகங்களுடனும் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தினர். குறிப்பாக இலங்கை முஸ்லிம் (மூர்ஸ்) மற்றும் மலாய் சமூகங்களைச் சேர்ந்த பெண்களைத் திருமணம் செய்துகொண்டதன் மூலம், அவர்கள் உள்ளூர் சமூக அமைப்பின் ஒரு பகுதியாக மாறினர். இதன் விளைவாக அவர்களின் அடுத்த தலைமுறையினர் தமிழ், சிங்களம் மற்றும் மலாய் மொழிகளைப் பேசக்கூடியவர்களாக வளர்ந்தனர். இதேவேளை, பஷ்தோ மொழி, குல அடையாளம் மற்றும் பாரம்பரிய மரபுகள் குடும்ப மட்டத்தில் தொடர்ந்து பேணப்பட்டன.

இதனால், பஷ்தூன்களின் வரலாறு வெறுமனே குடியேற்ற வரலாறாக மட்டுமல்லாமல், இலங்கையின் காலனித்துவ நகர்ப்புறப் பொருளாதார வளர்ச்சியிலும், சமூகங்களுக்கு இடையிலான உறவுகளின் உருவாக்கத்திலும் குறிப்பிடத்தக்க பங்காற்றிய ஒரு சிறுபான்மை சமூகத்தின் வரலாறாகவும் கருதப்பட வேண்டும்.

மட்டக்களப்பில் பஷ்தூன்கள்

இலங்கையின் கிழக்குப் பிராந்தியமான மட்டக்களப்பு நீண்டகாலமாக கடல் வாணிபம், குடியேற்றம் மற்றும் பல்வேறு பண்பாடுகளின் சந்திப்பிடமாக விளங்கியுள்ளது. அரபு, பாரசீக, தென்னிந்திய, ஐரோப்பிய மற்றும் தென்கிழக்காசிய வணிகத் தொடர்புகளின் காரணமாக மட்டக்களப்பு ஒரு பன்முக வரலாற்றுப் பிரதேசமாக உருவாகியுள்ளது. இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில் பஷ்தூன்கள் அல்லது ஆப்கானியர்களின் வருகை தொடர்பான சில உள்ளூர் மரபுகளும் வாய்மொழி ஆதாரங்களும் அங்கு காணப்படுகின்றன.

சில உள்ளூர் வரலாற்று மரபுகளின்படி, 15ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் காபூல் பகுதியைச் சேர்ந்த பஷ்தூன் துணி வணிகர்களின் சிறிய கப்பல் ஒன்று கடல் பயணத்தின் போது ஏற்பட்ட புயலினால் மட்டக்களப்புத் துறைமுகத்தை அடைந்ததாகக் கூறப்படுகிறது. அக்காலத்தில் மட்டக்களப்பின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் பல்வேறு தமிழ்ச் சமூகக் குழுக்கள் வாழ்ந்து வந்தன. குறிப்பாக முக்குவர் மற்றும் திமிலர் சமூகங்களுக்கிடையே நிலம், வளங்கள் மற்றும் அரசியல் ஆதிக்கம் தொடர்பான போட்டிகள் காணப்பட்டதாக உள்ளூர் மரபுகள் குறிப்பிடுகின்றன.

இந்த மரபுகளின்படி, பஷ்தூன் வணிகர்கள் முக்குவர் சமூகத்துடன் இணைந்து திமிலர் குழுக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள உதவியதாகக் கூறப்படுகிறது. போர்த் திறன் மற்றும் உடல் வலிமை கொண்டவர்களாகக் கருதப்பட்ட பஷ்தூன்கள், உள்ளூர் அரசியல் சூழலில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் முக்கிய பங்காற்றியதாக வாய்மொழி வரலாறுகள் தெரிவிக்கின்றன. இவர்களின் உதவிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், உள்ளூர் சமூகத்துடன் திருமண உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தக் கலப்புத் திருமணங்களின் மூலம் பஷ்தூன்கள் படிப்படியாக உள்ளூர் சமூக அமைப்பில் இணைந்தனர். இருப்பினும், அவர்கள் தங்களது வம்ச மரபு, வீரப் பாரம்பரியம் மற்றும் தனித்துவமான பண்பாட்டு அடையாளத்தை நினைவில் வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. மட்டக்களப்பில் சில இடப்பெயர்கள் மற்றும் குடும்ப மரபுகள் இத்தகைய வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. உதாரணமாக, சத்துருக்கொண்டான் என்ற இடப்பெயர் 'எதிரி கொல்லப்பட்ட இடம்' என்ற பொருளைக் கொண்டுள்ளதாக உள்ளூர் விளக்கங்கள் கூறப்படுகின்றன. இத்தகைய இடப்பெயர் மரபுகள் வரலாற்று உண்மைகளை முழுமையாக நிரூபிப்பதற்கான ஆதாரங்களாக இல்லாவிட்டாலும், அவை ஒரு சமூகத்தின் நினைவு வரலாற்றை வெளிப்படுத்துகின்றன.

வரலாற்று ஆய்வில் வாய்மொழி மரபுகள், தொல்லியல் சான்றுகள் மற்றும் எழுத்துமூல ஆதாரங்கள் ஆகியவை ஒன்றிணைந்து ஆராயப்பட வேண்டும். பஷ்தூன்களின் மட்டக்களப்புத் தொடர்பான செய்திகள் பெரும்பாலும் வாய்மொழி மரபுகள் மற்றும் குடும்ப வரலாற்றுச் செய்திகள் மூலமே கிடைக்கின்றன. எனவே, இவை மேலதிக தொல்லியல், ஆவண மற்றும் மரபணு ஆய்வுகளுடன் இணைத்து ஆராயப்பட வேண்டிய முக்கியமான ஆய்வுப் பகுதிகளாகும்.

மட்டக்களப்பில் பஷ்தூன்களின் வரலாறு, ஒரு சிறிய குடியேற்றக் குழு எவ்வாறு உள்ளூர் சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அதன் பண்பாட்டு அமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை

விளக்கும் ஒரு முக்கிய எடுத்துக்காட்டாகும். இது கிழக்கு இலங்கையின் பல அடுக்கு சமூக வரலாற்றையும், கடல்வழிக் குடியேற்றங்களின் பரந்த இயக்கத்தையும் புரிந்துகொள்ள உதவுகிறது.

பஷ்தூன்களின் பண்பாட்டு அடையாளம், மொழி, சமூக அமைப்பு

இலங்கையில் வாழ்ந்த பஷ்தூன்கள் எண்ணிக்கையில் சிறிய சமூகமாக இருந்தபோதிலும், தங்களுக்கென தனித்துவமான பண்பாட்டு அடையாளத்தையும் சமூக அமைப்பையும் நீண்ட காலம் பேணிக் கொண்டிருந்தனர். ஒரு குடியேற்றச் சமூகமாக இலங்கையில் நிலைபெற்ற பின்னரும், அவர்கள் தமது பூர்வீகமான ஆப்கானிய-பஷ்தூன் மரபுகளின் சில முக்கிய அம்சங்களைத் தொடர்ந்து பாதுகாத்தனர். உடை, மொழி, குடும்ப அமைப்பு, சமூகத் தலைமை முறை மற்றும் மத நடைமுறைகள் ஆகியவை அவர்களின் அடையாளத்தின் முக்கிய கூறுகளாக அமைந்தன.

பஷ்தூன்களின் பாரம்பரிய உடை அவர்களின் இன அடையாளத்தை வெளிப்படுத்தும் முக்கிய அம்சமாக இருந்தது. ஆண்கள் பொதுவாக பெராஹன்-தும்பான் (Perahan Tunban) எனப்படும் நீளமான மேலாடை மற்றும் தளர்வான காற்சட்டையை அணிந்தனர். தலைப்பாகை அல்லது தஸ்தார் (Dastar) அணிவதும் வழக்கமாக இருந்தது. சிலர் நீண்ட கைத்தடியை எடுத்துச் செல்வதும் அவர்களின் பாரம்பரியத் தோற்றத்தின் ஒரு பகுதியாகக் காணப்பட்டது. இந்தக் கைத்தடிகள் பயணத்தின் போது பாதுகாப்பிற்காகவும், சமூகத்தில் அவர்களின் கௌரவ அடையாளமாகவும் பயன்படுத்தப்பட்டன.

மொழி அடையாளம் பஷ்தூன் சமூகத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தது. அவர்கள் தங்களுக்குள் பஷ்தோ (Pashto) மொழியில் உரையாடினர். எனினும், இலங்கையில் நீண்ட காலம் வாழ்ந்ததன் காரணமாக அவர்கள் தமிழ், சிங்களம் மற்றும் இலங்கை மலாய் மொழிகளையும் கற்றுக்கொண்டனர். குறிப்பாக நகர்ப்புறங்களில் வாழ்ந்த பஷ்தூன்கள் பல்மொழிச் சமூகமாக வளர்ந்தனர். மொழி மாற்றம் ஏற்பட்டபோதிலும், குடும்ப மற்றும் சமூக நிகழ்வுகளில் பஷ்தோ மொழியின் பயன்பாடு ஒரு குறிப்பிட்ட காலம் வரை தொடர்ந்தது. மத அடையாளத்திலும் பஷ்தூன்கள் இலங்கை முஸ்லிம் சமூகத்துடன் இணைந்திருந்தனர். அவர்கள் பள்ளிவாசல் மையமான சமூக வாழ்க்கையைப் பேணினர். கொழும்பின் 'ஸ்லேவ் ஐலன்ட்' பகுதியில் வாழ்ந்த பஷ்தூன்கள் தங்களுக்கென சிறிய பள்ளிவாசல்களையும் சமூக ஒன்றுகூடல் இடங்களையும் கொண்டிருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. வெள்ளிக்கிழமை தொழுகை, மத நிகழ்வுகள், ஹஜ் பயணம் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் சமூக ஆலோசனைகள் போன்றவை இவ்விடங்களில் நடைபெற்றன.

பஷ்தூன் சமூக அமைப்பில் ஜிர்கா (Jirga) எனப்படும் மூத்தோர் ஆலோசனைச் சபை முக்கியமானதாக இருந்தது. குடும்ப அல்லது சமூகப் பிரச்சினைகள் அதிகாரபூர்வ நீதிமன்றங்களுக்குச் செல்லாமல், சமூகத் தலைவர்களின் ஆலோசனையின் மூலம் தீர்க்கப்பட்டன. இந்த மரபு ஆப்கானிஸ்தான் மற்றும் பஷ்தூன் பகுதிகளில் காணப்பட்ட பாரம்பரிய சமூக நிர்வாக முறையின் தொடர்ச்சியாகும்.

இலங்கையில் வாழ்ந்த பஷ்தூன்கள் தங்களுக்கென சமூகத் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் கொண்டிருந்தனர். திருமணம், சொத்து, வணிகம் மற்றும் சமூக உறவுகள் தொடர்பான முக்கிய முடிவுகள் மூத்தோர் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் அவர்கள் ஒரு சிறிய சமூகமாக இருந்தாலும், உள்ளக ஒற்றுமையைப் பேண முடிந்தது.

எனினும், காலப்போக்கில் உள்ளூர் சமூகங்களுடனான கலப்புத் திருமணங்கள், மொழி மாற்றம் மற்றும் புதிய தலைமுறைகளின் சமூக ஒருங்கிணைவு ஆகிய காரணங்களால் தனித்த பஷ்தூன் அடையாளம் படிப்படியாகக் குறைந்தது. குறிப்பாக இலங்கை முஸ்லிம் சமூகத்துடன் இணைந்த குடும்பங்களில் பஷ்தூன் மரபுகள் சில மட்டுமே தொடர்ந்தன. இருந்தபோதிலும், குடும்பப் பெயர்கள், வாய்மொழி வரலாறுகள், மரபுக் கதைகள் மற்றும் முன்னோர் நினைவுகள் மூலம் அவர்களின் அடையாளம் இன்றும் சில குடும்பங்களில் பாதுகாக்கப்படுகிறது.

பண்பாட்டு ஆய்வின் நோக்கில் பார்க்கும்போது, இலங்கை பஷ்தூன்கள் ஒரு 'மறைந்துவரும் பாரம்பரியச் சமூகமாகக்' கருதப்படலாம். அவர்கள் முழுமையாகத் தனிமைப்படாமல், இலங்கைச் சமூகத்தின் ஒரு பகுதியாக இணைந்தபோதும், தமது பூர்வீக மரபுகளின் சில கூறுகளைப் பாதுகாத்தனர். இதனால் அவர்கள் இலங்கையின் பல்சமூக வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளனர்.

முடிவுரை

இலங்கையின் வரலாறு என்பது இத்தீவில் நீண்டகாலமாக வாழ்ந்த பிரதான இனக்குழுக்களின் வரலாறு மட்டுமல்ல, பல்வேறு காலகட்டங்களில் இங்கு வந்து குடியேறி, சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையில் பங்களிப்புச் செய்த சிறுபான்மை சமூகங்களின் வரலாறுகளையும் உள்ளடக்கியதாகும். அந்த வகையில், இலங்கையில் வாழ்ந்த பஷ்தூன்கள் அல்லது ஆப்கானியர்கள் ஒரு சிறிய எண்ணிக்கையுடைய சமூகமாக இருந்தபோதிலும், நாட்டின் காலனித்துவ மற்றும் நவீன வரலாற்றில் குறிப்பிடத்தக்க தடங்களை விட்டுச் சென்றுள்ளனர்.

பஷ்தூன்களின் இலங்கை வருகை, பிரித்தானியக் காலனித்துவத்தின் உலகளாவிய தொழிலாளர் மற்றும் நிர்வாக இயக்கங்களுடன் தொடர்புடையதாக அமைந்தது.

ஆரம்பத்தில் குதிரைப் பராமரிப்பாளர்கள், காவலர்கள் மற்றும் தொழிலாளர்களாக வந்த அவர்கள், பின்னர் வணிகம் மற்றும் கடன் வழங்கும் தொழில்களில் ஈடுபட்டு தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொண்டனர். குறிப்பாக நகர்ப்புறப் பொருளாதாரத்தில் அவர்களின் பங்கு, காலனித்துவ கால இலங்கையின் சமூக இயக்கங்களைப் புரிந்துகொள்வதற்கு முக்கியமானதாகும்.

அதேவேளை, பஷ்தூன்களின் வரலாற்றை வெறுமனே பொருளாதார நடவடிக்கைகளின் வரலாறாக மட்டுப்படுத்த முடியாது. அவர்கள் தமது மொழி, உடை, குடும்ப மரபுகள், மத நடைமுறைகள் மற்றும் சமூக அமைப்புகள் மூலம் ஒரு தனித்துவமான பண்பாட்டு அடையாளத்தை உருவாக்கினர். இலங்கையின் பல்வேறு சமூகங்களுடன் ஏற்பட்ட தொடர்புகள், குறிப்பாக முஸ்லிம் மற்றும் மலாய் சமூகங்களுடனான திருமண உறவுகள், அவர்களை இலங்கைச் சமூகத்தின் ஒரு பகுதியாக மாற்றின.

மட்டக்களப்பு போன்ற கிழக்குப் பிராந்தியங்களில் பஷ்தூன்கள் தொடர்பான உள்ளூர் மரபுகள், இலங்கையின் கடல்வழிக் குடியேற்ற வரலாற்றின் பரந்த பரிமாணங்களை வெளிப்படுத்துகின்றன. இம்மரபுகள் அனைத்தும் வரலாற்று உண்மைகளாக உறுதிப்படுத்தப்பட வேண்டிய நிலையில் இருந்தாலும், அவை சமூக நினைவகம், இன அடையாள உருவாக்கம் மற்றும் உள்ளூர் வரலாற்று உணர்வு ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கு முக்கியமான ஆதாரங்களாக அமைகின்றன.

இலங்கையில் பஷ்தூன்களின் எண்ணிக்கை காலப்போக்கில் குறைந்ததற்கான காரணங்களில் குடியுரிமை மாற்றங்கள், கலப்புத் திருமணங்கள், மொழி மாற்றம் மற்றும் சமூக ஒருங்கிணைவு ஆகியவை முக்கியமானவை. இதனால் அவர்கள் தனித்த இனக்குழுவாக இன்று பெரிதும் காணப்படாவிட்டாலும், அவர்களின் வரலாற்றுச் சுவடுகள் குடும்ப மரபுகள், இடப்பெயர்கள், ஆவணங்கள் மற்றும் வாய்மொழி வரலாறுகளில் தொடர்கின்றன.

எனவே, இலங்கை பஷ்தூன்களின் வரலாறு ஒரு சிறுபான்மை சமூகத்தின் மறைந்துபோன வரலாறு அல்ல, மாறாக, இலங்கை எவ்வாறு பல்வேறு மனித இயக்கங்கள், வணிகத் தொடர்புகள் மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றங்களின் மூலம் உருவானது என்பதை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய ஆய்வுத் துறையாகும். எதிர்காலத்தில் தொல்லியல், வரலாறு, மானிடவியல் மற்றும் மரபணு ஆய்வுகள் இணைந்த பல்துறை அணுகுமுறையின் மூலம் இலங்கை பஷ்தூன்களின் தோற்றம், குடியேற்றம் மற்றும் சமூக மாற்றங்களை மேலும் ஆழமாக ஆராய முடியும்.

உசாத்துணை மூலங்கள்

1. *Census of Ceylon, 1881, 1901, 1911, 1921 and 1946., Department of Census and Statistics, Ceylon.*

2. *Pippet, G. K., (1931), A History of the Ceylon Police, Colombo.*

3. *Roberts, Michael., (1995), Sri Lanka: Collective Identities Revisited, Colombo: Marga Institute.*

4. *Pieris, P. E., (1917), Ceylon: The Portuguese Era, Colom bo.*

5. *McGilvray, Dennis B., (2008), Crucible of Conflict: Tam il and Muslim Society on the East Coast of Sri Lanka, Durham: Duke University Press.*

6. *Holt, John Clifford., (2011), The Sri Lanka Reader: History - Culture - Politics, Durham: Duke University Press.*

7. *Kearney, Robert N., (1973), Communalism and Language in the Politics of Ceylon, Durham: Duke Universi ty Press.*

இலங்கையில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், வடக்கு – கிழக்குச் சமூகத்தின் உண்மையான நிலையை 'போருக்குப் பின் அமைதிக்கு முன்: வடக்குக் கிழக்கில் அறிவு, அதிகாரம், அன்றாட வாழ்க்கை' எனும் இந்தத் தொடர் ஆராய்கிறது. 'போர் முடிந்துவிட்டது' என்ற மேலோட்டமான கொண்டாட்டங்களை நிராகரிக்கும் இத்தொடர், அங்கு இராணுவக் கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் நில அபகரிப்பு போன்றவை இன்றும் ஒரு தொடர்ச்சியான நிர்வாக முறையாகவே நீடிப்பதாக வாதிடுகிறது. சமூகவியல், தொல்லியல், வரலாறு, மானிடவியல் எனப் பல துறைகளின் ஊடாக, மக்களின் அன்றாட வாழ்வில் அதிகாரம் எவ்வாறு ஊடுருவியுள்ளது என்பதை இது வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாழ்வியல் அனுபவங்களை முன்னிறுத்தி, முறையான அரசியல் தீர்வில்லாத இந்த நிலையை 'முழுமையடையாத இறையாண்மை' என வரையறுக்கிறது. போருக்குப் பிந்தைய நீதி மற்றும் நல்லிணக்கம் குறித்த ஒரு புதிய முன்னோக்கை வெளிப்படுத்துவதாக இத்தொடர் அமையும்.

தொல்லியலும் கடந்த காலத்தை ஆயுதமாக்குதலும்

பகுதி 1

மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.



தொடக்கக் குறிப்புகள்

போர்கள் உயிர்களையும், சமூகங்களையும், நிலப்பரப்புகளையும் அழிக்கின்றன. அவை கடந்த காலத்துடனான உறவுகளையும் உருமாற்றுகின்றன. வன்முறைக்குப் பிறகு, சமூகங்கள் சாலைகள், பள்ளிகள், நிறுவனங்களை மீண்டும் கட்டியெழுப்புவதில் மட்டும் அரிதாகவே கவனம் செலுத்துகின்றன. அவை வரலாற்றையே புனரமைக்கவும் முற்படுகின்றன. இந்த நிலத்திற்கு யார் சொந்தக்காரர்கள், யாருடைய துன்பம் நினைவுகூரப்பட வேண்டும், எந்தப் பாரம்பரியம் பாதுகாக்கப்பட வேண்டும், எந்த வரலாற்று விவரிப்புகள் எதிர்காலத்திற்கு வழிகாட்ட வேண்டும் என்பது போன்ற கேள்விகள் எழுகின்றன. கடந்த காலத்திற்கான போராட்டம், நிகழ்காலத்திற்கான போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாததாகிறது. இத்தகைய சூழல்களில், தொல்லியல் என்பது வெறும் பண்டைய எச்சங்களைப் பற்றிய ஆய்வாக இருப்பதில்லை. அது நிலப்பரப்பு, அடையாளம், இறையாண்மை ஆகியவை பேரம் பேசப்படும் ஓர் அரசியல் நடைமுறையாக மாறுகிறது. தொல்லியலின் வழக்கமான பிம்பம் என்பது அறிவியல் அகழ்வாராய்ச்சி பற்றியதும் புறநிலை விசாரணை பற்றியதுமே. தொல்பொருள் ஆய்வாளர்கள் கலைப்பொருட்களை வெளிக்கொணர்கிறார்கள், இடிபாடுகளை ஆவணப்படுத்துகிறார்கள், காலவரிசைகளை நிறுவுகிறார்கள், வரலாற்று வாழ்வுலகங்களைப் புனரமைக்கிறார்கள். ஆயினும், பல பத்தாண்டுகால விமர்சன ஆய்வு, தொல்லியல் ஒருபோதும் சமகால அரசியலிலிருந்து முற்றிலும் விலகி இருப்பதில்லை என்பதை நிரூபித்துள்ளது. தொல்பொருள் அறிவு சமூக, அரசியல் சூழல்களில் உருவாக்கப்படுகிறது. பொருள் எச்சங்களின் விளக்கம் பெரும்பாலும் அடையாளம், அதிகாரம் குறித்த பரந்த போராட்டங்களைப் பிரதிபலிக்கிறது. பண்டைய நினைவுச்சின்னங்கள், புனிதத் தலங்கள், புதைகுழிகள், கல்வெட்டுகள், பாழடைந்த குடியிருப்புகள் தாமாகவே பேசிக்கொள்வதில்லை. வகைப்படுத்துதல், விளக்கம் அளித்தல், பாதுகாத்தல், பொதுப் பிரதிநிதித்துவம் ஆகிய செயல்முறைகள் மூலம் அவற்றின் பொருள் வெளிப்படுகிறது. தொல்லியலுக்கும் அதிகாரத்திற்கும் இடையிலான இந்த உறவு, போருக்குப் பிந்தைய சமூகங்களில் குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. போருக்குப் பிறகு, தொல்பொருள் நிலப்பரப்புகள் பெரும்பாலும் போட்டியிடும் குழுக்கள் (இலங்கையில் இனத்துவ மேலாண்மை நாடும் குழுக்கள்) வரலாற்று அங்கீகாரத்தைத் தேடும் களங்களாக மாறுகின்றன. இடிபாடுகள் சான்றுகளாகின்றன. பாரம்பரியம் அதிகாரமாகிறது. அகழ்வாராய்ச்சிகள் சமகால அரசியல் விவாதங்களில் தலையீடுகளாகின்றன. சொந்தம், உரிமை, இறையாண்மை குறித்த கோரிக்கைகளை ஆதரிக்க பொருள்சார்ந்த கடந்த காலம் அணிதிரட்டப்படுகிறது. இந்த இயக்கவியலை ஆராய்வதற்கு இலங்கை ஒரு குறிப்பாக வெளிப்படுத்தும் சூழலை வழங்குகிறது. 1983 முதல் 2009 வரை நீடித்த உள்நாட்டுப் போர், அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஓர் இராணுவ மோதல் மட்டுமல்ல. அது நிலப்பரப்பு, வரலாறு, அடையாளம், அரசியல் அங்கீகாரம் மீதான ஒரு போராட்டமாகவும் இருந்தது. போட்டியிடும் தேசியவாதத் திட்டங்கள், தங்கள் கூற்றுகளை நியாயப்படுத்துவதற்காக வரலாற்றுப் பதிவுகளைப் பெருமளவில் பயன்படுத்தின. சிங்களபௌத்த தேசியவாதம், தீவின் பண்டைய பௌத்த நாகரிகத்தையும் சிங்கள அரசியல் அதிகாரத்தின் தொடர்ச்சியையும் வலியுறுத்தியது. தமிழ் தேசியவாதம், தமிழர்களின் நீண்டகாலக் குடியேற்ற வரலாறுகளையும், கொலனித்துவத்திற்கு முந்தைய தமிழ் அரசுகளின் இருப்பையும், தமிழர் பண்பாட்டு, அரசியல் மரபுகளின் தனித்துவத்தையும் சுட்டிக்காட்டியது. வரலாறு ஒருபோதும் மோதலுக்கு வெறும் பின்னணியாக மட்டும் இருக்கவில்லை. அது அதன் அடிப்படைப் பரிமாணங்களில் ஒன்றாகவும் இருந்தது.

2009இல் ஆயுத மோதல் முடிவுக்கு வந்தபோதிலும், இந்த வரலாற்றுச் சர்ச்சைகள் தீர்க்கப்படவில்லை. மாறாக, அவற்றில் பல புதிய களங்களுக்கு நகர்ந்தன. தொல்லியல், பாரம்பரிய மேலாண்மை, பாதுகாப்புத் திட்டங்கள், நினைவுச்சின்னக் கட்டுமானம், வரலாற்று விளக்கம் ஆகியவை, தீவின் கடந்த காலத்தைப் பற்றிய முரண்பட்ட புரிதல்களை வெளிப்படுத்தும் முக்கிய தளங்களாக மாறின. போர்க்களம் மறைந்து, பாரம்பரிய எல்லை என அழைக்கப்படக்கூடிய ஒரு சூழல் உருவானது. அங்கு, நினைவுகள், அடையாளம், நிலப்பரப்பு ஆகியன மீதான போராட்டங்கள் கலாசார, நிறுவன வழிமுறைகள் மூலம் தொடர்ந்தன. போருக்குப் பிந்தைய ஆண்டுகளில், வடக்குக் கிழக்கில் தொல்லியல் நடவடிக்கைகள் கணிசமாக விரிவடைந்தன. புதிய தலங்கள் அடையாளம் காணப்பட்டன, பண்டைய நினைவுச்சின்னங்கள் புனரமைக்கப்பட்டன, புனித நிலப்பரப்புகள் மறுவகைப்படுத்தப்பட்டன, பாதுகாப்பு மண்டலங்கள் விரிவுபடுத்தப்பட்டன. அதிகாரபூர்வமாக, இந்த முயற்சிகள் தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும் தொல்லியல்

வளங்களைப் பேணுவதற்குமான முயற்சிகளாக முன்வைக்கப்பட்டன. ஆயினும், பல உள்ளூர் சமூகங்களுக்கு, தொல்லியலானது அரசின் விரிவாக்கம், பிராந்திய மறுசீரமைப்பு, கலாசார மாற்றம் போன்ற பரந்த செயல்முறைகளிலிருந்து பிரிக்க முடியாததாகவே தோன்றியது.

முல்லைத்தீவில் உள்ள ஓர் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் இந்த மாற்றத்தைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: "போரின் போது, படைவீரர்கள், சோதனைச் சாவடிகள் மூலம் நிலம் கட்டுப்படுத்தப்பட்டது. போருக்குப் பிறகு, சில சமயங்களில் வரலாறே நிலத்தைக் கட்டுப்படுத்தும் மற்றொரு வழியாக மாறிவிட்டது போல் தோன்றுகிறது." அவரது இந்தக் கருத்தை, தொல்லியலையே நிராகரிப்பதாகப் புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக அது, எந்தச் சூழ்நிலைகளில் தொல்லியலானது ஆளுகை மற்றும் பிராந்திய அதிகாரத் திட்டங்களுடன் பின்னிப் பிணைந்து கொள்கிறது என்ற ஆழமான கேள்வியை எழுப்புகிறது. கொலனித்துவத்திற்குப் பிந்தைய சூழல்களில் பணியாற்றும் மானிடவியலாளர்கள், வரலாற்றாசிரியர்கள், தொல்லியலாளர்களை இந்தக் கேள்வி பல தசாப்தங்களாக ஆக்கிரமித்துள்ளது. புரூஸ் டிரிக்கர் (*Bruce Trigger*), நிக்கோலஸ் டிர்க்ஸ் (*Nicholas Dirks*), மைக்கேல் ஹெர்ஸ்ஃபெல்ட் (*Michael Herzfeld*), லாராஜேன் ஸ்மித் (*Laurajane Smith*) போன்ற அறிஞர்கள், வரலாற்றுத் தொடர்ச்சியின் கதைகளை உருவாக்குவதன் மூலம் தொல்லியலானது தேசத்தைக் கட்டமைப்பதற்கு அடிக்கடி பங்களிக்கிறது என்பதை நிரூபித்துள்ளனர். தேசங்களுக்கு நிகழ்காலத்தைத் தாண்டிய வரலாறுகள் தேவைப்படுகின்றன. தொல்லியலானது, அரசுகள் தங்களை பண்டைய நாகரிகங்களின் வாரிசுகளாகக் கற்பனை செய்துகொள்வதற்கான பொருள்சார் சான்றுகளை வழங்குகிறது. இடிபாடுகள், நினைவுச்சின்னங்கள், தொல்லியல் தலங்கள் ஆகியவை சமகால அரசியல் அதிகாரத்தை ஆழமான வரலாற்றுக் காலத்துடன் இணைக்கும் நங்கூரங்களாக மாறுகின்றன.

பெனடிக்ட் ஆண்டர்சன் (*Benedict Anderson*) தேசங்களை 'கற்பனைச் சமூகங்கள்' (*Imagined Communities*) எனக் கருதுவது இங்கு கவனிப்புக்குரியதாக அமைகிறது. பெரும் மக்கள் தொகையை ஒரு பொதுவான வரலாற்றுத் திட்டத்தின் பகுதியாகக் கற்பனை செய்துகொள்ள உதவும் பகிரப்பட்ட கதைகளையே தேசங்கள் சார்ந்துள்ளன. தொல்லியல், தேசிய வரலாற்றை உருவமாக்குவதன் மூலம் இந்தச் செயல்முறைக்குப் பங்களிக்கிறது. பண்டைய இடிபாடுகள் தேசிய முன்னோர்களாக மாறுகின்றன. புனிதத் தலங்கள் தொடர்ச்சியின் சின்னங்களாகின்றன. நிலப்பரப்புகள் கூட்டுச் சொந்த உணர்வின் வரலாற்றுச் சான்றுகளாகின்றன. ஆயினும், ஆண்டர்சனின் கட்டமைப்பானது, அத்தகைய விவரிப்புகள் ஒருபோதும் நடுநிலையானவை அல்ல என்பதை எடுத்துக்காட்டும் பின்கொலனித்துவ விமர்சனங்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். கடந்த காலத்தைத் தேர்ந்தெடுத்து அபகரிப்பதன் மூலமே தேசியம் பெரும்பாலும் உருவாகிறது என்று பார்த்தா சாட்டர்ஜி (*Partha Chatterjee*) நமக்கு நினைவூட்டுகிறார். வரலாற்று விவரிப்புகள், சில அடையாளங்களுக்கு முன்னுரிமை அளித்து மற்றவற்றை ஓரங்கட்டும் விதங்களில் கட்டமைக்கப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்டு, நிறுவனமயமாக்கப்படுகின்றன. ஒரு தேசம் தனது வரலாற்றை வெறுமனே கண்டறிவதில்லை. அது அதைத் தீவிரமாக உருவாக்குகிறது.

போருக்குப் பிந்தைய இலங்கையில் இந்த உருவாக்கம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் வடக்கும் கிழக்கும் ஆழமான அடுக்குகள் கொண்ட வரலாற்று நிலப்பரப்புகளைக் கொண்டுள்ளன. இந்தப் பிராந்தியங்கள் பலதரப்பட்ட மரபுகள், சமூகங்களுடன் தொடர்புடைய தொல்பொருள் எச்சங்களின் இருப்பிடமாக உள்ளன. பௌத்த ஸ்தூபிகள், இந்துக் கோயில்கள், கொலனித்துவக் கட்டமைப்புகள், இஸ்லாமியத் தலங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், நீர்ப்பாசன அமைப்புகள், கல்வெட்டுகள், பண்டைய குடியிருப்புகள் ஒரே புவியியல் பரப்பிற்குள் இணைந்து காணப்படுகின்றன. தொல்பொருள் பதிவுகள் பல நூற்றாண்டுகளின் இயக்கம், பரிமாற்றம், சகவாழ்வு உருமாற்றம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. ஆயினும், தொல்பொருள் சிக்கலானது தானாகவே பன்மை வரலாற்று விவரிப்புகளாக மாறிவிடுவதில்லை. பாரம்பரிய நிறுவனங்கள் பெரும்பாலும் தெளிவின்மையை விட ஒத்திசைவையே நாடுகின்றன. அவை தலங்களை வகைப்படுத்துகின்றன, முக்கியத்துவத்தை அளிக்கின்றன, வரலாற்று விளக்கத்தை ஒழுங்கமைக்கின்றன. அவ்வாறு செய்வதன் மூலம், எந்த வரலாறுகள் வெளிச்சத்திற்கு வருகின்றன, எவை ஓரங்கட்டப்படுகின்றன என்பது குறித்த முடிவுகளில் அவை தவிர்க்க முடியாமல் பங்கேற்கின்றன.

திருகோணமலையைச் சேர்ந்த ஒரு செயற்பாட்டாளர் (தமிழர்) இந்தப் பதற்றத்தை இவ்வாறு விவரித்தார்: "இந்த நிலம் பல வரலாறுகளைக் கொண்டுள்ளது. அந்த வரலாறுகள் இருக்கின்றனவா என்பது பிரச்சனையல்ல. யாருடைய வரலாறு

அதிகாரபூர்வமானது என்பதைத் தீர்மானிப்பதே பிரச்சனை." இந்த வேறுபாடு அடிப்படையானது. தொல்லியல் என்பது கடந்த காலத்தைக் கண்டறிவது மட்டுமல்ல. அது கடந்த காலத்தைப் பற்றிய குறிப்பிட்ட விளக்கங்களுக்கு அங்கீகாரம் அளிப்பதுமாகும். அதிகாரபூர்வ அங்கீகாரம் இடிபாடுகளைப் பாரம்பரியமாகவும், பாரம்பரியத்தை அரசியல் முக்கியத்துவமாகவும் மாற்றுகிறது. போருக்குப் பிந்தைய காலம் இந்த இயக்கவியலைத் தீவிரப்படுத்தியுள்ளது, ஏனெனில் தொல்லியல் இப்போது இடப்பெயர்வு, இராணுவமயமாக்கல், சர்ச்சைக்குரிய இறையாண்மை ஆகியவற்றால் ஏற்கனவே குறிக்கப்பட்ட நிலப்பரப்புகளுக்குள் செயல்படுகிறது. தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த தலங்கள் பெரும்பாலும் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுடன் ஒன்றுடன் ஒன்று இணைகின்றன. இடப்பெயர்வுக்குப் பிறகு திரும்பும் சமூகங்கள், நிலத்துக்கான அணுகலையும் வளப் பயன்பாட்டையும் பாதிக்கும் புதிய பாரம்பரிய விதிமுறைகள், பாதுகாப்பு மண்டலங்கள் அல்லது தொல்லியல் உரிமைகோரல்களை அடிக்கடி எதிர்கொள்கின்றன.

மன்னாரில், ஒரு விவசாயி, இடப்பெயர்வுக்கு முன்பு தனது குடும்பம் பயிரிட்ட நிலம், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அடையாளம் காணப்பட்ட ஒரு பகுதியுடன் எவ்வாறு இணைக்கப்பட்டது என்பதை விவரித்தார். அந்த வகைப்பாடு, நிலத்தைப் பயன்படுத்தும் முறையை மாற்றியதுடன், புதிய அடுக்கு அதிகாரத்துவ மேற்பார்வையையும் அறிமுகப்படுத்தியது. "நாங்கள் எங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பலாம் என்று நினைத்துத் திரும்பினோம். ஆனால், வரலாற்றின் காரணமாக புதிய கட்டுப்பாடுகள் இருப்பதாக எங்களிடம் கூறப்பட்டது." அவரது கருத்து ஒரு முக்கியமான முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது. பெரும்பாலும் கடந்த காலத்தைப் பாதுகாப்பதாகப் புரிந்து கொள்ளப்படும் தொல்லியல், நிகழ்காலத்தை ஆழமாக வடிவமைக்க முடியும். பாரம்பரியத் தலையீடுகள் வாழ்வாதாரங்கள், நடமாட்டம், நிலப் பயன்பாடு, உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. கடந்த காலம் ஓர் ஆளும் சக்தியாக மாறுகிறது.

"தேசிய வெளியின் உருவாக்கம்" என்ற கருத்து, இந்தச் செயல்முறைகளைப் புரிந்துகொள்வதற்கான ஒரு பயனுள்ள கண்ணோட்டத்தை வழங்குகிறது. இடத்தின் சமூக உருவாக்கம் குறித்த ஹென்றி லெஃபெப்ரேயின் (Henri Lefebvre) சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு, நிலப்பரப்பை வரலாற்று ரீதியாக அர்த்தமுள்ள தேசிய நிலப்பரப்பாக மாற்றுவதில் தொல்லியல் பங்கேற்கிறது என்று இந்தக் கட்டுரை வாதிடுகிறது. இடம் என்பது வெறும் பௌதீகப் புவியியல் மட்டுமல்ல. அது, அர்த்தத்தையும் சட்டபூர்வத் தன்மையையும் வழங்கும் விவரிப்புகள், சின்னங்கள், நிறுவனங்கள், நடைமுறைகள் மூலம் ஒழுங்கமைக்கப்படுகிறது. தொல்லியல் தலங்கள், பௌதீக நிலப்பரப்புகளுக்குள் வரலாற்று விவரிப்புகளைப் பொதிப்பதன் மூலம் இந்தச் செயல்முறைக்குப் பங்களிக்கின்றன. பண்டைய நினைவுச்சின்னங்கள் நாகரிகத் தொடர்ச்சியின் அடையாளங்களாக மாறுகின்றன. பாரம்பரிய மண்டலங்கள் சாதாரண நிலப்பரப்பை புனிதமான தேசிய இடமாக மாற்றுகின்றன. அகழ்வாராய்ச்சிகள் வரலாற்று இருப்பு, அரசியல் சார்ந்திருத்தல் குறித்த கோரிக்கைகளை மெய்ப்பிக்கின்றன.

போருக்குப் பிந்தைய இலங்கையில், இந்தச் செயல்முறைகள் அரச உருவாக்கம், பிராந்திய ஒருங்கிணைப்பு ஆகிய பரந்த திட்டங்களுடன் ஒன்றிணைகின்றன. இராணுவ வெற்றிக்குப் பிறகு இறையாண்மையை மீட்டெடுப்பது என்பது ஓர் இராணுவ அல்லது நிர்வாகத் திட்டம் மட்டுமல்ல. அது ஒரு வரலாற்றுத் திட்டமும் கூட. நினைவுச்சின்னங்கள், பாரம்பரியத் தலையீடுகள், நினைவுச் சடங்குகள், தொல்லியல் விவரிப்புகள் மூலம் தேசம் தன்னை நிலப்பரப்பில் பொறிக்க முயல்கிறது. இந்த இயங்குமுறை, அதிகாரம் என்பது வற்புறுத்தலின் மூலம் செயல்படுவது போலவே அறிவின் மூலமும் செயல்படுகிறது என்ற மைக்கேல் ஃபூக்கோவின் (Michel Foucault) அவதானிப்பை நினைவூட்டுகிறது. தொல்லியல் கடந்த காலத்தைப் பற்றிய அறிவை உருவாக்குகிறது. ஆனால் அந்த அறிவு சமகால அரசியல் யதார்த்தங்களையும் வடிவமைக்கிறது. வரலாற்று விளக்கம் ஒரு வகையான ஆட்சி முறையாக மாறுகிறது. அதே நேரத்தில், உள்ளூர் சமூகங்கள் அதிகாரபூர்வமான கூற்றுகளை மௌனமாக ஏற்றுக்கொள்வதில்லை. வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இனவரைவியல் ஆய்வுகள், தொல்பொருள் திட்டங்களுக்குப் பலதரப்பட்ட எதிர்வினைகள் வெளிப்படுவதை வெளிப்படுத்துகின்றன. சில குடியிருப்பாளர்கள், உள்ளூர் வரலாற்றை அங்கீகரிக்கும் விதமாகப் பாரம்பரியப் பாதுகாப்பை வரவேற்கின்றனர். மற்றவர்கள், நிலத்திற்கான அணுகல், கலாசாரப் பிரதிநிதித்துவம் அல்லது குறிப்பிட்ட வரலாற்று மரபுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் காட்டப்படுவது குறித்துக் கவலை தெரிவிக்கின்றனர். பலர்,

பாதுகாப்பிற்கான பாராட்டையும் அதன் அரசியல் தாக்கங்கள் குறித்த ஐயுறவையும் இணைக்கும் இருபொருள் கொண்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த ஒரு மீனவர் இந்த இருபொருள் தன்மையை இவ்வாறு வெளிப்படுத்தினார்: "நாங்கள் பழைய இடங்களை மதிக்கிறோம். அவை வரலாற்றின் ஒரு பகுதி. ஆனால் சில சமயங்களில், வரலாறு நிலத்துடனும் அதிகாரத்துடனும் இணைக்கப்படும்போது என்ன நடக்கும் என்று மக்கள் கவலைப்படுகிறார்கள்." அவரது கூற்று இந்தக் கட்டுரையின் மையச்சிக்கலைப் படம்பிடித்துக் காட்டுகிறது. போருக்குப் பிந்தைய தொல்பொருள் ஆய்வு என்பது வெறும் இடிபாடுகளைப் பற்றியது மட்டுமல்ல. அது இடிபாடுகளுக்கும் அதிகாரத்திற்கும் இடையிலான உறவைப் பற்றியது. எனவே, இந்தக் கட்டுரை தொல்பொருள் ஆய்வை, பல காலங்கள் சந்திக்கும் ஒரு துறையாக ஆராய்கிறது. பண்டைய காலங்கள், கொலனித்துவ வரலாறுகள், போர்க்கால அனுபவங்கள், போருக்குப் பிந்தைய எதிர்காலங்கள் ஆகியன ஒரே நிலப்பரப்புகளுக்குள் ஒன்றிணைகின்றன. அகழ்வாராய்ச்சிகள் பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய பொருள் எச்சங்களை வெளிக்கொணர்கின்றன. ஆயினும் அவற்றின் அரசியல் முக்கியத்துவம் ஆழ்ந்த சமகாலத்தன்மை வாய்ந்தது. பாரம்பரியத் திட்டங்கள் கடந்த காலத்தைப் பாதுகாக்க முற்படுகின்றன. ஆயினும் அவை எதிர்காலத்தை முனைப்புடன் வடிவமைக்கின்றன.

இறுதியாக, போருக்குப் பிந்தைய இலங்கையில் தொல்லியல் என்பது ஒரு கல்விசார் துறையாக மட்டுமல்லாமல், ஓர் அரசியல் மற்றும் சமூக நடைமுறையாகவும் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று இக்கட்டுரை வாதிடுகிறது. இடிபாடுகள், உரிமை குறித்த வாதங்களாக மாறுகின்றன. பாரம்பரியம் என்பது அதன் மூலம் தேசிய வெளி உருவாக்கப்படும் ஒரு பொறிமுறையாகிறது. அகழ்வாராய்ச்சிகள், இறையாண்மை, நினைவகம், அடையாளம் தொடர்பான தொடர்ச்சியான போராட்டங்களில் தலையீடுகளாக அமைகின்றன. 2009 இல் போர் இராணுவ ரீதியாக முடிவடைந்திருக்கலாம், ஆனால் வரலாறு குறித்த விவாதங்கள் தொடர்கின்றன. அவை பாராளுமன்றம், நீதிமன்றங்கள் அல்லது நினைவு விழாக்கள் ஆகியவற்றில் மட்டுமல்லாமல், தொல்பொருள் தலங்கள், பாரம்பரிய அறிவிப்புகள், பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் பாழடைந்த நிலப்பரப்புகளிலும் அரங்கேறுகின்றன. எனவே, போருக்குப் பிந்தைய இலங்கையைப் புரிந்துகொள்ள, மக்கள் கடந்த காலத்தை எவ்வாறு நினைவுகூர்கிறார்கள் என்பதை மட்டுமல்லாமல், சமகால ஆட்சி மற்றும் உரிமையுணர்வுக்கான திட்டங்களுக்குள் கடந்த காலத்தின் பௌதீக வடிவம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதையும் ஆராய்வது அவசியமாகிறது.

தொல்லியல், தேசியம், தேசிய வெளியின் உருவாக்கம்

தொல்லியல் பெரும்பாலும் கடந்த காலத்தை வெளிக்கொணர்வதில் அக்கறை கொண்ட ஒரு துறையாக முன்வைக்கப்படுகிறது. ஆயினும் அதன் முக்கியத்துவம் பெரும்பாலும் அது நிகழ்காலத்தை எவ்வாறு வடிவமைக்கிறது என்பதில்தான் அடங்கியுள்ளது. நவீன உலகம் முழுவதும், தேசிய அடையாளங்களின் உருவாக்கம், அரசியல் அதிகாரத்தின் சட்டபூர்வமாக்கல் மற்றும் பிராந்திய உரிமை கோரல்களின் உருவாக்கம் ஆகியவற்றில் தொல்லியல் ஒரு மையப் பாத்திரத்தை வகித்துள்ளது. பண்டைய இடிபாடுகள், நினைவுச்சின்னங்கள், கல்வெட்டுகள், புதைகுழிகள், புனிதத் தலங்கள் ஆகியவை முந்தைய சமூகங்களின் எச்சங்கள் மட்டுமல்ல. சமகால சமூகங்கள் தங்களைக் கற்பனை செய்து கொள்ளவும், தங்கள் தோற்றத்தை வரையறுக்கவும், நிலப்பரப்புடனான தங்கள் உறவை நிலைநிறுத்தவும் உதவும் சான்றுகளாகவும் மாறுகின்றன. இந்த வகையில், தொல்லியல் என்பது ஒருபோதும் கடந்த காலத்தைப் பற்றியது மட்டுமல்ல. அது நிகழ்காலத்தில் வரலாற்றின் அரசியல் பயன்பாடுகளைப் பற்றியதுமாகும். தொல்லியலுக்கும் தேசியவாதத்திற்கும் இடையிலான தொடர்பை அறிஞர்கள் பல தசாப்தங்களாக அங்கீகரித்துள்ளனர். தொல்லியல் மரபுகள் பெரும்பாலும் குறிப்பிட்ட அரசியல் சூழல்களில் தோன்றி, தேசியத் திட்டங்களுக்கு அடிக்கடி சேவை செய்கின்றன என்று புரூஸ் டிரிக்கர் (*Bruce Trigger*) குறிப்பிட்டார். நாடுகள் தொடர்ச்சியை நாடுகின்றன. சமகால அரசியல் நிறுவனங்களுக்கு அப்பாற்பட்டு, தற்போதைய மக்களை ஆழமான வரலாற்றுப் பின்னணியுடன் இணைக்கும் விவரிப்புகள் அவற்றுக்குத் தேவைப்படுகின்றன. இந்தத் தொடர்ச்சிக்குத் தொல்லியல் பொருள்சார் சான்றுகளை வழங்குகிறது. அகழ்வாராய்ச்சி மற்றும் விளக்கத்தின் மூலம் நாடுகள் தங்களைச் சமீபத்திய அரசியல் கட்டமைப்புகளாக அல்லாமல் பண்டைய நாகரிகங்கள் மற்றும் நீண்டகால வரலாற்றுச் சமூகங்களின் வாரிசுகளாக முன்வைக்க முடிகிறது. இந்தச் செயல்முறை குறிப்பாக முக்கியமானது, ஏனெனில் நாடுகள் இயல்பாகவே வரலாற்றுத் திட்டங்களாகும். பெனடிக்ட்

ஆண்டர்சனின் “கற்பனைச் சமூகங்கள்” என்ற கருத்து, ஒரு நாட்டின் உறுப்பினர்கள் தங்கள் சக குடிமக்களில் பெரும்பாலோரை ஒருபோதும் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்க மாட்டார்கள். ஆனாலும் அவர்கள் தங்களை ஒரு பகிரப்பட்ட கூட்டமைப்பின் பகுதியாகக் கற்பனை செய்து கொள்கிறார்கள் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. இந்தப் பகிரப்பட்ட கற்பனை வரலாற்று விவரிப்புகளைப் பெரிதும் சார்ந்துள்ளது. தொல்லியல், வரலாற்றை உருவமாக்குவதன் மூலம் இந்தக் கதையாடல்களுக்குப் பங்களிக்கிறது. பண்டைய நினைவுச்சின்னங்கள், பாழடைந்த நகரங்கள், புனித நிலப்பரப்புகள் ஆகியவை தற்கால மக்களுக்கும் கற்பனை செய்யப்பட்ட மூதாதையர்களுக்கும் இடையே உறுதியான இணைப்புகளாக மாறுகின்றன. தொல்லியலின் மூலம், ஒரு தேசம் காலப்போக்கில் ஆழத்தைப் பெறுகிறது. இருந்தபோதும் தொல்பொருள் சான்றுகள் தாமாகவே அரசியல் முக்கியத்துவத்தைப் பெறுவதில்லை. இடிபாடுகள் பேசுவதில்லை. கலைப்பொருட்கள் தங்களைத் தாங்களே விளக்குவதில்லை. விளக்கத்தின் மூலமே வரலாற்று முக்கியத்துவம் வெளிப்படுகிறது. தொல்பொருள் ஆய்வாளர்கள், அரசு நிறுவனங்கள், மத அமைப்புகள், அருங்காட்சியகங்கள், பாரம்பரிய முகமைகள், கல்வியாளர்கள், அரசியல்வாதிகள் என அனைவரும், தொல்பொருள் எச்சங்களின் அர்த்தம் என்ன என்பது குறித்த விவரிப்புகளைக் கட்டமைப்பதில் பங்கேற்கின்றனர். எனவே, இந்த செயல்முறை இயல்பாகவே அரசியல் தன்மை வாய்ந்தது.

பாரம்பரியம் குறித்த லாராஜேன் ஸ்மித்தின் ஆய்வு இங்கு குறிப்பாகப் பயனுள்ளதாக இருக்கிறது. பாரம்பரியம் என்பது பொருட்களின் தொகுப்பு அல்ல. அது ஒரு கலாசார செயல்முறை என்றும், அதன் மூலம் கடந்த காலத்தின் குறிப்பிட்ட பதிப்புகள் அங்கீகரிக்கப்படுகின்றன என்றும் அவர் வாதிடுகிறார். பாரம்பரியத்தில் தேர்வு அடங்கியுள்ளது. சில வரலாறுகள் உயர்த்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன மற்றவை புறக்கணிக்கப்படுகின்றன அல்லது கண்ணுக்குத் தெரியாமல் இருக்கின்றன. சில நினைவுச்சின்னங்கள் தேசிய சின்னங்களாக மாறுகின்றன. மற்ற தலங்கள் பொதுமக்களின் நினைவிலிருந்து மறைந்துவிடுகின்றன. எனவே பாரம்பரியத்தின் உருவாக்கம் சமூகத்திற்குள் உள்ள பரந்த அதிகார உறவுகளைப் பிரதிபலிக்கிறது. போருக்குப் பிந்தைய இலங்கையைப் புரிந்துகொள்வதற்கு இந்த உள்நோக்கு மிகவும் முக்கியமானது. தொல்பொருள் தலங்கள் இருக்கின்றனவா இல்லையா என்பது பிரச்சினை அல்ல. சமகால அரசியல் போராட்டங்களுக்குள் அவை எவ்வாறு விளக்கப்பட்டு அணிதிரட்டப்படுகின்றன என்பதே பிரச்சினை. தொல்பொருள் ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் அது தேசத்தைப் பற்றிய குறிப்பிட்ட பார்வைகளுக்கு வரலாற்று ரீதியான சட்டபூர்வ அங்கீகாரத்தை வழங்குகிறது. பிரதேசம், உரிமை, இறையாண்மை குறித்த கோரிக்கைகளை முன்வைப்பதற்கான ஒரு வளமாக கடந்த காலம் மாறுகிறது.

தொல்லியலுக்கும் பிரதேசத்திற்கும் இடையிலான உறவு குறிப்பாக முக்கியமானது. தேசியவாதத்திற்கு வரலாற்றுத் தொடர்ச்சி மட்டுமல்ல, இடஞ்சார்ந்த தொடர்ச்சியும் தேவைப்படுகிறது. நாடுகள், காலம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தாங்கள் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ள வேண்டும். தொல்பொருள் எச்சங்கள், நிலப்பரப்புகளை வரலாற்று இருப்பின் விவரிப்புகளுடன் இணைப்பதன் மூலம் இந்தத் தொடர்ச்சியை உருவாக்க உதவுகின்றன. குறிப்பிட்ட சமூகங்கள், குறிப்பிட்ட பிரதேசங்களுடன் நீண்டகால உறவுகளைக் கொண்டுள்ளன என்பதற்கு பண்டைய நினைவுச்சின்னங்கள் சான்றுகளாகின்றன. தொல்லியலின் மூலம், புவியியல் வரலாறாக மாறுகிறது. இந்தச் செயல்முறையை ஹென்றி லெஃபெப்ரேயின் ‘இடத்தின் உருவாக்கம்’ (*Production of Space*) என்ற கருத்தின் மூலம் புரிந்துகொள்ள முடியும். இடம் என்பது சமூக வாழ்க்கை நிகழும் ஒரு பௌதீகக் கொள்கலன் மட்டுமல்ல என்று லெஃபெப்ரே வாதிட்டார். மாறாக, அரசியல், பொருளாதாரம், கலாசாரம், குறியீட்டு நடைமுறைகள் ஆகியன மூலம் இடம் தீவிரமாக உருவாக்கப்படுகிறது. அரசுகள் உட்கட்டமைப்பு, நிலப்பட வரைவு, நிர்வாகம், கல்வி, சட்டம் ஆகியவற்றின் மூலம் தேசிய இடத்தை உருவாக்குகின்றன. தொல்லியல், பிரதேசத்தை வரலாற்றுமயமாக்குவதன் மூலம் இந்தச் செயல்முறைக்குப் பங்களிக்கிறது. தோற்றம், தொடர்ச்சி, உரிமை குறித்த விவரிப்புகளின் மூலம் நிலப்பரப்புகள் தேசிய இடங்களாக மாற்றப்படுகின்றன.

போருக்குப் பிந்தைய இலங்கையில், தேசிய வெளியின் இந்த உருவாக்கம் குறிப்பாகப் புலப்படத் தொடங்கியுள்ளது. வடக்கும் கிழக்கும் வெறும் புவியியல் பகுதிகள் மட்டுமல்ல. அவை ஒன்றுக்கொன்று முரண்படும் வரலாற்றுப் புனைவுகளால் அடுக்கப்பட்ட நிலப்பரப்புகளாகும். சிங்களபௌத்த தேசியவாதிகளுக்கு, இந்த நிலப்பரப்புகள் பெரும்பாலும் பண்டைய பௌத்த

நாகரிகம் மற்றும் வரலாற்று அரசு உருவாக்கம் குறித்த சான்றுகளைக் கொண்டுள்ளன. பல தமிழர்களுக்கு, அவை பல நூற்றாண்டுகால தமிழ்க் குடியேற்றம், அரசியல் அதிகாரம் மற்றும் பண்பாட்டுத் தொடர்ச்சியால் வடிவமைக்கப்பட்ட பகுதிகளைக் குறிக்கின்றன. தொல்பொருள் தலங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஏனெனில் அவை இந்தக் கூற்றுகளுக்கு ஆதரவான பொருள்சார் சான்றுகளை வழங்குவதாகத் தோன்றுகின்றன.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் ஓர் அகழ்வாராய்ச்சியாளர் சொன்னார்: "ஒரு கல்வெட்டு அல்லது ஒரு பாழடைந்த கட்டமைப்பைப் பற்றியது மட்டுமே விவாதம் அல்ல. அந்தக் கட்டமைப்பு, நிலத்தைப் பற்றி மக்கள் எதைக் கோர அனுமதிக்கிறது என்பதைப் பற்றியதுதான் விவாதம்." அவரது இந்தக் கருத்து, தொல்லியலின் பரந்த அரசியல் முக்கியத்துவத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. கடந்த காலத்தின் பொருள்சார் எச்சங்கள், சமகால நில உரிமைக் கோரிக்கைகளைச் சட்டபூர்வமாக்குவதற்கான வளங்களாக மாறுகின்றன.

போருக்குப் பிந்தைய அரசு உருவாக்கத்துடன் தொல்பொருள் ஆய்வு பின்னிப் பிணைந்திருக்கும் விதமே இலங்கைச் சூழலை குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்குகிறது. 2009இல் விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வியானது, முன்னர் சர்ச்சைக்குரியதாக இருந்த பிராந்தியங்களின் மீது அரசு தனது கட்டுப்பாட்டை வலுப்படுத்த வாய்ப்புகளை உருவாக்கியது. இந்த வலுப்படுத்துதல் நிர்வாக ரீதியாகவோ அல்லது இராணுவ ரீதியாகவோ மட்டும் இருக்கவில்லை. அது குறியீட்டு ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் இருந்தது. இறையாண்மை மற்றும் உரிமை குறித்த தேசிய கதையாடல்களில் இந்தப் பிராந்தியங்களை முழுமையாக இணைக்க அரசு முயன்றது. இந்த இணைப்பு நிகழ்வதற்கான கருவிகளில் ஒன்றாக தொல்பொருள் ஆய்வு மாறியது.

திருகோணமலையைச் சேர்ந்த ஒரு செயற்பாட்டாளர், போருக்குப் பிந்தைய தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகள் குறித்துப் பின்வருமாறு குறிப்பிட்டார்: "போர் முடிவடைந்தது, ஆனால் திடீரென்று பண்டைய தலங்கள் மீது மீண்டும் ஆர்வம் ஏற்பட்டது. இராணுவக் கட்டுப்பாடு நிறுவப்பட்ட பின்னரே சில இடங்கள் ஏன் முக்கியத்துவம் பெற்றன என்று மக்கள் கேட்கத் தொடங்கினர்." அவரது கருத்து, உள்ளூர் சமூகங்களிடையே மீண்டும் மீண்டும் நிலவும் ஒரு கருத்தை எடுத்துக்காட்டுகிறது. தொல்பொருள் ஆய்வு என்பது வெறும் பாதுகாப்பாக மட்டும் பார்க்கப்படாமல், பரந்த பிராந்திய ஆளுகைத் திட்டங்களின் ஒரு பகுதியாகவே பெரும்பாலும் உணரப்படுகிறது. இந்தக் கருத்து, தொல்பொருள் ஆய்வுக்கும் இறையாண்மைக்கும் இடையிலான நெருங்கிய உறவைப் பிரதிபலிக்கிறது. இறையாண்மை என்பது பொதுவாக ஒரு பிராந்தியத்தின் மீதான அரசியல் அதிகாரமாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. ஆனால் அது வரலாற்றின் மீதான அதிகாரத்தையும் உள்ளடக்கியது. அரசுகள் நிலத்தை ஆளுவதோடு மட்டுமல்லாமல், அதன் வரலாற்றுப் பொருளையும் வரையறுக்க முற்படுகின்றன. சமகால அரசியல் அதிகாரத்தை பண்டைய முன்னுதாரணங்களுடன் இணைக்கும் விவரிப்புகளை உருவாக்குவதன் மூலம், தொல்பொருள் ஆய்வு இந்தச் செயல்முறைக்குப் பங்களிக்கிறது. அதிகாரம் மற்றும் அறிவு குறித்த மைக்கேல் ஃபூக்கோவின் ஆய்வு, இந்த உறவைப் புரிந்துகொள்வதற்கான ஒரு முக்கியமான கட்டமைப்பை வழங்குகிறது. அறிவு ஒருபோதும் அதிகாரத்திலிருந்து பிரிக்க முடியாதது என்று ஃபூக்கோ வாதிட்டார். சமூகங்கள் தங்களைப் புரிந்துகொள்வதையும் சமூக வாழ்க்கையை ஒழுங்கமைப்பதையும் வடிவமைக்கும் அறிவை நிறுவனங்கள் உருவாக்குகின்றன. தொல்பொருள் ஆய்வு வரலாற்று அறிவை உருவாக்குகிறது. அந்த அறிவு சமகால அரசியல் யதார்த்தங்களையும் பாதிக்கிறது. பாரம்பரியத் தலங்கள் என அறிவித்தல், பாதுகாப்பு மண்டலங்கள், அருங்காட்சியகக் கண்காட்சிகள், கல்விப் பாடத்திட்டங்கள், சுற்றுலா முன்னெடுப்புகள் ஆகிய அனைத்தும் தொல்பொருள் விளக்கங்களை நடைமுறை ஆட்சி முறைகளாக மாற்றுகின்றன.

இலங்கையில், இந்த இயக்கவியல் குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் தொல்பொருள் தலையீடுகள் பெரும்பாலும் நிலம் மற்றும் வளங்களுக்கான அணுகலைப் பாதிக்கின்றன. பாரம்பரியத் தலங்கள் தனித்த நினைவுச்சின்னங்கள் அல்ல. அவை மக்கள் வாழும், வயல்களைப் பயிரிடும், மீன்பிடிக்கும், வளங்களைச் சேகரிக்கும், சமூக உறவுகளைப் பேணும் நிலப்பரப்புகளுக்குள் அமைந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட பகுதிக்குத் தொல்பொருள் முக்கியத்துவம் வழங்கப்படும்போது, அது அணுகல் மற்றும் அதிகாரத்தின் வடிவங்களை மாற்றக்கூடும். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு விவசாயி இந்த மாற்றத்தை இவ்வாறு விவரித்தார்: "ஒரு நாள் இது சாதாரண நிலமாக இருக்கிறது. மறுநாள் இது வரலாற்று நிலமாக மாறுகிறது. திடீரென்று புதிய விதிகளும், முடிவுகளை எடுக்கும் புதிய மக்களும் உருவாகிறார்கள்." அவரது கூற்று, தொல்லியல் எவ்வாறு அன்றாட இடஞ்சார்ந்த உறவுகளை மாற்றியமைக்க முடியும் என்பதை

வெளிப்படுத்துகிறது. பாரம்பரியத்தை வரையறுப்பது வெறும் அடையாளபூர்வமானது மட்டுமல்ல அதற்குப் பொருள்சார்ந்த விளைவுகளும் உண்டு. அதே நேரத்தில், இலங்கையின் தொல்பொருள் நிலப்பரப்புகள் அரிதாகவே நேரடியானவையாக இருக்கின்றன. வடக்கும் கிழக்கும், இயக்கம், வர்த்தகம், இடப்பெயர்வு, வெற்றி, மத மாற்றம், கலாசாரப் பரிமாற்றம் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட அசாதாரணமான சிக்கலான வரலாறுகளைக் கொண்டுள்ளன. பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய, கொலனித்துவ, பழங்குடி வரலாறுகள் ஒரே பிராந்தியங்களுக்குள் ஒன்றோடொன்று கலந்துள்ளன. தொல்பொருள் சான்றுகள், எந்தவொரு தனி சமூகத்தின் பிரத்தியேகமான ஆக்கிரமிப்பைக் காட்டிலும், பல நூற்றாண்டுகளாக நீடித்த சகவாழ்வையும் இடைவினைகளையும் அடிக்கடி வெளிப்படுத்துகின்றன.

இந்தச் சிக்கலானது, தொல்பொருள் யதார்த்தத்திற்கும் அரசியல் விவரிப்பிற்கும் இடையில் ஒரு பதற்றத்தை உருவாக்குகிறது. தேசியம் பெரும்பாலும் தெளிவான, தொடர்ச்சியான வரலாறுகளை நாடுகிறது. தொல்பொருள் சான்றுகள் பெரும்பாலும் தெளிவின்மை, கலப்புத்தன்மை, ஒன்றோடொன்று இணைந்திருத்தல் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. ஆயினும், தொல்லியலின் குறியீட்டு ஆற்றலின் காரணமாகவே அரசியல்வாதிகள் அதனைத் தொடர்ந்து முன்னிறுத்துகின்றனர். வரலாற்று நூல்களில் சில சமயங்களில் இல்லாத ஒருவித புறநிலைத்தன்மையை பொருள் எச்சங்கள் கொண்டுள்ளன. பாழடைந்த ஒரு மடாலயம், ஒரு கல்வெட்டு அல்லது ஒரு பழங்காலக் குடியிருப்பு ஆகியவை தொட்டுணரக்கூடியதாகவும் மறுக்க முடியாததாகவும் தோன்றுகின்றன. எனவே, தொல்லியல் சான்றுகளின் விளக்கம் சர்ச்சைக்குரியதாக இருந்தாலும், அவை கணிசமான அரசியல் அதிகாரத்தைக் கொண்டுள்ளன. போருக்குப் பிந்தைய சூழல் இந்தப் பதற்றங்களைத் தீவிரப்படுத்துகிறது. ஏனெனில் இடப்பெயர்வு, இராணுவமயமாக்கல், சர்ச்சைக்குரிய நினைவுகள் ஆகியவற்றால் ஏற்கனவே குறிக்கப்பட்ட நிலப்பரப்புகளுக்குள் தொல்லியல் இப்போது இயங்குகிறது. பல ஆண்டுகாலப் போருக்குப் பிறகு திரும்பும் சமூகங்கள் புதிய நிர்வாகக் கட்டமைப்புகளை மட்டுமல்ல, புதிய பாரம்பரிய ஆட்சிமுறைகளையும் எதிர்கொள்கின்றன. யார் தங்களுக்குரியவர், யார் முடிவெடுப்பவர், யாருடைய வரலாறு புலப்படும் என்பது குறித்த பரந்த போராட்டங்களின் ஒரு பகுதியாக தொல்லியல் திட்டங்கள் மாறுகின்றன. முல்லைத்தீவில் உள்ள ஒரு முதியவர் இந்தக் கவலையைச் சுருக்கமாகக் கூறினார்: "வரலாறு பாதுகாக்கப்பட வேண்டுமா என்பது கேள்வியல்ல. யாருடைய வரலாறு பாதுகாக்கப்படுகிறது, மேலும் அந்தப் பாதுகாப்பு இன்று இங்கு வாழ்பவர்களுக்கு என்ன அர்த்தம் தருகிறது என்பதே கேள்வி." அவரது கூற்று போருக்குப் பிந்தைய இலங்கையின் தொல்லியலை ஒரு அறிவியல் முயற்சியாகவோ அல்லது ஒரு பாரம்பரியத் திட்டமாகவோ மட்டும் புரிந்துகொள்ள முடியாது என்ற வாதத்திற்கு வலுச்சேர்க்கிறது. அது ஓர் அரசியல் செயல்முறையாகவும் இருக்கிறது. அதன் மூலம் தேசிய வெளி உருவாக்கப்படுகிறது. இறையாண்மை சட்டபூர்வமாக்கப்படுகிறது. சொந்தம் குறித்த போட்டிப் பார்வைகள் விவாதிக்கப்படுகின்றன. தொல்லியலின் முக்கியத்துவம் அது வெளிக்கொணர்வதில் மட்டுமல்ல. அது சாத்தியமாக்குவதிலும் அடங்கியுள்ளது. இடிபாடுகள் நிலப்பரப்பு குறித்த விவாதங்களாக மாறுகின்றன. நினைவுச்சின்னங்கள் அடையாளம் குறித்த கோரிக்கைகளாக மாறுகின்றன. அகழ்வாராய்ச்சிகள் சமகால அரசியல் வாழ்வில் தலையீடுகளாக மாறுகின்றன. இந்தச் செயல்முறைகளின் மூலம், பௌதீகக் கடந்த காலம் போருக்குப் பிந்தைய நிகழ்காலத்துடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்துவிடுகிறது.

இடிபாடுகளும் இறையாண்மையும்: தேசத்தைப் பொருள்மயமாக்குதல்

இடிபாடுகள் ஒருபோதும் கடந்த காலத்தின் வெறும் எச்சங்கள் அல்ல. அவை நிகழ்காலத்தின் மூலம் பொருள் பெறும் அரசியல் பொருள்கள். தொல்லியல் பெரும்பாலும் இடிபாடுகளை முந்தைய சமூகங்களின் பொருள்சார் சான்றுகளாக அணுகினாலும், இடிபாடுகளின் சமூக வாழ்வு அவற்றின் உருவாக்கம் அல்லது கண்டுபிடிப்பின் தருணத்தையும் தாண்டி வெகுதூரம் நீள்கிறது. இடிபாடுகள் தொடர்ந்து மறுவிளக்கம் செய்யப்படுகின்றன, மறுவகைப்படுத்தப்படுகின்றன, புனரமைக்கப்படுகின்றன, அணிதிரட்டப்படுகின்றன, சவாலுக்குட்படுத்தப்படுகின்றன. அவை அடையாளம், பிரதேசம், நாகரிகம், சொந்தம் குறித்த விவரிப்புகளில் இணைக்கப்படுகின்றன. போருக்குப் பிந்தைய சமூகங்களில், இறையாண்மை, சட்டபூர்வத்தன்மை மற்றும் வரலாற்று உரிமை குறித்த கேள்விகள் தீர்க்கப்படாமல் இருப்பதால், இந்த அரசியல் வாழ்வு குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. இடிபாடுகள் வெறும் தொல்பொருள் கலைப்பொருட்களாக இருப்பதை நிறுத்துகின்றன.

அவை ஒரு விவாதமாக மாறுகின்றன. நினைவாற்றல், பொருள் தன்மை குறித்த மானிடவியலாளர்கள், பொது வாழ்வில் பௌதீக எச்சங்கள் ஒரு தனித்துவமான அதிகாரத்தைக் கொண்டிருப்பதை நீண்ட காலமாக அவதானித்து வருகின்றனர். வாய்மொழி வரலாறுகள், நினைவுகள் அல்லது அரசியல் உரைகளைப் போலல்லாமல், இடிபாடுகள் பொருள்ரீதியாகத் தாமாகவே வெளிப்படையானவையாகத் தோன்றுகின்றன. அவற்றின் பௌதீக இருப்பு, கடந்த காலம் நிகழ்காலத்தில் சிதைவின்றித் தப்பிப்பிழைத்துள்ளது என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. இந்த வெளித்தோற்ற நிலைத்தன்மை, தேசியவாதத் திட்டங்களில் இடிபாடுகளுக்கு ஒரு சிறப்பு அந்தஸ்தை அடிக்கடி வழங்குகிறது. அரசுகள் மாறலாம், அரசாங்கங்கள் வீழலாம், மக்கள் இடம்பெயரலாம், ஆனால் அந்த இடிபாடுகள் நிலைத்திருப்பது போல் தோன்றுகின்றன. அவை நூற்றாண்டுகள் கடந்து சாட்சி கூறுவது போல் தெரிகின்றது. ஆயினும், இந்தத் தோற்றம் ஏமாற்றுவதாகும். இடிபாடுகளுக்கு நிலையான அர்த்தங்கள் இல்லை. அவை விளக்கப்பட வேண்டும். அவை விவரிக்கப்பட வேண்டும். அவை பரந்த வரலாற்றுச் சட்டகங்களுக்குள் நிலைநிறுத்தப்பட வேண்டும். மைக்கேல் ஹெர்ஸ்ஃபெல்ட் நமக்கு நினைவூட்டுவது போல, மரபுரிமை என்பது ஒருபோதும் வெறுமனே மரபுரிமையாகப் பெறப்படுவதில்லை. அது நிறுவனங்கள், நிபுணத்துவம், அரசியல் அதிகாரம் ஆகியவற்றின் மூலம் முனைப்புடன் உருவாக்கப்படுகிறது.

இலங்கையில், இந்தச் செயல்முறை குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளது, ஏனெனில் தேசியவாதத் திட்டங்கள் வரலாற்று ரீதியாக வரலாற்றுத் தொடர்ச்சி குறித்த கூற்றுகளைச் சார்ந்தே இருந்துள்ளன. தீவின் அரசியல் வரலாறு, தோற்றம், குடியேற்றம், நாகரிகம், பிராந்திய உரிமை குறித்த முரண்பட்ட விவரிப்புகள் மூலம் நீண்ட காலமாக விவரிக்கப்பட்டு வருகிறது. தொல்பொருள் எச்சங்கள் இந்த விவாதங்களில் மீண்டும் மீண்டும் இழுக்கப்படுகின்றன. ஏனெனில் அவை உறுதியாக நிரூபிக்கக் கடினமான கூற்றுகளுக்குப் பொருள்சார் சான்றுகளை வழங்குவதாகத் தோன்றுகின்றன. பண்டைய கோயில்கள், கல்வெட்டுகள், மடாலயங்கள், நீர்ப்பாசன அமைப்புகள், கல்லறைகள், புனித நிலப்பரப்புகள் ஆகியன வரலாற்றுச் சாட்சிகளாக உருமாறுகின்றன. கேள்வி இனி, இந்தத் தலங்கள் கடந்த காலத்தைப் பற்றி எதனை வெளிப்படுத்துகின்றன என்பது மட்டுமல்ல. மாறாக, நிகழ்காலத்தைப் பற்றி சமகாலத்தவர்கள் என்ன உரிமை கோருவதற்கு அவை வழிவகுக்கின்றன என்பதுதான். திருகோணமலையில் களஆய்வில் ஈடுபட்டிருந்த போது, ஓய்வுபெற்ற வரலாற்று ஆசிரியர் ஒருவர் இந்த இயக்கவியலைப் பற்றி அதன் எளிமையையும் சிக்கலையும் ஒருங்கே வெளிப்படுத்தும் விதத்தில் பின்வருமாறு சொன்னார்: "தொல்லியல் என்பது நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவது என்று மக்கள் அடிக்கடி நினைக்கிறார்கள். ஆனால் இங்குள்ள மக்கள் அதைப் பற்றி விவாதிப்பதில்லை. விவாதங்கள் இன்றைய நிகழ்வுகளைப் பற்றியவை. ஒரு தலம் பழமையானது என்று அடையாளம் காணப்பட்டவுடன், அடுத்த கேள்வி எப்போதும் இதுதான். இப்போது அதன் அர்த்தம் என்ன? அது யாருக்குச் சொந்தமானது? அது எந்த வரலாற்றைப் பிரதிபலிக்கிறது? அந்த வரலாற்றைச் சொல்ல யாருக்கு உரிமை இருக்கிறது? இந்தக் கேள்விகளுக்குக் கற்களே பதிலளிப்பதில்லை. நிறுவனங்கள், அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் மற்றும் நிபுணர்களிடமிருந்துதான் பதில்கள் வருகின்றன. மக்கள் தொல்லியல் என்று அழைப்பது பெரும்பாலும் உரிமை, அதிகாரம், சொந்தம் குறித்த ஒரு விவாதமாகவே இருக்கிறது". அவரது இந்தக் கருத்து, போருக்குப் பிந்தைய தொல்லியலின் ஒரு மைய அம்சத்தைச் சுட்டிக்காட்டுகிறது. தொல்பொருள் தலங்கள் வரலாற்றை வெளிப்படுத்துவது மட்டுமல்ல. அவை சமகால அரசியல் உறவுகளை ஒழுங்கமைக்கின்றன. தொல்பொருள் விளக்கத்தின் மூலம், நிலப்பரப்புகள் வரலாற்றுப் பிரதேசங்களாக மாற்றப்படுகின்றன. இந்த மாற்றம் இறையாண்மையுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது.

இறையாண்மை என்பது பொதுவாக ஒரு பிரதேசம் மற்றும் மக்கள் மீதான அரசின் அதிகாரமாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. ஆயினும், இறையாண்மை என்பது ஒரு குறியீடாகவும் இருக்கிறது. அரசுகள் நிலப்பரப்பை பௌதீக ரீதியாகக் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தங்கள் அதிகாரம் வரலாற்று ரீதியாக சட்டபூர்வமானது என்பதையும் நிரூபிக்க முற்படுகின்றன. எனவே, நவீன தேசஅரசுக்கு அதன் சமகால இருப்பையும் கடந்து நீளும் ஒரு கதை தேவைப்படுகிறது. தொல்லியல், தேசத்தை

ஆழமான வரலாற்று காலத்திற்குள் உட்பொதிப்பதன் மூலம் இந்த முயற்சிக்கு பங்களிக்கிறது. பண்டைய நினைவுச்சின்னங்கள், அரசு தோன்றுவதற்கு முன்பே தேசம் இருந்தது என்பதற்கான சான்றுகளாகின்றன. இடிபாடுகள், அரசியல் அதிகாரம் என்பது வெறும் சமகால அதிகாரத்தில் மட்டும் வேரூன்றியிருக்காமல், வரலாற்றில் வேரூன்றியுள்ளது என்பதற்கான ஆதாரமாகின்றன. இந்த இயக்கவியலை பல கொலனித்துவத்திற்குப் பிந்தைய சமூகங்களில் காண முடிகிறது. இந்தியாவில், அயோத்தியைச் சுற்றியுள்ள தொல்லியல் விவாதங்கள், மதத் தேசியவாதம் மற்றும் தேசிய அடையாளம் குறித்த கேள்விகளுடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்தன. இஸ்ரேல் - பாலஸ்தீனத்தில், வரலாற்று உரிமை குறித்த போட்டிக் கோரிக்கைகளை ஆதரிப்பதற்காக தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளன. பால்கன் முழுவதும், தொல்லியல் தலங்கள் இனத் தொடர்ச்சி மற்றும் பிராந்திய சட்டபூர்வத்தன்மையின் சின்னங்களாகப் பணியாற்றியுள்ளன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தொல்லியல் என்பது ஒரு கல்விசார் துறையாக மட்டுமல்லாமல், அரசியல் சமூகங்கள் தங்கள் வரலாற்று அடித்தளங்களைக் கற்பனை செய்து பார்க்கும் ஒரு பொறிமுறையாகவும் செயல்படுகிறது.

இலங்கை இந்தப் பண்புகளில் பலவற்றைப் பகிர்ந்து கொள்கிறது. ஆனால் போருக்குப் பிந்தைய சூழல் கூடுதல் சிக்கல்களை அறிமுகப்படுத்துகிறது. 2009இல் விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வியானது, நிலப்பரப்பின் மீதான அரசின் கட்டுப்பாட்டை மீட்டெடுத்ததை மட்டுமல்லாமல், தேசம் குறித்த ஒரு குறிப்பிட்ட தொலைநோக்குப் பார்வையை மீண்டும் நிலைநிறுத்துவதையும் குறித்தது. தமிழ் அரசியல் அபிலாஷைகள் மற்றும் சர்ச்சைக்குரிய இறையாண்மையுடன் நீண்ட காலமாகத் தொடர்புடைய வடக்கும் கிழக்கும், அரசின் அதிகாரத்தை நிர்வாக ரீதியாகவும் குறியீட்டு ரீதியாகவும் வலுப்படுத்த வேண்டிய இடங்களாக மாறின. இந்த பரந்த சூழலுக்குள் தொல்பொருள் தலையீடுகள் உருவாயின. போரின் பின்னரான பத்தாண்டுகாலத்தில் வடக்குக் கிழக்கின் ஆய்வுக்களங்களில் பதிலளித்த பலரும் தொல்பொருள் ஆய்வை ஒரு தனிப்பட்ட கல்விசார் செயல்பாடாகக் கருதாமல், பரந்த நிலப்பரப்பு மாற்ற செயல்முறைகளின் ஒரு பகுதியாகவே விவரித்தனர். முல்லைத்தீவின் புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த ஓர் ஊர்ப் பெரியவர் விளக்கினார்: “போர் முடிந்த பிறகு, மக்கள் சாலைகள், பள்ளிகள், வீடுகளை எதிர்பார்த்தனர். அவை வந்தன, ஆனால் வேறு ஒன்றும் நிகழ்ந்தது. அதிகாரிகள் பழைய இடங்களைத் தேடி வந்தனர், நிலத்தை அளந்தனர், எல்லைகளைக் குறித்தனர், பாரம்பரியம், பாதுகாப்பு என்பன பற்றிப் பேசினர். வரலாற்றைப் பாதுகாப்பதற்கு யாரும் எதிரானவர்கள் அல்ல. ஆனால், போருக்குப் பிறகு மட்டும் சில இடங்கள் ஏன் திடீரென்று முக்கியத்துவம் பெற்றன என்று மக்கள் கேட்கத் தொடங்கினர். அந்தக் கவலை தொல்லியல் பற்றியது அல்ல. நிலம் மறுவரையறை செய்யப்படும் ஒரு பெரிய செயல்முறையின் பகுதியாக தொல்லியல் மாறி வருகிறதா என்பதுதான் கவலையாக இருந்தது.” இந்த மேற்கோளில் கவனத்தை ஈர்ப்பது தொல்லியலின் மீதான விரோதப் போக்கு அல்ல, மாறாக அதன் அரசியல் விளைவுகள் குறித்த நிச்சயமற்ற தன்மையே ஆகும். களப்பணி முழுவதும் இதே போன்ற கவலைகள் மீண்டும் மீண்டும் எழுந்தன. சமூகங்கள் பெரும்பாலும் பாரம்பரியப் பாதுகாப்பின் மதிப்பிற்கும் தொல்லியல் தலையீட்டின் பரந்த விளைவுகளுக்கும் இடையே வேறுபடுத்திப் பார்த்தன. கடந்த காலத்தைப் பாதுகாக்க வேண்டுமா என்பது பிரச்சினையாக இருக்கவில்லை. மாறாக, தொல்லியல் அதிகாரம் நிலம், ஆளுகை மற்றும் உரிமை குறித்த கேள்விகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறது என்பதே பிரச்சினையாக இருந்தது.

ஹென்றி லெஃபெப்ரேயின் வெளியின் உருவாக்கம் குறித்த கோட்பாட்டின் மூலம் பார்க்கும்போது இந்த உறவு மேலும் தெளிவாகிறது. வெளி என்பது ஒரு நடுநிலையான கொள்கலன் அல்ல, மாறாக அது ஒரு சமூகப் படைப்பு என்று லெஃபெப்ரே வாதிட்டார். அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசார செயல்முறைகள் மூலம் நிலப்பரப்புகள் அர்த்தத்தைப் பெறுகின்றன. தொல்லியல், நிலப்பரப்பை வரலாற்றுமயமாக்குவதன் மூலம் இந்த உருவாக்கத்திற்குப் பங்களிக்கிறது. ஒரு காடு தொல்லியல் காப்பகமாக மாறுகிறது. விவசாய நிலம் ஒரு பாதுகாக்கப்பட்ட தலமாகிறது. ஒரு கிராமப்புற நிலப்பரப்பு தேசிய பாரம்பரிய மண்டலத்தின் ஒரு பகுதியாகிறது. இத்தகைய உருமாற்றங்களின் மூலம், வெளி புதிய அதிகார வடிவங்களைப் பெறுகிறது. எனவே, தேசிய வெளியின் உருவாக்கம் என்பது வரலாற்றுப் பொருளின் உருவாக்கத்திலிருந்து பிரிக்க முடியாதது. தொல்லியல் தலங்கள், நிலப்பரப்பை நாகரிகம் மற்றும் தொடர்ச்சியின் விவரிப்புகளுடன் இணைக்கும் நங்கூரங்களாகச் செயல்படுகின்றன. நிலப்பரப்பு ஒரு வரலாற்று உரையாக மாறுகிறது. அந்த உரையைப் படிப்பதற்கான பொருள்சார் சொற்களஞ்சியத்தை இடிபாடுகள் வழங்குகின்றன. ஆயினும், தொல்பொருள் நிலப்பரப்புகள் அரிதாகவே ஒற்றைக் கதைகளை ஆதரிக்கின்றன.

வடக்கும் கிழக்கும் அசாதாரணமான பல அடுக்கு வரலாறுகளைக் கொண்டுள்ளன. பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, கொலனித்துவ, பழங்குடி வரலாறுகள் ஒரே புவியியல் பரப்புகளில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. வர்த்தகப் பாதைகள் இந்தப் பகுதிகளைத் தென்னிந்தியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் பரந்த இந்தியப் பெருங்கடல் உலகத்துடன் இணைத்தன. இடப்பெயர்வு, குடியேற்றம், பரிமாற்றம், மத மாற்றம் ஆகியவற்றின் வடிவங்கள், பிரத்தியேகத் தன்மையைக் காட்டிலும் சிக்கலான தன்மையால் வகைப்படுத்தப்படும் தொல்பொருள் பதிவுகளை உருவாக்கியுள்ளன.

மன்னாரைச் சேர்ந்த ஓர் உள்ளூர் ஆய்வாளர் இந்தச் சிக்கலான தன்மையைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: "இந்தப் பகுதிகளின் தொல்பொருளியலை நீங்கள் எவ்வளவு தீவிரமாக ஆய்வு செய்கிறீர்களோ, அவ்வளவு கடினமாக எளிய கதைகளை நிலைநிறுத்துவது ஆகிறது. தொல்பொருள் பதிவு இயக்கத்தைக் காட்டுகிறது. அது பரிமாற்றத்தைக் காட்டுகிறது. அது நீண்ட காலங்களுக்கு வெவ்வேறு சமூகங்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டதைக் காட்டுகிறது. நவீன அரசியல் அடிக்கடி கண்டறிய விரும்பும் நேர்த்தியான வரலாற்று எல்லைகளை அது காட்டுவதில்லை. இந்த நிலப்பரப்பு பல அடுக்குகளைக் கொண்டது. அதை ஒற்றை வரலாறாகக் குறைக்கும் ஒவ்வொரு முயற்சியும், சமமாக இருக்கும் பல வரலாறுகளைப் புறக்கணிக்க வேண்டியுள்ளது." அவரது இந்தக் கருத்து, போருக்குப் பிந்தைய பாரம்பரிய அரசியலில் நிலவும் ஒரு பதற்றத்தை எடுத்துக்காட்டுகிறது. தொல்பொருள் ஆய்வு பெரும்பாலும் பன்முகத்தன்மையை வெளிப்படுத்துகிறது, அதேசமயம் தேசியம் அடிக்கடி ஒத்திசைவைத் தேடுகிறது. தொல்பொருள் பதிவுகள், இடைவினை, இடப்பெயர்வு, கலப்பினத்தன்மை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன. அரசியல் விவரிப்புகள் பெரும்பாலும் தொடர்ச்சி, உரிமை, பிரத்தியேகத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்கின்றன. இதன் விளைவாக, தொல்பொருள் சிக்கல்தன்மைக்கும் அரசியல் எளிமைப்படுத்தலுக்கும் இடையே உருவாகும் இடைவெளி, சமகால இலங்கையில் நடைபெறும் மரபுரிமை விவாதங்களின் வரையறுக்கும் அம்சங்களில் ஒன்றாகுகிறது.

அதே நேரத்தில், இடிபாடுகள் ஒரு சக்திவாய்ந்த உணர்வுபூர்வமான பரிமாணத்தைக் கொண்டுள்ளன. அவை வரலாற்று உரிமைகோரல்களுக்கு வெறும் அங்கீகாரம் அளிப்பதில்லை. அவை ஒரு நிலப்பரப்புடனான உணர்வுபூர்வமான உறவுகளை வடிவமைக்கின்றன. பண்டைய தலங்கள் பெரும்பாலும் புனிதமான இடங்களாகவும், நினைவுகளின் இடங்களாகவும், அல்லது தொடர்ச்சியின் சின்னங்களாகவும் உணரப்படுகின்றன. அவற்றின் முக்கியத்துவத்தை அரசியலுக்குள் மட்டும் சுருக்கிவிட முடியாது. திருகோணமலைக்கு அருகில் களஆய்வு மேற்கொண்ட போது, ஒரு பௌத்த துறவி விளக்கினார்: "வரலாற்று உரிமைகோரல்களை நிரூபிக்க உதவுவதால் பண்டைய தலங்கள் முக்கியமானவை என்று மக்கள் சில சமயங்களில் கருதுகிறார்கள். அது கதையின் ஒரு பகுதி மட்டுமே. பலருக்கு, இந்த இடங்கள் ஆன்மீக ரீதியாக அர்த்தமுள்ளவை. அவை நமக்கு முன் வாழ்ந்த தலைமுறையினருடன் நம்மை இணைக்கின்றன. வரலாறு நமது சொந்த வாழ்க்கையை விடப் பெரியது என்பதை அவை நமக்கு நினைவூட்டுகின்றன. புனிதத்தன்மையையும் அரசியலையும் பிரிக்க முடியாத நிலை வரும்போதுதான் ஆபத்து வருகிறது." இக்கருத்து, தொல்பொருள் இறையாண்மையின் மற்றொரு முக்கியமான பரிமாணத்தைச் சுட்டிக்காட்டுகிறது. இடிபாடுகளின் அதிகாரம் பெரும்பாலும் வரலாற்று விவரிப்புகளிலிருந்து மட்டுமல்ல, தார்மீக, ஆன்மீக முக்கியத்துவத்திலிருந்தும் பெறப்படுகிறது. புனித நிலப்பரப்புகள், வரலாறு, மதம், பிரதேசம் ஆகியவற்றை ஒரே கட்டமைப்பிற்குள் இணைப்பதால்தான், தேசிய அடையாளத்தின் சக்திவாய்ந்த சின்னங்களாக மாறக்கூடும். ஆயினும், இந்தக் குறியீட்டு சக்தி சீரற்ற முறையில் விநியோகிக்கப்பட்டுள்ளது. எல்லா இடிபாடுகளும் பாரம்பரியமாக மாறுவதில்லை. எல்லா வரலாறுகளும் சமமான அங்கீகாரத்தைப் பெறுவதில்லை. வடக்குக் கிழக்கு முழுவதும் நடந்த உரையாடல்களின் போது, பதிலளித்தவர்கள் சில தொல்பொருள் தலங்களின் புலப்படும் தன்மையையும், போருடன் தொடர்புடைய இடிபாடுகளின் ஒப்பீட்டளவில் புலப்படாத தன்மையையும் அடிக்கடி ஒப்பிட்டனர். அழிக்கப்பட்ட கிராமங்கள், கைவிடப்பட்ட வீடுகள், சேதமடைந்த கல்லறைகள், போர்க்கால நினைவு இடங்கள் ஆகியவை அதிகாரபூர்வ பாரம்பரியக் கட்டமைப்புகளுக்குள் பெரும்பாலும் நிச்சயமற்ற இடங்களையே வகிக்கின்றன.

கிளிநொச்சியில் ஒரு சமூக ஆர்வலர் இந்தக் கவலையை குறிப்பாக மனதைத் தொடும்

வார்த்தைகளில் வெளிப்படுத்தினார்: "வரலாற்றின் சில வடிவங்களைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. அது முக்கியமானதுதான். ஆனால் நம் கண் முன்னே வரலாறுகளும் மறைந்து வருகின்றன. போரின் இடிபாடுகள் மறைந்து வருகின்றன. மக்கள் இறந்த இடங்கள் மறைந்து வருகின்றன. அழிக்கப்பட்ட கிராமங்கள் மறைந்து வருகின்றன. வருங்கால சந்ததியினர், சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த வன்முறையைப் பற்றி மிகக் குறைவாக அறிந்திருந்தாலும், கவனமாகப் பாதுகாக்கப்பட்ட பண்டைய வரலாற்றை மரபுரிமையாகப் பெறக்கூடும். அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு, எந்த வகையான கடந்த காலங்கள் நினைவுகூரத் தகுதியானவையாகக் கருதப்படுகின்றன என்பது குறித்த கடினமான கேள்விகளை எழுப்புகிறது." தொல்லியல் என்பது புலப்படும் தன்மையின் அரசியல் என்பதையும் அவரது அவதானிப்பு நமக்கு நினைவூட்டுகிறது. ஒரு வரலாற்றைப் பாதுகாப்பது என்பது, மற்றொரு வரலாற்றை மறைந்துபோகும் அபாயத்திற்கு உள்ளாக்குவதாகும். எனவே, மரபு என்பது வெறும் நினைவுகளைப் பற்றியது மட்டுமல்ல. அது மறதியைப் பற்றியதும்கூட.

போருக்குப் பிந்தைய இலங்கையில் இடிபாடுகளின் முக்கியத்துவம், இறையாண்மையை உருவமாக்கும் அவற்றின் திறனில் அடங்கியுள்ளது. தொல்பொருள் ஆய்வு விளக்கத்தின் மூலம், பண்டைய எச்சங்கள் சமகால அரசியல் திட்டங்களுடன் இணைக்கப்படுகின்றன. நிலப்பரப்புகள் வரலாற்றுப் பிரதேசமாக உருமாற்றப்படுகின்றன. நிலப்பரப்பு தேசிய வெளியாக மாறுகிறது. இவ்வாறு, இடிபாடுகள் பழமைக்கும் அதிகாரத்திற்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்படுகின்றன. நிலத்துடனான தங்களின் உறவு வெறும் அரசியல் சார்ந்தது மட்டுமல்ல, வரலாற்று ரீதியானது என்றும், வெறும் சமகாலம் சார்ந்தது மட்டுமல்ல, நாகரிகம் சார்ந்தது என்றும் சமகாலச் செயற்பாட்டாளர்கள் உரிமை கோர அவை அனுமதிக்கின்றன. ஆயினும், அத்தகைய உரிமை கோரல்களை ஆதரிக்கும் அதே இடிபாடுகள், மாற்று வரலாறுகளின் தடயங்களையும் கொண்டுள்ளன. அவற்றின் சிக்கலான தன்மை, அவற்றின் மீது திணிக்கப்பட்ட விவரிப்புகளை மீறுகிறது. அரசியல் நிலைத்தன்மையை நாடும் இடத்தில் அவை இயக்கத்தையும், தேசியம் தனித்துவத்தை நாடும் இடத்தில் பன்மைத்துவத்தையும், சமகால உரையாடல்கள் பெரும்பாலும் பிரிவினையை வலியுறுத்தும் இடத்தில் அவை சகவாழ்வையும் வெளிப்படுத்துகின்றன. இந்தக் காரணத்திற்காக, இடிபாடுகள் நிலையற்ற அரசியல் பொருள்களாகவே இருக்கின்றன. அவை இறையாண்மைக்கு அங்கீகாரம் அளிக்கின்றன. ஆனால் அதன் வரலாற்றுத் தற்செயல்களையும் அம்பலப்படுத்துகின்றன. அவை தேசத்தை உருவமாக்குகின்றன, ஆனால் அதே நேரத்தில், அதை மீறிய பல வரலாறுகளையும் வெளிப்படுத்துகின்றன.

இறையாண்மையை அகழ்ந்தெடுத்தல்

மே 2009இல் போர் முடிவடைந்தமையானது வடக்குக் கிழக்கின் அரசியற் புவியியலை மாற்றியமைத்தது. பல தசாப்தங்களாக மாறிக்கொண்டிருந்த போர்க்களங்கள், இராணுவ நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளின் நிர்வாகம், இடப்பெயர்வு, கட்டுப்படுத்தப்பட்ட அணுகல் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டிருந்த பகுதிகள், திடீரென அரசின் தலையீட்டின் புதிய வடிவங்களுக்குத் திறக்கப்பட்டன. சாலைகள் புனரமைக்கப்பட்டன, இராணுவ முகாம்கள் விரிவுபடுத்தப்பட்டன, வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டன, நில அளவீடுகள் நடத்தப்பட்டன, நிர்வாக நிறுவனங்கள் மீண்டும் நிறுவப்பட்டன. போருக்குப் பிந்தைய இந்த பரந்த மாற்றத்தின் பின்னணியில், தொல்லியல் வியக்கத்தக்க வகையில் ஒரு முக்கிய பங்காற்றியது. பல தசாப்தங்களாக மோதல்களைச் சந்தித்த கிராமங்களுக்கு தொல்லியல் குழுக்கள் வந்தன. புதிய பாரம்பரிய மண்டலங்கள் அறிவிக்கப்பட்டன. பண்டைய தலங்கள் அளவிடப்பட்டு, வரைபடமாக்கப்பட்டு, புனரமைக்கப்பட்டு, தேசிய வரலாற்றின் அதிகாரபூர்வ விவரிப்புகளில் இணைக்கப்பட்டன. மேலோட்டமாகப் பார்க்கும்போது, இது பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு தொழில்நுட்பப் பயிற்சியாகத் தோன்றியது; விரைவிலேயே இறையாண்மை, நிலப்பரப்பு மற்றும் உரிமை குறித்த கேள்விகளுடன் பின்னிப் பிணைந்தது.

வடக்கு மற்றும் கிழக்கின் பல குடியிருப்பாளர்களுக்கு, தொல்லியல் என்பது ஓர் அருவமான கல்வித் துறையாக அல்லாமல், ஒரு நிறுவன இருப்பாக அன்றாட வாழ்வில் நுழைந்தது. தொல்பொருள் ஆய்வாளர்கள், நில அளவையாளர்கள், இராணுவ வீரர்கள், அரசாங்க அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள், அபிவிருத்தி அலுவலர்களுடன் சேர்ந்து வந்தனர். இதன் விளைவாக, தொல்பொருள் ஆய்வு என்பது அரிதாகவே தனித்து உணரப்பட்டது. அது போருக்குப் பிந்தைய பரந்த ஆளுகை அமைப்பின் ஒரு பகுதியாக மாறியது. அதன் மூலம் நிலப்பரப்பு மறுசீரமைக்கப்பட்டு, புதிய வடிவம் கொடுக்கப்பட்டது. முல்லைத்தீவில் உள்ள

ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் இந்த மாற்றங்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: "போர் முடிவடைந்தபோது, தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதே முக்கிய சவாலாக இருக்கும் என்று மக்கள் நினைத்தார்கள். சாலைகள், பள்ளிகள், மின்சாரம், மருத்துவமனைகளை நாங்கள் எதிர்பார்த்தோம். அவை வந்தன. ஆனால் அதே நேரத்தில் மற்றொரு செயல்முறையும் நடந்துகொண்டிருந்தது. அதிகாரிகள் வரலாற்றுத் தலங்களை அடையாளம் காணவும், எல்லைகளைக் குறிக்கவும், கணக்கெடுப்புகளை நடத்தவும், பாரம்பரியப் பாதுகாப்பு பற்றிப் பேசவும் தொடங்கினர். இதன் அர்த்தம் என்னவென்று மக்களுக்குப் பெரும்பாலும் உறுதியாகத் தெரியவில்லை. கவலை தொல்பொருள் ஆய்வைப் பற்றியதாக இருக்கவில்லை. அரசின் பலவிதமான தலையீடுகளுடன் சேர்ந்து தொல்பொருள் ஆய்வும் வந்ததாகத் தோன்றியதே கவலையாக இருந்தது. இந்த வெவ்வேறு செயல்முறைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதா என்று கிராமவாசிகள் கேட்டனர். அவை தொடர்புடையவையாக இருந்தனவோ இல்லையோ, அப்படித்தான் அவை உணரப்பட்டன." அவரது அவதானிப்பு ஒரு மையமான இனவரைவியல் அறிவை எடுத்துக்காட்டுகிறது. தொல்லியல் என்பது சூழலின் மூலமே விளக்கப்படுகிறது. தொல்லியல் செயல்பாட்டின் பொருள், அகழ்வாராய்ச்சியிலிருந்து மட்டுமே உருவாவதில்லை. அது, அந்த நிலப்பரப்பில் இயங்கும் பிற நிறுவனங்கள், நடைமுறைகள் மற்றும் அதிகார வடிவங்களுடனான அதன் உறவின் மூலம் உருவாகிறது.

பல சமூகங்களில், போர், இடப்பெயர்வு, மீள்குடியேற்றம் ஆகியவற்றின் நினைவுகள், தொல்லியல் தலையீடுகள் எவ்வாறு புரிந்துகொள்ளப்பட்டன என்பதை வடிவமைத்தன. முகாம்கள், தற்காலிக தங்குமிடங்கள் அல்லது நாடுகடத்தப்பட்ட நிலையில் பல ஆண்டுகள் கழித்த குடும்பங்களுக்கு, மூதாதையர் நிலங்களுக்குத் திரும்புவது என்பது வெறும் உடல்ரீதியான நகர்வாக மட்டுமல்லாமல், சமூக வாழ்க்கையை மீண்டும் கட்டமைக்கும் ஒரு முயற்சியாகவும் இருந்தது. நிலம் உணர்ச்சிபூர்வமான, பொருளாதார, வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. இதன் விளைவாக, நிலத்திற்கான அணுகலைப் பாதிக்கும் எந்தவொரு தலையீடும் மிகுந்த அரசியல் உணர்திறனைப் பெற்றது. ஓட்டிசுட்டானின் புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த ஒரு விவசாயி, இடம்பெயர்ந்த பிறகு திரும்பிய அனுபவத்தை விவரித்தார்: "நாங்கள் திரும்பி வந்தபோது, நிலம் ஏற்கெனவே மாறியிருந்தது. சில இடங்கள் புதர்களால் மூடப்பட்டிருந்தன. சில எல்லைகள் மறைந்திருந்தன. சில சாலைகள் இல்லாமல் போயிருந்தன. நாங்கள் எல்லாவற்றையும் மீண்டும் கட்ட வேண்டியிருந்தது. அப்போது, சில பகுதிகளுக்குத் தொல்பொருள் மதிப்பு இருப்பதாகக் கூறி மக்கள் வந்தனர். நிச்சயமாக, வரலாறு முக்கியமானது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஆனால், பிழைக்கப் போராடும் ஒரு குடும்பத்தின் கண்ணோட்டத்தில், அது கவலையை உருவாக்குகிறது. உங்கள் வயல்களில் உங்களால் பயிரிட முடியுமா, உங்கள் பிள்ளைகள் நிலத்தை மரபுரிமையாகப் பெறுவார்களா, எதிர்காலத்தில் புதிய கட்டுப்பாடுகள் தோன்றுமா என்று நீங்கள் யோசிக்கத் தொடங்குகிறீர்கள். தொல்பொருள் ஆய்வு அந்தக் கவலைகளின் ஒரு பகுதியாகிறது." இங்கு குறிப்பிடத்தக்கது என்னவென்றால், தொல்பொருள் அறிவுக்கும் அன்றாடப் பாதுகாப்பின்மைக்கும் இடையிலான தொடர்புதான். தேசிய கண்ணோட்டத்தில், பாரம்பரியப் பாதுகாப்பு சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு நேர்மறையான விஷயமாகத் தோன்றலாம், ஆனால் உள்ளூர் மட்டத்தில் அது பெரும்பாலும் வாழ்வாதாரம், உரிமை மற்றும் பிழைப்புத் தொடர்பான கேள்விகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

தொல்பொருள் தலங்கள் விவசாய நிலங்களுடன் ஒன்றுசேர்ந்திருந்த பகுதிகளில் இந்தப் பதற்றம் குறிப்பாகத் தெளிவாகத் தெரிந்தது. கிழக்கு மாகாணம் முழுவதும் பல இடங்களில், தொல்பொருள் ஆய்வுகள் நிலப்பரப்பை மாற்றியமைத்த சூழ்நிலைகளைப் பற்றி பதிலளித்தவர்கள் விவரித்தனர். நீண்ட காலமாக முதன்மையாக விவசாய நிலமாகவே பார்க்கப்பட்ட நிலம், வரலாற்று இடமாகப் புதிய அர்த்தங்களைப் பெற்றது. இதன் விளைவு மோதலாக இருக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் நிச்சயமற்ற தன்மையாக இருந்தது. ஒரு கிராம சேவகர் விளக்கினார்: "ஒரு தலம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் முக்கியமானதாகவும் இருக்க முடியும். அந்த யதார்த்தங்களைச் சமநிலைப்படுத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதே சவாலாகும். பல நேரங்களில், உள்ளூர் மக்கள் தங்கள் பங்களிப்பு இல்லாமல்

வரலாறு விவாதிக்கப்படுவதாக உணர்கிறார்கள். முடிவுகள் வேறு எங்கோ எடுக்கப்பட்டு, பின்னர் சமூகத்திற்குத் தெரிவிக்கப்படுகின்றன. அது அவநம்பிக்கையை உருவாக்குகிறது." எனவே, இந்தப் பிரச்சினை வெறுமனே பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் இடையிலான மோதல் மட்டுமல்ல. இது பங்கேற்பு மற்றும் அதிகாரம் பற்றியதுமாகும். ஒரு நிலப்பரப்பின் முக்கியத்துவத்தை வரையறுக்கும் உரிமை யாருக்கு உள்ளது? சமகாலத் தேவைகளுக்கு எதிராக வரலாற்று



தீகவாபி

Image Source - en.wikipedia.org

மதிப்பை எவ்வாறு சமநிலைப்படுத்துவது என்பதை யார் தீர்மானிக்கிறார்கள்? இந்தக் கேள்விகள்தான் போருக்குப் பிந்தைய தொல்பொருளியலின் மையத்தில் உள்ளன.

தொல்பொருள் தலையீட்டின் புவியியலை ஆராயும்போது, தொல்பொருளியலுக்கும் இறையாண்மைக்கும் இடையிலான உறவு குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. வடக்குக் கிழக்கு முழுவதும், முன்னர் தமிழ் அரசியல் கட்டுப்பாடு நிலவிய அல்லது போர்க்கால இடப்பெயர்ச்சியுடன் தொடர்புடைய பகுதிகளில்தான் தொல்பொருள் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன என்பதைப் பல சமூகங்கள் கவனித்தன. இந்தப் போக்கு ஒரு திட்டமிட்ட அரசியல் உத்தியைப் பிரதிபலிக்கிறதா அல்லது போருக்குப் பிந்தைய அணுகல் நடைமுறை யதார்த்தங்களைப் பிரதிபலிக்கிறதா என்பது விவாதத்திற்குரிய விஷயமாகும். இனவரைவியல் ரீதியாக முக்கியமானது என்னவென்றால், சமூகங்கள் இதை அடிக்கடி அர்த்தமுள்ளதாகவே கருதியிருந்தன. திருகோணமலையைச் சேர்ந்த ஓர் அரசியற் செயற்பாட்டாளர் இந்தக் கண்ணோட்டத்தைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: "மக்கள் தொல்பொருள் ஆய்வு குறித்து தொழில்நுட்ப ரீதியான வாதங்களை முன்வைப்பதில்லை. பெரும்பாலான கிராமவாசிகள் அகழ்வாராய்ச்சி முறைகள் அல்லது கால நிர்ணய நுட்பங்கள் குறித்து விவாதிப்பதில்லை. அவர்கள் கவனிப்பது வடிவங்களைத்தான். ஆய்வுகள் எங்கு நடக்கின்றன, பாரம்பரியத் திட்டங்களுக்கு எங்கு நிதி கிடைக்கிறது, நினைவுச்சின்னங்கள் எங்கு தோன்றுகின்றன, நிறுவனங்களின் கவனம் எங்கு குவிந்துள்ளது என்பதை அவர்கள் கவனிக்கிறார்கள். காலப்போக்கில், மக்கள் இந்தக் கவனிப்புகளை நிலப்பரப்பு மற்றும் உரிமை குறித்த பரந்த கேள்விகளுடன் இணைக்கத் தொடங்குகிறார்கள். அரசின் நோக்கங்களை மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தின் ஒரு பகுதியாக தொல்பொருள் ஆய்வு மாறுகிறது." இந்தக் கண்ணோட்டம், தொல்பொருள் ஆய்வைப் புரிந்துகொள்வதில் மானிடவியலின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. பாரம்பரியத்தின் அரசியல் முக்கியத்துவம் அதிகாரபூர்வக் கொள்கையில் மட்டுமல்ல, சமூகங்கள் அதை எவ்வாறு புரிந்துகொண்டு அனுபவிக்கின்றன என்பதிலும் அடங்கியுள்ளது.

தொல்லியல் புறநிலைத்தன்மை வாய்ந்ததாகத் தோன்றுவதால், அது ஒரு தனித்துவமான அதிகாரத்தைக் கொண்டுள்ளது என்று பல பதிலளிப்பவர்களும் வலியுறுத்தினர். அரசியல் கூற்றுகள் விவாதிக்கப்படலாம். வரலாற்று விளக்கங்கள் கேள்விக்குட்படுத்தப்படலாம். இருப்பினும், தொல்லியல் சான்றுகள் பெரும்பாலும் அறிவியல் உண்மையின் சாயலைக் கொண்டுள்ளன. இவ்வாறு உணரப்படும் புறநிலைத்தன்மை, பொது விவாதங்களில் தொல்லியல் தலையீடுகளுக்குக் கணிசமான செல்வாக்கை அளிக்கிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் விளக்கினார்: "அரசியல்வாதிகள் கூற்றுகளை முன்வைக்கும்போது, அந்தக் கூற்றுகள் அரசியல் சார்ந்தவை என்பதை மக்கள் புரிந்துகொள்கிறார்கள். தொல்லியல் வேறுபட்டது. தொல்லியல் நடுநிலையானதாகத் தோன்றுகிறது. அது அறிவியல்பூர்வமானதாகத் தோன்றுகிறது. அதன் காரணமாக, தொல்லியல் கண்டுபிடிப்புகள் பொது விவாதங்களில் பெரும்பாலும் பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. ஆயினும், தொல்லியல் ஒருபோதும் விளக்கத்திலிருந்து முற்றிலும் பிரிக்கப்படுவதில்லை. சான்றுகள் பொருள்சார்ந்தவையாக இருக்கலாம். ஆனால் அந்தச் சான்றுகளுடன் இணைக்கப்பட்டுள்ள அர்த்தங்கள் சமூகம் மற்றும் அரசியல் சார்ந்தவையாகவே இருக்கின்றன." அவரது கருத்து, திறனாய்வுத் தொல்லியல் மற்றும் மானிடவியல் துறைகளில் உள்ள பரந்த விமர்சனங்களைப் பிரதிபலிக்கிறது. பொருள்சார்ந்த சான்றுகள் விளக்கத்தை

நீக்குவதில்லை. அது விளக்கம் நிகழும் களத்தை மட்டுமே மாற்றுகிறது.

பௌத்த மரபுரிமைத் தலங்கள் தொடர்பான விவாதங்களில் தொல்லியல் அதிகாரத்தின் அரசியல் குறிப்பாகத் தெளிவாக வெளிப்பட்டது. வடக்குக் கிழக்கு முழுவதும், பௌத்தத்துடன் தொடர்புடைய தொல்பொருள் எச்சங்கள் அரச மரபுரிமை விவரிப்புகளில் பெரும்பாலும் மைய இடங்களைப் பிடித்துள்ளன. இலங்கையில் பௌத்த நாகரிகத்தின் வரலாற்று முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவதன் மூலம் இத்தகைய வலியுறுத்தல் அடிக்கடி நியாயப்படுத்தப்படுகிறது. ஆயினும், சில உள்ளூர் சமூகங்களுக்கு, இந்தத் தளங்களின் முக்கியத்துவம், வெவ்வேறு வரலாறுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் காட்டப்படுவது குறித்த கேள்விகளை எழுப்புகிறது. மன்னாரைச் சேர்ந்த ஓர் உள்ளூர் வரலாற்றாசிரியர் இவ்வாறு குறிப்பிட்டார்: "இந்தப் பிராந்தியங்களில் உள்ள தொல்பொருள் பதிவுகள் நம்பமுடியாத அளவிற்குப் பன்முகத்தன்மை வாய்ந்தவை. அதில் பௌத்தத் தலங்கள், இந்துத் தலங்கள், இஸ்லாமியத் தலங்கள், கிறிஸ்தவத் தலங்கள், கொலனித்துவத் தலங்கள் மற்றும் பலவும் அடங்கும். பௌத்தப் பாரம்பரியம் பாதுகாக்கப்படுகிறதா என்பது கவலையல்ல. மற்ற வரலாறுகளும் அதே அளவிலான கவனத்தையும், பாதுகாப்பையும், நிறுவன அங்கீகாரத்தையும் பெறுகின்றனவா என்பதே கவலை. பாரம்பரியம், நிலப்பரப்பின் சிக்கலான தன்மையைப் பிரதிபலிக்க வேண்டுமே தவிர, அதை எளிமைப்படுத்தக் கூடாது." இந்தக் கவலை ஒரு பரந்த பிரச்சினையைச் சுட்டிக்காட்டுகிறது. தொல்லியலுக்கும் வரலாற்றுப் பன்மைவாதத்திற்கும் இடையிலான உறவு. வடக்குக் கிழக்கின் தொல்பொருள் பதிவுகள் பல நூற்றாண்டுகளின் இடைவினைகள், இடப்பெயர்வு, வர்த்தகம், மத மாற்றம், கலாசாரப் பரிமாற்றம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. ஆயினும், பாரம்பரிய விவரிப்புகள் பெரும்பாலும் ஒத்திசைவையும் தெளிவையும் நாடுகின்றன. தேசியவாதக் கட்டமைப்புகளுக்குள் சிக்கலான தன்மையைக் கையாள்வது கடினமாகிறது.



குருந்தூர் மலை

Image Source - virakesari.lk

பத்தாண்டுகால களஆய்வானது பண்டைய வரலாறுக்கும் சமீபத்திய வரலாறுக்கும் இடையே மீண்டும் மீண்டும் நிலவும் ஒரு பதற்றத்தையும் வெளிப்படுத்தியது. தொல்பொருள் தலங்களுக்குக் கொடுக்கப்பட்ட கவனத்தையும், உள்நாட்டுப் போருடன் தொடர்புடைய தலங்கள் ஒப்பீட்டளவில் புறக்கணிக்கப்பட்டதையும் சமூகங்கள் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்த்தன. கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு பாடசாலை ஆசிரியை இவ்வாறு குறிப்பிட்டார்: "பண்டைய வரலாறு கவனமாக ஆவணப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது. ஆனால், போரின் பல தடயங்கள் மறைந்து வருகின்றன. கட்டடங்கள் இடிக்கப்படுகின்றன. மயானங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. போர்க்களங்கள் உருமாற்றப்படுகின்றன. கிராமங்கள் மீண்டும் கட்டப்படுகின்றன. அடுத்த தலைமுறையில், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததை விட, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததைப் பற்றி மக்கள் அதிகமாக அறிந்திருக்கக்கூடும்." அவரது இந்தக் கருத்து ஒரு வியக்கத்தக்க முரண்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. போருக்குப் பிந்தைய தொல்லியல் பெரும்பாலும் ஆழமான வரலாற்றுக் காலங்களில் கவனம் செலுத்துகிறது. அதே நேரத்தில் சமீபத்திய வரலாறுகள் அரசியல் ரீதியாக உணர்திறன் வாய்ந்தவையாகவோ, சர்ச்சைக்குரியவையாகவோ அல்லது அழிக்கப்படுவதற்கு ஆளாகக்கூடியவையாகவோ இருக்கின்றன. இது நினைவுகளில் ஒரு படிநிலையை உருவாக்குகிறது. இதில் சில கடந்த காலங்கள் நிறுவனமயமாக்கப்படுகின்றன மற்றவை நிச்சயமற்றவையாகவே இருக்கின்றன. ஒரு முன்னாள் மனிதாபிமானப் பணியாளர் இதே போன்ற ஒரு கவலையை வெளிப்படுத்தினார்: "நாம் இப்போது போரின் இடிபாடுகளைப் பாதுகாக்கத் தவறுவதால், எதிர்காலத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அவற்றை அகழ்வாராய்ச்சி செய்யக்கூடும். முரண்நகை என்னவென்றால், சமகால வரலாறு மறைந்து போக அனுமதிக்கும் அதே வேளையில், பண்டைய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் நாம் மிகப்பெரிய வளங்களை முதலீடு செய்கிறோம். இவை இரண்டுமே இந்தப் பிராந்தியத்தின் கதையின் ஒரு பகுதியாகும்." இந்தக் கருத்து, பாரம்பரியத்தின் கால அரசியல் குறித்த ஒரு பரந்த சிந்தனைக்கு வழிவகுக்கிறது. எந்தக்

கடந்த காலங்கள் பாதுகாக்கப்படத் தகுதியானவை? எந்த வரலாறுகள் தேசிய அளவில் முக்கியத்துவம் பெறுகின்றன? மேலும், அந்த முடிவுகளை யார் எடுக்கிறார்கள்?

அதே நேரத்தில், போருக்குப் பிந்தைய தொல்லியலை அரசின் அதிகாரத்தின் ஓர் எளிய கதையாகச் சுருக்கிவிடாமல் இருப்பது முக்கியம். களஆய்வு, தொல்லியல் நிறுவனங்களுக்குள்ளேயே கணிசமான பன்முகத்தன்மை இருப்பதைக் காட்டியது. பல தொல்லியலாளர்கள் அறிவியல் தரநிலைகள், பண்பாட்டுப் பாதுகாப்பு, தொழில்முறை நெறிமுறைகள் மீதான தங்கள் அர்ப்பணிப்பை வலியுறுத்தினர். தொல்லியல் பணிகள் பெரும்பாலும் அரசியல் கண்ணோட்டத்தின் வழியாக மட்டுமே விளக்கப்படுவதாகப் பலர் தங்கள் விரக்தியை வெளிப்படுத்தினர். கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் ஒரு தொல்லியலாளர் விளக்கினார்: "தொல்லியலாளர்கள் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று முரண்படும் எதிர்பார்ப்புகளுக்கு இடையில் சிக்கிக்கொள்கிறார்கள். உள்ளூர் சமூகங்கள் எங்களை அரசின் பிரதிநிதிகளாகக் கருதலாம். அரசியல்வாதிகள் தொல்லியலைத் தேசியவாதக் கதையாடல்களுக்குப் பயனுள்ளதாகக் கருதலாம். சர்வதேச அமைப்புகள், நல்லிணக்கத்திற்குத் தொல்லியல் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆயினும், தொல்லியல் பதிவைப் புரிந்துகொண்டு பாதுகாப்பதே எங்கள் முதன்மைப் பொறுப்பாகும். சவால் என்னவென்றால், தொல்லியல் ஒருபோதும் அரசியல் வெற்றிடத்தில் இயங்குவதில்லை." அவரது கருத்து, தொல்லியல் நடைமுறையே பன்முகத்தன்மை கொண்டது என்பதற்கான ஒரு முக்கியமான நினைவூட்டலாக அமைகிறது. தொல்லியலாளர்கள் வெறுமனே அரசின் அதிகாரத்தின் முகவர்கள் அல்ல. அவர்கள் ஒன்றுக்கொன்று முரண்படும் அழுத்தங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளால் வடிவமைக்கப்பட்ட சிக்கலான நிறுவனச் சூழல்களுக்குள் இயங்குகிறார்கள். இருப்பினும், பரந்த இனவரைவியல் சித்திரம் தெளிவாகவே உள்ளது.

போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்குப் பகுதிகளில், தொல்லியல் என்பது இறையாண்மை, நிலப்பரப்பு, நினைவகம் மற்றும் ஆளுகை தொடர்பான கேள்விகளுடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளது. அகழ்வாராய்ச்சிகள் நடுநிலையான நிலங்களில் நடைபெறுவதில்லை. அவை போர், இடப்பெயர்வு, இராணுவமயமாக்கல், உரிமைப் போராட்டங்கள் ஆகியவற்றால் குறிக்கப்பட்ட நிலப்பரப்புகளுக்குள் நடைபெறுகின்றன. பாரம்பரியத் தலங்கள், இந்த நிலத்திற்கு யார் சொந்தம், யாருடைய வரலாறுகள் முக்கியமானவை, ஒரு தேசம் எவ்வாறு கற்பனை செய்யப்பட வேண்டும் என்பது பற்றிய பெரிய விவாதங்களின் ஒரு பகுதியாக மாறுகின்றன.

தொல்லியல் ஒரே நேரத்தில் கல்விப்புலமாகவும், நிர்வாகமாகவும், நினைவாற்றல் பணியாகவும், மற்றும் இடஞ்சார்ந்த அரசியலாகவும் செயல்படுகிறது. அது பண்டைய எச்சங்களை வெளிக்கொணரும் அதே வேளையில் சமகால யதார்த்தங்களை வடிவமைக்கிறது. அது வரலாற்றைப் பாதுகாக்கும் அதே வேளையில் புதிய அதிகார வடிவங்களையும் உருவாக்குகிறது. அது கடந்த காலத்தை ஆவணப்படுத்தும் அதே வேளையில் நிகழ்காலத்தின் ஆளுகையிலும் பங்கேற்கிறது. இந்த அர்த்தத்தில், போருக்குப் பிந்தைய தொல்லியல் என்பது வெறும் அகழ்வாராய்ச்சியைப் பற்றியது மட்டுமல்ல. அது இறையாண்மையையே புனரமைப்பதாகும். ஆய்வுகள், பாதுகாப்புத் திட்டங்கள், பாரம்பரிய அங்கீகாரங்கள் மற்றும் வரலாற்று விவரிப்புகள் மூலம், தொல்லியல் ஒரு நிலப்பரப்பை தேசத்துடன் குறியீட்டு ரீதியாக ஒருங்கிணைக்கப் பங்களிக்கிறது. நிலப்பரப்பு என்பது ஆளப்படும் இடமாக மட்டுமல்லாமல், வரலாற்று இடமாகவும் மாறுகிறது. பண்டைய இடிபாடுகள் உரிமையுணர்வின் சான்றுகளாகின்றன. பாரம்பரியம் என்பது சட்டபூர்வமான அங்கீகாரத்திற்கான ஒரு கருவியாகிறது. அகழ்வாராய்ச்சி என்பது இறையாண்மையை உருவப்படுத்தி, புலப்படும்படி செய்வதற்கான ஒரு வழியாகிறது.

புனித நிலப்பரப்புகளும் பௌத்த மரபும்

போருக்குப் பிந்தைய இலங்கையில் தொல்லியலுக்கும் பௌத்தத்திற்கும் இடையிலான உறவை, பண்டைய தலங்களைப் பாதுகாப்பதன் மூலம் மட்டுமே புரிந்துகொள்ள முடியாது. மாறாக, வரலாற்றைப் பற்றிய குறிப்பிட்ட புரிதல்கள் நிலப்பரப்பிற்குள் நிறுவனமயமாக்கப்படும் ஒரு பொறிமுறையாகவே தொல்லியல் பெரும்பாலும் செயல்படுகிறது. வடக்குக் கிழக்கில், இந்தச் செயல்முறை குறிப்பிடத்தக்க சர்ச்சையை உருவாக்கியுள்ளது. ஏனெனில், தொல்லியல் தலையீடுகள் இன அடையாளம், பிராந்திய அதிகாரம், நில உரிமை, போருக்குப் பிந்தைய ஆட்சிமுறை தொடர்பான கேள்விகளுடன் அடிக்கடி ஒன்றிணைகின்றன. இந்தப் பகுதிகளில் பௌத்த தொல்பொருள் எச்சங்கள் உள்ளனவா என்பது மட்டுமல்ல பிரச்சினை - அவை சந்தேகத்திற்கு இடமின்றி உள்ளன - மாறாக, அந்த எச்சங்கள்

சமகால அரசியல் திட்டங்களுக்குள் எவ்வாறு விளக்கப்படுகின்றன, அணிதிரட்டப்படுகின்றன, உட்பொதிக்கப்படுகின்றன என்பதே பிரச்சினையாகும். போர் முடிவடைவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, தொல்லியல் எவ்வாறு சிங்கள பௌத்த தேசியவாதத்துடன் பின்னிப் பிணைந்தது என்பதை பல அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். கணநாத் ஓபயசேகர (*Gananath Obeyesekere*), எஸ்.ஜே. தம்பையா (*S.J. Tambiah*), எச்.எல். செனவிரத்ன (*H.L. Seneviratne*), ஸ்டீவன் கெம்பர் (*Steven Kemper*), ஜொனாதன் ஸ்பென்சர் (*Jonathan Spencer*) போன்ற அறிஞர்கள், இலங்கை தேசியஅரசின் மேலாதிக்க விவரிப்புகளுக்குள் பௌத்த வரலாறு ஒரு சிறப்புமிக்க இடத்தைப் பிடித்துள்ளது என்பதை நிரூபித்துள்ளனர். தொல்பொருள் ஆய்வு இந்தச் சிறப்புரிமைக்கு பங்களிக்கிறது. ஏனெனில் அது பண்டைய பௌத்த அரசுகளுக்கும் நவீன அரசுக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்ச்சிக்கான பொருள்சார் சான்றுகளை வழங்குவதாகத் தெரிகிறது. போருக்குப் பிந்தைய காலம் இந்த இயக்கவியலைத் தீவிரப்படுத்தியது. ஏனெனில் முன்னர் முழுமையான அரச கட்டுப்பாட்டிற்கு வெளியே இருந்த பகுதிகள் தொல்பொருள் ஆய்வு நிறுவனங்களுக்குப் புதிதாக அணுகக்கூடியவையாக மாறின. போரின் போது பெருமளவில் இராணுவமயமாக்கப்பட்ட பகுதிகள் திடீரென தொல்பொருள் ஆய்வு ஆர்வத்திற்குரிய தலங்களாகவும், பாதுகாப்பு முயற்சிகளாகவும், மற்றும் பாரம்பரியத் தலையீடுகளாகவும் மாறின. இந்தத் திட்டங்களில் பல பாரம்பரியப் பாதுகாப்பின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருந்தாலும், உள்ளூர் சமூகங்கள் பெரும்பாலும் போருக்குப் பிந்தைய அரச விரிவாக்கத்தின் பரந்த சூழலின் மூலமே அவற்றை விளக்கின.

அடிக்கடி விவாதிக்கப்படும் எடுத்துக்காட்டுகளில் ஒன்று, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குருந்தூர்மலை பகுதியில் தொல்பொருள் மற்றும் மத ரீதியான வளர்ச்சிகளைச் சுற்றியுள்ள சர்ச்சையாகும். இந்தத் தலம், ஒரு பண்டைய பௌத்த மடாலயத்துடன் தொடர்புடைய தொல்பொருள் எச்சங்களைக் கொண்டுள்ளது என்றும் இந்தத் தலம் இலங்கையின் பௌத்தப் பாரம்பரியத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குவதாகவும், எனவே அது பாதுகாப்பிற்கும் புனரமைப்பிற்கும் தகுதியானது என்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் பௌத்த அமைப்புகளும் வாதிட்டு வருகின்றனர். இருப்பினும், பல தமிழ்க் குடியிருப்பாளர்களைப் பொறுத்தவரை, இந்த சர்ச்சை ஒருபோதும் தொல்பொருள் ஆய்வு சார்ந்ததாக மட்டுமே இருந்ததில்லை. உள்ளூர்வாசி ஒருவர் விளக்கினார்: "நூற்றாண்டுகளுக்கு முன்பு இங்கு ஒரு பௌத்த மடாலயம் இருந்திருக்கலாம் என்பதை மக்கள் புரிந்துகொள்கிறார்கள். அது மட்டுமே கருத்து வேறுபாட்டின் முக்கிய காரணம் அல்ல. சமகால அரசியல் யதார்த்தங்களை உருவாக்குவதற்காகத் தொல்லியல் பயன்படுத்தப்படுகிறது என்பதே கவலையாக உள்ளது. புனரமைப்பு முயற்சிகளில் ஏன் புதிய மத உட்கட்டமைப்புகள் ஈடுபடுத்தப்படுகின்றன. ஏன் இராணுவ ஈடுபாடு உள்ளது. மற்றும் ஏன் முடிவெடுக்கும் செயல்முறையிலிருந்து உள்ளூர் சமூகங்கள் பெரும்பாலும் விலக்கப்படுகின்றன என்று மக்கள் கேட்கிறார்கள். இந்த விவாதம் கடந்த காலத்தைப் பற்றியதாக இல்லாமல், கடந்த காலத்தின் மூலம் எத்தகைய எதிர்காலம் உருவாக்கப்படுகிறது என்பதைப் பற்றியதாக மாறுகிறது." ஒரு பௌத்தத் தலம் இருந்ததா என்பது குருந்தூர்மலையை மானிடவியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்குவதில்லை. மாறாக, இறையாண்மை, பிராந்திய அதிகாரம் குறித்த சமகாலக் கேள்விகளுடன் தொல்லியல் விளக்கம் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதையே அது வெளிப்படுத்துகிறது.

திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இதே போன்ற ஓர் இயக்கவியலைக் காண முடிகிறது. திருகோணமலை வரலாற்று ரீதியாக பௌத்த, இந்து, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ வரலாறுகள் ஒன்றிணையும் ஒரு பல மத மற்றும் பல இனப் பகுதியாக இருந்து வருகிறது. ஆயினும், தொல்லியல் விவரிப்புகள் பெரும்பாலும் பௌத்தர்களின் இருப்பின் தொன்மையை நிரூபிப்பதில் கவனம் செலுத்தியுள்ளன. திருகோணமலையைச் சேர்ந்த ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் இவ்வாறு குறிப்பிட்டார்: "இந்தப் பிராந்தியத்தில் பௌத்த மதத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை எந்தவொரு தீவிரமான வரலாற்றாசிரியரும் மறுக்க மாட்டார். பிரச்சனை என்னவென்றால், தொல்பொருள் சான்றுகள் பெரும்பாலும் உரிமை கோரும் அரசியல் விவரிப்புகளாக உருமாற்றப்படுகின்றன. வரலாற்று இருப்பு என்பது பிராந்திய உரிமையாக மாறுகிறது. அது நிகழ்ந்தவுடன், தொல்பொருள் ஆய்வு வரலாறாகச் செயல்படுவதை நிறுத்திவிட்டு, அரசியலாகச் செயல்படத் தொடங்குகிறது." இந்தக் கருத்து ஒரு முக்கியமான பகுப்பாய்வு வேறுபாட்டை எடுத்துக்காட்டுகிறது. தொல்பொருள் சான்றுகள் வரலாற்று இருப்பை நிரூபிக்கின்றன. அது தற்கால அரசியல் கோரிக்கைகளைத் தானாகவே

தீர்மானிப்பதில்லை. ஆயினும், தேசியவாத உரையாடல்களில், இவ்விரண்டும் அடிக்கடி குழப்பப்படுகின்றன. தொல்பொருள் கண்டுபிடிப்புகளுடன் புதிய மதக் கட்டமைப்புகளும் கட்டப்படும்போது இந்தப் பிரச்சினை குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. ஒரு முன்னாள் உள்ளாட்சி அதிகாரி விளக்கினார்: "ஒரு தொல்பொருள் தலமாகத் தொடங்குவது சில சமயங்களில் மிகப் பெரிய ஒன்றாக உருவாகிறது. அந்தத் தலம் ஒரு புனித யாத்திரைத் தலமாக மாறுகிறது. புதிய சாலைகள் அமைக்கப்படுகின்றன. மதக் கட்டமைப்புகள் தோன்றுகின்றன. நிர்வாகத்தின் கவனம் அதிகரிக்கிறது. காலப்போக்கில், முழு நிலப்பரப்பும் ஒரு வேறுபட்ட அர்த்தத்தைப் பெறுகிறது. உள்ளூர் மக்கள் இந்த மாற்றங்களைக் கவனித்து, அவற்றை பரந்த பிராந்திய மாற்றங்களின் ஒரு பகுதியாகப் புரிந்துகொள்கிறார்கள்."

மானிடவியல் ரீதியாக, இங்கு முக்கியமானது புனித புவியியலின் உருவாக்கம் ஆகும். தொல்பொருள் ஆய்வு ஒரு தலத்தை அடையாளம் காட்டுகிறது. மத நிறுவனங்கள் அதைப் புனிதப்படுத்துகின்றன. அரசு நிறுவனங்கள் அதைப் பாதுகாக்கின்றன. இந்த செயல்முறைகள் ஒன்றிணைந்து, சாதாரண இடத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாற்றுகின்றன. கிழக்கு மாகாணம் மற்றொரு வெளிப்படுத்தும் உதாரணத்தை வழங்குகிறது. தீகவாபி போன்ற பகுதிகளில் உள்ள பல தொல்பொருள் தகராறுகள், பௌத்த பாரம்பரியத்திற்கும் சமகால நில அரசியலுக்கும் இடையிலான சிக்கலான உறவை எடுத்துக்காட்டியுள்ளன. பௌத்த வரலாற்று விவரிப்புகள் மற்றும் புனித யாத்திரை மரபுகளில் தீகவாபி ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. தொல்பொருள் சான்றுகள், மத இலக்கியங்கள், அரசின் அங்கீகாரம் ஆகியவற்றின் மூலம் இந்தத் தலத்தின் முக்கியத்துவம் வலுப்படுத்தப்படுகிறது. இருப்பினும், பாரம்பரியப் பாதுகாப்பு நில அணுகல் மற்றும் நிர்வாகத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பது குறித்து உள்ளூர் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் அடிக்கடி கவலைகளை வெளிப்படுத்தியுள்ளன.

ஒரு சமூகத் தலைவர் குறிப்பிட்டார்: "தீகவாபி முக்கியமானதா என்பது பிரச்சினை அல்ல. அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். பாரம்பரியப் பாதுகாப்பு என்பது, உள்ளூர் சமூகங்கள் நிலத்தின் மீதும் முடிவெடுக்கும் அதிகாரத்தின் மீதும் தங்கள் செல்வாக்கை இழக்கச் செய்யும் ஒரு கருவியாக மாறிவிடுமோ என்பதுதான் கவலை. பாரம்பரியம் வரலாற்றைப் பாதுகாக்க வேண்டுமே தவிர, மக்களை ஓரங்கட்டக் கூடாது." இத்தகைய கவலைகள், தொல்லியல் என்பது வெறும் ஒரு கல்விசார் முயற்சியாக மட்டுமல்லாமல், ஒரு வகையான இடஞ்சார்ந்த ஆளுகையாகவும் உணரப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகின்றன.

தொல்லியலுக்கும் பௌத்த மேலாதிக்கத்திற்கும் இடையிலான உறவு, வரலாற்று விவரிப்பு மட்டத்திலும் செயல்படுகிறது. வடக்குக் கிழக்கின் தொல்லியல் பதிவுகள் அசாதாரணமான பன்முகத்தன்மை கொண்டவை. அதில் பௌத்தக் குடியிருப்புகள், இந்து கோயில்கள், இஸ்லாமிய வர்த்தக வலைப்பின்னல்கள், கொலனித்துவ சந்திப்புகள், கடல்வழிப் பரிமாற்றங்கள், இடப்பெயர்வு, தொடர்புகளின் சிக்கலான வடிவங்கள் ஆகியவற்றிற்கான சான்றுகள் உள்ளன. ஆயினும்கூட, அதிகாரபூர்வ பாரம்பரிய விவரிப்புகள் பெரும்பாலும் பௌத்தத் தலங்களைத் தேசிய வரலாற்றின் அடையாளங்களாக முன்னுரிமைப்படுத்துகின்றன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு வரலாற்றாசிரியர் இவ்வாறு குறிப்பிட்டார்: "தொல்பொருள் நிலப்பரப்பு பன்மைத்தன்மை வாய்ந்தது. ஆனால் மரபுசார் நிலப்பரப்பு பெரும்பாலும் ஒருமைத்தன்மை வாய்ந்ததாகிவிடுகிறது. சில வரலாறுகள் நிறுவன ரீதியான கவனத்தைப் பெறுகின்றன, மற்றவை புறக்கணிக்கப்படுகின்றன. இதன் விளைவு, மாற்று வரலாறுகள் அழிக்கப்படுவது மட்டுமல்ல, மாறாக அவை தேசிய கதையாடலுக்குள் கீழ்ப்படுத்தப்படுகின்றன." இந்தச் சமச்சீரற்ற தன்மையைத்தான் பல விமர்சன மரபுசார் அறிஞர்கள் மேலாதிக்கம் என்று விவரிக்கின்றனர். மேலாதிக்கம் என்பது எல்லா மாற்றுகளையும் ஒடுக்குவதைக் கோருவதில்லை. மாறாக, அது ஒரு கதையாடலை இயல்பானதாகவும், இயற்கையானதாகவும், அதிகாரபூர்வமானதாகவும் நிலைநிறுத்துவதையும், மற்ற கதையாடல்களை இரண்டாம் நிலையாக மாற்றுவதையும் உள்ளடக்கியது.

அன்டோனியோ கிராம்சியின் (*Antonio Gramsci*) மேலாதிக்கம் குறித்த கருத்து இங்கு குறிப்பாகப் பயனுள்ளது. மேலாதிக்கம் முதன்மையாக வற்புறுத்தலின் மூலம் செயல்படுவதில்லை. மாறாகப் பண்பாட்டு அதிகாரத்தின் மூலம் செயல்படுகிறது. வரலாற்றைப் பற்றிய சில புரிதல்கள் பொது

அறிவாக மாறுகின்றன. தொல்பொருள் ஆய்வு, புறநிலைத்தன்மை வாய்ந்ததாகவும் அரசியல் சார்பற்றதாகவும் தோன்றும் பொருள்சார் சான்றுகளை வழங்குவதன் மூலம் இந்தச் செயல்முறைக்குப் பங்களிக்கிறது. போருக்குப் பிந்தைய இலங்கையில், தொல்பொருள் கதையாடல்கள் பெரும்பாலும் துல்லியமாக இந்த அதிகாரத்தைப் பெறுகின்றன. பண்டைய பௌத்தத் தலங்கள் தேசிய தொடர்ச்சியின் சின்னங்களாக மாறுகின்றன. அவற்றைப் பாதுகாப்பது வெளிப்படையாகவே சட்டபூர்வமானதாகத் தோன்றுகிறது. ஆயினும், பாதுகாப்பின் பரந்த அரசியல் தாக்கங்கள் பெரும்பாலும் குறைவாகவே புலப்படுகின்றன. வடக்கில் பாரம்பரியப் பிரச்சினைகளில் பணியாற்றும் ஓர் ஆய்வாளர் விளக்கினார்: "தொல்லியல் அரிதாகவே நேரடி ஆதிக்கத்தின் மூலம் செயல்படுகிறது. அதன் சக்தி, அரசியல் சார்பற்றதாகத் தோன்றுவதிலிருந்து வருகிறது. ஒரு தலம் பாரம்பரியத் தலமாக வகைப்படுத்தப்பட்டவுடன், நிலம், அணுகல், பாதுகாப்பு, மேம்பாடு தொடர்பான முடிவுகள் அரசியல் சார்ந்தவையாக இல்லாமல் தொழில்நுட்பம் சார்ந்தவையாகத் தோன்றுகின்றன. ஆனால் இந்த முடிவுகள் உள்ளூர் சமூகங்களுக்கு ஆழமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்." இக்கருத்து, அதிகாரம் என்பது அறிவின் மூலம் செயல்படுகிறது என்ற மைக்கேல் ஃபூக்கோவின் புரிதலுடன் ஒத்துப்போகிறது. தொல்லியல் நிபுணத்துவம் நிலப்பரப்பை வெறுமனே விவரிப்பதில்லை. அது அதை ஒழுங்கமைக்கவும் நிர்வகிக்கவும் உதவுகிறது.

பௌத்த மேலாதிக்கத்தின் மற்றொரு பரிமாணம் கல்வி மற்றும் நினைவுச் சடங்குகள் மூலம் வெளிப்படுகிறது. தொல்லியல் தலங்கள் பள்ளிப் பாடத்திட்டங்கள், சுற்றுலாப் பிரசாரங்கள், அருங்காட்சியகக் கண்காட்சிகள், பொது வரலாற்றுத் திட்டங்களில் இணைக்கப்படுகின்றன. இந்த வழிமுறைகள் மூலம், சில வரலாற்று விவரிப்புகள் தலைமுறைகள் கடந்து நிறுவனமயமாக்கப்படுகின்றன. கிளிநொச்சியைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் இவ்வாறு குறிப்பிட்டார்: "மாணவர்கள் பண்டைய பௌத்த இராஜ்ஜியங்கள் மற்றும் நினைவுச்சின்னங்களைப் பற்றி மிக விரிவாகக் கற்றுக்கொள்கிறார்கள். இந்தப் பகுதிகளின் சிக்கலான பன்முகப் பண்பாட்டு வரலாறுகள் குறித்து மிகக் குறைவாகவே விவாதிக்கப்படுகிறது. பௌத்த வரலாற்றை ஒதுக்கிவிட வேண்டும் என்பது பிரச்சினையல்ல. மற்ற வரலாறுகளுக்கும் அதே அளவிலான கவனம் கிடைக்கிறதா என்பதே பிரச்சினை." ஆகவே, பௌத்தப் பாரம்பரியத்தைப் பாதுகாக்க வேண்டுமா என்பது கேள்வியல்ல. மிகச் சில பதிலளிப்பாளர்களே பாதுகாப்பிற்கு எதிராக வாதிட்டனர். மாறாக, பார்வை, அதிகாரம் மற்றும் நிறுவன அங்கீகாரம் ஆகியவற்றின் சமமற்ற பங்கீடு குறித்ததே இந்தப் பிரச்சினை. தொல்லியலை ஒரு கல்விசார் நடைமுறையாகவும், ஓர் அரசியல் கருவியாகவும் உள்ளூர் சமூகங்கள் அடிக்கடி வேறுபடுத்திப் பார்க்கின்றன என்பதை இனவரைவியல் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன. பல பதிலளிப்பாளர்கள் தொல்லியல் ஆராய்ச்சிக்கு ஆதரவு தெரிவித்த அதேவேளையில், தேசியவாதத் திட்டங்களுக்குள் தொல்லியல் கண்டுபிடிப்புகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் விமர்சித்தனர்.

முல்லைத்தீவில் உள்ள ஒரு முதியவர் இந்த வேறுபாட்டை அழகாகச் சுருக்கமாகக் கூறினார்: "வரலாறு அனைவருக்கும் சொந்தமானது. அந்த வரலாற்றைப் புரிந்துகொள்ள தொல்லியல் நமக்கு உதவ வேண்டும். வரலாறு, கடந்த காலத்தைப் புரிந்துகொள்ளும் ஒரு வழியாக இருப்பதை நிறுத்தி, நிகழ்காலத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு வழியாக மாறும்போது சிக்கல்கள் எழுகின்றன. அப்போது தொல்லியல் என்பது இனி ஒரு கல்விப் புலமையாகத் தோன்றுவதில்லை. அது ஓர் அரசாட்சியாகத் தோன்றுகிறது." அவரது கூற்று இந்தப் பகுதியின் மையவாதத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. போருக்குப் பிந்தைய இலங்கையில் தொல்லியலின் அரசியல் முக்கியத்துவம் முதன்மையாக அகழ்வாராய்ச்சியில் மட்டும் இல்லை, மாறாக அது இறையாண்மை, பிராந்திய உரிமை, தேசிய அடையாளம் ஆகியவற்றுடன் இணைக்கப்படும் விதங்களில்தான் உள்ளது. பௌத்த மரபு இந்தச் செயல்முறைகளுக்கான ஒரு குறிப்பான சக்திவாய்ந்த ஊடகமாகச் செயல்படுகிறது, ஏனெனில் அது வரலாற்று ஆழம், மத அங்கீகாரம், அரச அதிகாரம் ஆகியவற்றை ஒன்றிணைக்கிறது. இதன் விளைவாக, தொல்லியல் பெரும்பாலும் உரிமை மற்றும் அரசியல் சமூகம் தொடர்பான பரந்த போராட்டங்கள் அரங்கேறும் ஒரு களமாக மாறுகிறது. பண்டைய இடிபாடுகள் நாகரிகத் தொடர்ச்சியின் சான்றுகளாகின்றன. புனித நிலப்பரப்புகள் தேசிய நிலப்பரப்புகளாகின்றன. மரபு என்பது பிராந்தியமாகிறது. மேலும் இந்த மாற்றங்களின் மூலம், போருக்குப் பிந்தைய அரசு, கடந்த காலத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, சர்ச்சைக்குரிய வெளியில் தன்னை மீண்டும் நிலைநிறுத்திக் கொள்கிறது.

பகுதி 2

முந்தைய பகுதிகள் தொல்லியலை இறையாண்மை, தேசியம், அரசு உருவாக்கம் ஆகிய கண்ணோட்டங்களில் ஆராய்ந்திருந்தால், நிறுவனங்கள் மீது மட்டுமே பிரத்தியேகமாகக் கவனம் செலுத்துவது, போருக்குப் பிந்தைய மரபுசார் அரசியலைப் பற்றிய ஒரு முழுமையற்ற விவரத்தை உருவாக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. தொல்லியல் அதிகாரம் ஒருபோதும் ஒரு வெற்று நிலப்பரப்பில் செயல்படுத்தப்படுவதில்லை. அது மரபுசார் இடங்களுக்குள் வாழும் மக்களால் எதிர்கொள்ளப்படுகிறது, விளக்கப்படுகிறது, பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது, சில சமயங்களில் அமைதியாக எதிர்க்கப்படுகிறது. கிராமவாசிகள், விவசாயிகள், மீனவர்கள், மதத் தலைவர்கள், ஆசிரியர்கள், இடம்பெயர்ந்த குடும்பங்கள், உள்ளூர் ஆர்வலர்கள், சமூகப் பெரியவர்கள் தொல்லியல் விவரிப்புகளை வெறுமனே பெறுவதில்லை. அவர்கள் அவற்றுடன் தீவிரமாக ஈடுபடுகிறார்கள். எனவே, போருக்குப் பிந்தைய இலங்கையில் தொல்லியலைப் புரிந்துகொள்வதற்கு, அரசைக் கடந்து சென்று, சாதாரண மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் திணிக்கப்பட்ட வரலாற்று ஆட்சிமுறைகளை எவ்வாறு கையாளுகிறார்கள் என்பதை ஆராய வேண்டும். இந்தக் கண்ணோட்ட மாற்றம் குறிப்பாக முக்கியமானது, ஏனெனில் தொல்லியல் பற்றிய மேலாதிக்கப் பகுப்பாய்வுகள், ஜேம்ஸ் ஸ்காட் (*James Scott*) பிரபலமாக விவரித்த 'அரசை மையமாகக் கொண்ட பார்வை'யை மீண்டும் மீண்டும் உருவாக்குகின்றன. *Seeing Like a State* (1998) என்ற நூலில், வரைபடமாக்கல், வகைப்படுத்தல், அளவீடு, நிர்வாக எளிமைப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் நவீன அரசுகள் சமூகங்களைப் புரிந்துகொள்ளக்கூடியதாக மாற்ற முயல்கின்றன என்பதை ஸ்காட் விளக்கினார். தொல்லியலை, புரிந்துகொள்ளும் தன்மைக்கான இந்த பரந்த செயல்முறையின் ஒரு பகுதியாகப் புரிந்துகொள்ளலாம். ஆய்வுகள், அகழ்வாராய்ச்சிகள், பாரம்பரியப் பதிவேடுகள், பாதுகாக்கப்பட்ட மண்டலங்கள், பாதுகாப்பு எல்லைகள் ஆகியவற்றின் மூலம், சிக்கலான நிலப்பரப்புகள் நிர்வகிக்கக்கூடிய வகைகளாக மாற்றப்படுகின்றன. கிராமங்கள் தொல்லியல் மண்டலங்களாகின்றன. காடுகள் பாரம்பரியக் காப்பகங்களாகின்றன. புனித இடங்கள் வகைப்படுத்தப்பட்ட தலங்களாகின்றன. ஆயினும், அரசின் பார்வை ஒருபோதும் முழுமையானதல்ல என்பதை ஸ்காட் நமக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறார். உள்ளூர் மக்கள், நிர்வாக வகைகளைத் தாண்டிச் செல்லும் தங்களின் சொந்த அறிவு, நினைவகம் மற்றும் நடைமுறை வடிவங்களைக் கொண்டுள்ளனர்.

இலங்கையின் வடக்கும் கிழக்கும் இந்த முரண்பாட்டிற்கு ஒரு சக்திவாய்ந்த எடுத்துக்காட்டை வழங்குகின்றன. தொல்லியல் வரைபடங்கள் ஒரு நிலப்பரப்பை அதன் வரலாற்று முக்கியத்துவத்தின் அடிப்படையில் வகைப்படுத்தலாம், ஆனால் உள்ளூர் மக்கள் அதே நிலப்பரப்பை பயிர்ச்செய்கை, இடப்பெயர்வு, உறவுமுறை, வழிபாடு, துக்கம், உயிர்வாழ்தல் ஆகியவற்றின் மூலம் அனுபவிக்கிறார்கள். முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு விவசாயி இந்த வேறுபாட்டைத் தெளிவாக எடுத்துரைத்தார்: "தொல்பொருள் ஆய்வாளர்களுக்கு, இது ஒரு பழங்காலத் தலமாக இருக்கலாம். எங்களுக்கு, இது எங்கள் குடும்பங்கள் வாழ்ந்த இடம், நாங்கள் எங்கள் நெல்லைப் பயிரிட்ட இடம், போரின் போது மக்கள் ஒளிந்திருந்த இடம், உறவினர்கள் காணாமல் போன இடம், மற்றும் இடம்பெயர்ந்த பிறகு நாங்கள் திரும்பிய இடம். இந்தத் தலத்திற்குப் பல வரலாறுகள் உண்டு. தொல்பொருள் ஆய்வு ஓர் அடுக்கை மட்டுமே பார்க்கிறது. நாங்கள் எல்லா அடுக்குகளுடனும் வாழ்கிறோம்." அவரது கூற்று ஒரு மைய மானிடவியல் அறிவை எடுத்துக்காட்டுகிறது. நிலப்பரப்புகள் ஒருபோதும் ஒரே காலக் கட்டமைப்பின் மூலம் அனுபவிக்கப்படுவதில்லை. அதிகாரபூர்வ தொல்பொருள் ஆய்வு பெரும்பாலும் ஆழமான வரலாற்றுக் காலத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது. ஆனால் உள்ளூர் சமூகங்கள் ஒரே நேரத்தில் பல வரலாறுகளில் வாழ்கின்றன. பழங்கால இடிபாடுகள் போர், இடப்பெயர்வு, மீள்குடியேற்றம், இழப்பு ஆகியவற்றின் நினைவுகளுடன் இணைந்து வாழ்கின்றன. டிம் இன்கோல்ட் (*Tim Ingold*) விவரிக்கின்ற வகையில், நிலப்பரப்பு ஒரு 'பணிவெளியாக' (*Taskscape*) மாறுகிறது. இது வெறும் பௌதீகப் புவியியலாக இல்லாமல், தொடர்ச்சியான சமூக நடைமுறையின் மூலம் கட்டமைக்கப்பட்ட ஓர் இடமாகும். இந்த அர்த்தங்களின் பன்முகத்தன்மைதான் தொல்பொருள் நிர்வாகத்தை கடினமாக்குகிறது. பாரம்பரிய நிறுவனங்கள் பெரும்பாலும் தெளிவையும் வகைப்பாட்டையும் நாடுகின்றன. அன்றாட வாழ்க்கை அத்தகைய எளிமைப்படுத்தலை எதிர்க்கிறது.

கிராம்சியின் மேலாதிக்கம் குறித்த கருத்து, இத்தகைய சூழ்நிலைகளில் தொல்பொருள் அதிகாரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு ஒரு பயனுள்ள கட்டமைப்பை வழங்குகிறது. ஆதிக்கம் என்பது அரிதாகவே வற்புறுத்தலை மட்டுமே சார்ந்திருக்கும் என்று கிராம்சி வாதிட்டார். மாறாக,

குறிப்பிட்ட உலகக் கண்ணோட்டங்கள் இயல்பானதாகவும், சுயதெளிவானதாகவும், பொது அறிவு சார்ந்ததாகவும் தோன்றும் போது அதிகாரம் திறம்படச் செயல்படுகிறது. கலாசார, அறிவுசார் தலைமைத்துவத்தை நிறுவுவதன் மூலம் மேலாதிக்கம் செயல்படுகிறது. மக்கள் யதார்த்தத்தைப் பற்றிய சில புரிதல்களை, அவர்கள் அவ்வாறு செய்யக் கட்டாயப்படுத்தப்படுவதால் அல்ல, மாறாக அந்தப் புரிதல்கள் சட்டபூர்வமான அங்கீகாரத்தைப் பெறுவதால் ஏற்றுக்கொள்கிறார்கள். தொல்லியல் பெரும்பாலும் இந்த மேலாதிக்கச் செயல்முறைக்குப் பங்களிக்கிறது. தொல்பொருள் விவரிப்புகள் அறிவியல் பூர்வமானதாகவும் புறநிலையானதாகவும் தோன்றுவதால், அவை ஒரு தனித்துவமான அதிகாரத்தைக் கொண்டுள்ளன. பாரம்பரிய வகைப்பாடுகள், பாதுகாப்பு வரைபடங்கள் மற்றும் வரலாற்று விளக்கங்கள் ஆகியவை அரசியல் சார்ந்தவையாக அல்லாமல், பெரும்பாலும் தொழில்நுட்ப ரீதியானவையாகவே முன்வைக்கப்படுகின்றன. இதன் விளைவாக, நிலப்பரப்பு மற்றும் வரலாறு குறித்த குறிப்பிட்ட புரிதல்கள் நடுநிலையான தோற்றத்தைப் பெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் இந்த இயக்கவியல் குறித்து இவ்வாறு குறிப்பிட்டார்: "தொல்லியலின் ஆற்றல் என்பது, மக்களுக்கு எதைச் சிந்திக்க வேண்டும் என்று சொல்வதல்ல. அதன் ஆற்றல் என்னவென்றால், தொல்லியல் கூற்றுகள் பெரும்பாலும் அரசியலுக்கு அப்பாற்பட்டவையாகத் தோன்றுவதே ஆகும். ஒரு விஷயம் பாரம்பரியச் சின்னமாக ஆனவுடன், அது வரலாற்றைப் பாதுகாக்கும் ஒரு விஷயம் என்று மக்கள் கருதுகின்றனர். அந்தச் செயல்முறைக்குள் பொதிந்துள்ள அரசியல் அனுமானங்கள் அவ்வளவாகத் தெரிவதில்லை." இது கிராம்சியின் மேலாதிக்க ஆற்றல் பற்றிய புரிதலை நெருக்கமாகப் பிரதிபலிக்கிறது. தொல்லியல் அதிகாரம், கருத்தியல் ரீதியானதாகத் தோன்றுவதை விட இயற்கையானதாகத் தோன்றுவதாலேயே துல்லியமாக செல்வாக்கு மிக்கதாகிறது. ஆயினும், மேலாதிக்கம் ஒருபோதும் முழுமையடைவதில்லை என்பதையும் கிராம்சி நமக்கு நினைவூட்டுகிறார். அது தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட வேண்டும், மீண்டும் உருவாக்கப்பட வேண்டும், எதிர்க்கப்பட வேண்டும். உள்ளூர் சமூகங்கள் மேலாதிக்கக் கதையாடல்களின் செயலற்ற பெறுநர்கள் அல்ல. அவர்கள் மாற்றுப் புரிதல்களை உருவாக்குகிறார்கள், அதிகாரபூர்வ கூற்றுகளை மறுவிளக்கம் செய்கிறார்கள், மேலும் கிராம்சி 'எதிர்மேலாதிக்க' கண்ணோட்டங்கள் என்று அழைத்தவற்றை உருவாக்குகிறார்கள். இத்தகைய செயல்முறைகள் களஆய்வின் போது தொடர்ச்சியாகத் தெளிவாகத் தெரிந்தன. பல கிராமங்களில், குடியிருப்பாளர்கள் தொல்லியல் அங்கீகாரங்களை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டாலும், தனிப்பட்ட முறையில் அதிக விமர்சனபூர்வமான விளக்கங்களை வெளிப்படுத்தினர். இந்த விமர்சனங்கள் வெளிப்படையான மோதல்கள் மூலம் அரிதாகவே வெளிப்படுத்தப்பட்டன. பெரும்பாலும், அவை உரையாடல்கள், உள்ளூர் கலந்துரையாடல்கள், சமூகக் கூட்டங்கள் மற்றும் அன்றாடக் கருத்துரைகளில் இடம்பெற்றன. மன்னாரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் விளக்கினார்: "எப்போது மௌனமாக இருக்க வேண்டும், எப்போது பேச வேண்டும் என்பது மக்களுக்குத் தெரியும். அவர்கள் அதிகாரிகளை நேரடியாக எதிர்க்காமல் இருக்கலாம். அதற்காக அவர்கள் உடன்படுகிறார்கள் என்று அர்த்தமல்ல. சில சமயங்களில், வீடுகளிலும், தேநீர்க் கடைகளிலும், இறுதிச் சடங்குகளிலும், கோயில்களிலும் நடக்கும் உரையாடல்கள் மூலம் கருத்து வேறுபாடுகள் நீடிக்கின்றன. மக்கள் தங்கள் விளக்கங்களைப் பொதுவெளியில் வெளிப்படுத்த முடியாதபோதும், தங்களுக்கென சொந்த விளக்கங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள்." அவரது இக்கூற்று, ஜேம்ஸ் ஸ்காட்டின் 'மறைக்கப்பட்ட எழுத்துரு' (*Hidden Transcript*) என்ற கருத்துடன் வலுவாக ஒத்துப் போகிறது. 'ஆதிக்கமும் எதிர்ப்புக் கலைகளும்' (*1990*) (*Domination and the Arts of Resistance*) என்ற நூலில், அடிபணிந்த குழுக்கள் பெரும்பாலும் அதிகாரபூர்வ பொது விவாதத்திற்கு அப்பாற்பட்ட விமர்சன வடிவங்களை உருவாக்குகின்றன என்று ஸ்காட் வாதிட்டார். இந்த மறைக்கப்பட்ட எழுத்துருக்கள் கதைகள், நகைச்சுவைகள், வதந்திகள், குறியீட்டு நடைமுறைகள், தனிப்பட்ட உரையாடல்கள் போன்ற வடிவங்களில் இருக்கலாம். வெளிப்படையான எதிர்ப்பு கடினமாக இருக்கும் சூழ்நிலைகளிலும்கூட, யதார்த்தத்தைப் பற்றிய மாற்றுப் புரிதல்களைப் பாதுகாக்க அவை சமூகங்களுக்கு உதவுகின்றன.

போருக்குப் பிந்தைய வடக்கும் கிழக்கும் இத்தகைய இயக்கவியலுக்கு எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை வழங்குகின்றன. தொல்பொருள் தலையீடுகள், அதிகாரபூர்வ பாரம்பரிய விவாதத்திலிருந்து கணிசமாக வேறுபடும் அதிகாரபூர்வமற்ற விவரிப்புகள் மூலம் அடிக்கடி விவாதிக்கப்படுகின்றன. கிராமவாசிகள் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வெளிப்படையாக ஒப்புக்கொண்டாலும், குறிப்பிட்ட திட்டங்களின் அரசியல் தாக்கங்கள் குறித்து தனிப்பட்ட முறையில் விவாதிக்கலாம். இந்த விவாதங்கள் அரிதாகவே ஒழுங்கமைக்கப்பட்ட

எதிர்ப்பு இயக்கங்களை உருவாக்குகின்றன, ஆயினும் அவை நிலப்பரப்பைப் பற்றிய மாற்றுப் பார்வைகள் இருப்பதைக் காட்டுகின்றன. திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு குறிப்பிட்டார்: "போராட்டங்கள் நடக்கும்போது மட்டுமே எதிர்ப்பு இருக்கிறது என்று மக்கள் பெரும்பாலும் கருதுகிறார்கள். ஆனால், மக்கள் நிகழ்வுகளை எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள் என்பதிலும் எதிர்ப்பு இருக்க முடியும். சமூகங்கள் தங்களின் சொந்த விளக்கங்களை உருவாக்குகின்றன. அவர்கள் கிராமங்கள் முழுவதும் உள்ள அனுபவங்களை ஒப்பிடுகிறார்கள். அவர்கள் வடிவங்களைப் பற்றி விவாதிக்கிறார்கள். அவர்கள் கேள்விகளைக் கேட்கிறார்கள். அந்த உரையாடல்கள் முக்கியமானவை, ஏனெனில் அவை அதிகாரபூர்வமான விவரிப்புகள் மட்டுமே ஒரே விவரிப்புகளாக மாறுவதைத் தடுக்கின்றன."

இந்தக் கருத்து, ஸ்காட்டின் 'நலிந்தோரின் ஆயுதம்' (Weapon of the Weak) என்ற கருத்தை நேரடியாகச் சுட்டிக்காட்டுகிறது. அன்றாட எதிர்ப்பு வடிவங்கள் பெரும்பாலும் நாடகத்தன்மை வாய்ந்தவையாக இல்லாமல் நுட்பமானவையாக இருக்கின்றன. அவற்றில் ஐயுறவு, மறுவிளக்கம், தந்திரோபாய இணக்கம், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒத்துழைப்பு, மாற்று நினைவுகளைப் பாதுகாத்தல் ஆகியவை அடங்கும். இத்தகைய நடைமுறைகள் உள்ளூர் வரலாற்று அறிவு தொடர்பாக குறிப்பாகத் தெளிவாகத் தெரிந்தன. பல சமூகங்கள் வாய்மொழி வரலாறுகள், இடப்பெயர்கள், சடங்கு மரபுகள், கூட்டு நினைவுகளைக் கொண்டுள்ளன, அவை எப்போதும் அதிகாரபூர்வ தொல்பொருள் விவரிப்புகளுடன் நேர்த்தியாகப் பொருந்துவதில்லை. தொல்பொருள் நிபுணத்துவத்தை வெளிப்படையாக நிராகரிப்பதற்குப் பதிலாக, குடியிருப்பாளர்கள் நிலப்பரப்பைப் பற்றிய இணையான புரிதல்களை அடிக்கடிப் பேணுகிறார்கள். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு முதியவர் விளக்கினார்: "தொல்பொருள் ஆய்வாளர்களுக்கு அவர்களின் வரலாறு உண்டு. எங்களுக்கு எங்கள் வரலாறு உண்டு. சில சமயங்களில் அவை ஒன்றுடன் ஒன்று இணைகின்றன. சில சமயங்களில் இணைவதில்லை. மக்கள் இரண்டுடனும் வாழக் கற்றுக்கொள்கிறார்கள்." பல வரலாற்றுக் கட்டமைப்புகளின் இந்தச் சகவாழ்வு, மானிடவியலாளர்கள் பெருகிய முறையில் அறிவாராய்ச்சிப் பன்மைவாதம் என்று விவரிப்பதை விளக்குகிறது. அறிவின் வெவ்வேறு வடிவங்கள், அவசியமாக இணக்கப்படுத்தப்படாமலேயே ஒரே நேரத்தில் செயல்படுகின்றன. மிஷேல் டி செர்டோவின் (Michel de Certeau) படைப்பும் இங்கு பயனுள்ளதாக இருக்கிறது. 'அன்றாட வாழ்வின் நடைமுறை' (The Practice of Everyday Life) என்ற நூலில், டி செர்டோ உத்திகளுக்கும் தந்திரங்களுக்கும் இடையில் வேறுபடுத்துகிறார். உத்திகள் என்பவை, ஓர் இடத்தின் மீது அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கும் நிறுவனங்களால் கையாளப்படுகின்றன. தந்திரங்கள் என்பவை, சாதாரண மக்கள் அந்தக் கட்டமைப்புகளை வழிநடத்தப் பயன்படுத்தும் மேம்படுத்தப்பட்ட நடைமுறைகளாகும். தொல்பொருள் ஆளுகை பெரும்பாலும் சட்டம், பாதுகாப்பு மண்டலங்கள், நிறுவன அதிகாரம் ஆகியவற்றின் மூலம் உத்தியூர்வமாகச் செயல்படுகிறது. சமூகங்கள் தழுவல், பேச்சுவார்த்தை மற்றும் மறுவிளக்கம் ஆகியவற்றின் மூலம் தந்திரமாகப் பதிலளிக்கின்றன. உதாரணமாக, பல பதிலளிப்பாளர்கள், உள்ளூர் சமூகங்கள் தொல்பொருள் விவரிப்புகளைத் தங்களின் சொந்த உரிமை கோரல்களில் இணைத்துக்கொண்ட சூழ்நிலைகளை விவரித்தனர். பாரம்பரிய உரையாடலை நிராகரிப்பதற்குப் பதிலாக, அவர்கள் அதைத் தமதாக்கிக் கொண்டனர். முல்லைத்தீவில் உள்ள ஒரு சனசமூக நிலையத் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்: "பாரம்பரியம் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மக்கள் விரைவாகக் கற்றுக்கொள்கிறார்கள். இதை அவர்கள் புரிந்துகொண்டவுடன், அவர்களே பாரம்பரிய மொழியைப் பயன்படுத்தத் தொடங்குகிறார்கள். சமூகங்கள் உள்ளூர் வரலாறுகளை ஆவணப்படுத்தவும், கோயில்களைப் பாதுகாக்கவும், வாய்மொழி மரபுகளைச் சேகரிக்கவும், நிலப்பரப்புடனான தங்களின் சொந்தத் தொடர்புகளை வலியுறுத்தவும் தொடங்குகின்றன. பாரம்பரியம் என்பது அவர்களாலும் அணிதிரட்டக்கூடிய ஒன்றாக மாறுகிறது." இந்தச் செயல்முறை, தொல்பொருள் அதிகாரம் அரசால் ஏகபோகமாக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. உள்ளூர் செயற்பாட்டாளர்களும் வரலாற்று விவரிப்புகளைத் தந்திரோபாயமாகப் பயன்படுத்த முடியும். பாரம்பரியம் என்பது பல்வேறு குழுக்கள் தமதாக்கிக்கொள்ள முற்படும் ஒரு வளமாக மாறுகிறது.

பியர் போர்டியூவின் (Pierre Bourdieu) குறியீட்டு மூலதனம் பற்றிய கருத்து இந்த நிகழ்வை விளக்க உதவுகிறது. வரலாற்று அங்கீகாரம் ஒரு வகையான குறியீட்டு மூலதனமாகச் செயல்படுகிறது, ஏனெனில் அது சட்டபூர்வத்தன்மையையும் அதிகாரத்தையும் வழங்குகிறது. சமூகங்கள் பொருள் வளங்களுக்காக மட்டுமல்ல, அங்கீகாரத்திற்காகவும்

போட்டியிடுகின்றன. தொல்பொருள் முக்கியத்துவம் மதிப்புமிக்கதாகிறது. ஏனெனில் அது சொந்தம் மற்றும் புலப்படுதலுக்கான உரிமைகளை வலுப்படுத்துகிறது. தொல்லியலுக்கும் நினைவிற்கும் இடையிலான உறவு இந்த இயக்கவியலை மேலும் சிக்கலாக்குகிறது. அதிகாரபூர்வ பாரம்பரியக் கட்டமைப்புகள் பெரும்பாலும் பண்டைய வரலாற்றிற்கு முன்னுரிமை அளிக்கின்றன, ஆனாலும் உள்ளூர் சமூகங்கள் அடிக்கடி போர், இடப்பெயர்வு பற்றிய சமீபத்திய அனுபவங்களைச் சுற்றி நினைவுகளை ஒழுங்கமைக்கின்றன. கிளிநொச்சியில் ஒரு பெண் இவ்வாறு சொன்னார்: "அதிகாரிகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்ன நடந்தது என்று பேசுகிறார்கள். நாங்கள் இன்னும் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு என்ன நடந்தது என்று பேசுகிறோம். இரண்டு வரலாறுகளுமே முக்கியமானவை. பிரச்சனை என்னவென்றால், ஒரு வரலாறு மற்றொன்றை விட அதிக நிறுவன அங்கீகாரத்தைப் பெறுகிறது." அவரது கருத்து, வன்முறை பெரும்பாலும் கடந்த காலத்திற்குள் முடங்கிவிடாமல், அன்றாட வாழ்க்கைக்குள் ஆழமாகப் பதிந்துவிடுகிறது என்பதை எதிரொலிக்கிறது. பல குடியிருப்பாளர்களுக்கு, போர் தொடர்ந்து நிலம், சொந்தம் மற்றும் நினைவுகளுடனான உறவுகளைக் கட்டமைக்கிறது. எனவே, தொல்பொருள் விவரிப்புகள் ஏற்கனவே மாற்று வரலாறுகளால் நிரம்பிய நிலப்பரப்புகளில் நுழைகின்றன.

அதிகாரபூர்வ பாரம்பரியக் கதைகள் மேலோங்கிவிடுவதால் மட்டும் இந்த மாற்று வரலாறுகள் மறைந்துவிடுவதில்லை. மாறாக, அவை குடும்பக் கதைகள், சடங்குப் பழக்கவழக்கங்கள், நினைவுச் சடங்குகள், உள்ளூர் நினைவுகள் மூலம் நிலைத்திருக்கின்றன. முல்லைத்தீவைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் விளக்கினார்: "நீங்கள் வரைபடங்களை மாற்றலாம். நீங்கள் வகைப்பாடுகளை மாற்றலாம். ஆனால் மக்கள் தங்கள் சொந்த வரலாறுகளைத் தொடர்ந்து சுமந்து செல்கிறார்கள். அந்த வரலாறுகள் உரையாடல்கள் மூலமாகவும், நினைவுகள் மூலமாகவும், குழந்தைகளுக்குச் சொல்லப்படும் கதைகள் மூலமாகவும் உயிர் வாழ்கின்றன." உள்ளூர் நினைவுகளின் இந்த நிலைத்தன்மை, தொல்பொருள் மேலாதிக்கத்தின் வரம்புகளை வெளிப்படுத்துகிறது. பாரம்பரிய நிறுவனங்கள் எவ்வளவு சக்திவாய்ந்தவையாக மாறினாலும், நிலப்பரப்புகள் எவ்வாறு அனுபவிக்கப்படுகின்றன மற்றும் நினைவுகூரப்படுகின்றன என்பதை அவற்றால் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது. இங்கு முன்வைக்கப்பட்டுள்ள இனவரைவியல் சான்றுகள், போருக்குப் பிந்தைய இலங்கையின் தொல்பொருளியலை, வெறுமனே மேலிருந்து கீழான ஓர் ஆதிக்கச் செயல்முறையாகப் புரிந்துகொள்ளக் கூடாது என்று சுட்டிக்காட்டுகின்றன. அத்தகைய கண்ணோட்டம், உள்ளூர் சமூகங்களின் செயல் திறனைக் குறைத்து மதிப்பிடும் அபாயத்தைக் கொண்டுள்ளது. அதே நேரத்தில், உள்ளூர் எதிர்ப்பை மிகைப்படுத்திக் காட்டுவதும் அதே அளவு சிக்கலானதாக இருக்கும். பெரும்பாலான மக்கள் வீரமிக்க எதிர்ப்பாளர்களோ அல்லது செயலற்ற குடிமக்களோ அல்ல. அவர்கள் தெளிவற்ற நிலைகளில் இருக்கிறார்கள். அவர்கள் ஒத்துழைக்கிறார்கள், தங்களை மாற்றியமைத்துக் கொள்கிறார்கள், பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள், விமர்சிக்கிறார்கள், இணங்கிப் போகிறார்கள், அவ்வப்போது எதிர்க்கவும் செய்கிறார்கள். இந்தத் தெளிவின்மைதான் அன்றாட வாழ்க்கையை பகுப்பாய்வு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்குகிறது.

தொல்லியல் நிலப்பரப்பு, போட்டி மனப்பான்மை கொண்ட அறிவு வடிவங்கள் சந்திக்கும் ஒரு தலமாக மாறுகிறது. அதிகாரபூர்வ வரலாறு உள்ளூர் நினைவுகளைச் சந்திக்கிறது. பாரம்பரிய ஆளுகை அன்றாட நடைமுறைகளைச் சந்திக்கிறது. தேசிய விவரிப்புகள் வாழ்ந்த அனுபவங்களைச் சந்திக்கின்றன. இந்தச் சந்திப்புகளைப் புரிந்துகொள்வது இன்றியமையாதது. ஏனெனில் தொல்லியல் என்பது பண்டைய இடிபாடுகளைப் பற்றியது மட்டுமல்ல என்பதை அவை வெளிப்படுத்துகின்றன. அது சமகால சமூக உறவுகளைப் பற்றியதுமாகும். பாரம்பரியத்தின் அரசியல், இறுதியில், பழமை, தேசியம், போர், உயிர்வாழ்தல் ஆகியவற்றால் ஒரே நேரத்தில் வடிவமைக்கப்பட்ட நிலப்பரப்புகளுக்குள் வாழ முயற்சிக்கும் மக்களின் சாதாரணச் செயல்கள் மூலம் வெளிப்படுகிறது. இந்த அர்த்தத்தில், போருக்குப் பிந்தைய இலங்கையின் தொல்லியல் என்பது, அரசு கடந்த காலத்தை அகழ்வாராய்ச்சி செய்வதைப் பற்றிய ஒரு கதை மட்டுமல்ல. அது, சமூகங்கள் தங்கள் அன்றாட வாழ்வில் அந்தக் கடந்த காலத்தின் அர்த்தங்களைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதைப் பற்றிய ஒரு கதையும் ஆகும். இந்தப் பேச்சுவார்த்தைகளின் மூலம், மரபு என்பது வெறும் ஆளுகையின் ஒரு கருவி என்பதைத் தாண்டி, இறையாண்மை, நினைவு மற்றும் சொந்தம் என்ற உணர்வு ஆகியவை தொடர்ந்து அடிமட்டத்திலிருந்து மறுவடிவமைக்கப்படும் ஒரு போட்டி நிறைந்த சமூகக் களமாக மாறுகிறது. கொலனித்துவ நீக்க, விமர்சன மரபுசார் ஆய்வுகளால் எழுப்பப்படும் கவலைகள், இலங்கை வரலாற்றெழுத்தியலுக்குள்ளேயே

தோன்றிய விவாதங்களுடன் வலுவாக ஒத்திருக்கின்றன. உலகளாவிய கல்விசார் உரையாடல்களில் கொலனித்துவ நீக்கத்தின் மொழி முக்கியத்துவம் பெறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, கணநாத் ஒபயசேகரே, ஆர்.ஏ.எல்.எச். குணவர்தன (R.A.L.H. Gunawardana), டபிள்யூ.ஐ. சிறிவீர (W.I. Siriweera) போன்ற அறிஞர்கள் இலங்கை வரலாற்றின் சாராம்சவாத வாசிப்புகளுக்கு சவால் விடுத்து, சிக்கலான வரலாற்று நிகழ்வுகளை ஒற்றை தேசியவாத விவரிப்புகளாக மாற்றும் போக்கைக் கேள்விக்குட்படுத்தி வந்தனர். போருக்குப் பிந்தைய இலங்கையில் தொல்லியல் மற்றும் மரபுசார் அரசியலைப் புரிந்துகொள்வதற்கு அவர்களின் தலையீடுகள் இன்றியமையாதவையாக இருக்கின்றன. ஏனெனில், நாகரிகத் தொடர்ச்சி குறித்த சமகாலக் கூற்றுகளால் பெரும்பாலும் மறைக்கப்படும் வரலாற்றுப் பாய்வுத்தன்மை, பன்மைத்தன்மை மற்றும் சமூகச் சிக்கலான தன்மை ஆகியவற்றின் மீது அவை கவனத்தை ஈர்க்கின்றன. இனம், அடையாளம் குறித்த தொன்மையான புரிதல்களை தொடர்ச்சியாக விமர்சித்ததன் காரணமாக, கணநாத் ஒபயசேகரவின் படைப்புகள் குறிப்பாக முக்கியத்துவம் பெறுகின்றன. தனது ஆய்வுப் பணி முழுவதும், சமகால இனப் பிரிவுகளை மாற்றமின்றிக் கடந்த காலத்திற்கு நீட்டித்துப் பார்க்க முடியும் என்ற அனுமானத்தை ஒபயசேகர மீண்டும் மீண்டும் சவால் செய்தார். சிங்கள அடையாளத்தின் தோற்றம், மகாவம்சத்தின் விளக்கம் ஆகியவை தொடர்பான தனது செல்வாக்குமிக்க விவாதங்களில், வரலாற்றின் பல தேசியவாத வாசிப்புகள் பின்னோக்கிய கணிப்புகளைச் சார்ந்துள்ளன என்று ஒபயசேகர வாதிட்டார். நவீன இன அடையாளங்கள், வரலாற்று ரீதியாகத் தற்செயலான உருவாக்கங்களாகக் கருதப்படாமல், காலத்தால் அழியாத வரலாற்று உண்மைகளாகக் கருதப்படுகின்றன.

இந்த விமர்சனம் தொல்லியலில் ஆழமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. இன அடையாளங்கள் வரலாற்று ரீதியாக கட்டமைக்கப்பட்டு, காலப்போக்கில் உருமாற்றம் அடைகின்றன என்றால், தொல்பொருள் எச்சங்களை தற்கால அரசியல் வகைப்பாடுகளுடன் எளிதாகப் பொருத்திவிட முடியாது. பண்டைய குடியிருப்புகள், மதத் தலங்கள், கல்வெட்டுகள், நினைவுச்சின்னங்கள் ஆகியவை இனம், தேசியம் அல்லது நில உடைமை குறித்த நவீன புரிதல்களுடன் தானாகவே ஒத்துப்போவதில்லை. ஒபயசேகரே தனது பல எழுத்துகளில் குறிப்பிட்டது போல, இலங்கையின் வரலாற்று நிலப்பரப்பு இயக்கம், இடைவினை, பண்பாட்டுப் பரிமாற்றம் மற்றும் மாறிவரும் அரசியல் அமைப்புகளால் வகைப்படுத்தப்பட்டது. மத அடையாளங்கள், மொழிப் பழக்கவழக்கங்கள், உறவுமுறை வலைப்பின்னல்கள், அரசியல் விசுவாசங்கள் ஆகியவை தற்கால தேசியவாத விவரிப்புகள் குறிப்பிடுவதை விட பெரும்பாலும் மிகவும் நெகிழ்வானவையாக இருந்தன. எனவே, தொல்பொருள் சான்றுகள் உறுதியை விட எச்சரிக்கையையே அளிக்க வேண்டும். ஒபயசேகரவால் உத்வேகம் பெற்ற ஒரு கண்ணோட்டம், தொல்பொருள் தலங்கள் ஆய்வு செய்யப்படும் வரலாற்றுக் காலங்களை விட, இருபதாம் மற்றும் இருபத்தியோராம் நூற்றாண்டுகளுக்குரிய வகைப்பாடுகளின் மூலம் விளக்கப்படுகின்றனவா என்று கேட்க நம்மை ஊக்குவிக்கும். கடந்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட மத அல்லது பண்பாட்டுச் சமூகத்தின் இருப்பை நிரூபிப்பது, உரிமை, இறையாண்மை தொடர்பான தற்கால அரசியல் கேள்விகளைத் தானாகவே தீர்த்துவிடும் என்ற அனுமானத்தையும் அது சவாலுக்குட்படுத்தும். புராணம், நினைவு, வரலாற்று உணர்வு ஆகியன குறித்த ஒபயசேகரவின் பரந்த மானிடவியல் ஆய்வுகளும் சமமான முக்கியத்துவம் வாய்ந்தவை. வரலாற்று விவரிப்புகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன, பரப்பப்படுகின்றன, மற்றும் உள்வாங்கப்படுகின்றன என்பதை ஆராய்வதன் முக்கியத்துவத்தை அவர் தொடர்ந்து வலியுறுத்தினார். இந்த வகையில், தொல்பொருள் ஆய்வு என்பது பண்டைய எச்சங்களை மட்டும் ஆராயாமல், அந்த எச்சங்கள் அர்த்தம் பெறும் சமகால சமூக செயல்முறைகளையும் ஆராய வேண்டும். விமர்சனக் கேள்வி என்பது, கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பது மட்டுமல்ல, கடந்த காலத்தின் குறிப்பிட்ட பதிப்புகள் நிகழ்காலத்தில் எவ்வாறு அதிகாரபூர்வமானவை ஆகின்றன என்பதுமாகும்.

இதே போன்ற அக்கறைகளை ஆர்.ஏ.எல்.எச். குணவர்த்தனவின் ஆய்வுகளிலும் காணலாம். அவரது புலமைப்பணி இலங்கை வரலாற்றின் சாராம்சவாதப் புரிதல்களுக்கு அடிப்படையாகச் சவால் விடுத்தது. குணவர்த்தனவின் மைல்கல் கட்டுரையான 'சிங்கத்தின் மக்கள்' (The People of the Lion), இலங்கையில் தேசியவாத வரலாற்றெழுத்தியலின் மிக முக்கியமான விமர்சனங்களில் ஒன்றாக இன்றும் விளங்குகிறது. சிங்கள அடையாளம் என்பது பல்லாயிரம் ஆண்டுகளாக மாற்றமின்றி நீடிக்கும் உயிரியல் ரீதியாகவோ அல்லது கலாசார ரீதியாகவோ நிலையான ஒரு வகையாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது என்று அவர் வாதிட்டார். மாறாக, இடப்பெயர்வு, அரசியல் ஒருங்கிணைப்பு, மத மாற்றம், சமூக ஊடாட்டம்

ஆகியவற்றை உள்ளடக்கிய சிக்கலான வரலாற்றுச் செயல்முறைகள் மூலம் அடையாளங்கள் தோன்றின. நவீன காலத்திற்கு முந்தைய இலங்கையானது, பரந்த அளவிலான இடப்பெயர்வு மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றங்களைக் கொண்டிருந்தது என்பதை குணவர்த்தன நிரூபித்தார். அரசியல் அதிகாரம் பிராந்தியங்களுக்கிடையே மாறிக்கொண்டே இருந்தது. சமூகங்கள் வர்த்தகம், புனிதப் பயணம், போர், திருமணம், இடப்பெயர்வு ஆகியவற்றின் மூலம் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டன. வரலாற்று அடையாளங்கள் நிலையான வடிவத்தில் பாதுகாக்கப்படுவதற்குப் பதிலாக, தொடர்ந்து மறுவடிவம் பெற்றன. இத்தகைய கண்டுபிடிப்புகள், பிரத்தியேகமான வரலாற்று உரிமைக்கான சான்றாகத் தொல்லியலைப் பயன்படுத்தும் முயற்சிகளுக்கு நேரடியாகச் சவால் விடுகின்றன.

போருக்குப் பிந்தைய தொல்லியலுக்கான தாக்கங்கள் ஆழமானவை. வரலாற்றுப் பதிவுகள் பல நூற்றாண்டுகளின் ஊடாட்டத்தையும் கலப்பினத்தையும் வெளிப்படுத்தினால், தொல்பொருள் தலங்கள் ஒற்றை இனப் பிரதேசங்களாக அல்லாமல், சிக்கலான சமூக உலகங்களின் சான்றுகளாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஆயினும், தேசியவாத விளக்கங்கள் பெரும்பாலும் இந்தச் சிக்கலான தன்மையை எளிமைப்படுத்துகின்றன. பண்டைய எச்சங்கள் வரலாற்று ரீதியான ஒன்றிணைப்பின் அடையாளங்களாக இல்லாமல், பிரத்தியேக உரிமையின் சின்னங்களாக மாறுகின்றன. குணவர்த்தன, சமகால அரசியல் வகைப்பாடுகளை கடந்த காலத்திற்குள் பொருத்திப் பார்ப்பதற்கு எதிராக மீண்டும் மீண்டும் எச்சரித்தார். பல நூற்றாண்டுகளின் சமூக மாற்றத்தை ஒரே தொடர்ச்சியான கதையாகச் சுருக்கும் 'வரலாற்றுச் சுருக்கம்' என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றிற்கு தொல்லியல் எவ்வாறு ஆட்படக்கூடும் என்பதை அவரது ஆய்வு வெளிப்படுத்துகிறது. இத்தகைய சுருக்கம் அரசியல் ரீதியாக கவர்ச்சிகரமானது. ஏனெனில் அது தொடர்ச்சி குறித்த தெளிவான கூற்றுகளை உருவாக்குகிறது. ஆயினும், தொல்லியலால் வெளிப்படுத்தக்கூடிய வரலாற்று செயல்முறைகளையே அது பெரும்பாலும் மறைத்துவிடுகிறது. எனவே, குணவர்த்தனவின் கொலனித்துவ நீக்கப் பார்வையானது, தொல்லியலை தேசியவாத உறுதிப்பாடுகளை உறுதிப்படுத்தும் ஒரு கருவியாக அல்லாமல், வரலாற்றுச் சிக்கலான தன்மையை வெளிப்படுத்தும் ஒரு வழியாக நிலைநிறுத்தும். காலத்தால் அழியாத அடையாளங்களை நிரூபிப்பதற்குப் பதிலாக, தொல்பொருள் சான்றுகள் பெரும்பாலும் மாறிவரும் அடையாளங்களையே வெளிப்படுத்துகின்றன. பிரத்தியேக உரிமையை நிரூபிப்பதற்குப் பதிலாக, அது பெரும்பாலும் ஊடாட்டத்தையும் சகவாழ்வையும் நிரூபிக்கிறது.

டபிள்யூ.ஐ. சிறிவீரவின் பணி இந்த விவாதத்திற்கு மற்றொரு முக்கிய பரிமாணத்தைச் சேர்க்கிறது. பொருளாதார வரலாறு, நீர்ப்பாசன அமைப்புகள், குடியிருப்பு வடிவங்கள், வர்த்தக வலைப்பின்னல்கள், சமூக அமைப்பு ஆகியவற்றில் சிறிவீரவின் ஆராய்ச்சி, இலங்கையின் வரலாற்று வளர்ச்சியின் ஒன்றோடொன்று இணைந்த தன்மையைத் தொடர்ந்து எடுத்துக்காட்டியது. அவரது புலமை, முற்றிலும் இன அல்லது தேசியவாத விவரிப்புகளைக் காட்டிலும், பொருள் சார்ந்த செயல்முறைகளுக்கே முக்கியத்துவம் அளித்தது. அரசியல் அதிகாரம், விவசாய உற்பத்தி, சுற்றுச்சூழல் மேலாண்மை, பொருளாதாரப் பரிமாற்றம் ஆகிய அனைத்தும் வரலாற்றுச் சமூகங்களின் பரிணாம வளர்ச்சியை வடிவமைத்தன. இந்தக் கண்ணோட்டம் குறிப்பாகப் பயனுள்ளதாக இருக்கிறது. ஏனெனில் இது தொல்லியலை நாகரிகங்களின் தோற்றத்தைத் தேடும் ஒரு முயற்சியாகக் கருதுவதிலிருந்து கவனத்தை விலக்கி, சமூக வாழ்க்கையை ஆராயும் ஓர் ஆய்வாகக் கருதுகிறது. பண்டைய நிலப்பரப்புகள் ஒத்துழைப்பு, வர்த்தகம், தொழில்நுட்பப் புத்தாக்கம், வள மேலாண்மை ஆகியவற்றின் வலைப்பின்னல்களால் வடிவமைக்கப்பட்டன என்பதை சிறிவீரவின் பணி வெளிப்படுத்துகிறது. வரலாற்றுச் சமூகங்களை ஒற்றை இன அடையாளங்களாகச் சுருக்க முடியாது, ஏனெனில் அவை பரந்த சமூக மற்றும் பொருளாதார அமைப்புகளுக்குள் பொதிந்திருந்தன. சிறிவீரவின் கண்ணோட்டத்தில், தொல்பொருள் எச்சங்கள் வெறும் அரசியல் உரிமையின் சின்னங்களாகக் கருதப்படாமல், நிலப்பரப்புகளுடனான மனிதர்களின் தொடர்புகளுக்கான சான்றுகளாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசன அமைப்புகள், துறைமுகங்கள், சாலைகள், குடியிருப்புகள் ஆகியவை உழைப்பு, தகவமைப்பு, பரிமாற்றம், ஆளுகை பற்றிய கதைகளைச் சொல்கின்றன. வெவ்வேறு சமூகங்கள் பகிரப்பட்ட சூழல்களில் எவ்வாறு வசித்து, அவற்றை மாற்றியமைத்தன என்பதை அவை வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய அணுகுமுறை சமகால மரபுசார் அரசியலைச் சிக்கலாக்குகிறது. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை வரலாற்று ரீதியாக எந்தச் சமூகம் 'சொந்தமாக்கியிருந்தது' என்று கேட்பதற்குப் பதிலாக, கூட்டுச் சமூக செயல்முறைகள் மூலம் நிலப்பரப்புகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதை ஆராயுமாறு

சிறிவீரவின் பணி நம்மை ஊக்குவிக்கிறது. தொல்லியல், பிரத்தியேகமான உரிமை கோரல்களில் கவனம் செலுத்துவதைக் குறைத்து, வரலாற்று உறவுகளைப் புரிந்துகொள்வதில் அதிக கவனம் செலுத்துகிறது.

ஒபயசேகர, குணவர்த்தன, சிறிவீர ஆகியோரின் பங்களிப்புகள், தொல்லியலின் மீதான தேசியவாத அபகரிப்புகளுக்கு ஒரு சக்திவாய்ந்த அறிவுசார் எதிர்வாதத்தை வழங்குகின்றன. அவர்களின் அணுகுமுறைகள் வேறுபட்டாலும், இந்த மூன்று அறிஞர்களும் வரலாற்றின் சாராம்சவாதப் புரிதல்களுக்குச் சவால் விடுகிறார்கள். மூவரும் அரசியல் எளிமைப்படுத்தலை விட வரலாற்றுச் சிக்கலான தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மூவரும் சமகால அடையாளங்களை மாற்றமின்றி தொலைதூரக் கடந்த காலத்திற்குள் திணிக்கும் முயற்சிகளை நிராகரிக்கிறார்கள். அவர்களின் பணி அறிவு உற்பத்தியின் மீதான பரந்த கொலனித்துவ நீக்க விமர்சனங்களுடன் நெருக்கமாக ஒத்துப்போகிறது. தொல்லியலை காலனித்துவ நீக்கம் செய்வதற்கு ஓரங்கட்டப்பட்ட குரல்களை உள்ளடக்குவதை விட மேலான ஒன்று தேவைப்படுகிறது. வரலாறு எந்த அனுமானங்கள் மூலம் விளக்கப்படுகிறது என்பதைக் கேள்விக்குட்படுத்துவதும் அவசியமாகிறது. தொல்பொருள் பதிவுகள் பெரும்பாலும் அரசியல் ஒருமையை நாடும் இடத்தில் பன்மையையும், தேசியம் நிலைத்தன்மையை நாடும் இடத்தில் இயக்கத்தையும், சமகால உரையாடல்கள் பிரிவினையை வலியுறுத்தும் இடத்தில் இடைவினையையும் வெளிப்படுத்துகின்றன என்பதை ஒபயசேகர, குணவர்த்தன, சிறிவீர ஆகியோரின் ஆய்வுப் புலமை நமக்கு நினைவூட்டுகிறது.

போருக்குப் பிந்தைய இலங்கையின் சூழலில், இந்த அறிவுத் திறப்புகள் குறிப்பாக முக்கியமானவை. வடக்குக் கிழக்கின் தொல்பொருள் நிலப்பரப்புகள் ஒரே குரலில் பேசுவதில்லை. அவை பலதரப்பட்ட வரலாறுகள், சமூகங்கள், மதங்கள், சமூக உலகங்களின் தடயங்களைக் கொண்டுள்ளன. தொல்லியலுக்கான சவால் என்பது இந்தத் தடயங்களைப் பாதுகாப்பது மட்டுமல்ல, அவற்றை உரிமை மற்றும் இறையாண்மை குறித்த எளிமைப்படுத்தப்பட்ட விவரிப்புகளாகச் சுருக்குவதை எதிர்ப்பதும் ஆகும். ஒபயசேகர, குணவர்த்தன, சிறிவீர ஆகியோரின் ஒருங்கிணைந்த ஆய்வறிவுகளின் வழியே பார்க்கும்போது, தொல்லியலானது உறுதியை நிலைநிறுத்துவதை விட அதை நிலைகுலையச் செய்யும்போது மிகவும் மதிப்புமிக்கதாகிறது. அதன் மிகப்பெரிய பங்களிப்பு, யார் முதலில் சொந்தம் என்பதை நிரூபிப்பதில் இல்லாமல், சொந்தம் என்பதன் வரலாற்றுச் சிக்கலான தன்மையை வெளிப்படுத்துவதில் இருக்கலாம். இத்தகைய அணுகுமுறை, வரலாற்றுப் படிநிலையை மீண்டும் உருவாக்குவதற்குப் பதிலாக மரபுசார் நீதியை ஆதரிக்கக்கூடிய, கடந்த காலத்துடனான மேலும் பன்மைத்துவமான, ஜனநாயகபூர்வமான, அறநெறி சார்ந்த ஈடுபாட்டிற்கான சாத்தியக்கூறைத் திறக்கிறது.

போருக்குப் பிந்தைய ஆளுகையாகத் தொல்லியல்

இந்தக் கட்டுரையிலிருந்து வெளிப்படும் மைய வாதங்களில் ஒன்று, போருக்குப் பிந்தைய இலங்கையில் தொல்லியலை, பண்டைய வரலாற்றை மீட்டெடுப்பது, பொருள்சார் பண்பாட்டை ஆவணப்படுத்துவது, அல்லது பாரம்பரியத்தைப் பாதுகாப்பது தொடர்பான ஒரு கல்விசார் முயற்சியாக மட்டுமே புரிந்துகொள்ள முடியாது என்பதாகும். தொல்லியலை வெறுமனே தேசியவாதத்தின் ஒரு கருத்தியல் கருவியாக வகைப்படுத்துவதும் போதுமானதல்ல. இவ்விரு விளக்கங்களும் தொல்லியல் நடைமுறையின் முக்கிய பரிமாணங்களைக் குறிப்பிடுகின்றன, ஆனால் 2009க்குப் பிறகு வடக்கிலும் கிழக்கிலும் தொல்லியல் வகிக்கத் தொடங்கிய பங்கை இவை இரண்டுமே முழுமையாக விளக்கவில்லை. போருக்குப் பிந்தைய காலம் வெளிப்படுத்துவது இதைவிட மிகவும் சிக்கலான ஒன்றாகும். தொல்லியல் பெருகிய முறையில் ஆளுகையின் ஒரு தொழில்நுட்பமாகச் செயல்படுகிறது. தொல்லியல் ஆய்வுகள், பாதுகாப்பு அமைப்புகள், பாரம்பரியச் சட்டங்கள், புனித நிலப்பரப்பு உருவாக்கம், அருங்காட்சியக விவரிப்புகள், தள மறுசீரமைப்புத் திட்டங்கள், கல்வி முயற்சிகள், பொது வரலாறு ஆகியவற்றின் மூலம், தொல்லியல் நிலப்பரப்பு, நினைவகம், அடையாளம், உரிமையுணர்வு ஆகியவற்றின் நிர்வாகத்தில் பங்கேற்கிறது. அரசு வெளியைப் புரிந்துகொள்ளக்கூடியதாக மாற்றவும், வரலாற்று அறிவை ஒழுங்கமைக்கவும், இறையாண்மையை அன்றாட வாழ்வில் நிலைநிறுத்தவும் முயலும் வழிமுறைகளில் ஒன்றாக இது மாறுகிறது. போருக்குப் பிந்தைய புனரமைப்பின் பரந்த பின்னணியில் பார்க்கும்போது, இந்த மாற்றத்தின் முக்கியத்துவம் தெளிவாகிறது. விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வி ஒரு புதிய அரசியல் யதார்த்தத்தை மட்டும் உருவாக்கவில்லை. அது ஒரு புதிய நிர்வாக யதார்த்தத்தையும் உருவாக்கியது. முன்னர் அரசின் முழுமையான கட்டுப்பாட்டிற்கு வெளியே இருந்த பரந்த பகுதிகள், புதிய வகையான தலையீடுகளுக்கு

உட்பட்டன. சாலைகள் அமைக்கப்பட்டன, பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டன, இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டன, நிலப் பதிவேடுகள் புதுப்பிக்கப்பட்டன, வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டன, காடுகள் மறுவகைப்படுத்தப்பட்டன, மேலும் புதிய ஆளுகைக் கட்டமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. வடக்கும் கிழக்கும் போருக்குப் பிந்தைய அரசு உருவாக்கத்தின் ஆய்வகங்களாக மாறின. எண்ணற்ற பிற நிறுவனங்கள் நிபுணத்துவ வடிவங்களுடன் உள்ளே வந்தன. தொல்லியல் துறையும் இந்த நிலப்பரப்பில் நுழைந்தது.

முல்லைத்தீவில் உள்ள முன்னாள் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் இந்தச் செயல்முறை குறித்து இவ்வாறு குறிப்பிட்டார்: "மக்கள் போருக்குப் பிந்தைய காலத்தைப் பற்றி விவாதிக்கும்போது, அவர்கள் பெரும்பாலும் வளர்ச்சித் திட்டங்கள் அல்லது இராணுவத்தின் இருப்பு மீது கவனம் செலுத்துகிறார்கள். ஆனால், இப்பகுதியை மறுவடிவமைப்பதில் வேறு பல நிறுவனங்களும் ஈடுபட்டிருந்தன. சுற்றுச்சூழல் முகமைகள், நில அளவைத் துறைகள், தொல்லியலாளர்கள், சுற்றுலா அதிகாரிகள், மத அமைப்புகள் என்பன குறிப்பிடத்தக்கவை. இவை அனைத்தும் போருக்குப் பிந்தைய நிலப்பரப்பின் ஒரு பகுதியாக மாறின. உள்ளூர் சமூகங்களின் கண்ணோட்டத்தில், இந்தத் தலையீடுகள் தனித்தனியானவை அல்ல. அவை ஒரே உருமாற்றத்தின் வெவ்வேறு அம்சங்களாகவே உணரப்பட்டன." அவரது அவதானிப்பு, அரசாட்சி குறித்த மிஷேல் ஃபூக்கோவின் படைப்பிலிருந்து பெறப்பட்ட ஒரு முக்கிய புரிதலைப் பிரதிபலிக்கிறது. ஆளுகை என்பது முறையான அரசியல் நிறுவனங்களுக்கு அப்பாற்பட்டது. நவீன அரசுகள் அறிவு அமைப்புகள், நிர்வாக நடைமுறைகள், நிபுணர் உரையாடல்கள், இடஞ்சார்ந்த வகைப்பாடுகள், ஒழுங்குமுறைக் கட்டமைப்புகள் மூலம் ஆட்சி செய்கின்றன. அதிகாரம் என்பது வற்புறுத்தலின் மூலம் மட்டும் செயல்படுவதில்லை. அது யதார்த்தத்தை உருவாக்குவதன் மூலமே செயல்படுகிறது.

தொல்லியல் இந்தச் செயல்பாட்டில் பங்கேற்கிறது. ஏனெனில் அது கடந்த காலத்தைப் பற்றிய அதிகாரபூர்வமான அறிவை உருவாக்குகிறது. எது பாரம்பரியமாகக் கருதப்படுகிறது என்பதை அது அடையாளம் காட்டுகிறது. எந்தத் தலங்கள் பாதுகாப்பிற்குத் தகுதியானவை என்பதை அது தீர்மானிக்கிறது. வரலாற்று முக்கியத்துவத்தின் அடிப்படையில் அது நிலப்பரப்புகளை வகைப்படுத்துகிறது. இந்தச் செயல்பாடுகளின் மூலம், ஃபூக்கோ 'ஆளக்கூடிய வெளியின் உருவாக்கம்' (*Production of Governable Space*) என்று விவரித்ததற்குத் தொல்லியல் பங்களிக்கிறது. இந்த இயங்குமுறை, தொல்லியலுக்கும் நிலப்பரப்பிற்கும் இடையிலான உறவில் குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. வடக்குக் கிழக்கு முழுவதும், தொல்லியல் தலையீடுகள் நிலம் எவ்வாறு புரிந்துகொள்ளப்படுகிறது, வகைப்படுத்தப்படுகிறது மற்றும் நிர்வகிக்கப்படுகிறது என்பதை மாற்றியமைத்துள்ளன. ஒரு காலத்தில் முதன்மையாக விவசாய நிலங்கள், காடுகள், கிராமப் பொது நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் அல்லது மத இடங்களாகக் கருதப்பட்ட பகுதிகள், தொல்லியல் காப்பகங்கள், பாதுகாப்பு மண்டலங்கள் அல்லது பாதுகாக்கப்பட்ட பாரம்பரிய நிலப்பரப்புகளாக மாறுகின்றன.

முல்லைத்தீவின் புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த ஒரு விவசாயி இந்த மாற்றத்தை இவ்வாறு விவரித்தார்: "நிலம் மாறவில்லை. மரங்கள் அப்படியே இருந்தன. வயல்கள் அப்படியே இருந்தன. இடிபாடுகள் எப்போதுமே அங்கிருந்தன. மாறியது என்னவென்றால், அந்த நிலம் விவரிக்கப்பட்ட விதம்தான். திடீரென்று அது பாரம்பரியச் சின்னமாக மாறியது. அது தொல்பொருள் ஆய்வாக மாறியது. அது பாதுகாப்பாக மாறியது. அந்த விபரிப்பு மாறியவுடன், மற்ற அனைத்தும் கூட மாறிவிட்டன." அவரது கூற்று, ஆளுகையின் ஒரு முக்கிய அம்சத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. அதிகாரம் பெரும்பாலும் வகைப்படுத்துதல் மூலமாகவே செயல்படுகிறது. இடங்களுக்குப் புதிய அர்த்தங்களை வழங்குவதன் மூலம், நிறுவனங்கள் அந்த இடத்தை எவ்வாறு பயன்படுத்தலாம், ஒழுங்குபடுத்தலாம் மற்றும் கற்பனை செய்யலாம் என்பதை மாற்றியமைக்கின்றன.

ஜேம்ஸ் ஸ்காட்டின் *Seeing Like a State* (1998) என்ற நூல், இந்தச் செயல்முறையைப் புரிந்துகொள்வதற்கு மிகவும் பயனுள்ள ஒரு கட்டமைப்பை வழங்குகிறது. சிக்கலான சமூக யதார்த்தங்களை எளிமைப்படுத்துவதன் மூலம் புரிந்துகொள்ளக்கூடியதாக மாற்ற அரசுகள் முயல்கின்றன என்று ஸ்காட் வாதிடுகிறார். காடுகள் மர இருப்புகளாக மாறுகின்றன. சமூகங்கள் மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பிரிவுகளாக மாறுகின்றன. ஆறுகள் நீர் வளங்களாக மாறுகின்றன. இதேபோல், தொல்பொருள் ஆளுகையானது, சிக்கலான வாழ்விட நிலப்பரப்புகளைப் பாரம்பரிய நிலப்பரப்புகளாக மாற்றுகிறது. வரலாற்று முக்கியத்துவம் என்பது, ஒரு நிலப்பரப்பை நிர்வாக ரீதியாக ஒழுங்கமைக்க உதவும் ஒரு வகைப்பாடாக மாறுகிறது. ஆயினும், இந்தச் செயல்முறை ஒருபோதும் நடுநிலையானதல்ல. தெளிவு என்பது

தவிர்க்க முடியாமல் தேர்வை உள்ளடக்கியது. சில வரலாறுகள் புலப்படுகின்றன, மற்றவை மறைக்கப்பட்டே இருக்கின்றன. சில தலங்கள் அங்கீகாரம் பெறுகின்றன, மற்றவை புறக்கணிக்கப்படுகின்றன. எனவே, தொல்பொருள் ஆளுகை என்பது பாதுகாப்பின் மூலம் மட்டுமல்ல, விலக்குவதன் மூலமும் செயல்படுகிறது. கிளிநொச்சியில் ஒரு கோயில் நிர்வாகி இவ்வாறு குறிப்பிட்டார்: "இந்தப் பகுதியில் பல வரலாறுகள் உள்ளன. சில பாரம்பரியமாகின்றன. மற்றவை நினைவுகளாகவே இருக்கின்றன. இந்த வேறுபாடு முக்கியமானது, ஏனெனில் பாரம்பரியம் நிறுவன அங்கீகாரத்தைப் பெறுகிறது, ஆனால் நினைவுகள் பெரும்பாலும் சமூகங்கள் மூலமாக மட்டுமே நிலைத்திருக்கின்றன." அக்கருத்து, நினைவிற்கும் பாரம்பரியத்திற்கும் இடையிலான ஒரு முக்கியமான வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகிறது. நினைவுகள் மக்களுக்குச் சொந்தமானவை. பாரம்பரியம் நிறுவனங்களுக்குச் சொந்தமானது. நினைவுகள் அந்தரங்கமானதாகவும், துண்டு துண்டானதாகவும், உணர்ச்சிபூர்வமானதாகவும், சர்ச்சைக்குரியதாகவும் இருக்கலாம். பாரம்பரியம் நிலைத்தன்மை, புலப்படுதல் மற்றும் பொது அங்கீகாரத்தை நாடுகிறது. தொல்பொருள் ஆய்வு பெரும்பாலும் இந்த இரண்டு களங்களுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்படுகிறது.

தொல்பொருள் ஆய்விற்கும் நினைவிற்கும் இடையிலான இந்த உறவு, போருக்குப் பிந்தைய சமூகங்களில் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் கடந்த காலமே அரசியல் ரீதியாக சர்ச்சைக்குரியதாகவே உள்ளது. வடக்கும் கிழக்கும் பல வரலாற்று அடுக்குகளைக் கொண்டுள்ளன. பண்டைய இராச்சியங்கள், மத வலைப்பின்னல்கள், கொலனித்துவ சந்திப்புகள், இடப்பெயர்வுப் பாதைகள், போர்க்கால அனுபவங்கள், இடப்பெயர்வு, போருக்குப் பிந்தைய புனரமைப்பு ஆகிய அனைத்தும் ஒரே நிலப்பரப்பில் இணைந்துள்ளன. தொல்பொருள் ஆய்வுகள் தவிர்க்க முடியாமல் சில காலங்களுக்கு மற்றவற்றை விட முன்னுரிமை அளிக்கின்றன. மன்னாரைச் சேர்ந்த ஒரு பள்ளி ஆசிரியர் இவ்வாறு குறிப்பிட்டார்: "முரண் என்னவென்றால், தொல்பொருள் ஆய்வு பெரும்பாலும் வரலாற்றைப் பாதுகாப்பதோடு தொடர்புபடுத்தப்படுகிறது, ஆனால் நடைமுறையில் எந்த வரலாறுகள் புலப்படும் என்பதைத் தீர்மானிக்கவும் அது உதவுகிறது. சில கடந்த காலங்கள் கவனமாக ஆவணப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. மற்ற கடந்த காலங்கள் மறதிக்கு ஆளாகும் அபாயத்தில் இருக்கின்றன."

இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட புலப்படுதலே, தொல்பொருள் ஆய்வு நினைவாற்றலைக் கட்டுப்படுத்தும் மைய வழிமுறைகளில் ஒன்றாகும்.

பியர் போர்டியூவின் குறியீட்டு அதிகாரம் (*Symbolic Power*) பற்றிய கருத்து இந்தச் செயல்முறையை விளக்க உதவுகிறது. குறியீட்டு அதிகாரம் என்பது யதார்த்தத்தை வகைப்படுத்தி வரையறுக்கும் அதிகாரத்தின் மூலம் செயல்படுகிறது. தொல்பொருள் நிறுவனங்கள் துல்லியமாக இந்த அதிகாரத்தைக் கொண்டுள்ளன. அவை ஒரு தலத்தை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் குறிப்பிடும்போது, அந்தக் குறிப்பு சமூக விளைவுகளை ஏற்படுத்துகிறது. அந்தத் தலம் கல்விப் பாடத்திட்டங்கள், அருங்காட்சியகக் கண்காட்சிகள், சுற்றுலா விவரிப்புகள், அரசாங்க அறிக்கைகள், பொது விவாதங்களில் இடம்பெறுகிறது. வரலாற்று முக்கியத்துவம் நிறுவனமயமாக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் விளக்கினார்: "ஒரு தலம் அதிகாரபூர்வ அங்கீகாரத்தைப் பெற்றவுடன், அது பொதுமக்களின் கற்பனையின் ஒரு பகுதியாகிறது. எதிர்கால சந்ததியினர் அதைப் பாடப்புத்தகங்கள், பாரம்பரியப் பிரசாரங்கள், ஊடகச் சித்தரிப்புகள் மூலம் எதிர்கொள்கின்றனர். எனவே, தொல்பொருள் வகைப்பாடு நாம் கடந்த காலத்தைப் புரிந்துகொள்ளும் விதத்தை மட்டுமல்ல, தேசத்தை நாம் கற்பனை செய்யும் விதத்தையும் வடிவமைக்கிறது." அவரது கருத்து, தேசங்கள் பகிரப்பட்ட விவரிப்புகள் மூலம் கற்பனை செய்யப்படுகின்றன என்ற பெனடிக்ட் ஆண்டர்சனின் உள்ளுணர்வை எதிரொலிக்கிறது. தொல்பொருள் ஆய்வு, தேசிய வரலாற்றிற்குப் பொருள்சார்ந்த ஆதாரங்களை வழங்குவதன் மூலம் இந்தக் கற்பனைக்கு பங்களிக்கிறது. பண்டைய இடிபாடுகள் தொடர்ச்சியின் சான்றுகளாகின்றன. பாரம்பரியத் தலங்கள் கூட்டு அடையாளத்தின் சின்னங்களாகின்றன. நிலப்பரப்புகள், தேசம் தன்னைத்தானே விவரிக்கும் வரலாற்று நூல்களாக மாறுகின்றன. ஆயினும், தொல்பொருள் பதிவுகள் பெரும்பாலும் அத்தகைய எளிமைப்படுத்தலை எதிர்க்கின்றன. வடக்கும் கிழக்கும் அசாதாரணமான வரலாற்றுப் பன்முகத்தன்மைக்கான சான்றுகளைக் கொண்டுள்ளன. பௌத்த மடாலயங்கள், இந்துக் கோயில்கள், இஸ்லாமிய வர்த்தகக் குடியிருப்புகள், கிறிஸ்தவத் தேவாலயங்கள், கொலனித்துவக் கோட்டைகள், கடல்வழி வலைப்பின்னல்கள், நீர்ப்பாசன அமைப்புகள், விவசாயக் குடியிருப்புகள் அனைத்தும் தொல்பொருள் நிலப்பரப்பிற்குள் ஒருங்கே காணப்படுகின்றன. வரலாற்றுப் பதிவுகள்

பல நூற்றாண்டுகளின் இயக்கம், பரிமாற்றம், ஊடாட்டம் மற்றும் சகவாழ்வை வெளிப்படுத்துகின்றன.

இவ்விஷயத்தில் ஆர்.ஏ.எல்.எச். குணவர்த்தனவின் பணி குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. நிலையான நாகரிக எல்லைகளால் அல்லாமல், சிக்கலான வரலாற்றுச் செயல்முறைகள் மூலமாகவே இலங்கையின் அடையாளங்கள் தோன்றின என்பதை அவரது ஆய்வு நிரூபித்தது. வரலாற்றுச் சமூகங்கள் இடப்பெயர்வு, வர்த்தகம், திருமணம், போர் மற்றும் அரசியல் மாற்றம் ஆகியவற்றின் மூலம் தொடர்ச்சியாக ஊடாடின. தொல்பொருள் சான்றுகள், ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த சமூக உலகங்களை வெளிப்படுத்துவதன் மூலம், இந்த விளக்கத்தை பெரும்பாலும் ஆதரிக்கின்றன. அதேபோல், கணநாத் ஒபயசேகர இனம் மற்றும் அடையாளம் குறித்த சாராம்சவாதப் புரிதல்களை மீண்டும் மீண்டும் சவாலுக்குள்ளாக்கினார். சமகால தேசியவாத வகைப்பாடுகளைப் பண்டைய வரலாற்றில் பின்னோக்கிப் பொருத்திப் பார்ப்பதற்கு எதிராக அவர் எச்சரித்தார். தொல்பொருள் எச்சங்கள் வரலாற்று இருப்பை நிரூபிக்கக்கூடும், ஆனால் அவை சமகால உரிமை அல்லது இறையாண்மைக் கோரிக்கைகளைத் தாமாகவே நியாயப்படுத்துவதில்லை.

இந்தக் கண்ணோட்டத்தில், தொல்பொருள் ஆய்வு ஒரு முரண்பாடான தன்மையைக் கொண்டுள்ளது. அது தேசியவாதக் கதையாடல்களை ஆதரிக்கப் பயன்படுத்தப்படலாம், ஆனாலும் அதன் சான்றுகள், தேசியவாதக் கதையாடல்கள் எளிமைப்படுத்த முற்படும் சிக்கலான தன்மையையே பெரும்பாலும் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன. திருகோணமலையில் பணியாற்றும் ஓர் ஆய்வாளர் குறிப்பிட்டார்: "தொல்பொருள் பதிவுகளை நாம் எவ்வளவு ஆழமாக ஆராய்கிறோமோ, அவ்வளவு எளிமையான கதைகளை நிலைநிறுத்துவது கடினமாகிறது. வரலாறு சிக்கலைத் தீர்ப்பதற்குப் பதிலாக மேலும் சிக்கலாகிறது. ஆயினும், ஆட்சிக்கு பெரும்பாலும் தெளிவு தேவைப்படுகிறது. அது ஒரு பதற்றத்தை உருவாக்குகிறது." சிக்கலான தன்மைக்கும் தெளிவான பார்வைக்கும் இடையிலான இந்தப் பதற்றமே தொல்பொருள் அதிகாரத்தின் மையத்தில் உள்ளது. தொல்பொருள் ஆய்வுக்கும் இறையாண்மைக்கும் இடையிலான உறவு இந்தக் கருத்தை மேலும் விளக்குகிறது. இறையாண்மை என்பது பொதுவாக ஒரு நிலப்பரப்பின் மீதான அதிகாரம் என்று புரிந்து கொள்ளப்படுகிறது.

ஆயினும், இறையாண்மை என்பது வரலாற்றின் மீதான அதிகாரத்தையும் உள்ளடக்கியது. அரசுகள் நிலத்தை பௌதீக ரீதியாகக் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அதன் வரலாற்றுப் பொருளையும் வரையறுக்க முற்படுகின்றன. சமகால நிலப்பரப்பை, பழமை மற்றும் தொடர்ச்சியின் கதையாடல்களுடன் இணைப்பதன் மூலம், தொல்லியல் இந்த முயற்சிக்குப் பங்களிக்கிறது. பரந்தனில் ஒரு சமூக ஆர்வலர் இந்த இயக்கவியலை இவ்வாறு விவரித்தார்: "இராணுவக் கட்டுப்பாடு நிலப்பரப்பை பௌதீக ரீதியாகப் பாதுகாக்கிறது. வரலாற்றுக் கதையாடல்கள் அதைக் குறியீட்டு ரீதியாகப் பாதுகாக்கின்றன. தொல்லியல் முக்கியத்துவம் பெறுகிறது, ஏனெனில் அது அந்தக் கதையாடல்களை உருவாக்க உதவுகிறது." அவரது கூற்று, போருக்குப் பிந்தைய ஆட்சியின் குறியீட்டுப் பரிமாணத்தை எடுத்துக்காட்டுகிறது. நிலப்பரப்புக் கட்டுப்பாடு மட்டுமே சட்டபூர்வத் தன்மையை உருவாக்குவதில்லை. சட்டபூர்வத் தன்மைக்கு வரலாற்று ரீதியான நியாயப்படுத்தல் தேவைப்படுகிறது. அத்தகைய நியாயப்படுத்தலைக் கட்டமைக்கக்கூடிய பொருள்சார் சான்றுகளைத் தொல்லியல் வழங்குகிறது.

இந்தச் செயல்முறை புனித நிலப்பரப்புகளில் குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. முந்தைய பிரிவுகளில் விவாதிக்கப்பட்டபடி, தொல்லியல் தலங்கள் பெரும்பாலும் மதக் கதையாடல்கள், புனிதப் பயணப் பாதைகள், ஆன்மீகப் புவியியல்களுடன் இணைக்கப்படுகின்றன. புனித நிலப்பரப்புகள் வரலாற்று ஆழத்தை தார்மீக அதிகாரத்துடன் இணைக்கின்றன. அவை சாதாரண இடத்தை அர்த்தமுள்ள நிலப்பரப்பாக மாற்றுகின்றன. ஹென்றி லெஃபெப்ரேயின் இடஞ்சார்ந்த உற்பத்திக் கோட்பாடு, இது ஏன் முக்கியமானது என்பதை விளக்க உதவுகிறது. இடம் வெறுமனே ஆக்கிரமிக்கப்படுவதில்லை. அது சமூக நடைமுறைகள் மற்றும் குறியீட்டு அர்த்தங்கள் மூலம் உருவாக்கப்படுகிறது. நிலப்பரப்பிற்குள் வரலாற்றுக் கதையாடல்களைப் பொதிப்பதன் மூலம், தொல்லியல் இந்த உருவாக்கத்திற்குப் பங்களிக்கிறது. புனிதப் புவியியல், அந்தக் கதையாடல்களுக்கு அறநெறி முக்கியத்துவத்தை அளிப்பதன் மூலம் அந்தச் செயல்முறையை மேலும் வலுப்படுத்துகிறது. தொல்லியலும் மதமும் இணைந்து, பிராந்தியத்திற்கான வலுவான சட்டபூர்வ அங்கீகார வடிவங்களை உருவாக்குகின்றன.

ஆயினும், உள்ளூர் சமூகங்கள் இந்தச் செயல்முறைகளை அரிதாகவே செயலற்ற முறையில் எதிர்கொள்கின்றன. அன்றாட எதிர்ப்பு குறித்த

ஜேம்ஸ் ஸ்காட்டின் ஆய்வு நிரூபிப்பது போல, ஆளுகை என்பது எப்போதும் பேரம் பேசப்பட்டே அமைகிறது. வடக்கு மற்றும் கிழக்கு முழுவதும், சமூகங்கள் தொல்லியல் கதையாடல்களுக்கு மறுவிளக்கம் அளிக்கின்றன, மாற்று நினைவுகளைப் பேணுகின்றன. மேலும் மரபு குறித்த தங்களின் சொந்தப் புரிதல்களை வளர்த்துக் கொள்கின்றன. திருகோணமலையைச் சேர்ந்த ஒரு சமூகத் தலைவர் விளக்கினார்: "மக்கள் தொல்லியலை வெறுமனே ஏற்றுக்கொள்வதோ அல்லது நிராகரிப்பதோ இல்லை. அவர்கள் அதனுடன் ஈடுபடுகிறார்கள். அதைப்பற்றி விவாதிக்கிறார்கள். அதைத் தங்கள் சொந்த அனுபவங்களுடன் ஒப்பிடுகிறார்கள். சில பகுதிகளை உள்வாங்கிக்கொண்டு, மற்றவற்றைக் கேள்விக்குள்ளாக்குகிறார்கள். தொல்லியலானது வெளியிலிருந்து திணிக்கப்படும் ஒன்றாக இல்லாமல், உள்ளூர் வாழ்வின் ஒரு பகுதியாக மாறுகிறது." இந்தக் கருத்து, ஆளுகை ஒருபோதும் முழுமையடைவதில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. தொல்லியல் அதிகாரம் நிலப்பரப்புகளை வடிவமைக்கலாம், ஆனால் அந்த நிலப்பரப்புகளின் அர்த்தங்களைச் சமூகங்கள் தொடர்ந்து வடிவமைக்கின்றன. இந்தப் புரிதல், போருக்குப் பிந்தைய தொல்லியலிலிருந்து வெளிப்படும் மிக முக்கியமான பாடமாக இருக்கலாம். தொல்லியலானது ஒருவழி ஆதிக்க அமைப்பாகச் செயல்படுவதில்லை. மாறாக, அது அரசு நிறுவனங்கள், தொல்லியலாளர்கள், மத அமைப்புகள், உள்ளூர் சமூகங்கள், ஆர்வலர்கள் மற்றும் வரலாற்றாசிரியர்கள் கடந்த காலத்தின் அர்த்தத்தைத் தொடர்ந்து விவாதிக்கும் ஒரு ஊடாட்டக் களமாகச் செயல்படுகிறது.

வடக்கும் கிழக்கும் தொல்லியலை ஓர் ஆழமான சமூகச் செயல்முறையாக வெளிப்படுத்துகின்றன. அது வெளியை வகைப்படுத்துவதன் மூலம் நிலப்பரப்பை ஆளுகிறது. அது சில வரலாறுகளை மற்றவற்றை விட மேலாக அங்கீகரிப்பதன் மூலம் நினைவுகளை ஆளுகிறது. அது அடையாளம் மற்றும் தொடர்ச்சியின் கதைகளை வடிவமைப்பதன் மூலம் சொந்தம் என்ற உணர்வை ஆளுகிறது. ஆயினும், அது மாற்று நினைவுகள், உள்ளூர் அறிவு மற்றும் அன்றாட அனுபவங்களால் தொடர்ந்து சவாலுக்குட்படுத்தப்படுகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, போருக்குப் பிந்தைய ஆட்சிமுறை செயல்படும் மையப் பொறிமுறைகளில் ஒன்றாகத் தொல்லியல் விளங்குகிறது. அது வரலாறுக்கும் நிலப்பரப்புக்கும், நினைவுக்கும் இறையாண்மைக்கும், மரபுக்கும் அடையாளத்திற்கும் இடையேயான உறவை ஒழுங்கமைக்க உதவுகிறது. அகழ்வாராய்ச்சி என்பது பழங்கால எச்சங்களை மீட்டெடுப்பதை விட மேலானதாகிறது. அது, யார் இந்த நாட்டவர், எதை நினைவுகூர வேண்டும், தேசத்தை எவ்வாறு கற்பனை செய்ய வேண்டும் என்பதை வரையறுக்கும் தொடர்ச்சியான முயற்சியின் ஒரு பகுதியாகிறது. எனவே, போருக்குப் பிந்தைய இலங்கையின் தொல்லியல் என்பது கடந்த காலத்தைப் பற்றிய ஒரு கதை மட்டுமல்ல; நிகழ்காலத்தை ஆளவும் எதிர்காலத்தை வடிவமைக்கவும் கடந்த காலம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பற்றிய கதையும் ஆகும். மரபு, வகைப்பாடு, பாதுகாப்பு, வரலாற்று விவரிப்பு ஆகியவற்றின் மூலம், தொல்லியல் என்பது நாட்டவர் என்ற உணர்வை நிர்வகிக்கும் செயலிலேயே பங்கேற்கிறது. இடிபாடுகளை அகழ்வாராய்ச்சி செய்வது அரசியல் ஒழுங்கை உருவாக்குவதிலிருந்து பிரிக்க முடியாததாகிறது. இந்த அர்த்தத்தில், தொல்லியல் என்பது வெறும் கண்டுபிடிப்புத் துறையாக மட்டுமல்லாமல், ஓர் ஆட்சிமுறையாகவும் செயல்படுகிறது.

பன்மைத்துவ தொல்லியலை நோக்கி: பகிரப்பட்ட வரலாறுகளும் சகவாழ்வும்

போருக்குப் பிந்தைய இலங்கையில் தொல்லியலானது இறையாண்மை, நிலப்பரப்பு, வரலாற்று அதிகாரம் ஆகியவற்றை உருவாக்கும் ஒரு பொறிமுறையாகச் செயல்படுகிறது என்று முந்தைய பகுதிகள் வாதிட்டிருந்தாலும், ஒரு முக்கியமான கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. என்ன மாற்று வழிகள் சாத்தியம்? தொல்லியலானது, ஒருவரோடு ஒருவர் இணைந்திருத்தல் குறித்த புறக்கணிப்பு விவரிப்புகளுக்குப் பங்களிக்க முடியுமானால், அது சகவாழ்விற்கான ஒரு வளமாகவும் மாற முடியுமா? அரசியல் படிநிலைகளை வலுப்படுத்த மரபுரிமை பயன்படுத்தப்பட்டிருந்தால், வரலாற்றுப் பன்மைத்துவத்தையும் அறநெறிப் பொறுப்புடைமையையும் ஊக்குவிக்கும் வழிகளில் அதை மறுவடிவமைக்க முடியுமா? போருக்குப் பிந்தைய இலங்கையில் இந்தக் கேள்விகள் குறிப்பாக அவசரமானவை. ஏனெனில், சவால் என்பது கடந்த காலத்தைப் பாதுகாப்பது மட்டுமல்ல, மாறாக, போட்டி நினைவுகள், சமமற்ற அதிகார உறவுகள், தீர்க்கப்படாத வன்முறை வரலாறுகளால் குறிக்கப்பட்ட ஒரு சமூகத்தில் கடந்த காலத்துடன் எப்படி வாழ்வது என்பதுதான்.

இந்தக் கட்டுரை முழுவதும் முன்வைக்கப்பட்டுள்ள வாதத்தை, தொல்லியலை நிராகரிப்பதாகப் படிக்கக்கூடாது. அத்தகைய முடிவு பகுப்பாய்வு ரீதியாகத் தவறானதாகவும், அரசியல் ரீதியாகப்

பயனற்றதாகவும் இருக்கும். இலங்கையின் அசாதாரணமான வளமான, சிக்கலான வரலாற்று நிலப்பரப்புகளைப் புரிந்துகொள்வதற்கு, தொல்லியல் மிக முக்கியமான கருவிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. பண்டைய மடாலயங்கள், கோயில்கள், குடியிருப்புகள், நீர்ப்பாசன அமைப்புகள், கல்வெட்டுகள், துறைமுகங்கள், கல்லறைத் தலங்கள் மற்றும் புனித இடங்கள் ஆகியவை, பல நூற்றாண்டுகளாக இத்தீவை வடிவமைத்த சமூக உலகங்கள் குறித்த விலைமதிப்பற்ற பார்வைகளை வழங்குகின்றன. பிரச்சினை தொல்லியலில் இல்லை. அடையாளம், நிலப்பரப்பு, இறையாண்மை ஆகியன தொடர்பான சமகாலப் போராட்டங்களுக்குள், தொல்லியல் அறிவு சில சமயங்களில் பயன்படுத்தப்படும் விதங்களில்தான் பிரச்சினை உள்ளது. எனவே, தொல்லியல் இருக்க வேண்டுமா என்பதல்ல சவால்; மாறாக, போருக்குப் பிந்தைய சமூகத்தில் எவ்வகையான தொல்லியல் தேவைப்படுகிறது என்பதேயாகும்.

இலங்கையின் நிலைமை படிப்பினையை அளிக்கிறது, ஏனெனில் அந்த மோதலே ஆழமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டிருந்தது. ஒன்றுக்கொன்று போட்டியிடும் தேசியவாதத் திட்டங்கள், கடந்த காலத்தைப் பற்றிய முரண்பட்ட விவரிப்புகளிலிருந்து தங்களுக்குரிய அங்கீகாரத்தைப் பெற்றன. சிங்கள பௌத்த தேசியவாதம், மகாவம்சம் போன்ற வரலாற்றுப் பதிவுகளையும், பண்டைய பௌத்த இராச்சியங்களுடன் தொடர்புடைய தொல்பொருள் எச்சங்களையும், நாகரிகத் தொடர்ச்சி குறித்த விவரிப்புகளையும் அடிக்கடி மேற்கோள் காட்டியது. அதேபோல், தமிழ்த் தேசியவாதமும் தமிழ் இராஜ்ஜியங்கள், பிராந்திய சுயாட்சி, மொழி அடையாளம், வடக்குக் கிழக்கில் நிலவிய நீண்டகாலக் குடியேற்ற முறைகள் குறித்த வரலாற்று நினைவுகளைத் திரட்டியது. இந்தப் போர் ஆயுதங்களால் நடத்தப்பட்டது, ஆனால் அது வரலாற்றின் ஊடாகவும் நடத்தப்பட்டது. துப்பாக்கிகளின் ஓசை ஓய்ந்த பிறகும், வரலாற்று விளக்கத்திற்கான போராட்டம் மறைந்துவிடவில்லை. மாறாக, அது தொல்லியல், மரபுரிமை மேலாண்மை, கல்வி, அருங்காட்சியகங்கள், நினைவிடங்கள், பொது வரலாறு உள்ளிட்ட புதிய நிறுவனக் களங்களுக்கு நகர்ந்தது.

இந்தச் சூழலில், தொல்லியல் என்பது கல்விப்புலத்திற்கு அப்பாற்பட்ட ஒரு பெரும் சுமையைச் சுமக்கிறது. ஒவ்வொரு அகழ்வாராய்ச்சி, புனரமைப்புத் திட்டம், பாரம்பரியப் பிரகடனம், பாதுகாப்பு முயற்சி ஆகியவையும் பரந்த அரசியல் கேள்விகளுடன் சிக்கிக்கொள்ளும் அபாயத்தைக் கொண்டுள்ளன. இதன் பொருள், தொல்லியல் பொது வாழ்க்கையிலிருந்து பின்வாங்க வேண்டும் என்பதல்ல. மாறாக, போருக்குப் பிந்தைய நிலப்பரப்புகளின் சிக்கலான தன்மையையும், அவற்றுக்குள் பொதிந்துள்ள வரலாற்று அனுபவங்களின் பன்மைத்தன்மையையும் அங்கீகரிக்கும் ஒரு மாறுபட்ட அறநெறி நோக்கு தொல்லியலுக்குத் தேவைப்படுகிறது என்பதே இதன் பொருள். இதற்கு ஒரு பயனுள்ள தொடக்கப் புள்ளியை கணநாத் ஓபயசேகரவின் படைப்புகளில் காணலாம். தனது கல்விப்புல ஆய்வு முழுவதும், ஓபயசேகர கலாசாரம், இனம், வரலாறு என்பன குறித்த சாராம்சவாதப் புரிதல்களைத் தொடர்ந்து சவால் செய்தார். அவரது படைப்புகள் இயக்கம், உருமாற்றம், கலப்பினத்தன்மை மற்றும் வரலாற்றுத் தற்செயல் நிகழ்வுகளை வலியுறுத்தின. இத்தகைய அணுகுமுறை, தொல்லியலில் பயன்படுத்தப்படும் போது, நிலையான மூலங்களையும் பிரத்தியேக உரிமையையும் தேடுவதிலிருந்து விலகிச் செல்ல அறிஞர்களை ஊக்குவிக்கும். அதற்குப் பதிலாக, சமூகங்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்ட, கருத்துகளைப் பரிமாறிக்கொண்ட, இடம்பெயர்ந்த, திருமணம் செய்துகொண்ட, வர்த்தகம் செய்த, வழிபட்ட, இணைந்து வாழ்ந்த சிக்கலான வரலாற்றுச் செயல்முறைகளை ஆராய்வதற்கான ஒரு வழியாக தொல்லியலை மாற்றும்.

ஓபயசேகர, "தொல்லியல் இந்த நிலப்பரப்பை முதலில் யார் சொந்தமாகக் கொண்டிருந்தார்கள்? என்று கேட்காது. அது, காலப்போக்கில் வெவ்வேறு சமூகங்கள் இந்த நிலப்பரப்பில் எவ்வாறு வசித்து, அதை மாற்றியமைத்தன? என்று கேட்கும்" என்கிறார். இந்த மாற்றம் நுட்பமானதாகத் தோன்றலாம், ஆனால் அதன் அரசியல் தாக்கங்கள் ஆழமானவை. ஒரு கேள்வி பிரத்தியேகமான உரிமையைத் தேடுகிறது. மற்றொன்று வரலாற்றுப் புரிதலைத் தேடுகிறது. திருகோணமலை போன்ற பகுதிகளை ஆராயும்போது இத்தகைய கண்ணோட்டம் குறிப்பாக முக்கியத்துவம் பெறுகிறது. இந்த மாவட்டத்தின் வரலாற்றை ஒரே இன அல்லது மதக் கதையாகச் சுருக்கிவிட முடியாது. பல நூற்றாண்டுகளாக, இது பௌத்த யாத்திரை, இந்து வழிபாடு, முஸ்லிம் வர்த்தக வலைப்பின்னல்கள், கொலனித்துவ இராணுவ நலன்கள், கடல்வழிப் பரிமாற்றம் ஆகியவற்றின் சந்திப்புப் புள்ளியாக இருந்து வருகிறது. தொல்லியல் சான்றுகள் தனித்தனி சமூகங்களைக் காட்டிலும், ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த வரலாறுகளையே வெளிப்படுத்துகின்றன. ஆயினும், சமகால அரசியல் பெரும்பாலும் இந்தச் சிக்கல்களை ஒற்றை உரிமைக்

கதைகளாக எளிமைப்படுத்த முயல்கிறது. ஒரு பன்மைத்துவ தொல்லியல் இந்த உந்துதலை எதிர்க்கும். அது திருகோணமலையை ஒரே வரலாற்று உரிமைக்கான சான்றாகக் கருதாமல், பல வரலாற்றுச் சந்திப்புகளின் நிலப்பரப்பாகக் கருதும்.

ஆர்.ஏ.எல்.எச். குணவர்த்தனவின் படைப்புகளிலிருந்தும் இதே போன்ற ஒரு கண்ணோட்டம் வெளிப்படுகிறது. ஆதி அடையாளங்கள் குறித்த அவரது திறனாய்வு, இலங்கை வரலாற்றெழுத்தியலில் மிக முக்கியமான தலையீடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. வரலாற்று அடையாளங்கள் நிலையானவையாகவோ அல்லது தனித்தவையாகவோ இருக்கவில்லை என்பதை குணவர்த்தன நிரூபித்தார். அவை பல நூற்றாண்டுகால ஊடாடல்கள், இடப்பெயர்வுகள், அரசியல் மாற்றங்கள், சமூகத் தழுவல்கள் ஆகியவற்றின் மூலம் தோன்றின. தொல்பொருள் சான்றுகள் இந்த விளக்கத்தை அடிக்கடி ஆதரிக்கின்றன. வடக்கும் கிழக்கும் பிரிவினையைக் காட்டிலும் இணைப்புத்தன்மையையும், பிரத்தியேகத்தன்மையைக் காட்டிலும் ஒன்றிணைப்பையும், தனிமைப்படுத்தலைக் காட்டிலும் பரிமாற்றத்தையும் வெளிப்படுத்துகின்றன. மன்னாரின் தொல்பொருள் நிலப்பரப்புகள் இதை குறிப்பாக நன்கு விளக்குகின்றன. வரலாற்று ரீதியாக, மன்னார் இலங்கையைத் தென்னிந்தியாவுடனும் பரந்த இந்தியப் பெருங்கடல் உலகுடனும் இணைக்கும் ஒரு நுழைவாயிலாகச் செயல்பட்டது. வர்த்தகம், இடப்பெயர்வு, மீன்பிடி வலைப்பின்னல்கள், மத இயக்கங்கள், கொலனித்துவ சந்திப்புகள் அனைத்தும் பொருள்சார் தடயங்களை விட்டுச் சென்றன. தொல்பொருள் சான்றுகள் பல நூற்றாண்டுகால இயக்கத்தையும் ஊடாடலையும் சுட்டிக்காட்டுகின்றன. ஆயினும், சமகால அரசியல் விவாதங்கள் பெரும்பாலும் தெளிவான பிராந்தியக் கதைகளைத் தேடுகின்றன. தொல்பொருள் பதிவே அத்தகைய உறுதியை எதிர்க்கிறது. அது ஒரு பிராந்தியத்தை அடைப்பதன் மூலம் அல்ல, மாறாக புழக்கத்தின் மூலம் வடிவமைக்கப்பட்டதாக வெளிப்படுத்துகிறது. குணவர்த்தனவின் ஆய்வியல் சிந்தனைகளால் உந்தப்பட்ட ஒரு பன்மைத்துவத் தொல்லியல், தொல்பொருள் சான்றுகளை ஒற்றை உரிமைக்கான ஆதாரமாக மாற்றும் சோதனையை எதிர்க்கும். மாறாக, அது வரலாற்று நிலப்பரப்புகளின் அடுக்குத் தன்மையை வலியுறுத்தும். தலங்கள், பிரத்தியேகமான பிராந்திய உரிமைக் கோரிக்கைகளின் அடையாளங்களாகப் புரிந்துகொள்ளப்படாமல், பகிரப்பட்ட வெளியில் ஒன்றையொன்று வெட்டும் பல வரலாற்றுப் பாதைகளின் சான்றுகளாகப் புரிந்துகொள்ளப்படும்.

இலங்கையை ஓர் ஒப்பீட்டுக் கட்டமைப்பிற்குள் வைத்துப் பார்க்கும்போது, இத்தகைய அணுகுமுறையின் தேவை இன்னும் தெளிவாகிறது. உலகெங்கிலும் உள்ள போருக்குப் பிந்தைய சமூகங்கள், தொல்லியல் மற்றும் பாரம்பரியம் தொடர்பாக இதே போன்ற சவால்களை எதிர்கொண்டுள்ளன. பொஸ்னியா ஹெர்சகோவினாவில், யூகோஸ்லாவியப் போர்களுக்குப் பிறகு, தொல்லியல், வரலாற்றுத் தலங்கள் போட்டி இனக் கதையாடல்களில் ஆழமாகப் பின்னிப் பிணைந்தன. பிராந்திய சட்டபூர்வ உரிமைக்கான கோரிக்கைகளை ஆதரிப்பதற்காக மத நினைவுச்சின்னங்கள், இடைக்காலத் தலங்கள், கலாசாரப் பாரம்பரியம் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. ஆயினும், போருக்குப் பிந்தைய சில பாரம்பரிய முன்னெடுப்புகள், இனப் பிரத்தியேகத்தை விட, பகிரப்பட்ட வரலாறுகளை வேண்டுமென்றே வலியுறுத்த முற்பட்டன. மோஸ்டாரில் உள்ள பழைய பாலத்தின் (*Stari Most*) புனரமைப்பு, அது அரசியல் பிளவுகளைத் தீர்த்ததால் அல்ல, மாறாக வரலாற்று ரீதியான ஒன்றிணைப்பை முன்னிலைப்படுத்தியதால் குறியீட்டு முக்கியத்துவம் பெற்றது.

வட அயர்லாந்தில், பிரிட்டிஷ், ஐரிஷ், புராட்டஸ்தாந்து, கத்தோலிக்க வரலாறுகளுடன் தொடர்புடைய பாரம்பரியத் தலங்கள் தொடர்ந்து அரசியல் விவாதங்களை உருவாக்குகின்றன. பாரம்பரியப் பயிற்சியாளர்கள், ஒருமித்த கருத்தைக் கோராமல், போட்டிக் கதையாடல்களை அங்கீகரிக்கும் அணுகுமுறைகளை அதிகளவில் நாடி வருகின்றனர். ஒரே ஒரு அதிகாரபூர்வமான வரலாற்றை நிறுவுவதிலிருந்து, பல வரலாறுகள் இணைந்து வாழக்கூடிய இடங்களை உருவாக்குவதை நோக்கி இதன் நோக்கம் மாறியுள்ளது.

தென்னாபிரிக்கா மற்றொரு படிப்பினையான ஒப்பீட்டை வழங்குகிறது. நிறவெறிக்குப் பிறகு, பாரம்பரிய நிறுவனங்கள், சில வரலாறுகளுக்கு நீண்டகாலமாக முன்னுரிமை அளித்து, மற்றவற்றை ஓரங்கட்டி வந்த ஒரு தேசிய புனைவை மாற்றியமைக்கும் சவாலை எதிர்கொண்டன. பழங்குடி வரலாறுகள், தொழிலாளர் வரலாறுகள், முன்னர் அதிகாரபூர்வ பதிவுகளிலிருந்து விலக்கப்பட்டிருந்த அன்றாட அனுபவங்களை மீட்டெடுப்பதற்கான பரந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக தொல்லியல் ஆனது. முக்கியமாக, பாரம்பரியத்தை வரையறுக்கும் அதிகாரம் முதலில்

யாரிடம் இருந்தது என்ற கேள்வியை இந்தச் செயல்முறை உள்ளடக்கியிருந்தது.

மோதலுக்குப் பிந்தைய சமூகங்களில் தொல்லியல், ஒற்றை மூலங்களைத் தேடுவதிலிருந்து விலகி, வரலாற்றுப் பன்மைத்துவத்தை அங்கீகரிப்பதை நோக்கி நகரும்போது மிகவும் பயனுள்ளதாக அமைகிறது என்பதை இந்த எடுத்துக்காட்டுகள் சுட்டிக்காட்டுகின்றன. இத்தகைய அணுகுமுறை, விமர்சனப் பாரம்பரிய ஆய்வுகளில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்களுடன் நெருக்கமாக ஒத்துப்போகிறது. பாரம்பரியத்தை, நிலையான வரலாற்று உண்மைகளைப் பாதுகாப்பதாகப் புரிந்துகொள்ளாமல், அது ஒரு தொடர்ச்சியான பேச்சுவார்த்தைச் செயல்முறையாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று அறிஞர்கள் வாதிடுகின்றனர். பாரம்பரியம் என்பது வெறுமனே மரபுரிமையாகப் பெறப்படுவதில்லை. அது சமூகங்கள், நிறுவனங்கள், நிலப்பரப்புகளுக்கு இடையிலான உறவுகள் மூலம் தொடர்ச்சியாக உருவாக்கப்படுகிறது. லாராஜேன் ஸ்மித்தின் 'அங்கீகரிக்கப்பட்ட மரபுரிமை உரையாடல்' (*Authorized Heritage Discourse*) குறித்த விமர்சனம், பாரம்பரிய நிறுவனங்கள் எவ்வாறு பெரும்பாலும் நிபுணத்துவ அறிவு, நினைவுச்சின்னக் கட்டடக்கலை, அரசுப் புனைவுகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது. மேலும் ஜனநாயக அணுகுமுறையானது, பாரம்பரிய உருவாக்கத்தில் பங்கேற்கும் குரல்களின் வீச்சை விரிவுபடுத்தும். உள்ளூர் நினைவுகள், வாய்மொழி வரலாறு, சடங்குப் பழக்கவழக்கங்கள், சமூக அறிவு ஆகியவை துணைச் சேர்க்கைகளாக இல்லாமல், தொல்பொருள் விளக்கத்தின் ஒருங்கிணைந்த கூறுகளாக மாறும். இக்கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ள இனவரைவியல் சான்றுகள், அத்தகைய ஓர் அணுகுமுறையை வலுவாக ஆதரிக்கின்றன. உள்ளூர் சமூகங்கள் வரலாற்று நிலப்பரப்புகள் குறித்த நுட்பமான புரிதல்களை எந்த அளவிற்கு ஏற்கனவே கொண்டிருக்கின்றன என்பது மிகவும் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும். விவசாயிகள், மீனவர்கள், ஆசிரியர்கள், மதத் தலைவர்கள், கிராமப் பெரியவர்கள் பெரும்பாலும் இடப்பெயர்கள், புனிதத் தலங்கள், இடப்பெயர்வு வரலாறுகள், குடியேற்ற முறைகள், போர்க்கால மாற்றங்கள் குறித்து விரிவான அறிவைக் கொண்டுள்ளனர். இந்த வகையான அறிவு, அதிகாரபூர்வ பாரம்பரியக் கட்டமைப்புகளுக்குள் பெரும்பாலும் புலப்படாமல் இருக்கிறது.

மன்னாரைச் சேர்ந்த ஒரு முதிய செயற்பாட்டாளர் இதை தனது விசனமாக முன்வைத்தார்: "தொல்பொருள் ஆய்வாளர்கள் சில வாரங்கள் அல்லது சில மாதங்களுக்கு வருகிறார்கள். சமூகங்கள் தலைமுறைகளாக இந்த இடங்களுடன் வாழ்கின்றன. உள்ளூர் மக்களுக்கு எல்லாம் தெரியும் என்று இதற்கு அர்த்தமல்ல. ஆனால், வெளியாட்களுக்குத் தெரியாத விஷயங்கள் அவர்களுக்குத் தெரியும் என்பதே இதன் பொருள். பாரம்பரியம் என்பது, ஒரு வகை அறிவை தானாகவே உயர்ந்ததாகக் கருதுவதற்குப் பதிலாக, பல்வேறு வகையான அறிவுகளுக்கு இடையே உரையாடல்களை உருவாக்க வேண்டும்." அவரது கூற்று அறிவார்ந்த நீதியின் ஒரு பரந்த கொள்கையைப் பிரதிபலிக்கிறது. தொல்பொருளியலை கொலனித்துவ நீக்கம் செய்வதற்கு, வரலாற்று விவரிப்புகளைப் பன்முகப்படுத்துவதை விட மேலான ஒன்று தேவைப்படுகிறது. அது, வரலாற்று அறிவின் பல வடிவங்களை முறையானவையாக அங்கீகரிப்பதைக் கோருகிறது.

இந்தச் சவால் இலங்கையில் குறிப்பாகப் பொருத்தமானதாக இருக்கிறது, ஏனெனில் பல உள்ளூர் வரலாறுகள் முதன்மையாக வாய்மொழி மரபுகளின் மூலமே நிலைத்திருக்கின்றன. மன்னார் கடற்கரையோர மீனவ சமூகங்கள், இடப்பெயர்வுப் பாதைகள், வர்த்தகத் தொடர்புகள் குறித்த நினைவுகளைப் பேணி வருகின்றன. முல்லைத்தீவு கிராம மக்கள், நிலத்துடனான உறவுகளை மாற்றியமைத்த இடப்பெயர்வுகளின் வரலாறுகளை விவரிக்கின்றனர். கோயில் அறங்காவலர்கள், அதிகாரபூர்வ தொல்பொருள் அறிக்கைகளில் அரிதாகவே தோன்றும் புனித நிலப்பரப்புகள் தொடர்பான விவரிப்புகளைப் பாதுகாக்கின்றனர். இந்த அறிவு வடிவங்கள் தொல்பொருளியலுக்கு மாற்றானவை அல்ல, ஆனால் அவை இன்றியமையாத நிரப்பிகளாகும்.

வால்டர் மிக்னோலோ (*Walter Mignolo*), அனிபால் குயிஜானோ (*Aníbal Quijano*) ஆகியோரின் ஆய்வுகள் இங்கு கவனிப்புக்குரியன. கொலனித்துவம் அரசியல் நிறுவனங்கள் மூலம் மட்டுமல்ல, அறிவுப் படிநிலைகள் மூலமாகவும் நிலைத்திருக்கிறது என்பதை இருவரும் வலியுறுத்துகின்றனர். சில அறிதல் முறைகள் அதிகாரபூர்வமானவையாகின்றன. மற்றவை ஓரங்கட்டப்படுகின்றன. எனவே, உண்மையான கொலனித்துவநீக்க தொல்பொருளியல், ஓரங்கட்டப்பட்ட சமூகங்களை ஏற்கனவே உள்ள கட்டமைப்புகளில் வெறுமனே

இணைத்துக்கொள்வதற்குப் பதிலாக, இந்தப் படிநிலைகளைக் கலைக்க முற்படும். இத்தகைய அணுகுமுறை இலங்கையின் மரபுரிமை நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும். தொல்பொருள் திட்டங்கள் குறித்து சமூகங்களிடம் வெறுமனே கலந்தாலோசிக்கப்படுவதுடன் நின்றுவிடாது. ஆய்வு முன்னுரிமைகளை வரையறுத்தல், கண்டுபிடிப்புகளை விளக்குதல், தலங்களை நிர்வகித்தல் மற்றும் பொது விவரிப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் அவர்கள் தீவிரமாகப் பங்கேற்பார்கள். தொல்பொருளியல் என்பது சுரண்டல் சார்ந்த நடைமுறையாக இல்லாமல், ஒரு கூட்டு முயற்சியாக மாறும். முல்லைத்தீவைச் சேர்ந்த ஓர் இளம் ஆர்வலர் இந்தக் கண்ணோட்டத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்: "பெரும்பாலும், மரபுரிமை என்பது சமூகங்களுக்கு எதிராகச் செய்யப்படும் ஒன்றாகவே உள்ளது. எதிர்காலம் என்பது சமூகங்களுடன் இணைந்து மரபுரிமையைப் பேணுவதாக அமைய வேண்டும். மக்கள், அதன் விளைவின் மீது மட்டுமல்லாமல், அந்தச் செயல்முறையின் மீதும் உரிமையுணர்வை உணரும்போது, தலங்களைப் பாதுகாக்க அதிக வாய்ப்புள்ளது." அவரது அவதானிப்பு, சமூகத் தொல்லியலுக்குள் வளர்ந்து வரும் ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்கிறது. பங்கேற்பு என்பது வெறும் நடைமுறை நியாயம் சார்ந்த விஷயம் மட்டுமல்ல. அது நிலைத்தன்மை சார்ந்த விஷயமும் கூட. உள்ளூர் சமூகங்கள் தடைகளாகக் கருதப்படாமல், பங்காளிகளாக அங்கீகரிக்கப்படும்போது பாரம்பரிய மேலாண்மை மிகவும் திறம்பட அமைகிறது.

நெறிமுறைப் பொறுப்புடைமை என்ற கருத்து மற்றொரு முக்கியமான கட்டமைப்பை வழங்குகிறது. பொறுப்புடைமை என்பது உரிமையிலிருந்து வேறுபட்டது. உரிமை என்பது பிரத்தியேகக் கட்டுப்பாட்டைக் குறிக்கிறது. பொறுப்புடைமை என்பது கடமையுணர்வைக் குறிக்கிறது. தொல்லியலுக்குப் பயன்படுத்தப்படும்போது, பொறுப்புடைமை என்பது, யாருக்கு வலுவான வரலாற்று உரிமை கோரல் உள்ளது என்ற கேள்விகளிலிருந்து கவனத்தை விலக்கி, வரலாற்று நிலப்பரப்புகளை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்ற கேள்விகளின் பக்கம் திருப்புகிறது. போட்டியிடும் சமூகங்கள் ஒரே தலத்திற்கு வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுக்கக்கூடிய போருக்குப் பிந்தைய சமூகங்களில் இந்த வேறுபாடு குறிப்பாக முக்கியமானது. பகிரப்பட்ட பொறுப்புடைமை, ஒவ்வொரு வரலாற்று விளக்கத்திலும் உடன்பாடு தேவைப்படாமல், சகவாழ்விற்கான இடத்தை உருவாக்குகிறது.

குருந்தூர்மலை, கோணேஸ்வரம், கதிர்காமம் அல்லது மன்னாரில் உள்ள பண்டைய துறைமுகக் குடியிருப்புகள் போன்ற தலங்களில் இத்தகைய அணுகுமுறை எவ்வாறு செயல்படக்கூடும் என்பதை ஒருவர் கற்பனை செய்து பார்க்கலாம். இந்தத் தலங்களை ஒரே ஒரு உரிமைக் கதையை ஆதரிக்கும் சான்றுகளாகக் கருதுவதற்குப் பதிலாக, அவை பல வரலாறுகளைக் கொண்ட அடுக்கு நிலப்பரப்புகளாக விளக்கப்படலாம். பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, கொலனித்துவ, உள்ளூர் வரலாறுகள் ஒரே விளக்கக் கட்டமைப்பிற்குள் இணைந்து வாழ முடியும். இத்தகைய அணுகுமுறை கருத்து வேறுபாடுகளை முற்றிலுமாக நீக்காது. ஆனால் கருத்து வேறுபாடுகளே மரபின் ஒரே ஒழுங்கமைப்புக் கொள்கையாக மாறுவதைத் தடுக்கும். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு மதத் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்: "ஒவ்வொரு சமூகமும் ஒரு இடத்தைப் பற்றி ஒரே கதையைச் சொல்லாது. அது இயல்பானது. அனைவரையும் ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்துவது இலக்காக இருக்கக்கூடாது. அந்த இடத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில், வெவ்வேறு சமூகங்கள் அந்த வேறுபாடுகளுடன் வாழ முடியும் என்பதை உறுதி செய்வதே இலக்காக இருக்க வேண்டும்." அவரது கருத்து, போருக்குப் பிந்தைய மரபு குறித்த மிகவும் நடைமுறை சார்ந்த பார்வையைச் சுட்டிக்காட்டுகிறது. நல்லிணக்கத்திற்கு ஒருமித்த கருத்து தேவையில்லை. கருத்து வேறுபாடுகள் பரஸ்பர அங்கீகாரத்துடன் இணைந்து வாழக்கூடிய வழிமுறைகள் அதற்குத் தேவை.

இந்தப் பார்வை, மோதல் நினைவுகள் குறித்த சமீபத்திய ஆய்வுகளுடன் வலுவாக ஒத்துப் போகிறது. சாண்டல் மௌஃப் (*Chantal Mouffe*), அன்னா சென்டோ புல் (*Anna Cento Bull*) போன்ற அறிஞர்கள், ஜனநாயக சமூகங்கள் மோதலை முற்றிலுமாக ஒழிக்க முற்படக்கூடாது என்று வாதிடுகின்றனர். மாறாக, போட்டியிடும் கதைகள் வன்முறையின்றி இணைந்து வாழக்கூடிய சூழல்களை அவை உருவாக்க வேண்டும். தொல்பொருள் நிலப்பரப்புகள் பிரத்தியேக உரிமைக்கான சான்றுகளாகக் கருதப்படாமல், உரையாடலுக்கான இடங்களாக விளக்கப்படும் பட்சத்தில், அத்தகைய ஒரு திட்டத்திற்கு அவை பங்களிக்க முடியும். தொல்பொருள் பதிவுகளே இந்தச் சாத்தியக்கூற்றை ஆதரிக்கின்றன. தனித்த நாகரிகங்களை வெளிப்படுத்துவதற்கு மாறாக, இலங்கையின் வரலாறு மீண்டும் மீண்டும் ஊடாட்டம், தகவமைப்பு மற்றும் சகவாழ்வை நிரூபிக்கிறது. துறைமுகங்கள் இந்தியப் பெருங்கடல் நெடுகிலும் உள்ள பல்வேறு சமூகங்களை இணைத்தன. சமய மரபுகள் ஒன்றையொன்று

பாதித்தன. வர்த்தகப் பாதைகள் நடமாட்டத்திற்கும் பரிமாற்றத்திற்கும் வழிவகுத்தன. குடியேற்ற முறைகள் தனிமைப்படுத்தலைக் காட்டிலும் இயங்குதன்மையைப் பிரதிபலித்தன. டபிள்யூ.ஐ. சிறிவீரவின் ஆய்வுப் பணி இங்கு மிகவும் மதிப்புமிக்கது. ஏனெனில் அது இந்த பொருள்சார்ந்த ஊடாட்டச் செயல்முறைகளை முன்னிலைப்படுத்துகிறது. பொருளாதார வரலாறு, நீர்ப்பாசன அமைப்புகள், குடியேற்ற முறைகள் குறித்த அவரது ஆய்வுகள், போட்டியைப் போலவே ஒத்துழைப்பாலும் வடிவமைக்கப்பட்ட வரலாற்று நிலப்பரப்புகளை வெளிப்படுத்துகின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, தொல்லியல் என்பது பிரத்தியேகத்தன்மையைப் பற்றிய ஆய்வாக இல்லாமல், ஒன்றோடொன்று இணைந்திருப்பதைப் பற்றிய ஆய்வாக மாறுகிறது.

போருக்குப் பிந்தைய இலங்கையில் இதன் தாக்கங்கள் குறிப்பிடத்தக்கவை. மரபுரிமை என்பது எல்லைகளை வலுப்படுத்தலாம் அல்லது இணைப்புகளை வெளிப்படுத்தலாம். தொல்லியல் என்பது உரிமையின் மொழியாகவோ அல்லது சந்திப்பின் மொழியாகவோ மாறலாம். இந்தத் தேர்வு தொல்பொருள் சான்றுகளால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. அந்தச் சான்றுகள் எவ்வாறு விளக்கப்பட்டு, பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்தே அது அமைகிறது. மட்டக்களப்பைச் சேர்ந்த ஓர் ஆய்வாளர் இந்தச் சவாலைச் சுருக்கமாக இவ்வாறு குறிப்பிட்டார்: "கடந்த காலம் மாறாது. ஆனால், கடந்த காலத்தைப் பற்றி நாம் சொல்லும் கதைகள் மாறக்கூடும். தொல்லியலின் எதிர்காலம், நாம் எந்தக் கதைகளைச் சொல்லத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதைப் பொறுத்தே அமைகிறது." அவரது கூற்று இந்தப் பகுதியின் பரந்த வாதத்தைப் படம்பிடிக்கிறது. தொல்லியல் என்பது ஒருபோதும் வரலாற்றை மீட்டெடுப்பது மட்டுமல்ல. அது எதிர்காலங்களைக் கற்பனை செய்வதும் ஆகும். தொல்பொருள் நிலப்பரப்புகள் விளக்கப்படும் விதம், சமூகங்கள் தங்களுக்குரிய இடம், சகவாழ்வு, அரசியல் சமூகம் ஆகியவற்றை எவ்வாறு புரிந்துகொள்கின்றன என்பதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஒரு பன்மைத்துவ தொல்பொருள் ஆய்வு என்பது, ஒற்றை மூலங்கள் மற்றும் பிரத்தியேக உரிமைகளுக்கான தேடலைக் கடந்து செல்லும். அது வரலாற்றுச் சிக்கல்தன்மை, பகிரப்பட்ட நிலப்பரப்புகள் மற்றும் அறநெறி சார்ந்த பொறுப்புடைமை ஆகியவற்றை வலியுறுத்தும். வடக்கும் கிழக்கும் ஒரே அதிகாரபூர்வமான வரலாற்றைக் கொண்டிருக்காமல், பல வரலாறுகளைக் கொண்டிருக்கின்றன என்பதை அது அங்கீகரிக்கும். அது சமூகங்களை மரபுரிமை நிர்வாகத்தின் செயலற்ற அங்கங்களாகக் கருதாமல், அறிவு உற்பத்தியில் பங்காளர்களாகக் கருதும். மிக முக்கியமாக, அது தொல்பொருள் ஆய்வை, யார் தங்களுக்குரியவர் என்பதை நிரூபிக்கும் ஒரு கருவியாகப் பார்க்காமல், காலப்போக்கில் வெவ்வேறு சமூகங்கள் எவ்வாறு தங்களுக்குரிய இடத்தைப் பெற்றிருந்தன, ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருந்தன, நிலப்பரப்பை மாற்றியமைத்தன என்பதை ஆராய்வதற்கான ஒரு வழியாகப் புரிந்துகொள்ளும். அத்தகைய தொல்பொருள் ஆய்வு அனைத்து அரசியல் கருத்து வேறுபாடுகளையும் தீர்த்துவிடாது. அது நினைவகம், நிலப்பரப்பு, அடையாளம் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பதற்றங்களையும் அகற்றாது. ஆயினும், அந்தப் பதற்றங்களை மிகவும் நேர்மையாகவும் ஜனநாயக ரீதியாகவும் கையாளக்கூடிய சூழல்களை அது உருவாக்கும். பல தசாப்த கால மோதல்களிலிருந்து வெளிவரும் ஒரு சமூகத்தில், இதுவே தொல்பொருள் ஆய்வின் மிக முக்கியமான பங்களிப்புகளில் ஒன்றாக இருக்கலாம்.

இறுதியில், இலங்கையில் தொல்லியலின் எதிர்காலம், அது முதன்மையாகப் போட்டியிடும் உரிமைகோரல்களுக்குத் தீர்ப்பளிக்கும் ஒரு கருவியாக நீடிக்கிறதா அல்லது பகிரப்பட்ட வரலாறுகளைப் புரிந்துகொள்வதற்கான ஒரு தளமாக மாறுகிறதா என்பதைப் பொறுத்தே அமைகிறது. முதல் பாதை, தீவின் நவீன வரலாற்றை வடிவமைத்த பிளவுகளை மீண்டும் உருவாக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. இரண்டாவது பாதை அந்தப் பிளவுகளை அழிப்பதில்லை, ஆனால் அவற்றை வித்தியாசமான முறையில் எதிர்கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது. அப்போது தொல்லியல், கடந்த காலத்திற்கான போராட்டங்களில் ஓர் ஆயுதமாக இல்லாமல், அனைவரையும் உள்ளடக்கிய எதிர்காலங்களைக் கற்பனை செய்வதற்கான ஒரு வளமாக மாறுகிறது.

நிறைவுக் குறிப்புகள்

போருக்குப் பிந்தைய இலங்கையில் தொல்லியலை, பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு தொழில்நுட்பப் பயிற்சியாகவோ அல்லது பண்டைய சமூகங்களை மறுகட்டமைப்பதற்கான ஓர் அறிவார்ந்த முயற்சியாகவோ மட்டும் புரிந்துகொள்ள முடியாது என்று இந்தக் கட்டுரை வாதிட்டுள்ளது. தீவின் தீர்க்கப்படாத அரசியல் கேள்விகள் தொடர்ந்து விவாதிக்கப்படும் களங்களில் ஒன்றாக

தொல்லியல் மாறியுள்ளது. அகழ்வாராய்ச்சிகள், பாரம்பரியத் தலங்கள், புனித நிலப்பரப்புகள், பாதுகாப்பு மண்டலங்கள் பற்றிய விவாதங்களுக்கு அடியில், சேர்ந்திருத்தல், சட்டபூர்வமான தன்மை, இறையாண்மை, நினைவகம், அங்கீகாரம் ஆகியன தொடர்பான ஆழமான போராட்டங்கள் உள்ளன. தொல்லியல் முக்கியத்துவம் பெறுவது, பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஓர் இடத்தில் யார் வாழ்ந்தார்கள் என்று அது நமக்குச் சொல்வதால் அல்ல மாறாக, அந்த வரலாற்று இருப்புகள் இன்றைய அரசியல் வாழ்வில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று சமகால சமூகங்கள் தொடர்ந்து கேள்வி எழுப்புவதால்தான். வடக்கும் கிழக்கும் இந்த யதார்த்தத்தை ஒரு குறிப்பிட்ட தெளிவுடன் வெளிப்படுத்துகின்றன. இங்கே, போர், இடப்பெயர்வு, இராணுவமயமாக்கல், சர்ச்சைக்குரிய இறையாண்மை, போட்டி நினைவுகள், சீரற்ற போருக்குப் பிந்தைய புனரமைப்பு ஆகியவற்றால் குறிக்கப்பட்ட நிலப்பரப்புகளுக்குள் தொல்லியல் நிலவுகிறது. பண்டைய இடிபாடுகள் இந்த யதார்த்தங்களுக்கு வெளியே நிற்பதில்லை. அவை அவற்றுக்குள் உள்வாங்கப்படுகின்றன. தொல்லியல் தலங்கள் பிராந்திய உரிமைகோரல்கள், அரசு அதிகாரம், மதக் கதைகள், தேசிய அடையாளம் ஆகியவற்றுடன் இணைக்கப்படுகின்றன. இதன் விளைவாக, பரந்த அரசியல் கேள்விகள் வெளிப்படுத்தப்படும் ஒரு மொழியாகத் தொல்லியல் மாறுகிறது. இந்தக் கட்டுரையிலிருந்து வெளிப்படும் முக்கிய பாடங்களில் ஒன்று, அரசியல்வாதிகள் தொல்லியலிடமிருந்து எதிர்பார்க்கும் உறுதியை அது அரிதாகவே வழங்குகிறது என்பதாகும்

தொல்லியல் பதிவுகள் பெரும்பாலும் திட்டவட்டமான உரிமைகோரல்களைப் பின்தொடர்வதற்காக அணிதிரட்டப்படுகின்றன; தோற்றம், உரிமை, முன்னுரிமை, தொடர்ச்சி, சொந்தம் குறித்த உரிமைகோரல்கள். இருப்பினும், தொல்லியல் சான்றுகளே அத்தகைய உறுதியை மீண்டும் மீண்டும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன. வரலாற்றுப் பதிவில் ஒருவர் எவ்வளவு ஆழமாகச் செல்கிறாரோ, அவ்வளவு சிக்கல்கள் வெளிப்படுகின்றன. தொல்பொருள் நிலப்பரப்புகள் நிலைத்தன்மையை விட இயக்கத்தையும், தனிமையை விட இடைவினையையும், தூய்மையை விட கலப்பினத்தன்மையையும், பிரத்தியேக உரிமையை விட ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த வரலாறுகளையும் வெளிப்படுத்துகின்றன. இந்தப் பார்வை இலங்கைக்கு மட்டுமே உரியதல்ல. உலகம் முழுவதும், தொல்லியல் அடிக்கடி தேசியவாதத் திட்டங்களில் இழுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இஸ்ரேல் - பலஸ்தீனத்தில், தொல்பொருள் எச்சங்கள் வரலாற்றுச் சட்டபூர்வத்தன்மைக்கான போட்டி உரிமைகளுடன் பின்னிப் பிணைந்துள்ளன. இந்தியாவில், தொல்பொருள் விளக்கங்கள் மத தேசியவாதம், பிராந்திய உரிமை குறித்த விவாதங்களை வடிவமைத்துள்ளன. பால்கன் பகுதிகளில், தொல்பொருள் தலங்கள் இன மோதல்களிலும் போருக்குப் பிந்தைய தேசத்தைக் கட்டியெழுப்புவதிலும் தொடர்புபடுத்தப்பட்டன. வட அமெரிக்கா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து முழுவதும் உள்ள பழங்குடிச் சமூகங்கள், பழங்குடி வரலாறுகளைப் புறக்கணித்த அரசால் கட்டுப்படுத்தப்பட்ட தொல்பொருள் விவரிப்புகளுக்குச் சவால் விடுத்துள்ளன. இதேபோன்ற போக்குகளை துருக்கி, சைப்ரஸ், பொஸ்னியா, கொசோவோ உள்ளிட்ட போருக்குப் பிந்தைய எண்ணற்ற பிற சூழல்களிலும் காண முடிகிறது.

இந்த எடுத்துக்காட்டுகள் காட்டுவது என்னவென்றால், தொல்லியல் என்பது கடந்த காலத்தைப் பற்றியது மட்டுமல்ல; சமகால உரிமைகளுக்கு சமூகங்கள் வரலாற்று அடித்தளங்களைத் தேடுவதால் அது அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறுகிறது என்பதையே. இடிபாடுகளுக்கான போராட்டம் என்பது இறுதியில் சட்டபூர்வத்தன்மைக்கான போராட்டமாகும். ஆயினும், சர்வதேச அனுபவம் வேறொன்றையும் காட்டுகிறது. தொல்லியல் அரிதாகவே அரசியல் சர்ச்சைகளைத் தீர்க்கிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தொல்பொருள் சான்றுகள் அரசியல் விவரிப்புகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, ஏற்கனவே உள்ள அரசியல் விவரிப்புகளில் உள்வாங்கப்படுகின்றன. அகழ்வாராய்ச்சிகள் புதிய விளக்கங்களை அளிக்கின்றன. ஆனால் அவை அரிதாகவே இறுதிப் பதில்களைத் தருகின்றன. வரலாற்றுச் சான்றுகள் சிக்கலான தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டலாம், ஆனால் அவற்றால் சமகால அரசியல் உரிமைகளைத் தீர்மானிக்க முடியாது. இந்த வேறுபாடு மிக முக்கியமானது.

தேசியவாத அரசியலின் நீடித்த தவறுகளில் ஒன்று, வரலாற்று முன்னுரிமை தானாகவே சமகால உரிமையாக மாறிவிடும் என்ற அனுமானமாகும். இந்த அனுமானம் உலகம் முழுவதும் வெவ்வேறு வடிவங்களில் காணப்படுகிறது. தாங்கள் முதலில் வந்ததாகவும், முன்னதாகவே குடியேறியதாகவும்,

நினைவுச்சின்னங்களைக் கட்டியதாகவும், இராச்சியங்களை நிறுவியதாகவும், அல்லது மற்றவர்களுக்கு முன்பாகப் பிரதேசங்களைக் கைப்பற்றியதாகவும் சமூகங்கள் நிரூபிக்க முற்படுகின்றன. இத்தகைய வாதங்கள் புறநிலையானவையாகத் தோன்றுவதால் கவர்ச்சிகரமானவையாக இருக்கின்றன. வரலாறு உரிமையைத் தீர்மானிக்க முடிந்தால், அரசியல் கேள்விகள் வரலாற்றுக் கேள்விகளாக மாறிவிடுகின்றன. பிரச்சினை என்னவென்றால், வரலாறு அரிதாகவே இத்தகைய நேரடியான முறையில் செயல்படுகிறது.

மனித சமூகங்கள் இடப்பெயர்வு, பரிமாற்றம், வெற்றி, தழுவல், உள்ளிணைப்பு, கலப்புத் திருமணம், சகவாழ்வு, உருமாற்றம் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான பிரதேசங்கள் வெவ்வேறு காலகட்டங்களில் பல சமூகங்களால் வசிப்பிடமாகக் கொள்ளப்பட்டு, பயன்படுத்தப்பட்டு, போட்டியிடப்பட்டு, உருமாற்றப்பட்டுள்ளன என்பதை தொல்பொருள் சான்றுகள் பெருமளவில் நிரூபிக்கின்றன. வரலாற்று நிலப்பரப்புகள் அரிதாகவே ஒற்றைப்படையானவை. அவை அடுக்குகள் கொண்டவை. வடக்குக் கிழக்கின் தொல்பொருள் பதிவுகள், பௌத்த வரலாறுகள், இந்து வரலாறுகள், இஸ்லாமிய வரலாறுகள், கிறிஸ்தவ வரலாறுகள், பழங்குடி வரலாறுகள், கடல்சார் வரலாறுகள், கொலனித்துவ வரலாறுகள் மற்றும் நேர்த்தியான இனப் பிரிவுகளுக்குள் அடக்க முடியாத எண்ணற்ற உள்ளூர் வரலாறுகளை வெளிப்படுத்துகின்றன. துறைமுகங்கள் இத்தீவை தென்னிந்தியா, தென்கிழக்கு ஆசியா, அரேபியா ஆகியவற்றுடனும் அதற்கப்பால் உள்ள பகுதிகளுடனும் இணைத்தன. புனித யாத்திரைப் பாதைகள் மொழி, அரசியல் எல்லைகளைக் கடந்தன. வர்த்தக வலைப்பின்னல்கள் நடமாட்டத்திற்கும் கலாசாரப் பரிமாற்றத்திற்கும் வழிவகுத்தன. சமய மரபுகள் ஒன்றோடொன்று கலந்து பரிணமித்தன. குடியேற்ற முறைகள் காலப்போக்கில் மாறின. எனவே, தொல்பொருள் பதிவுகள் தனித்தன்மையைக் காட்டிலும் சிக்கலான தன்மையையே வெளிப்படுத்துகின்றன.

கணநாத் ஒபயசேகர, ஆர்.ஏ.எல்.எச். குணவர்த்தன, டபிள்யூ.ஐ. சிறிவீர ஆகியோர் தொடர்ந்து வலியுறுத்திய பாடம் இதுவே ஆகும். நவீன இன அடையாளங்களை பண்டைய வரலாற்றின் மீது பின்னோக்கிச் செலுத்தும் முயற்சிகளை ஒபயசேகர மீண்டும் மீண்டும் எதிர்த்தார். அடையாளங்கள் ஆதிகாலத் தொடர்ச்சியின் மூலம் அல்ல, மாறாக வரலாற்றுச் செயல்முறைகளின் மூலமே தோன்றின என்பதை குணவர்த்தன நிரூபித்தார். பொருளாதார அமைப்புகள், வர்த்தக வலைப்பின்னல்கள், நீர்ப்பாசன உட்கட்டமைப்புகள் மற்றும் சமூக ஊடாட்டங்கள் ஆகியவை வரலாற்றுச் சமூகங்களை எவ்வாறு வடிவமைத்தன என்பதை சிறிவீர காட்டினார். ஒட்டுமொத்தமாக, அவர்களின் பணி, காலத்தால் அழியாத உரிமை குறித்த எளிமையான விவரிப்புகளைத் தகர்க்கிறது. அவர்களின் ஆய்வுப் புலமை, சமகால இலங்கைக்கு ஒரு முக்கியமான எச்சரிக்கையை வழங்குகிறது.

தொல்லியல், வரலாற்று உரிமையைத் தேடும் ஒரு செயலாகச் சுருக்கப்படும்போது, அது வரலாறாகச் செயல்படுவதை நிறுத்தி, ஒரு வகையான அரசியல் கட்டுக்கதையாக மாறிவிடுகிறது. நிகழ்காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கடந்த காலத்தின் சிக்கலான தன்மை எளிமைப்படுத்தப்படுகிறது. இதன் விளைவு வரலாற்றுப் புரிதலாக இல்லாமல், வரலாற்றுச் செயல் கருவியாக்கமாக மாறுகிறது. இந்தப் பார்வை, போருக்குப் பிந்தைய காலத்தில் ஈழத்தமிழ் அரசியலில் ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. வடக்குக் கிழக்கில் சிங்களபௌத்த பிராந்திய விவரிப்புகளை வலுப்படுத்தும் வகையில் தொல்லியல் சில சமயங்களில் பயன்படுத்தப்படுகிறது என்ற தமிழ்ச் சமூகங்களின் கவலை முக்கியமானது. இந்தக் கவலைகள் புறக்கணிக்கப்படக்கூடாது. அவை இடப்பெயர்வு, இராணுவமயமாக்கல், நிலத் தகராறுகள், சமமற்ற அதிகார உறவுகள், போருக்குப் பிந்தைய ஆட்சிமுறை ஆகியவற்றின் உண்மையான அனுபவங்களிலிருந்து எழுகின்றன. பல உள்ளூர் சமூகங்கள், ஒரு நிலப்பரப்பின் மீது அதிகாரம் செலுத்தப்படும் பரந்த செயல்முறைகளின் ஒரு பகுதியாகவே தொல்பொருள் தலையீடுகளை உண்மையாகவே உணர்கின்றன. இருப்பினும், இந்தக் கவலைகளை ஏற்றுக்கொள்வது, தமிழ் அரசியல்வாதிகள் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதைத் தானாகவே தீர்மானித்துவிடுவதில்லை.

ஒருவர் சவால் விட முற்படும் அதே தர்க்கத்தையே பிரதிபலிக்கும் ஒரு தூண்டுதல் உள்ளது. ஒரு வரலாற்றுப் புனைவு தொல்பொருள் ஆய்வின் மூலம் உரிமை கோரினால், அதற்குப் போட்டியான ஒரு தொல்பொருள் புனைவைக் கட்டமைப்பதே இயல்பான எதிர்வினையாக அமைகிறது. ஒரு தரப்பு உரிமைக்கான பண்டைய சான்றுகளைத் தேடினால், மற்றொரு தரப்பு அதைவிடப் பழமையான

சான்றுகளைத் தேடுவதன் மூலம் பதிலளிக்கிறது. இந்தப் போராட்டம் தொன்மைக்கான ஒரு போட்டியாக மாறுகிறது. இந்த உத்தி கவர்ச்சிகரமானதாகத் தோன்றலாம், ஆனால் இதில் குறிப்பிடத்தக்க வரம்புகள் உள்ளன.

முதலாவதாக, சமகால அரசியல் உரிமைகள் வரலாற்று முன்னுதாரணத்தைச் சார்ந்துள்ளன என்ற அடிப்படைக் கருத்தை இது ஏற்றுக்கொள்கிறது. இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், யார் முதலில் வந்தார்கள், யார் முன்னதாகக் குடியேறினார்கள், அல்லது யாருடைய இடிபாடுகள் பழமையானவை என்பது குறித்த ஒரு முடிவற்ற போட்டிக்குள் அரசியல் சிக்கிக்கொள்கிறது. தொல்பொருள் சான்றுகள் இயல்பாகவே பலவிதமான விளக்கங்களுக்கு இடமளிப்பதால், இத்தகைய போட்டிகள் அரிதாகவே தீர்வை அளிக்கின்றன.

இரண்டாவதாக, இந்த அணுகுமுறை, சிங்களபௌத்த தேசியவாதம் குறித்துப் பல அறிஞர்கள் விமர்சித்த அதே சாராம்சவாத வரலாற்றுத் தர்க்கத்தை மீண்டும் உருவாக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. தமிழ் அரசியல் தனக்கெனத் தனித்துவமான வரலாற்றுப் புனைவுகளைக் கட்டமைப்பதன் மூலம் பதிலளித்தால், அது தேசிய இனத்துவப் போட்டியின் பரந்த கட்டமைப்பை எதிர்ப்பதற்குப் பதிலாக, அறியாமலேயே அதை வலுப்படுத்தக்கூடும்.

மூன்றாவதாக, அத்தகைய அணுகுமுறை தமிழ் வரலாற்று அனுபவத்தின் உண்மையான வலிமையைக் குறைத்து மதிப்பிடுகிறது.

தமிழ் அரசியல் கோரிக்கைகளுக்கான மிகவும் வலுவான அடிப்படை, பண்டைய தொல்லியலில் மட்டுமே அடங்கியிருக்கவில்லை. அது சமூகங்களின் வாழ்வியல் வரலாற்று அனுபவங்களிலேயே அடங்கியுள்ளது. அது தொடர்ச்சியான குடியிருப்பு, சமூக நிறுவனங்கள், பண்பாட்டு நடைமுறைகள், மொழி, நினைவாற்றல், அரசியல் பங்கேற்பு, இடப்பெயர்வு, இழப்பு, பிழைப்பு, கூட்டு வாழ்க்கை ஆகியவற்றில் அடங்கியுள்ளது. சமூகங்கள் தங்களின் சட்டபூர்வ அங்கீகாரத்தைப் பழங்காலத்திலிருந்து மட்டுமே பெறுவதில்லை. அவை வாழும் சமூகங்களாகத் தங்களின் இருப்பிலிருந்தே சட்டபூர்வ அங்கீகாரத்தைப் பெறுகின்றன.

தலைமுறை தலைமுறையாக நிலத்தைப் பயிரிட்டு வரும் ஒரு குடும்பம், நூற்றாண்டுகளாகக் கடலோர வாழ்வாதாரங்களைத் தக்கவைத்து வரும் ஒரு மீனவ சமூகம், போரையும் இடப்பெயர்ச்சியையும் தாங்கிப் பிழைத்த ஒரு கிராமம், பண்பாட்டையும் நினைவுகளையும் தொடர்ந்து மீளுருவாக்கம் செய்து வரும் ஒரு மொழிச் சமூகம் ஆகியவை இந்த யதார்த்தங்களை ஆதரிக்கத் தொல்பொருள் சான்றுகளைத் திரட்ட முடியுமா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், இவை அரசியல் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. இது ஒரு மாற்று முன்னோக்கிய பாதையைச் சுட்டிக்காட்டுகிறது.

பண்டைய காலத்தின் மீதான உரிமைக்காகப் போட்டியிடுவதற்குப் பதிலாக, தமிழ் அறிவுஜீவிகள், அறிஞர்கள், செயற்பாட்டாளர்கள், நிறுவனங்கள், வடக்குக் கிழக்கின் செழுமையான, மேலும் சிக்கலான, அனைவரையும் உள்ளடக்கிய வரலாறுகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தலாம். அத்தகைய வரலாறுகள் அரசர்கள், இராஜ்ஜியங்கள், நினைவுச்சின்னங்களை மட்டுமல்லாமல், அன்றாட வாழ்க்கை, உழைப்பு, இடப்பெயர்வு, வர்த்தகம், மதம், சாதி, பாலினம், சுற்றுச்சூழல், சமூக மாற்றம் ஆகியவற்றையும் ஆவணப்படுத்தும். தேசியவாத விவரிப்புகளில் பெரும்பாலும் இடம்பெறாத மீனவர்கள், விவசாயிகள், வணிகர்கள், பணியாளர்கள், பெண்கள், இடம்பெயர்ந்த சமூகங்கள், ஒடுக்கப்பட்டோர், சாதாரண கிராமவாசிகள் ஆகியோரின் வரலாறுகளில் அவை கவனம் செலுத்தும். நடைமுறை ரீதியாக, இதற்கு வரலாற்று ஆராய்ச்சி, வாய்மொழி வரலாற்றுத் திட்டங்கள், உள்ளூர் ஆவணக்காப்பகங்கள், சமூக அருங்காட்சியகங்கள், எண்ணிம ஆவணப்படுத்தல், இனவரைவியல் ஆராய்ச்சி, தொல்பொருள் ஆய்வு, பாரம்பரியப் பாதுகாப்பு முயற்சிகள் ஆகியவற்றில் முதலீடு தேவைப்படுகிறது.

போருக்குப் பிந்தைய காலத்தின் முரண்பாடுகளில் ஒன்று, பல தமிழ்ச் சமூகங்கள் ஆவணப்படுத்தப்படாத செழுமையான வரலாற்று அறிவைக் கொண்டிருப்பதுதான். இடப்பெயர்கள், இடப்பெயர்வு வரலாறுகள், சடங்கு முறைகள், விவசாய முறைகள், புனித நிலப்பரப்புகள், போர்க்கால அனுபவங்கள் குறித்த நினைவுகளைப் பெரியவர்கள் சுமந்து செல்கின்றனர். இவை ஒரு தலைமுறைக்குள் மறைந்துவிடும் அபாயத்தில் உள்ளன. வாய்மொழி வரலாறுகள் பதிவு செய்யப்படாத போது மறைந்துவிடுகின்றன. வரலாற்று நிலப்பரப்புகள் ஆவணப்படுத்தப்படாத

போது மறைந்துவிடுகின்றன. பண்பாட்டு நினைவுகள் நிறுவனமயமாக்கப்படாத போது பலவீனமடைகின்றன.

போருக்குப் பிந்தைய பிற சமூகங்களிலிருந்து கிடைக்கும் பாடம் தெளிவாக உள்ளது. தங்கள் வரலாறுகளை ஆவணப்படுத்தத் தவறும் சமூகங்கள், மற்றவர்களே தங்களுக்காக அந்த வரலாறுகளை ஆவணப்படுத்துவார்கள் என்பதை அடிக்கடி கண்டறிகின்றன. இதன் விளைவாக, தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் மிக அடிப்படையான சவால், வெளிப்புறக் கதையாடல்களை எதிர்ப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், தனக்கான அறிவைச் சுயமாக உருவாக்குவதில்தான் உள்ளது. இதற்கு, எதிர்வினை அரசியலைக் கடந்து அறிவுசார் நிறுவனக் கட்டமைப்பை நோக்கி நகர்வது அவசியமாகும். பல்கலைக்கழகங்கள், ஆவணக் காப்பகங்கள், உள்ளூர் வரலாற்று இயக்கங்கள், பண்பாட்டு அமைப்புகள், சமூக அருங்காட்சியகங்கள், எண்ணிமக் களஞ்சியங்கள், வாய்மொழி வரலாற்றுத் திட்டங்கள், தொல்பொருள் முயற்சிகள், பல்துறை ஆராய்ச்சி மையங்கள் ஆகிய அனைத்திற்கும் முக்கிய பங்கு உண்டு. இதன் நோக்கம் ஒரு மாற்றுப் புராணத்தை உருவாக்குவதாக இருக்கக்கூடாது, மாறாக ஒரு செழுமையான வரலாற்றுப் பதிவை உருவாக்குவதாக இருக்க வேண்டும். எனவே, இந்தச் சவால் அரசியல் சார்ந்தது மட்டுமல்ல மிகமுக்கியமாக அறிவுசார்ந்தது.

நிலம், உரிமைகள், அங்கீகாரம், நீதி தொடர்பான அரசியல் போராட்டங்கள் சந்தேகமின்றித் தொடரும். ஆயினும், இந்தப் போராட்டங்களுடன் பரந்த அறிவு உற்பத்தித் திட்டமும் இணைந்திருக்க வேண்டும். வரலாற்றுப் புரிதலை அரசு நிறுவனங்கள், வெளிநாட்டு அறிஞர்கள் அல்லது தேசியவாத சக்திகளிடம் மட்டும் விட்டுவிடக் கூடாது. சமூகங்களே வரலாற்றை உருவாக்குபவர்களாக மாற வேண்டும். இந்தக் கட்டுரையிலிருந்து வெளிப்படும் மிக முக்கியமான பாடம் இதுவாகத்தான் இருக்கும்.

தொல்லியல் கைவிடப்படக்கூடாது. அதைக் கண்டு அஞ்சவும் கூடாது. கடந்த காலத்தைப் புரிந்துகொள்வதற்குத் தொல்லியல் ஒரு மதிப்புமிக்க கருவியாகவே உள்ளது. ஆனால், போருக்குப் பிந்தைய இலங்கை எதிர்கொள்ளும் அரசியல் கேள்விகளுக்குத் தொல்லியலால் மட்டும் பதிலளிக்க முடியாது. அந்தக் கேள்விகள் சகவாழ்வு, நீதி, அங்கீகாரம், சமத்துவம், ஜனநாயகப் பிணைப்பு ஆகியவை தொடர்பானவை. வடக்குக் கிழக்கின் எதிர்காலம், யார் மிக வலிமையான தொல்லியல் சான்றுகளை முன்வைக்கிறார்கள் என்பதை மட்டும் சார்ந்திருக்காது. அது, ஒரு பகிரப்பட்ட எதிர்காலம் குறித்த மிகவும் நம்பத்தகுந்த பார்வையை யார் முன்வைக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அமையும்.

இலங்கையின் தொல்பொருள் நிலப்பரப்புகள் ஒரு முரண்பாடான பாடத்தைக் கற்பிக்கின்றன. நாம் கடந்த காலத்தை எவ்வளவு கவனமாக ஆய்வு செய்கிறோமோ, அவ்வளவு அதிகமாக பிரத்தியேக உரிமை குறித்த எளிமையான விவரிப்புகளை நிலைநிறுத்துவது கடினமாகிறது. வரலாற்றுப் பதிவுகள் பல நூற்றாண்டுகளின் ஊடாடல், இடப்பெயர்வு, தகவமைப்பு, சகவாழ்வு என்பவற்றை வெளிப்படுத்துகின்றன. சமகால அரசியல் விவரிப்புகள் பெரும்பாலும் ஒப்புக்கொள்வதை விட, உலகம் மிகவும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்தது என்பதை வெளிப்படுத்துகின்றன. போருக்குப் பிந்தைய இலங்கைக்கு உள்ள சவால் என்னவென்றால், இந்த வரலாற்றுப் பார்வைகளை அரசியல் ஞானமாக மாற்ற முடியுமா என்பதுதான்.

நிலத்திற்கும் அடையாளத்திற்குமான போராட்டங்களில் தொல்பொருள் ஆய்வு முதன்மையாக ஓர் ஆயுதமாகத் தொடர்ந்து செயல்பட்டால், அது ஏற்கனவே உள்ள பிளவுகளை ஆழப்படுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளது. இருப்பினும், தொல்பொருள் ஆய்வு, பகிரப்பட்ட வரலாறுகளின் சிக்கலான தன்மையைப் புரிந்துகொள்வதற்கான ஒரு வழியாக மாறினால், அது ஒரு மாறுபட்ட எதிர்காலத்திற்குப் பங்களிக்கக்கூடும். அதில் வரலாற்று அறிவு, புறக்கணிப்பை நியாயப்படுத்துவதற்குப் பதிலாக, சகவாழ்வின் சாத்தியக்கூறுகளை விரிவுபடுத்தப் பயன்படும்.

வடக்குக் கிழக்கின் நிலப்பரப்புகளில் சிதறிக் கிடக்கும் இடிபாடுகள் எளிமையான பதில்களைத் தருவதில்லை. அதற்குப் பதிலாக அவை ஒருவேளை மிகவும் மதிப்புமிக்க ஒன்றை வழங்குகின்றன; வரலாறு என்பது சமூகங்கள் அதைப் பற்றிச் சொல்லும் கதைகளை விட எப்போதுமே மிகவும் சிக்கலானது என்ற ஒரு நினைவூட்டலை அவை தருகின்றன. சமகால இலங்கையின் முன் உள்ள பணி, அந்தச் சிக்கலான தன்மையிலிருந்து தஞ்சம் புகுவதற்குப் பதிலாக, அதனுடன் வாழக் கற்றுக்கொள்வதே.

மலையகக் கலைகளில் இராமநாடகம்

சோதிமலர் ரவீந்திரன்



கலாநிதி (திருமதி) சோதிமலர் ரவீந்திரன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் (தரம் I) பணியாற்றி வருகிறார். அத்துறையின் தலைவராகப் (20182020) பணியாற்றியுள்ள அவர், பல்கலைக்கழகத்தில் பல்வேறு நிர்வாகப் பொறுப்புகளை வகித்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே இளங்கலைமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ள அவர், நாட்டார் வழக்காற்றியல், பண்பாட்டு வரலாறு, இலங்கைத் தமிழ் இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வம் செலுத்தி வருகிறார். அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்துள்ளதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதி வருகிறார். 'காமன் கூத்தும் மலையகப் பாரம்பரியமும்' (2004) என்ற நூலினை வெளியிட்டுள்ளதுடன் 'இலங்கையின் மலையகத்தில் ஆகமநெறி சாராத வழிபாடுகள்' என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

மலையகம் இலங்கையின் நடுப்பகுதியில் அமைந்த பகுதியாகும். இந்தியாவிலிருந்து தொழில் நிமித்தம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டவர்களே மலையகத்தவராவர். இவர்கள் இந்நாட்டில் மத்திய மலைப்பகுதிகளில் குடியேற்றப்பட்டனர்.[1] மலையக மக்கள் அதிகளவிலான தெய்வ நம்பிக்கை கொண்டோராகவும் இருந்தனர். இந்தியாவிலிருந்து வந்த ஆரம்ப காலத்தில் இம்மக்கள் பெரும்பாலும் படிப்பறிவு அற்றவர்களாய் இருந்தமையால் பாரியளவில் நாட்டாரியல் சார்ந்த மரபுகளின் மீது மாத்திரமே நம்பிக்கை கொண்டிருந்தனர். மலையகத்தாரில் அதிகமானோர் இந்துக்களாகக் காணப்பட்டனர். எனவே இவர்கள் இந்துச் சடங்கு சம்பிரதாயங்களில் அதிக கவனத்தைச் செலுத்தினர். இவர்களது நம்பிக்கைகளில் இந்தியக் கலை, பண்பாட்டு அம்சங்கள் பெரிதும் தாக்கம் செலுத்துவதைக் காணலாம். இவர்களின் வழிபாடுகள், கூத்துகள், நாடகங்கள், சடங்குகள், விழாக்கள், பண்டிகைகள் என்பன இந்திய மரபினை ஒட்டியும், நாட்டாரியல் சார்ந்தனவாகவுமே உள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த இந்தியத் தமிழர்கள், தம்மோடு தம் கலையம்சங்களையும் பண்பாட்டையும் சேர்த்தே கொண்டுவந்தனர். தாம் குடியேறிய மலையகப்பகுதிகளில் தென்னிந்திய மரபிலான வழிபாடுகளைப் பரப்பத் தொடங்கினர்.

அவ்வகையில் அமைந்த வழிபாடுகளாக, மாரியம்மன் வழிபாடு, பத்தினி வழிபாடு, முருகன் வழிபாடு, ஐயனார் வழிபாடு, காளி வழிபாடு, வீரபத்திரர் வழிபாடு, கொத்தி வழிபாடு, காட்டேரி வழிபாடு, இராமர் வழிபாடு போன்ற வழிபாடுகளையும் பரப்பினர்.[2] மலையக மக்களின் வழிபாடுகளுள் இராமர் பஜனையும் குறிப்பிடத்தக்கது. மலையக மக்களின் இதிகாச, புராண ஈடுபாட்டினாலும் வாய்வழி மரபின் பயிற்சியாலும் இவ்வழிபாடு மலையகத்தில் நிலைபெற்ற வழிபாடாக அமைந்தது.

'இராமர் பஜனை' என்ற பெயரில் அழைக்கப்படும் இராமருக்கான வழிபாடானது இராமாயணம் எனும் இதிகாசக் கதையை மையமாகக் கொண்டு பாடப்படுகிறது. சீதையை இராவணன் இலங்கைக்கு கடத்தி வருவது முதல் அனுமன் சீதையை மீட்டு இராமரிடம் கொண்டு சேர்க்கும் வரையிலான கதையம்சம் இவ்வழிபாட்டுக்கான கதையாக அமைந்துள்ளது.



Image Source - virakesari.lk

இராமர் பஜனையின் கதையம்சம்

இக்கதையானது இராமர்-சீதை திருமணத்துடன் ஆரம்பமாகின்றது. அயோத்தி நகரைச் சேர்ந்த மக்கள் ஒன்று கூடி இராமருக்கும் சீதைக்கும் திருமணம் செய்து வைக்கின்றனர். திருமணத்தின் பின்பு கைகேயியினது சூழ்ச்சியால் இராமர் தன் மனைவியுடனும் சகோதரருடனும் வனவாசம் செல்கின்றார். அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும்போது சூர்ப்பனகைக்காக இராவணனால் சீதை கடத்தப்பட்டாள். இக்கதையம்சத்தின் தொடக்கத்திலிருந்தே இராமர் பஜனை தொடங்குகின்றது. இக்கதையின் ஒவ்வொரு முக்கியமான கதைக்கட்டங்களையும் மையமாக வைத்தே இராமர் பஜனை வழிபாட்டுப் பாடல்கள் பாடப்படுகின்றன.

சீதை இராவணனால் கடத்தப்பட்ட செய்தியறிந்த இராமர் வேதனையுற்று சீதையைத் தேடிச் சென்றார். இராமருக்கு சீதை மீண்டும் கிடைக்காவிடில் இவ்வுலகையே அழித்து விடுவதாகக் கூறிய இராமன் அனுமனிடத்தில் தஞ்சம் புகுந்தார். அவரிடம் சீதையை மீட்டுத் தரும்படி வேண்டினார். அனுமனும் சீதையைத் தேடிச் செல்கிறார். இலங்கையில் சீதை கடத்தி வைக்கப்பட்டதை அறிந்த அனுமன் சீதையுள்ள இடத்தை அடைந்து பல போராட்டங்களுக்கு மத்தியிலும் சீதையைக் காக்க முயல்கிறார். அவ்வேளையில், எந்தப் பெண்ணையும் தவறான கண்கொண்டு பார்த்திராத அனுமன் சீதையின் புனிதத்தை உணர்ந்து அவள் இருந்த இடத்தினை மலையோடு பெயர்த்துத் தூக்கிச்

சென்றார். பிறகு இராமனிடம் சீதையைச் சேர்த்துவிடுகின்றார்.

இராவணனால் கடத்தப்பட்டு அனுமனால் மீட்கப்பட்ட சீதையின் புனிதம் பற்றி தவறாகப் பேசுகின்ற ஊர்மக்களுக்காக இராமன் சீதையை தீக்குளிக்குமாறு வேண்டுகிறார். சீதையின் கற்புக்கு அவதூறுகள் வரக்கூடாது என்பதற்காகவே இராமர் அவ்வாறு கூறி, அவளைப் பத்தினியாகக் காட்ட முயற்சி செய்கிறார். சீதையும் இராமரின் கூற்றுக்கேற்ப மறுப்பின்றி அவ்வாறே தீக்குளிக்கிறாள். இராமனின் வேண்டுகோளுக்கேற்ப தீக்குளித்த சீதைக்கு எவ்வித தீங்கும் ஏற்படவில்லை. அவள் நெருப்பினுள் சென்றபடியே வெளியே வந்தாள். இதற்குப் பின்னர் ஊர்மக்களும் இராமரும் சீதையின் புனிதத்தை உணர்ந்தனர். இதன்பின் தன் தவறை உணர்ந்த கைகேயி இராமரைக் காணக் காட்டிற்கு வந்து, இராமரை நாடாள அழைக்கின்றார். ஆனால் இராமர் தன் தந்தையிடம் சத்தியம் செய்ததாலும், அவரின் ஆணையும், கைகேயியின் விருப்பமும் அதுவே என்பதாலும் நாட்டிற்கு வர மறுக்கின்றார்.

பின்னர் பரதன் காட்டிற்கு வருதலும், இராமரை அழைத்தலும், இராமர் நாடு திரும்ப மறுத்தலும், பரதன் இராமனின் பாதணிகளை வைத்து ஆட்சி செய்தலும் எனக் கதை தொடர்கிறது. இறுதியாக, இராமர், சீதை, இலக்குவணன் என்போர் தமது பதினான்கு ஆண்டுகால வனவாசம் முடித்து நாடு திரும்பும் வரையிலான கதைகள் வருகின்றன.

மேற்குறித்த கதையே இராமர் நாடகத்தின் (பஜனையின்) மையக்கருத்தாகும். இக்கதையையே கருவியாகக் கொண்டு வழிபாட்டுச் சடங்குகளும் பாடல்களும் அமைகின்றன. இவ்வழிபாட்டுப் பாடல்களில் பதினான்கு ஆண்டுகளாக வனவாசம் மேற்கொண்ட இராமர், சீதை, இலக்குமணன் என்போரின் குணங்கள், அச்சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற சோதனைகள், சீதை மீதான குற்றச்சாட்டுகள், சீதையின் அவலநிலை, கைகேயியின் மனமாற்றம், பரதனின் சகோதரப் பாசம் போன்ற அனைத்து அம்சங்களும் வெளிப்படுத்தப்படுவதனைக் காணலாம்.

கம்பம் ஊன்றுதல்

கம்பம் ஊன்றுதலுக்காக தேக்குமரம் அல்லது கருப்பந் தேயிலைமரம், சில இடங்களில் மஞ்சள் நிற மூங்கில் என்பவற்றையும் பயன்படுத்துவதுண்டு. இம்மரங்களில் ஏதாவது ஒரு மரத்தில் விபூதி, சந்தனம், குங்குமம் தடவி பட்டுத்துணியைக் கட்டி கோயிலின் வாசலில் குழி தோண்டிப் புதைத்து வைப்பர். அம்மரத்தில் அன்று முதல் இராமரைக் குடியிருத்தி வைத்திருப்பதே இம்மக்களின் ஐதீகமாகும்.[3]

கம்பம் ஊன்றியது தொடக்கம் ஒவ்வொரு நாளும் இராமருக்கான வழிபாடு இடம்பெறும். ஆண்கள் ஒவ்வொருவரும் இராமரது வழிபாட்டுக்காக அதிகாலையில் எழுந்து, குளித்து தூய்மையாகக் கம்பம் ஏந்தி, வீடுகள்தோறும் சென்று இராமரைப் பூசிப்பர். இதன்போது, கம்பம் சுமந்து வரும் ஆண்களை வரவேற்று பூசிக்கத் தயாராகியுள்ள மக்கள் வீட்டுவாசல்களில் கோலமிட்டு வைத்திருப்பர். வீடுகள்தோறும் மாவிலையால் அலங்காரம் செய்திருப்பர். வீடுகளுக்குச் சுமந்து வரும் கம்பத்துக்கு எண்ணெய்யை ஊற்றி பத்தி பற்ற வைத்து சூடம் காட்டி வழிபடுவர். இராமரின் அடையாளமாக ஏந்திவரப்படும் கம்பத்தின் பாதங்களுக்கு மஞ்சள்நீர் ஊற்றி மலர்தூவி வழிபடுவர். கம்பத்தின் விளக்கிலுள்ள கருப்புநிற எண்ணெய்யை நெற்றியில் திலகமாக இட்டுக் கொள்வர். அனைத்து வீடுகளுக்கும் கம்பம் ஏந்திச் சென்று முடிந்ததும் கோயிலுக்குத் திரும்புவர். இவ்வாறே தமது ஊர்களில் மட்டுமின்றி ஏனைய ஊர்களுக்கும் சென்று வழிபடும் வழக்கமும் காணப்படுகின்றது.

கம்பம் சுமந்து வருதலின் நோக்கம்

இராமர் பஜனையின்போது 'கம்பம்' சுமந்து செல்வது குறிப்பிடத்தக்கது. பரதன் இராமனின் பாதணிகளை வைத்து ஆட்சி செய்ததாலேயே இராமர் பஜனை வழிபாட்டின் உருவம் (கம்பம்) பாதமாக அமைகின்றது. இது இராமரின் அடையாளமாக இவ்வழிபாட்டில் அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இராவணன் சீதையைக் கடத்திச் சென்றதும், சீதையின் நினைவால் வேதனையுற்ற இராமர் திருவிளக்கைக் (கம்பம்) கையிலேந்தி, தீமூட்டி சீதையை மீட்டுத் தருமாறு பஞ்சபாண்டவர்களிடம் வேண்டுகிறார். பஞ்சபாண்டவர்கள் அனுமனைத் தூதனுப்புமாறு கூறுகின்றனர். அதன்படி, அனுமனும் இராமனால் தூதனுப்பப்படுகிறான். சீதையைத் தேடிச் சென்ற அனுமன் திரும்பி வரும் வரையிலும் இராமர் மிகுந்த கவலையுடன் இருக்கின்றார். அவ்வாறு இராமர் விளக்கேந்திய சந்தர்ப்பமே இராமர் பஜனை வழிபாட்டில் கம்பம் ஏந்தி வருவதற்குக் காரணமாக அமைந்தது.

எனவே, மேற்குறிப்பிடப்பட்ட கதைப்பின்னணியே இராமர் பஜனை வழிபாட்டிற்கான அடிப்படை எனலாம். இதனை மையமாகக் கொண்டு, இந்தியக் கிராமத்து மக்கள் தங்களது வாழ்வில் தாம்

முக்கியத்துவம் அளிக்கின்ற வழிபாடுகளில் ஒன்றாக இராமரை வழிபடும் வழிபாட்டையும் ஆரம்பித்து வைத்தனர். இந்தியாவில் அன்றுமுதல் இன்றுவரை ஆண்டுதோறும் இவ்வழிபாடு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும், சீதையைக் கடத்தி வைத்திருந்த இடம் இலங்கையாகையாலும் இவ்வழிபாடு இங்கும் செல்வாக்குப் பெற்றதெனலாம். இவ்வழிபாடு மார்கழி மாதத்தில் வழிபடப்படுகின்றது. அதாவது மார்கழி மாதத்தில் மழையை வேண்டியும், நல்ல கணவனை வேண்டியும் பெண்கள் திருமாலை வேண்டி திருப்பாவை, திருவெம்பாவை போன்ற நோன்புகளை நோற்றனர். இம்மலையக மக்கள் திருமாலை இராமனின் அவதாரமாகவே கருதுகின்றனர். எனவே இக்குறிப்பிட்ட காலத்தில் திருமாலுடன் இணைத்து இராமனையும் வழிபட்டனர். இவர்கள் இவ்வழிபாட்டை முப்பது தினங்களாக மேற்கொள்கின்றனர். தமிழர்கள் மார்கழி மாதத்தினைப் 'பீடை' அல்லது 'பூடை' காலம் என அழைக்கின்றனர். ஏனெனில் கடும்சோதனைகளும், பஞ்சமும், பனியும் நிறைந்த காலமே மார்கழி மாதம். இக்காலத்தில் இராமரை வழிபட்டால், தமது பிரச்சினைகள் தீர்ந்து நல்வழி பிறக்கும் என்பது மக்களின் ஐதீகமாக உள்ளது. இந்த அடிப்படையிலேயே இராமர் பஜனை ஆரம்பித்துள்ளது. ஆரம்ப காலங்களில் படிப்பறிவற்றிருந்த இம்மக்கள் இறைபக்தி ஒன்றையே நம்பி வாழ்ந்தனர். இவ்வடிப்படையிலேயே இராமர் பஜனை தோன்றியது. நாட்டாரியலிலும் புராணங்களிலும் இவர்களுக்கு இருந்த ஈடுபாடே இவ்வழிபாடு சிறக்க அடிகோலியதெனலாம். இன்றுவரையிலும் இவ்வழிபாடு மரபு மீறாமல் வழிபடப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இராமர் வழிபாடு சிங்கப்பூர், நியூசிலாந்து, தாய்லாந்து, சுவீடன், பர்மா, மியன்மார் போன்ற நாடுகளிலும் நடைபெறுகின்றது. ஆனால் மலையகத்தமிழரின் இராமர் வழிபாட்டிலிருந்து அது வேறுபடுகின்றது. இந்நாடுகளில் இராமர் வழிபாடு தனியே அல்லாமல் திருப்பாவை, திருவெம்பாவையுடன் இணைந்து வழிபடப்படும் வழிபாடாக உள்ளது.

இராமர் வழிபாட்டின் படிமுறைகள்

மார்கழி மாத வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது. மார்கழி மாதத்தின் முதல் நாளன்று இராமர் ஆலயங்களில் 'கம்பம் ஊன்றுதல்' என்ற நிகழ்வு இடம்பெறும். மலையகத்தின் பெரும்பாலான தோட்டங்களில் இராமருக்கென தனியான ஆலயங்கள் கிடையாது. அம்மன், முருகன் ஆலயங்களோடு இணைந்ததாகவே இராமர் வழிபாடும் அமைந்திருக்கும். இராமர் வழிபாட்டின் ஆரம்பப்படியாகவே 'கம்பம் ஊன்றுதல்' இடம்பெறும். இவ்வழிபாட்டின் முதல் நாளன்று இந்நிகழ்வு நடைபெறும்.[4]

இவ்வாறு முப்பது நாட்களும் வழிபடப்பட்ட இராமர் வழிபாடானது தைத்திருநாளன்று முடிவடையும். இவ்வழிபாட்டின் போது இணைக்கப்படும் பாடல்கள் இராமாயணத்தை மையமாகக் கொண்டும், இராமாயணப் பாத்திரங்களின் குணாதிசயங்களை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்திருக்கும். இவ்வழிபாட்டில் பாடல்களே அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இதனாலேயே 'பஜ கோவிந்தம்' என்ற பெயராலும் இராமர் வழிபாடு அழைக்கப்படுவதுண்டு. இராமர் பஜனை இசையால் வயப்பட்ட சிறுவர்கள் குதூகலத்துடன் கம்பம் சுமந்து வருவோரின் பின்னால் "கோவிந்தா! கோவிந்தா!" என சத்தம் போட்டுக் கொண்டும், கையைத் தட்டிக் கொண்டும் ஓடி வருவர்.[5]

இராமர் வழிபாடும் சடங்கும்

இராமர் வழிபாட்டின் முதல் அங்கமாக 'கம்பம் ஊன்றுதல்' இடம்பெறும். இது மார்கழி மாதம் முதல் நாளில் இடம்பெறும். கோயிலின் வாயிலில் கம்பம் ஊன்றிக் காப்புக் கட்டுவது வழமையாக உள்ளது. இராமரை வழிபட்டு முப்பது நாட்கள் கொலுவில் இருத்தும் நோக்கில் இவ்வாறு காப்புக் கட்டுவர். கம்பம் ஊன்றுதலின்போது தப்பு (பறை) இசைக்கப்படும். சங்கு முழங்கும். எல்லோரும் 'கோவிந்தா', 'கோவிந்தா' எனக் கோஷமிட்டு கம்பத்தை ஊன்றி திருவிளக்கை ஏற்றிவைப்பர். முப்பது நாட்களின் பின்பே கம்பம் மீண்டும் இறக்கப்பட்டு காப்பு அவிழ்க்கப்படும். இக்கம்பத்தினை ஊன்றுபவர் பூசாரியாகவோ, கோயில் தலைவராகவோ இருப்பார். கம்பம் ஊன்றும்போது இசைக்கப்படும் பாடல்களில் பின்வரும் பாடல் குறிப்பிடத்தக்கது.

"பாண்டு ரங்கவரே

கோவிந்தனம் சங்கீதனம்

கோவிந்தா... கோவிந்தா ..."

"இத்தனை இராமருக்கு திருக்கம்பம் போதாதா

சத்திய ரகுராமரே..."

முதல் சடங்கின்போது அரிசியை ஊறவைத்து இடித்து



Image Source - globaltamilnews.net

'துள்ளுமா'வை பிரசாதமாக வழங்குவர். இதனையடுத்து ஒவ்வொரு நாளும் அதிகாலையில் இராமர் வீதிவலம் வருவது வழமையானதே. ஆண்கள் அதிகாலையில் குளித்து, தூய ஆடைகளை அணிந்து, தம் மனதில் இராமரை இருத்தி கம்பத்தை ஏந்திச் செல்வர். ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று பூசை செய்வர். கம்பம் ஏந்திச் செல்லும்போது இராமரைப் போற்றும் பாடல்களைப் பாடிச் செல்வர்.

இராமர் வழிபாடு காலையில் மட்டுமின்றி மாலையிலும் இடம்பெறுவதுண்டு. கம்பத்தை ஏந்திச் செல்லும் ஆண்கள் கூட்டம் கோயிலிலே தங்குவதுண்டு. இவர்கள் ஒவ்வொரு நாளும் கம்பத்தை மஞ்சள்நீரால் தூய்மைப்படுத்தி, மலர்மாலை சார்த்தி, திருவிளக்கிற்குத் திரியிட்டுக் கொளுத்தி வைப்பர். இராமரின் பாதங்களை தினமும் தரிசிப்பர். இராமர் பஜனை நாட்களில் பதினாறாவது நாள் (டிசம்பர் 31ஆம் திகதி) அன்று இரவு முழுவதும் ஆலயத்தை அலங்கரிப்பர். அடுத்த நாள் புதுவருடம் என்பதனால் குறிப்பிட்ட அந்நாளில் காலையில் விரதமும் மேற்கொள்வர். விரதத்தன்று பகல் கோயிலில் அன்னதானமும் செய்வர். விசேட பூசைகளும் இடம்பெறும். புதுவருடத்துக்கு முதல் நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு விசேட பூசைகள் செய்வதுண்டு. பஜனைப் பாடல்களைப் பாடி இரண்டு மணித்தியாலம் பூசை செய்வர்.

இராமர் பஜனைப் பாடி கம்பமேற்றி ஒவ்வொரு வீட்டுவாசலுக்கும் வரும் பக்தர்களை வரவேற்பதற்காகவே பெண்கள் தயாராக இருப்பர். கம்பத்திற்கு எண்ணெய் ஊற்றி, கம்பம் சுமப்பவரின் பாதங்களை மஞ்சள்நீரால் கழுவி, மலரிட்டு, ஆரத்தி, சாம்பிராணி காட்டுவர். கம்பத்துடன் இராமர், சீதை, அனுமன், இலக்குவணன் உள்ள படங்களையும் கையில் ஏந்தியபடி வருவர். கம்பம் வீடுதோறும் வரும்போது காணிக்கைகள் செலுத்தும் வழக்கத்துடன் 'பிடி அரிசி'யையும் கொடுக்கும் வழமை காணப்படுகிறது. இவ்வீட்டு வழிபாடு பல நாள் தொடரும்.

இராமர் வழிபாட்டில் 'துளசி எடுக்கும் சடங்கு' சிறப்பானதாகும். இது இராமாயணக் கதையில் ஓர் அங்கமான 'இராமரின் காட்டு ஆட்சி'யை நினைவுகூறுவதாக அமைந்துள்ளது. இதன்போது, தைப்பொங்கலின் முதல் நாள் (போகிப் பொங்கல் அன்று) இராம பக்தர்கள் அனைவரும் இணைந்து பாடலைப் பாடிக்கொண்டு அருகிலுள்ள காடுகளுக்குச் சென்று துளசி பறித்து வருவர். பின்பு தாம் கொண்டுவந்த துளசியை மாலை கட்டி கம்பத்திற்கும், இராமர் படத்திற்கும், சிலைக்கும் சார்த்தி வழிபடுவர். இராமனுக்கு துளசி எடுக்கக் காட்டுக்குச் செல்லும்போது,

"பஜமனை பஜமனை பஜமனையாம்

வெங்கா துளசி ஜானகியாம் .."[6]

என்று பாடிச் செல்வர். இது இராமருக்கு துளசி மீதுள்ள ஆசையைக் காட்டுவதாக உள்ளது.

இராமர் பஜனையின் இறுதிநாள் தைப்பொங்கல் தினமாகும். சூரியப் பொங்கல் படையலுடன் அன்றைய இராமர் ஊர்வலம் இடம்பெறும். அன்று அலங்கரிக்கப்பட்ட தேரில் இராமர் பவனி வருவார். தேரிற்கு முன்பு கம்பம் ஏந்தி, ஆண்கள் பாடல்களைப் பாடிக்கொண்டு செல்வர். தொடர்ந்து வழமையான இராமருக்கான பூசைகள் இடம்பெறும். இராமர் ஊர்வலத்தில் செல்லும் இராமாயணப் பாத்திரங்களை நினைவுகூறும் வகையில் வேடங்களைத் தரித்தபடி ஆண்கள் சிலர் ஆடியும் பாடியும் செல்வர். தேரும் கம்பமும் கோயிலை அடைந்தவுடன் அன்றைய நாள் இரவு 'காப்பு அவிழ்த்தல்' எனப்படும் கொடியிலிருந்த இராமரைக் கட்டவிழ்க்கும் சடங்கு இடம்பெறும்.

இராமர் பஜனையில் இராமர் புகழைப் பாடுவதே நோக்காகக் கொண்டவர்கள் ஏனைய பாத்திரங்களைப் பற்றிப் புகழாது விட்டுவிட்டனர். ஏனையோரை இகழவும் இல்லை. இதனை அநேகமான பஜனைப் பாடல்களில் காணலாம். உதாரணமாக, பின்வரும் பாடல்களில் அதனைக் காணலாம்.

"மார்கழி மாதம் திருநாளாம்
நம் ரகுபதி ராமனுக்கே..."

“தசரதன் மகனே தேவியின் தலைவா
ஹரி ராமனே வருக ....”
“குங்குமச் சிலையே கோவிலில் தெய்வம்
ஹரி ராமனே வருக”
“நாமம் அணிந்தோம் நாங்கள் அணிந்தோம்
நல்ல மார்கழி மாதத்திலே
அடிபணிந்தோம் நாங்கள் அடிபணிந்தோம்
அந்த ஸ்ரீராமன் காலடியில்...”

இராமர் பஜனையும் பாடல்களும்

இராமர் பஜனைப் பாடல்கள் அனைத்தும் நாட்டாரியல் சார்ந்தவையாகும். அவை பாடப்படும் மெட்டுகளும் கிராமிய வயப்பட்டதாகும். இராமர் வழிபாட்டின் தொன்மையையும் இராமாயணப் பாத்திரங்களின் இயல்புகளையும் இப்பாடல்களின் வழி காணலாம். பாடல்களின் ஆரம்ப அடிகளை ஒருவர் பாட, அதைக் கேட்டு தொடர்ச்சியாக ஏனையர் பாடும் மரபும் காணப்படுகிறது. இராமர் பஜனைப் பாடல்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளும் கிராமிய இசைக்கேற்ப அமைந்த இசைக்கருவிகளேயாகும். இவற்றுள் மிருதங்கம், கைத்தாளம், சங்கு, ஜால்ரா, சேகண்டி, குழல் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

கிராமிய வழிபாட்டில் சடங்குகள் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றனவோ, அதேபோல பாடல்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இராமர் பஜனைப் பாடல்கள் முக்கியத்துவம் பெறக் காரணமுண்டு. ஏனெனில் எந்தவொரு விடயத்தையும் கதைகளாகக் கேட்பதை விட இசையாகப் பாடும்போது அது எம்மை இசைய வைக்கிறது. அதுபோலவே இராமர் பஜனையிலும் இலகுவான பாடல்களும் இனிமையான குரல்களும் எம்மை ஈர்க்கச் செய்கின்றன.

இராமர் பஜனைப் பாடல்கள் பல்வேறு கருக்களைக் கொண்டமைந்துள்ளன. அவை,

•இராமர் வழிபாட்டின் முக்கியத்துவம்

•காப்புப்பாடல்

•இராமாயணத்துடனான தொடர்பு

•இராமாயணப் பாத்திரங்களின் பெருமையும் புகழும்

•சீதைக்கு நேர்ந்த கொடுமைகள்

•இராம அவதாரங்கள்

•இராமர் பஜனை வழிபாட்டுச் சடங்குப் பாடல்கள்

•இராமர் - சீதைக்கிடையிலான காதல் உணர்வு

•இராமரை வழிபடுவதால் பெறும் பயன்கள்

இராமர் பஜனையில் காப்புப்பாடல்களாக விநாயகர், முருகன், சிவன் முதலியோரை விழித்துப் பாடிய பின் இராமர் பாடல்கள் ஆரம்பமாகும். இந்தக் காப்புப் பாடல்கள் முதல் நாளும் இறுதி நாளிலுமே பாடப்படுகின்றன. இராமர் துதிப்பாடல்களுக்கு எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

“நம பார்வதி பதியே
அரகர மகாதேவா
பாண்டு ரங்கவரே
கோவிந்தனம் சங்கிதனம்
கோவிந்தா கோவிந்தா
ஜே! ஜே! ராமர் சிங்கார ராமா
மண்ணுலகில் பிறந்த மௌனராமா!
ஜே! ஜே! ராமா .....
சீதையை மணம் முடித்த
சிங்கார ராமா
தேசமெலா சுத்தி வரும்
ஒய்யார ராமா!
ஜே! ஜே! ராமா...
சங்குச் சக்கரம் கைபிடித்த
கோபால ராமா
நையாளனே சீத்தாராமா
சிங்கார ராமா
ஜே! ஜே! ராமா....”

இராமர் பஜனைப் பாடல்களில் உயிர்நாடியாக விளங்குவது இப்பாடல்களில் வரும் இராமாயணக் காட்சிகளே. இராமருக்கும் சீதைக்குமிடையிலான காதல் உறவு, சீதைக்கு நேர்ந்த கொடுமைகள், இராமர் மீதான பக்தி, இராமரிடம் அருள் வேண்டல், இராமரை வழிபடுவதால் பெறும் பயன்கள், இராமரது அரவணைப்பு, இராம அவதாரங்கள், இராமரை வழியனுப்பும் பாடல்கள் என்பன குறிப்பிடத்தக்கன.

இராமரும் சீதையும் பார்த்துக்கொள்ளலும் காதல் கொள்ளலும் தொடர்பாக கம்பர் காட்டிய “அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்” என்ற வரிகளின் பொருளை இராமர் பஜனைப் பாடல்களிலும் காட்ட முற்படுவதைப் பின்வரும் பாடலடிகள் விளக்குகின்றன.

“கல்யாண ராமருக்கும் கண்ணான ஜானகிக்கும்
அன்பு வந்த நேரமல்லவோ.....”

இராமர் பஜனையில் இராமாயணப் பாத்திரங்களின் பெருமையும் புகழும் பேசப்படுகின்றது. இராமர், சீதை, இராவணன், அனுமன், இலக்குவணன் போன்ற பாத்திரங்களைப் பற்றியே இராமர் பஜனைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. ஆரம்பத்தில் இராமன்-சீதை புகழ்பாடும் பாடல்கள் இராமாயணத்தில் போலவே இங்கும் பாடப்படுகின்றன. இராமரின் குணநலன்கள், அருள் உள்ளம், சீதை மீதான காதல், வீரச் செயல்கள், அவரது தோற்றம் என்பன சிறப்பாக வர்ணிக்கப்படுகின்றன. உதாரணமாக, பின்வரும் பாடலில் வாலியை வதைத்தமையும் துரியோதனனை அழித்தமையும் இராம அவதாரச் சிறப்பும் எடுத்துரைக்கப்படுவதைக் காணலாம்.

“அயோத்தி மாநகரில் அவதாரம் செய்யவா
அடியார்கள் தன்னைக் காக்கவா
அறங் கேசவா அடியார்கள்
தன்னைக் காக்கவா! - 2
அந்தணர் இராவணன் தங்கையர்
நாட்டினை பங்கம் படைத்தவர்
வாலியை வதக்கி நின்ற சுப்பிரமணிய
தாக்கினி வானவர் மேலதாக்கினி
பரந்தாக்கினி வானவர் மேலதாக்கினி - 2
மூடன் கும்பகர்ண முடித்தாயென தாக்கினி
மூனாம் பரத்தப் போக்கினி பரந்தாக்கினி
மூனாம் பரந்தப் போக்கினி!..
அந்தணன் இராவணன் ....
பதினெட்டாம் போர்க்களத்தில்
பாவி துரியோதனன் பாவி துரியோதனன்
ஆதியைக் காப்போம் ஐயா!
அறங்கேசவா ஆதியைக் காப்போம் ஐயா!
அயோத்தி மாநகரில்....”

மேலும் இராமன் பற்றிப் பேசுமிடத்து அவனது குணச்சிறப்பு பற்றியே சுட்டப்படுகின்றது. சத்தியம் தவறாதவனாகவும், தனது குலப்பெருமையைக் காக்கக் காட்டிற்குச் செல்லும் ஆணையைக்கூட ஏற்றுக்கொண்டவனாகவும், இலட்சியமே சத்தியமானவனாகவும் இராமரின் இயல்புகள் எடுத்துக் கூறப்படுகின்றன. பின்வரும் பஜனைப் பாடல்கள் இவ்வியல்புகளை வெளிப்படுத்துகின்றன.

“குலம் காத்த ராமரே
குலம் காத்த ராமரே
அருவில் உருவமான ராமரே
ஹரி ராமரே
அருவில் உருவமான ராமரே
இலட்சியமே சத்தியமாய்
சேவை செய்யவே
ஹரி ராமரே
நீ வரம் தா!
உன்னைக் காணவே
நீ வரம் தா!”

இராமரின் புகழ் பேசப்படுவதைப் போலவே, சீதையினது பெருமையும் கூறப்படுகின்றது. இராமனின் வாழ்வுக்கு வளம் சேர்ப்பவளாக சீதை குறிப்பிடப்படுகின்றாள்.

“மண்ணெல்லாம் பொன்னாகும் ராமர் அருளாலே
வாழ்வெல்லாம் வாழ்வாகும்
சீதை அருளாலே
ஜன்னல் பின்னல் இடையோடு
இங்கு வந்தாளே!
செய்த பாவம் போதுமே
ஜென்மக் கடன் தீருமே!...”

சீதைக்கு நேர்ந்த கொடுமைகள் பற்றிய விடயங்களும் இராமாயணத்தில் போலவே பஜனைப் பாடல்களிலும் விவரிக்கப்படுகின்றன. மாயமானைக் கண்டு மயங்கியதால் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டாள் என்ற செய்தி பின்வரும் பஜனைப் பாடலடிகளால் எடுத்துரைக்கப்படுகின்றது.

“....இராவணன் சீதையை வைத்தீரோ!
எங்கள் அனுமானை தூது அனுப்பினாரோ”

என சீதை இராவணனிடம் சிக்குண்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

“மானைப் பிடித்துத் தாருங்கள் மன்னவா
மானைப் பிடித்துத் தாருங்கள்
அந்த மானும் வேணாம் பெண்ணே
வேற மான் பிடித்துத் தாரேன்
அந்த மானும் இல்லாவிட்டால்
என்னுயிரை இழந்துவிடுவேன்....”

என்ற பாடலடிகள் சீதையின் பிடிவாதக் குணம் பற்றி விவரிக்கின்றன.

சீதை இராவணனால் மட்டுமல்ல, இராமனது

கொடுமைக்கும் ஆளாக்கப்பட்டாள். இராவணன் செய்த கொடுமையால் இராமரிடத்தில் சீதைக்குக் கொடுமைகள் ஏற்பட்டன. சீதை இராவணனிடமிருந்து மீண்டு வந்தபோதும், ஊரார்ின் பழிச்சொல்லுக்கு ஆளாகக்கூடாது என்பதற்காக, தன்னைத் தூயவளாக நிரூபிக்கும் வகையில் இராமரின் ஆணைக்குட்பட்டு தீக்குளித்தாள். இது சீதைக்கு நேர்ந்த பெருங்கொடுமை. இராமரால் சீதைக்கு ஏற்பட்ட கொடுமையைக் காட்டுவதாக பின்வரும் பாடல் அமைகிறது.

"ஊரார் சொல்லிய பழிச்சொல்லு
அன்னை ஜானகி குதித்தாள்
தீ நடுவில்
ராமர் விதித்தான் விதியென்று
ஜானகி குதித்தாள்
தீ நடுவில்....."[8]

இராமாயணத்தின் முக்கிய பாத்திரங்களில் ஒன்றுதான் அனுமன் என்ற பாத்திரம். இராமசரிதத்தை திசை திருப்பியவனும் இவனே தான். இவனைப் பற்றியும் புகழ்பாடும் பாடல்கள் இராமர் பஜனையில் இடம்பெறுகின்றன.

"இராமர் கதையை எழுந்து வரும்
கோவில் மன்றத்தில் ஆவலோடு
அனுமன் வந்தான் பக்தர் கூட்டத்தில்
பெயரைக் கேட்டதும் அனுமன்
துள்ளிக்குதிக்கின்றான்
தன்னை மறந்தவன்
கதையை எண்ணி அழுகின்றான்
ஊரும் அழுதது அனுமன்
கண்ணும் கசிந்தது
தன்னை மறந்தவன் கதையை
எண்ணி அழுகின்றான்
இராமர் கதையை
மிதிலை நகரம் கன்னிமாடம்
அன்னை ஜானகி அண்ணனோடும்
தம்பியோடும் ஜானகி பயணம்!
கதையைக் கேட்டதும்
அனுமன் துள்ளிக்குதிக்கின்றான்
தன்னை மறந்தவன்
கதையை எண்ணி அழுகின்றான்
இராமர் கதையை"[9]

இப்பாடல்கள் மூலம் இராமனிடத்து அனுமன் கொண்ட பக்தியும் மரியாதையும் புலப்படுவதோடு இராமர் காட்டிற்குச் செல்லும் கதையைக் கேட்டு துயருற்ற அனுமனின் மனநிலையும் புலப்படுகிறது. இராம பஜனைப் பாடல்களில் இராம பக்தியுடன் சேர்ந்து அனுமனின் பக்தியும் வெளிப்பட்டு நிற்பதோடு, அனுமனை வழிபடவும் அதுவே வழிவகுகின்றது.

இராம பஜனைப் பாடல்கள் இராமரோடு இணைந்த அனுமன் வழிபாட்டையும் பிரதிபலிப்பதாக உள்ளது. பின்வரும் பாடலடிகள் இதனை விளக்குகின்றன.

"பத்துப்படி ஏறி வந்தேன்
ஆஞ்சனேயனே!
வெற்றிதர வேண்டுமய்யா ஆஞ்சனேயனே!
நித்தம் உன்னைப் பாடுகின்றோம்
ஆஞ்சனேயனே!
வெற்றிதர வேண்டுமய்யா ஆஞ்சனேயனே!
பக்தியுடன் பாடுகின்றோம்
ஆஞ்சனேயனே!
வெற்றிதர வேண்டுமய்யா ஆஞ்சனேயனே!"

இராமாயணப் பாத்திரங்களுள் அளவுக்கதிகமான புகழ் இராமர் மீதும் சீதை மீதுமே பாடப்படுகின்றன. பெரிதும் இவர்களது காதல் உறவை பற்றிப் பேசும்போதே அவர்களைப் பற்றிய புகழும் பேசப்படுகின்றது. இராமர் பஜனை வழிபாட்டிலும் இராமர் - சீதைக்கிடையிலான காதல் உறவையும், திருமண உறவையும் சித்தரிக்கும் பாடல்கள் காணப்படுகின்றன.

"கல்யாண ராமருக்கும் கண்ணான ஜானகிக்கும்
அன்பு வந்த நேரமல்லவோ
வைதேகி மாலையிட்டு
வைபோக வாழ்வும் பெற்று
தேடி வந்த ராமர் அல்லவோ
அந்த ராமருக்கும் சீதைக்கும்
மயில்வாகனம்
அந்த வானவில்லில் ஒரு வண்ணம்
ஜெயராமா
எம்மை நாடி வந்து காத்தருள்வாய்
ஹரி ராமா....
கல்யாண ராமருக்கும்
அந்த அயோத்தி மாளிகையை
ஆண்ட ராமா ..."

சீதை இராமனிடம் மானைப் பிடித்துத் தருமாறு கேட்கும் பாடல்கள், இராமர் மானைப் பிடிக்கச் சென்ற பாடல்கள், சீதையைக் காணாது இராமர்

துடித்த பாடல்கள், அனுமனைத் தூதனுப்பிய பாடல்கள், சீதை இராமனை எண்ணி இராவணனிடம் போராடிய பாடல்கள் என எல்லாப் பாடல்களும் இராமர், சீதைக்கான காதல் உறவைச் சுட்டி நிற்கின்றன.[10]

கிருஷ்ண அவதாரங்களுள் இராம அவதாரமும் ஒன்று. இவ்வவதாரம் பற்றி பஜனைப் பாடல்கள் விவரிக்கின்றன. அவை கண்ணன், மாயவன், கோவிந்தன், கேசவன் என்ற பெயர்களில் அமைந்துள்ளன. உதாரணமாக, பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

"அயோத்தி மாநகரில் அவதாரம் செய்யவா..."
"கண்ணா வாடா கண்ணா வாடா
கனி பெரம்போடே
என் கருணை மீது
நீ வருவாய் எங்கள் ராமரே!
கூவி அழைக்கின்றானே
ஜெயராமரே
எந்தன் கடைக்குரலும் கேட்கலையோ
ஹரி ராமரே!
கண்ணா வாடா ...
ஆபத்து வேளையில் ஹரி ராமரே
என்னை ஆதரிக்க வேண்டுமய்யா
ஜெயராமரே"

இராமாயணக் கதையில் எல்லாப் பகுதிகளிலும் கூறப்படும் செய்தி இராமர் பஜனையில் இடம்பெறுவதில்லை. இராமன், சீதை, அனுமன் என்ற பாத்திரங்களுடன் தொடர்புடைய சரிதையே பெரிதும் இடம்பெறுகின்றது.[11]

இராவணனுடன் இடம்பெற்ற யுத்தம், படுகளத்தை இராவணன் கண்டது, இராவணன் தேர் ஏறுதல், இராவணன் அபசகுனங்களைச் சந்தித்தல், ஸ்ரீராமர் தேர் ஏறுதல், மகோதரன் வதை, இராவணன் யுத்தம், மண்டோதரி புலம்பல், சீதாதேவிக்கு அனுமன் சுபசேதி கூறல், சீதாதேவி அனுமனை உபசரித்தல், சீதாதேவி அக்கினியில் குதித்து எழுந்தது, ஸ்ரீராமர் சீதாதேவியை அங்கீகரித்தல், மக்களையும் மருமகளையும் சக்கரவர்த்தி புகழ்தல், ஸ்ரீராமர் வரவை அனுமன் பரதனுக்குக் கூறல், பரதர் ஸ்ரீராமரைப் பணிதல், ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் போன்ற பல முக்கியமான இராமாயணக் கதையம்சங்கள் இராமர் பஜனையில் எங்கும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. இராமர் கதையின் சிறப்பம்சங்களை மட்டுமே இந்தப் பஜனைப் பாடல்களில் சித்தரித்துள்ளனர். குறிப்பிட்ட கால எல்லையில் நடத்தப்பட வேண்டிய நாடகம் ஆகையால் இப்பகுதிகள் பற்றிய விரிவான செய்திகளைத் தவிர்த்திருக்கலாம். வாய்மொழி மரபில் வளர்ந்த கதையாகையால் இசையால் சில விடயங்கள் அருகியும் மருவியும் போயிருக்கலாம்.

இராமர் பஜனை வழிபாட்டில் இசை

இராமர் பஜனையில் கிராமிய இசைக்கருவிகளே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் பறை, மிருதங்கம், சல்லாரி, கைத்தாளம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். புருஷோத்தமனைப் பாட புல்லாங்குழலும் பயன்படுத்தப்படுகின்றது. இந்தப் பஜனையில் பாடப்படும் பாடல்கள் மிகவும் உருக்கமானவை. இராமர் பாடல்கள் ஒவ்வொரு நாளும் பாடப்படுகின்றன.

பஜனையின் இறுதிநாளன்றும் (முப்பதாம் நாள்), கம்பம் ஊரை வலம் வரும்போதும் பாடப்படுகின்ற 'வழியனுப்பும்' பாடல்கள் மிகவும் அருமையானவை. உதாரணமாக இப்பாடல்களைக் கொள்ளலாம்.

"போறாரே பொன்னான சீதையவள்
கையாலே கோர்த்துக்கொண்டு சீதையவள்
போறாரே ராமர் போறாரே .."[12]

கோயிலுக்குள் சென்ற ராமரை மறுநாள் மீண்டும் வரும்படி அழைத்துப் பாடும் பாடல்களும் உள்ளன. அவை,

"ராமா ராமா ராமா என்று
பாடுவதற்கே தினம் பாடுவதற்கே
இனி காத்திருப்போம்
மார்கழி மாதம் வரைக்கும்
போய் வா போய் வா என்று
கூறுவதற்கே இப்போ கூறுவதற்கே
மனம் துடிக்கின்றதே
ராமா மனம் துடிக்கின்றதே
போய் வா ராமா போய் வா ராமா.."

இராமர் பஜனைப் பாடல்களுக்கு உயிரோட்டம் கொடுப்பதாக நாட்டார் இசை அமைகின்றது. அதற்கேற்பவே பேச்சோசைச் சொற்களும் சொல்லாடல்களும் அமைந்துள்ளன. உதாரணமாக, "எப்ப வருவாரோ", "வெத்தலையில மாலை கட்டுங்க", "போறாரே..." போன்ற பாடல்களைக் காட்டலாம். அணிச்சிறப்பினை அச்சொட்டாகவே இப்பாடல்களில் காணலாம். உவமை, உருவகம், தன்மையணி, சிலேடை போன்றன இப்பாடல்களில் அதிகமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. பாடலின் மெட்டுத் தொடக்கம் பயன்படுத்தப்படும்

இசைக்கருவிகள் வரையில் எல்லாம் நாட்டுப்புறக் கலைகளைப் பின்பற்றியே அமைந்துள்ளன.

ஆரம்பகால பஜனைப் பாடல்களில் நாட்டாரியல் மெட்டுகளே பயன்படுத்தப்பட்டன. ஆனால் தற்காலப் பாடல்கள் இம்மரபிலிருந்து மாறுபட்டுள்ளன. மாறாக சினிமாப் பாடல் மெட்டுகளும் மேலைத்தேயப் பாணியிலான பாடல்களின் தாக்கமும் இப்பாடல்களில் காணப்படுகின்றன. பஜனை வழிபாட்டில் பல நவீன விடயங்களையும் காணலாம். இன்று பாடப்படும் பாடல்கள் பொழுதுபோக்கிற்காகப் பாடப்படுகின்றன. பஜனை பாடும்போது அணியும் ஆடை அலங்காரங்களும் வேறுபட்டுச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இராமர் வழிபாட்டின் பலன்கள்

இராமரை வழிபடுவதால் மக்கள் பிள்ளைப்பேறு, தொழில்நலம், குடும்ப ஒற்றுமை, கல்வி விருத்தி, தீராத நோய்கள் தீரும் போன்ற நற்பலன்களையும் பெறலாமெனக் கருதுகின்றனர்.

"கண்ணனென்னும் ராமர் பேரைச்
சொல்லச் சொல்ல
கல்லும் முள்ளும்
மெல்ல மெல்ல
அல்லும் பகலும் ராமர்
உன்னைத் தேடித் தேடி
எங்கள் ஆண்டவனே
வருக வேணும்
ராமா கோவிந்தா
கண்ணனென்னும்....."

இலங்கையில் இராமர் வழிபாடு இந்திய வம்சாவழி மக்கள் மலையகத்தில் வந்து குடியேறிய காலம் தொடக்கம் வழிபடப்படுகின்ற வழிபாடாகும். இவ்வழிபாடு இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட மலையகத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.[13]

மலையக மக்கள் ஆரம்ப காலங்களில் வாய்வழி மரபுகளையே பின்பற்றி வந்தனர். படிப்பறிவில் குறைந்த மக்கள் பாடல்கள் வாயிலாகவே தம் கலை, கலாசாரங்களைப் பரப்பி வந்தனர். வழிபாடுகளிலும் அவ்வாறே. இயல்பாகவே இதிகாச புராணங்களின் ஈடுபாடுடைய அவர்கள் இதிகாச புராணப் பாத்திரங்களைப் பெரிதும் போற்றினர். அவ்வகையில் இராமாயணத்தில் அவர்களுக்கு இருந்த ஈடுபாடும், இராமரிடத்து அவர்கள் கொண்டிருந்த பக்தியுமே இவ்வழிபாடு சிறக்க வழிவகுத்ததெனலாம்.[14]

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து மலையகக் கூத்து (நாடக) மரபுகளில் காமன்கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் - சங்கர் வழிபாட்டினை அடுத்து நின்று நிலைக்கும் வழிபாடாக 'இராமர் பஜனை வழிபாடு' அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அடிக்குறிப்புகள்

1. அருணாசலம், க. (1994) மலையகத் தமிழ் இலக்கியம், தமிழ்மன்றம். பக். 17-18.
2. சோதிமலர் ரவீந்திரன் (1995) காமன் கூத்தும் மலையகப் பாரம்பரியமும், கண்டி: சன்பிரிண்ஸ்.
3. சோதிமலர் ரவீந்திரன் (2012) இலங்கையின் மலையகத்தில் ஆகம நெறிசாராத வழிபாடுகள், கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வேடு. பக். 377-381.
4. சதீஸ்வரன், சி. (2014) புளியாவத்தை அம்மன் கோயில் கதை (தொகுப்பு), ஹட்டன்: விவேக அறநெறி அறிவக வெளியீடு. ப. 82.
5. தகவல் - நேரில் பெற்றது - நாகலிங்கம், வி., டயகம தோட்டம், டயகம.
6. தகவல் - கோவிந்தசாமி, க., புளியாவத்தை தோட்டம்.
7. தகவல் - இலட்சுமி, மா., பொகவந்தலாவ, லொயினொன் பிரிவு, பொகவந்தலாவ.
8. தகவல் - கோவிந்தசாமி, க., புளியாவத்தை தோட்டம், புளியாவத்தை.
9. தகவல்: மேலது.
10. சோதிமலர் ரவீந்திரன், மு.கு. ஆய்வேடு, பக். 380-381.
11. அருணாச்சலக் கவிராயர் (2011) இராமன் நாடக கீர்த்தனை, சென்னை: பாரதி நிலையம்.
12. தகவல் - தங்கமா, சி., பொகவந்தலாவ தோட்டம்.
13. சோதிமலர் ரவீந்திரன் (1998) காமன்கூத்து, தமிழ் விசேட துறை பட்டப்படிப்பிற்கான ஆய்வேடு.
14. தகவல்: விக்னேஸ்வரி, ஜீ., நக்கல்ஸ், முருகலை தோட்டம்.

ஈழத்து மரபுவழி ஆற்றுகைக் கலைகளுக்கு ஒரு வரலாறும் வளர்ச்சியும் உண்டு. தென்மோடி, வடமோடி, சிந்துநடைக் கூத்துகள், வாசாப்பு, இசை நாடகம், பள்ளு, குறவஞ்சி, வசந்தன், மகுடி என அது பன்முகப்பட்டது. இவற்றுள் சில அருகிவிட்டன; சில கால ஓட்டத்துடன் நின்று போராடி நிலைக்கின்றன; சில மாறுகின்றன. காலந்தோறும் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகளும், அதனை உருவாக்கிய அரசியல், பொருளாதார, சமூக காரணங்களும் இம்மாற்றங்களுக்கு அடித்தளமாக உள்ளன. இந்த பல்வேறு வகைப்பட்ட ஆற்றுகை வடிவங்கள் தத்தமக்கென அழகியலையும், அமைப்பையும், வெளிப்பாட்டுத் திறனையும் கொண்டுள்ளன; ஒன்றிலிருந்து ஒன்று பெற்றும் வளர்ந்துள்ளன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வதும், அவை மாற்றம் பெற்றபோது அது சம்பந்தமாக நடந்த விவாதங்களை அறிவதும், இதன் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவருக்கும், அதனை மேலும் வளர்த்துச் செல்ல விரும்புவோருக்கும் உதவியாக இருக்கும். இப் பல்வேறு ஆற்றுகை வடிவங்கள் பற்றியும் அவை கல்வி உலகில் ஏற்கப்பட்ட பின்னணிகள் பற்றியும், அதனால் இந்த ஆற்றுகைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் அறிமுகம் செய்வதாக 'ஈழத்துத் தமிழரின் ஆற்றுகைக் கலைகள் : மரபும் மாற்றமும்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமைந்திருக்கும்.

மன்னார்க் கூத்து மரபு: ஈழத்தமிழ்க் கூத்து மரபில் ஒரு புதிய கிளை

பகுதி 2

சின்னையா மௌனகுரு

சின்னையா மௌனகுரு அவர்கள் இலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர்; அரங்க ஆய்வாளர், பயிற்சியாளர், இயக்குநர், பிரதி உருவாக்குநர், நடிகர், கூத்துக் கலைஞர் என்று பல தளங்களில் இன்றும் இயங்கிவருபவர்.ஈழத்து அரங்கத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்ட சிலரில் மௌனகுரு குறிப்பிடத்தக்கவர். 'இராவணேசன்', 'சங்காரம்' முதலிய புகழ்பெற்ற கூத்து நாடகங்கள் மௌனகுருவுக்கு தனியான அடையாளத்தை வழங்கின. இவர், 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம் – 1984, சடங்கில் இருந்து நாடகம் வரை – 1985, மௌனகுருவின் மூன்று நாடகங்கள் – 1985, தப்பி வந்த தாடி ஆடு – 1987, பழையதும் புதியதும் நாடகம் அரங்கியல் – 1992, சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் – 1992, சங்காரம் – ஆற்றுகையும் தாக்கமும் (நாடகம்) – 1993, ஈழத்து தமிழ் நாடக அரங்கு – 1993, கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் – நீலாவணன் – 1994, கலை இலக்கிய கட்டுரைகள் – 1997, சக்தி பிறக்குது – நாடகம் – 1997, பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபும் – 1997, ஈழத்து நாடக அரங்கு – 2 ஆம் திருத்திய பதிப்பு – 2004, தமிழ்க் கூத்துக்கலை – வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல் – 2010, கூத்து யாத்திரை – 2021, கூத்தே உன் பன்மை அழகு – 2021 போன்ற பலநூல்களை எழுதியுள்ளார்.



இந்தக் கட்டுரையில் பின்வரும் விடயங்கள் சுருக்கமாக விவரிக்கப்படுகின்றன:

1. தமிழ் மரபில் காவியம், கூத்து ஆகியவற்றின் கதைக்கருக்களின் ஊற்றுக்கண்ணான வடமொழி புராண, இதிகாசக் கதைகள்.
2. மன்னார்க் கூத்துகளுக்கு கதைக்கரு வழங்கிய ஊற்றுக்கண், கத்தோலிக்கக் கதை மரபு.
3. மன்னார்க் கூத்துகளை எழுதிய புலவர்கள்.
4. மன்னார்க் கூத்து வகைகள்.
5. அவை (கூத்துகள்) நிகழ்த்தப்படும் முறை.
6. மன்னார்க் கூத்து மரபின் தனித்துவங்கள்.

1. தமிழ் மரபில் காவியம், கூத்து ஆகியவற்றின் கதைக்கருக்களின் ஊற்றுக்கண்

பேராசிரியர் வையாபுரி பிள்ளை அவர்கள் 'தமிழ் இலக்கியத்தில் காவிய காலம்' என்று ஒரு ஆய்வு நூலை எழுதியிருக்கிறார். அதிலே அவர் தமிழில் காவியங்களுக்கான தோற்றம் பற்றிக் கூறுகையில், காவியங்களின் உருவாக்கத்திற்கு அற்புதக் கதைகள் வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்.

கதைகள் இல்லாமல் காவியம் இல்லை. அதேபோலத்தான் கதைகள் இல்லாமல் கூத்துகள் இல்லை. மிகப் பழைய காலமான சங்ககாலத்தை எடுத்துக் கொண்டால் ஆடல் இருந்திருக்கிறது. ஆனால் கதைகளை ஆடும் கூத்துகள் இருக்கவில்லை. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்த 'சிலப்பதிகாரத்தில்' கதையைத் தழுவி ஆடும் ஆடல்கள் இருந்திருக்கின்றன. அதைத்தான் மாதவி ஆடி இருக்கிறாள். உதாரணம், பாண்டுரங்கம் என்பது சிவன் முப்புரம் எரித்த கதையாகும். அப்படி அவள் பதினொரு கூத்துகள் ஆடியதாக சிலப்பதிகாரம் கூறும். ஆனால் அதை ஆடியவர் ஒருவர்; பலர் அல்ல. நாம் கூறும் கூத்து பலர் கூடி கதை தழுவி ஆடும் கூத்தாகும். கூத்து என்றாலே கூடி ஆடுதல் என்று ஒரு கருத்தும் உண்டு.

கி.பி. 5ஆம் நூற்றாண்டின் பின்னால் வடமொழிப் புராணக் கதைகள், இதிகாசக் கதைகள் தமிழ்நாட்டை ஆக்கிரமிக்கத் தொடங்கின. அதன் பாரிய செல்வாக்கைப் பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் காணுகின்றோம். தேவாரம், திருவாசகங்களுக்கும், திவ்வியப் பிரபந்தங்களுக்கும் கதைகளை அளித்து அப்பாடல்களைச் செழுமை பெற வைத்தவை இந்தப் புராண, இதிகாசக் கதைகள்தான். பின்னால் கம்பராமாயணத்திற்கும், கந்தபுராணத்திற்கும், ஏனைய பாடல்களுக்கும், புராணங்களுக்கும் கரு கொடுத்தவை இவைதான். இதில் காணப்பட்ட கதைகளை வைத்துக்கொண்டு கூத்துகளை ஆடுகின்ற நிலைமை பின்னால் சோழர் காலத்தில், மிக விசேடமாக நாயக்கர் காலத்திலே தோன்றுகின்றன. அந்தக் கூத்துகளின் மூல ஊற்று வடமொழி புராண, இதிகாசக் கதைகளே; முக்கியமாக மகாபாரத, இராமாயணக் கதைகளாகும்.

இதிலே வருகின்ற இந்துமதம் சார்ந்த தெய்வங்கள் பிரதானப்படுத்தப்பட்டன. ஒரு வகையில் கூத்துகள் இந்து மதத்தை சாதாரண மக்கள் மத்தியில் பரப்புகின்ற சாதனமாக விளங்கின எனலாம். கூத்துகள் தமக்கென ஓர் அமைப்பையும் ஆற்றுகை முறையையும் பெற்றுவிட்டன.

தமிழ்ப் பண்பாடு காலம் தோறும் பல மதங்களை எதிர்கொண்டு வந்துள்ளது. முக்கியமான மதங்கள் வைதீகம், சமணம், பௌத்தம், சைவம், வைணவம், இஸ்லாம், கிறிஸ்தவம் என்பன. இவற்றுள் சமணம், பௌத்தம், இஸ்லாம் என்பன நாடகம், கூத்தின் பால் அதிக ஆர்வம் காட்டவில்லை. இந்துமதமும் அதன் இரு பிரிவான சைவம் - வைணவம், கத்தோலிக்கம் ஆகிய மதங்களே கூத்திற்கான கதைக்கருக்களை வழங்கியதுடன், கூத்தைத் தம் மதத்தோடு இணைத்துக்கொண்ட மதங்களுமாகும். இந்தக் கருத்தின் பின்னணியில்தான் மன்னார்க் கூத்து மரபையும் புரிந்துகொள்ள வேண்டும்.

16ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க மதமும் போர்த்துக்கேயரும் இலங்கை மண்ணில் காலடி வைக்கிறார்கள். அவர்கள் வருகையால் எழுந்த ஒரு பண்பாட்டுக் கலப்புப் பற்றி சென்ற கட்டுரையிலே விரிவாகப் பார்த்தோம்.

மன்னார்க் கடற்கரையோரம் கடல் மார்க்கமாகத் தரை தட்டிய போர்த்துக்கேய இராணுவமும் பாதிரிமார்களும் இந்து மதத்தின் ஆணிவேர்கள் புராண, இதிகாசக் கதைகள் என்றும், மக்கள் மத்தியில் அதைப் பிரசாரம் செய்கின்றவை முக்கியமாக கலை மூலமாகப் பிரசாரம் செய்தவை கூத்துகள் என்றும் கண்டுகொண்டார்கள். எனவே அவர்களும் அதே கூத்து வடிவத்தை எடுத்து, தாம் கொணர்ந்த வடிவத்தையும் சேர்த்துக் குழைத்து ஒரு புது நாடக வடிவமாக அளித்தனர்.

2. மன்னார்க் கூத்துகளுக்கு கதைக்கரு வழங்கிய ஊற்றுக்கண் - கத்தோலிக்கக் கதை மரபு

மன்னாரில் எழுந்த இந்தக் கூத்து நாடக வடிவத்திற்கு இந்துமதப் புராண, இதிகாசக் கதைகளைப் போல கிறிஸ்தவக் கதைகள் தேவைப்பட்டன. கிறிஸ்தவ

விவிலியத்தில் பல கதைகள் இருந்தன. ஆயினும் நாடகத்தன்மை பொருந்தியனவாக அவை இல்லை. ஆனால் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பிய அடியார்களின் கதை முக்கியமானதாக இருந்தது. அவர்கள் எதிர்கொண்ட துன்பம், வாதை என்பன நாடகத்தன்மை பொருந்தியனவாக, கோபம், துக்கம், பயம், இரக்கம் முதலான நாடக உணர்வுகளைத் தரக்கூடியனவாகக் காணப்பட்டன. எப்படி 'பெரியபுராணம்' பின்னாளில் சைவ மதப் பரம்பலுக்கு அடித்தளமாக இருந்ததோ, அதேபோல கத்தோலிக்க மதப் பரம்பலுக்கு சில முக்கிய நூல்கள் அடித்தளமாக இருந்தன. அதன் கதைகள் சிலவே மன்னார்க் கூத்தின் கருப்பொருள்கள் ஆகின. எடுத்துரைப்பு முறைகளும் கூத்துப் புலவர்களைப் பாதித்திருக்கலாம். அவற்றை நோக்குவோம்.



Image Source - globaltamilnews.net

ஒன்று, திருமறை, அதாவது விவிலியம் எனப்படும் பைபிள். இதில் பல கிறிஸ்தவக் கதைகள் இருந்தன. பைபிளில், புனிதர்கள் கத்தோலிக்க மதத்தை வளர்க்கப் பல வேதனைகளை அனுபவித்த 'வேதசாட்சிகள் வரலாறு' காணப்படவில்லை. அத்தோடு பைபிள் தமிழில் பின்னாளில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. மொழிபெயர்க்கப்பட்டபின் எழுந்த மன்னார்க் கூத்துகள் பைபிளின் வசனங்களின் தாக்கம் பெற வாய்ப்பிருந்திருக்கக் கூடும்.

இரண்டு, வியாகுலப் பிரசங்கம். இதிலே இயேசு மனிதனாக அவதரித்து பட்ட துயரங்கள் உணர்ச்சிமயமானவை; நாடக ஈர்ப்புத்தன்மை கொண்டவை; மனதை ஈர்த்து உள்ளிழுப்பவை.

மூன்று, சுவிசேச விரித்துரை. இது 1728ஆம் ஆண்டில் எழுதப்பட்டு 1848இல்தான் அச்சுவாகனம் ஏறியிருக்கிறது. சுவிசேச விரித்துரை வழிபாட்டை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

நான்கு, 'புளோஸ் சான்றோரும்' எனும் அடியார் வரலாறு. புளோஸ் சான்றோர் என்றால் தமிழில் புனிதர்களின் பூக்கள் என்று அர்த்தம்; அதாவது புனிதர் வரலாறு. புளோஸ் சான்றோர் என்பவர்கள் கிறிஸ்தவ மதத்தை ஏற்று, அதனைப் பரப்பும் முயற்சியில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, பலவித வாதைகள் பட்டு, மக்களுக்காக, மதத்துக்காக தம் உயிர் நீத்த பெரும் தியாகிகள். ஒரு வகையில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப பல வாதைகள் பட்ட இப்புனிதர்கள் கத்தோலிக்க மக்களால் மிக உயர்நிலையில் வைத்து மதிக்கப்பட்டனர். இந்த அடியார் வரலாற்றில் இருந்துதான் மன்னார்க் கூத்துகளுக்கான அதிகமான கதைக்கருக்கள் எடுக்கப்பட்டன.

ஐந்து, வாய்மொழியாக வந்த கத்தோலிக்கக் கதை மரபுகள். என்றீக் எம்பரதோர், ஞானசவுந்தரி நாடகங்கள் இந்த மரபில் வந்தனவாகும்.

கதைக்கருக்கள் கிடைத்ததும் அவற்றை வைத்துக்கொண்டு கூத்துகள் எழுத வேண்டிய நிலைக்கு புலவர்கள் வந்தனர். புதிய கூத்துகள், நாடகங்கள் மன்னாரில் உருவாக ஆரம்பித்தன.

3. மன்னார்க் கூத்துகளை எழுதிய புலவர்கள்

மன்னார் - மாதோட்டம் பல்வேறு சாதிக் குழுமங்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகும். மீன்பிடியும், விவசாயமும், வாணிபமும் அங்கு முக்கிய தொழில்களாக இருந்தாலும், தொழில்சார் பிரிவுகளாகப் பிரிந்த சில சாதிகளும் அங்கே இருந்தன. இவர்கள் அனைவரையும் ஈர்க்க வேண்டிய அல்லது ஒன்று சேர்க்க வேண்டிய மிகச் சிரமான ஒரு பணியைக் கத்தோலிக்க மதத்திற்கு வரலாறு வழங்கியிருந்தது.

சாதிப் பிரிவினைகள் என்பதும், சாதியில் உயர்வு, தாழ்வு என்பதும் தமிழரிடையே மிக ஆழமாக வேரூன்றிப் போன ஒரு பண்பாடாகும். இந்தச் சாதி என்ற பண்பாட்டை இந்துக் கோயில்கள், சில கோயில் வழிபாடுகள், திருவிழாக்களுக்கான உரிமைகள், கடமைகள் என்பன மேலும் இறுக்கின. சாதி அமைப்பு மாறாமல் அப்படியே இருக்க வைப்பதில் இக்கோயில்களும், கோவில் வழிபாடுகளும், கோவில் உரிமைகளும் மறைமுகமான, ஆனால் ஆழமான பங்கை ஆற்றின.

கத்தோலிக்க மதம் கண்ட பாதை

இந்தப் பிரிவினைகளைக் கடந்து மன்னார் மாதோட்டப் பிரதேசப் பகுதியில் வாழ்ந்த அனைவரையும் ஒன்றாக்கும் முயற்சியில் கத்தோலிக்க மதமும், அதனைப் பரப்ப முன்வந்த கத்தோலிக்கப் பாதிரிமாரும், அவர்களோடு ஊர்ப் புலவர்களும் ஈடுபட்டனர் போல் தெரிகிறது. அவர்களுள் ஒரு பிரிவினரே இந்தக் கூத்து எழுதும் புலவர்கள். கூத்து எழுதும் புலவர்கள் மூன்று வகையினர்:

1. ஒன்று, இலக்கண இலக்கியம் பயின்றவர்கள்.

2. இன்னொன்று, இயல்பாகவே பாட்டு எழுதுகின்ற வரகவிகள்.

3. மூன்றாவது, பட்டறிவோடு, அதாவது கூத்துகளைப் பார்த்து, அதில் பயின்று, அந்த அறிவோடு கூத்துகளை எழுதுபவர்கள்.

இதிலேயே முதல் நிலையில் எழுதுகின்ற கூத்துகள் கரடு முரடான சொற்களையும், விளங்காத சொற்களையும் கொண்டிருக்கும். புலவர்களின் வித்துவத்தன்மை அதில் தெரியும். இதனை நாம் ஒருவகையில் வித்துவப் போட்டி எனப் புரிந்துகொள்ளலாம். இந்தப் புலவர்களுக்குள்ளே ஒரு முக்கியமான புலவர் தான் லோறன்சுப் பிள்ளை அவர்கள்.

லோறன்சுப் பிள்ளையும் அவர் மாணவர்களும்

இவர் ஒரு பெரும் புலவர் ஆவார். இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்றவர். தம்மிடம் கற்ற மாணாக்கருக்கு முறையான இலக்கண இலக்கிய அறிவு ஊட்டியவர். இவரது மாணவர்களாக முக்கியமானவர்களாகப் பின்வருவோர் கூறப்படுகிறார்கள்.

1. 12 அப்போஸ்தலர்கள் பற்றி 12 நாடகங்கள் எழுதிய மரியானுப் புலவர் முக்கியமானவர். இவர் பரவர் குலத்தைச் சேர்ந்தவர்.

2. என்றீக் எம்பரதோர், தென்பாங்கு நாடகம், திருச்செல்வர் நாடகம் எழுதிய குருகுல நாட்டுத்தேவர். இவர் பரவர் குலத்தைச் சேர்ந்தவர்.

3. கோது கப்பித்தான் நாடகம் எழுதிய சந்தியோகுப் புலவர். இவர் கம்மியர் குலத்தினர்.

4. மரிகருதாள் நாடகம் எழுதிய வெள்ளைப்புலவர். இவர் நாடார் குலத்தினர்.

5. தைரியராசன் நாடகம் எழுதிய சூசைப் புலவர். இவர் கடையர் குலத்தினர்.

இந்த வகையிலே லோறன்சுப் பிள்ளையவர்கள் பல சமூகத்தவர்க்கும் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்ததோடு, நாடகமும் எழுதப் பயிற்றுவித்தார் போலத் தெரிகிறது. இதனால் இந்த நாடக வடிவம் ஒரு தனிச் சமூகத்திற்கானதாக அல்லாமல், மன்னாரில் வாழுகின்ற பல்வேறு சமூகங்களையும் சென்றடைந்தது. இதனால் மன்னார் மரபு நாடகச் செயல்பாடு முழு மக்களையும் சென்றடையவும், கூத்து ஆற்றுகை செழுமை பெறவும் வாய்ப்புகள் உண்டாயின. மன்னார் மாதோட்டப் புலவர் வரலாற்றை எடுத்துப் பார்க்கின்ற பொழுது அது: சாகியம் வழி வந்ததாகவும், குடும்ப வழி வந்ததாகவும், குருசிஷ்ய மரபு வழி வந்ததாகவும் காணப்படுகிறது.

நான் இங்கு குறிப்பிட்டது குருசிஷ்ய மரபு வழி வந்ததுதான். இந்த மரபுதான் குடும்பத்தையும் சாகியத்தையும் மீறி பொது முறையாகவும், புது நெறியாகவும் எழுந்து மன்னாருக்கான ஒரு பொதுக் கூத்து, அதுவும் கத்தோலிக்கக் கூத்து மரபு உருவாக வழி சமைத்தது எனலாம்.

மன்னார்க் கூத்துகளை தென்பாங்கு, வடபாங்கு, வாசாப்பு என மூன்று முக்கியப் பிரிவினுள் அடக்குவர். வடபாங்கு என்பது யாழ்ப்பாணத் தாக்கம் பெற்றது என்றும், தென்பாங்கு என்பது மன்னாருக்குரியது என்றும், வாசாப்பு என்பது புது வகையான கூத்துத் தன்மை கொண்டு நாடகமாக மாறி இன்னொரு வகையாக மலர்ந்த கூத்து என்றும் நாங்கள் புரிந்துகொள்ளலாம்.

4. மன்னார்க் கூத்து வகைகள்

இலங்கையின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள மன்னார் பல இன, சமய, மொழி மரபுகள் சந்திக்கும் ஒரு முக்கியமான பண்பாட்டு வெளி ஆகும். இப்பகுதியின் ஆற்றுகை மரபுகள் வெறும் பொழுதுபோக்கு நிகழ்வுகளாக அல்லாமல், சமூக நினைவுகள், சமய நம்பிக்கைகள், வரலாற்று அனுபவங்கள், மக்களின் கலை அறிவு ஆகியவற்றைத் தாங்கி நிற்கும் பண்பாட்டு வெளிப்பாடுகளாக அமைகின்றன. குறிப்பாக மன்னாரில் தமிழ் மக்களிடையே வளர்ந்த கூத்து, நாடகம், வாசாப்பு, பாஸ்கா போன்ற நிகழ்த்தல் வடிவங்கள் மன்னாரில் தனித்துவமான அரங்கேற்ற மரபை உருவாக்கியுள்ளன.

மன்னாரின் ஆற்றுகை மரபுகளைப் புரிந்துகொள்வதற்கு எழுத்து இலக்கிய வகைப்பாடுகளை மட்டும் பயன்படுத்த முடியாது. அங்கு வாழும் மக்களின் நடைமுறை அறிவு, அவர்கள் ஒரு நிகழ்த்தலை எவ்வாறு பெயரிடுகிறார்கள், எவ்வாறு நடத்துகிறார்கள், எந்தச் சமூகச் சூழலில் நிகழ்த்துகிறார்கள் என்பவையே முக்கியமானவை.

மன்னாரின் ஆற்றுகை மரபின் பின்னணி

மன்னாரின் ஆற்றுகை மரபு பல அடுக்குகளைக் கொண்டது. இந்த மரபில் இந்து, கத்தோலிக்க, நாட்டார் நம்பிக்கைகள், காலனித்துவ காலத்தின் தாக்கங்கள், தென்னிந்திய நாடக மரபுகள் ஆகியவை ஒன்றோடொன்று கலந்துள்ளன.

கிராமச் சமூகத்தின் ஆலயத் திருவிழாக்கள், சமய விழாக்கள், சமூகக் கூடல்கள் போன்றவை

இந்நிகழ்த்தல்களின் முக்கியமான அரங்குகளாக இருந்தன. ஆற்றுகை என்பது நடிகர்களின் திறமையை மட்டும் வெளிப்படுத்தும் இடமல்ல; ஒரு சமூகத்தின் ஒற்றுமை, நினைவு, நம்பிக்கை ஆகியவற்றை மீண்டும் உருவாக்கும் சடங்கு சார்ந்த செயற்பாடாகவும் இருந்தது.

மன்னார் ஆற்றுகை மரபின் முக்கிய வகைகள்
அ. பாஸ்கா

மன்னாரின் கத்தோலிக்கச் சமூகத்தில் பாஸ்கா முக்கியமான ஆற்றுகை வடிவமாகும். இயேசு கிறிஸ்துவின் பாடுகள், சிலுவைப்பாடு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகிய கிறிஸ்தவக் கருத்துகளை நாடக வடிவில் வெளிப்படுத்துவது இதன் மையமாகும். இதற்கு அடிநாதம் வியாகுலப் பிரசங்கம். இந்தப் பிரசங்கத்தை எடுத்துரைக்கும் விதம் மிக நாடகத்தன்மை பொருந்தியது. இதை எடுத்துரைக்கும் முறை கட்டுப்பாடாகப் பயிற்றப்பட்டது என அறிகிறோம். எனினும் எடுத்துரைப்பு முறையில் சிற்சில வேறுபாடுகள் உண்டு என்பர் சிலர். பாஸ்கா ஒரு சமய நிகழ்வு மட்டுமல்ல. இதில் இசை, பாடல், உடை, ஒப்பனை, நடிப்பு, குழு ஒழுங்கு ஆகியவை இணைந்து ஒரு முழுமையான நிகழ்த்தல் அனுபவத்தை உருவாக்குகின்றன. சமூகத்தின் சமய உணர்வும் கலை வெளிப்பாடும் இதில் ஒன்றிணைகின்றன.

ஆ. நாடகம்

மன்னார் மக்களின் வழக்கில் 'நாடகம்' என்பது பொதுவாக இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட இரவுகள் நடைபெறும். இது ஒரு குறிப்பிட்ட கதையை மையமாகக் கொண்டு பாடல், வசனம், நடிப்பு ஆகியவற்றுடன் நடைபெறும். எம்பரதோர், மூவிராசாக்கள் போன்ற கதைகள் சில இடங்களில் நாடக வடிவில் நிகழ்த்தப்பட்டுள்ளன. இங்கு 'நாடகம்' என்பது மேலைநாட்டு அரங்கியல் பொருளில் மட்டும் பயன்படுத்தப்படும் சொல் அல்ல; அது மக்களின் உள்ளூர் பயன்பாட்டில் உருவான ஒரு வகைப்பாடாகும்.

இ. வாசாப்பு

வாசாப்பு என்பது மன்னார் கத்தோலிக்கத் தமிழ் மரபின் முக்கியமான நீண்டகால நிகழ்த்தல் வடிவமாகும். இது ஒரு இரவில் நடத்தப்படுவதாகும். வாசாப்புகளில் கதை விரிவாகச் சொல்லப்படும். இதனால் இது ஒரு சமூகக் கூடுகையாகவும், தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் பண்பாட்டு நினைவாகவும் விளங்குகிறது.

வடபாங்கு - தென்பாங்கு மரபு

மன்னார்க் கூத்து மரபில் வடபாங்கு, தென்பாங்கு என்ற வகைப்பாடுகளும் முக்கியமானவை. யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த கூத்து மரபை வடபாங்கு என்றும், மன்னார்க் கூத்து மரபை தென்பாங்கு என்றும் கூறும் மரபு இருந்ததாகவும் அறிகிறோம். இவை வெறும் புவியியல் பிரிவுகள் அல்ல; இசை, நடன அசைவு, பாடல் முறை, பாத்திர அமைப்பு, நிகழ்த்தல் பாணி ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகளையும் குறிக்கின்றன. ஒரு கூத்து வடபாங்கா அல்லது தென்பாங்கா என்பதை அதன் கதை மட்டும் தீர்மானிப்பதில்லை. அந்தந்தச் சமூகத்தில் அது எவ்வாறு ஆடப்படுகிறது என்பதுதான் முக்கியம் என்பது சிலர் முடிவு.

உள்ளூர் அறிவும் வகைப்பாடும்

மன்னார் ஆற்றுகை மரபின் மிக முக்கியமான அம்சம் மக்களின் சொந்த வகைப்பாட்டு அறிவாகும். கல்விசார் நாடகவியல் வகைப்பாடுகள் ஒரு நிகழ்த்தலை 'நாடகம்', 'கூத்து', 'சடங்கு' என்று பிரிக்கலாம்.

ஆனால் மன்னார் மக்கள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் 'பாஸ்கா', 'நாடகம்', 'வாசாப்பு' என்று வேறுபடுத்துகின்றனர். இவ்வகைப்பாடுகள் நிகழ்த்தலின்: கால அளவு, சமயப் பயன்பாடு, நிகழ்த்தல் முறை, சமூகப் பங்கு, பாரம்பரியத் தொடர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் உருவானவை.

மன்னாரின் ஆற்றுகை மரபு என்பது பல நூற்றாண்டுகளாக வளர்ந்துவரும் ஓர் உயிருள்ள மக்கள் கலை மரபாகும். பாஸ்கா, நாடகம், வாசாப்பு, கூத்து மரபுகள் ஆகியவை தனித்தனி கலை வடிவங்கள் மட்டுமல்ல; அவை மன்னார் மக்களின் சமூக நினைவையும் பண்பாட்டு அடையாளத்தையும் வெளிப்படுத்தும் நிகழ்த்தல் முறைகளாகும்.

எனவே மன்னார் ஆற்றுகை மரபை ஆராயும்போது, வெளியிலிருந்து கொண்டுவரப்படும் நாடகவியல் வகைப்பாடுகளை மட்டும் பயன்படுத்தாமல், அந்த மக்களின் சொந்த நிகழ்த்தல் அறிவையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதுவே மன்னார் ஆற்றுகை மரபின் உண்மையான தனித்துவத்தை வெளிப்படுத்தும்.

5. அவை (கூத்துகள்) நிகழ்த்தப்படும் முறை

இந்தக் கூத்து நிகழ்த்தும் முறை பற்றி 'மன்னார் மாதோட்டக் கத்தோலிக்க நாடகங்கள்' என்னும் நூலிலே அன்புராசா அடிகளார் கூறுவது முக்கியமான குறிப்புகள் ஆகும். நாடகச் செயற்பாடு, அதில் ஈடுபடுவோர், அது உருவாகும் முறை பற்றி அவர் பின்வருமாறு கூறுவார்.

நாடகத்தில் ஈடுபடுவோர்

1. புலவர்கள்.
2. அண்ணாவிமார்கள்.
3. படி ஏற்றுக்காரர், அதாவது ஏடு வாசிப்பவர்.
4. .பிரதிக்கியார், அதாவது நடிகர்களுக்குத் தாய்க் கொப்பியிலிருந்து பிரதி எடுத்துக் கொடுப்பவர்.
5. நாடகத்தை நடத்துகின்ற சமூகத் தலைவர்.
6. பிற்பாட்டுச் சேர்ப்பவர்கள்.
7. பக்கவாத்தியக்காரர்கள்.
8. சபையோர்.

இதற்கு மேலால் முக்கியமான ஒருவர்: 9. பங்குக்குரு. இந்தப் பங்குக்குரு அனுமதி அளித்தால்தான் அந்த நாடகம் மேடை ஏற்றப்படும். எல்லாவற்றையும் முறையாகத் தயாரித்த பின்னர் இறுதியாக அதனுடைய சூட்சுமக் கயிறு பங்குக்குருவானவர் கையிலே கொடுக்கப்பட்டுள்ளது. அவர்தான் அதற்குப் பொறுப்பு. கத்தோலிக்க மதக் கருத்துகளுக்கு எதிரான கருத்துகள் வருகிறதா என்பதைக் கவனிப்பதிலும், வேறு பல விடயங்களைக் கவனிப்பதிலும் அவதானமாகவும், அதிக கவனமாகவும் இருந்திருப்பார் என்று எண்ண வாய்ப்பு உண்டு.

நம்பிக்கைச் சடங்கு

1. மேடை போடத் தீர்மானித்தல்.
2. கூத்து எழுதிய புலவரின் சம்மதம் பெறல்.
3. ஏட்டை அவிழ்த்தல்.
4. பாத்திரமேற்றல். நாடகக் குழுவின் தீர்மானத்திற்கு ஏற்ப பாத்திரம் வழங்கப்படும்.
5. பட்டோலை வைபவம். அதாவது அந்தப் பாத்திரங்களுக்கான தேர்வு.

என்பன இதற்குள் அடங்கும்.

பயிற்சிகள்

பயிற்சி பற்றிக் கூறுகின்ற பொழுது சுவாரஸ்யமான விஷயங்களை அறிகிறோம்.

அ. கூடிப் படித்தல்

புலவர்களால் எழுதப்பட்ட ஓர் ஏட்டைத் தெரிதல். எதனை ஆடப்போகின்றோம் என்று தெரிந்த பின் கூடிப் படிக்கின்ற நிகழ்வு ஆரம்பமாகும். கூடிப் படிப்பது என்பது ஏற்கனவே இந்தக் கூத்து அனுபவம் உள்ளவர்களைக் கூட்டி, அவர்களிடமிருந்து ஆலோசனை பெறுவதும், அவர்களோடு சேர்ந்து பாடல்களைப் பாடிப் பார்ப்பதும் ஆகும்.

ஆ. ஏசார்

இரண்டாவது பகுதியிலே முறையான பயிற்சி ஆரம்பமாகும். அதனை அண்ணாவியார் தலைமையேற்றுச் செய்வார். இது ஏசார் என அழைக்கப்படும்.

இ. கச்சை கட்டல்

இது ஏனைய கூத்துகளின் சலங்கை கட்டுகின்ற வைபவம் போன்று இருக்கும்.

ஈ. ஒத்திகைகள்

அடுத்து ஒத்திகைகள் ஒழுங்காக நடைபெறும்.

உ. ஊர் மறியல்

அதாவது பங்குக்குருவானவர், ஊரெல்லாம் சேர்ந்து அதைச் செய்ய வேண்டும் என்று அழுத்தி, முழு ஊரையும் அதிலே பங்கு கொள்ளச் செய்வது ஆகும். இந்த இடத்தில் கூத்து ஒரு தனிப்பட்ட ஆளுடைய கூத்தாக அல்லது தனிப்பட்ட சமூகத்தின் கூத்தாக அல்லாமல், ஒரு சமூக வைபவமாக மாறுகிறது. ஒரு வகையில் ஒரு கோவில் உற்சவம் அல்லது கோவில் சடங்கு என்பது அவசியமாக எல்லோரும் கூடி, ஒருவர் விடாமல் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஏற்படுத்திவிடுகிறது.

நாடகம் நடைபெறும் மேடை

இந்தக் கூத்துகள் எத்தகைய மேடையிலே நடிக்கப்பட்டன என்பது ஒரு முக்கியமான விஷயமாகும். மன்னாரில் வட்டக் களரியிலே கூத்துகள் ஆடப்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை. ஆனால் ஆடல் முறைகள் இருந்ததன் காரணத்தினாலும், கத்தோலிக்க வருகைக்கு முன்னர் கூத்துகள் இருந்தமையினாலும், வட்டக் களரிலே கூத்துகள் ஆடப்பட்டு இருக்கலாம் என்று நாங்கள் ஊகிக்கலாம்.

ஒரு பக்கம் அடைக்கப்பட்ட மேடையும், முப்பக்கம் பார்வையாளர்கள் இருந்து பார்க்கின்ற மேடையும் இருந்ததாகத் தகவல் கிடைக்கின்றது. ஆனால் பின்னாளில் மூன்று பக்கம் அடைக்கப்பட்ட கொட்டகைகளே நாடகம், கூத்து மேடைகளாக மாறிவிட்டன. அங்கு படுதாக்கள், அதாவது திரைகள் தொங்கவிடும் பண்பும், அதன் பின் காட்சிகள் தீட்டப்பட்ட திரைச்சேலைகள் மேடையில் தொங்கவிடும் முறையும் தோன்றிவிடுகின்றன. வலது

பக்கப் படுதாவின் பின்னால் அண்ணாவியாரும் பாட்டுக்காரரும் இருக்க, இடது பக்கப் படுதாவினூடாக நடிகர்கள் வந்து செல்லும் மரபும் உண்டானது. சபரிக்கை என்ற ஓர் இடம் அருகிலே உருவாக்கப்படும். அதுவே ஒப்பனை செய்கின்ற இடம் ஆகும்.

நாடகம் அரங்கேறுமுன் சில சடங்குகள்

நாடகம் அரங்கேற்றும் முன்னர் சில மரபுகள் பேணப்பட்டன என அறிகிறோம்.

1. பந்தம் கொழுத்தல்.

2. நாடகத்துக்கு முன் சில உரைகள்.

3. பெரியோரைக் கௌரவித்தல்.

4. களரி கட்டுதல்.

5. திரை பிடித்தல்.

6. வெள்ளை விரித்தல்.

7. பந்தலைக் காவல் காத்தல்.

என்ற ஆரம்பச் சடங்குகள் நடந்த பிறகு கூத்துகள் ஆரம்பமாகி நடைபெறும். ஓர் இரவிலும் கூத்துகள் நடைபெறும்; இரண்டு இரவுகளிலும் கூத்துகள் நடைபெறும். ஓர் இரவு நாடகத்தை கூத்து என்றும், இரண்டு இரவு நாடகத்தை நாடகம் என்றும் அழைப்பார்கள் என அறிகிறோம்.

6. மன்னார்க் கூத்து மரபின் தனித்துவங்கள்

மன்னார்க் கூத்து, ஈழத் தமிழர் நிகழ்த்து கலை மரபுகளில் தனித்துவமான ஒரு பிராந்திய வடிவமாகும். இது வெறும் பொழுதுபோக்கு நாடகம் அல்ல; மன்னார் சமூகத்தின் சமய, சமூக, பண்பாட்டு வாழ்வோடு இணைந்த ஒரு கூட்டு நிகழ்த்து கலையாகும்.

முதலாவதாக, மன்னார்க் கூத்தின் முக்கியமான தனித்துவம் அதன் கத்தோலிக்கத் தன்மை ஆகும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பகுதிகளின் கூத்துகள் பெரும்பாலும் இந்து சமயக் கோவில் மரபுகளுடன் தொடர்புடையவையாக இருந்தபோதிலும், மன்னாரில் கூத்து பெரும்பாலும் கத்தோலிக்கத் தேவாலயப் பின்புலத்தில் வளர்ந்தது. குறிப்பாக வாசாப்பு (வாசிப்பு நாடகம்) போன்ற வடிவங்கள் இயேசுவின் பாடுகள், புனிதர்களின் வரலாறு, விவிலியக் கதைகள் போன்றவற்றை நாடக வடிவில் வெளிப்படுத்தின.



Image Source - arudkadal.com

இரண்டாவதாக, இது ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது தொழில் குழுவின் கலை அல்ல. மன்னார் பிரதேசத்தின் பல ஊர்களிலும் பல்வேறு சமூகத்தினராலும் கூத்து நிகழ்த்தப்பட்டது. இதனால் இது சமூகப் பங்கேற்பை அடிப்படையாகக் கொண்ட மக்கள் கலை வடிவமாக விளங்கியது.

மூன்றாவதாக, மன்னார் கூத்து முழு ஊரின் கூட்டு முயற்சியாக அமைந்தது. நடிகர்கள் மட்டுமல்லாமல், பாடல் பயிற்சி, ஆடைத் தயாரிப்பு, மேடை அமைப்பு, செலவுகள், விழா ஏற்பாடுகள் போன்ற அனைத்திலும் ஊர் மக்கள் பங்கெடுத்தனர். ஆகவே கூத்து ஒரு கலை நிகழ்ச்சி மட்டுமல்ல; அது சமூக ஒற்றுமையை உருவாக்கும் ஒரு பண்பாட்டு நிகழ்வாக இருந்தது.

நான்காவதாக, பங்குத் தந்தை அல்லது பங்குக்குருவின் வழிகாட்டுதல் மன்னார்க் கூத்து மரபில் முக்கியமான இடம்பெற்றது. தேவாலயத்துடன் தொடர்புடைய நிகழ்வாக இருந்ததால், கதைத்தேர்வு, ஒழுங்கமைப்பு, கால அட்டவணை போன்றவற்றில் குருவின் பங்கு காணப்பட்டது.

ஐந்தாவதாக, மன்னார்க் கூத்து கோவிலை மையமாகக் கொண்ட கலை வடிவமாகத் தோன்றியது. தேவாலயத் திருவிழாக்கள், புனிதர் விழாக்கள் போன்ற சமய நிகழ்வுகளோடு இணைந்து இது வளர்ந்தது. இதனால் இதன் கலை வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் சமய உணர்வு பிரதிபலிக்கிறது.

ஆறாவதாக, மன்னார்க் கூத்தின் மேடை அமைப்பு மற்ற சில கூத்து மரபுகளிலிருந்து வேறுபடுகிறது. மட்டக்களப்பு, வடமராட்சி போன்ற பகுதிகளில் காணப்படும் வட்டக்களரி மரபைப் போல அல்லாமல், மன்னாரில் கூத்து பெரும்பாலும் ஒருபக்கம் அல்லது முப்பக்கம் அடைக்கப்பட்ட மேடைகளிலும், திரை அமைப்புகளுடனும் நிகழ்த்தப்பட்டது. இது மேடை நாடகத் தன்மையை அதிகமாகக் கொண்டிருந்தது.

ஏழாவதாக, மன்னார்க் கத்தோலிக்க நாடக மரபுகள் இலங்கையின் பரந்த நாடக வளர்ச்சியில் தாக்கம் செலுத்தின. குறிப்பாக போர்த்துக்கேயர் காலத்திலிருந்து வந்த கிறிஸ்தவ நாடக மரபுகள் பின்னர் சிங்களப் பகுதிகளிலும் கத்தோலிக்க நாடக வளர்ச்சிக்கு உதவின. எனவே மன்னார் மரபு இலங்கையின் கிறிஸ்தவ நாடகப் பண்பாட்டின் ஒரு முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது. எட்டாவதாக, மன்னார்க் கூத்து, ஈழத்தின் பிற கூத்து மரபுகளைப் போல முழுமையாக வடமொழி புராண-இதிகாசக் கதைகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளுக்குப் பதிலாக, கிறிஸ்தவ விவிலியக் கதைகள், புனிதர்களின் வாழ்க்கை, இயேசுவின் பாடுகள் போன்றவை இதன் கதையம்சங்களாக அமைந்தன. இதுவே இதன் மிக முக்கியமான தனித்துவங்களில் ஒன்றாகும். மன்னார் மாவட்டத்தில் மிகப்பெரும் செல்வங்களுள் ஒன்று நாடகங்கள் ஆகும். ஒரு நாடகத்தை மேடையேற்றாத ஊரோ, கிராமமோ இருக்க முடியாது என்பார் அன்புராசா அடிகளார். "ஊர் ஊராய்க் கூத்தாடும் ஊரம்மா" என்று ஒரு கவிஞன் மட்டக்களப்பைக் கூறினான். மன்னார்க் கூத்து மரபைப் பார்க்கும் போது, "குக்கிராமங்கள் எல்லாம் கூத்தாடும் ஊரம்மா" என்று சொல்லத் தோன்றுகிறது.

அந்த மரபு இன்றும் வாழும் மரபாக மன்னாரில் தொடர்வதுதான் முக்கியமாகப்படுகிறது. மட்டக்களப்பில் மத நிறுவனம் முன்னிற்காமையும், மன்னாரில் மத நிறுவனம் முன்னின்று கூத்தை நடத்துவதும் குறிப்பிடத்தக்கது. ஏன் மன்னார்க் கத்தோலிக்க மக்களிடையே இந்த நாடகம் தொடர்ச்சியாகவும், பெருவாரியாகவும் இன்றும் இடம்பெற்று வருகிறது என்பது ஆய்வாளர் முன்னுள்ள வினாவாகும். இதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

மன்னார்க் கூத்து மரபு தொடர்ந்தும் மக்கள் மத்தியில் நிலைப்பதற்கான காரணங்கள்

1. ஒன்று, இதற்கு கத்தோலிக்க மத நிறுவனம் சார்ந்த பங்குத்தந்தை, கத்தோலிக்கக் குருமார், ஆயர் போன்றோர் தரும் ஆதரவும் ஊக்கமும்.

2. இரண்டு, சமூகமாகத் திரளவும் அதன் இருப்பை வெளிப்படுத்தவும் இது உதவுவது.

3. மூன்றாவது காரணம், முக்கியமான காரணம், இந்த நாடகம் கூறும் உள்ளடக்கமாகும். இறையடியார் காட்டில் விடப்படுதல், கழுவேற்றப்படுதல், அம்பு எய்தப்படல், தீச்சூளையில் தள்ளப்படுதல், அவயங்கள் வெட்டப்படல், அடித்துக் கொல்லப்படல் போன்ற துன்பியல் காட்சிகள் மக்களின் உணர்வோடு ஒன்றிக்கின்றன. மனித வாழ்வு இன்றைய சூழலில் மிக மிகத் துன்பகரமானது. பொருளாதார, சமூகச் சுமைகளினால் துன்புறும் மக்களுக்கு துன்புறல், அதனின்று இறையருளால் மீளல் என்பன ஓர் உளவியல் ஆறுதலாகவும் அமைகின்றன. இதனால் ஊர் தோறும், கிராமம் தோறும் கூத்துகள், நாடகங்கள், வாசாப்புகள் மேடையேறுகின்றன. குழந்தைகள் முதல் பெரியவர் வரை ஈடுபடுகிறார்கள். ஒரு பாரம்பரியம் கடத்தப்படுகிறது. கூத்து, நாடகம் அல்லது வாசாப்பு போடுகையில் சாதி கலந்து கூத்தாடும், நாடகமாடும் வழக்கம் இன்னும் மன்னாரில் வலிமை பெறவில்லை. சில இடங்களில் இம்மரபு மீறப்பட்டிருப்பினும், பொது ஓட்டம் அதுவல்ல என்பதையும் கள ஆய்வுகள் காட்டுகின்றன என்பதும் மனம் கொள்ளத்தக்கது.

முடிவுரை

மொத்தத்தில், மன்னார்க் கூத்து என்பது:

1. கத்தோலிக்க சமயப் பின்னணியில் உருவான,

2. ஊர் முழுவதையும் இணைக்கும்,

3. தேவாலயத்தை மையமாகக் கொண்ட,

4. மேடை நாடகத் தன்மை அதிகம் கொண்ட,

5. ஈழத்தின் ஏனைய கூத்து மரபுகளிலிருந்து வேறுபடும்,

6. வாழ்வின் சுமையால் அழுந்துகின்ற மனித மனங்களுக்கு மன ஆறுதலை அளிக்கும்

தனித்துவமான ஒரு மக்கள் நிகழ்த்து கலை மரபாகும்.

இது ஈழத் தமிழ் நாடக வரலாற்றில் தனித்துவமான ஒரு கிளையாக மட்டுமல்லாமல், இலங்கையின் பல்சமய நாடக வளர்ச்சியையும் புரிந்துகொள்ள உதவும் முக்கியமான பண்பாட்டு ஆதாரமாகவும் விளங்குகிறது.

மன்னார்க் கூத்து மரபு ஒரு தங்கச்சுரங்கம். அதைத் தோண்டும் முயற்சிகள் 1960களில் ஆரம்பமாகிவிட்டன. ஆயினும் அதன் ஆழம் இன்னும் முழுமையாக அறியப்படவில்லை. இத்தோண்டலில் பலர் ஈடுபட்டனராயினும், அந்தக் கூத்து மரபினுள் இருந்து வந்த அன்புராசா அடிகளாரின் தோண்டுதல் அரிய பல தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளது என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஈழத்துக் கூத்து மரபின் தனித்துவமான இன்னொரு வகைக் கூத்து மரபு உண்டு. இது வடமொழி புராண, இதிகாச, கத்தோலிக்க மரபில் வராத மரபு; தமிழ் மரபில் உருவான மரபு. அந்த இன்னொரு வகையான கூத்து முல்லைத்தீவு கோவலன் கூத்து மரபு ஆகும்.

இலங்கைத் தமிழர்களிடையே கண்ணகி வழிபாடு என்றும் சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடு என்றும் வழங்கப்பட்டு வரும் வழிபாடுகளுடன் தொடர்புடைய சடங்குசார் நிகழ்த்து கலைகளில் ஒன்றாகவே 'கொம்புமுறி' விளையாட்டு இடம்பெற்று வருகின்றது. இக்கொம்புமுறி விளையாட்டு சமயம், கலை ஆகிய இரு துறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இது சிங்களவர்களால் 'அங்கெலிய' என்று அழைக்கப்படுகின்றது. இந்நிகழ்வு ஆடி மாதத்தில் அறுவடைக்குப் பின்னரான காலப்பகுதியில் நிகழ்த்தப்படுவது வழக்கம். தமிழர்களின் கொம்புமுறிக்கும் சிங்களவர்களின் அங்கெலியவிற்கும் பல ஒற்றுமைகள் இருப்பினும் அவை தமக்கிடையே தனித்துவமான பண்புகளையும் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் கண்ணகி வழிபாட்டிற்கும் அதனுடன் தொடர்புடைய நிகழ்த்து கலையான கொம்புமுறி விளையாட்டுக்கும் இடையிலான தொடர்பினையும், அதன் சமுதாய மானிடவியல் பின்புலத்தினையும், கொம்புமுறி விளையாட்டின் சடங்குசார் நிகழ்த்துகலை முறைமையினையும், தமிழ் – சிங்கள கொம்புமுறி விளையாட்டுகளுக்கு இடையிலான ஒற்றுமை – வேற்றுமைகளையும் ஆராய்வதாக 'கொம்புமுறி விளையாட்டு: இலங்கையில் கண்ணகி – பத்தினி வழிபாட்டின் எச்சம்' எனும் இத்தொடர் இடம்பெறுகின்றது.

கண்ணகி வழிபாட்டில் கொம்புமுறி விளையாட்டு

கிருபாகரன் கவிதாஞ்சன்

கிருபாகரன் கவிதாஞ்சன் மட்டக்களப்பு மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்பு இளங்கலைமாணிப் பட்டத்தையும் அதே பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை மாணிப் பட்டத்தையும் பெற்றவர் ஆவார்.

தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முது தத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வாளராக தொடர்ந்தும் தனது கல்விப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார். நாட்டுப்புறவியல், நாடகமும் அரங்கியிலும் ஆகிய துறைகளிலும் பல ஆக்கங்களைத் தற்காலத்தில் எழுதி வருகின்றார். என்பதோடு இவர் சிறந்த மேடை நடிகரும் ஆவார்.



கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்குசார் நிகழ்த்துகலைகளுள் ஒன்றாகக் கொம்பு விளையாட்டு காணப்படுகின்றது. இவ்விளையாட்டு அறுவடைக்குப் பின்னரான காலப்பகுதியில் நிகழ்த்தப்படுவது வழக்கம். மழைவளம் குன்றி நாட்டில் வெப்ப மிகுதியால் அம்மை, வைசூரி, குக்கல், வெப்பு, செங்கமாரி, கண்ணோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்ற போது அம்மனின் சீற்றத்தினாலேயே அவை ஏற்படுகின்றன என்ற அசையாத நம்பிக்கையினாலும் அவ்வியாதிகளைத் தீர்க்கின்ற தெய்வம் என்று பாராட்டியும் பக்தர்கள் அம்மனிற்குச் சாந்தி செய்ய வேண்டி இக்கொம்பு விளையாட்டை நிகழ்த்துகின்றனர்.

கொம்பு என்ற சொல் விலங்குகளின் கொம்புகளைப் பற்றிய எண்ணத்தையே பொதுவாக நமக்கு ஊட்டுவது ஆயினும் இங்கு குறிப்பிடும் கொம்பு என்பது மரங்களில் இயல்பாக அமைந்து காணப்படும் வளைதடி ஒன்றே என்பதைப் பயின்றோர் உடனே அறிந்து கொள்ளுதல் கூடும்.[1]

இவ்விளையாட்டு கிழக்கிலங்கையில் பட்டிமேடு, தம்பிலுவில், காரைதீவு, வீரமுனை, நீலாவணை, கோட்டைக்கல்லாறு, எருவில், களுதாவளை, தேற்றாத்தீவு, முதலைக்குடா, மகிழடித்தீவு, கன்னன்குடா, வந்தாறுமூலை, பள்ளிக்குடியிருப்பு, ஈரழக்குளம், கோராவெளி, சித்தாண்டி போன்ற பிரதேசங்களில் நடைபெறுகின்றது. மண்டூரில் முன்னர் நடைபெற்ற இவ்விளையாட்டு தற்போது வழக்கொழிந்து விட்டது. பள்ளிக்குடியிருப்பு, ஈரழக்குளம் போன்ற பிரதேசங்களில் இது நான்கு ஆண்டுகளிற்கு ஒருமுறை நடைபெறுவதுடன் ஏனைய இடங்களில் ஆண்டுக்கொருமுறை நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.


கொம்பு விளையாட்டுடன் தொடர்புடைய ஐதீகக் கதை

செங்கோல் கோடியவனாய்க் கோவலனைக் கொலை செய்த பாண்டிய மன்னனைப் பழிவாங்கி அவனரசியற்றிய மதுரையினை எரியூட்டிய பின்னரும் கோபம் தணியாது வந்த கண்ணகி முன்னர், இடையர்குல இளைஞர் ஒரு காதல் கலந்த விளையாட்டு விழாவாகக் கொம்பு விளையாடலைச் செய்து அவளைக் குளிர்வித்தனர்[2] என்று வி.சி. கந்தையா தனது நூலில் குறிப்பிடுகின்றார். ஆனால் சிலப்பதிகாரத்தில் இக்கதையைக் காண முடியவில்லை. மாறாக ஆய்ச்சியர் குரவையில் இடைச்சேரியைச் சேர்ந்த பெண்கள் தம்சேரியில் நடைபெற்ற துர்நிமித்தங்களைப் பார்வையுற்று அதிலிருந்து காக்கும்படி மாயோனை வேண்டியே குரவைக் கூத்தினை ஆடினர் என்ற செய்தியே காணப்படுகின்றது. ஆனால் வி.சி. கந்தையாவின் கூற்றினைக் கொம்பு விளையாட்டுத் தொடர்பான ஐதீகக் கதையாக நோக்க முடியும்.


கொம்பு விளையாட்டிற்கான பொருட்கள்

கொம்பு


வளைந்த 'ட' வடிவிலுள்ள மரக்குற்றியே கொம்பு எனப்படும். பொதுவாகக் கொம்பினுடைய தலைப்பகுதியானது நிலத்திலுள்ள மரத்தின் வேராகவும், கழுத்துப்பகுதி மரத்தின் மேற்பாகமாகவும் காணப்படும். அநேகமாகக் கரையாக்கு எனப்படும் மரத்திலிருந்தே கொம்புகள் பெறப்படுகின்றன. இம்மரம் வெட்சி அல்லது கருவீரம் என்றும் அழைக்கப்படும். விளினை, விடத்தல், கோணயப்பூறி ஆகிய மரங்களிலிருந்தும் கொம்பு விளையாட்டிற்கான கொம்புகள் பெறப்படுகின்றன. கொம்பின் மேற்பகுதியைத் தலையென்றும், வளைந்த பகுதியைக் கழுத்து என்றும், கொம்புகள் பொருத்தப்படுகின்ற பகுதியை மார்பு என்றும், கீழ்ப்பகுதியைக் கடைக்கால் என்றும் கூறுவர். வடசேரியாரது கொம்பானது பெரும்பாலும் தொண்ணூறு பாகைக்கு மேற்பட்ட வளைவுடையதாகவும், தென்சேரியாரது கொம்பானது தொண்ணூறு பாகைக்குட்பட்டும் இருக்க வேண்டியது பொதுவிதியாகும்.



வடசேரிக் கொம்பு தென்சேரிக் கொம்பு




1. தலைப்பகுதி,
2. பல்வாய்,
3. மார்புப் பகுதி,
4. கழுத்துப் பகுதி



கொம்பு அமைந்திருக்கும் முறை

பில்லித்தடி

கொம்புடன் இணைத்து வரிந்து கட்டப்படும் தடியே பில்லி எனப்படும். கொம்பு விளையாட்டின்போது கொம்பானது விலகாமல் இருப்பதற்காகவே பில்லி கட்டப்படுகின்றது. விளினை, கரையாக்கு, வெள்ளைக்கருங்காலி, பாலை, முதிரை போன்ற பாரங்கூடிய மரத்தடிகளையே இதற்காகப் பயன்படுத்துவர். பொதுவாக நான்கு அடி நீளம் கொண்டதாகவே பில்லிகள் அமைந்திருக்கும். இது கிரிக்கெட் விளையாட்டின்போது பயன்படுத்தப்படுகின்ற 'விக்கெட்' பொல்லினை ஒத்ததாகக் காணப்படும். பில்லித்தடியைக் கொம்புடன் கட்டுவதற்கு நவ்வை என்ற கொடியைப் பயன்படுத்துவர். தற்போது தென்னந்தும்புக் கயிறுகளே பில்லியைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.



1. பில்லித்தடிகள், 2. கொம்பு, 3. அரிப்புக்கயிறு

கம்புக்கட்டு அடை

பில்லி அசையாதவாறு அதனுடன் இணைத்துக் கட்டப்படும் தடிகளே கம்புக்கட்டு அடை எனப்படும். கொம்பினது பருமனிற்கமைய கம்புக்கட்டு அடையானது தாய் அடை, முதலாம் அடை, இரண்டாம் அடை என அதிகரித்துச் செல்லும். கம்புக்கட்டு அடையினைத் தெகிழங்கொடியினைக் கொண்டே இறுக்கமாக வரிந்து கட்டுவர். கம்புக்கட்டு அடைக்கென வெள்ளைக்கருங்காலி, காட்டுக்கொக்கட்டி, வெடுக்குநாறி, முதிரை போன்ற பாரங்கூடிய மரங்கள் பயன்படுத்தப்படும்.

ஆப்புத்தடி

இறுக்கமாக வரிந்து கட்டப்பட்ட கம்புக்கட்டு அடையை மேலும் வலுப்படுத்துவதற்காகக் கூராக்கப்பட்ட ஆப்புத்தடியினை இடையிலே புகுத்தி இறுக்குவர். ஆப்பிற்காகப் புளி, மயிலடிக்குருந்தை போன்ற மரத்தின் தடிகள் பயன்படுத்தப்படுகின்றன.

தாய்மரம்

கொம்பினைத் தொடுத்துக் கட்டுகின்ற மரம் தாய்மரம் என்று அழைக்கப்படும். தாய்மரத்தினைக் கண்ணகியம்மனாகவே பக்தர்கள் பாவனை செய்கின்றனர். கொம்பு முறித்தலின்போது தாய்மரத்தின் பக்கமாகவே கண்ணகியின் கட்சியின் (தென்சேரி) கொம்பானது கொழுவப்பட்டிருக்கும். செவ்வாய்க்குற்றி சரித்து வைக்கக்கூடிய அளவிற்குத் தாய்மரம் பெரிதாகக் காணப்பட வேண்டும். அரசு, வம்மி, வாகை, புளி, ஆலை, காட்டுத்தேக்கு போன்ற மரங்கள் தாய்மரங்களாகக் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. தம்பிலுவில் என்னும் இடத்திலே தாய்மரம் இல்லாமலேயே கொம்பு விளையாட்டு நடைபெறுகின்றது.

தாய்மர வளையம்

கொம்பு முறிப்பதற்காகத் தாய்மரத்தினைச் சுற்றிப் போடப்படுகின்ற வளையம் தாய்மர வளையம் எனப்படும். இத்தாய்மர வளையமானது கயிறு போன்று கருந்தெகிழங்கொடிகளை முறுக்கி அமைக்கப்பட்டிருக்கும். தாய்மரத்தில் உயரமாகத் தாய்மர வளையம் அமைக்கப்படுவதை வடசேரியினரும், தாழ்வாக அமைக்கப்படுவதைத் தென்சேரியினரும் விரும்புவர்.

செவ்வாய்க்குற்றி

பனைமரத்தின் அடிப்பகுதியினைத் தலைகீழாக நாட்டிச் செவ்வாய்க்குற்றியாகப் பயன்படுத்துவர்.

அதிலும் சிறப்பாக இடிவிழுந்த பனைமரங்களே இதற்கெனத் தெரிவு செய்யப்படுகின்றன. இடிவிழுந்த பாலைமரம் அல்லது இடிவிழுந்த திருக்கொன்றை மரம் போன்றனவும் செவ்வாய்க்குற்றியாகப் பயன்படுத்தப்படுகின்றன. கோவலனது கட்சியினரின் கொம்பானது செவ்வாய்க்குற்றிப் பக்கமாகவே பூட்டப்பட்டிருக்கும். செவ்வாய்க்குற்றி நடப்படும் உயரத்தைத் தீர்மானிப்பதில் கொம்பினது அளவுடன் செவ்வாய்க்குற்றி நாட்டப்படும் நிலத்தின் தன்மையும் செல்வாக்குச் செலுத்தும். கெட்டியான நிலத்திலே இதனை ஒன்றரை முழம் அளவும், மணற்பாங்கான நிலத்திலே இதனை இரண்டு முழம் அளவும் புதைப்பது அவசியமாகும். செவ்வாய்க்குற்றி உயரமாக இருப்பதனைத் தென்சேரியாரும், உயரம் குறைவாக இருப்பதனை வடசேரியாரும் விரும்புவர். முன்னர் களுதாவளை, மண்டூர், தேற்றாத்தீவு போன்ற இடங்களிலே செவ்வாய்க்குற்றி இல்லாமலேயே கொம்பு விளையாட்டினை விளையாடியுள்ளனர்.

செவ்வாய்க்குற்றி வளையம்

தாய்மரத்தினைச் சுற்றித் தாய்மர வளையம் போடப்படுவதைப் போன்று செவ்வாய்க்குற்றியினைச் சுற்றிப் போடப்படுகின்ற வளையம் செவ்வாய்க்குற்றி வளையமாகும். இது கருந்தெகிழங்கொடிகளினால் அமைக்கப்பட்டிருக்கும். தாய்மர வளையத்தின் பருமனளவிற்குச் செவ்வாய்க்குற்றி வளையமும் அமைந்திருக்க வேண்டும் என்பதும், தாய்மர வளையம் போடப்படும் உயரத்திற்குச் சமமாக செவ்வாய்க்குற்றி வளையம் போடப்பட வேண்டும் என்பதும் நியதி. தற்போது சில இடங்களில் இதற்காக நைலோன் கயிறுகளையே பயன்படுத்துகின்றனர்.

அரிப்புக்கயிறு

அரிப்புக்கயிறானது முறுக்கிச் சுற்றப்பட்ட பல சுற்றுக் கயிறுகளாலானது. கொம்பு விளையாட்டின்போது இரண்டு அரிப்புக்கயிறுகள் பயன்படுத்தப்படும். ஒன்று வடசேரிக் கொம்பைச் செவ்வாய்க்குற்றி வளையத்துடனும், மற்றையது தென்சேரிக் கொம்பைத் தாய்மர வளையத்துடனும் பிணைக்கப் பயன்படும். இரண்டு அரிப்புக்கயிறுகளும் சமமான அளவிலே இருக்க வேண்டுமென்பது நியதி. அரிப்புக்கயிறு திரிப்பதற்காக ஆத்திமரத்தின் நார், தெகிழங்கொடி, நார்ப்பட்டு, நறுபுனி போன்றவை பயன்படும். தற்போது நைலோன் கயிறுகளே அரிப்புக் கயிறுகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வடம்தாங்கித் தடி

இரண்டு அரிப்புக் கயிறுகளையும் செவ்வாய்க்குற்றி வளையத்துடனும் மரவளையத்துடனும் பிணைப்பதற்காகப் பொருத்தப்படும் தடிகள் வடம்தாங்கித் தடிகள் எனப்படும். இவை உலக்கை போன்ற அமைப்பினையுடையவையாகக் காணப்படும். இதற்காக முதிரை, விற்பனை, விண்ணாங்கு, வெள்ளைக்கருங்காலி போன்ற மரங்களின் தடிகள் பயன்படுத்தப்படும்.

வடக்கயிறு

செவ்வாய்க்குற்றியின் மேற்புறத்தில் துளையிட்டுக் கட்டப்படும் கயிறே வடக்கயிறாகும். இக்கயிறு இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுக் கட்டப்படும். வடக்கயிற்றின் ஒருபகுதியை வடசேரியினரும், மற்றைய பகுதியினைத் தென்சேரியினரும் பிடித்து இழுப்பர். இது தேர் இழுக்கும் வடம் போன்று மொத்தமானதாக அமைந்திருக்கும். மகிழடித்தீவில் நடைபெறும் கொம்பு விளையாட்டில் வடக்கயிறாகக் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தேர் இழுக்கும் வடமே பயன்படுத்தப்படுகின்றது.

கொம்பு விளையாட்டு விளையாடுவதற்கு முன்னராக இடம்பெறும் நிகழ்வுகள்

1. பொதுக்கூட்டம் நடாத்துதல்

அறுவடைக்குப் பின்னரான காலப்பகுதிகளில் கண்ணகி அம்மனது கோபத்தினாலேயே வறட்சி, வெப்பம் போன்றன அதிகரிக்கின்றன என்றும் கண்ணகியம்மனைக் குளிர்விக்கும் முகமாகக் கொம்பு விளையாட்டு நிகழ்த்தப்பட வேண்டும் என்றும் ஊர்மக்கள் கருதிக் கொம்பு விளையாட்டிற்கான முன்னாயத்தங்களைச் செய்வர். முதலில் கொம்பு விளையாட்டு விளையாடுவது பற்றித் தீர்மானிப்பதற்காகப் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்படும். இக்கூட்டமானது கண்ணகியம்மன் கோயிலிலோ அல்லது ஊரிலுள்ள பொது இடமொன்றிலோ நடத்தப்படும். ஊரிலுள்ள பெரியவர்கள், வண்ணக்கர்மார், பொதுமக்கள் ஆகியோர் இக்கூட்டத்திலே கலந்து கொள்ளுவர். முதலாவதாகக் கொம்பு விளையாட்டினை விளையாடுவதற்கான நாட்கள் குறிக்கப்படும். இதனடிப்படையில் கொம்பு விளையாட்டினை நடத்துவதற்காக ஒவ்வொரு சேரிக்கும் ஒவ்வொரு கொம்புத் தலைவர்கள் தெரிவு செய்யப்படுவர். இவர்கள் வட்டாண்டிமார் என்று அழைக்கப்படுவர். இவர்களுடன் வடசேரி, தென்சேரி ஆகிய இரு சேரிப்பக்கங்களிலுமிருந்து இரு விளையாட்டுக் குழுக்கள் தெரிவு செய்யப்படும். இக்குழுவினர் கொம்புப் பிரதிநிதிகள் என்று அழைக்கப்படுவர். மேலும் ஊர்ப்பிரமுகர்கள் அடங்கிய சமாதானச் சபையொன்றும் தெரிவு செய்யப்படும். கொம்பு

விளையாட்டின்போது இரு சேரிக்குமிடையில் தோன்றும் கருத்து வேறுபாடுகளை நீக்கிவைக்க இச்சமாதானச் சபை உதவும்.

2. சேரிப்பிரிப்பு

கொம்பு விளையாட்டு தொடங்க முன்னர் ஊர்முழுவதும் இரண்டு கட்சியாகிவிடுதல் உண்டு. ஒன்று கண்ணகிக்கும் மற்றையது கோவலனுக்குமான அக்கட்சிகள் முறையே தென்சேரி, வடசேரி என்று குறிப்பிடப்படும். கோவலனது கட்சியினைச் சாமிப்பக்கம் என்றும் கண்ணகியினது கட்சியினை அம்மாள் பக்கம் அல்லது தாயார் பக்கம் என்றும் மக்கள் குறிப்பிடுவர்.

பண்டைக்காலந்தொட்டுத் தாய்வழிச் சமுதாய முறையைப் பின்பற்றிவருகின்ற கிழக்கிலங்கையினர், கொம்பு விளையாட்டின் சேரிப்பிரிப்பில் மட்டும் தந்தைவழியைச் சார்ந்து நிற்கின்றனர் என்று வி.சி. கந்தையா தனது நூலில் குறிப்பிடுகின்றார்.[3] ஆனால் தம்பிலுவில் என்ற இடத்தில் நடைபெறுகின்ற கொம்பு விளையாட்டில் மட்டும் இன்றுவரை தாய்வழிச் சமுதாய முறையே பின்பற்றப்பட்டு வருகின்றது. கொம்பு விளையாட்டினை உரமூட்டி வளர்த்து வந்ததில் இச்சேரிப் பிரிப்புகளிற்கு முக்கிய இடமுண்டு. சேரிப்பற்றும், போட்டியும் கொம்பு விளையாட்டு அடிக்கடி நடத்தப்படுவதற்கு உந்துசக்தியாக இருக்கின்றன.

3. கொம்பு விளையாட்டு விளையாடுவதற்கான பொருட்களைத் தேடித் தயார் செய்தல்

கொம்பு விளையாட்டினை விளையாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டதிலிருந்து ஒவ்வொரு சேரியினரும் அதற்குரிய பொருட்களைச் சேகரிப்பதில் போட்டி போட்டுக்கொண்டு மும்முரமாக ஈடுபடுவர். இதற்கு அவ்வவ் சேரிகளிற்குப் பொறுப்பான வட்டாண்டிமார் தலைமை தாங்குவர். முதலில் காட்டிற்குச் சென்று கொம்புகளை வெட்டியெடுக்கின்ற செயற்பாடு ஆரம்பமாகும். அரிப்புக்கயிறு, தாய்மர வளையம், செவ்வாய்க்குற்றி வளையம் போன்றவற்றிற்கான கொடிகளையும் காட்டிலிருந்து எடுத்துக் கொண்டு வந்து கயிறு திரிக்கின்ற பணிகளும் ஆரம்பமாகும். கம்புக்கட்டு அடை, ஆப்புத்தடி, பில்லி போன்றவற்றிற்கான மரத்தடிகளும் தெரிவு செய்யப்பட்டு வெட்டியெடுக்கப்படும். மரத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட கொம்புகளைப் பட்டை உரிப்பதற்காகக் கைகளையோ அல்லது ஆயுதங்களையோ பயன்படுத்துவதில்லை. வெட்டப்பட்ட கொம்புகளை எடுத்து வந்து மாடுகள் கட்டப்படுகின்ற பண்ணைகளின் நிலத்திலே ஐந்து அல்லது ஆறு நாட்கள் இட்டு வைப்பர். மாடுகளின் கால்கள் அக்கொம்புகளின் மேலே பட்டும், சாணம், கோசலம் என்பவற்றாலும் கொம்புகளின் பட்டைகள் தானாகவே உரியும்.

4. கொம்பிற்குத் தோடு கொடுத்தல்

இரு சேரியினரும் இணைந்து ஒன்றுடனொன்று போட்டியிட இருக்கின்ற கொம்புகளைத் தெரிந்தெடுக்கின்ற நிகழ்வு 'தோடு கொடுத்தல்' என்று அழைக்கப்படும். இதன்போது கொம்புகள் விளையாடுவதற்குத் தகுதியுள்ளனவா எனக் கொம்பு விளையாட்டிற்கு மத்தியஸ்தம் வகிக்கும் குழுவினர் தெரிவு செய்வர். போட்டியிடுகின்ற கொம்புகள் இரண்டும் ஒரே அளவினைக் கொண்டனவாகவும், ஒரே இனத்தினைச் சேர்ந்த மரத்திலிருந்து வெட்டப்பட்டனவாகவும் இருக்க வேண்டும். திரித்துண்டொன்றையோ அல்லது பச்சைத் தென்னை ஓலையினையோ வைத்துக் கொம்பின் மார்புப் பகுதியானது அளக்கப்படும். இந்த அளவினைக் கொண்டே கொம்பினது அளவும் தீர்மானிக்கப்படும். தோடு கொடுப்பதற்காக முன்னர் நடைபெற்ற கொம்பு விளையாட்டின்போது வெற்றிபெற்ற கொம்புகளையும் கொண்டுவருவர்.

5. கொம்பினைப் பதப்படுத்துதல்

ஒவ்வொரு சேரியினரும் தோடு கொடுக்கப்பட்ட கொம்புகளைக் கொண்டு வந்து பதப்படுத்தி வலிமையூட்டும் செயற்பாடுகளைச் செய்வர். கொம்புகளைச் சில நாட்கள் நீரினுள் அமிழ்த்தியோ அல்லது ஈரமான மண்ணினுள் புதைத்தோ வைப்பர். அதன் பின்னர் கொம்புகளின் மீது பனிச்சங்காய்ப் பசை பூசி நன்றாகக் காயவிடுவர். இதன் பின்னர் கொம்பிற்கு நத்தடித்தல் என்ற செயற்பாடு நிகழும். உலராத கடுக்காய், பச்சையரிசிப் பொங்கல், வடை, மஞ்சள் ஆகியவற்றை அம்மியில் வைத்து அரைத்து நத்தடிப்பதற்கான பசையைத் தயார் செய்வர். தாய்க்குத் தலைமகனான ஒருவரே அப்பசையினை எடுத்துக் கொம்பின் மேல் பூசுவார். பூசப்பட்ட பசையின் மீது சணற்பஞ்சினை அல்லது வெடிப்பஞ்சினை இதமாக ஒட்டிவிடுவர்.

6. கொம்பினை வரிதல்

பதப்படுத்தப்பட்ட கொம்பானது பில்லியுடன் இணைத்துக் கட்டப்படும் செயற்பாடே கொம்பு வரிதல் என்று அழைக்கப்படும். இழுவைக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய வகையில் இது மிகவும் இறுக்கமாகக் கட்டப்படும். கொம்பு வரிவதற்காக நவ்வைக்கொடி, ஆத்திநார் போன்றவற்றைப் பயன்படுத்துவர்.

7. அரிப்புக்கயிறு திரித்தல்

கொம்பு வரியப்பட்ட பின்னர் கொம்பினைப் பூட்டி இணைப்பதற்கான அரிப்புக்கயிறு திரிக்கப்படும். இரண்டு சேரியினரும் ஒரே இடத்திலிருந்தே தத்தமது அரிப்புக் கயிறுகளைத் திரிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடுவர். இரு சேரியினரதும் அரிப்புக் கயிறுகள் சமமான அளவினைக் கொண்டனவாக இருக்க வேண்டும் என்பது நியதி.

8. ஏடகங்களை அமைத்தல்

வெற்றிபெறுகின்ற கொம்புகளை ஊர்வலமாகக் கொண்டு செல்வதற்காக ஒவ்வொரு சேரியினரும் போட்டி போட்டுக் கொண்டு அழகான முறையில் ஏடகங்களை அமைப்பர். கிடுகு ஓலைகளினால் மறைத்து வைத்தே இந்த ஏடகங்களைக் கட்டுவர். தமது சேரியின் ஏடகம் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதில் ஒவ்வொரு சேரியினரும் அக்கறை காட்டுவர். வடசேரியாரது ஏடகம் தென்சேரியாரது ஏடகத்தினைவிடச் சற்று உயரமாக அமைக்கப்படுவது வழக்கம். பெண்ணைவிட ஆண் உயரமாக இருப்பதை இது குறிக்கும். மண்டூரில் கொம்பு விளையாட்டு பல வருடங்களாக நிகழ்த்தப்படாது அழிந்துவிட்டது. ஆனால் பல வருடங்களின் முன்னர் கொம்பு விளையாட்டிற்காகக் கட்டப்பட்ட ஏடகத்தின் புரையானது இன்றும் மண்டூர் முருகன் கோவிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

கொம்பு முறித்தல் செயற்பாடுகள்

1. போர்த்தேங்காய் உடைத்தல்

கொம்பு விளையாட்டின் ஆரம்ப கட்டமாக அமையும் நிகழ்வு போர்த்தேங்காய் உடைப்பதாகும். கொம்பு விளையாட்டில் வடசேரி, தென்சேரி என்ற இரண்டு குழுவினரிற்கிடையே போட்டி இடம்பெறும். இவ்விரு சேரியினரும் மாலை வேளையில் வெட்டவெளியான பகுதியில் தேங்காய்களைக் கொண்டு அடித்து விளையாடும் விளையாட்டே போர்த்தேங்காய் உடைத்தல் எனப்படுகின்றது. இவ்விளையாட்டு மூன்று அல்லது ஐந்து நாட்கள் வரை நீடிக்கும். அடிக்கும்போது விரைவில் உடையாத தன்மையையுடைய தேங்காய்கள் தெரிவு செய்யப்படும். அநேகமாக இத்தேங்காய்கள் துருவுமனை கொண்டு துருவ முடியாத மிகச்சிறிய அமைப்பைக் கொண்டனவாகவே காணப்படும். இத்தேங்காய்கள் இரு சேரியினரிடையேயும் சமமான எண்ணிக்கை கொண்டனவாக இருத்தல் வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தேங்காய்களை வைத்துக் கொண்டு அந்தந்தச் சேரிகளிற்குப் பொறுப்பான வட்டாண்டிமார் இருவரும் எதிரெதிராக இருப்பர். விளையாடுபவர் ஒரு தேங்காயைக் கையில் வைத்துக் கையைப் பின்புறம் கட்டிக் கொள்வார். மற்றைய கையில் இன்னுமொரு தேங்காயை எடுத்து உருட்டி விடுவார். எதிர்த்திசையில் இருப்பவர் உருட்டிவிடப்பட்ட தேங்காயைத் தமது கையிலுள்ள தேங்காயின் முன்பக்கத்தினால் வேகமாக அடிப்பார். இவ்வாறு அடிக்கின்றபோது உருட்டிவிடப்பட்ட தேங்காய் உடைந்தால் உருட்டிவிட்ட பகுதியினர் தோல்வியை அடைந்தோராவர். அவ்வாறன்றி அடிக்கின்ற தேங்காய் உடையுமாயின் அப்பகுதியைச் சேர்ந்தோர் தோல்வியடைந்தவராவர். இவ்வாறு உருட்டிவிடப்பட்ட தேங்காய் உடைந்தால் மீண்டும் மீண்டும் உருட்டிவிடப்படுதல் வேண்டும். இறுதியில் யாரிடம் தேங்காய் எஞ்சுகின்றதோ அவரது கட்சி வெற்றிக்குரியதாகும். போர்த்தேங்காய் உடைத்தலின்போது முதலாவதாக உடைக்கப்படும் தேங்காய் கண்ணகியின் கட்சிக்கு வெற்றிதருகின்ற விதத்திலேயே உடைக்கப்படும்.

2. செவ்வாய்க்குற்றியில் நேர்ந்து கட்டுதல்

கொம்பு விளையாட்டு ஆரம்பமாகும் முன்னர் வடசேரியினரும் தென்சேரியினரும் 'வயிரம் உடைப்போம்' எனக் கூறி செவ்வாய்க்குற்றியில் சத்தியம் செய்வர். அதன் பின்னர் கொம்பு விளையாட்டின்போது எதுவிதமான தடைகளும் நிகழக்கூடாது என்று வேண்டுதல் செய்து செவ்வாய்க்குற்றிக்கு மஞ்சள் கலந்த நீரினால் நீராட்டிப் பட்டுத் துணிகளைச் செவ்வாய்க்குற்றியில் நேர்ந்துகட்டுவர்.

3. கொழுக்கொம்பு முறித்தல்

கொம்பு விளையாட்டின்போது முதலாவதாக முறிக்கப்படுகின்ற கொம்பு கொழுக்கொம்பாகும். கொழுக்கொம்புகள் அளவில் சிறியனவாகவே காணப்படும். பாவட்டம் மரங்களிலிருந்து பெறப்பட்ட கொம்புகளே கொழுக்கொம்பு முறித்தலின்போது முறிக்கப்படுகின்றன. கொழுக்கொம்பானது கண்ணகியின் கட்சியினருக்கு (தென்சேரிக்கு) வெற்றியளிக்கின்ற வகையிலேயே முறிக்கப்படும். இதன்போது முறிக்கப்படுகின்ற வடசேரியினரது கட்சிக்குரிய கொம்பானது தென்சேரியினரின் கொம்பினைவிடப் பலவீனமானதாகவே காணப்படும். இக்கொம்புகளை இருவர் மட்டுமே முறிப்பர். அதாவது வடசேரியிலிருந்து ஒருவரும் தென்சேரியிலிருந்து ஒருவரும் வடக்குத் தெற்குத் திசையாக நின்று கொம்பினை முறிப்பர். இழுவையின்போது பலவீனமான வடசேரியினரின் கொம்பானது முறியும். ஆனால் கொழுக்கொம்பு முறித்தலின்போது இரு சேரியினரிடையேயும் போட்டி மனப்பான்மை காணப்படாது.

4. போட்டிக்கான கொம்புகள் முறிக்கப்படுதல்

கண்ணகியின் கட்சிக்கு வெற்றி தருகின்ற விதத்தில் கொழுக்கொம்பு முறிக்கப்பட்ட மறுநாளிலிருந்து போட்டிக்கான கொம்புகள் முறித்தல் ஆரம்பமாகும். இக்கொம்புகள் முறிக்கப்படுகின்றபோது வடசேரி, தென்சேரியினரிடையே போட்டி மனப்பான்மை அதிகரித்துக் காணப்படும். வடசேரியினருடைய கொம்புகள் கோவலனது ஆலயத்திலும், தென்சேரியினரது கொம்புகள் கண்ணகியின் ஆலயத்திலும் வைத்துப் பூசை செய்யப்படும். பூசை செய்யப்பட்ட பின்னர் வடசேரியினர் தமது கொம்புகளைக் கொண்டு வந்து சபைக்குக் காட்டுவர். தென்சேரியினர் தமது கொம்புகளை இலகுவில் சபைக்குக் காண்பிக்க மாட்டார்கள்.

கொம்பு முறித்தல் ஆரம்பமாகும் முன்னர் பில்லியுடன் கட்டப்பட்ட கொம்புகள் ஒவ்வொரு சேரிக்குமுரிய வட்டாண்டிமார்களினால் சிவப்புத்துணியால் போர்த்தியபடி கொம்புச் சந்திக்குக் கொண்டுவரப்படும். சில இடங்களில் மாட்டு வண்டியிலேயே கொம்புகள் வைத்துக் கொண்டுவரப்படுகின்றன.

கொம்புகளைக் கொம்புச் சந்திக்குக் கொண்டுவந்த பின்னர் இரண்டு சேரியினரின் கொம்புகளிற்கும் அரிப்புக் கயிறு போடுதல் இடம்பெறும். அதன்பின்னர் அரிப்புப் போடப்பட்ட கொம்புகள் இரண்டையும் ஒன்றுடனொன்று பூட்டியெடுக்கின்ற நிகழ்வு ஆரம்பமாகும். அதன்போது ஒவ்வொரு சேரியினரும் அரிப்புக் கயிறுகளைப் பில்லியில் இருந்து விலகாதவாறு பிடித்துக் கொள்வர். அதன்போது கொம்புகளை ஒன்றுடனொன்று அசைத்து அசைத்துப் பிணைக்கும் செயற்பாட்டினை வட்டாண்டிமாரும் கொம்புப் பிரதிநிதிகளும் மேற்கொள்வர்.

கொம்புகள் ஒன்றுடனொன்று பூட்டப்பட்ட பின்னர் பில்லியிலிருந்து கொம்பு விலகாமல் இருப்பதற்காக கம்புக்கட்டு அடை பூட்டுதல் இடம்பெறும். கொம்பினைச் சுற்றிக் கம்புக்கட்டு அடை வைக்கப்பட்டு தெகிழங்கொடியினால் இறுக்கமாகக் கட்டப்படும். கொம்பின் பருமனிற்கமைய கட்டப்படும் கம்புக்கட்டு அடையும் அதிகரித்துச் செல்லும். கட்டப்பட்ட இந்த அடையை ஆப்புகளைக் கொண்டு இறுக்குவர்.

கம்புக்கட்டு அடையுடன் கட்டப்பட்ட கொம்புகளைத் தாய்மரத்துடனும் செவ்வாய்க்குற்றியுடனும் இணைக்கின்ற செயற்பாடு அடுத்து நிகழும். இதற்காகத் தாய்மரத்தில் தாய்மர வளையமும், செவ்வாய்க்குற்றியில் செவ்வாய்க்குற்றி வளையமும் போடப்படும். தென்சேரிக் கொம்பு தாய்மரத்தின் பக்கமாகவும், வடசேரிக் கொம்பு செவ்வாய்க்குற்றியின் பக்கமாகவுமே பூட்டப்படும். இவ்வாறு பூட்டுவதற்காகத் தென்சேரிக் கொம்புடன் இணைக்கப்பட்ட அரிப்புக் கயிறானது தாய்மர வளையத்துடன் வடம் தாங்கியைக் கொண்டு பிணைக்கப்படும். வடசேரிக் கொம்புடன் பிணைக்கப்பட்ட அரிப்புக்கயிறானது செவ்வாய்க்குற்றி வளையத்துடன் வடம் தாங்கியைக் கொண்டு பிணைக்கப்படும்.

தாய்மரத்துடனும் செவ்வாய்க்குற்றியுடனும் கொம்புகள் இணைக்கப்பட்ட பின்னர் செவ்வாய்க்குற்றியின் மேற்புறத்தில் கட்டப்பட்டிருக்கும் வடத்தினைப் பிடித்து இரு சேரியினரும் செவ்வாய்க்குற்றியை முற்பக்கமாக இழுத்து நிறுத்துவர். இவ்வாறு இழுக்கும்போது செவ்வாய்க்குற்றியின் வலதுபுறமாக உள்ள வடத்தினைத் தென்சேரியாரும், இடதுபுறமாக உள்ள வடத்தினை வடசேரியாரும் பிடித்து இழுப்பர். வடத்தினை இழுக்கின்ற வடசேரியினரின் எண்ணிக்கையும் தென்சேரியினரின் எண்ணிக்கையும் சமமானதாகவே அமைந்திருக்கும். கொம்பினது பருமனிற்கேற்ப வடம் இழுக்கின்றவர்களின் எண்ணிக்கை கூடிக்குறையும். கொம்புகளை இழுக்கின்றபோது கொம்புகள் பூட்டப்பட்ட அடைகளைக் கம்புத் தடிகளைக் கொண்டு தாங்கிப் பிடிப்பர்.

வடக்கயிற்றினைக் கொண்டு செவ்வாய்க்குற்றியினை இழுக்கின்றபோது இழுவையின் பலத்தினால் இரண்டிலொரு கொம்பு முறியும். அப்போது முறிவடைந்த கொம்பிற்குரிய கட்சியினர் தோல்வியடைந்தவர்களாகவும், முறிவடையாத கொம்பினையுடைய கட்சியினர் வெற்றி பெற்றவர்களாகவும் கருதப்படுவர். உடனேயே வென்ற பகுதியார் தமது சேரியின் பெயரைச் சொல்லி அதற்கு வெற்றியென்று கூறி மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்வர். இதன்போது வெற்றிபெற்ற சேரியினர் தோல்வியடைந்த சேரியினரை இகழ்ந்து வசைப்பாடல்களைப் பாடி ஆடுவர். வசைப்பாடல்கள் பாடப்படுவது மட்டுமன்றி வசைச் சொற்களைப் பேசுதலும் இடம்பெறும். மட்டக்களப்புப் பேச்சுத் தமிழிலே திட்டுவதைக் 'கொம்புதல்' என்றே குறிப்பிடுவர். கொம்பு விளையாட்டின் மூலமாகவே கொம்புதல் என்ற சொல் மட்டக்களப்புப் பிரதேசத்தில் புழக்கத்திற்கு வந்திருக்க வேண்டும்.

வெற்றிபெற்ற கொம்பினை சிவப்புத் துணியால் போர்த்தி அச்சேரிக்குரிய வட்டாண்டியார் தனது

தலையின் மேலே வைத்துக் கொண்டு தம் சேரிக்குரிய ஆலயத்தினுள் எடுத்துச் செல்வார். அதன் பின்னர் வெற்றி பெற்ற கட்சியினரின் ஏடகத்தின் மீது வெற்றிபெற்ற கொம்பானது வைக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். அப்போது வெற்றிபெற்ற சேரியினரின் வீடுகளிற்கு முன்னர் மஞ்சள் நீர் தெளித்துக் கும்பம் வைத்து ஏடகத்தில் கொண்டுவரப்படும் கொம்பினை வழிபடுவர். வெற்றி பெற்ற சேரியினர் தோல்வியடைந்த சேரியினரின் வீடுகளிற்கு முன்னே சென்று அவர்களைக் கேலி செய்து வசைப்பாடல்களையும் பாடுவர்.


போட்டிக்காக முறிக்கப்படும் கொம்புகளுள் மூன்று கொம்புத் தட்டுக் கொம்புகளும், ஐந்து கூடாரக் கொம்புகளும், ஏழு ஏடகக் கொம்புகளும் முறிக்கப்படுவது வழக்கமாகும். கொம்பினது அளவினைப் பொறுத்தே இக்கொம்புகளின் பெயர்கள் வித்தியாசப்படுகின்றன.

ஏடகக் கொம்புகள் ஏனைய கொம்புகளைவிட அளவில் மிகப் பெரியனவாகக் காணப்படும். இந்த ஏடகக் கொம்புகளை முறிப்பதற்கு ஊர்மக்கள் அனைவரும் கூடி வடம் இழுக்க வேண்டும். ஏடகங்களிலே கொண்டுவரப்படுவதால் இவை ஏடகக் கொம்புகள் எனப்படுகின்றன. ஏடகக் கொம்புகள் முறிக்கப்படுவதற்கு முன்னர் 'சீலை எறிதல்' என்ற சடங்கு இடம்பெறும். இந்த நாள் பக்தர்களால் மங்களகரமான நாளாகக் கருதப்படும். இந்த நாள் அம்மனின் தீட்டுக் காலப்பகுதியின் இறுதி நாளாகக் கருதப்படுகின்றது. கண்ணகி அம்மனைத் தூய்மைப்படுத்துவதற்காக அம்மனின் பழைய சேலையை எறிவர். அச்சேலையைத் துணி துவைக்கின்ற சாதியைச் சேர்ந்த ஒருவர் வந்து பெற்றுக் கொண்டு செல்வார்.

ஏடகக் கொம்பு முறிக்கப்படுவதற்கு முன்னர் ஏடகங்கள் (தேர்) அலங்கரிக்கப்பட்டு அதன்மேல் ஏடகக் கொம்புகள் வைக்கப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும். கோவலனுடைய ஏடகம் முன்னரும், கண்ணகியினுடைய ஏடகம் அதன் பின்னரும் செல்லும். இதன்போது ஒரு கட்சியினரின் வெற்றிப்பாடல்களன்றி உடுக்குச்சிந்து எனும் ஊர்சுற்றுக் காவியமே பாடப்படும். ஊரின் சந்திகளில் ஏடகம் நிறுத்தப்பட்டு வசந்தன் கூத்தும், வேடர், குறவர், போர்வீரர், மன்னர், முனிவர் போன்ற வேடம் புனைந்தவர்களின் ஆடல்களும் இடம்பெறும். இவ்வாறு இரவு முழுவதும் ஊர்வலம் சென்று மறுநாள் காலையிலேதான் ஏடகங்கள் கோயிலுக்குத் திரும்பும். ஏடகங்கள் கோயிலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இரண்டு சிறுவர்களிற்குக் கோவலனாகவும், கண்ணகியாகவும் வேடம் புனைவித்துத் திருமணம் நடத்தி வைப்பர். மறுநாள் மாலை நேரத்தில் மீண்டும் ஏடகங்கள் அலங்கரிக்கப்பட்டுக் கொம்புச் சந்தியினை வந்தடையும். இதன் பின்னரே ஏடகக் கொம்புகளை முறிக்கின்ற செயற்பாடுகள் ஆரம்பமாகும்.

போட்டிக்காக எடுத்துவரப்பட்ட இரண்டு கொம்புகளும் அன்றைய தினம் எவ்வளவு முயன்றும் முறிக்கப்படாதவிடத்து அக்கொம்புகள் ஆலயத்தினுள் எடுத்துச் செல்லப்பட மாட்டாது. இக்கொம்புகளைத் 'தங்கு கொம்புகள்' என அழைப்பர். இத்தங்கு கொம்புகள் அடுத்த நாள்வரை கொம்புச் சந்தியிலேயே வைக்கப்பட்டிருக்கும். அன்றைய தினம் இரு சேரிகளிற்குமுரிய வட்டாண்டிமார்களும் தமது வீடுகளிற்குச் செல்ல முடியாது. அவர்கள் கொம்புச் சந்தியிலேயே தங்கியிருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் மறுநாள் வரை பால், பழங்களையே உண்ண வேண்டும். மறுநாள் கொம்புகள் முறிக்கப்பட்ட பின்னரே வட்டாண்டிமார்கள் ஆலயத்தினுள் செல்ல அனுமதிக்கப்படுவர். பொதுவாக ஏடகக் கொம்புகள் முறிக்கப்படுகின்ற போதே இவ்வாறான நிலைமை ஏற்படுவதுண்டு.

கொம்பு விளையாட்டில் தங்கள் சேரியே வெல்ல வேண்டும் என்று இருசேரியாரும் பல்வேறு உத்திகளைக் கையாளுவர். தோல்வியடைந்த சேரியினர் மறுநாள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகக் கொம்புகளை வைத்து மந்திரங்களைச் சொல்லிக் கொம்பினை வலுப்படுத்துவர்.



1. தாய்மரம், 2. தாய்மர வளையம், 3. வடசேரியினரின் கடைக்கால் கயிறு, 4. வடம்தாங்கித் தடி (தென்சேரி), 5. அரிப்புக்கயிறு (தென்சேரி), 6. தென்சேரி அடை, 7. வடசேரி அடை, 8. வடம்தாங்கித் தடி (வடசேரி), 9. செவ்வாய்க்குற்றி வளையம், 10. அரிப்புக்கயிறு (வடசேரி), 11. தென்சேரியினரின் கடைக்கால் கயிறு, 12. செவ்வாய்க்குற்றி, 13 - 14. இழுவைவடம்.

5. தண்ணீர்க் கொம்பு முறித்தல்

போட்டிக்கான கொம்புகள் முறிக்கப்பட்ட பின்னர் இறுதியில் முறிக்கப்படுகின்ற கொம்பு தண்ணீர்க்கொம்பு எனப்படும். இக்கொம்புகள் கண்ணகியின் கட்சிக்கு வெற்றியளிக்கும் முகமாகவே முறிக்கப்படும். இதன்போது முறிக்கப்படுகின்ற வடசேரியினரின் கொம்பு தென்சேரியினரின் கொம்பினைவிடப் பலவீனமானதாகவே இருக்கும். இக்கொம்புகளை இருவர் மட்டுமே முறிப்பர். அதாவது வடசேரியிலிருந்து ஒருவரும் தென்சேரியிலிருந்து ஒருவரும் வடக்குத் தெற்குத் திசையாக நின்று கொம்பினை முறிப்பர். இழுவையின்போது பலவீனமான வடசேரியினரின் கொம்பானது முறியும்.

6. கொம்புக் குளிர்த்தி

தண்ணீர்க்கொம்பு முறிக்கப்பட்ட பின்னர் இரு சேரியினரும் குதூகலமாக ஆடித் தமது நேர்த்தியை முடித்த மகிழ்ச்சியில் வென்ற கொம்புகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டித் தலைகளிலே சுமந்துகொண்டு ஊர்வலமாக வருவார்கள். இதன்போது மஞ்சள், வேப்பம் இலை, அறுகம்புல் போன்றவற்றைச் சேர்த்த நீரைக் கொம்பின் மீதும் மக்களின் மீதும் சொரிவர். இது கொம்புக் குளிர்த்தி என்று அழைக்கப்படும். இதனைக் கொம்புத்தீர்த்தம் என்றும் அழைப்பர். மதுரையை எரித்த கண்ணகியின் சீற்றத்தினைக் குறைத்து அவளைக் குளிர்விப்பதற்காகவே இதனைச் செய்கின்றனர். இந்நீர் நோய்களைத் தீர்க்கும் ஆற்றலுடையது என்று பக்தர்கள் நம்புகின்றனர். ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்களுக்கு ஊர்மக்கள் இனிப்பு வகைகளை வழங்குவர். இந்த ஊர்வலம் முடிவடைந்ததும் கட்டாடியார் தாய்மரத்திற்கும் செவ்வாய்க்குற்றிக்கும் மஞ்சள் நீரினை ஊற்றித் தாய்மர வளையத்தினையும் செவ்வாய்க்குற்றி வளையத்தினையும் வெட்டுவார். அதன் பின்னர் கண்ணகியம்மன் குளிர்த்திப்பாடல்கள் பாடப்படும். முறிக்கப்பட்ட கொம்புகள் ஆலயத்தில் வைக்கப்படும்.

கொம்பு விளையாட்டு நிகழ்த்துகையில் காணப்படும் நிகழ்த்துகலைக்குரிய அடிப்படைக் கூறுகள்

நிகழ்த்துகைக்கெனத் தீர்மானிக்கப்பட்ட விடயங்களைப் பார்ப்போருக்குக் குறித்தவொரு இடத்திலே நிகழ்த்திக்காட்டுதல் நிகழ்கைக்குரிய சிறப்பம்சமாகும். நாடகம் என்பது ஒரு சிலர் முன்னே ஒருவர் அல்லது இருவர் அல்லது பலர் ஒரு குறிப்பிட்ட சூழலில் ஏதோ ஒன்றினைச் செய்து காட்டுவது, ஆற்றுவது அல்லது நிகழ்த்திக் காட்டுவதாகும்.[4] கொம்பு விளையாட்டிலே கொம்புகள் முறிக்கப்படுவது நிகழ்த்துகையாக அமைகின்றது. கொம்பு விளையாட்டில் நிகழ்த்துவோராகக் கட்டாடியார், வட்டாண்டிமார், கொம்புப் பிரதிநிதிகள் போன்றோர் காணப்படுகின்றனர். நிகழிடமாக ஆலய வளாகத்திலுள்ள கொம்புச் சந்தி காணப்படுகின்றது. நிகழ்த்துகையைப் பார்ப்பவர்களாகப் பக்தர்களும் பொதுமக்களும் காணப்படுகின்றனர். நாடகத்தின் நெறியாளரைப் போன்று கொம்பு விளையாட்டிலே வட்டாண்டிமார்களும் கட்டாடியார்களும் செயற்படுகின்றனர்.

நிகழ்கலைகளின் கலையாக்கம் கலைஞர்களினதும் கலைச் செயற்பாட்டாளர்களினதும் கூட்டிணைவின் பெறுபேறேயாகும். நிகழ்த்துகை கூட்டுச் செயற்பாடாக அமைவதனால் நிகழ்த்துவோர், அதனை நெறிப்படுத்துவோர், பார்வையாளர் ஆகியோரது கூட்டு இணைவும் அவசியமாகின்றது. வடசேரி, தென்சேரி ஆகிய இரு சேரிப்பக்கங்களிலுமிருந்து தெரிவு செய்யப்படும் இரு விளையாட்டுக் குழுக்கள், அதனை நெறிப்படுத்துகின்ற வட்டாண்டியார், ஊர்ப்பிரமுகர்கள் அடங்கிய சமாதானச் சபை உறுப்பினர்கள் ஆகியோரது கூட்டு முயற்சியே கொம்பு விளையாட்டினைச் செய்து முடிக்கக் காரணமாய் அமைகின்றது. ஒவ்வொருவரினதும் பங்குபற்றல் இதன் இருப்பிற்குக் காரணமாக அமைகின்றது.

நிகழ்த்துக் கலையின் செயற்பாட்டிற்கு கலைச் செயற்பாட்டாளர்களின் ஒன்றிணைவும் பயிற்சியும் அவசியமாகவுள்ளது. கொம்பு விளையாட்டின் நிகழ்த்துகையில் நிகழ்த்துவோரின் ஒன்றிணைவானது முக்கியத்துவம் பெறுகின்றது. மற்றும் கலைப் பயிற்சிகளைப் போன்று கொம்பு விளையாட்டினை நிகழ்த்துபவர்கள் அதனை விளையாடுவதற்கு முன்னர் சில தயார்படுத்தல்களைச் செய்கின்றனர்.

கொம்பு விளையாட்டில் ஈடுபடுகின்ற வட்டாண்டிமார், கொம்புப் பிரதிநிதிகள், சமாதானச் சபையினர், ஊர்மக்கள் யாவரும் கொம்பு விளையாட்டுக் காலங்களில் புலால் உணவினைக் கைவிட்டு உடலினையும் உள்ளத்தினையும் சுத்தப்படுத்துவர். ஆலயத்தைச் சூழ வசிக்கின்ற மக்கள் கறிக்கு மஞ்சள் இடுவதனையும், பொரியல் போன்ற உணவுப் பண்டங்களைத் தயார் செய்வதையும்,

உரலில் இடிக்கின்ற செயல்களைச் செய்வதனையும் தவிர்க்கின்றனர். மேலும் இருசேரிகளுக்கும் பொறுப்பான வட்டாண்டிமார்களும் கொம்புப் பிரதிநிதிகளும் கொம்பு விளையாட்டிற்குத் தேவையான பொருட்களைக் காட்டிற்குச் சென்று எடுத்துவந்து தயார்படுத்துகின்ற செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

நாடகம் என்பது கணப்பிரசன்னமான கலையாகும். அதாவது ஆற்றப்படும் அந்தக் கணத்தில் அது நம்முன்னே பிரசன்னமாக இருக்கும்.[5] கொம்பு விளையாட்டும் அது ஆற்றப்படுகின்ற வேளையில் பார்வையாளனுடன் நேரடித் தொடர்பு கொண்டதாகக் காணப்படுகின்றது.

நிகழ்த்துக் கலையில் ஒப்பனை, அலங்காரம் போன்றன முக்கியமான இடத்தினைப் பெறுகின்றன. கொம்பு விளையாட்டு நிகழ்த்தப்படுகின்ற இடமானது வேப்பம் இலை, தென்னம்பாளை, குருத்தோலை, சரிகைச் சேலை போன்றவற்றைக் கொண்டு அலங்கரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சேரியினரும் போட்டி போட்டுக் கொண்டு ஏடகங்களினை அலங்கரிப்பதிலும் இத்தன்மை வெளிப்படுகின்றது. கொம்பு விளையாட்டினை விளையாடுகின்றவர்களும் தமது சேரியினை மற்றைய சேரியிலிருந்து பிரித்துக் காட்டுவதற்காக வேறு வேறான நிறங்களைக் கொண்ட துணிகளைத் தமது தலையிலே கட்டித் தம்மை ஒப்பனை செய்து கொள்கின்றனர். அத்துடன் கொம்பு விளையாட்டிலே வெற்றி பெற்ற சேரியினருள் சிலர் தாம் வெற்றியடைந்த களிப்பிலே வேடன், குறத்தி, படைவீரன், மன்னன், முனிவர் போன்ற வேடங்களை ஒப்பனை செய்து ஆடுகின்றனர்.

நிகழ்த்துகலை என்பது ஒன்றைப் போலச் செய்து காட்டுவது என்று கிரேக்க அறிஞரான அரிஸ்டோட்டில் கூறுகின்றார். நாடகத்தினுடைய பிரதான அடித்தளம் ஒன்றைப் போலச் செய்தலாகும்.[6] கொம்பு விளையாட்டின் போது ஏடக ஊர்வலங்களின் பின்னர் கோவலனாகவும் கண்ணகியாகவும் இரு சிறுவர்களிற்கு ஒப்பனை செய்யப்பட்டு அவர்களிற்குத் திருமணம் நடைபெறும். இதன்போது போலச் செய்தல் முக்கியம் பெறுகின்றது.

கொம்பு விளையாட்டின்போது பாடப்படுகின்ற வசைப்பாடல்கள் இசை நிகழ்த்துகைகளுக்குச் சான்றாக அமைகின்றன. இவை வாய்மொழிப் பாரம்பரியங்களினூடாகப் பேணப்பட்டு வருகின்றன. ஏடகக் கொம்பு ஊர்வலத்தின் போது ஊர்சுற்றுக்காவியம் எனப்படுகின்ற மழைக்காவியமும் வசந்தன் கவிகளும் பாடப்படுகின்றன.

கொம்பினைத் தாங்கிய ஏடக ஊர்வலங்கள் செல்லும்போது அதன் முன்பாக வசந்தன் கூத்து ஆடப்படும். இது கொம்பு விளையாட்டுடன் தொடர்புடைய நிகழ்த்துகலையாகக் காணப்படுகின்றது. கொம்பு விளையாட்டினை ஒட்டியதாக 'பள்ளுக்கு வளைதல்' எனும் தனித்துவமான கலையாடல் தம்பிலுவில் போன்ற கிராமங்களில் வளர்ச்சியடைந்திருக்கிறது. தென்னோலையைக் குவித்து எரித்து 'அம்மன் பள்ளு' எனும் பாடலைப் பாடியபடி, எரிகின்ற தென்னோலைகளைச் சுற்றி ஆண்கள் கைகொட்டி ஆடும் நடனம் பள்ளுக்கு வளைதல் எனப்படும். கொம்பு விளையாட்டில் நிகழ்த்து கலைகளிற்குரிய மகிழ்வளிப்புப் பண்புகளும் காணப்படுகின்றன. வெற்றி பெற்ற சேரியினரிடையே இது மகிழ்வூட்டுகின்ற கலையாக அமைந்து விடுகின்றது. பார்வையாளர்களிற்கும் இவ்விளையாட்டு மகிழ்வூட்டுவதாகவும், விறுவிறுப்பினைத் தூண்டுவதாகவும் அமைகின்றது.

கொம்பு விளையாட்டானது தற்காலத்தில் சடங்கின் தன்மைகளைப் படிப்படியாக இழந்து வருகின்றது. கொம்பு விளையாட்டினைப் பார்ப்பவர்கள் அனைவரும் அதன் சடங்குத் தன்மையில் பூரண விசுவாசம் கொள்வதில்லை. விசுவாசம் அற்றவர்களிற்கு இது வெறும் நிகழ்த்து கலையாகவே தோன்றும். எனினும் கொம்பு விளையாட்டானது இன்னமும் முழுமையாகச் சடங்கு நிலையிலிருந்து விடுபட்டுப் பூரணமான நிகழ்த்துகலையாக மாற்றம் பெறவில்லை. இது கண்ணகி வழிபாட்டுடன் பின்னிப் பிணைந்ததாகவே காணப்படுகின்றது. கொம்பு விளையாட்டைப் பார்க்கின்ற ஒருசாரார் மத உணர்வு நிலையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளாத நிலையிலேயே இதனைப் பார்க்கின்றனர்.

அடிக்குறிப்புகள்

1. வி.சீ., கந்தையா, மு.கு.நூ, பக்.179.
2. மேலது, பக்.179.
3. வி.சீ., கந்தையா, மு.கு.நூ, பக்.180.
4. கா. சிவத்தம்பி, சி. மௌனகுரு, க. திலகநாதன், மு.கு.நூ, பக்.3.
5. மேலது, பக்.3.
6. மேலது, பக்.10.

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

1991 – 2009: ஈழப்போரின் சர்வதேசப் பரிமாணமும் ஆயுதப் போராட்டத்தின் முடிவும்

பகுதி 1

சி. அ. யோதிலிங்கம்

சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார். 'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.



இக்காலகட்டம் ஈழத்தமிழர் அரசியல் பிராந்திய மட்டத்தில் இருந்து விலகி, சர்வதேச மட்டத்திற்கு நகர்ந்த காலகட்டமாகும். ராஜீவ் காந்தியின் மரணத்துடன் இந்தியா ஈழத்தமிழர் அரசியலில் நேரடியாகத் தலையிடுவதை நிறுத்திக் கொண்டது. இதுவே சர்வதேச மட்டத்திற்கு ஈழத்தமிழர் அரசியல் செல்வதற்கான வாய்ப்புகளை கொடுத்து இருந்தது.

ஈழத்தமிழர் அரசியல் இலங்கை மட்டத்தில் இருந்த போது இலங்கை அரசு மாத்திரமே எதிரியாக இருந்தது. அது பிராந்திய மட்டத்திற்குச் சென்றபோது இலங்கை அரசும் பிராந்திய அரசு இந்தியாவும் எதிரிகளாக வந்தன. அது சர்வதேச மட்டத்திற்குச் சென்ற போது இலங்கை அரசு, பிராந்திய அரசு, சர்வதேச வல்லரசுகள் என்பன எதிரிகளாக வந்தன. இவையனைத்தும் சேர்ந்து ஆயுதப்போராட்டத்தை அழித்தமையே வரலாறாகும்.

ரஞ்சன் விஜேரட்ணா கொலை

இவர் வல்பொல முதலிகே ஜோர்ஜ் ஏர்கிலிஸ் விஜேரட்ணாவுக்கும் ரொசலிண்ட் மரியா சேனாநாயக்கவுக்கும் பிறந்தார்; குருத்தலாவை புனித தோமையார் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் கல்கிசை புனித தோமையார் கல்லூரியில் மேல்நிலைக் கல்வியையும் மேற்கொண்டார். பின்னர் பெருந்தோட்டத் துறையில் அதிகாரியாக இணைந்து பணியாற்றினார். 1978 ஆம் ஆண்டு விவசாயத்துறை ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார். பெருந்தோட்டத் துறைக்குப் பாதுகாப்பை வழங்கும் நோக்கில் அமைக்கப்பட்ட இலங்கை நீள் துப்பாக்கி படையின் லெப்டினன்ட் கேணலாக நியமிக்கப்பட்டார்.

1988ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் சபைத்தலைவராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து தனது அரச பணிகள் அனைத்திலிருந்தும் விலகினார். பின்னர் அக்கட்சியின் பொதுச்செயலாளராகப் பணியாற்றினார். 1989ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்று பாதுகாப்புப் பிரதி அமைச்சராகப் பணியாற்றினார்.

விஜேரட்ணா 2 மார்ச் 1991 அன்று, கொழும்பில் உள்ள ஹேவ்லாக் சாலையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த நேரத்தில் தனது அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது, விடுதலைப் புலிகள் அமைப்பால் தொலைக்கட்டுப்பாட்டு கார் குண்டு மூலம் கொல்லப்பட்டார். இதன் போது 13 பொதுமக்கள், 5 அமைச்சு பாதுகாப்பு ஊழியர்கள், அமைச்சர் உட்பட 19 பேர் கொல்லப்பட்டனர். லெப்டினன்ட் கேணல் ரஞ்சன் விஜேரட்ணா இறப்பின் பின்னர் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டார். கொத்தலாவலை பாதுகாப்பு பயிலகம் (தற்போது கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம்) அவருக்கு சட்டத்துறையில் முனைவர் பட்டத்தை வழங்கியது.

கொக்கட்டிச்சோலை படுகொலைகள் (Kokkadicholai Massacre)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகருக்கு அருகில் உள்ள கொக்கட்டிச்சோலை என்ற ஊரில் தமிழ் மக்கள் மீது இத்தாக்குதல் இடம்பெற்றது. இத்தாக்குதல் 1991ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் திகதி அன்று நடத்தப்பட்டது. இதன் போது மொத்தம் 152 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
இப்படுகொலைகளை விசாரணை செய்ய இலங்கை அரசு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்தது. படுகொலைகளை நடத்திய இராணுவத்தினரைக் கட்டுப்படுத்த கட்டளை அதிகாரி தவறிவிட்டதாக ஆணைக்குழு கண்டறிந்தது. அவரைப் பதவியில் இருந்து அகற்றுமாறு ஆணைக்குழு பரிந்துரைத்தது. அத்துடன் படுகொலைகளில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினரில் 19 பேரை ஆணைக்குழு அடையாளம் கண்டது. கொழும்பில் நடத்தப்பட்ட இராணுவ விசாரணைகளில் இந்தப் 19 பேரும் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்ட போதிலும், பின்னர் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

கோவை மகேசன் மரணம்

இவர் ஈழத் தமிழ்ப் பத்திரிகையாளரும், அரசியல்வாதியும், எழுத்தாளரும் ஆவார். சுதந்திரன் வாரப் பத்திரிகை, மற்றும் சுடர் மாத இதழ் ஆகியவற்றின் ஆசிரியராகப் பணியாற்றியவர். ஈழத்தமிழின விடுதலையே இவரது உயிர்மூச்சாக இருந்தது. நாட்டுப்பற்றாளராக, இனப்பற்றாளராக தன் இறுதி மூச்சு உள்ளவரை பணியாற்றியவர்.

இலங்கை யாழ்ப்பாணம் கோப்பாய் தெற்கில் 1938 மார்ச் 22 இல் பிறந்த கோவை மகேசனின் இயற்பெயர் மகேஸ்வர சர்மா. மகேஸ்வர சர்மா என்ற பெயரை மகேசன் எனவும், கோப்பாயைக் குறிக்க கோவை என்றும் சேர்த்துத் தனது பெயரைக் கோவை மகேசன் என எழுதினார். தந்தையார் பெயர் சோ. இரத்தினசபாபதி ஐயர். தாயார் பெயர் இரத்தினம்மா. மனைவி பெயர் விசாலாட்சி. சிறு வயதிலேயே தாயை

இழந்தவர். தனது ஆரம்பக் கல்வியை கோப்பாய் சைவத் தமிழ் கலவன் பாடசாலையிலும் (நாவலர் பாடசாலை), மேற்படிப்பை கோப்பாய் கிறித்தவக் கல்லூரியிலும் கற்றார். சிரேஷ்ட தராதர (கலைப்பிரிவு) சோதனையில் சிறப்புத் திறமைகளுடன் சித்தியடைந்தார். சில காலம் யாழ்ப்பாணம் கச்சேரியில் தேர்தல் திணைக்களத்தில் பணியாற்றினார்.

இளவயதிலேயே தமிழ்ப்பற்று மிகுந்தவராக இருந்தார். பேரறிஞர் அண்ணாவின் எழுத்துகளால் கவரப்பட்டார். தற்காலிக வேலை மூலம் கிடைத்த சொற்ப தொகையில் பெரும் பகுதியை புத்தகங்கள், பத்திரிகைகள் வாங்கவே செலவிட்டார். குடும்பத்தில் வசதிகள் குறைவாக இருந்தபோதிலும் அவரது தமிழ்ப்பற்று அவ்வாறு செலவு செய்ய வைத்தது.

இவரது இளமைக்காலத்தில் இலங்கையில் தமிழ் அரசியல் உருவாகத் தொடங்கியது. தமிழ்ப்பற்று மிக்க இவர் தமிழ் அரசியலால் கவரப்பட்டார். தந்தை செல்வா உருவாக்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் தன்னை இணைத்துக் கொண்டார். 1956 ஆம் ஆண்டு கோப்பாய் தேர்தல் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட கு. வன்னியசிங்கத்துக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார்.

மயானத்தில் அவர் உடல் தகனம் செய்யப்பட்டது. இவரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் பெருஞ்சித்திரனார், பழ. நெடுமாறன், பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் போன்ற பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

லலித் அத்துலத் முதலி கொலை



லலித் அத்துலத் முதலி

Image Source - themorningtelegraph.com

இவர் 1972ஆம் ஆண்டு முன்னாள் இலங்கை பிரதமர் டட்லி சேனாநாயக்கவின் அழைப்பை ஏற்று ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்தார். அத்துலத்முதலி, அகலவத்தை தேர்தல் தொகுதிக்கான கட்சியின் முதன்மை அமைப்பாளராக ஆக்கப்பட்டார். அத்துலத்முதலி 1977 ஆண்டின் இலங்கை பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக இரத்மலானை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று இலங்கை நாடாளுமன்றம் சென்றார். இவருக்கு வர்த்தக அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டு ஓர் ஆண்டின் பின்னர் துறைமுக அமைச்சும் கொடுக்கப்பட்டது. பின்னர் தேசிய பாதுகாப்பு அமைச்சும் கொடுக்கப்பட்டது. 1988 ஆண்டில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் விடுமுறை அறிவிப்பைத் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சியின் அதிபர் வேட்பாளராவதற்கு முயன்றார். எனினும் இதில் ரணசிங்க பிரேமதாசா வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் பிரேமதாச அதிபரான போது இவருக்குப் பிரதமர் பதவி கொடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் வேளாண்மை அமைச்சும் பின்னர் கல்வி - உயர்கல்வி அமைச்சுமே கொடுக்கப்பட்டது.

பிரேமதாசாவின் தலைமையில் விரக்தியுற்ற அத்துலத்முதலி அவர் மீது நம்பிக்கையில்லா மசோதா ஒன்றைக் கொண்டு வந்து தோல்வியுற்றார். இதனால் இவரும் இவருக்கு ஆதரவளித்தவர்களும் கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர். ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிய இவர் தனது தலைமையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சியை தொடங்கினார். 1993 ஏப்ரல் 23 ஆம் திகதி கொழும்பு கிருலப்பனையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றின் போது துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார். அரசு விடுதலைப் புலிகள் மீது பழிசுமத்தி, அடுத்த நாள் சம்பவ இடத்திற்கு அண்மையில் சயனைட் உண்டு இறந்து காணப்பட்ட தமிழ் இளைஞரையே கொலையாளி என்றது. இருப்பினும் அப்போதைய அதிபர் பிரேமதாச மீதும் சந்தேகம் நிலவி வந்தது.

யாழ்ப்பாணப் பேச்சுவார்த்தை

1994இல் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நிகழ்த்த சந்திரிகா உடன்பட்டுக் கொண்டார். அவரின் நிலைப்பாடு பெரும்பான்மை இனத்துடன் சிறுபான்மை இனமாகிய தமிழர்களை இணங்கிப் போகச் செய்வது தான். இலங்கை அரசிலே சந்திரிகாவின் ஆட்சிக்காலமானது தமிழருக்கு எதிரான



சந்திரிகா பண்டாரநாயக்க

Image Source - colombotelegraph.com

மிகக் கொடூரமான வரலாற்றுக் கட்டமாக அமைகிறது. சந்திரிகா 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19ஆம் திகதி பிரதம மந்திரியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இதன்போது தமிழர்களிடம் நல்ல ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடை நீக்கம், தமிழ் கைதிகளின் விடுதலை என பல்பரிமாண இயல்பைக் கொள்கைகளாக வெளிப்படுத்துவது போல் செயற்பட்டார். இதனால் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சந்திரிகா மீது சந்தேகம் கொண்டார். தமது நீண்ட கால கோரிக்கையை வெளிப்படுத்தக் கோரி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கையில் இடம்பெற்ற முக்கியமான விடயங்களாவன:

1.தமிழர் தாயகத்தின் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க பொருளாதாரத் தடைகளை முற்று முழுதாக நீக்கிவிடல்.

2.நிரந்தரமான போர் நிறுத்தம் செய்து நிபந்தனையற்ற பேச்சுகளை ஆரம்பித்தல்.

இவ்விரு கோரிக்கைகளை முதன்மைப்படுத்திய கடிதத்தின் பிரதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக புதிய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இக்கடிதமானது 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இரண்டாம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது. அதற்குப் பதில் கடிதத்தை 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்பதாம் திகதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வாயிலாக தலைவர் பிரபாகரனுக்கு சந்திரிகா அனுப்பி இருந்தார். அதில் தலைவர் பிரபாகரன் கூறிய கோரிக்கைகள் ஏற்கப்பட்டு பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளமை தெரிவிக்கப்பட்டு இருந்தது. இருப்பினும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகளை முற்று முழுதாக நீக்கிவிடுமாறு பிரபாகரன் விடுத்த கோரிக்கைகள் சார்ந்து சந்திரிகா தனது கடிதத்தில் எதுவுமே குறிப்பிடவில்லை. அத்துடன் போர் நிறுத்தம் சார்ந்தும் எதுவும் தெரிவிக்கவில்லை. இதன் பின்னர் 1994 செப்டம்பர் 12 அன்று மேற்கூறிய குறைபாடுகள் காரணமாக மீண்டும் ஒரு கடிதம் சந்திரிகாவுக்கு பிரபாகரனால் அனுப்பப்பட்டது. அதில், விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழு பிரதிநிதிகளை அவர் அறிமுகப்படுத்தியதுடன் போர் நிறுத்தம் குறித்து தான் தெரிவித்த யோசனையை அரசாங்கம் புறக்கணித்ததையிட்டு கவலையையும் வெளிப்படுத்தியிருந்தார். இயல்பு நிலையை மீளக் கொண்டுவந்து அமைதியைப் பேண வேண்டியதன் அவசியத்தையும் தெரிவித்து எழுதியிருந்தார். இம்மடலுக்கு சந்திரிகாவிடம் இருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை. இந்நாட்களில் சிறீலங்கா கடற்படை மற்றும் வான்படை என்பவற்றுக்கும் விடுதலைப்புலிப் போராளிகளுக்கும் இடையில் சண்டைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

சிறீலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'சாகரவர்த்தனா' எனப்படும் போர்க்கப்பல் மன்னார்க் குடாவில் கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி மூழ்கடிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தின் போது 24 கடற்புலிகள் கொல்லப்பட்டார்கள். போர்க்கப்பலின் தளபதியும் மற்றும் ஒரு கடற்படை அதிகாரியும் கடலிலிருந்து மீட்கப்பட்டு போர்க்கைதிகளாக சிறைப்பிடிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் இடம்பெற்று இரண்டு நாட்கள் கழித்து 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 அன்று பிரபாகரனுக்கு சந்திரிகா அம்மையாரினால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அதில் அரசதரப்பு பிரதிநிதிகள் பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் அக்கடிதத்தில் சந்திரிகாவினால் பேச்சுவார்த்தைக்கு என நியமிக்கப்பட்டவர்கள் இனப்பிரச்சினை பற்றிய ஆழமான அறிவைப் பெற்றவர்களாக இருக்கவில்லை என்பது புலிகளின் தலைமைப் பீடத்திற்கு பெரும் ஏமாற்றமாகவே இருந்தது.

புலிகளின் பேச்சுவார்த்தைப் பிரதிநிதிகள்:

1. திரு.எஸ். கரிகாலன் (உதவி அரசியல் பொறுப்பாளர்)

2. திரு.எஸ். இளம்பரிதி (அரசியல் பொறுப்பாளர், யாழ்ப்பாண மாவட்டம்)

3. திரு.ஏ. ரவி (பொறுப்பாளர், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்)

4. திரு.எஸ். டொமினிக் (பொறுப்பாளர், பொது நிர்வாகப் பிரிவு)

அரசதரப்பு பிரதிநிதிகள்:

1. திரு.கே. பலபத்தபென்டி (பிரதம மந்திரியின் செயலர், சட்டத்தரணி)

2. திரு. லயனல் பெர்னான்டோ (உல்லாசப் பிரயாணத்துறை, தகவல் அமைச்சுச் செயலர்)

3. திரு.ஆர். ஆசீர்வாதம் (இலங்கை வங்கியின் அதிபர்)

4. திரு.என்.எல். குணரெட்னா (அதிபர், திட்ட அமைப்பு இணையம், கட்டடக்கலை நிபுணர்)

குறித்த நிபுணர்கள் குழுவினது கடிதத்தைத் தொடர்ந்து 1994 அக்டோபர் 13ஆம் திகதி பேச்சுவார்த்தை நாளாக உறுதிப்படுத்தப்பட்டது. இதற்காக அரசதரப்பு வருகை தந்து பலாலி விமானத்தலத்தில் தரையிறங்கும் எனவும் அறிவிக்கப்பட்டது. இதன் போது பேசப்படும் விடயங்கள் என அரசு தரப்பினால் தீர்மானிக்கப்பட்டவைகளாக:

1. அத்தியாவசியப் பொருட்களின் போக்குவரத்து, மிகக் குறைந்த விலையில் இப்பொருட்களின் விநியோகம்.

2. மின்சார விநியோகம், வீதிகள், நீர்ப்பாசன வசதிகள், பாடசாலைகள், மருத்துவமனைகளின் சீரமைப்பு.

3. யாழ்ப்பாண நூலகத்தின் புனர்நிர்மாணம்.

4. போர் நிறுத்தத்திற்கு வழி செய்யும் வகையில் பகைமை நடவடிக்கைகளை நிறுத்துவது பற்றி ஆராய்தல்.

5. மற்றும் முக்கிய விடயங்கள்.

எனினும் மையப் பிரச்சினையாகக் காணப்பட்ட பொருளாதாரத் தடை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது புலிகளின் தரப்பினருக்கு பெரிய ஏமாற்றமாக அமைந்தது.

முதல் கட்டப் பேச்சுவார்த்தைகள்

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் மத்தியில் முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் 1994 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கு புலிகள் தரப்பினர் உடன்பாடு தெரிவித்தனர். அரசாங்கம் முன்மொழிந்த இரண்டு தினங்களில், விடுதலைப் புலிகள் இணங்கிய 13 மற்றும் 14 ஆம் திகதிகளிலேயே இந்த முதற்கட்டப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது முதலாவதாக, யாழ்ப்பாணத்து மக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பொருட்களைக் கொண்டு செல்லுதல் தொடர்பான இன்னல்களைத் தீர்வு செய்வதற்காக சங்குப்பிட்டி - கேரதீவுப் பாதையைத் திறந்துவிடுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் முதல் கட்டப் பேச்சின் போது உருப்படியான முடிவுகள் எதுவும் எட்டப்படாமையானது புலிகள் தரப்பினருக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள்

1994 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற இணக்கம் தெரிவிக்கப்பட்டது. சந்திரிகா அம்மையார் கடிதம் ஒன்றை பிரபாகரனுக்கு அனுப்பி இதனை உறுதிப்படுத்தியிருந்தார். இதை விட 1994 ஆம் ஆண்டு காமினி திஸ்ஸநாயக்க கொழும்பில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் ஒரு மனிதக் குண்டுதாரியினால் கொல்லப்பட்டார். ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்கள் இந்த அரசியல் கொலைக்கு விடுதலைப் புலிகள் மீது பழி சுமத்தினர். சந்திரிகா அரசாங்கம் அவசரப்பட்டு புலிகள் மீது குற்றம் சுமத்தவில்லை. ஆயினும் கொலை குறித்து விசாரணை நடத்த அரசு உத்தரவு பிறப்பித்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் கொலைக்கு உரிமையும் கோரவில்லை; மறுக்கவும் இல்லை. இந்தக் கொலையின் பின்னணியில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணைந்த ஒரு கூட்டுச் சதி உள்ளதாக குற்றம் சுமத்தி கொழும்பு நகரப்புறங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. யாழ்ப்பாணப் பொது நூல் நிலையத்தை தீவைத்துக் கொழுத்தி தமிழரின் விலை மதிக்க முடியாத வரலாற்று நூல்களையும் ஏடுகளையும் நெருப்பில் நாசம் செய்த அந்தப் பண்பாட்டுப் படுகொலை நிகழ்வுக்கு பிரதான சூத்திரதாரியாக விளங்கிய காரணத்தினாலேயே காமினி திஸ்ஸநாயக்க விடுதலைப் புலிகளின் பழிவாங்கல் நடவடிக்கைக்கு ஆளாகி இருக்கலாம் என

தமிழ் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

காமினியின் கொலைக்கான காரணகர்த்தாக்கள் எனப் புலிகள் மீது ஐக்கிய தேசியக் கட்சி பகிரங்கமாகச் சுமத்திய குற்றச்சாட்டு மற்றும் கூட்டுச் சதி குறித்த விமர்சனங்கள் காரணமாக, சந்திரிகா அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் கண்ணும் கருத்துமாக இருந்த சந்திரிகா அம்மையார் சமாதான முயற்சிகளுக்கு உடனடியாக மூடுவிழா நடத்தி அமைதி வேண்டி நின்ற ஆதரவாளர்களைப் பகைத்துக் கொள்ளவும் விரும்பவில்லை. இதன் காரணமாக, அவர் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக உறுதியளித்ததோடு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்குப் பொதுமக்களின் ஆதரவைக் கோரித் தேர்தல் களத்தில் இறங்கினார். ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக காமினி திஸ்ஸநாயக்கவின் மனைவி சிறீமா திஸ்ஸநாயக்க தேர்தலில் போட்டியிட்டார்.

நெடுங்கேணித் தாக்குதல்

1994 ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் நாள் அன்று புதிய ஜனாதிபதியாக சந்திரிகா பதவிப்பிரமாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து புதிய அரசு அதிபராக பதவியேற்றமைக்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக விடுதலைப் புலிகள் இயக்கம் 1994 நவம்பர் 12 தொடக்கம் 19ஆம் திகதி வரை ஒரு வார காலத்திற்கு ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தப் பிரகடனம் செய்தது. இச்செய்தியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அரசாங்கத்திற்கும் தெரிவித்து இருந்தது. ஆனால் அரசாங்கத்திடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை. போர் நடவடிக்கைகளை முற்றாக நிறுத்தி விடுதலைப்புலி போராளிகள் அமைதி பேணி வந்த நேரத்தில் சிங்கள ஆயுதப்படைகள் புலிகளுக்கு எதிராக பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டனர். குடிமனைகள் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களும் பீரங்கித் தாக்குதல்களும் நடைபெற்றன. இதன் விளைவாக பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டு படுகாயமும் அடைந்தனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டும் கோரச் சம்பவமும் வன்னியில் நிகழ்ந்தது. வன்னியில் உள்ள நெடுங்கேணிப் பகுதியில் சிங்கள இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் மீது பதுங்கி இருந்து தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் சிங்கள இராணுவத்தினர் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் கேணல் அமுதன் அவர்களைச் சுட்டுக்கொன்றதுடன் அவரது தலையையும் வெட்டி எடுத்துச் சென்றனர். அமுதனது துண்டிக்கப்பட்ட தலையைத் திருப்பி ஒப்படைக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் புலிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் இக்கோரிக்கை சிங்கள இராணுவத்தினரினால் நிராகரிக்கப்பட்டது. இந்நிகழ்வானது புலிகளின் தலைமைப் பீடத்திற்கு ஆத்திரத்தையும் ஆழமான ஏமாற்றத்தையும் கொடுத்தது. இச்சம்பவங்களின் பின்னர் 1994 நவம்பர் 19ஆம் திகதி அன்று பாதுகாப்பு உதவி அமைச்சர் திரு. அனுருத்த ரத்வத்தே, தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் உடனடியாகவே இரண்டு வாரங்களுக்கு போர் நிறுத்தம் செய்து கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தார்.

இரண்டாம் கட்டப் பேச்சுகள் ஆரம்பமாக இருந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினுடைய ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸ்ஸநாயக்க கொல்லப்பட்டமையினால் தற்காலிகமாகப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டன. இதனால் ஆத்திரமுற்ற புலிகள் அமைப்பு நெடுங்கேணித் தாக்குதலுக்கு நீதி கோரி கேணல் அனுருத்த ரத்வத்தேக்கு கடிதம் அனுப்பினர். ரத்வத்தே, பகை நிறுத்த உடன்பாட்டின் பின்னரே பேச்சுகள் ஆரம்பமாகுமெனக் கூறினார்.

1995 ஜனவரி இரண்டாம் நாள் அன்று யாழ்ப்பாணம் சுண்டுக்குழியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் செயலகத்தில் இரண்டாம் கட்டப் பேச்சுகள் இடம்பெற்றன. இம்முறை அரச தூதுக்குழுவில் புதிதாக இரு படைத்துறை அதிகாரிகள் பங்கு கொண்டனர். மூத்த இராணுவ அதிகாரியான பிரிகேடியர் ஏ.எஸ். பீரிஸ், கடற்படை அதிகாரியான கேப்டன் பிரசன்னா ராஜரத்தின ஆகியோரே இருவருமாவர். விடுதலைப் புலிகளின் தூதுக்குழுக்களுக்கு அரசியல் துறை பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமை வகித்தார். பகை நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வது பற்றியும் அமைதி வழிமுறைகள், நடைமுறைகள், கண்காணிப்பு போன்ற அம்சங்கள் பற்றியும் இரண்டாவது சுற்றுப் பேச்சில் முக்கியமாகப் பேசப்பட்டது. போர் நிறுத்த காலத்தில் எல்லையில் நிலை கொண்டுள்ள இரு தரப்பு படையணிகளும் தம்முடைய 600 மீட்டர் இடைவெளியை சூனியப் பிரதேசமாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும், சகல விதமான போர் நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

கடற்றளங்களையும் கரையோர இராணுவ முகாம்களையும் அண்மித்த கடற்பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய கடற் பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிலை வழமை போல செய்யலாமென அரச பிரதிநிதிகள் தெரிவித்தனர். வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் மாவட்டங்களில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுக்களை நிறுவவும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை அக்குழுக்களின் தலைவர்களாக நியமிக்கவும் இணக்கம் காணப்பட்டது. போர் நிறுத்தத்தைக் கைவிடுவதனால் 72 மணி நேரக் காலக்கெடு கொடுக்கப்பட வேண்டும் எனவும் முடிவாகியது. போர் நிறுத்த விதிகள், கட்டுப்பாடுகளைக் கொண்டதாக ஏழு அம்ச ஆவணம் ஒன்றும் தயாரிக்கப்பட்டது. பகை நடவடிக்கைகள் நிறுத்தப் பிரகடனத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையின் பெயரில் ஒரே நேரத்தில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கைச்சாத்திட்டனர். இதன்படி 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் நாளில் இருந்து போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.

பகை நடவடிக்கை நிறுத்தப் பிரகடனம்

மத்தியில் இணக்கம் காணப்பட்ட பகை நடவடிக்கை நிறுத்த அமுலாக்க நடைமுறைகள் வருமாறு:

1.இந்தக் காலகட்டத்தில் இருதரப்பினரும் எவ்விதப் போர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது. அப்படியான போர் நடவடிக்கை இந்த உடன்பாட்டை மீறுவதாகக் கருதப்படும்.

2.பாதுகாப்புப் படைகளும் விடுதலைப்புலிப் படையணிகளும் 600 மீட்டர் இடைவெளியை விடுத்து தங்களது தற்போதைய கள நிலைகளில் தரித்து நிற்க வேண்டும். ஆயினும் இருதரப்புப் படைகளும் தத்தம் காவலணி நிலையிலிருந்து 100 மீட்டர் வரை நடமாடலாம். ஆனால் குறைந்தது 400 மீட்டர் இடைவெளியைத் தம்மிடையே வைத்துக் கொள்ள வேண்டும். தடை செய்யப்பட்ட பகுதிக்குள் எந்தத் தரப்பினராவது பிரவேசித்தால் அது பகை நடவடிக்கையாகவே கருதப்படும்.

3.அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக, நாட்டின் இறையாண்மையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் தமது சட்டபூர்வமான செயற்பாடுகளில் கடற்படையும் வான்படையும் ஈடுபட்டிருக்கும் அதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பகை நடவடிக்கைகளில் ஈடுபடாமலும் குறிப்பிட்ட கடற்பிரதேசங்களில் சட்டபூர்வமான மீன்பிடிப்புக்கு இடையூறு விளைவிக்காமலும் செயற்படும்.

4.எந்தவொரு அரசியல் கட்சிக்கோ அல்லது குழுவுக்கோ, தனிப்பட்ட நபருக்கோ எதிராக நாசகார வேலைகள், வெடிகுண்டு வெடித்தல், கடத்தல், கொலை புரிதல் போன்ற செயல்களில் ஈடுபட்டால் அதுவொரு பகை நடவடிக்கையாகக் கருதப்படும்.

5.(அ) மேற்கண்ட உடன்பாட்டு விதிகள் மீறப்படும் சம்பவங்களை விசாரிப்பதற்காக கண்காணிப்புக் குழுக்கள் நிறுவப்படலாம். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு - அம்பாறை ஆகிய பகுதிகளிலும் தேவை எழும் வேறு இடங்களிலும் இந்தக் குழுக்கள் நியமிக்கப்படலாம்.

(ஆ) இரு தரப்பிலிருந்தும் புகார்கள் செய்யப்படும் போது சம்பவங்களை விசாரித்து பிணக்குகளைத் தீர்த்து வைக்க உடன் நடவடிக்கை எடுப்பது குழுக்களின் பொறுப்பாகும்.

(இ) கனடா, நெதர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளில் இருந்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அமைப்பிலிருந்தும் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளும் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகள், அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள், மூத்த குடிமக்கள் ஆகியோரும் இக்குழுக்களில் அங்கத்துவம் பெறலாம்.

(ஈ) ஒவ்வொரு குழுவிலும் ஐந்து அங்கத்தவர்கள் அடங்குவர். வெளிநாட்டுப் பிரதிநிதியே குழுவின் தலைவராகச் செயல்படுவார்.

- அரசாங்கத்தின் சார்பாக இருவர்
- விடுதலைப் புலிகளின் சார்பாக இருவர்
- வெளிநாட்டில் இருந்து ஒருவர்

(உ) இந்தக் குழுவினர் தமது பணிகளைச் செய்வதற்கான நடமாட்டச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது ஒப்பந்தம் செய்து கொண்ட இரு தரப்பினரதும் பொறுப்பாகும்.

(ஊ) நடுநிலையாகவும் துரிதமாகவும் இந்தக் குழுக்கள் செயற்படுவதற்கான வசதிகளை வழங்குவது குறித்து இருதரப்பும் பேசி இணக்கம் காண வேண்டும்.

(எ) உள்ளூரில் உடனுக்குடன் பிரச்சினைகளுக்கு இணக்கம் காணும் நோக்கில் பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதேச

தளபதிகளுக்கும் மத்தியில் தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

இரு தரப்பினரில் ஒருவர் உடன்பாட்டில் இருந்து விலகுவதாக அறிவித்தல் கொடுக்கும் வரை போர் நிறுத்தம் தொடரும். விலகும் அறிவிப்புக்கு 72 மணி நேரக் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைகள்

1995 ஜனவரி 14ஆம் நாள் அன்று மூன்றாவது கட்டப் பேச்சுகள் யாழ்ப்பாணத்தில் வழமையான இடத்தில் நிகழ்ந்தன. சென்ற கட்டப் பேச்சில் கலந்து கொண்ட அரச பிரதிநிதிகளே இம்முறையும் பேச்சில் கலந்து கொண்டனர். மோதல்களைத் தவிர்த்து அமைதி நிலையை செம்மையாகப் பேணும் வகையில் பகைநிறுத்தச் செயற்பாட்டு விதிகள் திருத்தி அமைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பேச்சுகளின் போது வலியுறுத்தினர். கிழக்கு மாகாணத்தில் மோதல்நிலை ஏற்படும் ஆபத்தான சூழ்நிலை உருவாகி இருப்பதாக எடுத்து விளக்கிய புலிகளின் பிரதிநிதிகள், புலிகளின் கெரில்லா அணிகளின் நடமாட்டச் சுதந்திரத்திற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என வற்புறுத்தினர். பகை நிறுத்தத்தை சமாதானக் குழுக்கள் சரிவரக் கண்காணிப்பதற்கு ஏதுவாக களநிலை யதார்த்தத்தைக் கருத்தில் கொண்டு உடன்பாட்டு விதிகளும் கட்டுப்பாடுகளும் மாற்றி அமைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட வேண்டும் என பிரதிநிதிகள் அரசு குழுவை வேண்டிக் கொண்டனர். போர் நிறுத்தச் செயற்பாட்டு விதிகளை விரிவுபடுத்தி அவற்றை ஒரு தனி ஆவணமாக அல்லது உடன்பாட்டின் துணை ஆவணமாக வரைய வேண்டும் எனவும் அவர்கள் வற்புறுத்தினர்.

விடுதலைப்புலி பிரதிநிதிகளின் கோரிக்கையை அரசாங்கம் சாதகமாகப் பரிசீலனை செய்யும் என உறுதி அளித்த திரு பலபத்தபென்டி கிழக்கு மாகாணத்தில் நிலவும் பிரச்சினைகளை தமக்கு விவரமாக எழுதி அனுப்பி வைக்குமாறு தமிழ்ச்செல்வனை வேண்டிக் கொண்டார்.

மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் உறுதியற்ற விளக்கப்பாட்டில் சந்திரிகா அரசாங்கம் இருந்தது. கிழக்கு மாகாணத்தில் நிலவிய இறுக்கமான பாதுகாப்பை எவ்வகையிலும் தளர்த்துவதை இராணுவ உயர்பீடம் விரும்பவில்லை. பகை நிறுத்த உடன்பாடு பற்றிய பேச்சுவார்த்தை சரியாக மேற்கொள்ளப்படவோ, வடக்குக் கிழக்கிற்கான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் புலிகளின் தலைமைப் பீடத்தினை சந்திக்கவோ இல்லை. எனினும் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் பொருட்கள் மீதான தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. அதன்படி, பின்வருவன தொடர்பான தடைகள் நீக்கப்பட்டன.

1. விளையாட்டுத் துப்பாக்கிகள்

2. மின்சாரக் கம்பிகள் அல்லது மின்னியக்கக் கருவிகள்

3. மின்சார அல்லது மின்னியக்க விளையாட்டுப் பொருட்கள்

4. அலுமினியப் பாத்திரங்கள்

5. சாக்குகள்

6. நுண்ணிய உருள் குண்டுகள்

7. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள்

8. அச்சு இயந்திரங்கள்

9. தங்கம், இரசாயனப் பொருட்கள்

10. சிறு மின்கலங்கள் தவிர்ந்த ஏனைய மின்கலங்கள் (Penlight Batteries)

நான்காவது கட்டப் பேச்சுவார்த்தைகள்

தலைவர் பிரபாகரன் தெரிவித்த யோசனைக்கு இணங்க நான்காவது கட்டப் பேச்சுகள் ஏப்ரல் மாதம் முதலாம் நாள் நடைபெறவில்லை. முற்கூட்டிய திகதியில் பேச்சுகளை முன்னெடுக்க சந்திரிகா விரும்பவில்லை. நேரடிப் பேச்சுகளை அவர் வேண்டுமென்றே பிற்போட்டார். மேற்கொண்டு ஆக்கபூர்வமான முடிவுகளைச் செயல்படுத்தாமல் தள்ளிப்போடவும் விடுதலைப் புலிகள் விதித்த காலக்கெடுவை செல்லாததாக்குவதற்கும் பேச்சுகளை தள்ளிப்போடும் தந்திரோபாயத்தை சந்திரிகா கடைப்பிடித்தார். பிரபாகரனுக்கு அனுப்பி வைத்த சுருக்கமான கடிதத்தில் நான்காவது கட்டப் பேச்சுகளை ஏப்ரல் 8 தொடக்கம் 10 வரையான நாட்களில் நடத்தவே அவர் விரும்பினார். சிறீலங்கா அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகள் தவறான பரப்புரை செய்வதாகவும் சந்திரிகா தனது கடிதத்தில் குற்றம் சாட்டினார். உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து கடன் உதவிகளைப் பெற்று, அதனை இராணுவ விரிவாக்கத்திற்கு பயன்படுத்தும் நோக்குடனே பேச்சுவார்த்தை நாடகத்தை அரசாங்கம்

மேடையேற்றி வருவதாக புலிகள் இயக்கம் விமர்சனப் பிரசாரம் செய்வதாக அவர் சாடினார். அரசாங்கம் பெறவிருக்கும் கடனுதவியில் பெரும்பங்கு போரினால் சிதைந்த தமிழ்ப் பகுதிகளின் புனர்நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்கும் ஒதுக்கப்பட்டதாக சந்திரிகா அரசு குறிப்பிட்டது.

இதற்குப் பின்னர் 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதியும் ஜனாதிபதி சந்திரிகா நீண்ட கடிதம் ஒன்றை பிரபாகரனுக்கு அனுப்பியிருந்தார். அக்கடிதத்தில் அதுவரை வடமாகாணத்துக்கு என தடை விதிக்கப்பட்டிருந்த பல்வேறு பொருட்களுக்கான பொருளாதாரத் தடை, மீன்பிடி மீதான தடை எனப் பல்வேறு தடைகள் நீக்கப்பட்டு இருந்தன.

பொருளாதாரத் தடை

அதன்படி கீழ்கண்ட பொருட்கள் மட்டும் இப்பொழுது தடை விதிக்கப்பட்ட பட்டியலில் உள்ளன என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1. ஆயுதங்கள் அல்லது ரவைகள்

2. வெடி மருந்துகள்

3. தொலை இயக்கிகள்

4. இரட்டைத் தொலைநோக்கிகள்

5. தொலைநோக்கிகள்

6. திசையறி கருவிகள்

7. சீருடைத் துணிகள்

8. சிறு மின்கலங்கள்

இவற்றைத் தவிர ஏனைய பொருட்கள் அனைத்தும் தடையின்றி வடக்கிற்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும் எனவும், இது குறித்த ஏனைய விவரங்கள் தொடர்பாகவும் மேற்குறித்த எட்டுப் பொருட்களையும் தடை செய்வது தொடர்பாகவும் அரச வர்த்தமானியும் வெளியாகும் எனவும் அக்கடிதத்தில் வெளிப்படுத்தப்பட்டு இருந்தது.

மீன்பிடி மீதான தடைகள்

மீன்பிடி மீதான தடை கணிசமான அளவு தளர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி,

1. தலைமன்னாரிலிருந்து பேய்முனை வரை கரையிலிருந்து ஐந்து மைல் தூரத்திற்கு மட்டுமே மீன் பிடிக்கும் அனுமதி உண்டு.

2. கரையோரமாக அமைந்திருக்கும் பாதுகாப்புப் படைகளின் முகாம்களில் இருந்து பக்கவாட்டாக இருபுறமும் ஒரு மைல் தூரம் வரையும், கரையிலிருந்து கடலை நோக்கியதாக இரு கடல் மைல்கள் தூரம் வரையும் மீன்பிடிப்பதற்கு அனுமதி இல்லை.

3. மூன்றாவதாக கரையோரமாக உள்ள துறைமுகங்கள், குடாக்கள், கழிமுகங்களில் மீன்பிடிக்க அனுமதி இல்லை. இது குறித்து எழக்கூடிய பிரச்சினைகள் பற்றி உள்ளூர் மன்றத்தில் பேச்சுகளை நடத்தி இணக்கம் காண வேண்டும்.

அதாவது தொண்டைமானாற்றிலிருந்து பேய்முனை வரையும், யாழ்ப்பாண நீரேரியிலும் வழமை போல மீன்பிடிக்கும் அனுமதி உண்டு. பேய்முனையிலிருந்து தலைமன்னார் வரை விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மூன்று மாதத்திற்குள் மேல் பரிசீலனை செய்யப்படும். இந்தக் கால இடைவெளிக்குள் சிறீலங்காவின் பிரதேசக் கடலெங்கும் மீன்பிடிக்க அனுமதிக்கும் உடன்பாடுகளைச் செய்து கொள்ள அரசாங்கம் சகல முயற்சிகளையும் எடுக்கும்.

வடக்கில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களை நீக்கி அவர்களது வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் குறிக்கோளுடனேயே பெட்ரோல், டீசல் உட்பட மக்களின் பாவனைப் பொருட்கள் மீதான தடையையும் மீன்பிடி மீதான கட்டுப்பாடுகளையும் அகற்றி உள்ளதாகவும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

பூநகரி முகாம் தொடர்பான விவகாரம்

சங்குப்பிட்டி வீதியை பொதுமக்களின் போக்குவரத்திற்குத் திறந்து விடுவதானால் பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு இராணுவ முகாமின் வெளிப்புற எல்லையை 600 மீட்டர் வரை நகர்த்தி உள்ளதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவற்றோடு வீதியில் சோதனைகள் நடைபெறாது என்றும் எவ்வித தடையும் இன்றி குடிமக்கள் அந்த வீதியைப் பாவிக்கலாம் என்றும் உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

கிழக்கில் ஆயுதம் தரித்த புலிப்போராளிகளின் நடமாட்டம்

பகை நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையிலேயே

இப்பிரச்சினை பேசி தீர்க்கப்பட வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் பிரச்சினை பற்றியும், இரு தரப்பும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும், சமாதானக் குழுக்களை இயக்குவது பற்றியும் பேச்சுகளை நடத்தி இணக்கப்பாடு கண்டு அதனைச் சமாதான உடன்பாட்டின் இணை ஆவணமாகச் சேர்த்து செம்மையாக நடைமுறைப்படுத்தத் தயாராக உள்ளதாக அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது. இது சம்பந்தமான பேச்சுகளை மே மாதம் 5 திகதி தொடக்கம் 10ஆம் திகதிக்கு இடையிலான நாட்களில் நடத்தலாம் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இதன் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை பேச்சுகளைத் தொடர்ந்து நடத்தலாம் என்றும், அடுத்தகட்டப் பேச்சுகளில் கீழ்க்கண்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் யோசனை தெரிவிக்கப்பட்டு இருந்தது.

1. பகை நிறுத்த உடன்பாட்டுக்கு ஓர் இணை ஆவணம் தயாரிப்பது குறித்துப் பேசுவது.

2. புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் பற்றிய கூட்டு அதிகார சபையை நிறுவுதல்.

3. எதிர்காலப் பேச்சுகளை வடிவமைத்தல்.

யாழ்ப்பாணப் பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்தமைக்கான காரணங்கள்

ஆறு மாத காலத்தைக் கொண்ட இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையில் நாளுக்கு சில மணி நேரம் நீடித்த நான்கு சுற்றுப் பேச்சுகளே நடந்தன. விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினைகளின் சிக்கலான பரிமாணங்களைப் பார்க்கும் பொழுது நேரடிப் பேச்சுக்கு ஒதுக்கப்பட்ட கால அவகாசம் மிகவும் சொற்பமானதாக இருந்தது. சில சிக்கலான பிரச்சினைகள் குறித்து விடுதலைப் புலிகள் விளக்கங்களை நாடிய போதெல்லாம் அரசாங்கம் வேண்டுமென்றே சந்திப்புகளைப் பிற்போட்டு பேச்சுகளில் நீண்ட அர்த்தமற்ற கால இடைவெளிகளை ஏற்படுத்தியது.

ஆற்றலும் அனுபவமும் அதிகாரமும் கொண்ட மூத்த அரசியல்வாதிகள் எவரையுமே பேச்சுகளில் பங்குகொள்ள ஜனாதிபதி சந்திரிகா அனுமதிக்கவில்லை. குறைந்த தர நிர்வாகிகளையும் படை அதிகாரிகளையும் அரச தரப்புப் பிரதிநிதிகளாக அவர் நியமித்தார். இவர்களுக்கு தமிழ் மக்களது பிரச்சினைகளின் ஆழம், அகலம் எதுவுமே தெரியாது. அத்தோடு அவற்றைத் தீர்த்து வைக்கும் அரசியல் அதிகாரமும் அவர்களிடம் இருக்கவில்லை. தகைமை குறைந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்ததில் இருந்து, நேரடிப் பேச்சுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை அரசாங்கம் விரும்பவில்லை எனலாம். பேச்சுகள் முறிந்து போகும் தறுவாயில், கடைசிக் கட்டப் பேச்சுக்கு, அரச தரப்பின் தலைவராக எவ்வித அரசியல் அனுபவமும் அதிகாரமும் அற்ற ஒரு கிறித்தவக் குருவானவரையே சந்திரிகா அம்மையார் அனுப்பி வைத்தார்.

கடிதப் பரிமாற்றம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியிலான சமச்சீரற்ற உறவு நிலையைப் பிரதிபலித்துக் காட்டியது. எஜமான்-அடிமை என்ற தோரணையில் சிறீலங்கா அரசு தன்னை உயர்நிலையில் நிறுத்தி புலிகளைத் தாழ்த்தப்பட்ட தரப்பாகவே அணுகியது.

சிறீலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் மத்தியில் சமாதானப் பேச்சுகள் நடைபெறுவதை சிங்களப் படைத்துறை ஆரம்பத்திலிருந்து விரும்பவில்லை.

விடுதலைப் புலிகள் முன்வைத்த நியாயமான மனிதாபிமானக் கோரிக்கைகள் குறித்து அரச படைத்தரப்பு மிகவும் இறுக்கமான, விட்டுக்கொடுக்காத கடும் போக்கைக் கடைப்பிடித்தது. பொருளாதாரத் தடைகளை தளர்த்துவதற்கு சிங்கள இராணுவம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. மக்களின் நாளாந்த வாழ்வுக்கு அத்தியாவசியமான பொருட்கள் அனைத்தையும் இராணுவப் பாவனைப் பொருட்களாக சித்தரித்துக் காட்டியது.

சர்வதேச கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையுடன் ஒரு நிலையான நிரந்தரமான போர் நிறுத்த உடன்பாட்டைச் செய்து கொள்ள சிறீலங்காவின் இராணுவத் தலைமைப் பீடம் விரும்பவில்லை. உதவிப் பாதுகாப்பு அமைச்சரான கேணல் ரத்வத்தே, தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், அரசாங்கம் ஒரு நிரந்தரமான போர் நிறுத்தத்தை விரும்பவில்லை என்றும் அதிகாரபூர்வமற்ற இறுக்கமான தற்காலிகமான பகை நிறுத்தத்தையே விரும்புவதாகவும் சுட்டிக்காட்டினார்.

(தொடரும்)

இலங்கையின் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் மூன்று தசாப்த ஆயுத மோதலின் பின் மீட்சியின் பாதையில் இருக்கின்றன. ஆனால் அந்த மீட்சியின் நடுவே ஒரு புதிய நெருக்கடி வளர்கிறது: சூழல் சீரழிவு. யாழ்ப்பாணத்தில் குடிநீர் வறட்சி, மன்னாரில் கடற்கரை அரிப்பு, முல்லைத்தீவில் வெள்ளம், வன்னியில் நில உரிமை மறுப்பு இவை ஒரே வேர் கொண்ட பிரச்சினைகளின் வெவ்வேறு வெளிப்பாடுகள். இந்த நெருக்கடிகள் அனைவரையும் சமமாகப் பாதிப்பதில்லை. 46,000 போர் விதவைகள், 55,000 பெண் தலைமைக் குடும்பங்களைக் கொண்ட வடக்கில் சூழல் சீரழிவின் முதல் பலி பெண்களே. காலநிலை மாற்றம் பாலின நடுநிலையானதல்ல அது ஏற்கனவே இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஆழப்படுத்துகிறது என்பதை 'வடக்கும் கிழக்கும் பசுமையும்: சூழல் நெருக்கடிகளும் பாலின நீதியும்' எனும் இந்தத் தொடர் ஆதாரங்களுடன் காட்டுகிறது.

யாழ்ப்பாண நிலத்தடி நீர்: தாகத்தின் அரசியல்

அஸாம் ஷா

மட்டக்களப்பைச் சேர்ந்த அஸாம் ஷா, விவசாய அறிவியலில் இளநிலைப் பட்டம் (B.Sc. Agriculture) பெற்றதையடுத்து, சுற்றுச்சூழல் இயற்கையியல் துறையில் முதுகலைப் பட்டம் (M.Sc. Ecology and Environmental Studies) பெற்றார். மேலும், தொழில்துறை சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (Occupational Health and Safety) துறையில் டிப்ளோமாவும் பெற்றுள்ளார். தற்போது, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பீடத்தில் சர்வதேச சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் காலநிலை மாற்றச் சட்டம் (LLM – International Environmental Law and Climate Change) தொடர்பாகப் பயின்று வருகிறார். விவசாயம், சுற்றுச்சூழல் இயற்கையியல் மற்றும் சட்டம் ஆகிய மூன்று துறைகளில் பெற்றுள்ள கல்வி மற்றும் ஆய்வு அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, சுற்றுச்சூழல் நீதி தொடர்பான சிக்கலான விடயங்களை எளிய தமிழில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். மேலும், கூடங்குளம் அணுமின் நிலையத்தின் விரிவாக்கம் இலங்கையில் ஏற்படுத்தக்கூடிய எல்லைகடந்த சுற்றுச்சூழல் விளைவுகள், UNCLOS மற்றும் சர்வதேசச் சட்டத்தின் கீழ் அரசுகளுக்குள்ள கடமைகள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். சர்வதேச சுற்றுச்சூழல் சட்டம், மனித உரிமைச் சட்டம் மற்றும் தென்னாசிய மூன்றாம் உலக அணுகுமுறை (TWAIL) ஆகியவற்றை ஒருங்கிணைத்த பன்முகக் கண்ணோட்டத்தில் தனது ஆய்வுகளையும் எழுத்துகளையும் முன்னெடுத்து வரும் இவர், வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்வுரிமையும் சுற்றுச்சூழல் நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் கல்வி, சட்ட விழிப்புணர்வு மற்றும் சமூக ஈடுபாடு ஆகிய மூன்று தளங்களிலும் தொடர்ந்து செயலாற்றி வருகிறார்.



“6,00,000 பேரின் ஒரே நீர்மூலம் மாசடைகிறது. அரசின் கண்காணிப்பு இல்லை. பெண்கள் தினமும் இதற்கான விலையைக் கொடுக்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் நெருக்கடி ஒரு சூழல் பிரச்சினை மட்டுமல்ல — இது ஓர் அரசியல் கேள்வியும் கூட.”

காலை ஆறு மணி. கார்த்திகா என்ற நாற்பத்தி நான்கு வயதுப் பெண் தனது பிளாஸ்டிக் குடத்தைத் தூக்கிக்கொண்டு கதவைத் திறக்கிறார். வீட்டுக் கிணறு இருக்கிறது — ஆனால் அதில் தண்ணீர் எடுப்பதில்லை. “எண்ணெய் வாசனை வருகிறது. சில நேரம் உப்பாகவும் இருக்கிறது. குடிக்க முடியாது” என்கிறார் கார்த்திகா. யாழ்ப்பாணத்தின் நல்லூர் நகரில் வசிக்கும் அவர், குடிநீருக்காக தினமும் பணம் செலவழிக்கிறார். “அது மிகப்பெரிய நெருக்கடி” என்று ‘Mongabay’ ஊடகத்திடம் கூறினார் (2025).

இது யாழ்ப்பாணத்தின் ஒரு குடும்பத்தின் கதை மட்டுமல்ல. இலங்கையில் வேறு எந்த இடத்திலும் இல்லாத வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 6,00,000 மக்கள் நிலத்தடி நீரை மட்டுமே நம்பி வாழ்கிறார்கள். நதி இல்லை. பெரிய நீர்த்தேக்கம் இல்லை. மழைநீர் போதாது. இந்த ஒரே நீர்மூலம் இன்று மூன்று திசைகளிலிருந்தும் அழிவை நோக்கி நகர்கிறது.

முக்கிய தரவுகள் — ஒரு பார்வை

யாழ்ப்பாண மக்கள்தொகை: 6,00,000+ (IWMI, 2024)

நிலத்தடி நீரை மட்டுமே நம்புவோர்: 100% - ஆறுகள் & நீர்த்தேக்கங்கள் இல்லை

சுன்னாகம் நீர்மூலத்தை நம்பும் மக்கள்: 3,84,000 (NWS & DB)

எண்ணெய் மாசடைந்த கிணறுகள்: 73% - 150 கிணறுகளின் ஆய்வில் (Suntha, 2018)

சர்வதேச நிலை மீறல்: சில இடங்களில் எண்ணெய் அளவு 140 மடங்கு வரை

நைட்ரேட் WHO வரம்பு மீறல்: 14-28% கிணறுகளில் (PMC, 2014)

உப்புநீர் ஊடுருவலால் பாழான கிணறுகள்: 59% கடலோரப் பகுதிகளில் (2020 ஆய்வு)

நெல் வயல் கைவிடல்: 43% - நீர்மூலங்களின் தோல்வியால் (Sustainability, 2020)

நேரடியாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்: 5,864+ - அவசர குடிநீர் தேவைப்பட்டோர்

2024 நிதிக் கோரிக்கை: 129 மில்லியன் ரூபாய் - கிடைத்தது வெறும் 8 மில்லியன் மட்டுமே

I. சுன்னாகம் நீர்மூலம் — ஒரு தலைமுறையின் நம்பிக்கை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நான்கு முக்கிய நிலத்தடி நீர் அடுக்குகள் (Aquifers) உள்ளன: சுன்னாகம் (வலிகாமம் பகுதி), தென்மராட்சி, வடமராட்சி மற்றும் காரைதீவு. இவற்றில் சுன்னாகம் நீர்மூலம் மிகவும் பெரியது; மிகவும் தரமானது என்று ஒருகாலத்தில் கருதப்பட்டது. மயோசீன் கால சுண்ணாம்பு அடுக்கில் (Miocene Limestone Karst Terrain) அமைந்த இந்த நீர்மூலம் நூற்றாண்டுகளாக யாழ்ப்பாண மக்களுக்கு விவசாயத்திற்கும் குடிநீருக்கும் தொழிற்சாலைகளுக்கும் உதவி வந்தது.

ஆனால் 2008ஆம் ஆண்டு அந்த நிலை மாறியது. இலங்கை மின்சார சபை (CEB) வட மாகாணத்தில் தேசிய மின்கட்டம் (National Grid) இல்லாத காலத்தில் மின் தேவையைப் பூர்த்தி செய்ய சுன்னாகத்தில் ஒரு 36 மெகாவாட் டீசல் மின் நிலையத்தை நிறுவியது. இது அவசரத் தேவைக்கு ஏற்படுத்தப்பட்டது — ஆனால் இதன் கழிவு எண்ணெய் எங்கே போகும் என்பதை யாரும் சரியாகத் திட்டமிடவில்லை.



சுன்னாகம் மின் உற்பத்தி நிலையம்
Image Source : www.bbc.com

ஆய்வு காட்டியது இதுதான்: மின் நிலையத்திலிருந்து வெளியேறும் இயந்திர எண்ணெய்க் கழிவுகள் அருகிலுள்ள திறந்த நிலத்தில் கொட்டப்பட்டன. சரியான சுத்திகரிப்பு இல்லாமல் கொட்டப்பட்ட இந்த எண்ணெய் மண்ணிற்கு கீழே ஊர்ந்து நீர்மூலத்தை அடைந்தது. 2013ஆம் ஆண்டு, ஏழாலை, மல்லாகம், உடுவில் பகுதி மக்கள் தங்கள் கிணற்று நீரில் எண்ணெய் வாசனையை உணர்ந்தனர். கிணறுகளில் எண்ணெய்ப் படலம் மிதந்தது.

“கிணற்றில் எண்ணெய் வாசனை வந்தபோது நாங்கள் பயந்தோம். இது என்ன, எங்கிருந்து வந்தது என்று யாரும் சொல்லவில்லை.”



கழிவு எண்ணெய் காணப்படும் கிணறு

Image Source : www.virakesari.lk

NWS & DB ஆய்வாளர் சரவணன் சுந்தா நடத்திய ஆராய்ச்சி (Open Water Journal, 2018) 150 கிணறுகளைப் பரிசோதித்தது. முடிவுகள் அதிர்ச்சியளிக்கின்றன: 109 கிணறுகளில் (73%) எண்ணெய் அளவு இலங்கைத் தரநிலையை (1.0 mg/l) மீறியிருந்தது. சில இடங்களில் சர்வதேச நிலையை 140 மடங்கு வரை மீறியிருந்தது. மாசுப் பரவல் மின் நிலையத்தை மையமாகக்கொண்டு 1.5 கிலோமீட்டர் சுற்றளவில் இருந்தது — மேலும் வடக்குத் திசையில் நகர்ந்துகொண்டே இருந்தது.

Thulasitha & Premachandra (2016) ஆகியோரின் ஆய்வு இன்னொரு உண்மையைக் கண்டுபிடித்தது: 40 கிணறுகளில் 33 கிணறுகள் (82.5%) எண்ணெய்யைத் தாங்கும் அளவை மீறியிருந்தது. மின் நிலையத்திலிருந்து தூரம் அதிகரிக்க அதிகரிக்க மாசு குறைகிறது — ஆனால் எண்ணெய் கொட்டல் நிறுத்தப்பட்டாலும் மாசு நகர்வு தொடர்கிறது என்பதை ஆய்வு காட்டியது. IWMI இன் 2024ஆம் ஆண்டு ஆய்வு தெளிவாகக் கூறுகிறது: "இந்தச் சேதத்தை திரும்பப் பெறுவது மிகவும் கடினமானது, பல ஆண்டுகள் ஆகும்."

II. பல திசைகளில் அழிவு

யாழ்ப்பாண நிலத்தடி நீரின் பிரச்சினை சுன்னாகம் எண்ணெய் மாசு ஒன்று மட்டுமல்ல. IWMI (2024) அடையாளப்படுத்துவது போல, வேறு வேறு ஆபத்துகள் ஒரே நேரத்தில் நிலத்தடி நீரை அச்சுறுத்துகின்றன.

1. நைட்ரேட் மற்றும் வேதியியல் மாசு — யாழ்ப்பாணக் குடாநாடு தீவிர விவசாயப் பகுதி. நைட்ரஜன் உரங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. சுண்ணாம்பு அடுக்கில் பெரிய குழிகள் இருப்பதால் (Karst Geology), உரங்கள் விரைவாக நிலத்தடி நீரை அடைகின்றன. PMC (2014) ஆய்வின்படி, 44 கிணறுகளில் 14 முதல் 28 சதவீதம் கிணறுகள் நைட்ரேட் அளவு WHO குடிநீர் தரநிலையை (10 mg/l) மீறுகின்றன. Jeyaruba & Thushyan thi ஆகியோரின் ஆய்வில் நைட்ரேட்N 7.1 முதல் 15.3 mg/l வரை கண்டுபிடிக்கப்பட்டது — இது தரநிலையின் ஒன்றரை மடங்கு. 16 கிணறுகளில் சோதித்தபோது அனைத்திலும் கோலிஃபார்ம் பாக்டீரியா கண்டுபிடிக்கப்பட்டது. குடிக்கவும் முடியாது, உழவுக்கும் உதவாது.

2. உப்புநீர் ஊடுருவல் (Saltwater Intrusion) — கடலோரக் கிணறுகளில் கடல் நீர் ஊடுருவுவது யாழ்ப்பாணத்தில் மிகவும் தீவிரமான பிரச்சினை. வடமராட்சி மற்றும் உப்பாறு கடலோரிகளை ஒட்டிய பத்துக் கிராமங்களில் நடத்திய ஆய்வு (Ceylon Journal of Science, 2019) ஒரு கொடுமையான உண்மையை வெளிப்படுத்தியது: செம்மணி, மட்டுவில், நாவற்குழி, இருபாலை, நீர்வேலி ஆகிய கிராமங்களில் 60%க்கும் அதிகமான கிணறுகளில் உப்பு அளவு தாங்க முடியாத நிலையில் இருக்கிறது. இருபாலையை மட்டுமே எடுத்தால் — 80%க்கும் அதிகமான கிணறுகள் EC மற்றும் உப்புத்தன்மையைத் தாங்கும் எல்லையை மீறியிருக்கின்றன.

Gopalakrishnan et al. (Sustainability, 2020) அவர்களின் ஆய்வு இன்னும் கொடுமையான தரவைத் தருகிறது: யாழ்ப்பாணக் குடாநாட்டில் 59% கடலோரக் கிணறுகள் விவசாயத்திற்கும் குடிப்பதற்கும் உதவாத நிலையில் இருக்கின்றன. 43% நெல்வயல்கள் நீர்மூலத் தோல்வியால் கைவிடப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் பச்சை வயல்களாக இருந்த இடங்கள் இன்று வெறிச்சோடிக் கிடக்கின்றன.

3. அதிகப்படியான நீர் எடுப்பு (Overextraction) — 28,000க்கும் அதிகமான ஆழமற்ற கிணறுகளும் அதிகரிக்கும் ஆழ்குழாய்க் கிணறுகளும் நிலத்தடி நீரை இழுக்கின்றன. நீர்மட்டம் (Water Table) குறைகிறது. இதனால் கடல் நீர் ஊடுருவல் இன்னும் அதிகமாகிறது. IWMI இன் கவலை: "நிரப்புவதை விட இழுப்பது அதிகம். மழை பெய்தாலும் நிலத்தடி நீரை நிரப்பும் வேகத்தை விட எடுக்கும் வேகம் அதிகமாக உள்ளது."

4. கட்டுப்பாடற்ற மணல் மற்றும் சுண்ணாம்புச் சுரங்கம் — நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் இயற்கை மேல் அடுக்குகளை சுண்ணாம்புச் சுரங்கம் நீக்குகிறது. மழைநீர் நேரடியாக மண்ணில் இறங்காமல் ஓடிப்போகிறது. IWMI குறிப்பிடுகிறது: "Unregulated sand and limestone mining has removed crucial protective layers."

"ஒரு பகுதியில் எண்ணெய் மாசு, மற்றொரு பகுதியில் உப்பு, மூன்றாவது பகுதியில் நைட்ரேட் — யாழ்ப்பாணம் ஒரே நேரத்தில் மூன்று நெருக்கடியைச் சந்திக்கிறது." — IWMI, 2024

♀ I. தண்ணீர் தேடும் பெண் — நேரம் திருடப்படுகிறது

யாழ்ப்பாணத்தின் கிணற்று நீர் பயன்பாட்டுக்கு தகுதியற்றுப் போன சூழலில், பொதுக் குழாய்கள், விலை கொடுத்து வாங்கும் நீர் மற்றும் தொலைதூர இடங்கள் போன்ற மாற்று ஆதாரங்களையே மக்கள் நாடுகின்றனர். இந்த மூன்று வழிகளிலும் உழைப்பு யாருடையது? பெரும்பாலும் பெண்களுடையது.

UNESCO (2026) உலகளவிய தரவு காட்டுகிறது: தண்ணீர் சேகரிப்பின் சுமை பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் மீது விழுகிறது. இது 'Time Poverty' என்று அழைக்கப்படுகிறது — 'நேர வறுமை'. தண்ணீருக்காக ஒவ்வொரு நாளும் இவர்கள் செலவிடும் காலமானது அவர்களின் வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் ஓய்வு நேரத்தைப் பறிக்கின்றது. யாழ்ப்பாணத்தில் 46,000 போர் விதவைகள் (Centre for Women's Development, Jaffna) வாழ்கிறார்கள் — இவர்களுக்குத் தண்ணீர்ச் சுமையை பகிர்ந்துகொள்ள குடும்பத்தில் யாரும் இல்லை.

கார்த்திகா போன்ற பெண்கள் தண்ணீருக்காகப் பணம் செலவழிக்கிறார்கள். இது வருமானத்திலிருந்து பெரும் பகுதியை எடுக்கிறது. நல்லூர் போன்ற நகர்ப்புறப் பகுதிகளில் கூட இந்த நிலை உள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் நிலைமை இன்னும் மோசமாக இருக்கும்.

III. உடல் நலம் — மறைக்கப்படும் அபாயங்கள்

மாசடைந்த நிலத்தடி நீரைக் குடிப்பதால் என்ன நடக்கிறது? மக்கள் நேரடியாக விளைவுகளை உணர்கிறார்கள் — ஆனால் நீர் மாசுக்கும் நோய்க்கும் இடையிலான தொடர்பை அரசு சரியாக ஆவணப்படுத்தவில்லை என்பது மிகப்பெரிய குறைபாடு.

நைட்ரேட் ஆபத்துகள்: அதிக நைட்ரேட் நீரால் 'Blue Baby Syndrome' (Methemoglobinemia) உண்டாகலாம் — குழந்தைகளுக்கு ஆக்சிஜன் கிடைக்காமல் போகும் நிலை. கர்ப்பிணிப் பெண்களுக்கு நைட்ரேட் மிகவும் ஆபத்தானது. நீண்டகாலமாக நைட்ரேட் நீரைக் குடிப்பவர்களுக்கு கல்லீரல் மற்றும் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படலாம் என்று WHO எச்சரிக்கிறது. எண்ணெய் மாசு ஆபத்துகள்: நீரில் கரையும் கழிவு எண்ணெய் 'Aromatic Hydrocarbons' (BTEX) புற்றுநோயை உண்டாக்கலாம் என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. தோல் நோய், வாந்தி, தலைவலி போன்றவை குறுகிய கால விளைவுகளும் ஏற்படலாம். சுன்னாகம் பகுதி மக்களில் இந்த அறிகுறிகள் காணப்பட்டதாக உள்ளூர் சுகாதார ஆவணங்கள் குறிப்பிடுகின்றன — ஆனால் தேசிய அளவில் ஆய்வு நடத்தப்படவில்லை. உப்புநீரின் விளைவுகள்: அதிக உப்பு நீரைக் குடிப்பதால் உயர் இரத்த அழுத்தம், சிறுநீரகப் பிரச்சினைகள் ஏற்படலாம். விவசாயத்தில் உப்பு நீரைப் பயன்படுத்தினால் மண் வளம் குறையும், பயிர் வளர்ச்சி தடைப்படும். இதனால் உணவுப் பாதுகாப்பு பாதிக்கப்படுகிறது.

♀ II. கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் — மறைக்கப்பட்ட பலி

கர்ப்பிணிப் பெண்களுக்கும் ஆறு மாதத்திற்குக் கீழான குழந்தைகளுக்கும் நைட்ரேட் மாசடைந்த நீர் மிக அதிகமாக ஆபத்தானது. WHO தெளிவாகக் கூறுகிறது: 10 mg/l க்கும் அதிகமான நைட்ரேட் நீர் இவர்களுக்கு மிக ஆபத்தானது. ஆனால் யாழ்ப்பாணத்தில் கர்ப்பிணிப் பெண்கள் பலர் இந்த நீரைக் குடிக்கிறார்கள் — மாற்று வழி இல்லாமல். பங்களாதேஷ் போன்ற கடலோர நாடுகளில் உப்புநீர் ஊடுருவல் பெண்களுக்கு பிரசவச் சிக்கல்கள், மாதவிடாய்ப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதை ஆய்வுகள் (PMC, 2024) காட்டுகின்றன. யாழ்ப்பாணத்திலும் இதே நிலை இருக்கலாம் — ஆனால் ஆவணங்கள் இல்லை. ஏனென்றால் யாரும் ஆய்வு செய்யவில்லை.

இந்தத் தண்ணீர் நெருக்கடியானது பாலூட்டும் தாய்மார்கள் மத்தியிலும் கவலைக்குரிய வினாக்களைத் தோற்றுவிக்கிறது. தாய் அருந்தும் தண்ணீர் குழந்தைகளுக்கு ஆதாரமாக அமையும் நிலையில், அத்தண்ணீர் மாசடைவது அக்குழந்தைகளுக்கும் நேரடியான பாதிப்புகளைக் கொண்டுவரும். இந்தத் தொடர்ச்சியான ஆபத்தை யாழ்ப்பாண மகப்பேறு மருத்துவத் தரவுகள் ஆவணப்படுத்தவில்லை என்பது கடுமையான இடைவெளி.

IV. சட்டம் என்ன சொல்கிறது? அரசு என்ன செய்கிறது?

யாழ்ப்பாண நிலத்தடி நீர் நெருக்கடியைச் சட்டக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது பல கேள்விகள் எழுகின்றன.

National Environmental Act (NEA) பிரிவு 23A: இச்சட்டம் நிறுவனங்கள் நச்சுக் கழிவுகளை நீர்நிலைகளில் கலக்கக்கூடாது என்கிறது. CEBஇன் மின்நிலையம் ஆண்டுக்கணக்கில் இந்த விதியை மீறியது. யார் பொறுப்புக்கூறினார்கள்? யாரும் இல்லை. NEAஇன் Central Environment Authority (CEA) அமலாக்கத்தில் எந்த நடவடிக்கையும் பொதுவில் அறியப்படவில்லை.

EIA கடமை — பின்பற்றப்பட்டதா? 2008இல் மின் நிலையம் நிறுவும்போது சூழல் தாக்க மதிப்பீடு (EIA)

செய்யப்பட்டதா என்பது முக்கிய கேள்வி. NEA பிரிவு 23Zஇன் கீழ் குறிப்பிட்ட திட்டங்களுக்கு EIA கட்டாயமானது. ஆனால் போர்க் காலத்தில் வடக்கில் இந்தச் சட்ட நடைமுறைகள் எவ்வளவு பின்பற்றப்பட்டன என்பது கேள்விக்குரியது.

'Bulankulama' வழக்கின் பாடம்: 'Bulankulama & Others v. Secretary, Ministry of Industrial Development (2000)' வழக்கில் இலங்கை உச்சநீதிமன்றம் EIAஇன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. "நம்பகமான சூழல் தகவல் இல்லாமல் மக்கள் தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்த முடியாது" என்று தீர்ப்புக் கூறியது. இந்தக் கோட்பாடு சுன்னாகம் வழக்கிற்கும் பொருந்தும் — ஆனால் யாரும் நீதிமன்றம் சென்றதாகத் தெரியவில்லை.

Water Resources Board Act — செயலற்ற நிலை: Water Resources Board Act நிலத்தடி நீரை ஒழுங்குமுறைப்படுத்தும் அமைப்பை கோட்பாட்டளவில் உருவாக்குகிறது. ஆனால் IWMI (2024) வலியுறுத்துகிறது: "Overextraction for agriculture and daily consumption, coupled with minimal regulatory oversight, has allowed unsustainable practices to flourish." ஒழுங்குமுறைக் கட்டமைப்பு இருக்கிறது — அமலாக்கம் இல்லை.

அரச நிதி ஒதுக்கீட்டில் வடக்குகிழக்கிற்கான ஏற்றத்தாழ்வை 'Mongabay' (2025) இன் தரவு வெளிப்படுத்துகிறது: யாழ்ப்பாண மாவட்டப் பேரிடர் மேலாண்மைப் பிரிவு 2024இல் 129 மில்லியன் ரூபாய் கோரியது — கிடைத்தது வெறும் 8 மில்லியன். 2025இல் 325 மில்லியன் கோரியது — இன்னும் கிடைக்கவில்லை. மருதங்கேணிப் பிரிவில் கடலோர அரிப்பு நடக்கும்போது "செய்யக்கூடியது மணல் மூட்டையை வைப்பது மட்டுமே" என்று அப்பிரிவின் உதவி இயக்குநர் சூரியராஜா 'Mongabay' ஊடகத்திடம் கூறினார்.

"பொருளாதார வளர்ச்சிக்கு அதிக முன்னுரிமை கொடுத்தது சூழல் பாதுகாப்பை பின்னுக்குத் தள்ளியது." — வட மாகாண தலைமைச் செயலர் இளங்கோவன், IWMI கூட்டம், அக்டோபர் 2024

V. தீர்வுகள் — நம்பிக்கையும் சவால்களும்

அக்டோபர் 2024இல் IWMI ஒரு முக்கியமான நடவடிக்கை எடுத்தது. வட மாகாண தலைமைச் செயலர், பல்கலைக்கழகம், நீர்ப்பாசனத் திணைக்களம், NWS & DB, Water Resources Board, விவசாயத் திணைக்களம் ஆகியவற்றைக் கூட்டி ஒரு பங்குதாரர் கூட்டம் (Stake holder Forum) நடத்தியது. நிலத்தடி நீர் ஆளுமையில் உள்ளூர்க் குரல்களைச் சேர்க்க 'Multistakeholder Platform' உருவாக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. இது நல்ல தொடக்கம்.

NWS & DB, இரணைமடுத் தேக்கத்திலிருந்து (கிளிநொச்சி) யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு குழாய் இணைப்பைத் திட்டமிட்டுள்ளது. ADB மற்றும் French Development Agency நிதியுடன் மொத்தம் 18,329 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் வட மாகாண நீர் மற்றும் சுகாதார திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. 3,00,000 பேருக்கு குழாய் நீரைக் கொண்டுசேர்க்கும் திட்டம் இது. ஆனால் இன்னும் முழுமை பெறவில்லை.

IWMI பரிந்துரைக்கும் தீர்வுகள்: (1) மழைநீர் சேகரிப்பை மேம்படுத்தல், (2) நீர் மட்டத்தைக் கண்காணிக்கும் 'Wells' நிறுவல், (3) உரப் பயன்பாட்டு விதிமுறையைக் கட்டாயமாக்கல், (4) தொண்டைமானாறு, அரியாலை தடுப்பணைகளைச் (Salt Water Barrages) சரி செய்தல், (5) யாழ்ப்பாண மக்களை நீர் சேமிப்பு மற்றும் மேலாண்மையில் பயிற்றுவித்தல்.

♀ III. சட்டமும் கொள்கையும் —பெண்களுக்காகச் செய்வதென்ன?

சர்வதேசச் சட்ட கட்டமைப்பில் பெண்களுக்கான நீர் உரிமை தெளிவாக இருக்கிறது. CEDAW Article 14(2)(h) கிராமப்புறப் பெண்களுக்கு 'சுத்தமான குடிநீர் அணுகல்' என்பதை ஓர் அடிப்படை உரிமையாக வரையறுக்கிறது. SDG 6 (சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்) மற்றும் SDG 5 (பாலினச் சமத்துவம்) இணைந்து இயங்க வேண்டும் என்று 'UN' கோருகிறது.

ஆனால் இலங்கை நடைமுறையில் இந்த இரண்டும் பின்தங்கியிருக்கின்றன என்று 'UNDP' (2023) அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. 'Policy Implications of the Gender, Inclusion and Climate Change Nexus' என்ற ஆய்வு — இலங்கையின் நீர்க் கொள்கைகள் பாலினக் கண்ணோட்டத்தோடு உருவாக்கப்படவில்லை என்று குறிப்பிடுகிறது. யாழ்ப்பாண நீர் ஆளுமைக் குழுக்களில், பிரதேச செயலகக் கூட்டங்களில் பெண்கள் பங்கேற்பு எவ்வளவு? அது பற்றிய தரவு இல்லை.

GGGIஇன் 2024 Gender and Social Action Plan for Sri Lanka NAP (2025-2034) ஒரு முக்கியமான அடியை எடுத்து வைக்கிறது. ஆனால் அது "Gender and social inclusion was not incorporated into the first iteration of Sri Lanka's National Adaptation Plan (NAP) 2016-2025" என்று நேர்மையாக ஒப்புக்கொள்கிறது. அதாவது, இலங்கையின் கடந்த பத்து ஆண்டுகளின் காலநிலைத் திட்டங்களில்

பெண்கள் கண்ணுக்கே தெரியவில்லை.

IWMIஇன் '2024 Multistakeholder Platform' இல் பெண்கள் எத்தனை பேர் பங்குபற்றினார்கள் என்பதற்கான ஆவணம் இல்லை. நீர் நிர்வாகத்தில் பெண்களின் குரல் சேர்க்கப்படும் போது மட்டுமே அவர்களுக்கான தீர்வுகள் உண்மையாக வேரூன்றும். 'Local voices into decisionmaking' என்று சொல்லும்போது, அந்த உள்ளூர்க் குரல்களில் பெண்கள் குரல் சேரவேண்டும் — இல்லையென்றால் பாதிக் குரல் மட்டுமே.

VI. நிறைவு — தாகம் மட்டுமல்ல, நீதியும்

யாழ்ப்பாண நிலத்தடி நீர் நெருக்கடி ஒரு தொழில்நுட்பச் சிக்கல் மட்டுமல்ல என்பது இப்போது தெளிவாகிறது. இது அடுக்கடுக்கான தோல்விகளின் கூட்டு விளைவு:

CEBஇன் 36 மெகாவாட் மின்நிலையம் கழிவைக் கொட்டியது — யாரும் பொறுப்பேற்கவில்லை. நைட்ரேட் அளவு WHOஇன் தரத்தை மீறுகிறது — அதற்கான கண்காணிப்பு போதுமானதல்ல. உப்புநீர் ஊடுருவுகிறது — அணைகள் பராமரிக்கப்படவில்லை. NEA இருக்கிறது — அமலாக்கம் இல்லை. EIA கோட்பாடு இருக்கிறது — வடக்கில் பின்பற்றப்படவில்லை. நிதிக் கோரிக்கை வருகிறது — ஒதுக்கீடு வருவதில்லை.

இந்த நெருக்கடியின் முன்வரிசையில் பாதிக்கப்படுவோர் யார்? கார்த்திகா போன்ற பெண்கள். தண்ணீர் வாங்கப் பணம் செலவழிக்கும் பெண்கள். குழந்தைகளுக்காக மாசடைந்த நீரைக் குடிக்க வேண்டும் என்று தவிக்கும் தாய்மார்கள். போர் விதவைகள் — தினமும் தனியாக தண்ணீர் சுமக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள்.

தீர்வு ஒன்று மட்டுமல்ல. குழாய் இணைப்பு அவசியம் — ஆனால் அதுவே போதாது. NEA அமலாக்கம் வலுப்படுத்தப்பட வேண்டும். CEB போன்ற நிறுவனங்கள் சூழல் சேதத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டும். நீர் ஆளுமைத் திட்டங்களில் வடக்கு பெண்கள் — குறிப்பாக போர் விதவைகள் — பங்கேற்புக் கட்டாயமாக்கப்பட வேண்டும். CEDAW, SDG 5, SDG 6 ஆகியவை கட்டாய நடைமுறைக் கடமைகளாக மாறவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தண்ணீர் வரும் நாள் வரும் — ஆனால் அது யாரால், யாருக்காக, யாரோடு திட்டமிடப்படும் என்பதே அரசியல் கேள்வி. குழாய் வந்தால் மட்டும் போதாது. நீதி வேண்டும். நீதியுடன் நீர் வந்தால் மட்டுமே தாகம் தீரும்.

ஆதார மூலங்கள்

1. Suntha, S. (2018). 'Oil spills contamination of Ground water in Chunnakam Aquifer, Jaffna, Sri Lanka.' Open Water Journal, Vol. 5, Iss. 2, Article 3. BYU ScholarsArchive. doi: scholarsarchive.byu.edu/openwater/vol5/iss2/3

2. Thulasitha, W. & Premachandra, N.P. (2016). 'Study of Oil Contamination in Chunnakam Area due to the Wastage from Power Station.' University of Wayamba Repository. erepo.lib.uwu.ac.lk

3. IWMI (2024). 'Jaffna's groundwater crisis requires a collaborative pathway to sustainable water management.' International Water Management Institute, October-November 2024. iwmi.org

4. Mikunthan, T. et al. (2014). 'Assessment of nitrateN contamination in the Chunnakam aquifer system, Jaffna Peninsula, Sri Lanka.' PMC4059853. PubMed Central.

5. Uthayashangar, S. & Nanthakumaran, A. (2019). 'Status of the saltwater intrusion in Jaffna, Sri Lanka.' Ceylon Journal of Science, 48(3). doi: 10.4038/cjs.v48i3.7647

6. Gopalakrishnan, T., Kumar, L. & Mikunthan, T. (2020). 'Assessment of spatial and temporal trend of groundwater salinity in Jaffna Peninsula and its link to Paddy land abandonment.' Sustainability, 12(9), 3681. MDPI.

7. Sahana David Menon (2025). 'Sri Lanka communities left gasping for climate mitigation support.' Mongabay, March 19, 2025. news.mongabay.com

8. UNDP (2023). 'Policy Implications of the Gender, Inclusion and Climate Change Nexus: Experiences from Sri Lanka.' UN iLibrary. unilibrary.org

9. GGGI (2024). 'Development of the Gender and Social Action Plan for Sri Lanka.' GGGI, Ministry of Environment, Climate Change Secretariat. March 2024, Colombo. gggi.org

10. Bulankulama & Others v. Secretary, Ministry of Industrial Development & Others (2000). Supreme Court of Sri Lanka, S.C. Application No. 884/99. இலங்கை சுற்றுச்சூழல் சட்ட வழக்கு.

11. IWMI Water Data Portal (2024). Jaffna Water Quality Mapping. waterdata.iwmi.org

12. DBS Jeyaraj (2013). 'JaffnaKilinochchi Water Supply and Sanitation Project.' dbsjeyaraj.com — ADB/French Development Agency திட்ட விவரங்கள்.

மலையகத் தமிழர்களின் புதிய வரலாற்றை இருபத்தோராம் நூற்றாண்டு அரசியல், பண்பாட்டுச் சூழலுக்கேற்ப எழுத வேண்டிய தேவை இன்றியமையாதது ஆகும். இவர்களின் 200 ஆண்டுகால வாழ்வு, இலங்கையின் பெருந்தோட்டங்களில் ஒரு வரலாற்று விபத்தாக நிகழ்ந்திருந்தாலும், இவர்களுக்கென்று ஒரு நெடிய பாரம்பரியம் உண்டு என்பதை மறுக்க முடியாது. இந்த நெடும்பயணத்தில், இவர்கள் நூற்றுக்கணக்கான வன்முறைகளுக்கும், குடியுரிமை பறிப்பு, நிலவுரிமை பறிப்பு உள்ளிட்ட பாகுபாடுகளுக்கும் ஆளாகினர். சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தங்களால் இவர்களில் சரிபாதிக்கும் மேற்பட்டவர்கள் நாடு கடத்தப்பட்டனர். எஞ்சியவர்கள் இலங்கையின் ஏனைய சமூகங்களால் அடிமைக் குடிகளாகவே பார்க்கப்பட்டனர். ஆயினும், இத்தகைய அவலங்களுக்கு மத்தியிலும், இந்த மக்கள் தமது தனித்துவமான மொழி, பண்பாடு, உற்பத்தி முறை, கூட்டு உளவியல் ஆகியவற்றைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வகையில், இந்நூற்றாண்டின் கண்ணோட்டத்தில், அவர்களது தனித்துவமான இருப்பை நிலைநிறுத்தும் முகமாக அவர்களுக்கான ஒரு புதிய அரசியல் – பண்பாட்டு அடையாளத்தை உருவாக்க வேண்டிய அவசியம் உணரப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு 'மலையகத் தமிழர்களின் அரசியலும் பண்பாடும்' எனும் இத்தொடர் எழுதப்படுகின்றது

இலங்கையில் பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சிக்கான பின்னணி

பொன் பிரபாகரன்

பொன்.பிரபாகரன், யாழ். பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவப் பட்டம் பெற்றவர். பட்டப்பின் டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், ஊடகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மேலும், கொழும்பு வணிகப் பள்ளியில் செயற்றிட்ட முகாமைத்துவப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்ற தளங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். 'காமன் கூத்து'(மலையக தமிழரின் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு), 'உப்பு ரொட்டி' (கவிதைத் தொகுப்பு), 'மலையகத் தமிழரின் சமூகவியலும் அரசியலும்' என்பன இவரது நூல்களாகும்.



இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்திடையே 1906, 1912, 1950ஆம் ஆண்டுகளில் முக்கியமான பல நிகழ்வுகள் இடம்பெற்றன. 1906ஆம் ஆண்டு மாட்டு வண்டிக்காரர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அரசியல், மதரீதியான கொதிநிலைகள் ஏற்பட்டன. இவற்றின் தாக்கம் கொழும்பு நகரப் பாட்டாளிகளிடையே ஆழமாக வேரூன்றியது.

20ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலம் வரை இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் இயக்கம் ஒன்று காணப்படவில்லை. மதரீதியான அமைதியின்மை, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அரசின் அநேக செயற்பாடுகள் விமர்சனங்களுக்குள்ளாகின. அரசியல் முறைமையானது 1833ஆம் ஆண்டிலும் மாற்றமின்றித் தொடர்ந்தது. 2.5 மில்லியன் கீழ்நாட்டுச் சிங்களவர்கள் ஒரேயொரு கிறிஸ்தவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டனர்.

அக்காலப்பகுதியில் ஆளுநராக இருந்த சேர் ஹென்றி பிளேக் மற்றும் காலனிய நாட்டுச் செயலாளரான சேர் அலெக்ஸாண்டர் அஸ்மோர் ஆகியோர் மத்தியதர வர்க்கத்தினரிடையே பிரசித்தமாக இருக்கவில்லை. 1904ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வாழ்க்கைத் தர உயர்வு, சமூக நலச் சேவைகளுக்கான உயர் செலவு, வீட்டு வசதி, உணவு, பானங்கள் என்பனவற்றின் விலை உயர்வு போன்றன மாற்றமில்லாமல் தொடர்ந்தன.

1905ஆம் ஆண்டு இலங்கை சமூக மறுசீரமைப்புச் சபை தொடங்கப்பட்டது. இச்சபையின் தலைவராக கலாநிதி ஆனந்த குமாரசுவாமி காணப்பட்டார். இவர் பிரித்தானியாவில் விஞ்ஞானக் கல்வி கற்றவர். கவின் கலைகளில் ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார். இச்சபையின் நிர்வாகச் சபையில் மியூசியஸ் ஹைகின்ஸ், பீட்டர் டீ. ஆப்ரோ, டி.பி. ஜெயந்திலால், மார்ட்டின் பெரேரா, அன்னி பெசன்ட், அநகாரிக தர்மபால ஆகியோர் இடம்பெற்றனர். அன்னி பெசன்ட் அவர்கள் சமூக புனருத்தானச் சபையின் உறுப்பினராகவும் மிதவாதியாகவும் திகழ்ந்தார். இச்சபை மேலைத்தேயப் பாணியிலான சமூகப் பிரச்சினைகளில் அக்கறை செலுத்தியது. சமூகக் கொதிநிலைகளைத் தணித்தல், மரண தண்டனைக்கு எதிர்ப்பு போன்ற தாராளவாதக் கொள்கைகளை இச்சபை கொண்டிருந்தது. பிரித்தானிய தாராளவாதக் கட்சிகளை ஆதரித்தமை (1906), விரிவுரைகள் மற்றும் கலந்துரையாடல்களை நடத்தியமை, 'இலங்கை தேசிய மீளாய்வு' (1907) என்ற இதழை வெளியிட்டமை என்பன இச்சபையின் நடவடிக்கைகளாகும். அன்னி பெசன்ட் அம்மையார் மேலைத்தேய ஆடம்பர வாழ்வும் கலாசாரமும் கீழைத்தேய நாடுகளில் ஏற்படுத்தவுள்ள பாதகமான விளைவுகளைப் பற்றி எச்சரித்தார். மேலும், கீழைத்தேய சுதேசிய மொழிகள், கலாசாரம், மரபுகள், சுயாதீனத் தன்மை என்பனவற்றை இலங்கையர் தமது கரங்களில் எடுக்க வேண்டுமென தனது விரிவுரைகளில் எடுத்துரைத்தார்.

இன்னொரு புறம், மேலைத்தேய ஆடம்பரங்கள், கலாசாரங்களுக்கு எதிரான சுதேசிய சிங்கள பௌத்தச் சித்தாந்த மேலாண்மை கொண்ட கல்வி கற்ற கீழ் மத்தியதர வர்க்கத் துறவிகள், ஊடகவியலாளர்கள், கவிஞர்கள், ஆயுர்வேத சுதேச வைத்தியர்கள், வணிகர்கள், சிறு நில உடமையாளர்கள் ஆகியோர் சமய, அரசியல் கண்ணோட்டங்களில் கேள்வியெழுப்பினர். இச்சிந்தனைப் போக்கானது கிராமப்புற, நகர்ப்புற வெகுசனங்களுக்கிடையில் செல்வாக்குச் செலுத்தியது.

1905ஆம் ஆண்டு அரச அதிகாரிகளால் பௌத்தர்களிடையே முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டதாகப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டின. 19ஆம் நூற்றாண்டில் இயங்கிய பௌத்த எதிர்ப்பு இயக்கங்கள் அரசியல் தன்மையுடையவையாக இருந்தன. அவை அநகாரிக தர்மபால மற்றும் வலிசிங்க ஹரிச்சந்திர ஆகியோரால் வழிநடத்தப்பட்டன.

அநகாரிக தர்மபால (1864-1933) தனது 14ஆவது வயதில் கொட்டாஞ்சேனை விகாரையின் பிக்குவான மீகெட்டுவத்த குணானந்தருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். 'The Light of Asia' என்ற இந்தியாவில் வெளியான நூல் அவரில் பெரும் பாதிப்பை உண்டாக்கியது. கேர்ணல் ஒல்கொட் மற்றும் பிளாவட்ஸ்கி ஆகியோரை வரவேற்கும் நிகழ்விலும் பங்கேற்றார். 1884ஆம் ஆண்டு மதுரையிலிருந்த அவர்களின் சபையின் தலைமையகத்திற்கு விஜயம் செய்தார். தர்மபால அப்போது கல்வித் திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றினார். பிற்காலத்தில் பௌத்த இயக்கத்தில் முழுநேர ஊழியரானார். மேலும், சிரமமான வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார். 1889 ஆம் ஆண்டு யப்பானுக்குப் பயணித்தார். 1891ஆம் ஆண்டு கல்கத்தாவில் மகாபோதி சங்கத்தைத் தாபித்தார். 1893ஆம் ஆண்டு சிக்காகோவில் நடைபெற்ற சமய மாநாட்டில் தேரவாத பௌத்தர்களின் பிரதிநிதியாகப் பங்கேற்றார். இலங்கையில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும், மேலைத்தேய வாழ்வியல் முறைகளுக்கு எதிராகவும் செயற்பட்டதோடு, சிங்களவர்கள் மற்றும் அவர்களது சமயம், மொழி, தேசிய பாரம்பரியங்கள் ஆகியவற்றின்

மீது பெருமித உணர்வையும் கொண்டிருந்தார். பௌத்த மத இயக்கத்தில் வெகுசனங்களைக் கவரக்கூடிய தலைவராக அநகாரிக தர்மபால திகழ்ந்தார். அவர் மத்தியதர வர்க்க கிறிஸ்தவமயமாதலைச் சவாலுக்குட்படுத்தினார். மேலும், போர்க்குணம் வாய்ந்த பௌத்தர்களைக் கவரக்கூடியவராகவும் திகழ்ந்தார்.



மகாபோதி சங்க உறுப்பினர்களுடன் அநகாரிக தர்மபால (நடுவில் அமர்ந்திருப்பவர்)

Image Source - commons.wikimedia.org

பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் இன்னொரு தலைவரான வலிசிங்க ஹரிச்சந்திர மகாபோதி சங்கத்தின் செயலாளரானார். இவர் பின்தங்கிய கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களுக்குப் பயணித்தார். இவரது உரைகள் பௌத்தர்களிடையே பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின. இவர்கள் இருவரும் அநுராதபுரத்திலுள்ள பௌத்த புராதனச் சின்னங்களைப் பாதுகாக்கப் போராடினர்.

1903ஆம் ஆண்டு அநுராதபுரக் கலவரம்

1903ஆம் ஆண்டு பௌத்த மத ஊர்வலங்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை எதிர்த்து ஹரிச்சந்திர, பொசன் போயா தினத்தன்று ஓர் ஊர்வலத்தை ஏற்பாடு செய்தார். இது கிறிஸ்தவர்களுக்கெதிரான வன்முறையாக மாறியது. இதனையடுத்து ஹரிச்சந்திர கைது செய்யப்பட்டார். இதையெதிர்த்து பிரித்தானிய அரசாங்கத்திற்கு அநகாரிக தர்மபால எழுதிய கடிதத்தில், பௌத்தர்களின் நகரமாகிய அநுராதபுரத்திலிருந்து மதுபானக் கடைகளையும், இறைச்சிக் கடைகளையும், வெளிநாட்டுத் தேவாலயங்களையும் அகற்ற வேண்டுமெனவும், இது பௌத்தர்களின் கோரிக்கையெனவும் குறிப்பிட்டார். மது ஒழிப்பிற்கான இயக்கம், பிற்காலத் தலைவர்களை அரசியல் ரீதியாகப் பயிற்றுவிப்பதற்கான ஓர் இயக்கமாக முக்கியத்துவம் பெற்றது. மத, அரசியல் மறுமலர்ச்சிக்கும் இது வித்திட்டது. 1889ஆம் ஆண்டு 'தியோசபிஸ்ட்' இதழில், மதுபான நுகர்வு அதிகரிப்பதற்கு எதிராகக் கண்டனங்கள் எழுந்தன. இவ்வியக்கம் தென்பகுதியில் பாரிய கூட்டங்கள், போராட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் ஆயிரக்கணக்கானோர் கையொப்பமிட்ட முறைப்பாடுகளை ஏற்படுத்தியது. அரசின் மதுக் கொள்கைகளுக்கு எதிராக அநகாரிக தர்மபாலவும் அவர்களது கிளர்ச்சி இயக்கத்தினரும் கிராமப்புற, நகர்ப்புறங்களில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தினர். "மது அருந்துபவர்கள் சாதியற்றவர்கள்" என்ற சுலோகம் உயர்த்திப் பிடிக்கப்பட்டது. ஐரோப்பியர்கள் "இறைச்சியுண்ணும் பறையர்கள்" எனக் கண்டிக்கப்பட்டனர். சிங்களத் தலைவர்கள் தமது கண்டனங்களைப் பௌத்த இதழ்களிலும், ஆங்கிலத்திலும் பிரசுரித்தனர்.

1906ஆம் ஆண்டு 'மகாபோதி' இதழில், "பிரித்தானியரின் ஆட்சியின் ஒரு நூற்றாண்டுகளில் சிங்களவர்கள் ஆசியாவிலேயே பின்தங்கிய மக்களாகிவிட்டனர்" என எழுதப்பட்டது. 1906ஆம் ஆண்டு மார்ச் மாத மகாபோதி இதழ், பிரித்தானியர் ஆட்சியின்கீழ் ஓவியம், மதுபானம், வறுமை, புறக்கணிப்பு, கிறிஸ்தவமயமாக்கல் ஆகியவற்றைக் கண்டித்து எழுதியது.

யப்பானியச் செல்வாக்கு

1905ஆம் ஆண்டு ஜாரிய ரஷ்யாவை யப்பான் தோற்கடித்தது. நவீனமயமாதலும், கைத்தொழில் வளர்ச்சியும், யப்பானின் அரசியல் நிகழ்வுகளும் இலங்கையைப் பாதித்தன. யப்பானியப் பேரரசர் முட்சுஹிட்டோ (1867-1912) யப்பானை நவீனப்படுத்தும் முயற்சிகளில் இறங்கினார். இக்காலப்பகுதியில் யப்பானிய மாணவர்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சென்று விஞ்ஞானத்தையும் நவீன கைத்தொழில் நுட்பங்களையும் கற்றனர். யப்பானில் நவீன கைத்தொழிலும், நவீன இராணுவமும், கடற்படையும் எழுச்சி பெற்றன.

ரஷ்யாவின் தோல்வியானது ஆசியாவில் ஐரோப்பியரின் ஆதிக்கத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய வல்லரசுகளின் தூரக்கிழக்குப் போட்டியில் யப்பான் நுழைந்தது. மஞ்சூரியாவிலும் போர்ட் ஆர்தரிலும் ரஷ்யாவின் ஆதிக்கம் வீழ்ந்தது. 18 மாதங்கள் நீடித்த ரஷ்ய-யப்பான் போரில் ரஷ்ய இராணுவமும் போர்ட் ஆர்தரும் வீழ்ந்தன. 'கேப்' வழியாக உலகின் பாதியைச் சுற்றிப் பயணித்த ரஷ்யாவின் பால்டிக் கடற்படை,

1905ஆம் ஆண்டு மே மாதம் சுசிமா அருகே நடைபெற்ற போரில் முழுமையாக அழிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சி 1905ஆம் ஆண்டின் ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது.

புரட்சியும் போரும் நிறைந்த இவ்வாண்டின் நிகழ்வுகள் ஆசிய தேசியவாதிகள் மீது பாரிய செல்வாக்கைச் செலுத்தின. சக்திமிக்க ஆயுதப் படைகளைக் கொண்டிருந்த ஐரோப்பிய ஆட்சியாளர்களை, கீழைத்தேய அரசுகளும் வீழ்த்த முடியும் என்பதனை இது உணர்த்தியது. விளாடிமிர் லெனின் இந்நிலையைப் பற்றி குறிப்பிடும்போது, "முற்போக்கான முன்னேறிய ஆசியா, சீரமைக்க முடியாத ஐரோப்பாவை வீழ்த்தும்" என்கிறார். சன் யாட்சென் குறிப்பிடுகையில், "யப்பானிய வெற்றி ஆசியாவின் அனைத்து மக்களுக்கும் எழுச்சிக்கான அடிப்படையான நம்பிக்கையை ஏற்படுத்துகிறது" எனக் குறிப்பிட்டார்.

இளைஞனாக இருந்த ஜவஹர்லால் நேரு குறிப்பிடுகையில், "இந்நிகழ்வானது ஆசியாவின் மனதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்" என விவரித்தார். மேலும், "இந்நிகழ்வு ஆசியாவுக்கு எதிரான ஐரோப்பிய ஆட்சியின் மீதான வெற்றி" எனவும் எழுதினார். அதோடு, "ஐரோப்பிய சக்திமிக்க நாடுகளை இந்தியாவால் ஏன் வெல்ல முடியாது?" என வினவினார்.

1875ஆம் ஆண்டு யப்பானிய போர்க் கப்பல் இலங்கை வந்தபோது அதன் அதிகாரிகளுக்கு சேர் முத்துக் குமாரசுவாமி இரவு விருந்தளித்தார். சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் பிரித்தானிய கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பல யப்பானிய மாணவர்களைச் சந்தித்தார். இக்காலப்பகுதியில் மேலைத்தேய விஞ்ஞான, தொழில்நுட்ப இரகசியங்களைக் கற்றுத் தேறும் பணியில் யப்பானிய இளைய தலைமுறை இறங்கியது. போர்ட் ஆர்தர் கைப்பற்றப்பட்ட பின்னர் யப்பானியர் பெரும் போர்முறை அறிவியலைக் கற்றனர். இலங்கையிலோ நூற்றாண்டு காலமாக விஞ்ஞானக் கல்வி புறக்கணிக்கப்பட்டு வருவதைக் கண்டனர்.

ரஷ்யா மீதான யப்பானின் வெற்றியானது இலங்கைப் பௌத்த தேசியவாதிகளிடையே அரசியல் ரீதியான பிரக்ஞையை ஏற்படுத்தியது. ஆசிய தேசியவாதமானது ஐரோப்பிய ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் பெற்ற வெற்றியாகக் கொண்டாடப்பட்டது. இது மிகுந்த முக்கியத்துவமுடைய நிகழ்வாக அமைந்தது.

இலங்கை தேசியவாதியான விக்டர் கொறயா என்பவர் 'கிழக்கும் மேற்கும்' என்ற தனது விரிவுரையில், "யப்பானிய வெற்றி நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஆசியா பெற்ற வெற்றி" எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வெற்றியைப் பௌத்தப் பத்திரிகைகளும் பெரிதும் வரவேற்றன.

இலங்கையில் யப்பானிய உதவி நிதியம் தொடங்கப்பட்டது. கோர்னல் ஒல்கொட் அவர்கள் 1883, 1902, 1913ஆம் ஆண்டுகளில் யப்பானுக்குப் பயணித்தார். தர்மபால யப்பானிய அறிவியல் திறன்களால் பெரிதும் ஆகர்ஷிக்கப்பட்டார். தனது குடும்பத்தினரையும் யப்பானில் கல்வி கற்க ஊக்குவித்தார். அவர் யப்பானியர்களின் அவையில் உரையாற்றியபோது, "ஆசிய மக்கள் வீழ்ச்சியுற்றிருக்கிறார்கள். யப்பான் ஆசியாவின் ஞானியாகத் திகழ்கிறது. நீங்கள் சுதந்திரமானவர்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், "ஐரோப்பிய அபாயத்தை எதிர்கொள்ள யப்பானியர்கள் ஐரோப்பிய நவீனக் கலைகளையும் அறிவியலையும் கற்றார்கள். தமது பண்பாட்டை மிகச் சக்திமிக்கதாக மாற்றினார்கள்" என எழுதினார்.

இக்காலப்பகுதியில் மத்தியதர வர்க்கம் யப்பானியப் போர் வெற்றியில் கவரப்பட்டது. இதனை 15,000 அஞ்சல் அட்டைகள் மூலம் விளம்பரப்படுத்தியது. யப்பானிய ஜெனரல்களின் புகைப்படங்களைத் தாங்கிக்கொண்டு, ரஷ்யாவின் தோல்வியைக் கொண்டாடினர்.

இந்தியத் தேசியவாதத்தின் செல்வாக்கு

இலங்கையும் இந்தியாவும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கியிருந்த காலப்பகுதியில் இந்தியத் தேசியவாதம் தோற்றம் பெற்றது. 1906ஆம் ஆண்டு மாட்டு வண்டித் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் இச்செல்வாக்கை எடுத்துக்காட்டியது. 1885ஆம் ஆண்டு இந்தியத் தேசிய காங்கிரஸ் இயக்கம் தோற்றம் பெற்றது. பால கங்காதர திலகர் போர்க்குணமிக்க இந்துத் தேசியவாதியாக மகாராஷ்டிர மாநிலத்தில் தோன்றினார். வங்காளத்தில் அரவிந்த கோஷ் போன்றவர்கள் ஆங்கிலம் பேசும் மேலடுக்குகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் அரசியல் சீர்திருத்தங்களைக் கோரினர். திலகர் போர்க்குணமிக்க தலைமையால் மக்களை ஈர்த்தார். இந்திய வெகுசனங்களையும் கவர்ந்தார்.

1907ஆம் ஆண்டு தீவிரவாத, மிதவாத காங்கிரஸ் தலைவர்களிடையேயான பிரிவு வெளிப்பட்டது. தீவிரவாதிகள் "இந்தியாவிற்கு சுயராச்சியம்" என்ற சுலோகத்தை உயர்த்திப் பிடித்தனர். இச்செய்திகள் இலங்கைப் பத்திரிகைகளில் வெளியாகின. இது வெகுமக்களின் கவனத்தை ஈர்த்தது. இந்திய, இலங்கை நாடுகளுக்கிடையேயான பிணைப்பும், தியோசபிக்கல் சபையினரின் இந்தியப் பயணங்களும், பௌத்தக் கல்வி

இயக்கத்தில் செல்வாக்குச் செலுத்தின.

அநகாரிக தர்மபால பல ஆண்டுகள் கல்கத்தாவில் வசித்தார். அங்குதான் அவர் 1891ஆம் ஆண்டு மகாபோதி சங்கத்தைத் தாபித்தார். அவர் வாழ்ந்த பகுதி இந்திய தேசியவாதத்தின் இதயமாகத் திகழ்ந்தது. மேலும், அவர் இரவீந்திரநாத் தாகூரின் கலாசார மறுமலர்ச்சி இயக்கத்தையும் கண்டார். சுயராச்சியத்தை வேண்டிய வெகுமக்கள் இயக்கமொன்று தோற்றம் பெறுவதை உற்று நோக்கினார்.

'மோர்னிங் லீடர்' பத்திரிகையின் உரிமையாளர், பாரிஸில் வசித்து வந்த கிருஷ்ணவர்மா என்பவருக்கு எழுதிய கடிதத்தில், "இந்துஸ்தானத்தை எவ்வளவு காலத்திற்கு வறுமை தாக்குகின்றதோ, இலங்கையும் அவ்வாறே வதைக்கப்படும்" எனக் குறிப்பிட்டார்.

மாட்டு வண்டிக்காரர்களின் வேலைநிறுத்தம்

இலங்கைப் பொருளாதாரத்தில் நவீன பொருளாதார வளர்ச்சியிலும், அதன் சரக்கு மற்றும் போக்குவரத்திலும் மாட்டு வண்டி ஓட்டுபவர்களுக்கு மிக முக்கியமான இடமுண்டு. பெருந்தோட்ட முதலாளிகள், அரச அதிகாரிகள் போன்றவர்களையும், அறுவடை செய்யப்பட்ட கோப்பி, கொக்கோ, வாசனைத் திரவியங்கள் மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான விறகு, கட்டுமானப் பொருட்கள் என்பவற்றையும் இடம்விட்டு இடம் கொண்டு செல்வதற்கு மாட்டு வண்டிகளே பயன்படுத்தப்பட்டன.

1901ஆம் ஆண்டு 17,000 மாட்டு வண்டிகளும், 1910ஆம் ஆண்டில் 23,000 மாட்டு வண்டிகளும் சேவையில் ஈடுபட்டன. இக்காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட மோட்டார் கார்களுக்காக வீதிப் போக்குவரத்துச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. எனினும், மாட்டு வண்டிகளுக்கான ஒழுங்குமுறைச் சட்டங்கள் காணப்படவில்லையென குற்றம் சாட்டப்பட்டது. கொழும்பு மாநகர சபை மற்றும் பொலிசாரின் ஊழல் என்பன காரணமாக வழமையாக ரூ.15 முதல் ரூ.20 வரை தண்டம் விதிக்கப்பட்டது. ஆனால், வண்டில்காரர்கள் மாதம் ரூ.12 முதல் ரூ.15 வரையே உழைத்து வந்தனர்.

இந்நிலைமையை எதிர்த்து 1906ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் திகதி 5,000 மாட்டு வண்டில்காரர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இதனால் கொழும்பு மாநகர வாணிப நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன. கொழும்பு மாநகர மேயர், வேலைநிறுத்தம் தொடங்கி மூன்று நாட்களின் பின்னர் சட்டத்தை மீளப் பெற்றார்.

இந்த வேலைநிறுத்தம் மாபெரும் வெற்றியாக அமைந்தது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சலவைத் தொழிலாளர்கள் முன்னெடுத்த வெற்றிகரமான வேலைநிறுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில், இவ்வெற்றி முக்கியத்துவமுடையதாகக் காணப்பட்டது.

இவ் வேலைநிறுத்தமானது வண்டில்காரர்களின் ஒன்றுபட்ட பலத்தால் வெற்றியடைந்தது. மேலும், போராட்டக்காரர்கள் மிகவும் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டனர். ஏனைய உழைக்கும் வர்க்கத்தினரும் ஆதரவளித்தனர். கொழும்பு பெட்டா பகுதியிலும் நகர மண்டபப் பகுதியிலும் வண்டில்களை நிறுத்திவிட்டு அமர்ந்திருந்தனர். எந்தவொரு வண்டில்காரரும் சேவையில் ஈடுபட மறுத்தனர். ரூ.5 கூட வாங்க மறுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் வண்டில் தடிகளில் அமர்ந்துகொண்டு நீண்ட சுருட்டுகளைப் புகைத்தனர். பாடல்கள் பாடினர்.

இந்நிலைமையை அறிக்கையிட்ட 'சிலோன் இன்டிபென்டன்ட்' பத்திரிகை, "வெகுசன மக்களின் சக்தி" என எழுதியது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழிலாளர் இயக்கம் விரிவடைந்து வந்ததோடு, அதன் போர்க்குணமும் அதிகரித்து வந்தது.

இந்நிலையில் ஐரோப்பா முதலாம் உலகப் போருக்குத் தயாராகி வந்தது. ரஷ்யப் புரட்சியும், ஜாரின் வீழ்ச்சியும், கீழைத்தேயத்தில் யப்பானின் இராணுவ வெற்றிகளும் கிழக்கின் விடுதலைக்கான பேரொளியைப் பரப்பி வந்தன. காலனிய ஆட்சிக்கெதிராக மக்கள் மெல்ல மெல்ல அணிதிரளத் தொடங்கினர்.

இலங்கை மலைக்காடுகளை நோக்கி அலையலையாகப் பாட்டாளி மக்கள் தமிழகக் கிராமங்களிலிருந்து பிரித்தானிய காலனியவாதிகளால் அழைத்துவரப்பட்டு, கோப்பி, தேயிலை, இறப்பர் தோட்டங்கள் இதே காலப்பகுதியில் உருவாக்கப்பட்டன. புதிய இனம், புதிய வர்க்கம், புதிய உற்பத்தி முறையின் மூலம் இலங்கை உலகோடு ஆழமாகப் பிணைக்கப்பட்டது. வாணிபம் பெருகியது. போக்குவரத்து, தொலைத்தொடர்பு, வங்கிச் சேவைகள், காப்புறுதி, நிதி, உணவு, பானங்கள், துறைமுகங்கள் ஆகியவை வளர்ச்சியடைந்தன. இதற்கு அடிப்படையான பொருளாதாரத்தை ஈட்டுவதற்கான உழைப்பை நல்கிய மலையகப் பாட்டாளி வர்க்கம், புதிய அடிமைச் சமூகமாக மலையகப் பெருந்தோட்டங்களில் பனிக்குளிரில் மூழ்கிக் கிடந்தது. அங்கே இன்னும் தணல் பரவவில்லை.

இன்றைய இருப்பில் இயங்கும் சமூக சக்திகள் தத்தமக்கான நலன்களின் நோக்கில் கடந்த காலத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றன. மேலாதிக்கத் தமிழ்த் தேசியம், தலித்தியம், விடுதலைத் தேசியம் என்பவற்றின் கருத்தியல் தளங்களை அடிப்படையாக உடைய சமூக சக்திகள் இன்றைய இயக்கங்களாகச் செயற்படுகின்றன. எமக்கான நவீன வரலாற்றைக் கட்டமைத்த ஆளுமையாகிய ஆறுமுக நாவலர் குறித்து இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய கண்ணோட்டத்தில் மறுவாசிப்பை மேற்கொள்கின்றன; இதன்வழியாக, கடந்தகாலச் சமூக சக்திகள் வழிவகுத்துவிட்டிருந்த இயங்குமுறை அமைந்த அடித்தளங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன. இதேபோன்ற பின்னணிக்குரிய ஏனைய சமூகங்களில் இயங்கிய ஆளுமைகளுடன் எமது இயங்கு தளத்துக்குரிய ஆளுமைகளை ஒப்பிடுவதன் வாயிலாக செய்யப்பட்டவற்றையும், செய்திருக்கத்தக்கன எவை என்பதையும் மதிப்பீடு செய்வது அவசியமானது. இவற்றின் பெறுபேறுகள் எமக்கான எதிர்கால மார்க்கத்தை வடிவமைப்பதற்கு மிகமிக முக்கியமானவை ஆகும். ”சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர் எனும் இத்தொடரானது நாவலரின் பங்களிப்புக் குறித்த மதிப்பீட்டின் வழியாக சமகால இயங்குமுறையைக் கணிப்பிட்டு, சுயவிமரிசனங்களுடன் புதிய பாதையையும், அதற்குரிய சரியான மார்க்கத்தையும் கண்டடையும் நோக்கில் எழுதப்படுகிறது.

ஆன்மிக நாத்திக வெளிப்பாட்டுத்தளம்

நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் ‘திருக்குறளின் கல்விச்சிந்தனை’ எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.



இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் ‘பாரதியின் மெய்ஞ்ஞானம்’, ‘இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்’, ‘பின்நவீனத்துவமும் அழகியலும்’, ‘கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்’, ‘இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்’, ‘சாதியமும் சமூக மாற்றங்களும்’, ‘இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்’, ‘சாதி தேசம் பண்பாடு’ என்பன குறிப்பிடத்தக்கவை.

ஐரோப்பிய நாடுகள் நிலப்பிரபுத்துவச் சமூக முறைமையைத் தகர்த்தபடி தம்மைத் தேசங்களாகக் கட்டமைத்துக் கொண்டே உலகப் பந்தின் ஏனைய நிலப்பரப்புகளைக் காலனிகளாக்கி ஆட்சிபுரிந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் எமக்குரிய ஆளுமையாக முகிழ்ந்தவர் ஆறுமுக நாவலர். அவர் பற்றிப் பேசுகிற போது அவரது சமகாலத்தின் ஏனைய ஆளுமைகள் செயற்பட்ட பாங்கு குறித்தும் கவனம் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஈழத்தமிழ்ப்புலத்தின் இலக்கியம், மொழி, மதம் எனும் பன்முகத் தளங்களில் நாவலரின் செயற்பாடுகளே முனைப்புடையதாய் அமைந்திருந்தன. அவருடன் ஒப்பிடும் வகையில் சிங்களச் சமூகத்தில் வெளிப்பட்டிருந்த ஓர் ஆளுமையான அநகாரிக தர்மபால இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை செயற்படும் வாய்ப்புடன் இருந்த வகையில் சற்றுப் பிற்பட்ட காலத்தவராவார். நாவலரைப் போலவே இந்து சமயத்தளத்தில் இயங்கியவர்களாக வள்ளலார், ராஜா ராம்மோகன் ராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்றோர் இந்தியாவில் செயற்பட்டவர்களாகத் திகழ்ந்தனர். இந்துச் சமயத்தில் புரையோடிப்போயிருந்த சாதியத்தைச் சாடியவாறு கடவுளுக்குரிய சமத்துவக் குணாம்சத்தை ஏனையவர்கள் முனைப்பாக்கி இருந்ததைப் போலன்றி சாதியாசாரங்கள் அப்படியே பின்பற்றப்பட வேண்டும் என வலியுறுத்தியவரான நாவலர் அனைத்தையும் கடந்த மேலாதிக்கச் சக்தியான பதிக் கோட்பாட்டை (சைவசித்தாந்தத்தை) பரப்புரை செய்பவராக விளங்கினார்.

பிரித்தானியக் காலனித்துவ ஆக்கிரமிப்பினை அரசியல் - பொருளாதாரத் தளங்களில் முறியடிக்க இயலாத நிலையில் அன்றைய செயற்பாட்டாளர்கள் அனைவரும் இருந்துள்ளனர். அத்தகைய அடிமை நிலைக்குக் கால்கோலிட்டிருந்த ஆணாதிக்க - சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அவரது சமகால இந்திய ஆளுமைகள் குரல் கொடுத்தது போல ஏன் நாவலரது இயங்குமுறை அமையாமல் போனது? பத்தொன்பதாம் நூற்றாண்டில் சாதிய எதிர்ப்புணர்வு வீச்சுடன் மேலெழுந்த இந்தியச் சமூகத்தில் இன்றுவரை சாதி மோதல்கள் முனைப்புடன் இருப்பது எதனால்? இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் உருவாகிச் செயற்படுவதன் காரணமாகப் பாரிய இன மோதல்கள் இடம்பெறாமல் இருப்பதைப் போல இலங்கையில் சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்கள் அனைவரும் அந்நியோன்யமான வாழ்வு இணைப்பைப் பெற்றிருக்க வேண்டுமே, எதன் பேரில் இனத்தேசிய மோதல் இங்கே கொழுந்துவிட்டு எரிகிறது?

இவையனைத்திலும் காலனித்துவப் பொருளுற்பத்தி உறவு ஊடாட்டம் கொண்டுள்ளது. கிழக்கிந்தியக் கம்பனி எனும் வர்த்தக அமைப்பு எம்மிடையே நிலவிய ஆட்சி முரண்களைத் தந்திரோபாயமாகக் கையாண்டு ஆக்கிரமிப்பை முழு நிறைவாக மேற்கொண்டதில் இருந்து, பிரித்தானிய முடியாட்சியின் கீழ் எமது நாடுகள் ஆட்பட்டது வரை எம்மை ஆளும் தேவையின் பொருட்டு எமது சமூக இருப்பையும் வழக்காறுகளையும் வரலாற்றையும் ஆய்வு செய்து அறிய வேண்டிய தேவை காலனித்துவத்துக்கு இருந்தது. அதன் பொருட்டுத் தொடக்கம் பெற்ற மானிடவியல், நாட்டாரியல், சமூகவியல், மொழியியல் போன்ற ஆய்வுத்துறைகள் இன்று பெரிதும் விரிவுபட்டனவாக வளர்ச்சியடைந்துள்ளன. எமது நாடுகள் சுதந்திரம் பெற்ற பின்னர் இந்த ஆய்வுப் புலங்களைவிடவும் சுயசார்புடன் எமது விருத்தியை எவ்வாறு வென்றெடுப்பது என்ற துறைகளில் ஆய்வாளர்களின் ஊழல், மோசடிகள் சுயசார்புப் பொருளாதார முன்னேற்றத்தை முடக்கிய போது ஏகாதிபத்திய ஊடுருவலுக்குக் கதவுகளை அகலத் திறக்க வேண்டிய வகையிலான திறந்த பொருளாதார முறைமை மேலெழுந்து வந்தது. இந்த மாற்றத்துக்காட்பட்ட எண்பதாம் ஆண்டுகளில்தான் மீண்டும் மானிடவியல் சார்ந்தனவாகிய மேலே குறிப்பிட்ட ஆய்வுப் புலங்கள் வீறுடன் முனைப்படைந்தன என்பது தற்செயலான ஒரு விடயமல்ல.

நிலவுடைமை அமைப்பு நிலவிய மத்தியகாலத்தில் சாதி முறைமை என்பது பொருளுற்பத்தி உறவாகச் செயற்பட்ட பாங்கு உலகின் முதல்நிலை விருத்திக்குரிய நாடாக இந்திய உபகண்டத்தை வளர்த்தெடுக்க வகை செய்திருந்தது. அதிலும் தமிழ்நாடு அதியுச்ச வளர்ச்சியின் மையமாகத் திகழ்ந்தது. முதல் தொல்பொருள் அகழ்வாய்வுத் தலங்களில் ஒன்றாக வெளிப்பட்ட ஆதிச்சநல்லூர் தமிழகத்தின் தொன்மைப் பலத்துக்குச் சான்றாக விளக்கம் தந்த போதிலும், அதன் தொடர்ச்சிகளை ஆய்வுக்கு உட்படுத்தாமல், சிந்துவெளியின் வீழ்ச்சிக்குப் பின்னர் கி.மு. 6ஆம் நூற்றாண்டில் எழுந்த முதல் நகரப் பண்பாடாக வட இந்தியாவை வெளிப்படுத்தும் ஆய்வுத் தூண்டல்கள் வலுப்பட்டிருந்தன. தமிழிலக்கிய - இலக்கணத் தொன்மையைக் கவனிப்பதை விடுத்து ரிக் வேத வரவை முதன்மைப்படுத்தியதோடு வட இந்தியாவை மையப்படுத்தி வரலாற்றெழுதுமுறையைத் தூண்டி வளர்த்தது ஏன்? ஆரியர் என்போர் வெளியே இருந்து வந்தோர் என்ற வரலாற்றுக் கட்டத்தைக் கடந்து திராவிடருடன் கலப்புற்று உருவான பிராமண மதமே தொடர்ந்து இயங்கியிருந்தது. அதனாலேயே ஓர் உயர்தர விருத்தி சாத்தியப்பட்ட உயர்ந்தோர் என்ற

பொருள் மாற்றம் பெற்ற புரிதலே நிதர்சனமாகி இருந்த போதிலும் ஆரிய - திராவிட மோதலுக்குரிய ஆய்வுகள் தூண்டப்பட்டது ஏன்? தமிழின் உண்மைப் பலம் எதுவோ, அவற்றை மறைத்து மாயைகளுக்குள் தள்ளும் லெமூரியா கண்டம் பற்றிய புனைவுகளுக்குள் திசை திருப்பிவிட்டமைக்கான காரணம் என்ன?

இந்தியாவை ஒட்டச் சுரண்டி ஓட்டாண்டி நிலைக்கு ஆளாக்கிய ஏகாதிபத்தியம் இலங்கைக்காக அரசியல் உரிமைகளை அதிகமாக வழங்கி வந்ததுடன் இலங்கையின் உட்கட்டமைப்பு விருத்தியில் கூடுதல் கவனம் செலுத்தியதில் உள்நோக்கம் எதுவும் இல்லாதிருக்குமா? சிங்கள மக்களிடையே இந்திய விரோதத்தை வளர்த்த அதேவேளை நாட்டின் அரசியல் அதிகாரத்தை மிக அதிக அளவில் சிங்களத் தரப்புக்கே வழங்கியிருந்தது ஏன்? டொக்ரர் க்ரீன் உள்ளிட்ட மருத்துவத் தொழில்நுட்பக் கல்வியை வழங்கிய முன்னோடிகள் தமிழகத்தில் மட்டுமன்றி சிங்களப் பகுதிகளிலும் செயற்பட இடம் தராமல் யாழ்ப்பாணத்தில் இயங்குவதற்கு அனுமதித்தது எதற்காக? இலங்கை பூராகவும் யாழ்ப்பாணத்தவர் உத்தியோகம் பார்க்கும் கல்வி விருத்தியை வழங்கியிருந்த சூழலில், ஆறுமுக நாவலர் கந்தளாய்க் குடியேற்றத் திட்டத்தில் ஐரோப்பியர் உள்வாங்கப்படுவதை விடவும் இலங்கையர்களான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் குடியமர்த்தப்பட வேண்டும் என்றும் குரல் கொடுக்க இயலுமாயிருந்தது. எமது ஆளுமையிடம் தேசமளாவிய பரந்த நோக்கு ஏற்பட வழி செய்தது போலன்றி அநகாரிக தர்மபாலர் இலங்கை என்பது சிங்கள நாடு எனக் குரல்கொடுக்க ஏற்ற அரசியல் - சமூக நியதி ஏற்படும் சூழல் கட்டமைக்கப்பட்டது ஏன்? எமக்கான தேசக் கட்டமைப்பைச் செயற்கையாக ஏற்படுத்திய ஏகாதிபத்தியம் தொடர்ந்தும் உள் மோதல்கள் வாயிலாகத் தேசிய ஒற்றுமை வலுப்பட்டு விடாமலாக்கும் கைங்கரியங்களை ஆற்றியிருந்தது என்பதே இவையனைத்துக்குமான ஒற்றைப் பதில்!

I) ஏகாதிபத்தியப் பதியின் மேலாதிக்கம்

பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து காலனி நாடுகளை வேட்டையாடும் ஐரோப்பிய நாடுகளுக்குரிய பயணம் இரண்டாம் உலக யுத்தத்துடன் முடிவுக்கு வந்தது. போர்த்துக்கல், ஒல்லாந்து, ஸ்பெயின், பிரெஞ்சு, பிரித்தானியா எனத் தொடர்ந்து இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இந்த நாடுகள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட சில காலம் தலைமை (பதி) எனும் பாத்திரத்தை வகித்து வந்தன. இருபதாம் நூற்றாண்டில் பிரித்தானியாவும் பிரான்சும் முதல் இரண்டு தலைமை

19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியக் காலனியாகத் தமிழகம் மாற்றம் பெற்றபோது வள்ளலார் வாயிலாக வெளிப்பட்ட சுத்த சமரச சன்மார்க்கம் மக்களிடையே வேறுபாடுகளைக் குறியீடாக வெளிப்படுத்திய கடவுளர்களைக் கடந்த ஆன்மிக எழுச்சிக்குரியதாகத் தமிழகத்தை மாற்றியிருந்தது.

நாடுகளாக இருந்த போதும், மேற்காசிய நாடுகளில் கருப்புத் தங்கம் எனும் எரிபொருள் எண்ணெய் வளம் கண்டறியப்பட்டிருந்தது. தங்க வேட்டைக்காகப் புதிய கண்டங்களைக் கண்டுபிடிக்கும் வீரசாகச நாடுகாண் பயணங்கள் மேலும் தேவைப்படாத வகையில் காலனிகளில் நிரந்தர ஆட்சி பெற்றிருந்த பிரித்தானியாவும் பிரான்சும் தமது பார்வையில் மத்திய கிழக்கு என அழைத்த மேற்காசியப் பிராந்தியத்தைப் பல நாடுகளாகப் பிரித்துப் பங்குபோட்டுக் கொண்டன. அரபு மொழி - இஸ்லாம் மதம் எனும் பொது உணர்வுடன் ஒரே நாடு போல இயங்கி வந்த அரேபிய மண் பல தேசங்களாகப் பிளவுபடுத்தப்பட்ட ஏகாதிபத்திய நலன் இன்று வரை பிரித்தாளுவோருக்கு ஆதாயங்களை வாரி வழங்கிவருவதனை அவதானிக்க இயலும்; அதன் பொருட்டு அரபு மண் யுத்தக் களரியாக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஏகாதிபத்திய விருத்தியைப் பெற்ற ஜேர்மன், இத்தாலி, ஜப்பான் எனும் மூன்று நாடுகள் அச்சு நாடுகள் என்ற ஒன்றுபடலுடன் உலகை மறுபங்கீடு செய்வதன் பொருட்டுத் தொடுத்த இரண்டு உலக மகாயுத்தங்களிலும் தோல்விகளைச் சந்தித்தன. அதன் பேரில் நட்பு நாடுகள் எனப்பட்ட பிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா எனும் அணிக்குப் பணிந்து தமது ஏகாதிபத்திய நலனைத் தொடர வேண்டிய நிலை அச்சு நாடுகளுக்கு ஏற்பட்டது. அச்சு நாடுகள் மட்டும் உலக யுத்தங்களினால் பலவீனப்பட்டன என்பதற்கில்லை; ஐரோப்பிய ஏகாதிபத்தியத் திணை முழுவதும் ஒட்டுமொத்தமாகப் பின்னடையும் வகையில் யுத்த முனைப்பின் பொருட்டுத் தமது சக்திகள் அனைத்தையும் விரயமாக்கி இருந்தது. அந்த ஏகாதிபத்திய நாடுகளை விடவும் அதிக இழப்புகளைச் சந்தித்த சோவியத் ஒன்றியம் ஹிட்லரின் படையெழுச்சியை முடிவுக்குக்

கொண்டு வந்ததைத் தொடர்ந்து, சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் ஜப்பான் தோற்கடிக்கப்பட்டு மக்கள் சீனம் என்ற சோசலிச நாடு சாம்பல் மேடாக்கப்பட்ட அழிவிலிருந்து தம்மைக் கட்டியெழுப்பிச் சாதனைகள் படைத்ததைப் போல, பிற நாடுகளைச் சுரண்டி வாழ்ந்து வந்த ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தினால் மீண்டெழ இயலவில்லை.

அதனிடமிருந்து ஏகாதிபத்தியத் தலைமையைக் கையேற்றிருந்த ஐக்கிய அமெரிக்கா பாசிச வெறித்தனத்துக்கு எதிரான முனையில் இழப்புகளைப் பெரிதாகச் சந்தித்திருக்கவில்லை. செத்த பாம்பை அடிப்பது போல தான் கண்டுபிடித்த அணுகுண்டுகளை ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டிருந்த ஜப்பானின் அப்பாவி மக்கள் மீது வீசிப் பரீட்சித்ததைத் தொடர்ந்து, மிகப்பெரும் இராணுவ வல்லரசு தானே எனக் காட்டியிருந்தது ஐக்கிய அமெரிக்கா. சமாதானத்தை நிலைநாட்டும் ஐக்கிய நாடுகள் சபையைத் தனது மண்ணில் உருவாக்கும் வாய்ப்பைப் பெற்றதுடன் தங்கத்துக்குப் பதிலாகத் தனது நாணயமான டொலரில் உலக நாடுகளது வர்த்தகம் இடம்பெற ஏற்ற நடவடிக்கைகளில் இறங்கியது. பெற்றோலிய வர்த்தகம் பிரதான இடத்தை எடுத்த சூழலில் மத்திய ஆசிய நாடுகளில் (குறிப்பாக சவுதி அரேபியாவுடன்) மேற்கொண்ட ஒப்பந்தங்கள் வாயிலாக பெற்றோடொலர் எனும் பொருளுற்பத்தி உறவுச் சங்கிலியில் உலக நாடுகளைப் பிணைத்துக் கொண்டது.

டொலரில் பரிவர்த்தனை மேற்கொள்ள வேண்டியிருந்த காரணத்தால் ஐக்கிய அமெரிக்காவின் தொடர்பின்றி வேறு இரண்டு நாடுகள் இடையே மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தகத்தின் போதும் கூட அந்தந்தத் தேசங்களின் நாணயத்தை டொலருக்கு மாற்றுவதில் வருகின்ற பணத்தொகை ஐக்கிய அமெரிக்க மத்திய வங்கிக்கு வந்து சேர்வதாக இருந்தது. இந்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவும் உறுதிப்படுத்தவுமென மேற்கொள்ளப்பட்ட வியட்னாம், ஈராக், ஆப்கானிஸ்தான் யுத்தங்களின் முடிவில் அவமானத்துடன் பின்வாங்கி வந்த போதிலும் பெற்றோ - டொலர் மேலாண்மை தக்கவைக்கப்படுவது கேள்விக்குள்ளாகவில்லை.

சென்ற வருடத்தில் அதனைக் கைவிட்டுப் புதிய உலக ஒழுங்கு மேலெழ ஏற்றதாக பிரிக்ஸ் அமைப்புக்குரிய நாடுகள் செயலொழுங்குகளை மேற்கொள்ளத் தொடங்கி இருந்தன; சீனாவின் யுவான், ரஷ்யாவின் ரூபிள், இந்தியாவின் ரூபாய் என்ற நாணயங்கள் வாயிலாக வர்த்தகப் பரிமாற்றம் இடம்பெறுவதைத் தடுக்க இயலாத நிலை ஐக்கிய அமெரிக்காவுக்கு; சவுதி அரேபியாவுடனான பெற்றோ - டொலருக்கான காலக்கெடு முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அதனைப் புதுப்பித்துக் கொள்ள முற்படாதது மட்டுமன்றி, பிரிக்ஸ் அமைப்பில் உறுப்புரிமையையும் சவுதி அரேபியா பெற்றுக் கொண்டதன் வாயிலாக ஒற்றை மேலாதிக்கத்தை ஐக்கிய அமெரிக்கா இழந்தமை பன்மைத்துருவங்களுக்கான புதிய உலக ஒழுங்கு நிதர்சனமாகிவிட்டமையை உறுதிப்படுத்துவதாக அமைந்தது!

உலகத்தின் புதியதாகத் திகழ்ந்திருந்த தனது ஏவலுக்குப் பணியும் நிலையில் நாடுகள் இனியும் இல்லை என்பதை ஏற்க இயலாத நெருக்கடியில் ஐக்கிய அமெரிக்கா நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் தொடக்கியிருந்த உலக மயமாதலுக்குரிய திறந்த பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து தானே விலகி, அடாவடித்தனமான வரிவிதிப்புகளையும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டது. தனது மேலாதிக்கமும் செல்லுபடியாகும் எனக் காட்டுவதற்கு ஈரான் மீது யுத்தத்தைத் தொடுத்து மூக்குடைபடும் அவதிக்கு ஆளாகி வருகிறது. வியட்னாம், ஈராக், ஆப்கானிஸ்தான் யுத்த முனைகளில் ஆக்கிரமிப்புச் சாத்தியப்பட்ட பின்னர் அவமானத்துடன் வெளியேற நேர்ந்தது. ஈரானின் வாசலைத் தொட இயலாத வகையில் தனது பலவீனத்தை வெளிப்படுத்தும் அவமானகரத் தோல்வியை அது வெளிப்படுத்துவதன் வாயிலாக ஒடுக்கப்பட்ட தேசங்கள் முன்னர் போல இலகுவில் ஆக்கிரமிக்கப்படும் நிலையில் இல்லை என்ற வரலாற்றுச் செல்நெறி மாற்றம் மேலெழுந்துவிட்டது.

பெற்றோ - டொலர் உற்பத்தி உறவு பலவீனப்பட்ட போதிலும் உலக மொழியாக ஆங்கிலம் பெற்றிருந்த மேலாதிக்கமும் ஊடகத்துறை வலைப்பின்னலுமே ஐக்கிய அமெரிக்கக் கருத்தியல் மேலாண்மை ஓரளவேனும் உயிர்ப்புடன் இருக்க உதவி வருகிறது. புதிய தொழில்நுட்ப விருத்திகள் மொழிப் பரிமாற்றத்தை ஜனநாயகப்படுத்துவதுடன் இனியும் மேலைத்தேசங்களுக்குரிய வாய்ப்பை நிராகரித்து சீனா, ஈரான், வடகொரியா, இந்தியா வரையில் புதிய கண்டுபிடிப்புகள் பெருகி வரும் காரணத்தால் கருத்தியல் தலைமை ஐக்கிய அமெரிக்காவை விட்டு நீங்கும் காலத்தை விரைவுபடுத்தி வருகிறது எனலாம்.

II) சுத்த சமரச சன்மார்க்கத்தில் இருந்து மத நீக்கத்துக்கு

நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாகக் காலனித்துவ மேலாதிக்கத்துடனேயே மேலைத்தேசங்களின் முதலாளித்துவ விருத்தி ஏற்பட்டு வந்தது. இரண்டு நூற்றாண்டுகளாக ஏகாதிபத்திய உற்பத்தி உறவில் ஒடுக்கப்பட்ட தேசங்களைச் சமவீனமான

பரிவர்த்தனை வாயிலாகச் சுரண்டி வந்த ஏகாதிபத்திய அணி இன்று உள் முரண்பாடுகளுக்குள் சிக்கல்படுகிறது. ஒடுக்கப்பட்ட தேசங்கள் புதிய உலக ஒழுங்கினூடாக ஆளுமை பெற இயலுவதனாலேயே ஏகாதிபத்தியத் திணைகளின் இத்தகைய உள்முரண்பாடு வலுப்பட வேண்டி ஏற்பட்டது. சுரண்டப்படும் நாடுகள் தொடர்ந்தும் பணியத் தயாரெனில் உயர் பதி அந்தஸ்துடன் ஐக்கிய அமெரிக்கா ஏகாதிபத்திய நாடுகள் அனைத்துக்கும் தலைவராகத் திகழ்ந்திருக்க இயலும். ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் பொய்க் குற்றச்சாட்டுகளுடன் யுத்தத்தைத் தொடுத்த போது கூட்டுத் தாக்குதலுக்குச் சென்ற நேட்டோ அணிக்குரிய ஐரோப்பிய நாடுகள் ஈரான் மீதான போரில் களமாடத் தயக்கம் காட்டுவது ஒடுக்கப்பட்ட தேசம் இன்று பெற்றுவிட்ட ஆளுமையின் கனதியின் காரணமாகவே. முன்னர் போலத் தொழுதேற்றிப் போற்றும் பதியாக அன்றித் தலைமைத் தாதாவுக்குரிய அடாவடித்தனங்களை ஐக்கிய அமெரிக்கா வெளிப்படுத்த நேர்ந்துள்ளமையானது ஏகாதிபத்தியத் திணையின் பலவீனத்தின் வெளிப்பாடு.

ஏகாதிபத்தியத்தின் பதி பலவீனப்படுவதும், தேசங்கள் அனைத்தும் தலைமைத் தாதாவுக்குக் கட்டுப்பட மறுத்துத் தமக்குள் சமத்துவம் பேண முற்படுவதும் இனிமேல் முனைப்புற்று வளரவுள்ள உலகச் செல்நெறி. இது போன்ற ஒரு மாற்றத்தை நிலப்பிரபுத்துவ மேலாதிக்கம் தகர்ந்து சென்ற வரலாற்றிலும் கண்டு வந்திருக்கிறோம். சோழப் பேரரசர் காலம் (கி.பி. 1013 ஆம் நூற்றாண்டுகள்) உலகின் முதல் நிலை வல்லரசாகத் தமிழகம் திகழ்ந்த வரலாற்றினை உடையது என்பதனைப் பேசி வந்துள்ளோம். நிலத்துடன் பிணைக்கப்பட்ட பண்ணையடிமைகளைச் சுரண்டும் நிலப்பிரபு தலைமை பெற்று இயங்கிய அன்றைய வாழ்முறையில் மதம் சமூக இயக்கத்துக்கான பிரதான கருவி. நிலப்பிரபுத்துவத்தின் அதியுச்ச மேலாதிக்கம் பெற்றிருந்த வெள்ளாளர் சைவசித்தாந்தம் வாயிலாக வெளிப்படுத்திய பதிக் கோட்பாடு கடவுள் பற்றிய கருத்தியலில் அதியுச்சமான ஒன்றாக இருந்தது. பதி மட்டுமே அதியுயர் கடவுள், அதன் ஏவலுக்கு ஆட்பட்டனவே ஏனைய அனைத்தும்.

நிலப்பிரபுத்துவம் அதியுச்ச நிலையடைந்து சிதைவுகளுக்கு உள்ளான போது ஐரோப்பியக் காலனிக்கு ஆட்படும் வரலாறு ஏற்படத் தொடங்கியது. பதினைந்தாம் நூற்றாண்டைத் தொடர்ந்து நாம் போர்த்துக்கல், ஒல்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளின் காலனிகள் ஆனது போல தமிழ்நாட்டுக்கு நேரவில்லை. அதே காலத்தில் வெள்ளாளரின் தனிப்பெரும் நிலப்பிரபுத்துவ மேலாண்மை தகர்ந்து விஜயநகரப் பேரரசின் தெலுங்கு மொழி பேசும் நிலப்பிரபுத்துவச் சாதிகள் பிரவேசிப்பது நிகழ்ந்தது. பதிக்கு அப்பால் அத்வைதத்திற்குரிய பிரம்மம் ஆட்சியாளர்களின் கவனிப்புக்கு உரியதாக ஆனது. இதன் பேறாக பதியின் தனி ஆதிக்கம் இழக்கப்பட்டு பிரம்மத்துடன் சமரச சன்மார்க்கம் ஏற்பட வேண்டியுள்ளதனைத் தாயுமான சுவாமிகள் வெளிப்படுத்தும் வரலாறு அரங்கேறியது.

19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியக் காலனியாகத் தமிழகம் மாற்றம் பெற்றபோது வள்ளலார் வாயிலாக வெளிப்பட்ட சுத்த சமரச சன்மார்க்கம் மக்களிடையே வேறுபாடுகளைக் குறியீடாக வெளிப்படுத்திய கடவுளர்களைக் கடந்த ஆன்மிக எழுச்சிக்குரியதாகத் தமிழகத்தை மாற்றியிருந்தது. சைவத்தின் மேலாதிக்கம், அதனுடன் இணக்கம் காணும் வைணவம் என்பன சார்ந்த மத உணர்வுகளை விட்டு விலகிய ஆன்மத் தேடல் வள்ளலார் வாயிலாக மேலெழுந்தது. அனைத்துக் கடவுளர்களும் சம அளவில் அணுகப்படும் போது பதி பெற்றிருந்த தனியான மேலாதிக்கம் கரைந்து காணாமலாகி வந்தது.

III) ஆன்மிக நாத்திகம்

இருபதாம் நூற்றாண்டின் பூரண சமத்துவம் பற்றிய சிந்தனை முளைவிடத் தொடங்கிய போது பாரதி முன்னிறுத்திய ஆன்மீக நாத்திகம் வெளிப்பட்டது. பெருங்கோயில் மையமாக இயங்கும் சமய அனுஷ்டானங்களுக்கு எதிரான சித்தர் மரபு ஆரம்பம் முதல் இயங்கி வந்த ஒன்று. இரண்டினதும் தொடக்கமாகத் திருமூலர் திகழ்ந்தார் என்பது தமிழின் தனிச்சிறப்புகளில் ஒன்று. மேலாதிக்கக் கருத்தியலாக மூன்று நூற்றாண்டுகளின் பின் வெளிப்பட்ட பதி பற்றி முதன் முதலில் வெளிப்படுத்திய திருமூலர் சமத்துவ நாட்டமுடைய சித்தர் மரபின் தொடக்குநரும் கூட. பெரிய ஆலயங்களைக் கடந்த ஒளி வழிபாட்டை முன்னிறுத்திய வள்ளலாரை அடியொற்றிப் பதிய தளத்துக்கு ஆன்மிகச் சிந்தனையை வளர்த்த பாரதி தன்னைச் சித்தர் பரம்பரையின் வாரிசாகப் பிரகடனப்படுத்தியிருந்தார்.

தமிழின் இத்தகைய தனித்துவமிக்க வரலாற்றுச் செல்நெறி எவ்வாறு ஏற்பட்டது? "வரலாற்றுச் செல்நெறியைத் தீர்மானிக்கும் சக்திகள்" எனும் அடுத்த இயலில் அது குறித்துப் பேசுவோம்!

கப்டன் ஹென்றி பேர்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச் செய்கையோடு மலையக மக்களின் வாய்மொழிப் பாடல் வரலாறு ஆரம்பிக்கின்றது. சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலேயரின் பூரண கட்டுப்பாட்டில், அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு, கடுமையான உழைப்புச் சுரண்டலுக்கு உட்பட்டு இம்மக்கள் வாழ்ந்தமையால், உலகில் உள்ள நாட்டுப்புறப் பாடல்களில் இருந்து இவர்களின் பாடல்கள் தனித்துவம் பெறுகின்றன. இத்தகைய இருள் சூழ்ந்த வாழ்வியலுக்குள் சிக்கிய மக்களின் வரலாறு, துன்பம், துயரம் ஆகியவற்றை இவர்களின் வாய்மொழிப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இன்று, மலையக மக்களின் 200 வருடகாலப் பண்பாட்டைத் தீர்மானிக்கும் முக்கிய கூறுகளாகவும் இவை திகழ்கின்றன. அந்தவகையில், மலையக மக்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் அவர்களது வாய்மொழிப்பாடல்கள் வழியாகப் புரிந்துகொள்ளும் நோக்குடன் எழுதப்படுவதாக, 'மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் பேசும் வாழ்வியல்' எனும் இத்தொடர் அமைகின்றது

மலையக வாழ்வியலில் ஒப்பாரிப் பாடல்கள்

வேலாயுதம் இராமர்

வேலாயுதம் இராமர், கொ.புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரில் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். கவிஞர், நாடகம், திரைப்பட நடிகர், மலையக நாட்டார் இலக்கிய செயற்பாட்டாளர் என பல்துறைசார்ந்து செயற்படுவதோடு மலையக கூத்து தொடர்பாகவும் செயற்பட்டு வருகின்றார்.



கலை, இலக்கியங்கள் மக்களால் உருவாக்கப்பட்டவை ஆகும். மக்கள் உருவாக்கிய இக்கலைகளில் அவர்களின் வாழ்க்கைச் செய்திகள் வெளிப்படுவது இயல்பாகும். கலை, இலக்கியங்கள் மக்களின் பண்பாட்டு நிலைகளை உள்ளடக்கியவைகளாக உள்ளன. தமிழரின் இசை மரபு நீண்ட காலப் பாரம்பரியத்தைக் கொண்டது. தமிழரின் இசை அம்மானை, ஊஞ்சல் போன்ற தொழில்முறைப் பாடல்களாகவும், மங்கல வாழ்த்து போன்ற விழாப் பாடல்களாகவும், பல சடங்குப் பாடல்களாகவும் ஆரம்ப காலத்தில் வழக்கத்தில் இருந்தது. இவற்றில் தாலாட்டு, கும்மி, ஒப்பாரி என்பன நாட்டார் பாடல் வடிவங்களில் முதன்மை பெற்றவையாக இயங்குகின்றன. இதில் தனித்துவம் பெற்ற இசை வடிவமாக ஒப்பாரி திகழ்கிறது. இதை தொல்காப்பியம் 'கையறுநிலை' என்று குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரத்தில் வரும் ஊர்சூழ் வரியும், கம்பரின் தாரை மற்றும் மண்டோதரி புலம்பலும் ஒப்பாரி வடிவங்கள் என்று தமிழ் இசை ஆய்வாளர் நா. மம்மது குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது.

நாட்டார் இலக்கிய வடிவங்களிலும் தமிழர்களின் வாழ்வியலிலும் ஒப்பாரிப் பாடல்கள் தவிர்க்க முடியாத ஒரு கூறாகத் திகழ்கின்றன. இசை என்பது அடிப்படையிலேயே துயரத்தின் ஒரு வடிவமான வெளிப்பாடே என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். மகிழ்ச்சியான தருணங்களைக் கூட மெல்லிய சோகக் கலவையுடன் வெளிப்படுத்துவது இசையின் தனிச்சிறப்பாகும். தாலாட்டுப் பாடல் நமக்கு இன்பத்தைத் தருவதாக இருந்தாலும், அதனை உற்று ஆழமாகக் கேட்கும்போது தாயின் மனக்கவலை, அவலம், துயரம் போன்றவை அலை அலையாக எழுவதைக் காண முடியும். மனித வாழ்வில் சொந்த பந்தங்கள், உறவினர்கள் மற்றும் உடன்பிறப்புகளின் மரணம், தற்கொலை போன்ற சோகங்கள் தினசரி நிகழ்வுகளாகவே இருக்கின்றன. இத்தகைய வாழ்வியல் துன்பங்களை நெஞ்சுக்குள் தேக்கி வைக்காமல், உள்ளத்தில் எழும் சோக உணர்வுகளை வெளிக்கொணர உதவும் வடிகாலாக அமைபவையே ஒப்பாரிப் பாடல்களாகும். இப்பாடல்கள் மூலம் இறந்தவரின் வாழ்வையும் அவரது சிறப்புகளையும் உறவினர்களும் ஊர்மக்களும் பாடிப் போற்றுகின்றனர். மேலும், ஒப்பாரிப் பாடல்களில் 'மடக்குகள்' என்று சொல்லப்படும் சொற்களே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

இறந்தவருக்கும் ஒப்பாரி பாடுபவருக்கும் உள்ள உறவைக் காட்டும் சொற்களே மடக்குகள். கங்காணி, மகராசா, என்னைத் தேடிய சீமானே, என்னைப் பெற்ற அம்மா, என்னைப் பெற்ற ஆத்தா ஆகிய மேற்குறிப்பிட்ட விழிப்புகள் யார், யாருக்கு எவ்வாறு பாடப்பட வேண்டும் என்ற மரபு எழுதப்படாமலேயே உள்ளத்து உணர்வாகக் கொட்டித் தீர்க்கப்படுகின்றன.

இழப்பைக் கேட்டவுடன் பாடும் பாடல்கள், இறப்புக்குப் போய் பாடும் பாடல்கள், உறவுகளைக் கண்டவுடன் பாடும் பாடல்கள், நீர்மாலை எடுக்கப் போகும்போதும் வரும்போதும் பாடும் பாடல்கள், சீதேவி வாங்கும்போது பாடும் பாடல்கள், எண்ணரப்பு வைக்கும்போது பாடும் பாடல்கள், கொள்ளிக் குடம் உடைக்கும்போது பாடும் பாடல்கள் என ஒப்பாரி பாடப்படும் சந்தர்ப்பம் பல வகைப்படும். ஒரு காலத்தில் தப்பு இசையோடு ஒப்பாரி பாடுவர். இறந்த வீட்டுக்கு வருபவரைத் துக்க மனநிலையிலேயே வைத்திருக்கும் வகையில் தொடர்ச்சியாக ஒப்பாரிகளைப் பாடி முழங்குவர்.

ஒருவர் இறந்தவுடன் தோட்டத்தில் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கும் 'ஓடும் பிள்ளைக்கு' முதலில் தகவல் கொடுக்கப்படும். அவர் வந்தவுடன் யார், யாருக்கு எவ்வாறு தகவல் வழங்கப்பட வேண்டும் என்பது அங்கு முழுமையாகத் தீர்மானிக்கப்படும். அதில் முதலாவது தப்பு வாத்தியாருக்கு அல்லது குழுவுக்கு அறிவிப்பது மரபாக இருந்தது.

ஆழ்மனதின் குமுறல்களாக வெளிப்படும் ஒப்பாரிப் பாடல்கள் பெண்களால் பாடப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. தற்போது தமிழ்நாட்டில் அதிகமாகப் பறை இசைக் குழுக்கள் ஒப்பாரிப் பாடல் குழுக்களாக இயங்கி, அதை ஒரு வாழ்வியல் கலையாக மாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. தம்மோடு இணைந்து வாழ்ந்து மறைந்த ஆன்மாவின் பிரிவும், அதனால் ஏற்பட்ட மனவலியும் தரும் துயரத்தைத் தணித்து ஆறுதலளிக்கும் சிறந்த வடிகால்களாகவே இப்பாடல்கள் பாடப்படும். அதேவேளை, கணவனோ, மனைவியோ, பிள்ளைகளோ, பெற்றோரோ இறந்த பின் பேச முடியாத மன உணர்வுகளைக் கொட்டித் தீர்க்கும் ஓர் ஆறுதல் சக்தியாகவும் இந்த ஒப்பாரிப் பாடல்கள் திகழ்கின்றன.

அதோடு, சமூகத்தில் பெண்களின் பரஸ்பர ஒத்துழைப்பை வலியுறுத்தும் கூட்டு வாழ்வியல் முறையை உளவியல் ரீதியாக இப்பாடல்கள் பிரதிபலிப்பதால், ஒப்பாரி என்பது ஒரு குறிப்பிட்ட இனக்குழுவின் தனித்துவமான பண்பாட்டு அடையாளமாகவும் உருவெடுக்கிறது. இத்தகைய சமூகச் செயல்பாடுகள் அவற்றின் அசலான மண்மணம் குறையாமல் வெளிப்படுவதனால், ஒரு சமூகம் தன் பிரத்தியேகப் பாரம்பரியத்தை உலகிற்குப் பறைசாற்றுவதற்கு இந்த நாட்டார் வழக்காறுகளே மிக

முக்கிய ஆதாரமாகத் திகழ்கின்றன. தமிழர் பண்பாட்டில் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் இந்த ஒப்பாரிப் பாடல்கள் மூலம் நாட்டுப்புறப் பெண்கள் தமது ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிப்படுத்திக் கொள்கின்றனர். தமிழில் மட்டுமல்ல, சீனா, தாய்லாந்து, அயர்லாந்து, கிரீன்லாந்து போன்ற நாடுகளின் கலாசாரங்களிலும் இந்த ஒப்பாரிப் பாடல்கள் இடம்பெறுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மலையக மக்கள் உலகில் எந்த ஓர் இனத்தினரும் அனுபவிக்காத மன உளைச்சலுக்கும், உளவியல் சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்ட இனமாவர். பாரம்பரிய நிலத்திலேயே வாழ்ந்து, அந்த நிலத்திலேயே அந்நியப்படுத்தப்பட்டு, சாதி ரீதியாக அடக்கப்பட்டு, அந்த நிலத்தை விட்டு அடிமைகளைப் போல 1820களில் கொண்டுவரப்பட்ட இந்தியத் தமிழர்கள் தமது முன்னோர்களின் வாய்மொழிப் பாடல்கள் மூலம் தமது வரலாற்றை இக்காலத்தில் பதிவு செய்தனர். 1820ஆம் ஆண்டிலிருந்து தங்களது பயணத்தை ஆரம்பித்த இவர்களில் அநேகர், கடல்வழியாகப் பயணித்தபோதே நீரில் மூழ்கித் தமது உயிர்களை இழந்தனர். உயிர் தப்பிய பலர் மன்னார் முதல் கண்டி வரை நடைபாதைப் பயணத்தில் பல காடுகளைக் கடந்து வரும் வழிகளில் இறந்துபோக, இன்னும் சிலர் மலேரியா நோய்க்குப் பலியாகினர். இன்னும் சிலர் விலங்குகளுக்கு இரையாகி மாண்டனர். எஞ்சியவர்களே மலையகத்தை வந்தடைந்தனர். இவ்வாறு எஞ்சியவர்கள் தாம் அடைந்த துயரங்களை, இழப்புகளை, ஏமாற்றங்களை, மனச்சுமைகளைத் தமது ஒப்பாரிப் பாடல்கள் மூலம் எடுத்தியம்பினர். மலையக வாய்மொழிப் பாடல்களில் மிகவும் உயிரோட்டமும் உணர்ச்சியும் மிக்க பாடல்களாக இவை திகழ்கின்றன.

அந்த வகையில் மலையக ஒப்பாரிப் பாடல்களில் கணவருக்காகப் பாடப்படுகின்ற பாடல்கள் இவ்வாறு காணப்படுகின்றன.

“காசி விசிறி வரும்
கைலாச தீர்த்தம் வரும்
காசி மகராசருடன் நான்
கலந்து இருந்து வாழலையே
செஞ்சி விசிறி வரும்
தெய்வலோக தீர்த்தம் வரும்
செஞ்சி மகராசருடன்
நான் சேர்ந்து இருந்து வாழலையே”
“பூசைக்குப் பண்ணிய
பொண்ணு ஜெபமாலை
பூசை முடியலையே நம்ம
பூ உதிர வாழலையே”
“காசுக்கரிசி வாங்கி
கண்ணான கவளை வாங்கி
கண்ணார் சொக்கருக்கு
கைப்பூசை செய்து வந்தோம்”
“நம்ம பணத்தாசி வேகலையே - ஐயோ
நம்ம பாவம் தொலையிலேயே
நம்ம காசாசி வேகலையே நம்ம
கருமம் தொலையிலேயே”
“சீவும் பலகையிலே
சிங்கப்பூர் மெத்தையிலே நம்ம
சீதையும் ராமருமா
சேர்ந்து வாழலையே
படிக்கும் பலகையிலே
பஞ்சு நல்ல மெத்தையிலே
பாண்டியரும் தேவியரா நம்ம
பக்கத்துல வாழலையே”
“வளர்ந்த கல் மேல் நின்று
பார்த்து இருக்கையிலே
வலிக்கார எமன் வந்து
பாத குரடுக்க
பாசக் கயிறு போட்டு
பதறி இழுத்தானே உங்களைத்தான்
பார்வதியால் பக்கம் இருந்து
பதறிவிட் டேனே கண்ணீர
பொட்டுல ஆறு வகை
நான் வைக்கும் பூத்தமல்லி ஆயிரம்
புண்ணியரு இல்லா
பொட்டு வகை நான் இழந்தேன்
பூத்தமல்லி நான் இழந்தேன்”

கணவனோடு சேர்ந்து வாழும்போது தான் வாழ்ந்த வாழ்வின் சிறப்பு, கணவனுடைய தன்மை, அவன் குழந்தைகளையும் உறவினர்களையும் பொறுப்புடன் கவனித்துக்கொண்ட விதங்கள் என்பனவும் இந்த ஒப்பாரிப் பாடல்களில் இடம்பெறும். பொதுவாக கணவனை இழந்த பெண்கள் சமூகத்தில் எவ்வாறு வாழப் போகிறார்கள்? அவர்களுடைய வாழ்வு எவ்வாறு அமையும்? தனக்கு யார் யார் பாதுகாப்பாக இருப்பார்கள்? தன் பிள்ளைகளை எவ்வாறு வளர்த்துக் கரை சேர்ப்பார்கள்? போன்ற மனக் கசிவுகள் இந்த ஒப்பாரிப் பாடல்களின் ஊடாக வெளிப்பட்டு நிற்கும்.

தாய் இறந்தபின் பாடப்படும் ஒப்பாரிப் பாடல்கள் பின்வருமாறு பாடப்படுகின்றன.

“மட்டப்பனை ஓலை
என்னை பெத்த அம்மா
மயில் அடையும் பூஞ்சோலை
மயிலை வெரட்டினமோ
மயில் கூட்டைப் பிச்சோமோ
மயில் விடும் கண்ணீரு நம்ம
மாலிகையில் சுத்துதம்மா”

“குட்டைப் பனை ஓலை
என்ன பெத்த அம்மாவே
குயில் அடையும் பூஞ்சோலை
குயிலை விரட்டினோமோ
குயில் கூட்டைப் பிச்சோமோ அந்த
குயிலுவிடும் கண்ணீரு நம்ம
கோட்டை எல்லாம் சுத்துதம்மா”
“கொல்லிமலை ஓரம்
கோவை படர்ந்திருக்கும்
என்னை பெத்த அம்மாவே
கோவை கொடியறுக்க
கொலைகாரன் எங்கிருந்தான்
கோவை தழைக்காதோ
நீ பெத்த குழந்தையும் வாழாதோ”
“தெற்குக் கனவு கண்டேன்
தென்னை மரம் சாயக் கண்டேன்
திட்டத் தெரிஞ்சவங்க எனக்கொரு
தெரிஞ்ச வார்த்தை சொல்லலையே!”
“வடக்குக் கனவு கண்டேன்
வாழைமரம் சாயக் கண்டேன்
வடக்கே தெரிஞ்சவங்க
எனக்கு ஒரு வார்த்தை சொல்லலையே!”
“மருத சீமை விளக்கு
மயிலாட ஏத்தும் விளக்கு
எரிச்சி அரிச்சிட்டேனே
தங்கசர விளக்கு
தங்காள ஏத்தும் விளக்கு
எட்டி எரிச்சிட்டேனே”
“எனக்கு வந்த சாமிகளா
அந்தக் கனவுகளை நினைக்கையிலே
உங்களுக்கு வந்த மயிலாலா
என் மனத்துயர எண்ணலையே.....
ஈச்சம் குருத்திலயோ
என்ன பெத்த அம்மா நம்ம
இனமெல்லாம் காட்டிலேயோ
நீ பத்து ஈஸ்வரியை விட்டு
இனி பிரிந்து போகும் முன்னே நீ பெத்த
உன்னிலிருந்து புலம்புகிறாளே!”
“தண்ணி தவிக்குதுன்னு
என்ன பெத்த அம்மா நாங்க
தங்க மலை போயிருந்தோம் அங்கே
தண்ணீரு இல்லாம
தாழம்பூ மரம் ஆனோம்
தாசிக்கை பூவானோம்”
“வெந்து தவிக்குதுன்னு நாங்க
வெள்ளிமலை போயிருந்தோம் அங்கே
வெந்நீரு இல்லாமல்
வேங்கை மரமானோம்
வேசிகைப் பூவானோம்”

தாயைப் பிரிந்து வாழும் பிள்ளைகள், மிகப் பெரிய ஏக்கத்துக்கும் துயரத்துக்கும் உள்ளாவர். படிக்கச் செல்லவும், அவர்களுடைய வேலைகளைக் கவனிக்கவும் யாராலும் முடியாது. எல்லோரும் தொழிலுக்குச் செல்வதால், ஒருவரின் பிள்ளைகளை இன்னொருவர் பாதுகாத்து வளர்ப்பது என்பது கடினமாகும். அதேவேளை, வயது போன காலத்தில் குடும்பத்தைப் பாதுகாத்து, பேரப்பிள்ளைகளைக் கண்போல் காத்து, அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்து வைக்கின்ற பெரும் பொறுப்புகளைத் தாய்மார்கள் கொண்டிருப்பார்கள். எனவே, அவர்களுடைய இறப்பு ஒரு குடும்பத்தை அச்சாணி கழன்ற தேர்போல் ஆக்கிவிடும்.

தந்தை இறந்த பின்னர் பாடப்படும் ஒப்பாரிப் பாடல்கள் இவ்வாறு அமையும்.

“கத்தரிக்காய் பச்சை நிறம்
என்ன பெத்த அப்பா
கருணர் கை பூமாலை
காத்தடிச்சி மங்காமே - நீ பெத்த
மக்க கவலை வச்சி மங்குறோமே”
“வெள்ளரிக்காய் பச்சை நிறம்
என்ன பெத்த அப்பா
வீமர் கை பூமாலை
வெயில் அடிக்கு மங்காமே
நீ பெத்த மக்கள்
விசனம் வச்சி மங்குறமே”
“பொன்னும் விசுப் பலகே - நான்
போத்தும் தெய்வழகே - நீங்க
போயிருந்து சேதி சொன்னா
பொழுதே விடிஞ்சி வரும்
பொன்னும் சர்வ கிண்ணம் நீ
போய்க் குளிக்கும் தெப்பக்குளம்
போய் குளிச்சு வீடு வந்த
புண்ணியரே எங்கே போனே”

தந்தையினுடைய இறப்பைத் தாங்க முடியாமல் கதறி அழும் பிள்ளைகளின் மனக்குமுறல்களாக இந்த ஒப்பாரிப் பாடல்கள் அமைகின்றன. தந்தை குடும்பத்தின் அச்சாணி. அந்தத் தந்தை இறந்த பிறகு பிள்ளைகள் எந்த அளவுக்குத் துயரத்திற்கு உள்ளாகிறார்கள் என்பதை இப்பாடல்கள் பதிவு செய்கின்றன.

குடும்பத்தின் விலைமதிப்பற்ற செல்வமாகப் போற்றிக் கொண்டாடப்படும் ஒரு குழந்தை இறந்துபோகும் போது, அந்தப் பேரிழப்பானது அக்குடும்பத்தை மட்டுமன்றி, ஒட்டுமொத்த ஊரையே பெரும் சோகத்திலும் ஆறாத்துயரத்திலும் மூழ்கடித்துவிடுகிறது. அந்தக் குழந்தையை இழந்த பெற்றோர்களின் தவிப்பு

மிகவும் வேதனை தரக்கூடிய நிகழ்வாகும். எனவே, குழந்தை இறப்பு என்பது மிகப் பெரிய இழப்பாகக் கருதப்படும் நிலையில் பாடப்படும் இப்பாடல்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

“பூவாலை பாவை செய்து நம்ம
புள்ளை வச்சி கொஞ்சினாலும் இந்த
பூ பாவை பேசிடுமோ நம்ம
புள்ளை கலி தீந்திடுமோ”
“நடந்தேன் திருப்பதிக்கு
நாலு முகச் சந்நிதிக்கு
மண்ணாலே பாவை செய்தால்
மண்பாவை பேசிடுமோ”
“மரத்துக் கிளிகள் எல்லாம்
மைந்தர் வச்சி கொஞ்சுது ஐயா
மாதகைக்குப் பிஞ்சிறங்க நமக்கு
மாமாங்கம் சென்றிடுமோ...
மலராத பூவையின் கட்டிக் கரும்பே நான்
வடிவே மேலே வச்சிருந்தேன்
இன்னைக்கு
மலர்ந்து வரும் நாளையிலே உன்னை
மண்ணுக்கோ ஒப்படைச்சேன்”
“பூக்காத பூவையின் பொன்னுமணியே
நான்
பெட்டியிலே வச்சிருக்கேன்
இன்னைக்கு பூத்து வரும் நாளையிலே
ஒன்னை
பூமிக்கு ஒப்படைச்சேன்...”

பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு அந்திமக் கடன் செய்வதைப் போன்ற கொடுமை வேறு எதுவும் இல்லை. அது எவருக்கும் தாங்க முடியாத வேதனையைக் கொடுக்கின்ற ஒரு சந்தர்ப்பமாகும். பிள்ளைகளைப் பெற்று, அவர்களை வளர்த்து ஆளாக்கி, வரும் காலத்தில் தம்மைப் பாதுகாப்பார்கள் என்று கனவு கண்டு, அதனையே தம் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு பிள்ளைகளை வளர்க்கின்றபோது, அவர்களை இழப்பது என்பது பெற்றோர்களுக்கு மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அந்த வலியிலிருந்து மீள்வது என்பது அவ்வளவு இலகுவான விடயம் அல்ல.

“வாழைப் பருவமல்லோ
உனக்கு வயது மிக சொற்பம் அல்லோ
தாலிக்கொரு நாள் பார்க்க
காவுக்கு ஒரு நாள் ஆச்சு
கூரைக்கோர் நாள் பார்க்க
கொள்ளிக்கோர் நாளாச்சு
மஞ்சளால கோலமிட்டு உன்னை
மண வறைக்கும் விடும் வேளையிலே
கரியாலை கோலமிட்டு உன்னை
கட்டைக்கு அனுப்புகிறேன்”

இத்தகைய ஒப்பாரிப் பாடல்கள் இழப்புகளைச் சந்தித்த குடும்பத்தின் மன அழுத்தங்களைக் குறைக்க உதவுகின்றன. குடும்பத்திலே உறவுகளுக்கு இடையிலே ஏற்படக்கூடிய இறுக்கங்கள், அழுத்தங்கள் அனைத்தும் கரைந்துபோக இந்த ஒப்பாரிப் பாடல்கள் சிறந்த வடிகால்களாக அமைகின்றன. தமது உள்ளத்தில் கிடக்கும் கவலைகளைப் பாடலினூடு கொட்டித் தீர்க்கின்றபோது, உள்ளம் ஓரளவு தெளிவு பெற்று, சமாதானம் அடையக்கூடிய மனநிலையைப் பெற்றுவிடும். ஒரு விதத்தில் இவை உளவியல் சார்ந்த மருத்துவமாகவும் அமையக்கூடியவையாகத் திகழ்கின்றன.

எமது முன்னோர்கள் இந்த ஒப்பாரிப் பாடல்கள் மூலமாக, மரணத்தின் ஆழமான துயரத்தை எதிர்கொள்வதற்கும் அதனை ஏற்கும் மனப்பக்குவத்துடனும் மன அமைதியுடனும் கடந்து செல்வதற்கும் தேவையான வழியினை இச்சமூகத்திற்கு வழங்கியுள்ளனர். நாட்டுப்புறப் பண்பாட்டின் மிக முக்கியமான வரலாற்றுப் பதிவுகளாகத் திகழும் இப்பாடல்கள், தவறவிடாமல் பதிவேடு செய்யப்பட வேண்டியவை ஆகும். ஒரு சமூகத்தின் இயக்கமும் அசைவும் அதன் வாழ்வியல் இருப்பை அடிப்படையாகக் கொண்டவை. அந்த இருப்பில் மரணம் என்பது பிரிக்க முடியாத, தவிர்க்க இயலாத ஓர் அங்கமாக மாறும் போது, மனிதர்களின் மனக் குமுறல்களும் ஆசைகளும் ஒரு வடிகால் மூலம் ஆறுதலடைய இத்தகைய நாட்டுப்புறப் பாடல்கள் பெருமளவில் துணைபுரிகின்றன. ஆகவே, இத்தகைய அரிய கலை வடிவங்களை முறையாகப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பது நமது மிக முக்கிய வரலாற்றுக் கடமையாகும்.

சான்றாதாரங்கள்

1. வேலுப்பிள்ளை, சி.வி. மலைநாட்டு மக்கள் பாடல்கள். மகாவலி பிரசுரம், கொழும்பு.

2. சிவலிங்கம், மு. (2007). மலையகத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள். ரெக்னோ பிரிண்டர்ஸ்.

3. சாரல் நாடன். (1993). மலையக வாய்மொழி இலக்கியம். சவுத் ஆசியன் புக்ஸ், சென்னை.

4. கந்தையா, மு.சி. (2002). சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள். பொன்னுலகம் புத்தக நிலையம், திருப்பூர்.

5. காதர், பி.ஏ. இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம். சமூக இயல் பதிப்பகம், லண்டன்.

6. சிவலிங்க ராசா, எஸ். (2023). யாழ்ப்பாணத்து வாழ்வியல் கோலங்கள். குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

7. லூர்து, தே. (2008). நாட்டார் வழக்காற்றியல்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பெரும்பாலும் வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலைச் சூழலுக்குட்பட்ட பகுதிகளாகும். இப்பகுதிகளில் உள்ள ஆற்றுப்படுகைகள் (River Basins) நீர் வளங்களின் முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. இவை குடிநீர், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தொழில் மற்றும் சூழலியல் சமநிலைக்கான ஆதாரங்களாகவும் உள்ளன. முரண்பாடுகள், நிலவளப் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், காடழிப்பு, கட்டுப்பாடற்ற மணல் அகழ்வு, நிலத்தடி நீரின் அதிகப்படியான பயன்பாடு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை இவ்வாற்றுப் படுகைகளின் நீரியல் சமநிலையைப் பாதித்துள்ளன. எனவே, இவற்றின் தற்போதைய நிலையை அறிவியல் மற்றும் தரவுசார்ந்த முறையில் ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் கூடிய திறம்பட்ட பயன்பாட்டிற்கான வழிமுறைகளை முன்வைப்பது கட்டாயமானதாகும். 'வடக்கு – கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் நீர்வள இருப்பும் பயன்பாட்டிற்கான ஒருங்கிணைந்த மூலோபாயங்களும்' எனும் இக்கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து ஆற்றுப்படுகைகளையும் ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் நீர் வளத்தின் திறம்பட்ட பயன்பாட்டையும் சமநிலைப்படுத்தும் வழிமுறைகளை முன்வைக்கும். இது நிலைத்த வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் கொள்கை அடிப்படையிலான வழிகாட்டி ஆவணமாகவும் அமையும்.

வடக்கு – கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் அடையாளமும் புவியியல் சுயவிவரமும்

பகுதி 3

சுப்ரமணியம் சிவகுமார்

கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.



2.2 வட மாகாணத்தின் மாகாணத்துக்கு உள்ளான ஆற்றுப்படுகைகள் (Provincial River Basins of Northern Province)

மொத்தத்தில், வட மாகாணத்தில் 62 பிரதான மற்றும் நடுத்தர அளவிலான பாசனத் திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன. இத்திட்டங்கள் விவசாய உற்பத்தி, நீர்வளப் பாதுகாப்பு, வெள்ள மற்றும் வறட்சி முகாமைத்துவம், நிலத்தடி நீர்வளப் பேணல் மற்றும் கிராமப்புறச் சமூகங்களின் பொருளாதார முன்னேற்றம் ஆகிய துறைகளில் இன்றியமையாத பங்கினை வகித்து வருகின்றன.

வட மாகாணத்தில் நீர்வள முகாமைத்துவம் மற்றும் விவசாய உற்பத்தியில் முக்கிய பங்காற்றும் ஒன்பது பிரதான மற்றும் நடுத்தர அளவிலான பாசனத் திட்டங்கள் மத்திய அரசின் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் ஐந்து முக்கிய நீர்த்தேக்கங்கள் அடங்கியுள்ளன. இத்திட்டங்களின் வாயிலாக மொத்தம் 18,448 ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று, பிராந்தியத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கின்றன.

வட மாகாணத்தில் மாகாணத்துக்கு உள்ளான மொத்தம் 25 ஆறுகள் காணப்படுகின்றன. இவ்வாறுகள் அனைத்தும் நிலையான வருடாந்த நீரோட்டத்தைக் கொண்டவை அல்ல; மாறாக, பருவமழைக் காலங்களில் மட்டுமே நீரோட்டம் காணப்படும் நிலையற்ற அல்லது பருவகால (Nonperennial) ஆறுகளாக விளங்குகின்றன. இதனால் மழைநீர் சேமிப்பு, நீர்த்தேக்க முகாமைத்துவம் மற்றும் நிலத்தடி நீர் மீள்நிரப்பு ஆகியவை இப்பிராந்தியத்தின் நீர்வள முகாமைத்துவத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

இதனுடன், வட மாகாண சபையின் கீழ் இயங்கும் வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிர்வாகப் பொறுப்பில் ஒன்பது பிரதான மற்றும் நடுத்தர அளவிலான பாசனத் திட்டங்கள் காணப்படுகின்றன. இத்திட்டங்களின் கீழ் மொத்தமாக 28,430 ஹெக்டேர் விவசாய நிலங்களுக்கு பாசன வசதிகள் வழங்கப்படுகின்றன. மேலும், இத்திட்டங்களின் நேரடிப் பயனாளர்களாக 28,459 விவசாயக் குடும்பங்கள் உள்ளன. இதன் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கும், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வள மேம்பாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த யாழ் நீரேரித் (Jaffna Lagoon) திட்டம், ஆனையிறவு நீரேரித் திட்டம், உப்பாறு நீரேரித் திட்டம் மற்றும் வடமராட்சி நீரேரித் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இத்திட்டங்கள் அனைத்தும் வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, உவர்நீர் ஊடுருவலைக் கட்டுப்படுத்தி நன்னீர் வளங்களைப் பாதுகாப்பதிலும், நிலத்தடி நீர்வளத்தைப் பேணுவதிலும் இத்திட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

வழுக்கையாறு வடிகால் (Drainage) திட்டம் வட மாகாணத்தின் முக்கியமான வடிகால் வசதித் திட்டங்களில் ஒன்றாகும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 810 ஹெக்டேர் விவசாய நிலங்களுக்கு திறம்பட வடிகால் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் வெள்ளப்பெருக்கு மற்றும் நீர்தேக்கத்தால் ஏற்படும் பயிர்ச் சேதங்கள் குறைக்கப்பட்டு, விவசாய உற்பத்தி நிலைத்தன்மை மேம்படுத்தப்படுகிறது.

மேலும், வட மாகாணத்தில் தற்போது 54 உவர்நீர் தவிர்ப்பு (Salinity Exclusion) திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன. இத்திட்டங்கள் சுமார் 6,686 ஹெக்டேர் பரப்பளவிலான விவசாய நிலங்களை கடலோர உவர்நீரின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கின்றன. இத்தகைய நடவடிக்கைகள் நில வளத்தின் உற்பத்தித் திறனைப் பேணுவதுடன், நிலையான விவசாய வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைகின்றன.

மேலும், வட மாகாணத்தில் 2,744 சிறிய பாசனத்திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன. இவை விவசாய அபிவிருத்தித் திணைக்களம் (Agrarian Development Department) மூலம் பராமரிக்கப்படுகின்றன. இத்திட்டங்கள் மூலம் 31,539 ஹெக்டேர் நிலத்திற்கு பாசன நீர் வழங்கப்படுகிறது. இதன் பயனாளர்களாக 50,000க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் உள்ளன.

Village tanks and related data in the Northern region

District	Number of tanks & Ponds	Working tanks & Ponds	Abandoned tanks & Ponds	Total Capacity (ac.ft)	Total Irrigable Area (ac)	Total Farm Families
Jaffna	1,034	382	652	28,478	22,773	23,666
Kilinochchi	561	407	154	51,948	3,757	2,403
Mullaitivu	361	306	55	39,903	18,143	5,980
Vavuniya	602	565	37	171,632	34,208	9,675
Mannar	472	257	215	48,393	13,875	23,126
Total	3,030	1,917	1,113	340,354	92,756	64,850

Source: Village Irrigation Survey 2019, Department of Agrarian Development

River basins in Northern Region

Basin no.	Basin Name	Catchment area sq.km	Number of Major Medium Tanks	Village Tanks	Village Anicuts
67	Yan Oya	1,529.00	1	746	7
68	Mee Oya	158.00	1	55	0
69	Ma Oya	1,063.00	1	378	0
70	Churiyan Aru	88.00	0	12	0
71	Chavar Aru	58.00	0	19	0
72	Paladi Aru	59.00	0	10	0
73	Mannal Aru (Munadal Aru)	241.00	1	92	3
74	Kodallikallu Aru	94.00	2	33	0
75	Per Aru	479.00	1	154	1
76	Kalmaduru Aru (Pali Aru)	107.00	1	11	0
77	Maruthapillay Aru	60.00	1	9	0
78	Therravill Aru	111.00	1	17	0
79	Piramanthal Aru	91.00	2	10	0
80	Nethali Aru	124.00	1	16	0
81	Kanakarayan Aru	905.00	5	200	0
82	Kalavalappu Aru	64.00	1	24	0
83	Akkarayan Aru	260.00	3	74	0
84	Mandagal Aru	336.00	6	62	0
85	Pallavarayan Kadu Aru	179.00	3	34	0
86	Pali Aru	474.00	4	124	0
87	Chappai Aru	75.00	0	9	0
88	Paranki Aru (Menankaddy)	875.00	12	386	2
89	Nay Aru	537.00	9	112	7
90	Malwathu Oya (Aruvi Aru)	3,183.00	8	1,731	7
91	Kal Aru	277.00	2	6	0
92	Moderagama Aru	1,142.00	1	449	1
	Total	12,569.00	66	4,773	28

Source: "Ancient Irrigation Works of Ceylon" published in 1934

Note: River basins 67, 68, 69 and 90 are inter provincial basins.

கூடுதலாக, யாழ்ப்பாணக் குடாநாட்டின் மற்றும் மன்னார் மாவட்டத்தின் ஒரு பகுதியின் கீழ் உள்ள சுண்ணாம்புப் பாறை அடுக்குகளுக்குள் அமைந்துள்ள நிலத்தடி நீர்த்தொட்டிகள் (*Aquifers*), வட மாகாணத்தின் நீர்வளச் சூழலில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை குடிநீர் மற்றும் வேளாண்மைக்கான நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கிய ஆதாரமாக உள்ளன.

சிறிய பாசன நீர்த்தேக்கங்களின் முழுமையான பயன்பாடு

இலங்கையின் பாரம்பரிய நீர்ப்பாசன நாகரிகத்தின் ஒரு சிறப்பான கூறாக சிறிய பாசன நீர்த்தேக்கங்கள் (*Village Tanks*) கருதப்படுகின்றன. பெரும்பாலும் வறண்ட மண்டலங்களில் அமைந்துள்ள இத்தேக்கங்கள் 10,000க்கும் மேற்பட்ட அளவில் நாட்டில் செயலில் உள்ளன என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவை பெரும்பாலும் விவசாய சமூகங்களால் (*Farmer Communities*) நிர்வகிக்கப்படுகின்றன. சிறிய பாசன நீர்த்தேக்கங்களின் பலதரப்பட்ட பயன்கள்: பாசன நீர் வழங்கல், வீட்டு உபயோக நீர்த் தேவைகளுக்கான ஆதாரம், நிலத்தடிநீரை (*Groundwater*) மீள்நிரப்பும் (*Recharge*) செயல்பாடு. இவை அனைத்தும் இந்தத் திட்டங்களின் முக்கிய பண்புகளாகும். சமீபத்திய ஆய்வுகள், சிறிய பாசன நீர்த்தேக்கங்களை மேம்படுத்தியதன் மூலம் நிலத்தடி நீர் மட்டங்கள் நீண்ட காலம் உயர் நிலையில் பராமரிக்கப்படுவதைக் காட்டுகின்றன. இது நீர்வள நிர்வாகத்தில் சிறிய பாசன நீர்த்தேக்கங்களின் பங்கு மிக முக்கியமானதென்பதை உறுதிப்படுத்துகிறது.

மேலும், சிறிய பாசன நீர்த்தேக்கங்களை ஒருங்கிணைக்கும் முன், அவற்றின் பாரம்பரியப் பங்களிப்புகள், தற்போதைய சமூகபொருளாதாரச் சூழ்நிலைகள் ஆகியவற்றை ஆழமாக ஆய்வு செய்வது காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரழிவுகளைச் சமாளிப்பதற்கு மிகவும் அவசியமானது.

இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தெளிவாக, அனைத்து மாகாண அளவிலான பாசனத் திட்டங்களும் மாகாண சபைகளின் கீழ் வரவேண்டும் என்று கூறுகிறது. எனினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மட்டும் சிறிய அளவிலான பாசனத் திட்டங்கள் மத்திய அரசின் கீழ் செயல்படும் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தால் (*Department of Agrarian Development*) பராமரிக்கப்படுகின்றன. இது நிர்வாகத்தில் உள்ள சவால்களை வெளிப்படுத்துகிறது.

வட மாகாணத்தில் காணப்படும் மாகாணத்துக்கு உள்ளான முக்கிய ஆற்றுப்படுகைகள்

ஆற்றுப்படுகை (*River Basin*) என்பது ஒரு குறிப்பிட்ட ஆறு அல்லது நீர்வழிப்பாதையை நோக்கி அனைத்து மேற்பரப்பு நீர்களும் வடிந்துசெல்லும் இயற்கை நீரியல் அலகாகும். உலகளாவிய ரீதியில் நீர்வளத் திட்டமிடலுக்கான அடிப்படை அலகாக ஆற்றுப்படுகைகள் கருதப்படுகின்றன. இலங்கையில் காணப்படும் முக்கிய நீர்வள அமைப்புகளில் வடக்கு மாகாணங்களின் ஆற்றுப்படுகைகள் தனித்துவமான முக்கியத்துவம் பெற்றுள்ளன.

வட மாகாணம் இலங்கையின் மிகவும் வறண்ட பிரதேசங்களில் ஒன்றாக இருந்தாலும், அதன் நீரியல் அமைப்பு பல ஆறுகள், குளங்கள், நீர்த்தேக்கங்கள், சதுப்புநிலங்கள் மற்றும் கடலோர நீர்நிலைகளால் ஆதரிக்கப்படுகிறது. குறிப்பாக வன்னிப் பிரதேசம் (வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்கள்) பல ஆற்றுப்படுகைகளை

(River Basins) கொண்டுள்ளது. இவ்வாற்றுப்படுகைகள் வட மாகாணத்தின் விவசாயம், குடிநீர் வழங்கல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உயிரியல் பல்வகைமை மற்றும் காலநிலைத் தாங்குதிறன் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

வட மாகாணத்தில் மாகாணத்துக்கு உள்ளான மொத்தம் 25 ஆறுகள் காணப்படுகின்றன. அவற்றில் 12 முக்கிய மாகாணத்துக்கு உள்ளான ஆற்றுப்படுகைகள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த நீர்ப்பிடிப்புப் பரப்பளவு வட மாகாணத்தின் நிலப்பரப்பில் குறிப்பிடத்தக்க பகுதியை உள்ளடக்கியுள்ளது. இவை:

1. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் விவசாயத்திற்கு அடிப்படையானவை.

2. 2,000க்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தரக் குளங்களின் நீர்வழங்கல் அமைப்புடன் தொடர்புடையவை.

3. நிலத்தடி நீர் மீள்நிரப்பு, உயிரியல் பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத் தழுவலுக்குப் பெரும் பங்களிப்புச் செய்கின்றன.

இல.	ஆற்றுப்படுகை	மாவட்டம்
1	கனகராயன் ஆறு (Kanakarayan Aru)	வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு
2	பறங்கி ஆறு (Parangi Aru)	வவுனியா, மன்னார்
3	பாலி ஆறு (Pali Aru)	மன்னார்
4	நாயாறு (Nay Aru)	முல்லைத்தீவு
5	பேராறு (Per Aru)	முல்லைத்தீவு
6	நெத்தலி ஆறு (Netheli Aru)	முல்லைத்தீவு
7	கோடலிக்கல்லு ஆறு (Kodalikkallu Aru)	முல்லைத்தீவு
8	தேராவில் ஆறு (Theravil Aru)	கிளிநொச்சி – முல்லைத்தீவு
9	பல்லவராயன்கட்டு ஆறு (Pallavarayankaddu Aru)	கிளிநொச்சி
10	அக்கராயன் ஆறு (Akkarayan Aru)	கிளிநொச்சி
11	பிரமந்தன் ஆறு (Piramenthal Aru)	முல்லைத்தீவு
12	மண்டக்கல் ஆறு (Mandekal Aru) மற்றும் சிறிய கடலோர வடிநிலைகள்	மன்னார்

வட மாகாணத்தின் ஆற்றுப்படுகைகள் வெறும் நீர்வள அமைப்புகள் மட்டுமல்ல; அவை வடக்கின் விவசாயம், உணவுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, கிராமிய வாழ்வாதாரம் மற்றும் பிராந்தியப் பொருளாதார வளர்ச்சியின் அடித்தளமாக விளங்குகின்றன. குறிப்பாக கனகராயன் ஆறு, பறங்கி ஆறு மற்றும் நாயாறு போன்ற ஆற்றுப்படுகைகள் வட இலங்கையின் சமூகபொருளாதார முன்னேற்றத்தில் மையப் பங்காற்றுகின்றன. இக்கட்டுரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் முக்கிய ஆற்றுப்படுகைகள், அவற்றின் நீரியல் பண்புகள், பொருளாதாரப் பங்களிப்புகள், சுற்றுச்சூழல் முக்கியத்துவம், எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி வாய்ப்புகளை தொழில்நுட்ப நோக்கில் ஆராய்கின்றது. இவ்வாறான ஆற்றுப்படுகைகள் வட மாகாணத்தின் நீர்ப் பாதுகாப்புக்கும் எதிர்கால அபிவிருத்திக்கும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வளங்களாகும். இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியின் உணவுப் பாதுகாப்பு, நீர்ப்பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை இவை உறுதிப்படுத்துகின்றன. எனவே, எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் 'ஆற்றுப்படுகை அடிப்படையிலான நீர்வள முகாமைத்துவம்' என்ற கொள்கையை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்படுவது காலத்தின் தேவையாகும்.


ஆற்றுப்படுகைகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு முதலில் வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு ஆற்றுப்படுகைகள் பற்றிய விவரங்களும் பின்பு கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆற்றுப்படுகைகளின் விவரங்களும் தொடர்ச்சியாகத் தரப்பட்டுள்ளன.

2.2.1 கனகராயன் ஆறு ஆற்றுப்படுகை

கனகராயன் ஆறு வட மாகாணத்தின் முக்கியமான உள்நாட்டு ஆற்றுப்படுகைகளில் ஒன்றாகும். இவ்வாறு வவுனியா மாவட்டத்தின் ஓமந்தைப் பிரதேசத்திற்கு அண்மையில் தோன்றி, வடக்கு நோக்கிப் பாய்ந்து வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் வழியாகச் செல்கிறது. இறுதியில் சுண்டிக்குளம் ஏரியுடன் இணைந்து அதன் நீர்வள அமைப்பை வளப்படுத்துகிறது.

கனகராயன் ஆற்றின் மொத்த நீளம் சுமார் 86 கிலோமீற்றராகக் காணப்படுகின்றது. இதன் ஆற்றுப்படுகைப் பரப்பளவு 900 சதுர கிலோமீற்றருக்கும் அதிகமாக விரிவடைந்துள்ளது. பருவமழைக் காலங்களில் கணிசமான நீரோட்டத்தைக் கொண்ட இவ்வாறு, வட மாகாணத்தின் மழைநீர்ச் சேகரிப்பு மற்றும் நீர்வள முகாமைத்துவத்தில் முக்கிய

பங்கு வகிக்கிறது. கனகராயன் ஆறு, வட மாகாணத்தின் மிகப்பெரிய நீர்த்தேக்கங்களில் ஒன்றான இரணைமடு நீர்த்தேக்கத்திற்கான பிரதான நீர்வழங்கல் ஆறாக விளங்குகிறது. வடக்கு மாகாணத்தின் விவசாய உற்பத்திக்கு இன்றியமையாத நீர்வள ஆதாரமாக இது செயல்படுவதால், இரணைமடு நீர்த்தேக்கத்தின் நீர்நிலைத்தன்மையைப் பேணுவதில் கனகராயன் ஆறு மிக முக்கிய பங்காற்றுகிறது.



குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் நெற்செய்கை மற்றும் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான பாசன நீரின் முதன்மை ஆதாரமாக இவ்வாறு திகழ்கின்றது. இதனால் கனகராயன் ஆறு, கிளிநொச்சி மாவட்ட விவசாயத்தின் 'உயிர்நாடி' எனப் பரவலாகக் கருதப்படுகிறது.

கனகராயன் ஆற்றுப்படுகை பல்வேறு இயற்கை வளங்களையும் உயிரியல் அமைப்புகளையும் தாங்கி நிற்கும் ஒரு முக்கிய சூழலியல் மண்டலமாகும். மழைக்காலங்களில் ஆற்றின் நீரோட்டம் நிலத்தடி நீர் மீள்நிரப்பை ஊக்குவிப்பதுடன், சுற்றியுள்ள ஈரநிலப் பகுதிகளின் நிலைத்தன்மையையும் பாதுகாக்கிறது. மேலும், இப்பகுதியில் காணப்படும் தாவர மற்றும் விலங்கு வளங்களின் வாழ்விடங்களைப் பேணுவதிலும் இவ்வாறு முக்கிய பங்களிப்பை வழங்குகிறது.

மொத்தத்தில், கனகராயன் ஆறு வட மாகாணத்தின் நீர்வள அபிவிருத்தி, பாசன முகாமைத்துவம், விவசாய



கனகராயன் ஆறு

Image Source - jaffnazone.com

உற்பத்தி, நிலத்தடி நீர் பேணல் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலை ஆகிய துறைகளில் முக்கிய பங்காற்றும் ஆற்றுப்படுகையாகும்.

குறிப்பாக இரணைமடு நீர்த்தேக்கத்திற்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயப் பொருளாதாரத்திற்கும் இவ்வாறு வழங்கும் பங்களிப்பு அளப்பரியது என்பதால், வட மாகாணத்தின் மிக முக்கியமான ஆற்றுப்படுகைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

2.2.1.1 இரணைமடு நீர்த்தேக்கம்

2.2.1.1.1 அறிமுகம்

இது இலங்கையின் மிகப்பெரிய நீர்த்தேக்கங்களில் ஒன்றாகக் கருதப்படுவதுடன், பரப்பளவு மற்றும் கொள்ளளவின் அடிப்படையில் நாட்டின் ஏழாவது பெரிய நீர்த்தேக்கமாகவும் விளங்குகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் இந்நீர்த்தேக்கம், வட மாகாணத்தின் உணவுப் பாதுகாப்பு மற்றும் நீர்வள முகாமைத்துவத்தில் இன்றியமையாத பங்காற்றி வருகிறது.

2.2.1.1.2 வரலாற்றுப் பின்னணி

'இரணைமடு' என்ற பெயர், பண்டைய காலங்களில் கனகராயன் ஆற்றின் குறுக்கே அமைந்திருந்த இரண்டு தனித்தனி இயற்கை நீர்த்தேக்கங்கள் அல்லது 'மடுக்கள்' என்பதிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது. 'மடு' என்பது நீர் தேங்கும் இடம் அல்லது நீர்த்தேக்கத்தைக் குறிக்கும் சொல்லாகும். இரண்டு மடுக்கள் ஒன்றிணைந்த பகுதி என்பதால் 'இரணைமடு' என்ற பெயர் உருவானதாக உள்ளூர் மரபுவழித் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இரணைமடுப் பகுதி வெறும் நீர்த்தேக்கப் பிரதேசமாக மட்டுமல்லாமல், வட இலங்கையின் மிக முக்கியமான வரலாற்று மற்றும் தொல்லியல் மரபுரிமைப் பகுதிகளில்

ஒன்றாகவும் திகழ்கிறது. கனகராயன் ஆற்றின் படுகையை மையமாகக் கொண்டு உருவான இந்தப் பகுதி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனித வாழ்வும் நாகரிக வளர்ச்சியும் நடைபெற்ற இடமாகக் கருதப்படுகிறது.

தொல்லியல் ஆய்வுகள் மற்றும் மேற்பரப்பு ஆய்வுகளின் மூலம், இரணைமடு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதக் குடியிருப்புகளின் சுவடுகள் கண்டறியப்பட்டுள்ளன. கற்கால மற்றும் ஆரம்ப இரும்புக்கால மக்களின் வாழ்க்கை முறையைச் சுட்டிக்காட்டும் மண்பாண்டத் துண்டுகள், இரும்புப் பயன்பாட்டுச் சான்றுகள், இடுகாடுகள் மற்றும் குடியிருப்பு எச்சங்கள் போன்றவை இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி, கனகராயன் ஆற்றுப்படுகை வட இலங்கையில் பண்டைய நீர்ப்பாசன நாகரிகம் உருவாகிய முக்கிய மையங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம். அனுராதபுர இராச்சிய காலத்தில் வடபகுதியில் உருவாக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நீர்த்தேக்கங்களின் வலையமைப்புடன் இப்பகுதி தொடர்புபட்டிருந்ததாகக் கருதப்படுகிறது. இப்பகுதியில் காணப்படும் பல பழமையான குளங்கள், நீர்வழங்கல் கட்டமைப்புகள் மற்றும் குடியிருப்பு எச்சங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

2.2.1.1.3 திட்டத்தின் தோற்றமும் திட்டமிடலும்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வடக்கின் வறண்ட பிரதேசங்களில் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1885 ஆம் ஆண்டு கனடியபிரித்தானிய நிர்வாக அதிகாரியான சேர் ஹென்றி வார்ட் (Sir Henry Ward) மற்றும் அக்கால நிர்வாக அதிகாரிகள் இரணைமடுப் பகுதியில் பெரிய நீர்த்தேக்கமொன்றை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தனர். அதனைத் தொடர்ந்து, 1866 ஆம் ஆண்டு பிரித்தானிய நீர்ப்பாசனப் பொறியியலாளரும் தொல்பொருள் ஆர்வலருமான ஹென்றி பார்க்கர் (Henry Parker), இரணைமடு நீர்த்தேக்கத்திற்கான ஆரம்பகால தொழில்நுட்பத் திட்டத்தை உருவாக்கினார். அவரது திட்ட அறிக்கையில், இரணைமடு நீர்த்தேக்கத்தின் கீழ் சுமார் 20,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும் என மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும், திட்டம் பல ஆண்டுகள் வரைபட மற்றும் ஆய்வு நிலைகளிலேயே காணப்பட்டது. 1900 ஆம் ஆண்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆர். பிரவுன் (R. Brown) இப்பகுதிக்குச் சென்று விரிவான கள ஆய்வுகளை மேற்கொண்டார். அப்போது கரைச்சிப் பகுதியில் வாழ்ந்த உள்ளூர் மக்களின் உதவியுடன் இரணைமடுப் படுகைப் பிரதேசத்தை முழுமையாக ஆய்வு செய்து, நீர்த்தேக்கக் கட்டுமானத்திற்கான நடைமுறைத் திட்டங்களை உருவாக்கினார்.

2.2.1.1.4 கட்டுமான வரலாறு

இரணைமடு நீர்த்தேக்கத்தின் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு பெருமளவிலான தொழிலாளர் மற்றும் குடியேற்ற வசதிகள் தேவைப்பட்டன. இதற்காக முதலில் புதிய குடியிருப்புகள் உருவாக்கப்பட்டன. தற்போது கிளிநொச்சி நகரமாக வளர்ச்சியடைந்துள்ள பகுதிகளில் ஆரம்பகாலக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. 1902ஆம் ஆண்டில் முதன்முதலாக இரணைமடு நீர்த்தேக்கத்தின் கட்டுமானப் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு முன்பே இந்தப் பகுதி பண்டைய குடியேற்றங்களும் விவசாயச் சமூகங்களும் வாழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிலப்பரப்பாக இருந்தது. 1912இல் தொடங்கி 1922இல் கட்டி முடிக்கப்பட்ட இந்த நீர்த்தேக்கம் அன்று பிரிட்டிஷ் ஆட்சியில் இலங்கை அரசியலில் செல்வாக்காக இருந்த சேர். பொன். இராமநாதனின் பரிந்துரையில், அவருடைய 1000 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச் செய்கைக்காகக் கட்டப்பட்டது. இந்த நீர்த்தேக்கத்தைக் கட்டும் பணியில் இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட தொழிலாளர்களே பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். 1920களில் அது படிப்படியாக விரிவாக்கப்பட்ட பின்னர், 1930களில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களின் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்தும் மற்றும் வட மாகாணத்தின் பிற பகுதிகளிலிருந்தும் விவசாயக் குடும்பங்கள் இங்கு குடியேற்றப்பட்டன. இதன் மூலம் இரணைமடு வட இலங்கையின் முக்கிய விவசாய உற்பத்தி மையமாக வளர்ச்சி பெற்றது. இப்போதுள்ள ஒரு இலட்சத்து அறுபது ஆயிரம் ஹெக்டேர் நீர்ப்பரப்பளவைப் பெற்றது. இந்தக் குளத்தில் இருந்தே கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்றில் இரண்டு பகுதியில் நெற்பயிரிடல் மேற்கொள்ளப்படுகிறது. வட மாகாண மக்களின் உழைப்பும் அர்ப்பணிப்பும் இணைந்த ஒரு மகத்தான நீர்ப்பாசனச் சாதனையாக இரணைமடு உருவாகியது.

2.2.1.1.5 வளர்ச்சி மற்றும் கொள்ளளவு அதிகரிப்பு

1920 ஆம் ஆண்டில் சுமார் 19 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் இரணைமடு நீர்த்தேக்கத்தின் முதல் கட்டப் பணிகள் நிறைவுபெற்றன. அக்காலத்தில் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 44,000 ஏக்கர் அடியாகவும், அதிகபட்ச நீர்மட்ட ஆழம் 22

அடியாகவும் காணப்பட்டது. 1954 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 82,000 ஏக்கர் அடியாக உயர்த்தப்பட்டது. இதன் விளைவாக நீர்மட்ட ஆழம் 30 அடியாக அதிகரிக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மூன்றாம் கட்டக் கொள்ளளவு அதிகரிப்புப் பணிகள் 1977 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன. இதன்போது நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 106,500 ஏக்கர் அடியாக உயர்த்தப்பட்டதுடன், நீர்மட்ட ஆழம் 34 அடியாக அதிகரிக்கப்பட்டது. தற்போதுள்ள வான்கதவுகள் (Spill Gates) மற்றும் அணை அமைப்புகள் பெரும்பாலும் இந்தக் காலகட்டத்திலேயே நிறுவப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் நிறைவுபெற்ற அண்மைய மேம்பாட்டின் மூலம் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 131 MCM இலிருந்து 148 MCM ஆக உயர்த்தப்பட்டது. இதன் மூலம் சுமார் 17 மில்லியன் கன மீட்டர் கூடுதல் நீரைச் சேமிக்கும் வசதி உருவாக்கப்பட்டது. நான்கு முக்கிய கட்டங்களில் இடம்பெற்ற கொள்ளளவு அதிகரிப்பின் வரலாற்று விவரங்கள் சாராம்சமாக கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது

ஆண்டு	முழு நீர்மட்டம்	கொள்ளளவு MCM கொள்ளளவு Ac.ft
1920–1921 (ஆரம்பம்)	26 அடி	49 39,725
1951–1952	30 அடி	88 71,342
1954–1956	32 அடி	101 81,882
1975–1977	34 அடி	131 106,203
2015–2018	36 அடி	148 119,985

Catchment Area(sq. miles)	227	
Capacity, Gross(ac.ft)	120,650	
Capacity, Net(ac.ft)	120,650	
FSL(ft. above MSL)	103	
HFL(ft. above MSL)	108.57	
Full. Supply Depth(ft.)	36	
BUND		
Length(ft.)	9,450	
BTL(ft. above MSL)	114	
TOP. Width(ft.)	18	
Max. height(ft.)	47	
Free Board(ft.)	5.43	
Side Slope, U/S	Up to berm 1 on 3,	
Side Slope, D/S	1 on 2.5	
D/S Berm Road (Earth) 6.0m	7,875 ft.	
D/S Toe Road (Gravel) 4.0m	6,890 ft.	
Spill		
Spill Location	LB	RB
Type	CO + Ogee	Breaching Section
Length(ft.)	Effective302 With	1575
Crest Level(ft. above MSL)	93 Ra. Gate 8 no	108.57
HFL(ft. above MSL)	108.57	108.57
Radial Gates	8 Nos 20 x 11 2 Nos 15 x 08 4 Nos 20 x 10	
Sluice		
Sluice Location	LB at 0.0CH	RB at 79.25 CHS
Type	Con. Tower	Con. Tower
Size of opening	2/5'-0" x 4'-0"	2/4'-0" x 2'-8"
Sill level(ft. above MSL)	67	70
Head of water(ft.)	36	33
Length of Barrels (ft.)	128	162
No. of Barrels	Tunnel 2/5' x 4'-0"	Tunnel 2/4' x 2'-8"
Maximum Discharge	2/544.75	2/279.75
CHANNEL	LB	RB
Length of main cannel (ft.)	63,938	37,662
Length of Br. cannel(ft.)	-	45,200
Length of F. Canal(ft.)	225,622	178,545
Length of D. Canal(ft.)	343,255	53,378
AREA		
	Gravity Irrigation	Lift Irrigation

2.2.1.1.6 இரணைமடுக் குளத்தின் தொழில்நுட்ப மற்றும் பாசன முக்கியத்துவம்

இரணைமடு நீர்த்தேக்கத்தின் நீரேந்துப் பரப்பளவு சுமார் 227 சதுர மைல்கள் ஆகும். இந்நீர்த்தேக்கம் பிரதானமாக கனகராயன் ஆற்றில் இருந்து நீரைப் பெறுகிறது. நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்பு பகுதியின் உச்ச நீளம் சுமார் 9 கிலோமீற்றராகவும், பிரதான அணையின் நீளம் சுமார் 2 கிலோமீற்றராகவும் அமைந்துள்ளது. இந்நீர்த்தேக்கத்தின் மூலம் சுமார் 20,882 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு பாசன வசதிகள் வழங்கப்படுகின்றன. குளத்தின் முக்கிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

இடதுகரை, வலதுகரை என இரு வாய்க்கால்களைக் கொண்ட இரணைமடுவின் இடதுகரையில் ஊட்டக்குளமான கிளிநொச்சிக்குளம் உள்ளது. இதிலிருந்துதான் கிளிநொச்சி நகருக்கான குடிநீர் வழங்கல் முன்னர் நடைபெற்றது. இப்பொழுது மீளவும் குடிநீர் வழங்கலுக்கான ஏற்பாடு நடக்கின்றது. வலதுகரையில் ஊரியான்குளம் அதன் ஊட்டக்குளமாக உள்ளது. மொத்தம் 32.5 மைல்கள் நீள வாய்க்கால்கள் மூலம் இரணைமடு கிளிநொச்சியை வளப்படுத்துகின்றது.

இரணைமடு மூலமே கிளிநொச்சியில் பெருமளவில் குடியேற்றங்கள் நடந்தன. திருவையாறு மேட்டுநீர் ஏற்றுப்பாசனத் திட்டத்தின் மூலம் 1004 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன; இதற்கான ஏற்றுப்பாசன பம்பி இடது கரையில் அமைந்துள்ளது. ஆனால் 1990 உடன் இது செயலிழந்தது.

இரணைமடு இலங்கையின் வடக்கில் உள்ள மிகப் பெரிய நீர்த்தேக்கம். முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலப்பகுதியில் உள்ள இந்த நீர்த்தேக்கத்துக்கு வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து நீர் வருகிறது. ஆனால் இந்தக் குளத்தின் பாசனநீர் மற்றும்

பயன்பாட்டு நீர் கிளிநொச்சி மாவட்டத்திற்கே செல்கிறது.

இந்த நீர்த்தேக்கத்தின் தென்பகுதியில் உள்ள அம்பகாமம் என்ற காட்டுப் பிரதேசத்தில்தான் விடுதலைப்புலிகளின் முதலாவது பயிற்சி முகாம் 1975 ஆண்டுக் காலப்பகுதியில் இருந்துள்ளது. வன்னியில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இராணுவத்தின் பெருஞ்சமரான ஜெயசிக்குறு நடவடிக்கையில் இந்தக் குளம் மட்டுமே படையினரால் கைப்பற்றப்படாமல் இருந்தது. இந்தக் குளத்தின் வடக்குப் பகுதியில் உள்ள அணைக்கட்டின் வழியாகவே கிழக்கு வன்னிக்கும் மேற்கு வன்னிக்குமான பயணங்களும் தொடர்பும் நடந்தன.

2002இல் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அவருடைய துணைவி அடேல் பாலசிங்கமும் அரசாங்கத்தின் உடனான பேச்சுவார்த்தைகளுக்கு, இங்கிலாந்தில் இருந்து விமானத்தில் மாலைதீவு வந்து, அங்கிருந்து கடல் விமானம் மூலம் வந்து இந்த நீர்த்தேக்கத்தில்தான் இறங்கினர். பாலசிங்கம் தம்பதிகளை விடுதலைப்புலிகளின் தலைவரும் அவருடைய மனைவி மதிவதனியும் புலிகளின் தளபதிகளும் பொறுப்பாளர்களும் வரவேற்றனர்.

இந்த நீர்த்தேக்கத்தின் மேற்கே கிளிநொச்சி நகர் உள்ளது. முன்பு, கிழக்கே விடுதலைப்புலிகளின் விமான நிலையம் இருந்தது. இப்பொழுது இந்த விமான நிலையத்தைப் படையினர் தமது கட்டுப்பாட்டில் எடுத்துப் புதிதாக நிர்மாணித்திருக்கிறார்கள். போர் முடிந்த பிறகு இந்த நீர்த்தேக்கத்திற்கு இலங்கையின் அதிபர் மகிந்த ராஜபக்ஷ விஜயம் செய்திருந்தார். நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் உள்ள படைத்துறைத் தலைமையகத்தில் இலங்கையின் மந்திரிசபைக் கூட்டத்தை நடத்தினார். இலங்கையின் வரலாற்றில் வடக்கில் நடத்தப்பட்ட முதலாவது மந்திரிசபைக் கூட்டம் இதுவாகும்.

2.2.1.1.7 இரணைமடுவைச் சூழ்ந்துள்ள நிறுவனங்கள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி

இரணைமடு நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் தற்போது இலங்கை இராணுவத்தின் கிளிநொச்சி மாவட்ட படைத்துறைத் தலைமையகம் அமைந்துள்ளது. அதற்கு அருகாமையில் செஞ்சோலை சிறுவர் இல்லமும் காணப்படுகிறது. வடக்கு மாகாணத்தின் போர்க்கால வரலாற்றுடன் தொடர்புடைய இவ்விடம், கடந்த காலத்தில் பல்வேறு சமூக மற்றும் மனிதாபிமானச் செயற்பாடுகளின் மையமாக விளங்கியதுடன், தற்போது சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இரணைமடு நீர்த்தேக்கத்தின் மேற்குப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீடமும் பொறியியல் பீடமும் அமைந்துள்ளன. உள்நாட்டு ஆயுத மோதலால் சேதமடைந்திருந்த கட்டடங்கள் மீளப் புனரமைக்கப்பட்டதோடு, புதிய கல்வி மற்றும் ஆய்வு வசதிகளும் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருகின்றன. இப்புனரமைப்பு மற்றும் விரிவாக்கப் பணிகளுக்கு சர்வதேச உதவிகளுடன் இந்திய அரசும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. இவ்விரு பீடங்களும் வட மாகாணத்தின் விவசாய, தொழில்நுட்ப மற்றும் மனித வள மேம்பாட்டில் முக்கிய பங்காற்றி வருகின்றன.

2.2.1.1.8 2018 ஆம் ஆண்டில் நிறைவுபெற்ற மேம்படுத்தல் திட்டத்தின் நோக்கங்கள்

இந்தத் திட்டம் வெறும் அணைக்கட்டு உயர்த்தும் பணியாக இல்லாமல், வட மாகாணத்தின் நீண்டகாலத் தேவைகள் மற்றும் நீர்வளப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துடனும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சுகாதாரமான குடிநீர்த் தேவைக்குமாகவும் வடிவமைக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இத்திட்டத்திற்காக கீழ்வரும் முக்கிய நோக்கங்கள்/ குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டு சுமார் ரூ. 2,000 மில்லியன் நிதி உதவி அளித்தது:

1. கிளிநொச்சி விவசாயிகளுக்கான பாசனநீர்ப் பாதுகாப்பை மேம்படுத்துதல்.
2. வறட்சிக் காலங்களில் நீர்ப்பற்றாக்குறையைக் குறைத்தல்.
3. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு ஆதரவளித்தல்.
4. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் நீரியல் அபாயங்களை எதிர்கொள்ளுதல்.
5. வட மாகாணத்தின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

2015-2018 காலப்பகுதியில் பின்வரும் பொறியியல் பணிகள் முன்னெடுக்கப்பட்டன:

1. அணைக்கட்டின் உயரம் 34 அடியிலிருந்து 36 அடியாக உயர்த்தப்பட்டது. 1.75 கிலோமீற்றர்

நீளமுள்ள பிரதான அணைக்கட்டு பலப்படுத்தப்பட்டது

2. பழைய வெள்ளவாய்கள் (Spillway) புனரமைக்கப்பட்டன.

3. புதிய சக்திவாய்ந்த வெள்ள வெளியேற்ற அமைப்புகள் நிறுவப்பட்டன. இருந்த 11 'Radial Gates' உடன் மேலும் 3 புதிய கதவுகள் சேர்க்கப்பட்டன. கதவுகள் மின்சார இயக்க முறைமைக்கு மாற்றப்பட்டன.

4. அணையின் மேற்பகுதி மற்றும் நீர்முகப்புப் பகுதிகள் கற்கள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளால் பலப்படுத்தப்பட்டன.

5. திருவையாறு 'Lift Irrigation' திட்டம் சூரிய ஆற்றல் மூலம் இயங்கும் முறையில் மறுசீரமைக்கப்பட்டது.

1976 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம், 1986 ஆம் ஆண்டு வரை செயற்பாட்டில் இருந்து சுமார் 1,409 ஏக்கர் விவசாய நிலங்களுக்கும் 533 குடும்பங்களுக்கும் பயனளித்தது. எனினும், பின்னர் ஏற்பட்ட சமூக, பொருளாதார மற்றும் நிலப் பயன்பாட்டு மாற்றங்களின் காரணமாக, இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாய நிலப்பரப்பும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்துள்ளன.

மேலும், சுமார் 408 மில்லியன் ரூபா செலவில் திருவையாறு பிரதேசத்திற்கான ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சிறப்பம்சமாக, சூரிய மின்சக்தி மூலம் இயங்கும் நவீன நீரேற்ற அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலை விவசாய நீர்ப்பாசனத்தில் பயன்படுத்தும் முன்னோடி முயற்சிகளில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2000 மில்லியன் நிதி ஒதுக்கீட்டுக்கு மேல் அதிகமாக 'International Fund for Agricultural Development' சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியத்தின் (IFAD) நீர்த்தேக்கத்துடன் தொடர்புடைய கால்வாய் மறுசீரமைப்புப் பணிகளுக்காக சுமார் ரூ. 3,200 மில்லியன் நிதியுதவி வழங்கியது. இந்த 3,250 மில்லியன் ரூபா பெறுமதியான இலகுக் கடன் உதவியின் கீழ், பாசன வாய்க்கால்கள், விவசாய அணுகல் வீதிகள், நெற்களஞ்சியங்கள், விவசாயக் கிணறுகள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்புகள் மீளப் புனரமைக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் மூலம்:

1. சுமார் 9,000 விவசாயக் குடும்பங்கள் நேரடியாகப் பயனடைந்தன.

2. 21,000 ஏக்கர நெல்வயல்கள் உறுதியான பாசன வசதி பெற்றன.

3. கிளிநொச்சி மாவட்ட மக்களில் சுமார் 40% பேரின் வாழ்வாதாரத்திற்கு இது ஆதரவாக அமைந்தது.

4. இருபோகப் பயிர்ச்செய்கைக்கான நீர்வசதி மேம்பட்டது.

தற்போதைய நிலையில் இரணைமடு நீர்ப்பாசனத் திட்டம் பெரும்பாலும் நெற்பயிர்ச் செய்கையை மையப்படுத்திய அமைப்பாகவே இயங்கி வருகிறது. பல தலைமுறைகளாக நெற்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள், குறைந்த நீர்ப் பயன்பாட்டில் அதிக பொருளாதார இலாபம் தரக்கூடிய மாற்றுப் பயிர்ச்செய்கைகளுக்கு மாறுவதில் இன்னும் தயக்கத்துடன் காணப்படுகின்றனர்.

பயறு, கௌபி, உளுந்து, சோளம், நிலக்கடலை போன்ற உப உணவுப் பயிர்கள் குறைந்தளவு நீரில் பயிரிடக்கூடியவையாக இருந்தாலும், அவற்றைப் பரவலாக அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் இன்னும் முழுமையான வெற்றியைப் பெறவில்லை. இதன் காரணமாக இரணைமடு நீர்த்தேக்கத்தின் நீர்வளம் பெரும்பாலும் நெற்பயிர்ச் செய்கைக்காகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நீர் முகாமைத்துவ நிபுணர்களின் மதிப்பீடுகளின்படி, ஒரு ஏக்கர் நெற்செய்கைக்கு சராசரியாக 3.5 ஏக்கர் அடி நீர் போதுமானதாகக் கருதப்படுகிறது. எனினும், சில சந்தர்ப்பங்களில் 8 முதல் 10 ஏக்கர் அடி வரை நீர் பயன்படுத்தப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. இதனால் நீர்ப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கான நவீன நீர் முகாமைத்துவ நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்படுகிறது.

2.2.1.1.9 சமூக மற்றும் பிராந்தியச் சமநிலை தொடர்பான சவால்கள்

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சுமார் 7,000 விவசாயக் குடும்பங்கள் பயனடைவதாகப் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டினாலும், விவசாய நிலங்களின் உரிமைப் பகிர்வு சமமற்றதாக உள்ளதாக சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. குறிப்பாக, குறைந்த எண்ணிக்கையிலான சில விவசாயிகள் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்திருப்பதன் மூலம் திட்டத்தின் பலன்களில் குறிப்பிடத்தக்க பங்கினைப் பெறுகின்றனர். எனவே, நீர் வளங்களின்

சமானமான பயன்பாடு மற்றும் நிலையான பயனீட்டை உறுதிப்படுத்தும் கொள்கைகள் அவசியமாகின்றன.

மறுபுறம், இரணைமடுவின் மேற்குப் பகுதியில், குறிப்பாக ஏ-9 பிரதான வீதியின் மேற்கே அமைந்துள்ள பல கிராமங்களின் மக்கள் தங்களது விவசாய நடவடிக்கைகளுக்காக புதிய ஏற்று நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனினும், இவ்விடங்களுக்கான விரிவான தொழில்நுட்பத் திட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் இதுவரை முழுமையாக முன்னெடுக்கப்படவில்லை.

வட மாகாணத்தின் நீர்வள அபிவிருத்தியில் இரணைமடு நீர்த்தேக்கம் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் நீண்டகாலமாக நிலவி வந்த குடிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில், இரணைமடு நீர்த்தேக்கத்தை மையமாகக் கொண்ட குடிநீர் வழங்கல் திட்டங்கள் பல்வேறு காலகட்டங்களில் முன்மொழியப்பட்டுள்ளன.

2.2.1.1.10 குடிநீர் விநியோகமும் குடிநீர் வழங்கலில் இரணைமடுவின் பங்கும்

வட மாகாணத்தின் நீர்வள அபிவிருத்தியில் இரணைமடு நீர்த்தேக்கம் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் நீண்டகாலமாக நிலவி வந்த குடிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில், இரணைமடு நீர்த்தேக்கத்தை மையமாகக் கொண்ட குடிநீர் வழங்கல் திட்டங்கள் பல்வேறு காலகட்டங்களில் முன்மொழியப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் கிளிநொச்சி-யாழ்ப்பாணம் ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டமாக முன்வைக்கப்பட்ட இத்திட்டம், பின்னர் இரணைமடு அபிவிருத்தித் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டது. இத்திட்டம் தொடர்பாக, இரணைமடு நீர்த்தேக்கத்தின் கீழ் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளிடையே பாசன நீரின் எதிர்கால கிடைப்புத் தன்மை குறித்து பல்வேறு அச்சங்களும் சந்தேகங்களும் எழுந்தன. அதேவேளை அரசியல், சமூக மற்றும் பிராந்தியக் கருத்து வேறுபாடுகளும் திட்டத்தின் முன்னேற்றத்தைப் பாதித்தன. இதன் விளைவாக கிளிநொச்சி-யாழ்ப்பாணம் குடிநீர் வழங்கல் திட்டம் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படாமல் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

தற்போது இரணைமடு நீர்த்தேக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கிளிநொச்சி குடிநீர் வழங்கல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து நீர் பெறப்பட்டு சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் பின்னர் கிளிநொச்சி நகரத்திற்கும் அதனை அண்மித்த சில கிராமங்களுக்கும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் பரந்தன் மற்றும் பூநகரிப் பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோக வசதிகளும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், கிளிநொச்சி மாவட்டத்தின் பல கிராமங்கள் இன்னமும் குடிநீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இரணைமடு நீர்த்தேக்கத்தை அண்மித்த சாந்தபுரம் உள்ளிட்ட சில கிராமங்களில், வருடத்தின் பெரும்பாலான காலப்பகுதிகளில் பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதில் சிரமங்கள் நிலவுகின்றன.

அதேபோன்று கிளிநொச்சியின் மேற்குப் பகுதிகள், பூநகரி, கண்டாவளை மற்றும் பளை பிரதேசங்களிலுள்ள பல கிராமங்களும் குடிநீர் விநியோக வசதிகளில் குறைபாடுகளை எதிர்கொண்டு வருகின்றன. இரணைமடு நீர்த்தேக்கத்தை மையமாகக் கொண்ட குடிநீர்த் திட்டங்கள் சில பகுதிகளுக்குப் பயனளித்த போதிலும், நீர்த்தேக்கத்திற்கு அருகாமையில் உள்ள பல குடியிருப்புகளும் இன்னும் முழுமையான குடிநீர் வசதிகளை எதிர்பார்த்து வருகின்றன.

2.2.1.1.11 இரணைமடுவும் கிளிநொச்சியின் பொருளாதார வளர்ச்சியும்

கிளிநொச்சி மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியில் இரணைமடு நீர்த்தேக்கம் மையப் பங்கு வகிக்கிறது. நீர்த்தேக்கம் முழுமையாக நிரம்பி அதன் கீழ் பரந்தளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட காலங்களில், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பொருளாதார நன்மைகளைப் பெற்றன. நெற்பயிர்ச் செய்கை தொடர்பான களையெடுத்தல், அறுவடை, போக்குவரத்து, சேமிப்பு, அரிசி உற்பத்தி மற்றும்

சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புகளையும் வருமான வாய்ப்புகளையும் உருவாக்கின. மேலும் அறுவடைக்குப் பின்னர் வயல்களில் மீதமிருக்கும் நெற்கதிர்களைச் சேகரித்து வாழ்வாதாரம் மேற்கொண்ட குடும்பங்களும் கணிசமான அளவில் இருந்தன.

எனினும், கடந்த சில தசாப்தங்களில் இயந்திரமயமாக்கல் அதிகரித்ததன் விளைவாக பாரம்பரிய விவசாயத் தொழிலாளர் தேவை குறைந்துள்ளது. இதனால் முன்னர் விவசாய நடவடிக்கைகளின் மூலம் பல தரப்பினருக்கும் கிடைத்த பொருளாதார நன்மைகள் தற்போது குறுகிய வட்டாரங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

2.2.1.1.12 மீன் வளங்கள் மற்றும் மாற்றுப் பயன்பாடுகள்

இரணைமடு நீர்த்தேக்கம் விவசாயத்திற்கான நீராதாரமாக மட்டுமன்றி, உள்நாட்டு நன்னீர் மீன்பிடித் தொழிலுக்கும் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நன்னீர் மீன்பிடித் தொழிலின் மூலம் வாழ்வாதாரம் பெற்று வருகின்றன.

எனினும், நீர்த்தேக்க அபிவிருத்தித் திட்டங்களில் மீன்வளத் துறையின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் போதியளவு கவனத்தில் கொள்ளப்படவில்லை என்ற கருத்து மீனவர் சமூகத்தினரிடையே காணப்படுகிறது. எனவே எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் விவசாயம், மீன்வளம், சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பல்நோக்கு அணுகுமுறை அவசியமாகிறது.

2.2.1.1.13 யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் வழங்கல் திட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் மற்றும் யாழ்ப்பாண நகரப் பகுதிகள் நீண்டகாலமாக நிலத்தடி நீரின் உவர்மயமாதல் மற்றும் குடிநீர்ப் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன. இதற்கு நிரந்தரத் தீர்வாக இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் முன்மொழியப்பட்டது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் சுமார் 23 பில்லியன் (2,300 கோடி) இலங்கை ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. திட்டத்தின் முக்கிய நோக்கம் இரணைமடு நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை அதிகரித்தல், அணைக்கட்டினை உயர்த்துதல் மற்றும் கூடுதல் நீரைச் சேமித்தல் என்பதாகும்.

திட்ட ஆவணங்களின்படி, கொள்ளளவு அதிகரிப்பின் மூலம் சேமிக்கப்படும் கூடுதல் நீரில் குறைந்தளவு பகுதியே யாழ்ப்பாணத்தின் குடிநீர்த் தேவைக்காகப் பயன்படுத்தப்படவிருந்தது. இதேவேளை விவசாயத்திற்கான பாசன நீரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் எனவும் திட்டமிடப்பட்டது.

2.2.1.1.14 ஒருங்கிணைந்த நீர்வள முகாமைத்துவத்தின் அவசியம்

நவீன நீர்வள முகாமைத்துவக் கொள்கைகளின்படி, குடிநீர், விவசாயம், தொழில்துறை மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளுக்கிடையில் சமநிலையான நீர்ப் பகிர்வு அவசியமாகும். தேசிய நீர்வள முகாமைத்துவத்தின் அடிப்படை நோக்கமும் இதுவே ஆகும்.

இரணைமடு போன்ற பாரிய நீர்த்தேக்கங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கு, முதலில் அவற்றின் கொள்ளளவை மேம்படுத்தி, நீர்ச் சேமிப்புத் திறனை உயர்த்தி, பின்னர் பல்துறைப் பயன்பாட்டை உறுதிப்படுத்தும் அணுகுமுறை தேவைப்படுகிறது. இதன் மூலம் விவசாய உற்பத்தி, குடிநீர்ப் பாதுகாப்பு மற்றும் பிராந்திய அபிவிருத்தி ஆகியவற்றை ஒருங்கிணைந்த முறையில் முன்னெடுக்க முடியும்.

இரணைமடு நீர்த்தேக்கம் வட மாகாணத்தின் விவசாய வளர்ச்சி, குடிநீர்ப் பாதுகாப்பு, மீன்வள மேம்பாடு மற்றும் பிராந்திய பொருளாதார முன்னேற்றம் ஆகிய அனைத்திற்கும் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது.

எதிர்காலத்தில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் நீர்வளத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அறிவியல் அடிப்படையிலான நீர்வள முகாமைத்துவம், நீர்த்தேக்கக் கொள்ளளவு விரிவாக்கம் மற்றும் பங்குதாரர்களின் ஒருமித்த ஒத்துழைப்புடன் கூடிய நீண்டகாலத் திட்டமிடல் அவசியமாகிறது. இதன் மூலம் வட மாகாணத்தின் நிலையான நீர்வள அபிவிருத்திக்கும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் உறுதியான அடித்தளத்தை உருவாக்க முடியும்.

(தொடரும்)

01 JULY

'யாழ்ப்பாண மருத்துவ வரலாறு' நூல் அறிமுக நிகழ்வு கொழும்புத் தமிழ்ச்சங்கம்





எழுநா வெளியீடாகிய பாலசுப்பிரமணியம் துவாரகன் அவர்களின் 'யாழ்ப்பாண மருத்துவ வரலாறு' நூல் அறிமுகம் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடலில் 01.07.2026 புதன்கிழமை அன்று மாலை 5.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் இடம்பெற்றது. வைத்தியக் கலாநிதி சி. அனுஷ்யந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மருத்துவர் மஹிமா சுரேஸ் அவர்கள் அறிமுகவுரையை ஆற்றியிருந்தார். மருத்துவர் மஹிமா சுரோஷ் உரையாற்றுகையில் மன்னன் சிங்கை செகராசசேகரன் காலப்பகுதியில் சித்தமருத்துவம் மற்றும் ஆயுர்வேத மருத்துவம் போன்றன எவ்வாறு வியாபித்திருந்தன என்பது பற்றி குறிப்பிட்டதோடு, நூலில் கூறப்பட்டிருந்த ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கையில் நடந்த மேலைத்தேய மருத்துவ வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளை காட்சிப்படுத்தலோடு விபரித்திருந்தார். மேலும் நூல் பற்றிய விடயங்களை தமிழ்ச்சங்க உறுப்பினரும் ஓய்வுபெற்ற பிரதி அதிபருமாகிய திரு. த. இராஜரட்ணம் அவர்கள் வழங்கியிருந்தார். கொழும்பு தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

'சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு'

நூல் அறிமுக நிகழ்வு யாழ் பத்திரிசியார் கல்லூரி

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் 'நூறு மலர்கள் மலரட்டும்' புத்தக அரங்க விழாவில், எழுநாவின் வெளியீடாகிய சிரேஷ்ட ஊடகவியலாளரும் சட்டத்தரணியுமாகிய இரா. சடகோபன் அவர்களின் 'சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு' நூல் அறிமுக நிகழ்வு, கடந்த 03.07.2026 வெள்ளிக்கிழமை, மாலை 4.30 மணிக்கு யாழ் பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர் P. கோபிநாத் அவர்கள் அறிமுக உரையினை நிகழ்த்தினார்.

அவர் உரையாற்றுகையில், "சிறந்த சட்டத்தரணியாகவும் மொழிபெயர்ப்பாளராகவும் கலைஞராகவும் விளங்கும் இரா. சடகோபன், 2023 இல் இருநூற்றாண்டு வரலாற்றினைக் கடந்திருக்கும் மலையக மக்களின் வாழ்வியல் சார்ந்த பிரச்சினைகளைப் பற்றி இந்நூலில் சிறப்பாக எழுதியிருக்கின்றார். ஒவ்வொரு தலைப்பின் கீழும் பல விடயங்களை தெளிவாக விளக்கியிருக்கின்றார். ஒரு தலைப்பில் 'கட்டிப்போட்ட கயிறுகளும் கண்ணுக்குத் தெரியாத சங்கிலிகளும்' என ஓர் உவமையைக் கையாண்டிருக்கின்றார். இங்கு கட்டிப்போட்ட கயிறுகளாக மலையக மக்களின் சாதி, மதம், அடிமைத்தனம் போன்ற விடயங்களை எழுத்தாளர் குறிப்பிடுகின்றார். கண்ணுக்குத் தெரியாத சங்கிலிகளாக 3 மாதக்கூலி, 12×12 அடி லயம், கங்காணிமார் மற்றும் துரைமாரின் ஆதிக்கம் போன்றவற்றைக் குறிப்பிடுகின்றார். மேலும் அதிகாரப் பிரமிட்டுகளின் அடியில் நசுங்கிக்கிடந்த மக்கள் என்பதையும் விளக்கியிருக்கின்றார்." எனக் குறிப்பிட்டிருந்தார். இந்நிகழ்வில் மூத்த எழுத்தாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

03 JULY





உத்தியாக்கள் – கிழக்கிலங்கை கடலோர வேடர்களின் பண்பாட்டு அசைவுகள்' – நூல் அறிமுக நிகழ்வு திருகோணமலை





04 JULY

'பழங்குடிச் சமூகங்களும், விளிம்புநிலை இலக்கியங்களும்' எனும் கருப்பொருளில் இடம்பெற்ற 53ஆவது இலக்கியச் சந்திப்பில், எழுநா வெளியீடாகிய திரு. க. பத்திநாதன் அவர்களின் 'உத்தியாக்கள் – கிழக்கிலங்கை கடலோர வேடர்களின் பண்பாட்டு அசைவுகள்' நூல் அறிமுக நிகழ்வு 04.07.2026 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு திருகோணமலை, சர்வோதய நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நூல் அறிமுக உரையாற்றிய தமிழ்ராள் அனுஷ்திக்கா அவர்கள் "இலங்கையின் பழங்குடிச் சமூகமென்றால் மகியங்கணை மட்டுமே நினைவிற்கு வரும். ஆனால் அதற்கு அப்பாற்பட்டதாக கிழக்கிலங்கை தமிழ்க் கரையோர வேடர்களின் வாழ்வியலை இந்நூல் ஆவணப்படுத்துகிறது. கரையோரப் பழங்குடி மக்களின் 'உத்தியாக்கள்' சடங்கை மையமாகக் கொண்ட இந்நூல், அவர்களின் பண்பாட்டையும் வேர்களையும் தேட வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை நமக்கு உணர்த்துகிறது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள், மாணவர்கள், பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள் – இணையம்)

கவிதை வாசிப்பு நிகழ்வு– 'வாசலிலே கிருஷ்ணாந்தி' பொற்பதி அறிவாலய மண்டபம், கொக்குவில்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் தொடர்பான உரையரங்கு கடந்த புதன்கிழமை (29.07.2026) அன்று கொக்குவில் பொற்பதி அறிவாலய மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்வுரையரங்கில் 'அரசியல் தீர்வு – எதிர்நோக்கும் சவால்கள்' 'கறுப்பு ஜூலை – கற்க மறந்த பாடங்கள்' மற்றும் 'செம்மணிப் புதைகுழிகள் – உயிர்த்தெழும் சாட்சியங்கள்' என்ற தலைப்புக்களில் உரைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வின் ஒரு பகுதியாக எழுநாவின் கலைவட்டத்தின் வெளியீடாகிய 'வாசலிலே கிருஷ்ணாந்தி' கவிதைத்தொகுப்பிலுள்ள கவிதைகள் ச. சனோஜி, கோ. கம்சாயினி, சு. சுருதிகா , ஜீ. ரஜீவன் ஆகியோரால் வாசிக்கப்பட்டன. தொடர்ந்து கறுப்பு ஜூலையில் பலியானவர்களினதும், செம்மணிப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களினதும் நினைவாக மெழுகுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்ட மையும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பொதுமக்கள், அரசியலபிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.


29 JULY





இருத்தலின் மீது கவியும் இன்மைகள்: குற்றவுணர்வின் மொழி

கருத்துரை: ரதன்



பொதுவாகவே நூல் விமர்சனங்கள் – அறிமுகங்கள் மிக முக்கியமானவை. இவை படைப்பாளிக்கும் நுகர்வோருக்கும் (வாசகர்வாசிப்பவர்) இடையில் ஒரு நெருக்கத்தை உண்டாக்குகின்றன. நுகர்வோரின் கருத்துகளை மீள் பரிசீலிக்கின்றன. நுகர்வோருக்கான தேடலை அதிகரிக்கின்றன. அதே சமயம் விமர்சகரின் அனுபவங்கள், அறிந்தவை, கருத்தியல் என்பன விமர்சனத்தினூடாக வெளிப்படுகின்றன. இது நுகர்வோருக்கு விமர்சகர்களை விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்ப்பதற்கும் வழிவகுக்கின்றது.

இளங்கோவின் 'இருத்தலின் மீது கவியும் இன்மைகள்' நூலையும் அறிமுகப்படுத்துவதில் அவசியம் உள்ளது. எழுநாவின் வெளியீடான இந்நூலை எழுநா எனக்கு அனுப்பிய நூல்களுள் ஒன்றாகவே பெற்றுக்கொண்டேன்.

இளங்கோ கடந்த பல வருடங்களாக எழுதிவருகின்றார். இவர் டி.செ. தமிழன் என்ற பெயரிலும் அறியப்படுகின்றார். இவர் சீரிய இலக்கியம், நூல் விமர்சனங்கள், தீவிர சினிமா, நாடக விமர்சனம், அரசியல் ஆய்வு, மொழிபெயர்ப்பு போன்றவற்றுடன் கவிதைகள், சிறுகதைகள், நாவல்களும் எழுதியுள்ளார். இவற்றுடன் இவர் ஒரு பயணி. பல நாடுகளுக்கும் பிரதேசங்களுக்கும் பயணங்களை மேற்கொண்டு பதிவு செய்கின்றார்.

தான் பார்ப்பதை, கேட்பதை, வாசிப்பதனை, நுகர்வதனை தனது எழுத்துகளில் கொண்டுவருகின்றார். இவரது மனச்சாட்சியின் ஒரு குரலாக இவரது எழுத்துகள் ஒளிர்கின்றன, ஒலிக்கின்றன. இதுவரை சுமார் 500 இற்கும் மேலான இவரது ஆக்கங்கள் இணையம், இலக்கிய இதழ்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் வெளிவந்துள்ளன.

இளங்கோ பல நூல்களின் விமர்சனங்களைப் பதிவு செய்துள்ளார். 2018ஆம் ஆண்டு அம்ருதாவில் வெளிவந்த பிள்ளையானின் 'வேட்கை' நூலைப் பற்றிய விமர்சனம் இவரது நூல் விமர்சனங்களுள் முக்கியமானது. அதிலிருந்து சில பகுதிகள் இவை:

"முஸ்லீம் மக்கள் மீது தான் பரிவுள்ளவர் என்றாலும் அதை மீறி கிழக்கு மாகாணத்து தமிழ் மக்கள் மீது அக்கறை என்று சொல்லிக்கொண்டு முஸ்லீம்கள் மீது ஒருவகையான வெறுப்பு உமிழப்படுகின்றது.

இந்நூலில் இலங்கை அரசாங்கம் மீது ஒரு துளி விமர்சனமும் குறிப்பிடப்படவில்லை என்றும் இளங்கோ குறிப்பிட்டுள்ளார். போராளியாக இருந்தவர் அரசியல் தளத்துக்கு வரும் பொழுது தன்னைப் பற்றிய சுய விமர்சனம் அவசியம் எனச் சுட்டிக்காட்டும் இளங்கோ, தனது இளமையை தான் நம்பிய கொள்கைக்காக இழந்தவர்கள் அரசியல் செய்வதற்கு பல மடங்கு நியாயங்கள் உள்ளன எனவும் கூறியுள்ளார் (முழுமையான கட்டுரையை இளங்கோ சமூக வலைத்தளத்தில் வெளியிடுவார் என நம்புகின்றேன் – இது கருத்துப் பிறழ்வுகளை தவிர்க்க உதவும்). வேட்கை பற்றிய இவ்விமர்சனம் மிக நேர்மையான ஆழமான விமர்சனம். பலர் எனது கருத்துடன் முரண்படலாம்.

யூன் 2026 அம்ருதா இதழில் இளங்கோ எழுதியுள்ள டி. தருமராஜன் அவர்களின் 'ஜல்லிக்கட்டு' நூல் விமர்சனமும் இளங்கோவின் நூல் விமர்சனங்களுள் முக்கியமானது.

இருத்தலின் மீது கவியும் இன்மைகள் என்ற கவித்துவத் தலைப்பைக் கொண்ட நூலில் 13 நூல்களைப் பற்றிய விமர்சனம் பதிவாகியுள்ளது. இந்த 13 நூல்களின் முக்கியத்துவம், நூலாசிரியர் தவறவிட்ட விடயங்கள், அவரது பலவீனம் எனப் பன்முகத் தன்மையுடன் விமர்சனத்தை

இளங்கோ முன்வைக்கின்றார். இந்நூலில் உள்ள அனைத்து நூல்களையும் வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. எனினும் இளங்கோவின் விமர்சனங்களை நுகர்ந்த பின்னர் மீண்டும் ஒரு தடவை நூல்களை முழுமையாகவோ பகுதியாகவோ வாசிக்க வேண்டும் என்ற அவசியம் எழுந்துள்ளது.
நூலின் அட்டை இளங்கோ சிறிய வயதில் வாழ்ந்த வீட்டின் படம்.

நூலின் உள்ளிருப்பை எதிரொலிக்கின்றது. நூலின் சமர்ப்பணம் என்பது படையல் என்ற தலைப்பில் பின்வருமாறு உள்ளது: "ஈழ யுத்தத்தில் அநியாயமாகப் பலியான அனைவர்க்கும். இளங்கோவின் கருத்துடன் முரண்பட்டாலும், அவர் கூறிய கருத்தின் பின்னால் உள்ள விடயம் ஒரு உரையாடல் வெளியை ஏற்படுத்தியுள்ளது.
எந்தவொரு போரும் ஒரு காரணத்துடனேயே தொடங்கப்படும். போரில் வெற்றி பெற்றால் பலியானவர்களை "தேசத்துக்காக என்று கூறுகின்றோம். தோல்வியடைந்தால் "அநியாயமாக என்கின்றோம்.
நிரோமி டி சொய்சாவின் 'தமிழ்ப் பெண்புலி' என்ற ஆங்கில நூலின் விமர்சனத்தில் தமிழ்ப் பெண்புலி நூலின் கடைசி அத்தியாயம் விடுதலைப் புலி ஆதரவாளர்களைக் கோபப்படுத்தும் என எழுதுகிறார் இளங்கோ.
"போராட்டத்தின் பெயரால் எல்லாச் சுமைகளையும் சுமந்த மக்கள் என்ற மூன்றாவது தரப்பும் இருக்கின்றது. அத்தரப்பைப் பற்றியே நாம் இன்னும் நிறைய கவலைப்பட வேண்டியிருக்கின்றது.

அந்த அக்கறை இந்த நூலை எழுதிய நிரோமியிடம் ஏதோ ஒரு வகையில் இருக்கின்றது என இளங்கோ மேலும் குறிப்பிட்டுள்ளார்.
'தீவிரவாதிகளுடன் தேநீர் நேரம்' என்ற மார்க் ஸ்டீபனின் நூலின் முக்கியத்துவத்தைப் பற்றி இளங்கோ குறிப்பிட்டுள்ளார். இந்திய சமாதானப்படையின் கொலைகளைப் பற்றி ஸ்டீபன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். விடுதலைப் புலிகள் தமிழ் ஈழக் கோரிக்கையை கைவிடாதபடியால்தான் மூர்க்கமாக அழிக்கப்பட்டனர் என ஸ்டீபன் எழுதியதையும் இளங்கோ பதிவு செய்துள்ளார்.
விடுதலைப் புலிகளின் போராளி மலரவனின் 'போர் உலா' நூலைப் பற்றியும் விரிவாக இளங்கோ எழுதியுள்ளார். இந்நூலின் ஊடாக தனக்கு போர் ஏற்படுத்தியுள்ள வெறுமையை இளங்கோ வெளிப்படுத்தியுள்ளார். அது மட்டுமல்லாமல் போரில் இறந்தவர்களை நினைத்து வருத்தப்படுகின்றார். இளங்கோ தனக்கு ஏற்பட்டுள்ள குற்றவுணர்வினை இந்த நூல்களினூடாக வெளிப்படுத்துகின்றார். போருடன் தான் முரண்பட்டு நிற்பதனையும் இளங்கோ வெளிப்படுத்த தயங்கவில்லை. போரினால் உடைக்கப்பட்டுள்ள சமூகக் கட்டமைப்புகள், சமூகக் கட்டமைப்பினால் கட்டுடைக்க முடியாமல் போன போர், உடைக்கப்பட வேண்டிய சமூகக் கட்டமைப்பு, அரசியல் கட்டமைப்பு என இளங்கோ விமர்சிக்கின்றார். போர் 'மகிழ்ச்சி' என்ற வார்த்தையையே மனிதர்களிடம் அழித்துவிட்டது என்பது இளங்கோவின் விமர்சனம்.
ஒவ்வொரு நூலுடனும் இளங்கோ உரையாடியுள்ளார். அதுவே இந்த நூலின் சிறப்பம்சங்களுள் ஒன்றாகும்.
போர் இளங்கோவிற்கு ஏற்படுத்தியுள்ள இருண்மையை நேர்மையாகக் குற்றவுணர்வுடன் அவர் பதிவு செய்துள்ளார்.
இளங்கோவின் பல கருத்துகளுடன் முரண்பட்டாலும், அவரது கருத்துகள் ஓர் உரையாடல் வெளியை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது.
இது இந்த நூலுக்கான விமர்சனமல்ல. நூலை அனைவரும் வாசிக்க வேண்டியதன் அவசியத்தையே கூறியுள்ளேன். பிறிதொரு தளத்தில் விரிவான விமர்சனம் வெளியாகவுள்ளது.


நூலில் உள்ள நூல்கள் பற்றிய விவரங்கள் இவை:

1.A Passage to North – Anuk Arudpragasam
2.Brotherless Night – V.V. Ganeshananthan
3.Tamil Tigress – Niromi de Soyza
4.The Story of a Brief Marriage – Anuk Arudpra gasam
5.The Hungry Ghosts – Shyam Selvadurai
6.The Boat People – Sharon Bala
7.Prisoner No 1056 – Roy Ratnavel
8.The Sadness of Geography: My Life as a Tamil Exile – Logathasan Tharmathurai
9.Love Marriage – V.V. Ganeshananthan
10. போர் உலா – மலரவன்
11.Tea Time With Terrorists – Mark Stephen Mead ows
12.Song of the Sun God – Shankari Chandran
13.Vanni: A Family's Struggle through the Sri Lankan Conflict – Benjamin Dix and Lindsay Pollock

வடக்கு –கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்



கருத்துரை:
பேராசிரியர் கே.ரீ. கணேசலிங்கம்



அமரசிங்கம் கேதீஸ்வரன் எழுதிய 'வடக்குகிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்' என்ற நூலுக்கான மதிப்பீட்டை மேற்கொள்வதில் பெருமை கொள்கிறேன். 2025இல் வெளிவந்துள்ள இந்நூல் ஒன்பது அத்தியாயங்களையும் 168 பக்கங்களையும் கொண்டுள்ளதுடன், அழகுற வடிவமைக்கப்பட்ட அட்டைப்படத்தையும் கொண்டிருக்கிறது. இதற்கான அணிந்துரைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவராலும், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராலும் எழுதப்பட்டுள்ளன. நூலாசிரியர் என்னுரை என்ற பகுதியைத் தந்துள்ளார். எங்கள் எல்லோருக்கும் பரிச்சயமான நூலாசிரியரின் தாயாருக்கு இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நூலாசிரியர் தனது நூலினூடாக வடக்குகிழக்கு மாகாணங்களின் வளங்களையும் அதன் பயன்பாட்டையும் முதன்மைப்படுத்தியுள்ளார். இதன் உள்ளடக்கங்களை ஒவ்வொரு அத்தியாயமாக விளங்கிக்கொண்டு அளவீடு செய்வது அவசியமானதாகத் தெரிகின்றது. அதனடிப்படையில் முதல் பகுதியாக 'வடக்குகிழக்கு மாகாணங்களுடைய வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்' என்ற அறிமுகம் தரப்பட்டுள்ளது. குறித்த அத்தியாயத்தில், வடக்குகிழக்கு மாகாணங்களின் பிரதேசம் பற்றிய அறிமுகம், அங்குள்ள வளங்கள் மற்றும் அவை சார்ந்த புள்ளிவிவரத் தரவுகள் ஆகிய விடயங்களே முதன்மையாக முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் முக்கிய ஆய்வுப் பொருளாக, 'வடக்குகிழக்கு மாகாணங்களில் பொருளாதார உந்துசக்தியாக அமையக்கூடிய நிலம், காடு, காலநிலை, சனத்தொகை, விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித் துறை, பொருளாதாரக் கட்டமைப்புகள், சக்தி வளம், நீர் மற்றும் நீர்நிலைகள் முதலான வளங்கள் பற்றிய பகுப்பாய்வு' அமைந்துள்ளதென்பதை நூலாசிரியர் தனது கருத்தாக முன்வைத்துள்ளார். இப்பகுதி ஓர் அறிமுகமாகத் தரப்பட்டுள்ளது. இதில் இன்னொரு அம்சமாக பிரதான நோக்கமும் நூலின் கருதுகோளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.
முதலாவது அத்தியாயம் நிலப்பயன்பாடும் வனவள முகாமைத்துவமும் என்ற பகுதி ஆகும். இலங்கைத் தீவின் வடக்குகிழக்குப் பிராந்தியங்களின் பரப்பளவும், அங்குள்ள காடுகளின் பரப்பளவும் மிகத் துல்லியமான புள்ளிவிவரங்களுடன் இதில் விளக்கப்பட்டுள்ளது தனித்துவமான அம்சமாகும். வடக்கு கிழக்குப் பிராந்தியங்களின் காலநிலை, மக்களின் வாழ்வியல் மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்கு அதன் விளைவுகள் எத்தகைய நன்மைகளைத் தருகின்றன என்பது சுட்டிக்காட்டப்பட்டு, அதன் தனித்துவமான தன்மைகளும் இங்கு துல்லியமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தியாயம் இரண்டாக, விவசாயத்துறையும் வாய்ப்புகளும் என்ற பகுதியை நூலாசிரியர் வடிவமைத்துள்ளார். குறிப்பாக, நெல் உற்பத்தியின் முக்கியத்துவத்தை இதில் முதன்மைப்படுத்தியுள்ளார். அத்துடன், சிறுதானிய உற்பத்திக்கான வாய்ப்புகளையும் அதன் மூலமான பொருளாதார இலாபப் பங்களிப்பையும் சுட்டிக்காட்டியுள்ளதுடன், நெல் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் அதிக வருமானத்தை ஈட்டுவதற்கான சூழலையும் அடையாளப்படுத்தியுள்ளார். மேலும், இலங்கையில் நிலவும் போசாக்கின்மை மற்றும் மந்தபோசணைப் பிரச்சினைகளுடன் இதனைத் தொடர்புபடுத்தி, இதன் முக்கியத்துவத்தை ஆசிரியர் ஆராய்ந்துள்ளார்.
2022ஆம் ஆண்டுத் தகவலின்படி இலங்கைச் சனத்தொகையில் 30 சதவீதமானவர்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்குள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமன்றி, ஒவ்வொரு மரக்கறி உற்பத்தியும்

நேரடியாகவும் உடனடியாகவும் தரக்கூடிய பயன்களை அடையாளப்படுத்தியுள்ளார். இது ஓர் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இவ்வத்தியாயம் விரிவாக ஆராய்கிறது. அத்துடன், அதற்கேற்ற வளங்கள், பிரத்தியேகமான நிலவளம் மற்றும் காலநிலை ஆகியவற்றையும் அடையாளப்படுத்தி விளக்குகிறது.

வடக்குகிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்குக் கால்நடை உற்பத்தி எவ்வாறு ஒரு சிறந்த வளமாக அமைய முடியும் என்பதை மூன்றாவது அத்தியாயம் மாவட்ட வாரியாக ஆராய்ந்துள்ளது. மேலும், இதன் முக்கியத்துவத்தையும் இதனால் கிடைக்கக்கூடிய பொருளாதார இலாபத்தையும் இப்பகுதி கணிப்பீடு செய்துள்ளது. தற்போது இருக்கும் அளவீட்டையும் அதனை அதிகரிப்பதற்கான சூழலையும் இனங்காட்டியிருப்பதோடு, வடக்குகிழக்கு மாகாணங்களின் கால்நடையின் பங்கை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளையும் இவ்வத்தியாயம் விவரிக்கின்றது. கால்நடை வளர்ப்புத் துறையை ஒரு முறையான நிறுவனக் கட்டமைப்பாக மாற்றுவதற்கான திட்டங்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்துள்ள இப்பகுதி, புள்ளிவிவரங்களின் அடிப்படையில் அதற்கான சாத்தியக்கூறுகளையும் அதன் மூலம் கிடைக்கக்கூடிய அதிகப்படியான இலாபத்தையும் முக்கியத்துவப்படுத்தி விளக்கியுள்ளது.

நான்காம் அத்தியாயமானது, மீன்பிடித் தொழில்துறையின் வளங்களையும் வாய்ப்புகளையும் விரிவாக ஆராய்கிறது. இலங்கைத் தீவின் ஒட்டுமொத்தக் கடற்கரையில் 63 சதவீதத்தை வடக்குகிழக்கு மாகாணங்களே கொண்டிருக்கின்றன என இப்பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இத்தனை பரந்த கடல் பரப்பைக் கொண்டுள்ளமையால், இப்பிராந்தியம் மீன்பிடி உற்பத்தி மூலம் பெருமளவு வருவாயை ஈட்டுவதற்கான அரிய வாய்ப்புகளைப் பெற்றுள்ளது. இவற்றுடன், தற்போதைய மீன்பிடி உற்பத்தியில் காணப்படும் குறைபாடுகளையும், அவற்றைச் சரிசெய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாத நடைமுறைகளையும் இந்த அத்தியாயம் துல்லியமாக மதிப்பிட்டுள்ளது.

வடக்குகிழக்குக் கடல் பரப்பில் தென்னிலங்கை மற்றும் இந்திய மீனவர்களால் ஏற்படுத்தப்படும் அத்துமீறல்கள் தமிழ் மீனவர்களின் பொருளாதாரத்தில் தோற்றுவித்துள்ள தாக்கங்கள் குறித்தும் இது விவாதிக்கின்றது. அத்துடன், இப்பிராந்தியத்தில் நவீன மீன்பிடித் தொழில்துறையின் வளர்ச்சியின்மை எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்ற மற்றொரு பரிமாணத்தையும் இது வெளிப்படுத்துகின்றது. மீன்பிடித் துறையானது நவீனமயப்படுத்தப்படாமல் உள்ளது; நிறுவனம் சார்ந்த ஒரு கட்டமைப்பையோ அல்லது அதற்கான கைத்தொழில் வாய்ப்புகளையோ உருவாக்குவதற்கான சாதகமான சூழல் இருந்தபோதிலும், அவை ஏன் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பன பற்றிய முக்கிய விடயங்களையும் இந்நூல் விரிவாக ஆராய்கிறது.

நன்னீர் மீன்பிடி ஆய்வின் பிரதான பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சட்டரீதியான அல்லது மரபுசார்ந்த மீன்பிடி முறைமைகளை மீறுகின்ற தொழில்துறையும், தொழிலாளர்களும், மீனவர்களும் இத்துறையின் இயல்பான வாய்ப்புகளை பலவீனப்படுத்துவதாக நூலாசிரியர் கருதுகின்றார். அத்தியாயம் ஐந்து, கைத்தொழில்துறை சார்ந்து ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகளை விரிவாகப் பட்டியலிட்டிருப்பதோடு, வடக்குகிழக்கில் காணப்படும் கைத்தொழில் நிலையங்களையும், அவற்றின் பலவீனங்களையும், அவை சீர்செய்யப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஆராய்ந்துள்ளது. விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளிலிருந்து கைத்தொழிலுக்குப் பரிமாற்றம் நிகழும்போது, ஆரோக்கியமான இரட்டை அறுவடை அல்லது இரட்டைப் பொருளாதார இலாபத்தை ஈட்டக்கூடிய வாய்ப்பு வடக்குகிழக்கில் அதிகமாக உள்ளது என்பதை இவ்வாய்வு கோடிட்டுக் காட்டியுள்ளது.

அத்தியாயம் ஆறு, அதிக முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகிறது. இதில் வடக்குகிழக்கில் நீர்மூலங்களும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளும் அதீதமாக இருக்கும் மாவட்டங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இப்பகுதி, நீர்ப்பாசன முகாமைத்துவம் மற்றும் ஆறுகளின் எண்ணிக்கை சார்ந்து வடக்குகிழக்கில் காணப்படும் விடயங்களை ஆழமாகப் பதிவு செய்துள்ளது. அத்தகைய நீர்வள வாய்ப்புகளைப் படிப்படியாக இழந்துபோகும் நிலையையும், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் ஆசிரியர் மிகத் தெளிவாக முன்வைத்துள்ளார். குறிப்பாக, நீரைச் சேமிக்கும் குளங்களின் இருப்பும், அவற்றைப் பாதுகாத்து பராமரிக்க வேண்டிய பொறுப்பும் அதிகமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. வளங்களை நிர்வகிப்பதில் ஏற்படும் பலவீனமானது, உள்ளூர்ப் பாதிப்புகளை உருவாக்குவதுடன், வருங்காலச் சந்ததியினருக்குக் கிடைக்க வேண்டிய நல்வாய்ப்புகளையும் நசுக்கிவிடும் என்றவொரு எச்சரிக்கையை இந்நூலின் ஆசிரியர் தந்துள்ளார்.

அத்தியாயம் ஏழு, மனிதவள அபிவிருத்தி, கல்வி முதலீடு, கல்வியின் பயன்கள், ஏனைய துறைகளில் முதலீடுகள் என நீண்ட முக்கியத்துவம் வாய்ந்த உரையாடலை வழங்குகிறது. வீதிகளின் கட்டமைப்பு, அவற்றின் வகிபாகம், அதனால் ஏற்படக்கூடிய வாய்ப்புகள், பொதுவசதித் துறைகளின் பங்களிப்பு, வீட்டுத் திட்டங்கள் மற்றும் அவற்றின் பயன்கள், காணியற்ற குடும்பங்களின் வாழ்வாதார நிலைகள் என விரிவான ஆய்வைத் தந்துள்ளது. மேலும், வலுச்சக்தி மூலங்களையும் அவற்றின் வளங்களையும் இவ்வத்தியாயம் பரந்தளவில் ஆராய்கிறது. குடிநீர் வழங்கல், அதில் காணப்படும் பிரச்சினைகள், சமூக நலத்துறைகளில் எதிர்கொள்ளப்படும் நெருக்கடிகள் என்பனவும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இதில் அனைத்துப் பொதுச் சேவைத்

துறைகளின் தரவுகளும் மிகத் தெளிவான புள்ளிவிவர ரீதியான உள்ளடக்கங்களுடன் ஆராயப்பட்டுள்ளன.
எட்டாவது அத்தியாயத்தில் கூட்டுறவுத் துறை சார்ந்த விரிவான பார்வைகளும் துல்லியமான கணிப்பீடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுத் துறையில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவுகள் மாவட்ட ரீதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த காலத்தில் கூட்டுறவுத்துறையின் வகிபாகம் வடக்குகிழக்கின் பொருளாதாரத்தில் பாரிய பங்கை வகித்தது என்பதை அடையாளப்படுத்தியுள்ள நூலாசிரியர், சமகாலத்தில் அது எதிர்கொள்ளும் சவால்களுக்கான காரணங்களையும் முன்னிறுத்தியுள்ளார்.
உள்ளூராட்சி அமைப்புகள் உள்ளூர் பொருளாதார அபிவிருத்தியைக் கட்டமைப்பதில் எதிர்கொள்ளும் எல்லைகளும், அவற்றின் வாயிலாக ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களும் ஒன்பதாம் அத்தியாயத்தில் மிகத் தெளிவாக விவாதிக்கப்பட்டுள்ளன.
ஒன்பதாவது அத்தியாயம், முதலாவது அத்தியாயத்தில் முன்வைக்கப்பட்ட நோக்கத்தை வெற்றிகரமாக ஆய்வு செய்து, அதனை முழுமைப்படுத்தியுள்ளது என்றே தெரிகிறது.

இந்நூலின் உள்ளடக்கம் மூன்று பிரதான பரிமாணங்களைக் கொண்டிருக்கிறது. முதலாவது, ஆய்வுப் பாரம்பரியத்தையும் முறையியலையும் தெளிவாக வடிவமைத்து வெளிப்படுத்தியுள்ளது. நூலாசிரியர் ஆய்வுப் பாரம்பரியத்திற்குள் வளர்க்கப்பட்டவர் என்பதற்கான அடிப்படை, அவரது அத்தியாய ஒழுங்கமைப்பிலும் ஆய்வின் வடிவமைப்பிலும் நேர்த்தியாக வெளிப்படுகிறது.
அறிமுகப் பகுதி ஏறக்குறைய வடக்குகிழக்கின் அடிப்படை வளங்களையும் சமகாலத் தேவைகளையும் கேள்விக்குள்ளாக்குவதோடு, ஒவ்வொரு அத்தியாயமும் அதற்கான பதில்களை வெளிப்படுத்தும் வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது. இது ஓர் ஆய்வு முறையியல் மாதிரிக்குள் வடிவமைக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.
இரண்டாவது, நூலாசிரியர் தெளிவான சான்றுகளின் வழியே, வடக்குகிழக்குப் பிராந்தியத்தின் பொருளாதார வலிமையானது அங்குள்ள வளமான இயற்கை வளங்களிலேயே தங்கியுள்ளது என்பதை விளக்கியுள்ளார். அத்துடன், அவ்வளங்களைக் கையாள்வதற்கான சிந்தனைகளையும் பின்புலங்களையும் எமது முன்னோர்கள் எவ்வாறு ஏற்படுத்தியிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், தற்காலத்தில் அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் மிக நேர்த்தியாக வடிவமைத்துள்ளார். இது புதிய ஆய்வுக்கான வாய்ப்புகளைத் திறந்துவிட்டுள்ளது. உலகளாவிய பொருளாதாரக் கோட்பாடுகளுக்கு இணங்க, இலங்கைத் தீவின் வடக்குகிழக்குப் பிராந்தியம் எத்தகைய அபிவிருத்திப் பாதைக்குள் தன்னை உள்வாங்கிக் கொள்ள முடியும் என்பதை இந்நூல் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.
மூன்றாவது, ஒவ்வொரு அத்தியாயமும் வடக்குகிழக்கில் காணப்படும் வாய்ப்புகளை மட்டுமன்றி, பிரச்சினைகளையும் அவற்றுக்கான நூலாசிரியரின் எல்லைக்குட்பட்ட தீர்வுகளையும் முன்மொழிந்துள்ளது. ஆயினும், இம்முன்மொழிவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புக் காணப்படுகிறது. அரசியல், நிறுவன மற்றும் சமூகத் தளங்களில் அறிவுசார்ந்த பலத்தை இந்நூல் வழங்கியிருக்கிறது. அத்துடன், வடக்குகிழக்குப் பிரதேசத்தின் பொருளாதாரத்தை வெற்றிகரமான முறையில் கட்டியெழுப்ப இயலும் என்பதைத் தெளிவுபடுத்துவதே இந்த நூலின் மிக முக்கியமான சாதனையாகும்.

வடக்குகிழக்கின் குறுநிலைப் பொருளாதாரத்தின் (Micro Econo my) தனித்துவத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் எதிர்காலத்திலும் நூலாசிரியர் தனது பங்களிப்பைத் தொடர வேண்டும். மேலும், இந்நூலை வடக்குகிழக்கின் அரசியல் மற்றும் நிர்வாக நிறுவனங்கள் ஆதாரமாகக் கொண்டு, வடக்குகிழக்குப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முயற்சிகளில் பயன்படுத்த வேண்டும்.

அத்தியாயப் பிரிப்புகளை வகைப்படுத்துகின்ற போது, ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் அதன் சாரத்தையும் அதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஆதாரங்களையும் பட்டியலிடுவது மேலும் சிறப்பான அம்சமாக அமையும் என்பதை இம்மதிப்பீடு பணிவுடன் முன்வைக்கிறது. அதேவேளை, பிற மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும் அது ஏற்றதாக இருக்கும்.
இந்நூலின் ஆசிரியர் பொருளியல் துறையை விசேட கற்கையாகக் கற்றவர் என்பதோடு, பொருளியல் துறையில் முதுகலைமானிப் பட்டத்தையும் பெற்றிருப்பது இந்நூலின் சிறப்புக்கு அடிப்படையாக அமைகிறது.

அது மட்டுமன்றி, இவர் தனது பல்கலைக்கழகக் காலத்தில் சிறந்த தேடல் மிக்க ஆய்வு மரபுகளை உள்வாங்கிய ஒருவராக விளங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரது கூட்டுறவுத்துறை தொடர்பான ஈடுபாடு, வலுவான சமூக நடைமுறையையும் செயற்பாட்டையும் உருவாக்கியிருந்தது. ஒருங்கிணைந்த மற்றும் பிரதேச அபிவிருத்தி குறித்து ஆழமான புரிதலைத் தனக்குள் கொண்டிருந்த இவர், பிரதேச அபிவிருத்தியை வடிவமைக்கும் பணியில் பொருளியல் காரணிகளுடன் அரசியல், சமூகவியல், பண்பாடு மற்றும் மரபார்ந்த விழுமியங்களுக்கும் முக்கியத்துவமளித்தார்.

இதற்கான வாய்ப்பை வழங்கிய எழுநா வெளியீட்டிற்கும், நூலாசிரியரின் இப்பணிக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய முயற்சிகள் தொடர வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன். மேலும் பல படைப்புகளை உருவாக்குவதற்கான திறனும் வளமும் அவரிடம் உள்ளன என்பதை அவரது நண்பர் என்ற அடிப்படையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘இருத்தலின் மீது கவியும் இன்மைகள்’ நூல் குறித்த வாசிப்பு



கருத்துரை:
றிஹானா நௌபர்

ஆங்கிலத்தில் வெளியான 13 நூல்களின் வாசிப்பனுபவங்கள் தொடர்பிலான கட்டுரைகளின் தொகுப்பே இளங்கோவின் ‘இருத்தலின் மீது கவியும் இன்மைகள்’. எழுநாவின் வெளியீடாக வந்துள்ள இந்நூலின் அட்டைப்படம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இளங்கோவின் வீடு என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது பயணங்களின் போது போரினால் கைவிடப்பட்ட வீடுகளைப் பார்த்தபோது ஏற்பட்ட உணர்வை மீட்டிப் பார்க்க வைத்தது. அந்த வீடுகளின் ஏக்கமும், அவை கொண்டுள்ள கதைகளும் ஏராளம்.

உண்மையில் இந்நூலை வாசிக்கின்றபோது 112 பக்கங்களுக்குள் 13 நூல்களை அறிந்து கொள்வது மட்டுமல்லாமல் மேலதிகமான தகவல்களையும் அறிய முடிகிறது. ”ஆங்கிலத்தில் இந்நூல்களை வாசிக்க முடியாதவர்களுக்கும் அதனைப் பற்றிய அறிமுகமும் கிடைக்கின்றது.

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து நூல்களுமே ஈழப்போராட்டம் தொடர்பானவையாகும். உண்மையில் இளங்கோ குறிப்பிடுவதைப் போல, ”பௌதீகமான நூல்களைத்தான் அழிக்க முடியும், இனமொன்றின் வரலாற்றை அவ்வளவு எளிதில் அழிக்க முடியாது என்பதே உண்மை. அதற்கு ஆதாரமாகத்தான் இன்றைக்கும் ஈழப் போராட்ட வரலாற்றை நினைவுபடுத்தும் நிறைய நூல்கள் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு நூல் தொடர்பாகவும் தனது பார்வையை விரிவாகவும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆழமாகவும், சிறந்த முறையிலும் விவரித்திருக்கிறார் இளங்கோ. அவர் இந்நூல் குறித்து முன்வைத்துள்ள அணுகுமுறையானது, வாசகர்களுக்கு அது பற்றிய ஒரு தெளிவான மற்றும் பரந்த புரிதலை வழங்கிவிடுகிறது.

இதில் அடங்கியுள்ள 11 எழுத்தாளர்களின் 13 நூல்களில் ‘போர் உலா’ தவிர்ந்த ஏனையவை ஆங்கிலத்தில் வெளிவந்தவை. ‘போர் உலா’ மாத்திரம் தமிழில் வெளிவந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட நூலாகும்.

பதின்மூன்று நூல்களும் ஈழப்போர் தொடர்பான வெவ்வேறுபட்ட அனுபவங்களைக் கொண்ட புலம்பெயர்ந்தவர்கள், போராளிகளாக இருந்தவர்கள், வெளிநாட்டவர்களால் எழுதப்பட்டுள்ளமையினால், போர் தொடர்பான ஆழமான, அதேபோன்று வித்தியாசமான பார்வையை இந்நூல் தருகின்றது. குறிப்பாக ஒவ்வொரு நூல் தொடர்பாக அறிமுகம் தருகின்றபோதும் அதனை விவரிக்கின்றபோதும் இளங்கோவின் வாசிப்பின் ஆழத்தையும் எழுத்து நடையின் அழகையும் ரசிக்காமலும் வியக்காமலும் இருக்க முடியாது. அனுக் அருட்பிரகாசத்தின் ‘வடக்கிற்கான ஒரு பயணம்’ நூலைப் பற்றி ஆரம்பிக்கும்போது மிக அழகாக அதன் தனித்துவத்தையும் அந்நூல் ‘மான் புக்கர்’ பரிசின் குறும்பட்டியல் வரை சென்ற காரணத்தையும் இவ்வாறு குறிப்பிட்டு ஆரம்பிக்கின்றார்.

”எல்லாக் கதைகளும் எழுதப்பட்டு விட்டதெனின், எந்தக் கதையைப் புதிதாகச் சொல்வது என்பது எழுதுபவர்க்கு எப்போதும் குழப்பமாக இருக்கும் ஒரு விடயமாகும். பரவலாகத் தெரிந்த கதையை, அதிலும் சமகாலத்தில் நிகழ்ந்ததை யாரேனும் எழுதப் போகின்றார்களென்றால் அது இன்னும் கடினமாகி விடும். ஆனால் தெரிந்த கதையாக இருந்தாலும், புதிதாய்ச் சொல்லமுடியும் என்று நம்பியதன் விளைவாகவே அனுக் அருட்பிரகாசத்தின் ‘வடக்கிற்கான ஒரு பயணம்’ நமக்குக் கிடைத்திருக்கின்றது. அது இதுவரை இலங்கையில் இருக்கும் எந்த தமிழ் எழுத்தாளருக்கும் வாய்க்காத ‘மான் புக்கர்’ பரிசின் குறும்பட்டியல் வரை அவரைக் கொண்டு சென்றிருக்கின்றது.


குறிப்பாக இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் நூல்களின் மூலம் 1983 ஜூலைக் கலவரம், 1974 தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் படுகொலை, 1981 யாழ் நூலக எரிப்பு போன்றவை அம்மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளையும் அவற்றால் அவர்கள் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் அறிய முடிகிறது. அதேபோன்று சொந்த நாட்டில் பிரச்சினை என்று வலிகளோடு வெளியேறிய மக்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் அனுபவிக்கும் வலிகளையும், சவால்களையும் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் சாரோன் பாலாவின் ‘படகு மக்கள்’, ரோய் ரத்தினவேல் அவர்களின் ‘கைதி #1056’, லோகதாசன் தர்மதுரையின் ‘நிலவியலின் துயரம்’ ஆகிய நூல்களின் வாயிலாக உணர முடிகின்றது. மீண்டும் மீண்டும் வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை, அந்நிய கலாசாரத்திற்குத் தங்களைப் பழக்கப்படுத்த வேண்டியிருக்கின்றமை, புதிய மொழி இவை எல்லாம் அவர்களை உளச்சிக்கலுக்கு ஆளாக்குகின்றது. ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்டு சொந்த நிலத்தை விட்டுச் செல்லும் மக்களுக்கு இவை எல்லாம் மிகப்பெரும் சவாலாகவே அமைந்திருக்கும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நூல்களை நாங்கள் முழுமையாக வாசிக்காவிட்டாலும் இளங்கோவின் எழுத்து வாயிலாக நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள வலிகளை எம்மால் உணர முடிகிறது.


ரோய் ரத்தினவேல் அவர்களின் ‘கைதி #1056’ என்ற சுயசரிதை நூலில் குறிப்பிடப்படும் பூசா சிறை அனுபவம், அனுக் அருட்பிரகாசத்தின் ‘வடக்கிற்கான ஒரு பயணம்’ நூலில் வரும் ராணியின் மகன் அவர் மடியிலேயே ‘செல்’ துண்டு பட்டு இறந்து போதல், மலரவனின் ‘போர் உலா’ நூலில் வரும் அவரது தமையன் பிடிபட்டு நான்காம் நாள் விடிகாலையில் தாயும் மலரவனும் முகாமிற்குச் செல்லுதல் போன்றவை ஆழமான சிந்தனைக்குள் எம்மை இழுத்து விடுகின்றன.

உண்மையில் இந்தப் போர் எதைத்தான் எமக்கு விட்டுச் சென்றிருக்கின்றது என்ற கேள்வி எமக்கு எழாமல் இல்லை. இளங்கோ கூறுவதைப் போல,

”இறந்தவர்கள் எந்தத் தரப்பாயினும் அவர்கள் மீண்டு வரவா போகின்றார்கள்? அன்று முகாமை தாக்கி வெற்றி கொண்டவர்கள் பின்னர் தோற்றுப் போயிருக்கின்றனர். அன்று தோற்றவர்கள் பிறகு வென்றிருக்கின்றனர் எனில் இந்த யுத்தங்கள் எதைத்தான் நமக்குக் கொண்டு வந்திருக்கின்றன? இழப்புகளையும் வெறுப்புகளையும் காலத்தால் ஆற்ற முடியாத வடுக்களையும் அல்லவா நினைவுகளாக அவை விட்டுச் சென்றிருக்கின்றன.

இது வாசிப்பனுபவம் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு என்றாலும் இளங்கோவின் வாசிப்பின் ஆழமும் குறிப்பிட்ட பரப்புகளில் அவருக்கு இருக்கும் பரந்துபட்ட அறிவும், சில விடயங்களை அவர் விவாதிக்கும் திறனும், அவ்விடயப் பரப்புகள் தொடர்பாக நம்மையும் தேட வைக்கின்றன. அத்தோடு இன்னும் வாசிக்க வேண்டிய தேவைப்பாடு நமக்கு இருக்கின்றது என்ற எண்ணத்தையும் தோற்றுவிக்கின்றன.

















எழுநா

வெளியீடு


முன்பதிவுகளுக்கு

+94 777 97 5029




எழுதா
மாறுபாடில்லா
உண்டி
சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்


எழுதா
யாழ்ப்பாணத்தில்
சாதி அமைப்பும்
சமூக உறவுகளும்
தொகுப்பும் தமிழாக்கமும்:
கந்தையா சண்முகலிங்கம்


எழுதா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்


எழுதா
வடக்குப் பிராந்தியக்
காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா



எழுதா
சூழ்ச்சிகளையும்
சதிகளையும்
கடந்த வரலாறு
இரா.சடகோபன்


எழுதா
பதார்த்த
சூடாமணி
பால. சிவகடாட்சம்



எழுதா
வாசலிலே கிருசாந்தி
செம்மணி தொடர்பான கவிதைகள்
தொகுப்பு:
எழுநா கலை பண்பாட்டு நடுவம்



எழுதா
மன்னார் தீவில்
கனிம மணல் அகழ்வு
சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள்
வை. ஜெயமுருகன்



எழுதா
இரு நூற்றாண்டு
மலையகம்
வலியும் வாழ்வும்


எழுநா
யாழ்ப்பாண
மருத்துவ வரலாறு
பாலசுப்பிரமணியம் துவாரகன்


எழுநா
யாழ்ப்பாணக் குடாநாட்டின்
நூலகப் பாரம்பரியம்
ஒரு வரலாற்றுத் தேடல்
என். செல்வராஜா



எழுநா
தமிழ்ப் பண்பாடு
ஊற்றுகளும் ஓட்டங்களும்
ந. இரவீந்திரன்


எழுநா
பாக்கியநாதன் அகிலன்
மரபுரிமைகளைப்
பறைதல்


எழுநா
இலங்கையின் கறவை மாடு
வளர்ப்புப் பொருளாதாரம்
கால்நடை வைத்தியர்
சி. கிருபானந்தகுமாரன்


எழுநா
இருத்தலின் மீது
உரியும்
இன்மைகள்
இளங்கோ


எழுநா
பசுமை
எனும்
பேரபாயம்
தெ. ஞானசீர்த்தி மீநிலங்கோ


எழுநா
வடக்கு – கிழக்கு
மாகாணங்களின் வளங்களும்
உள்ளூர்ப் பொருளாதார
அபிவிருத்தியும்
அமரசிங்கம் கேதீஸ்வரன்


எழுநா
அதிகாரப் பகிர்வும்
சுயாட்சியும்
முன்றாம் உலக அனுபவம்
நோக்கும் நடிமுறைகளும்
கந்தையா சண்முகலிங்கம்

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

London
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

Colombo
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

Jaffna
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

Nimal Vinayagamoothy, CPA, CGA


Chartered Professional Accountant


nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

நூல்சார் செயற்பாடுகள்





தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் பொருண்மையில் 'ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிடியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org



யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

RE/MAX
ELITE

021 224 2855 | 0777 44 1113

இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

BUY-SELL-RENT HOME AND LANDS

WWW.REMAXELITE.LK

WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE ALL OF THE GTA & ONTARIO



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

SS CAKES

Say "I Do"

to Sweet Perfection!

Planning your dream wedding? Look no further! At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.



+94 76 347 0055

We do delivery around the world

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

London

#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

Colombo

#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

Jaffna

#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

Protection For You & Your Family

Our services

Life Insurance «
Critical Illness Protection «
Mortgage Protection «
Travel/Super Visa Insurance «
Dental & Medical Benefits «
Disability Benefits «
Long Term Care «
Employee Benefits «
RESP, RRSP & TFSA «



Are You Getting Million Dollar Advice?



Life100
INSURANCE & INVESTMENTS INC.

416-918-9771 | 416-321-2500
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

Sritharan Thurairajah CLU, CHS

Simple Solution in a Critical Situation